# மேலை இலக்கியத் திறனாய்வு வரலாறு



**வை. சச்சிதானந்தன்**

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

# மேலை இலக்கியத் திறனாய்வு வரலாறு

வை. சச்சிதானந்தன்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY

பதிப்புரிமை :

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

Copyright :

Publications Division
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

| | | |
|---|---|---|
| பதிப்பு எண் | : | 156 |
| விலை | : | ரூ 75 |
| பதிப்பு விவரங்கள் | : | |
| 1.ஆசிரியர் | : | முனைவர் வை. சச்சிதானந்தன்<br>முன்னாள் பேராசிரியர்<br>ஆங்கிலத்துறை<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம் |
| 2.தலைப்பு | : | மேலை இலக்கியத்திறனாய்வு<br>வரலாறு |
| 3.பதிப்பித்தோர் | : | பதிப்புத்துறை<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்<br>மதுரை - 625 021. |
| 4.ஆண்டு | : | 1999 |
| 5.பக்கங்கள் | : | 398 + 10 |
| 6.பொருள் | : | இலக்கியத் திறனாய்வு |
| 7.அச்சகம் | : | மதுரை காமராசர் பல்கலைக்கழக<br>கூட்டுறவு அச்சகம்<br>மதுரை - 21. |

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பேராசிரியர் மு. சாலிகு
துணைவேந்தர்

பல்கலைநகர்
மதுரை - 625 021

## அணிந்துரை

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆங்கிலத்துறையின் முன்னாள் பேராசிரியர் வை. சச்சிதானந்தன் 'மேலை இலக்கியத் திறனாய்வு வரலாறு' என்ற இந்நூலினைப் படைத்துள்ளார். பேராசிரியர் துறைப்பணியிலிருந்து ஓய்வு பெற்றபின், தமிழியற் புலத்தின் முதுபெரும் பேராசிரியராக ஈராண்டுகள் பணியாற்றிய காலத்தில் உருவானதே இந்நூல். இதற்கான அடித்தளம் வகுத்துக் கொடுத்தவர் பேரா. தி. முருகரத்தனம் அவர்கள். துறைப்பணியினின்று ஓய்வு பெற்றாலும், ஆராய்ச்சித் துறையில் தான் ஓய்வு பெறவில்லை என நிறுவித்துக் காட்டும் வகையில் இவ்வரிய நூலைப் படைத்த பேரா. சச்சிதானந்தன் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த பேரா. தி. முருகரத்தனம் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

நூலாசிரியரின் மறைவிற்குப் பின் இந்நூல் வெளிவந்தாலும், அவர் திறனாய்வு உலகில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை இந்நூல் நிறைவு செய்கிறது. தமிழில் இலக்கியத் திறனாய்வுக் கலைக்கு மேலும் வளம் சேர்க்கக் கூடிய புதுவரவு என்று இந்நூலைக் குறிப்பிடலாம். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற மகா கவியின் வாக்கிற்கிணங்கத் தமிழன்னைக்கு அழகு சேர்ப்பதாக இந்நூல் அமைகின்றது.

தமிழில் பல இலக்கியத் திறனாய்வு நூல்கள் வெளிவந்திருந்த போதும், மேலை இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளை வரலாற்றியல் நோக்கில் அறிமுகம் செய்து, இலக்கியத் திறனாய்வு வரலாற்றை முழுமைபெறச் செய்துள்ளது இந்நூல் என்பது பாராட்டிற்குரியது.

இந்நூல் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதி பிளேட்டோ முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரையிலான

திறனாய்வாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துரைத்து விமரிசனம் செய்கிறது. இரண்டாவது பகுதி இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வாளர்களின் கருத்துக்களை மதிப்பீடு செய்கிறது. நூலின் தொடக்கத்திலேயே 'கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் திறனாய்வுக்கு அஸ்திவாரம் இல்லை, கொள்கை திறனாய்விற்கு ஒரு கட்டுப்பாட்டையும் அமைப்பையும் தெளிவையும் கொடுக்கிறது' என்று நூலின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி இருப்பது சிறப்பு.

செவ்வியல் முன்னோடிகளான பிளேட்டோ, அரிஸ்டாடில், ஹோரஸ், குவிண்டிலியன் போன்றோரின் கோட்பாடுகளையும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் திறனாய்வு முன்னோடிகளான டி.எஸ். எலியட், எஸ்ரா பவுண்ட், எப். ஆர். லீவிஸ் போன்றோரின் கோட்பாடுகளையும் விளக்கியிருப்பது பாராட்டத்தக்கது. இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வுக் கொள்கைகளான அமைப்பியல், பின் அமைப்பியல், உருவவியல் முதலான கோட்பாடுகள் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கொள்கைகளை விளக்குமிடங்களில் தமிழ் இலக்கியங்களை; குறிப்பாகப் பாரதிதாசன் கவிதைகளை எடுத்துக்காட்டுவது, ஆசிரியரின் ஒப்பிலக்கியப் பயிற்சியை எடுத்துக் காட்டுகிறது.

நூலின் பின்னிணைப்பில் வழக்கமாகக் கொடுக்கப்படும் அட்டவணைகள், பட்டியல்கள், வினாநிரல்கள் போன்றவை இடம்பெறாமல், மார்க்சியம், உளவியல், சமூகவியல், பெண்ணியம் முதலான திறனாய்வுக் கொள்கைகள் தரப்பட்டுள்ளன. இதுவும் இந்நூலின் சிறப்பிற்குக் காரணமாக அமைகின்றது.

தமிழ் இலக்கியத் திறனாய்வு உலகத்திற்கு இந்நூல் நன்முறையில் பயன்படக் கூடியது என்றே கருதுகிறேன். பேராசிரியர் வை. சச்சிதானந்தன் அவர்களின் பல்லாண்டு கால அனுபவத்தின் பிழிவாக இந்நூல் வெளிவருகிறது. தமிழ் கூறு நல்லுலகம் இந்நூலினைத் தக்க முறையில் ஏற்றுப் பயன்பெற வேண்டும் என்று விரும்புகிறேன். இத்தகைய நல்ல ஒரு நூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் வெளியீடாக வருவது பாராட்டுக்குரியது.

மு. சாலிகு
26.11.99

(மு. சாலிகு)

# முன்னுரை

முதன் முதலில் தமிழாக்கம் செய்யப்பட்ட இம்மேலை இலக்கியத்திறனாய்வு என்ற நூலைத் தமிழ் அறிவுலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சில பத்தாண்டுகளாக இலக்கியத்திறனாய்வு வளர்ச்சியின் காரணமாக முக்கியமாக ஒப்பிலக்கிய வளர்ச்சியின் மூலம் தமிழ் அறிஞர்கள் பிற இலக்கியங்களிலும் மேலை இலக்கியத்திறனாய்வுக் கொள்கைகளிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு இந்நூல் மேலை இலக்கியத்திறனாய்வின் தொடக்கத்தையும் வளர்ச்சியையும் முறையாக 'பிளேடோ முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை' என்ற முதல் பிரிவையும் 'இருபதாம் நூற்றாண்டு' என்ற இரண்டாவது பிரிவையும் தன்னுள்ளடக்கியது.

நம் கல்வி முறையில் ஆங்கிலத் திறனாய்வு அல்லது இங்கிலாந்து நாட்டில் திறனாய்வு வளர்ச்சி என்பதில் பல காலமாக அக்கறை செலுத்தப்பட்டு வந்தது. 1962 இல் அனைத்திந்திய அமெரிக்க இலக்கியக் கருத்தரங்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள மச்சூரி (Mussoori) என்ற கோடைகால தலத்தில் பேராசிரியர் ராபர்ட்ஸ் ரிவெக்ஸ் (Robert Srivex) தலைமையில் பல்கலைக்கழக இளம் ஆசிரியர்களுக்காக நடத்திய பிறகு அமெரிக்க இலக்கியம் கட்டாயப் பாடமாக ஆங்கில முதுகலை மாணவர்களுக்கு வைக்கப்பட்டது. திறனாய்வு என்பது ஆங்கிலத்திறனாய்வு மட்டுமல்ல, அமெரிக்கத் திறனாய்வும் ஐரோப்பிய திறனாய்வும் கூட என்ற இன்றியமையாத உண்மையை அறிந்தேன்.

பாரிசுக்கும் மாஸ்கோவிற்கும் இடையே நடக்கும் இலக்கியத் திறனாய்வு மாற்றங்களை அறியாமல் இருப்பது ஒரு பெரும் இழப்பு என்பதையும் உணர்ந்தேன். இந்நூலில் இக்குறைகளைப் பூர்த்தி செய்திருக்கிறேன். வாசகர்களுக்கு முதன் முதல் அறிமுகம் செய்யப்பட்ட மேலை இலக்கியத்திறனாய்வு என்பதின் விளைவாகப் பல ஐயங்கள் எழலாம். இவ்வையங்கள் பல அடிக்குறிப்புக்களில் தெளிவு

செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் இலக்கிய நோக்கில் உள்ள தளர்வுகளும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆவண முறையில் A Hand Book for writers of Research papers, New Delhi 1989 என்ற அமெரிக்க இலக்கியக்கழகத்தின் வெளியீட்டைப் பின்பற்றி இக்குறிப்புக்களில் செய்திகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. குற்றம், குறைகளைச் சுட்டிக்காண்பிப்பது குறுகிய அரசியலைச் சேர்ந்ததல்ல; அறிவு வளர்ச்சியிலுள்ள நம்பிக்கைதான்.

இந்நூல் அமெரிக்க, ஐரோப்பியத்திறனாய்வுக் கொள்கைகளை வலியுறுத்துவதால், பல புதிய செய்திகளை விளக்குகின்றது. ஒப்பிலக்கிய விளக்கம் தருவதால் இலக்கியத்திறனாய்வு உலகம் பரந்த உலகம் என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. சான்றாக, அற்புத நவிற்சிக் கொள்கைகளைச் சொல்லலாம். பல நாடுகளின் திறனாய்வுக் கொள்கைகளை ஆய்வு செய்வதால் சில கருத்துக்கள் திரும்பத்திரும்ப வரலாம். இந்நூலில் உள்ள செய்திகள், எந்நாட்டைச் சார்ந்ததாயிருந்தாலும் இவை வெளித்தாக்கத்தின் விளைவுகள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. தனிப்பட்ட இலக்கியம் என்ற நம்பிக்கை காலம் கடந்தது என்ற செய்தியை விளக்குகிறது.

இந்நூலில் பல சிக்கலான கொள்கைகளை வெளிப்படுத்தும் கலைச் சொற்களின் மொழியாக்கம் நடையையே தாக்கத்திற்குள்ளாக்கியது. இக்கால "நடைசொற்கலை" என்ற உத்தியை பின்பற்றுகிறது என்று நினைக்கிறேன். இதன் விளைவாக மொழிக்கும் எண்ணத்திற்கும் இடைவெளியை ஏற்படுத்துகிறது. இக்குழப்பத்தைத் தடுக்க இவ்வுத்தியைப் பின்பற்றாமல் எளிய நடையில் சொல்லிற்கும் எண்ணத்திற்கும் உள்ள நெருக்கம், உடையவருக்கும் அதன் உரைக்கும் உள்ள நெருக்கத்தைப் போன்றது என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

நான் ஓய்வு பெற்ற பிறகு பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவியுடன் பணியாற்றி வந்தேன், எதிர்பாராத சிக்கல்கள் தோன்றின. அச்சிக்கல்களிலிருந்து விடுவித்துத் தமிழ்த்

துறையில் சேர்ந்து இந்நூலை எழுதப் பரிந்துரை செய்த துறைத்தலைவர் பேராசிரியர் முருகரத்தனம் அவர்களுக்குப் பெரிதும் கடைமைப்பட்டுள்ளேன். இந்நூலை எழுதும் பொழுது ஒரு அறிவாளியின் முருகியல் உணர்ச்சியை அநுபவிக்கும் நிலையை உணர்ந்தேன். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும் ஆட்சிக் குழுவினருக்கும் இவ்வொப்பற்ற பணியைச் செய்ய அநுமதித்ததற்கு என்றும் கடப்பாடு உடையவனாவேன்.

மதுரை 21.

*வை. சச்சிதானந்தன்*

தமிழ்ப்புலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

# பொருளடக்கம்


இயல் - 1

1. திறனாய்வு அறிமுகம் - 4
2. செவ்வியல் முன்னோடிகள் - 14
பிளேட்டோ - அரிஸ்டாடில் -
ஹோரஸ் - லான்ஜைனஸ் -

இயல் - 2

டி.எஸ். எலியட் - 44
எஸ்ரா பவுண்ட் - 71
எப்.ஆர். லீவிஸ் - 82
ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் - 92
அமெரிக்கப் புதுத் திறனாய்வாளர்கள் - 98
ஜான் க்ரோ ரான்சம் - கிளியான்த் புருக்ஸ்
- ஆலன்டேட் - ராபர்ட் பென் வாரன் -
ஆர்.பி.பிளாக்மர் - அற்புத நவிற்சித் திறனாய்வு - 162

இயல் - 3

ஐரோப்பியத் தொடர்புகள் - 196
உயிருருக் கொள்கை - அமைப்பியல் - பின்
அமைப்பியல் - கட்டவிழ்ப்பியல் - ரஷ்ய
உருவவியல்-

*பின்னிணைப்பு* : கொள்கைகள் - 283
பின்னிணைப்பு : இலக்கிய அறிவு - 318

# 1. திறனாய்வு அறிமுகம்

இலக்கியமும் இலக்கியத்திறனாய்வும் இலக்கியமும் இலக்கணமும் போல நெருங்கிய தொடர்பு கொண்டவை; ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை. நம் நாட்டில் பழம் பெரும் இலக்கியங்களின் ஆழ்ந்த கொள்கை, இலக்கியத்தை இலக்கண அறிவின்றிப் புரிந்துகொள்ள இயலாது என்ற ஒரு கொள்கை வேரூன்றி வந்திருக்கிறது. தற்கால இலக்கியங்களை இலக்கியத்திறனாய்வுக் கொள்கைகளில்லாமல் மதிப்பிடமுடியாது என்பது ஒரு பரந்த நம்பிக்கை. இந்த நம்பிக்கை இருபதாம் நூற்றாண்டில் முக்கியமான ஒரு கோட்பாடு எனலாம். இக்கோட்பாடு திடீரென்று இந்நூற்றாண்டில் தோன்றியதன்று. அது கிரேக்க வீரயுகக் காலத்திலே தோன்றியது. இதற்கு அடிகோலியவர்கள் கிரேக்க நாடகாசிரியரும் பிளேட்டோவின் சிறந்த மாணவருமான அரிஸ்டாடிலும் ஆவார்கள். ஐரோப்பிய வரலாற்றின் இடைக்காலமான 13 ஆம் 14 ஆம் நூற்றாண்டுவரையில் அவ்வறிஞர்களின் ஆழ்ந்த தாக்கம் இருப்பதைக் காணலாம். கிரேக்கமும் இலத்தினும் அறிஞர் மொழி எனப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரையில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் கருதிய அறிஞர்கள், அம்மொழிகளைத் தம் தாய்மொழியை விடச் சிறந்த மொழி எனப் போற்றினர். கிரேக்க, இலத்தீன் மொழிகள் மற்ற மொழிகளை விட விஞ்ஞான அறிவு, தத்துவம், மதம் போன்ற துறைகளில் வெகுவாக முன்னேறிவிட்டன.

குறிப்பாக, இலக்கியத்திறனாய்வில் பிளேட்டோ, அரிஸ்டாடில் தங்களுடைய இலக்கிய விசாரணையில் மேலை இலக்கியத்திற்கு முன்னோடிகளாகக் கருதப்பட்டார்கள். அவர்களுடைய அடிப்படைக்கேள்விகள்: இலக்கியத்தின் இயல்புகள் என்ன? இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் கவிதைக்கும் கற்பனைச் சக்திக்கும் உள்ள தொடர்புகள் யாவை? கற்பனையினால் உந்தப்பட்ட ஒரு கவிஞன் அசாதாரணமானவனா அல்லது புத்திமாறாட்டமானவனா? கதை என்பது மனம் போன போக்கில் வளருவதா அல்லது ஒரு

கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதா? பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகிய அறிஞர்களைப் பின்பற்றியவர்கள் பல நூற்றாண்டுகள் இவ்வினாக்களைக் கேட்டுப் பல மாறுபட்ட விடைகளைக் கண்டுபிடித்தார்கள். 19 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டிலும் தோன்றிய இலக்கிய அறிஞர்கள், தத்துவ ஞானிகள் திறனாய்வு உலகத்தில் ஒரு புரட்சியையே உண்டாக்கினார்கள். கருத்துக்களிலிருந்து கொள்கைகளுக்கு திரும்பியதே அந்த புரட்சி. இருந்தும் கொள்கைப்பிடிப்பு இல்லாத இலக்கியத்திறனாய்வு தெளிவான அறிவியல் நோக்கத்தை விட்டு உணர்ச்சி அடிப்படையிலோ அல்லது மேற்போக்கான எண்ணவோட்டமோ கொண்டிருந்தது. ஒரு எழுத்தாளனை எழுத்தாளனாகவே பார்க்க வேண்டும்; முருகியல் நோக்கில் விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்ட திறனாய்வாளனாக அவனை எண்ணத் தோன்றவில்லை. சான்றாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தலை சிறந்த இலக்கிய அறிஞரான மார்த்யு ஆர்னல்ட் (Mathew Arnold) ஆங்கில அற்புத நவிற்சிக் கவிஞரான ஷெல்லியைப் பற்றி ஒரு சிறந்த கட்டுரையில் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். ஷெல்லி ஏழைகளிடம் இரக்கம் கொண்டவன், குடியரசுக் கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவன், மன்னர் ஆட்சியை வெறுப்பவன். மாத்யூ ஆர்னல்ட் கிரேக்க, பிரெஞ்சு, இத்தாலிய மொழிகளிலும் இலக்கியங்களிலும் வல்லுநர், சிறந்த கவிஞர், அப்பொழுது உலகத்திலேயே தலைசிறந்த ஆங்கிலப் பேராசிரியர் பதவியை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் அநுபவித்தவர், ஒழுக்க முறைமையில் பற்றுள்ளவர். ஆகையால் ஷெல்லியின் குடும்பவாழ்க்கை அவருக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக ஷெல்லி தன் முதல் மனைவியை ஒதுக்கிவைத்தது. அக்காரணத்திற்காக, அவரது தன்னுணர்ச்சிப்பாடல்களில் தலைசிறந்தவற்றை அலட்சியப்படுத்துகிறார். ஆனால் அவனை an ineffectual angel beating in the void his humirous wings in vain என்று மதிப்பிடுகின்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அற்புத நவிற்சித் திறனாய்வில் இது ஒரு தலைசிறந்த மொழி. இத்தொடரில் அறிஞனும் திறனாய்வாளனும் ஒன்றியிருக்கிறார்கள்.

அதனால் இவ்வாங்கிலச்சொற்றொடரை Qutoable Quote அல்லது மேற்கோளாகத் காட்டத்தகுந்த மேற்கோள் எனலாம். ஆனால் இது நேர்மையான முறையில் செய்யப்பட்ட திறனாய்வு அல்ல. ஆர்னல்ட் மறைமுகமான மஞ்சள் பத்திரிகை முறையிலும் அவதூறு முறையிலும் விமரிசிக்கிறார். நமக்கு பாடமும் கற்பிக்கிறார். எவ்வளவு சிறந்த அறிஞராக இருந்தாலும் கூட, திறனாய்வாளர் உணர்ச்சிகளையும் சொந்த விருப்பு வெறுப்புக்களையும் ஒதுக்கிவைத்து ஒரு கவிஞனைக் கவிஞனாகவே மட்டுமே மதிப்பிடவேண்டும். கவிஞனுடைய சொந்த வாழ்க்கைக்கும் அவனுடைய கற்பனை வாழ்வுக்கும் தொடர்பே இல்லை. இதை critical detachment என்பர். அறிவார்ந்த முறையில் ஒரு தராசின் சீர்தூக்கும் அளவுகோல் போல ஒரு இலக்கியத்திறனாய்வாளன் உணர்ச்சிக்கு அப்பாற்பட்டு துல்லியமாக நிறைவெய்த வேண்டும். இதைத்தான் objective criticism தற்சார்பற்ற திறனாய்வு என்பர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திறனாய்வாளர்களுக்குக் கொள்கைகளில் பற்றுதல் இல்லை. சட்டதிட்டங்களுக்கு உட்படாமலிருந்தாலும் திறனாய்வைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களில் சிலருக்கு மட்டும் கொள்கை நம்பிக்கை இருந்தது. அவர்களில் ஒருவரே கோல்ட்ரிட்ஜ். இவர் ஆங்கில நாட்டின் தலை சிறந்த அற்புத நவிற்சிக் கவிஞர் வேட்ஸ்வொர்த்தின் நெருங்கிய நண்பர். இன்றைய அமெரிக்க ஆங்கிலத் திறனாய்வாளர்களால் பெரிதும் மதிக்கப்படுபவர். அடிப்படைக் கொள்கைகளை, முக்கியமாக கவிஞனின் கற்பனைபற்றி அற்புதமாக அலசியிருக்கிறார். ஆங்கில நாட்டின் தலைசிறந்த திறனாய்வாளராக இன்று கருதப்படுகிறார்.

இருபதாம் நூற்றாண்டு, திறனாய்வின் தலை சிறந்த காலம் என்று அழைக்கப்படுகிறது. காரணம் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் ஒவ்வொரு திறனாய்வாளனுக்கும் உள்ள ஆழ்ந்த நம்பிக்கையே; இதில் அமெரிக்கத் திறனாய்வு வட்டத்திற்கும் ஆங்கிலத் திறனாய்வு வட்டத்திற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அமெரிக்கத் திறனாய்வாளர்கள்

கொள்கைகளில் நம்பிக்கையுடையவர்கள். ஆங்கிலத் திறனாய்வாளர்கள் கொள்கைகளை ஒதுக்குபவர்கள். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஆசிரியரும் தலைசிறந்த திறனாய்வாளருமான லீவிஸ் ஆங்கிலத்திறனாய்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். இவருக்கும் ரெனெவெல்லக் (Rene' wellek) என்ற ஏல் பல்கலைக்கழகப் பேராசிரியருக்கும் இடையே நடந்த திறனாய்விற்குக் கொள்கை அவசியமா? என்ற விவாதம் பற்றி இந்தியத்திறனாய்வாளர் அனைவரும் அறிந்திருக்கவேண்டும். பேராசிரியர் லீவி Leterary Critierion என்ற இலக்கிய இதழில் இந்த இரு ஜாம்பவான்களும் பல வாரங்கள் மோதிக்கொண்டனர். லீவிஸ் திறனாய்விற்குக் கொள்கை அவசியமில்லை என்றார். கொள்கை இல்லாமல் திறனாய்வு பயன்படாது என்றார் வெல்லக். இருவரும் விட்டுக்கொடுக்கவில்லை. லீவிஸ் இறந்த சில ஆண்டுகளுக்குப் பின்பு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் இலக்கிய ஆராய்ச்சி இதழான Modern Language Review (M.L.R.) பதிப்பாசிரியர்கள் லீவிஸை பற்றி வெளிவந்த சில புத்தகங்களை மதிப்பாய்வுரை செய்ய வேண்டுமென பேராசிரியர் வெல்லக்கை கேட்டுக்கொண்டனர். வெல்லக் மதிப்பீடு செய்யும்பொழுது இதழின் வாசகர்களுக்கு இடையே தனக்கும் லீவிஸிற்கும் நடந்த சொற்போரை நினைவூட்டினார். பிறகு தான் மதிப்பிடும் நூல்களே தன்னுடைய கொள்கை நம்பிக்கைக்குச் சான்று என்றார். இத்திறனாய்வு நூல்களின் ஆசிரியர்கள் ஒருமுகமாகப் பேராசிரியர் லீவிஸின் திறனரய்வில் ஒரு தளர்ச்சியைக் கண்டனர். அது கொள்கையில் நம்பிக்கை இன்மை.

கொள்கையை கடைப்பிடிக்கவில்லை என்றால் திறனாய்வுக்கு அஸ்திவாரமில்லை. கொள்கை, திறனாய்விற்கு ஒரு கட்டுப்பாட்டையும் அமைப்பையும் தெளிவையும் கொடுக்கிறது.

இலக்கியமும் இலக்கியத்திறனாய்வும், இலக்கியமும் இலக்கணமும்போல, நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை. நம் நாட்டில்,

இலக்கியத்தை இலக்கண அறிவின்றிப் புரிந்து கொள்ள இயலாது என்ற புகழ்பெரும் இலக்கியக் கொள்கை வேறான்றி வந்திருக்கிறது. இக்கொள்கை மொழி இயலின் தாக்கத்திற்கு உட்பட்டாலும் அறிவு உலகத்தில் ஒரு நியதியாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்கால அறிவுச் சூழ்நிலையில் இலக்கியங்களை இலக்கியத் திறனாய்வுக் கொள்கையிலிருந்து ஒதுக்கி மதிப்பிடமுடியாது என்பது ஒரு பரந்த நம்பிக்கை. இந்த நம்பிக்கை இருபதாம் நூற்றாண்டில் ஒரு அடிப்படைக்கொள்கை என்றே கூற வேண்டும். இதற்கு முதன் முதலில் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அடிகோலியவர்கள் சிறந்த கிரேக்க தத்துவ ஞானிகளான பிளேட்டோவும் அவருடைய மாணவர் அரிஸ்டாடிலும் ஆவார்கள். ஐரோப்பிய இடைக்காலமான 11-14 ஆம் நூற்றாண்டு வரையிலும் அதற்குப் பிறகும் கூட அவ்வறிஞர்களின் ஆழ்ந்த தாக்கத்தைக் காணலாம். கிரேக்கமும் இலத்தீனும் அறிவு மொழிகள் என்ற நம்பிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரையில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் கருதப்பட்ட காரணத்தால் அவ்விரு செவ்வியல் மொழிகள் மக்கள் பயன்படுத்தும் மொழிகளைவிட உயர்ந்தவை என்று செயல் முறைப்படுத்தப்பட்டன. விஞ்ஞானம் (அப்பொழுது ரசவாதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது), தத்துவம், மதம் போன்ற துறைகளில் அச்செவ்வியல் மொழிகள் முன்னேறிவிட்டன.

குறிப்பாக, இலக்கியத்திறனாய்வில் பிளேடோ அரிஸ்டாடில் மற்றும் பிறரும் தங்களுடைய இலக்கிய விசாரணையினால் இலக்கியத்திறனாய்வின் முன்னோடிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுடைய அடிப்படைக் கேள்விகள் : மெய்ம்மை (reality) என்றால் என்ன? இலக்கியத்தின் இயல்புகளும் கூறுகளும் யாவை? இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும், கவிதைக்கும் கற்பனா சக்திக்கும் (Imagination) உள்ள தொடர்புகள் யாவை? கதை என்பது மனம் போன போக்கில் வளர்வதா அல்லது ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதா? கற்பனையினால் உந்தப்பட்ட ஒரு கவிஞன் அசாதாரணமனிதனா அல்லது புத்தி

மாறாட்டமானவானா? பல நூற்றாண்டுகளாக இத்தகைய வினாக்களுக்கான விடைகளைப் பல கோணங்களில் அறிஞர்கள் அலசுகிறார்கள். இத்தத்துவஞானிகள் கருத்துக்களிலிருந்து கொள்கைகளுக்கு திறனாய்வைத் திசை திருப்பி ஒரு புரட்சி செய்துள்ளனர். இம்மாற்றம் இருந்தும், கொள்கைப் பிடிப்பு பலவீனமாக இருந்ததால் இலக்கியத்திறனாய்வு, தெளிவான அறிவியல் நோக்கத்தை விட்டு விட்டு, உணர்ச்சி அடிப்படையோ அல்லது மேற்போக்கான எண்ணவோட்டமோ (Impression) கொண்டிருந்தது. ஒரு எழுத்தாளனை எழுத்தாளனாகவோ முருகியல் நோக்கில் விருப்பு, வெறுப்பிற்கு அப்பாற்பட்ட கலைஞனாகவோ காணும் திறனாய்வு இன்றைய நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரையில் தோன்றவில்லை. இந்நிலையை இங்கு விளக்குவோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் தலைசிறந்த அறிஞரும் திறனாய்வாளருமான மாத்யூ ஆர்னல்ட் (Matthew Arnold 1822, 88) ஆங்கில அறிவுலகத்திலேயே பெரும் செல்வாக்குப் பெற்ற கவிதைப்பேராசிரியர் (Professor of Poetry) பதவியை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் வகித்தவர். அவர் அற்புத நவிற்சிக் கவிஞரான ஷெல்லியை எப்படித் தன்னுடைய கட்டுரையில் திறனாய்கிறார் என்பதைப் பார்ப்போம். ஷெல்லி (1972-1822) இளவயதிலேயே இறந்தாலும், ஆங்கில அற்புத நவிற்சிக் கவிஞர்களில் தன்னுணர்ச்சிப் பாடல்களை இசைநயத்தோடு எழுதுவதில் அவனுக்கு ஈடில்லை. அவன் ஒரு பிரபுவின் மகன், செல்வந்தன். ஆனால் புரட்சிகரமான கருத்துக்களை உடையவன். ஏழைகளிடம் இரக்கம் கொண்டவன். மன்னர் ஆட்சியை வெறுப்பவன். ஒரு புரட்சியாளனான இக்கவிஞனை மதிப்பீடு செய்யும் ஆர்னல்ட் செவ்வியல் இலக்கியங்களைத்தவிர பல ஐரோப்பிய இலக்கியங்களைக் கற்றறிந்தவர். ஒழுக்க முறைமை (moralism)யில் பற்றுள்ளவர். ஆகையினால் தன்னுடைய கட்டுரையில் ஷெல்லி என்ற கவிஞனையும் மனிதனையும் வேறுபடுத்துகிறார். அவருக்கு, உள்ளூர முதல் மனைவியைத் துன்புறுத்தி ஒதுக்கிவைத்து மறுமணம் செய்து கொண்ட ஷெல்லியின் மணவாழ்க்கை. ஒரு பயன்படாத தேவதூதன் தனது ஒளிபொருந்திய சிறகுகளைக்

கொண்டு சூனியத்தில் பறக்க முயன்று தத்தளிக்கிறான்,(an ineffectual angel beating in the void his Huminous wings in vain) என்று ஷெல்லியின் இந்த வாழ்க்கை முறையைச் சித்திரிக்கிறார். இச்சொற்றொடரை quotable quote என்று ஆங்கிலத்தில் கூறுவர். இந்த மேற்கோள் இன்று ஷெல்லியின் கவிதையை மதிக்கும் திறனாய்வாளர்களால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாசகர்களால் ஆர்னல்டின் மறைமுகத் தாக்கத்தினை ஒதுக்கி வைக்கமுடியவில்லை. இச்சொற்றொடர் நமக்குப் பாடமும் கற்பிக்கிறது. எவ்வளவு சிறந்த அறிஞராக இருந்தாலும் கூட, திறனாய்வாளர் தம் உணர்ச்சிகளையும் சொந்த விருப்பு வெறுப்புக்களையும் ஒதுக்கிவைத்து ஒரு கலைஞனைக் கலைஞனாகவே மதிப்பிடவேண்டும். மதிப்பீடு இத்தளர்வுகளுக்கு உட்பட்டால், அது திறனாய்வல்ல; மஞ்சள் பத்திரிகை முறை. இவ்வாறு உணர்ச்சிகளையும் விருப்பு வெறுப்பையும் ஒதுக்கி வைத்துத் திறனாய்வு செய்வதை Critical detachmentஎன்பர். அறிவார்ந்த முறையில், ஒரு தராசின் அளவுகோல் போல துல்லியமாகத் திறனாய்வு அமைதல் வேண்டும். இதைத்தான் (Objective Criticism) தற்சார்பற்ற திறனாய்வு என்பர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திறனாய்வாளர்களுக்குக் கொள்கைகளில் பற்றுதல் இல்லை. சட்ட திட்டங்களுக்கு உட்படாமலிருந்தாலும் திறனாய்வைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களில் சிலருக்கு மட்டும் கொள்கையில் நம்பிக்கையிருந்தது. அற்புத நவிற்சிக்கவிஞரும் அவ்வியக்கத்திற்கு ஆங்கில நாட்டில் தலைமைக்கவிஞருமான வேட்ஸ்வொர்த்தின் நெருங்கிய நண்பருமான கோல்ரிட்ஜ் (Coleridege 1772 - 1834) ஒரு விதிவிலக்கு. அவர் ஜெர்மானிய நாட்டிற்குச் சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அப்பொழுது ஜெர்மானிய அறிவுலகத்தில் தத்துவஞானிகளான ஹெகல் (Hegel 1770-1831) ஷில்லர் (Schiller. 1759 1805) போன்றவர்களாலும் அந்நாட்டின் தலை சிறந்த எழுத்தாளருமான கதே (Goethe 1749 - 1832) போன்றவர்களாலும் பல புரட்சிகரமான கருத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றின் தாக்கத்தால் தமது

திறனாய்வுக்கருத்துக்களையே மாற்றிக் கொண்ட கோல்ரிட்ஜ், தாம் ஜெர்மனியில் கண்ட தத்துவங்களைத் தம் நாட்டில் புகுத்தினார். ஆகையால் இன்று அவர் ஆங்கிலத் திறனாய்வாளர்களிடையே முதலிடம் வகிக்கிறார். அவரை ஆங்கில நாட்டில் முதன்மையான கொள்கையாளர் (the greatest critical theorist) எனலாம். இக்கொள்கையைத் தவிர, ஆங்கில உலகில் (அமெரிக்கா உட்பட) பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதி வரை திறனாய்வுத் துறையில் அறிவு சார்ந்த முறையில் கொள்கைப்பிடிப்பு இல்லை என்றே சொல்ல வேண்டும். கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் திறனாய்விற்கு அஸ்திவாரமில்லை. கொள்கையைச் செயற்படுத்துதல் திறனாய்விற்கு ஒரு கட்டுப்பாட்டையும் அமைப்பையும் தெளிவையும் அளிக்கிறது.

அமெரிக்கத் திறனாய்வு வட்டத்திற்கும் ஆங்கில நாட்டுத் திறனாய்வு வட்டத்திற்கும் ஒரு வேறுபாடு உண்டு, அமெரிக்கத் திறனாய்வாளர்களுக்குக் கொள்கையில் ஒரு ஆழ்ந்த நம்பிக்கையே உண்டு.

ஆங்கிலத்திறனாய்வாளர்களுக்கு ஒரு வகையில் கொள்கையில் நம்பிக்கையின்மை இருந்தது. இதற்குக் காரணம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியரும் ஆங்கில நாட்டுத் தலைசிறந்த திறனாய்வாளருமான லீவிஸின் (F.R Leavis 1895 - 1978) திறனாய்வு இதழான Scrutiny என்பதில் திறனாய்விற்குக் கொள்கை இன்றியமையாததா? என்ற தலைப்பைப் பற்றிக் காரசாரமான விவாதம் பேராசிரியர் லீவிஸிக்கும் யேல் பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியப் பேராசிரியராக இருந்த வெல்லக்கிற்கும் நடந்தது. லீவிஸ் கொள்கை வேண்டியதில்லை என்றார். ஆனால் வெல்லக் கொள்கைதான் திறனாய்விற்கு அடிப்படை என்றார். பலவாரங்கள் நடந்த சர்ச்சை திறனாய்வு உலகத்தை கவர்ந்தது. லீவிஸ் இறந்த பிறகு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளி வந்த Modern Language என்ற ஆராய்ச்சி இதழின் ஆசிரியர்கள், பேராசிரியர் லீவிஸைப் பற்றி இங்கிலாந்தில்

வெளிவந்த சில புத்தகங்களை ஆராயும்படி வெல்லக்கை கேட்டுக்கொண்டனர். அவர் இந்நூல்களை விமர்ச்சிக்கும்பொழுது அப்புத்தகங்கள் லீவிஸன்டன், நடத்திய விவாதத்தில் தான் கருதிய 'கொள்கை வேண்டும்' என்ற நிலையில் ஆதரிக்கின்றன என்றார். இந்நூல்களின ஆசிரியர்கள் எல்லோரும் ஒரு முகமாக லீவிஸின் திறனாய்வில் கொள்கை நம்பிக்கை இன்மை உள்ளதைச் சுட்டிக் காட்டினர். இது அவரது திறனாய்வில் உள்ள ஒரு குறை அல்லது தவறு என எடுத்துக் கூறினர். சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த லீவிஸ் தம்பதிகளின் நாவல் திறனாய்வு அளித்த தற்காப்பு விளக்கம் பற்றிய பின்குறிப்பு மனநிறைவு அளிப்பதாயில்லை.

இருபதாம் நூற்றாண்டைத் திறனாய்வுக் கொள்கையின் சிறந்த காலம் (the age of criticism) என்று வர்ணிக்கிறார்கள். இத்திறனாய்வில் இரண்டு கூறுகள் உள்ளன. ஒப்பிலக்கியம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேரூன்றிய இக்காலத்தில் ஐரோப்பிய திறனாய்வை, முக்கியமாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை (ரஷ்யா உட்பட) ஒதுக்க முடியாது. மேலும் திறனாய்வுக் கொள்கையில் நம்பிக்கை இல்லாத அறிஞனே இல்லை எனலாம். ஐரோப்பாவிலிருந்து அரசியல் காரணமாக வெளிவந்து அமெரிக்காவில் புகலிடம் அடைந்த மிகச் சிறந்த ஒப்பிலக்கியவாதியான ரெனெவெல்லைக் என்பவரும், திறனாய்வாளரும் மொழியயில் வல்லுனருமான ரோமன் ஜேகப்ஸன் (Roman Jacobson) என்பவரும் ஒரு கொள்கைப் புரட்சியே ஏற்படுத்திவிட்டார்கள். இப்பொழுது இங்கிலாந்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆங்கிலப் பேராசிரியரான டேவிட் லாட்ஜ் (David Lodge) என்பவர் வெளியிட்ட இரண்டு திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்புகள் கொள்கைகள் எவ்வளவு தூரம் ஊடுருவி இருக்கின்றன என்பதற்கு அசைக்க முடியாத சான்றுகளாகும். கொள்கையை வேண்டுமென்றே ஒதுக்கி வைத்து மனம் போன போக்கில் திறனாய்வு செய்வது ஒரு திறனாய்வுத் தற்கொலை. திறனாய்வு என்பது ஒரு மேடைப்பேச்சல்ல. அது ஓர் அறிவுக்கலை கொள்கைப்பற்றினால் கடினமானதும்கூட.

குறிப்புகள்:-

1. மொழியியல் வல்லுநரான புளூம்பீல்ட் (Bloomfield) இலக்கணத்தைவிட ஒரு வாக்கியத்தின் அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இதன் தாக்கத்தை இந்தியாவில் ஆங்கில மொழியைப் பயிற்றுவிக்கும் முறையிலும் அம்மொழியை மாணவர்கள் கற்றுக்கொள்ளும் முறையிலும் பார்க்கலாம். (A Practical English Grammer for Foreign Students Oxford - The English Language Book Society 1960)

2. இன்றும் இங்கிலாந்தில் பழம் பெரும் பல்கலைக் கழகங்களான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜில் பல்கலைக்கழகச் சடங்குகளுக்கு இலத்தீன் பயன்பட்டு வருகிறது. பட்டச்சான்றிதழ்களின் மொழி ஆங்கிலமல்ல, இலத்தீன்தான்.

3. விவிலிய நூலின் பழைய ஏற்பாடு என்ற பகுதியின் மூலமொழி கிரேக்கம். பிறகு இலத்தீன், ஆங்கில மொழிகளில் பெயர்க்கப்பட்டது. ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாகக் கருதப்படும் ஜான்மில்டன் (1608-74) பழைய ஏற்பாட்டைக் கிரேக்கமொழியிலேயே கேட்டு இன்புற்றான். கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த மதகுருக்கள் சமீப காலம் வரை விவிலிய நூலை இலத்தீனில்தான் படித்து மதச் சடங்குகளை நடத்திவந்தார்கள்.

4. Shellely in Essays in Criticism, Second Series 1988

ஆர்னல்டு மறைமுகமாக வெளிப்படுத்தும் கருத்தையே மொழிபெயர்த்திருக்கிறேன். வாசகர்களுக்கு ஒரு எச்சரிக்கை 'ஷெல்லியின் கவிதையழகில் மயங்கி விடாதீர்கள். மனிதன் கவிஞனைவிட மோசமானவன் என்ற கருத்து, ஆர்னல்டின் அழகான ஆங்கிலத்தொடரில் மறைந்து கிடக்கிறது. இன்றைய திறனாய்வாளர்கள் குறை என்று கருதுவது வாக்கியங்கள் கருத்துக்களுடன் ஒத்துழையாமையையே.

6. இந்தியக்குடியரசின் ஆரம்பகாலத்திலே தலைநகரில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அம் மன்றத்திற்கு வழி காட்டியான புகழ்பெற்ற May's Parliamentary Practice என்ற நூலை இந்தியில்

மொழியாக்கம் செய்தனர். Opposition Party என்பதற்கு விரோதி சபா என்ற சொற்றொடர் பரிந்துரை செய்யப்பட்டது. மொழியாக்கம் என்பது ஒருவாளின் கூர் முனையில் நடப்பது போன்றது.

7. P-J-M- Robertkon. The Leaviees on Fickion. - An Histroic Partnership - London: Macmillan P. 1988

8. இந்நூல்களைப்பற்றிய விவரங்களுக்கு கடைசி அதிகாரத்தைப் பார்க்கவும்.

## 2. செவ்வியல் முன்னோடிகள்

**பிளேட்டோ (கி.மு. 427 - 348)**

கிரேக்கத் தத்துவஞானி. அரசியலிலும் ஆர்வம் உள்ளவர். பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். அரசியல் கொள்கைகளைக் 'குடியரசு' (The Republic) என்ற உரையாடலில் விளக்குகிறார். அவருடைய அரசியல் கருத்துக்கள் இன்றுவரையில் திறனாய்வு செய்யப்படுகின்றன. முதன் முதலில் கவிதைகளை எழுதிவந்த பிளேட்டோவின் கவனம் தன் குருவான சாக்ரடீஸ் (Socrates)1 தொடர்பால் தத்துவத்தில் திரும்பியது. கவிதையை விட உரைநடையே உயர்ந்தது என்ற நம்பிக்கையுடையவராய் இருந்ததால், பெரும்பாலும் இவருடைய கொள்கைகள் 'உரையாடல்களில்' (Dialogues)2 வெளிப்பட்டன. அவற்றுள் "Apology" 'phaldo'. "Symposium". "Republic" என்பவை புகழ்பெற்றவை. அவருடைய கல்விக்கூடத்திற்கு "Academy" என்று பெயர். இங்குதான் தன் சீடர்களுக்குத் தன்னுடைய தத்துவங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார். இவருடைய உரையாடல்களில் ஓர் அமைப்பைக் காணலாம். இரண்டிற்கு மேற்பட்ட கதாபாத்திரங்கள் உரையாடல்களில் கலந்து கொள்வர் முக்கிய கதாபாத்திரத்திற்கு "Interlocutor" என்று பெயர். ஏனென்றால் அவர்தான் முக்கியக் கருத்தைப் பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைப்பார்.3 பிறகு மற்றவர்களை அறிவியல் சார்ந்த கேள்விகளைக் கேட்டு விவாதத்திற்குச் சுவையூட்டுவார். இம் முக்கிய கதாபாத்திரத்தில் சாக்ரடீஸிற்கும் பங்குண்டு.

சான்றாக மேலை இலக்கியத்தில் புகழ்பெற்ற "Symposium" என்ற உரையாடலை எடுத்துக்கொள்வோம். இதில் சாக்ரடீஸைத் தவிர அரிஸ்டோபேனஸ் (aristophanes) 4 என்ற கிரேக்க இன்பியல் நாடகாசிரியரும் பங்கு கொள்ளுகிறார். இவ்விவாதத்தின் தலைப்பு, 'காதல் என்றால் என்ன?' பங்கு கொள்வோர் பலரும் காதல் என்பதை வரையறுக்கிறார்கள். இவ்வரையறைகளைத் தள்ளி வைத்து, சாக்ரடீஸ் தனக்கே உரித்த வரையறையை ஒரு புராணிகக்கதை (Myth) மூலமாக வர்ணிக்கிறார். நகைச்சுவையும் அறிவும் கலந்த போக்கில், இந்த உண்மையான மனிதர்களைக் கதாபாத்திரங்களாகவே கொள்ளவேண்டும். அவர்களுடைய கருத்துக்களைச் சில நோக்கங்களுடன் தொடர்பு படுத்தல் சிறந்தது. ஆனால் இத்தகைய சுவையான உரையாடல்களில் பிளேடோவின் கருத்துக்களை நாடகப் பாத்திரங்களின் கருத்துக்களிலிருந்து பிரிப்பது கடினம்.

பிளேட்டோவினுடைய கருத்துக்களுக்கும் (Platonism) கவிதைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. காரணம், அக்கருத்துக்கள் செயல் முறையில் பயன்படுத்தப்பட்டன. அவருடைய முக்கியக்கருத்து, நன்மை(good). அழகானவை (in beautiful). மெய்ம்மை (The true) என்பவையே. இக்கருத்துக்கள் செயல்முறையில் கவிதையிலேயே பயன்படுத்தப்பட்டன. அழகு, மெய்ம்மையை விட நன்மையில்தான் அவருக்கு நம்பிக்கை அதிகம். ஆகையினால் எல்லாக் கலைகளையும் விட கவிதைதான் மக்களுக்கு நன்மை பயக்கும் என்று கருதினார். இந்நம்பிக்கையால்தான் பிளேட்டோவின் கவிதைகளைச் சமூக நெறிமுறையில் (Social Morality) தொடர்புபடுத்தும்படிச் செய்தது. ஆனால் அவரது தத்துவ சிந்தனைக்கு கவிதை பயன்படவில்லை. 'Republic' என்பது அவருடைய கனவு. அரசியல் தத்துவஞானியான அவர் இலட்சியக் கொள்கை (Idealism) என்ற அடிப்படைக் கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர். அக்கொள்கைப்படி நாம் வாழும் உலகம் கனவுலகம். நிலையற்றது. முக்கியமாக, இவ்வுலகம் மேல் உலகத்தின் படிமம். மேல் உலகந்தான் பிளேடோவின்

கருத்துப்படி இலட்சிய உலகம். ஆகையால் இவ்வுலகத்தின் ஒவ்வொரு கூறும் மேல் உலகத்திலுள்ள அதற்குச் சமமான கூறுகளின் படிமம். சுருங்கக் கூறினால் இவ்வுலகம் உண்மையான மேல் உலகத்தின் நிழல். பிளேட்டோவின் குடியரசு (Republic) இன்றைய முற்போக்குச் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. 'நன்மை' என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை பிளேட்டோ கொண்டிருந்தார் என்பதைப் பார்த்தோம். 'நன்மை' என்பது மிக உயர்ந்த கருத்து. கருத்துக்களின் கருத்து; அவருடைய குரு சாக்ரடீஸ் சொன்னதுபோல 'Virtue is knowledge' ஒழுக்கம் (Virtue) என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டால் அறிவு (knowledge) என்பது எண்ணம்(Idea). பிளேட்டோவின் கூற்றுப்படி இவ்வெண்ணம்தான் தலைசிறந்தது. 'Idea' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு மனத்தில் படிந்தது என்பது பொருள். மனதில் படிந்ததற்கு ஒரு உருவம் இல்லை. அதை ஒரு பண்டமாக (Substance) கருத முடியாது . ஆனால் பிளேட்டோவோ "idea is reality" என்று கருதினார். Idea என்பதை ஒரு உன்னதமான கருத்தாகவே கருதினார்.5 ஆகையினால் மேல் உலகம் idea-வின் பிறப்பிடம். கீழ் உலகம் ஒரு பொருள் உலகம். எண்ணத்தையும் பொருளையும் பிரிக்கலாம். எண்ணம் நிரந்தரமானது,. பொருள் நித்தியமானதல்ல. அதனால் பொருள்கள் நிறைந்தது. இவ்வுலகு நித்தியமற்றது. மேல் உலகம் எண்ணங்கள் நிறைந்தது. ஆகவே மேல் உலகம் உண்மையானது. ஏனென்றால் அதை அறிவின் மூலம் புரிந்துகொள்ளலாம். ஆனால் இப்பொருள் உலகம் நிலையானதல்ல.

பிளேட்டோ தன்னுடைய குடியரசிலிருந்து கவிஞனை நாடு கடத்தி விடுகிறார். இதற்கு அவருடைய போலச்செய்தல் கருத்து, (Theory of imitation) தான் காரணம். பொருள்களை உடைய கீழ் உலகம் பொருள்களற்ற மேல் உலகத்தின் படிவம். அல்லது கீழ்உலகம் மேல் உலகத்தைப் போல் உள்ளது (Imitation). கவிஞன் என்பவன் தன் கவிதைகளில் ஒரு கற்பனை உலகத்தை உண்டாக்குகிறான். பிளேட்டோ கூற்றுப்படி இந்தக் கற்பனை உலகம் நம்பத்தக்கதல்ல. இது கீழ் உலகத்தைப் போல

சித்திரிக்கப்பட்டது. கீழ் உலகம் மேல் உலகத்தைப் போல உண்டாக்கப்பட்டது. தர்க்கரீதியாக, கீழ் உலகம் மேல் உலகத்தின் படிவம், கற்பனை உலகம் கீழ் உலகத்தின் படிவம். ஆகையினால் கவிஞன் பொய்யை மாய உண்மை போலாக்குகிறான். The poet's world is an imitation of the real world which is an imitation of the upper world of heaven. ஆகையால் கவிஞன் அண்டப்புளுகன். அவன் பிளேடோவின் குடியரசிலிருந்து துரத்தப்படுகிறான். இதற்குக் காரணம் பிளேடோ நம்பிக்கை வைத்திருக்கும் மூன்று முக்கிய கருத்துக்களில் மேலானது, நன்மை. இந்த மூன்றுமே, நன்மை, அழகானவை, மெய்ம்மை எல்லாம் ஒன்று என்று பிளேடோ நம்பினார். இதன் பின்புலம் பிளேடோ கலைகளை எல்லாம் நன்மை என்ற கருத்திற்குத் தொடர்புபடுத்தினார். கவிஞன் பொய்யன் என்ற கருத்தினால் கவிதை என்பது தன்னுடைய குடியரசில் உள்ள மக்களுக்கு தீமை விளைவிக்கும் என்று நம்பினார். 6 ஆனால் அவர் எல்லாக் கவிஞர்களையும் நாடு கடத்தவில்லை. கடவுளைப் புகழ்ந்து பாடும் கவிஞர்களுக்கும் புகழ் பெற்ற மனிதர்களின் பொருளாதாரக் கொள்கைகளைப் போற்றும் கவிஞர்களுக்கும் குடியரசில் இடமுண்டு. பிளேடோ பேசும் மொழியை எழுத்து மொழியை விட மேலாகக் கருதினாலும், அவருடைய உரைநடையைப் புகழ்வதற்கு இல்லை. பிளேடோவின் உரைநடையே கவிதையைப் போல் மணக்கிறது என்பது அவருடைய திறனாய்வாளர்களின் பரந்துபட்ட நம்பிக்கை, பிளேடோவில் கவிஞனைப் பற்றிய அவநம்பிக்கையில் சோகம் தொக்கி நிற்கிறது. பிளேடோவின் போலச்செய்தல் கொள்கைக்கு (Imitation Theory) அவருடைய சீடர் அரிஸ்டாட்டில் தன் 'கவிதையியல்' என்ற நூலில் பதிலளிக்கிறார்.

**அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322):**

பிளேட்டோ கவிதைக்கும் சமூகவியலுக்கும், கவிதை உலகத்திற்கும் இலட்சிய உலகத்திற்கும் உள்ள தொடர்புகளை ஆராய்ந்தது மட்டுமல்லாமல் போலச் செய்தல் கொள்கையை

உருவாக்கினார். தூண்டுதல் கொள்கை (Theory of Inspiration) பிளேடோ காலத்திலிருந்து ரோமானியர் காலம் வரை பரவலாக விவாதிக்கப்பட்டது. தூண்டுதலைப் பற்றி இரண்டு கொள்கைகள் உண்டு. ஒன்று இனங் கண்டு கொள்ள முடியாத ஒரு வெளி சக்தியினால் தூண்டப்படுபவன் கவிஞன்; மற்றது, இந்தச் சக்தி கவிஞன் மனதிற்குள்ளேயே செயல்படுகிறது. ஒரு கொள்கை உளவியலைச் சார்ந்தது. மற்றொரு கொள்கை இலக்கியத்தையும் மானுடவியலையும் (Anthropology) சார்ந்தது. பிளேட்டோவிற்கு இரண்டாவது கொள்கையில் நம்பிக்கையிருந்தது. ஒரு மனிதன், இந்தத் தூண்டுதல் சக்தியில்லையென்றால் ஒரு கவிஞனாக முடியாது என்று சொல்லுகிறார். இத்தூண்டுதல் நம்பிக்கை ரோமானியர் காலத்தில் ஸிஸரோ7 (Cicero) போன்ற பெரும் பேச்சாளர்களால் விவாதிக்கப்பட்டது. ஹோமர் காலத்திலிருந்தே பல நூற்றாண்டுகள் மேலை நாட்டுக் கவிஞர்கள் காப்பியத்தின் முன்னுரையில் கவிதைத் தெய்வங்களை (Muses)ப் போற்றித் தூண்டுதல் சக்தியைக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்8. என்பது மரபு. சான்று, மில்டன் "Sing Heavenly Muse" என்று தொடங்குகிறான் தன் காப்பியத்தை.

அரிஸ்டாடில் மேலை இலக்கியத்தில் முதன் முதலாகக் கவிதையியல் (poetics) என்ற நூலைப் படைத்தார். அவர் இலக்கியத்தில் மட்டுமின்றி தருக்கத்திலும், தத்துவத்திலும் விஞ்ஞானத்தில் பல துறைகளிலும், அரசியலிலும் விற்பன்னர். அவருடைய தந்தை புகழ்பெற்ற அலெக்சாந்தரின் மூதாதையரிடம் மருத்துவராக இருந்தவர். அரிஸ்ட்டாடிலின் விஞ்ஞான அறிவு தந்தையிடமிருந்து வந்தது. அவருடைய அறிவு மிகப் பரவலாக இருந்ததால் அவரை இற்றைக்கால அறிஞர்கள் 'முதன்முதல் அகண்ட அறிவு படைத்தவர்' (the first universal mind)10 என்பர்.

அரிஸ்டாட்டில் 'கவிதையியல்' என்ற கட்டுரையில் கவிதையை இசை, நடனம், ஓவியம், சிற்பம் என்ற கலைகளுடன் தொடர்புபடுத்துகிறார். இவை அனைத்தும் போலச்செய்யும் கலைகள் (Imitative arts) அவை சுற்றுப்புறச் சூழலில் உள்ள

செய்கைகளைப் பின்பற்றுகின்றன. கவிதையின் மூலமாக இலக்கிய வகைமைகளைப் காப்பியம், நாடகம், தன்னுணர்ச்சிப் பாடல்கள் எனப் பிரிக்கிறார். இம்மூன்று கிரேக்க வகைமைகளில் நாடகத்திற்கே முதலிடம்.11 காப்பியம் மிக நீளமானது. தன்னுணர்ச்சிப் பாடல் மிகச் சிறியது. நாடகமே அளவானது. ஆகையால் நாடகத்தைக் கவிதையியலில் எடுத்துக் கொள்ளுகிறார். நாடகத்தைப் பொதுவாக செயல்முறையில் இரண்டாகப் பிரிக்கிறார். துன்பியல், இன்பியல் என்று. துன்பியல் நாடகங்கள், இன்பியல் நாடகங்களை விட சிறந்தது என்பது அவருடைய கருத்து. காரணம் துன்பியல் நாடகம் சமூகத்தில் மேல்மட்டத்தில் இருக்கும் மனிதர்களைச் சீரிய முறையில் விவரிக்கிறது. ஆனால் இன்பியல் நாடகம் கீழ் மட்டத்திலுள்ள மனிதர்களைக் கேலி செய்கிறது. இப்பகுப்புத் திட்டத்தின் கீழ் இன்பியல் நாடகத்தை அரிஸ்டாடில் வரையறுக்கிறார்:

Tragedy, then is a representation *of an action that is worth /* serious attention/ complete in itself, and of some amplitude/ in language enriched by a variety of artistic devices appropriate to the several parts of a play; presented in the form of action, not narration; by means of pity and fear bringing about the purgation of such emotions. 12 அரிஸ்டாடில் நாடகத்தைக் காப்பியத்திலிருந்தும் தன்னுணர்ச்சிப் பாடலிலிருந்தும் பிரித்துக் காட்டுகிறார். காப்பியத்தின் முறை கதை சொல்லுதல் (narrtion). தன்னுணர்ச்சிப் பாடலின் முக்கிய கூறு இசை. 13 ஒரு இன்பியல் நாடகத்தின் கூறுகள் கதை அமைப்பு (plot), கதாபாத்திரம் (Character), மொழி, சிந்தனை (Thought), காட்சி (Spectacle) பாடல் (Song), என்பன. இவற்றில் கதை அமைப்பு நாடகத்தின் முக்கியக்கூறு என்பது அரிஸ்டாட்டிலின் ஒரு கருத்து. கதாபாத்திரத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அப்பாத்திரத்தின் நடத்தை ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்றார், நடத்தை அப்பாத்திரத்திற்கு பொருத்தமாகவும் இருக்கவேண்டும். மேலும் பாத்திரங்கள் நாம் அறியும் வாழ்க்கையோடு ஒட்டிப் போதல் சிறந்தது. எதிர்மறையாக எந்த மாறுதலையும் நடத்தையில் புகுத்தக்கூடாது என்றார்.

Tragedy is a representation of an action

அரிஸ்டாடில் 'action' (செயல்படுமுறை) என்பதில் எந்தவித மாறுதலும் இருக்கக்கூடாது என்று தன் எண்ணத்தைத் தெரிவிக்கிறார். இதன் பொருள் "unity of action' என்ற கருத்தை அழுத்தமாகச் சொன்னார் என்று 16 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் இருந்த திறனாய்வாளர்கள் கருதினார்கள். அவர்களுடைய கருத்து, ஒரு நாடகத்திற்கு ஒரே ஒரு கதையே இருக்கவேண்டும். கிளைக்கதை கூடாது. இதிலிருந்து கிளம்பிய சர்ச்சை இரண்டு நூற்றாண்டுகள் three unities என்ற கொள்கையின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டது. நாடக ஆசிரியர்கள் இரண்டு பிரிவுகளாக Three unities என்ற கருத்தை ஆதரிப்பவர்கள் 'பழமைவாதிகள்', என்றும், அதை எதிர்ப்பவர்கள் 'முற்போக்காளர்கள்' என்றும் பிரிந்து சென்றார்கள். இவர்கள் Action என்பதை தவிர, காலமும் (time). இடமும் (place) நாடகத்தைப் பார்ப்பவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அரிஸ்டாடிலின் கூற்றை விவாதித்தார்கள்.

இந்த Three unities என்ற கொள்கை ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டு அபிப்பிராய பேதமே ஏற்பட்டது. Unity of Action. Unity of Time. Unity of Place என்று மூன்று வகைப்படும். இந்த மூன்று கருத்துக்களுமே கவிதையியலில் இருப்பதாகச் சொல்ல முடியாது. 17 -ஆம் நூற்றாண்டில் இருந்த ஐரோப்பிய அறிஞர்கள் இக்கருத்துக்கள் கவிதையியலில் 'இருப்பதாகக் கருதினார்கள். காஸ்டல்வெட்ரோ (Castelvetro) போன்ற இத்தாலிய அறிஞர்க்கும் இதில் பங்குண்டு. இதன் தாக்கத்தைப் பிரெஞ்சு நாடகங்களிலும் இத்தாலிய நாடகங்களிலும் காணலாம். ஆனால் ஷேக்ஸ்பியர் இந்த மூன்று ஒற்றுமைக் கொள்கைகளையே அலட்சியப்படுத்தினார். அவருடைய சமகாலத்தவரும் அறிஞருமான ஆங்கில நாடகாசிரியர் பென் ஜான்ஸன் ஒருவரே (Ben Jonson. 1572-1637) ஆங்கில நாடகத்தில் இக்கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார்.

இந்த மூன்று ஒற்றுமைக் கொள்கைகளே நாடக இயலுக்கு அடிப்படையாக இருந்தன. ஒரு நாடகத்தில் ஒரு முக்கிய செயலே (Main Action) இருக்கவேண்டும். இதற்கு "Unity of Action' என்று பெயர். இம் முறை கிளைக்கதையைப் பயன்படுத்த நாடகாசிரியரை அனுமதிக்கவில்லை. 14 இன்னொன்று Unity of time. இது சர்ச்சைக்குரியது. அரிஸ்டாடில் ஒரு நாடகத்தின் காலத்தைக் குறிப்பிடும் பொழுது "One revolution of the sun" என்கிறார். இது 12 மணிநேரமா அல்லது 24 மணிநேரமா? என்று ஐரோப்பிய அறிஞர்கள் கேட்டார்கள். ஆனால் செயல்முறையில் இது சாத்தியமில்லை. எனினும் ஒரு குறுகிய காலத்தைக் குறிப்பிடும். Unity of Place என்பது கடைசிக் கொள்கை. அதன்படி நாடகம் எந்த இடத்தில் தொடங்கியதோ அந்த இடத்திலேயே முடியவேண்டும். ஆகவே நாடகச்செயல் ஒரு இடத்திலேயே காட்சி தரவேண்டும். இது குழப்பத்தைத் தடுக்கவே இருக்கலாம். இக்கொள்கையை மீறிய ஷேக்ஸ்பியர் Antony and Cleopatra (அந்தோனியும் கிளியோபாத்ராவும்) என்ற அற்புதமான வீரயுக நாடகத்தையே உண்டாக்கியிருக்கிறார். இந்நாடகத்தில் செயல் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நொடிப்பொழுதில் நகருகிறது. இதைத் திறனாய்வாளர் "breathless action" என்பர். இத்தகைய நாடகத்தைப் பார்ப்பவர்கள் நாடகச் செயல் நகர்ச்சிக்கு ஏற்ப அந்தக் களத்திற்கே வந்துவிடுகிறார்கள் என்று திறனாய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இப்பொழுது அரிஸ்டாடிலின் கவிதையியல் உள்ள சில சிக்கல்களைப் பார்ப்போம். ஒன்று அரிஸ்டாடில் பயன்படுத்தும் கலைச்சொற்கள். Imitation என்ற ஆங்கிலச்சொல், 'mimesis' என்ற கிரேக்கச் சொல்லின் மொழியாக்கம். ஆங்கிலச் சொல் கிரேக்கச் சொல்லின் முழுப் பொருளையும் வெளிப்படுத்துவதில் தோல்வி கண்டதுமில்லாமல் அது மூலச் சொல்லின் பொருளைக் கொச்சைப்படுத்திவிட்டது.15 Imitation மூலத்தின் படிவம் என்ற மேலெழுந்தவாரியான பொருளைக் கொடுக்கிறது. அரிஸ்டாடில் ஒரு கவிஞனைக் குறிக்கும்பொழுது அவனை maker என்றார். அதன் பொருள்: நாடகத்தின் கதையைத் தன் கற்பனை மூலம்

உண்டாக்குபவன் அல்ல, கதையை ஹோமர் போல காப்பியக் கவிஞர்களிடமிருந்து கடன் வாங்கி,. பிறகு தன்னுடைய அறிவுத் திறமையினால் நாடகக் கதையாக்குகிறார். ஒரு தச்சன் மரக்கட்டைகளைக் கொண்டு ஒரு அழகிய கட்டிலை உண்டாக்குவது போல, என்று கூறுகிறார். அதற்குப் பொருள் புதிதாக உண்டாக்குபவன் அல்லது creator ஆகும். அரிஸ்டாடில் கூற்றுப்படி அதற்கு விளக்கம் காண்போம். ஒரு தச்சனை எடுத்துக்கொண்டால், அவன் ஒரு கட்டிலை உண்டாக்குகிறான். இக்கட்டில் மரச் சட்டங்களைக் கொண்டு ஒரு பொருளை உண்டாக்குவதில்லை. அவன் முதன்முதலாக ஒரு கட்டிலின் அமைப்பைக் கற்பனை செய்கிறான். ஆகையால் அவன் செய்யும் கட்டில் இக்கற்பனையின் படிமம். பிளேடோவின் கூற்றுப்படி, கற்பனை ஒரு உயர்ந்த எண்ணம் (idea). ஆனால் கட்டில் ஒரு பொருள். இதனால் போலச்செய்தல் (Imitation Theory) என்ற கொள்கை இரண்டு தத்துவ ஞானிகளையும் ஒன்று சேர்க்கவில்லை. பிரித்துக் காண்பிக்கிறது. தொல்காப்பியர் பொருளியலில் கவிதை அக, புற வாழ்க்கையிலிருந்து வந்தது என்கிறார். அதைப் போலவே அரிஸ்டாடிலும் "Poetry is an imitation of life" என்று கூறினார். 16 Imitation அல்லது mimesis என்பது எண்ணப் போக்கல்ல; கற்பனைப் போக்கு; கவிதை என்பது நம் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதுதான் அரிஸ்டாடிலிடமிருந்து பிளேடோவிற்கு வந்த பதில்:

இக்கலைச்சொற்களுக்கு விளக்கம் கவிதையியலில்லாமல் அரிஸ்டாடிலின் மற்ற கட்டுரைகளில் இருக்கிறது. இங்குத் துன்பியல் நாடகக் காட்சியைப் பார்ப்பதால் ஏற்படும் விளைவு பற்றி "by means of pity and fear bringing about the purgation of such emotions" என்று அரிஸ்டாடில் குறிப்பிடுகிறார். "Purgation" என்பது ஒரு மருத்துவக் கலைச்சொல். Catharsis என்பது இதற்கு இணையான கிரேக்கச் சொல். இன்று வரையில் அரிஸ்டாடிலின் திறனாய்வாளர்கள் அச்சொல்லிற்குத் தெளிவான விளக்கத்தைக் கூறவில்லை16ஏ. காரணம் இதுபோன்ற கலைச்சொற்களுக்கு விளக்கம் அவருடைய கவிதை இயலில் இல்லாததே. Catharsis என்ற மிக முக்கியமாக சொல்லிற்கு விளக்கம், அவர் எழுதிய

'சமையற்கலை' என்ற கட்டுரையில் கிடைக்கிறது. அவ்விளக்கமும் கட்டுரையின் தலைப்பின் காரணமாகத் தெளிவாக இல்லை. பொதுவாகக் கூறப்படும் விளக்கம்: ஒரு நாடகப் பார்வையாளன் (spectator), கதாநாயகன் மேடையில் இனம் புரியாத இன்னல்களில் தத்தளிக்கும் பொழுது, தன்னையறியாமல் அனுதாபப்படுகிறான். காரணம் கதாநாயகனும் தன்னைப் போல் ஒரு மனிதன்தான் என்று அவன் கருதுவதே. அச்சம் எதனால் எழுந்தது? கதாநாயகன் இன்னல்களை அனுபவிக்கும்பொழுது கடவுள் கிருபையால்தான் இவ்வின்னல்களிலிருந்து தப்பித்ததாகப் பார்வையாளன் நினைக்கிறான். (There but for the grace of God go I:) இதற்கு மாற்று விளக்கமும் உண்டு. தலைசிறந்த அமெரிக்கத் திறனாய்வாளரும் அறிஞரும் கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியருமான லயொனல் ட்ரில்லிங் (Lionel Trilling) என்பவர் Purgation அல்லது Catharsis என்பதற்குத் துன்பியல் சித்திரிக்கும், கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் இன்னல்கள், உணர்ச்சிகள், பார்வையாளன் தன் வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பங்களைச் சகித்துக்கொள்ள, இத் துன்பவியல் காட்சிகள் பயன்பெறுகின்றன என்று விளக்கம் அளித்தார். அறிவுலகம் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

கலைச் சொற்களைத் தவிர அரிஸ்டாடில் தெரிவித்த கருத்துக்களிலும் சிக்கல்கள் இருந்தன. அவர் தருக்கவாதி, ஆகையால் ஒரு நாடகக் கதை அமைப்பிற்கு ஆரம்பமும் இடைநிலையும் முடிவும் என்று மூன்று பகுதிகள் இருக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் கதையமைப்பைப் பற்றிக் கூறியது ஒரு அடிப்படைக் கொள்கை.17 பிறகு கதாபாத்திரத்தை விட கதையமைப்புத்தான் முக்கியம் என்று வலியுறுத்தினார். இக்கூற்று அறிஞர்களுக்கு ஒரு புதிராகவே இருந்தது இந்நூற்றாண்டு வரை. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அரிஸ்டாடிலின் கவிதையியலை முதுகலை மாணவர்களுக்குக் கற்பிக்கும் அறிஞர் ஹம்ப்ரி ஹவுஸ் (Humphry House) என்பவர் இப்புதிரை அவிழ்த்தார். "Character" என்பது ஒரு மொழி பெயர்ப்பு என்பதை மறக்கலாகாது. ஹவுஸ் இந்தச் சொல்

கதாபாத்திரத்தையும் அதன் நடத்தையையும் குறிக்கும் என்றார். அதன்படி அரிஸ்டாடில் கதாபாத்திரத்தை மனத்தில் கொள்ளவில்லை; அதன் நடத்தையையே. அவர் கையாண்ட கருத்தினை ஆங்கில மொழியில் சொல்வதென்றால், "Characters of a character' எனலாம். இச்சொற்றொடர் அரிஸ்டாடில் கருத்தைத் தெளிவாக விளக்கும்.

பிறகு ஒரு நாடகத்தைக் கதையமைப்பின் Complex plot, Simple plotனை அடிப்படையில் இரண்டாகப் பிரித்தார். இவ்விரண்டுவிதக் கதையமைப்பிற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்போம். நாடகத்திலோ (அல்லது) நாவலிலோ கதைப்போக்கைப் பார்த்தால் கதாநாயகன் வளாச்சியில் இரண்டு கட்டங்களைப் பார்க்கிறோம். ஆங்கிலத்தில் Reversal & Recognition என்று சொல்லுகிறோம். அரிஸ்டாடில் பயன்படுத்திய கிரேக்கச் சொற்களிலிருந்து இச்சொற்கள் வேறுபடவில்லை. கதாநாயகன் செல்வம் கொழிக்க வாழ்க்கையை அநுபவிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் திடீரென்று ஏழையாகிப் பல இன்னல்களை அநுபவிக்கிறான் என்றால் அதற்கு "reversal" என்று பெயர். இது ஒரு எதிர்மறையான மாற்றம். பணக்காரன் ஏழையாவது அல்லது ஒரு மனிதன் மகிழ்ச்சியான சூழ்நிலையிலிருந்து தாழ்ந்து இன்னலை அநுபவிப்பது போன்றது. இதைவிட சற்றுச் சிக்கலானது 'recognition', கதாநாயகன் தான் யாரென்று கதை முடிவில் தெரிந்துகொள்வது. சான்றாக, Tom Jones (1749) என்ற ஆங்கில நாவலை எடுத்துக்கொள்வோம். இதன் ஆசிரியர் Hentry Fielding (1707 - 54) என்பவர். இவர் அரிஸ்டாடிலின் கவிதையியலை அறிந்தவர். இந்நாவலின் கதை வெகு சுவையானது. கதாநாயகன் டாம் ஜோன்ஸ் வலிமையும் அழகும் நிறைந்த வாலிபன். அதனால் அவன் பல காதற் சிக்கல்களில் மாட்டிக்கொண்டு தன்னைச் சார்ந்த பணக்காரக் குடும்பங்களில் கெட்ட பெயரை வாங்கிக் கொள்கிறான். அவனைத் தெரிந்தவர்கள் அவன் நல்ல முறையில் பிறந்தவனல்ல என்று நம்புகிறார்கள். இந்நாவலின் கதையமைப்பை ஆங்கிலத் திறனாய்வாளர்களில் சிறந்தவரான கோல்ரிட்ஜ் என்பவர் "perfect plot' என்று நாவலுக்கு புகழாரம் சூட்டுகிறார்.19 நகைச்சுவையும்

கிண்டலும் கலந்த கதையமைப்பின் முடிவில் ஜோன்ஸ் யாரோ ஒருவனுக்கு பிறந்தவனல்ல, ஒரு உயர்குடிமகன் என்று கண்டுபிடிக்கப்படுகிறது. இதுதான் கதாநாயகன் தன்னிலையைப் பற்றி உணரும் recognition என்பது. அரிஸ்டாடில் பெரிய கிரேக்க நாடகமான Oedipus Rex 20 என்ற கவிதை நாடகத்தை an ideal drama என்றார். இதைப் போன்ற வேறு எந்த நாடகத்திலும் சிக்கலான கட்டமைப்பு இல்லை. காரணம் 'reversal' 'recognition' என்ற இரண்டும் ஒரே சமயத்தில் நடக்கின்றன. Oedipus Rex என்ற நாடகத்திற்கு "Oedipus Tyranus' என்ற தலைப்பும் உண்டு. விதி ஒரு மனிதனை எவ்வாறெல்லாம் ஆட்டி வைக்கிறது என்பதற்கு இந்நாடகம் ஒரு சான்று.

ஈடிபஸ் தீப்ஸ் (Thebes) நகர அரசன் லேயஸ் (Laius) என்பவன் மகன். ஜொகாஸ்டா (Jocasta) லேயஸின் ராணி. ஏடிபஸின் தாய். ஈடிபஸ் சாதகப்படி அவன் தந்தையை கொல்வான் என்றிருந்தது. அதனால் குழந்தையைக் குதிகாலில் ஒரு அடையாளத்துடன் மலைப்பிரதேசத்தில் விட்டு விடுகிறான் லேயஸ். அங்கு ஒரு இடையனால் வளர்க்கப்பட்டு காரின்த் (Corinth) என்ற நகரில் ஒரு அரசனிடம் ஒப்படைக்கப்படுகிறான். அவன் டெல்பி (Delphy) என்ற கோயிலுக்குச் சென்று, கிரேக்க வழக்கம் போல தன் எதிர்காலத்தைப் பற்றிக் குறி கேட்கிறான். அங்குள்ள பூசாரிணி ஆவியின் தாக்கத்தினால் ஈடிபஸ் தன்னுடைய தந்தையைக் கொல்வான் என்று கூறினாள். காரின்த் நகர அரசனையும் அரசியையும் தன் பெற்றோர் என நம்பும் ஈடிபஸ் காரின்த் நகரை விட்டு ஒரு இரத்தில் வெளியேறுகிறான். வழியில் எதிரே ஒரு இரத்தில் வரும் லேயஸை சந்திக்கிறான். யார் வழிவிடுவது என்ற பிரச்சினை சண்டையாக மாறி ஈடிபஸ் லேயஸ்ஸைக் கொல்கிறான். பிறகு தீப்ஸ் நகருக்குச் செல்லுகிறான். அந்நகர் துக்கத்தில் மூழ்கியிருக்கிறது. ஸ்பின்க்ஸ் (Sphinx) மனித உருவமும் மிருக உருவமும் ஒருங்கே இணைந்த பிராணி. இது மனிதர்களைக் கேள்வி கேட்டு விடை தெரியாதவர்களைக் கொன்று விடும். ஜொகாஸ்டாவின் சகோதரன் கிளியோன்(Cleon) அப்போது அந்நகரை ஆண்டு வந்தான். ஈடிபஸ் அவனைச் சந்தித்தபொழுது இந்தப்

பயங்கரமான பிராணியை சந்திக்குமாறு அறிவுரை கூறுகிறான். ஈடிபஸ் பிராணியைச் சந்தித்துக் கேள்விகளுக்கு விடையளிக்கிறான். மகிழ்ச்சியடைந்த கிளியோன் தன் சகோதரி ஜொகாஸ்டாவை அவ்வீரனுக்கு மணமுடித்து, அவனுடைய நகரத்திற்கு அரசனாக முடிசூட்டுகிறான். ஈடிபஸ் மண வாழ்க்கையில் பல குழந்தைகளுக்குத் தந்தை ஆகிறான். அவன் அரசனாக இருந்தபொழுது அவனுடைய நகரம் கொள்ளை நோயினால் (Plague) பாதிக்கப்படுகிறது. அக்கால வழக்கம் போல தெய்வ வாய்மொழியாளர் (Oracle) ஒருவரைச் சந்தித்து அரசன் காரணம் கேட்கிறான். அவர் லேயஸின் கொலையாளியைக் கண்டுபிடித்தால் கொள்ளை நோய் விலகும் என்றார். ஈடிபஸ் கொலையாளியைக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கிறான். நிகழச்சிகள் கோர்வையாக நிகழ திடுக்கிடும் சம்பவங்கள் நாடக மேடையில் நிகழ்கின்றன. நாடகத்தின் உச்சக் கட்டம் ஈடிபஸ் தன் தந்தையைக் கொன்று தாயை மணந்த உண்மை வெளிவருவது. ஜொகாஸ்டா இதை அறிந்தவுடனேயே தன்னை மாய்த்துக்கொள்கிறாள். அரசன் ஈடிபஸ் தன் கண்களையே பிடுங்கிக்கொண்டு ஓலமிடுகிறான்.20

இவ்வுச்ச கட்டத்தில்தான் reversal and recognit.ion என்ற கருத்துக்கள் ஒன்றியதை அரிஸ்டாடில் சுட்டிக் காண்பிக்கிறார். ஈடிபஸ்ஸிற்கு எதிர்மறைவு அவனுடைய வீழ்ச்சி. தான் தெரிந்துகொண்டது (recognition) தன் தந்தையைக் கொன்று தாயை மணந்து கொண்டது (Complex plot'. Simple plot'.......... என்று அரிஸ்டாடில் கூறியதை இன்று ஒதுக்கிவிட்டார்கள். இப்பொழுது மேலைநாட்டில் எழுதப்படும் நாடகமே மிக்க சிக்கலானது.21

**ஹோரஸ் (கி.மு. 65-8)**

இவர் ரோமானியர்கள் ஆண்ட இத்தாலியில் பிறந்தவர். இலத்தீனின் Ars Poetic அதாவது 'கவிதைக் கலை'. (Art of Poetry) என்ற முருகியல் கவிதைக் கடிதத்தை எழுதினார். அரிஸ்டாடிலுக்குப் பிறகு கவிதையியல் கொள்கைகளில் முக்கியத்துவம் அடைந்தவர். இவர் ஒரு அங்கதக் கவிஞரும்

கூட. இசைக்குழுப் பாடல்களையும் Odds, கவிதைக் கடிதங்களையும் Epistles எழுதி ஆங்கில, பிரெஞ்சுக் கவிஞர்களைப் பெரும் தாக்கத்துக்குள்ளாக்கியவர்.23 பிளேடோ, அரிஸ்டாடில் போல உயிர் ஒற்றுமை (Organic Unity) என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தார்.24 தன்னுடைய கவிதைக்கலையில், கட்டமைப்பைக் கொண்ட காப்பியம் ஒரு உயிருள்ள பொருளைப் போன்ற அமைப்பைக் கொண்டது என்கிறார். இது அனைத்து வகைக் கவிதைக்கும் ஏற்ற பொதுவானது.

ரோமானியர்கள் கிரேக்க நாட்டைத் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தனர். ஆனால் கிரேக்க கலாச்சாரம் ரோமானியர்களை ஆட்கொண்டது. அக் கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று ஹோரஸ் வற்புறுத்தினார். 25 தன்னுடைய கட்டுரையில் நாடகத்தைப் பற்றி முதலில் கூறும் அவர் பின்பு காப்பியத்தையும் கவிதை எழுதுவதையும் விவரிக்கிறார்.

'கவிதைக்கலை' என்பது பிளோஸ் என்பவருக்கு எழுதிய கடித வடிவமாக இருப்பதால் அதை "Epistle is pisos' என்ற தலைப்பைக் கொடுப்பவரும் முன்காலத்தில் இருந்தனர். ஆனால் இனங்கண்டுகொள்ள முடியாத பிஸோஸ் என்பவரை Pisones என்று கூறுபவரும் உண்டு. இக்கட்டுரை மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு ஒரு பல்பொருள் கலவை. தொடக்கத்திலேயே ஒரு ஓவியத்தைச் சித்திரித்து ஒரு கேள்வி கேட்கிறார். ஒரு ஓவியன் ஒரு குதிரையை வரைந்து அதன் தலையை மனிதன் தலைபோல் ஆக்குகிறான். அல்லது பல பறவைகளைப் பல வர்ணச் சிறகுகளால் அலங்கரிக்கிறான். அல்லது ஒரு அழகான பெண்ணை வரைந்து அதற்கு மீனினுடைய வாலைத் தொங்க விடுகிறான். இம்மாதிரி வரைபடங்களைப் பார்க்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா? இதே விளைவைத்தான் முன் யோசனை இல்லாமல் எழுதப்பட்ட நூல் உண்டாக்கும் என்கிறார் ஹோரஸ். எதைக் கலை அம்சத்துடன் செய்தாலும் ஒரே குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும்

என்று வற்புறுத்துகிறார். எவ்வேலையானாலும் ஒரு குறிக்கோளைக் கொண்டுதான் இருக்கவேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்.

இரண்டாவது பிரிவில் காப்பியத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறார். பிறகு நாடகத்தைப் பற்றிய கூறுகளை விவரிக்கிறார். அளவு Proportion, அதனுடைய பொருள் (subject) யாப்பு வகை, மொழி என்று நாடகத்தின் தொழில்நுட்பமான பகுதிகளைப் பிரிக்கிறார். கடைசியாகக் கவிதை எழுதுவது எப்படி என்ற பொதுக்கருத்தை விளக்குகிறார். மேலெழுந்த வாரியாகப் பார்ப்போமேயானால் 'கவிதைக்கலை' யில் ஒரு அமைப்பு இல்லாதது போல் தெரிகிறது. ஆனால் அவருடைய ஆளுமை என்பது ஒரு கவர்ச்சி. அது பரவலாகயிருக்கிறது. முக்கியமாக, அவர் முதன்முதலாகப் பயன்படுத்தும் சில சொற்றொடர்கள் மேற்கோள்களாக பல நூற்றாண்டுகள் எடுத்தாளப்பட்டன. ஹோமர் அரைகுறை உறக்கம் கொண்டார் (Homer nods)26 சொற்கலை அழகு (Purple Patch) சுவை இறக்கம் Pathos கதையை நடுவில் ஆரம்பித்தல் (in mediasres)27 போன்ற பல சொற்றொடர்கள் குறிப்பிடத்தக்கன.

அக்காலத்தில் நாடகமும் கவிதை நடையில் எழுதப்பட்டதால் இயற்கையாகக் 'கவிதை எழுதுதல்' என்ற தலைப்பில் பல சுவையான கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.28 இக்கருத்துக்கள் நாடகத்திற்கும் செயல் முறையில் பயன்படலாம். ஒரு முக்கிய கருத்து சீரொழுங்கு (decorum) என்பது. அதன்படி ஒரு இன்பியல் பொருளைத் துன்பியல் நடையில் விளக்கம் அளித்தல் பொருந்தாது என்றார். 29 ஆயினும் இன்பியல் நாடகங்களில் உயர்ந்த நடையும் துன்பியல் நாடகங்களில் தளர்ந்த நடையும் இருந்தன என்பதை ஒப்புக் கொண்டார். வாசகர்களைக் கவருவதற்கு அழகு அல்லது கவர்ச்சி இருக்கவேண்டும். சான்றாக, நாடகப் பாத்திரங்கள் சிரிக்கும்பொழுது (நடையின் காரணமாக) நாம் சிரிக்கவேண்டும். பாத்திரங்கள் அழும்போது நாம் அழவேண்டும். ""Pathetic language is appropriate to the face of sorrow and violent language to

the face of anger ......"(p.83) ஹோரஸ் வற்புறுத்தும் இன்னொரு முக்கியக் கொள்கை நிலைத்திருத்தல் (Consistency). ஒரு முக்கிய பாத்திரம் ஒரே நடத்தை கொண்டதாக இருக்கவேண்டும்.

கிரேக்க மரபில் மதிப்பைக் கொண்ட ஹோரஸ், மரபில் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தார். ஆகையால் ஒரு கவிஞன் மரபை மீறிப் புதிதாக ஒரு கொள்கையையோ அல்லது கருத்தையோ வெளிப்படுத்துவதை எதிர்த்தார். இக்கருத்திற்கு ஆங்கிலத்தில் Originality என்று பெயர். ஆனால் இன்றைய திறனாய்வு உலகத்தில் இக்கருத்திற்கு ஆதரவில்லை. 30 மேலும் அவர் சரியான அல்லது பொருத்தமான கருத்தை (appropriateness) விவாதிக்கிறார். தான் கடிதம் எழுதும் பிஸோவிற்குச் சான்று ஒன்றின் மூலம் விளக்குகிறார். 31 காட்சிகளில் சிலவற்றை ஒதுக்கிவிடும்படி பரிந்துரை செய்கிறார். திடுக்கிடும் நிகழ்ச்சிகளும் நம்பத்தகாதவைகளும் ஒதுக்கப்படவேண்டும் என்கிறார். அவைகளைச் சொற்களின் மூலம் காட்சியாக அமைக்கலாம். இவ்வாறு பல சட்டதிட்டங்களை வரையறுத்தபிறகு துன்பியலின் தோற்றத்தை விளக்குகிறார். 32 ஹோரஸ் கிரேக்க இலக்கியத்தில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பதற்கு (you must give your days and nights to the study of Greek models)'. என்ற கூற்று சான்றாகும். (ப.88)33. துன்பியலின் தோற்றத்தையும் சமகால இலத்தீன் நாடகங்களையும் விவரித்த பிறகு ஹோரஸ் ("Poets aim at giving either profit or delight, or at combining the giving of pleasure with some useful precepts for life"). (ப.90). என்ற ஒரு அடிப்படைக் கருத்தைத் தெரிவிக்கிறார். கவிதைக் கலை ஒழுக்கத்தைக் கற்பிப்பதா அல்லது மகிழ்ச்சியூட்டுவதா என்ற கேள்வி பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் சர்ச்சைக்குரிய தலைப்பாகி விட்டது.34 இதில் திறனாய்வாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் பங்குண்டு. பொதுவாக, ஹோரஸின் 'கவிதைக் கலை' யைச் செவ்வியல் இலக்கியத்தைப் பின்பற்றிய Pseudo-classicism என்ற இயக்கத்தின் ஆரம்பம் என்றனர். ஆங்கிலக் கவிஞர்களில் இவ் இயக்கத்தை உருவாக்கிய அலெக்ஸாந்தர் போப் அவருடைய குருவான ஜான் ட்ரைடன் (John Dryden), பிரெஞ்சு நாட்டில்

இவர்களுக்கு முன்னே இருந்த ப்வாலோ(Boileau) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மொழியாக்கத்தில் பற்று, உணர்ச்சியை விட அறிவிற்கு முக்கியத்துவம் போன்ற கருத்துக்களிலும், செவ்வியல் இலக்கியத்தில் நம்பிக்கையும் உள்ள இவர்கள் மூவரும் அங்கதக் கவிஞர்கள். அங்கதக் கவிதைக்கு ஒரு தனி கவிதையியலே உண்டாக்கலாம் என்று திறனாய்வாளர்களைக் கூற வைத்தவர்கள்.

**லான்ஜைனஸ் (Longinus):**

இவர் காலமும் உண்மையான பெயரும் தெரியவில்லை. லான்ஜைனஸ் என்ற பெயரில் பலர் உண்டு. இருந்தாலும் தன்னுடைய அறிவு சார்ந்த கிரேக்கக் கட்டுரையில் கவிதையில் மிக உயர்ந்த நடை (Sublime) எது? என்ற கேள்விக்கு ஹோமர் (Homer) முதலியவர்களுடைய கவிதைகளிலிருந்து மேற்கோள்கள் காட்டி ஐரோப்பியக் கவிஞர்களிடத்தே புகழ் தேடிக் கொண்டவர் இவர். இதன் எதிரொலி ஆங்கிலக் கவிதையில் இருந்தது. அவருடைய உயரிய நடை (Grand Style) என்ற கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்தவர் மாத்யூ ஆர்னல்ட்22.

கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இக்கட்டுரையில் இலக்கியத்தின் பண்புகளை ஆராய்கிறார். உயர்ந்தது 'Sublimity' என்பது உயர்ந்த எண்ணங்களில் (ideas) இருக்கிறது என்றார். ("Sublimity consints in a certain excellence and distinction in exprnession" (ப.100)) அவர் உயர்ந்த நடைக்குக் கருத்துக்களின் சாரம் ஐந்து மூலாதாரங்களில் உள்ளது. அவைகளில் முக்கியமானது, உன்னதச் சிந்தனை. இத்தகைய சிந்தனை உயர் பண்புடைய ஆன்மா அல்லது நடத்தை ஒரு எழுத்தாளனுக்கு இருந்தால்தான் அவனுக்கு எட்டும். இதற்குச் சான்றுகள் ஹோமரின் காப்பியத்திலிருந்தும் விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டின் உலகத் தோற்றத்தை விவரிக்கும் அதிகாரத்தினின்றும் (Genesis) எடுத்துரைக்கிறார். 36 இன்னொரு சான்று ஹோமருக்கும் முந்திய ஒரு பெண் கவிஞர் எழுதிய அரிய கவிதையை மேற்கோளாகக் கையாளுகிறார். 37

முதல் அதிகாரங்களில் 'Sublimity' என்ற கருத்தைப் பல கோணங்களில் ஆராய்கிறார். அக்கருத்தைக் கலை என்பதா? அக்கருத்தில் உள்ள குறைபாடுகள் என்ன? அக்கருத்தின் உண்மை என்ன? எனப் பல நோக்கில் ஆராய்கிறார்: உள்ளார்ந்த ஒரு ஆற்றலினால் உயர்ந்த எண்ணங்களோ அல்லது நடையோ தோன்றுகிறது ................ (Some innate power the true sublime uplifts our souls".) என்ற நம்பிக்கை கொண்டிருப்பதால், லான்ஜைனஸ் செவ்வியல் முன்னோடிகளில் ஒரு அற்புதநவிற்சிக் கவிதைத் திறனாய்வாளராகவே கருதப்படுகிறார். எனவே அதோடு மேலை இலக்கியத்தின் முதல் அற்புதநவிற்சித் திறனாய்வாளர் என்று இன்றும் இவர் அழைக்கப்படுகிறார். இதன் 9-வது அதிகாரத்தில் ஒரு கவிஞனின் ஆன்மாவிற்கு உயர் பண்பே ஒரு முக்கிய கூறு : "it is a gift rather than an acquired characteristic"38 என்றார். கவிஞனின் இயல்பைப் பொருத்துத் தானாக உண்டாக்கப்பட்டது என்றார். அவர் அற்புதநவிற்சிக் கொள்கையில் ஈடுபட்டவராக இருப்பினும் போலச்செய்தல் கொள்கையிலும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்: "I would lay down that the experienced poet, as an imitative artist should look to human life and character as his models and from them derive a language that is true to life"39. அரிஸ்டாடில் கூறியபடி, கவிதை என்பது வாழ்க்கையைப் போலச் சித்திரித்தல் என்றார். ஹோரஸ் கிரேக்க இலக்கியத்தைப் பின்பற்றுவதால் அவருடைய 'போலச்செய்தல்' கொள்கை குறுகிய நோக்கமுடையது; 'காரணம் அவர் இப்போலச்செய்தலில் கிரேக்க இலக்கியக் கொள்கைகளைப் பின்பற்றுங்கள்' என்பதேயாம்.

லான்ஜைனஸ், தெளிந்த நடை, ஆணித்தரமான சான்றுகள், சொல்லாட்சி போன்றவைகளினால் பல நூற்றாண்டுகளாக வாசகர்களைக் கவர்ந்தார். அவருடைய பேரை இனங்கண்டுகொள்ள முடியாததுபோல், அவர் யாருக்கு அறிவுரை கூறுகிறார் என்றும் தெரியவில்லை. 'என்னருமை' (Terantanius) என்று தன்னுடைய கட்டுரையில் முதல் சொற்றொடரிலேயே விளித்தாலும், அதனை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. அரிஸ்டாடிலின் 'கவிதையியல்' முற்றுப் பெறாததுபோல்,

லான்ஜைனஸ் கட்டுரையில் சில அதிகாரங்கள் முழுமையாக இல்லை.

### குவின்டிலியன் (கி.பி.35-95)

ரோமாபுரி மன்னர்கள் சொல்லாட்சிக் கலை 40யை ஒரு விஞ்ஞான நோக்கத்துடன் வளர்த்து வந்தார்கள். அக்கலையில் வெற்றி கண்டவர்கள் அவ்வாட்சியின் அரசியலில் முக்கியப் பங்கு கொண்டனர். இக்கலையில் புகழ்பெற்ற ஸிஸரோ (Cicero) ரோமாபுரியில் நலப் பாதுகாப்பாளராக இருந்தார். ஆனால் அவருடைய வழித்தோன்றல்களுக்கு க்வின்டிலியன் போல வழிகாட்டியாக ஒரு முக்கிய நூலையும் விட்டுச் செல்லவில்லை. இருப்பினும் அவருடய தத்துவ அறிவுத்திறனும் இலக்கியத்திறனும் அவருடைய அரசியலை விட இன்றைய அறிஞர்களால் நினைவு கூறப்படுகின்றன.41 க்வின்டிலியன் ஸ்பெயின்(Spain) நாட்டில் பிறந்தவராயிருந்தாலும், ரோமாபுரியில் கல்வி கற்றார். பல பேச்சாளர்களையம் ஆர்வத்துடன் கேட்டு, தான் அறிந்த சொல்லாட்சிக் கலையை அந்நகரில் கற்பித்தார். ரோமாபுரி ஆட்சியிலிருந்து முதன்முதலில் ஊதியம் பெற்ற ஆசிரியர் இவரே. இவர் இலத்தீன் மொழியில் சொல்லாட்சிக் கலையைப் பற்றி 'சொல்லாட்சிக் கலைஞரின் கல்வி' என்ற பன்னிரண்டு தொகுதிகள் அடங்கிய ஒரு நூலை எழுதினார். இதை இன்றும் மூதறிஞர்கள் கவனத்துடன் படிக்கிறார்கள். இவர் செவ்விலக்கிய முன்னோடிகள் போல கருத்துக்களை உருவாக்கியவர் அல்ல. முக்கிய எண்ணங்களை நல்லொழுக்க நோக்கத்தில் பரப்பியவர். தன்னுடைய நூலில் முதல் பிரிவில் ஒரு எதிர்காலச் சொற்பொழிவாளரின் முதல் கட்டமான கல்வியைப் பற்றிச் சொல்லுகிறார். குழந்தையைப் பேணி வளர்ப்பவர்கள் (செவிலித்தாய் உட்பட), பெற்றோர்கள், அடிமைகள் (ரோமாபுரி கலாச்சாரத்தின் ஒரு பகுதி) பள்ளிக் கல்வி எப்படி வீட்டுக்கல்வியை விட மேலானது, மொழியைக் கற்பது எப்படி, இலக்கியம் கற்பதின் ஒரு முக்கிய பகுதி, கிரேக்க மொழியைக் கற்பதின் இன்றியமையாமை எனப் பல தலைப்புக்களில் ஆராய்ந்தார். இவர் கூறிய கருத்துக்கள் மனித

வரலாற்றின் பல பகுதிகளுக்கும் பொருந்துமாகையால் கல்வியைப் பற்றி அவர் எழுதிய நூல் இன்னும் கவனத்தை ஈர்க்கிறது. இவருடைய திறனாய்வை விட இவர் கொள்கைகள் உயர்ந்தவை. சொல்லாட்சியாளராகவும் தத்துவ ஆசிரியராகவும் இன்று அவர் மதிக்கப்படுகிறார்.

**குறிப்புகள்**

1. சாக்ரடீஸ் (கி.மு. 469) நுணுக்கமான கேள்விகளைக் கேட்டு மக்களைத் திணற அடிக்கும் பகுத்தறிவாளர் கூட்டத்தின் தலைவர். இவருடைய உருவம் ரயில் நிலையத்தில் உள்ள ஒரு மூட்டைத் தூக்கியை ஞாபகப் படுத்தும் என்கிறார் ஒரு புகழ்பெற்ற தத்துவ ஆசிரியர். இவர் மனைவி ஒருஅடங்காப் பிடாரி. ஆனால் , சாக்ரடீஸ் அவளுடைய உயர்ந்த குணங்களை மதித்தார் என்று செனாபன் என்ற அவருடைய முக்கிய சீடர் கூறுகிறார். சாக்ரடீஸ் கால அரசு, இவர் மதத்தை ஏளனம் செய்கிறார், இளைஞர்களைக் கெடுக்கிறார் என்று குற்றம் சாட்டி விஷத்தைக் கொடுத்து அவரைக் கொன்றது...... என்ற உரையாடலில் பிளேடோ அவர் எப்படி விஷம் அருந்தி இறந்தார் என்பதை உருக்கமாக விவரிக்கிறார்.

2. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மன்னரால் அமர்த்தப்பட்ட கிரேக்கப் பேராசிரியராக இருந்த பெஞ்ஜமின் ஜொவெட் என்பவர் பிளேடோவின் உரையாடல்களை 1871-லேயே மிக அற்புதமாக ஆங்கில மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார். penguin வெளியீடான இம்மொழிப்பெயர்ப்பை இக்கால அறிஞர்களும் மதிக்கிறார்கள்.

3. பிளேடோவின் உரையாடல்களின் அமைப்பை ஆங்கிலக் கவியும் நாடக ஆசிரியரும் மொழிபெயர்ப்பாளருமான ஜான் ட்ரைடன். (1673-1700) என்பவர் தன்னுடைய திறனாய்வுக் கட்டுரையான Essay of Dramatic poesic - இல் கையாளுகிறார்.

4. அரிஸ்டோபேனஸ் : (Aristophanes, கி.மு. சுமாராக 448-380) கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பே இன்பியல் நாடகங்களினால் கிரேக்க நாட்டில் புகழ்பெற்றவர். இவர் அங்கத முறையில் 'clouds' என்ற நாடகத்தில் சாக்ரடீஸின் கருத்துக்களைக் கிண்டல் செய்கிறார். அரசை மனோதிடத்துடன் ஆய்வு செய்கிறார்,

Knights என்ற நாடகத்தில். Symposium என்பதற்கு கிரேக்க மூலச் சொல்லின் பொருள் விருந்து என்பது. விருந்து உண்டு கொண்டே விருந்தினர்கள் ஒரு கருத்தைச் சுவையாக ஆராய்வார்கள்.

5. Gerard Manley hopteins- என்ற ஆங்கிலக் கவிஞர் (1844-89) இம்மாதிரியான தத்துவத்தைத் தன்னுடைய கடினமான கவிதைகளில் மறைமுகமாக விளக்கியிருக்கிறார். thing என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பொருள் என்பது தமிழ். ஒரு கரைஞன் உள்ளுணர்வால் பொருளின் அறியத்தக்க உருவத்தை செதுக்குகிறான். அதன் உண்மையான உருவம் பொருளுக்குள் மறைந்து கிடைக்கிறது, புலன்களுக்கு அப்பாற்பட்டது. ஆகையினால்தான் ஒரு கவிஞன் அழகற்ற பொருள்களை அழகானதாக வர்ணிக்கிறான், dinge என்ற சொல்லின் மூலம். இக்கருத்தை ஆங்கிலத்தில் சொல்வோமானால் the thinginess of the thing என்ற ஹாப்கின்ஸிற்குப் பிடித்தமான சொற்றொடரை உண்டாக்கலாம். 'thinginess' என்பது கண்ணுக்குப் புலப்படாத உருவம். இவ்வுருவம் ஒவ்வொரு பொருளிலும் மறைந்து கிடக்கிறது. ஆகையால் கற்பனா சக்தி அதிகமாக உள்ள கவிஞன் மறைஉருவத்தைப் பார்த்துப் புலன் நோக்கை நம்பாமல் ஒரு பொருளின் அழகைப்பற்றிப்பாடுகிறான் பொருளை (substance) விட அதன் மறை உருவையே (idea) போற்றுகிறார். அவர் கருத்துப்படி மேல் உலகம் என்பது 'world of ideas'. ஆகையால் நிலையானது. கீழ் உலகம் என்பது 'worldd of things' ஆதலினால் நிலையற்றது.

6. 'is poetry moral or immoral' என்ற பிளேடோவின் கருத்தைத் தழுவிய கேள்வியை ஆங்கில இலக்கியத்தில் பல கவிஞர்கள் தற்காப்புக் கட்டுரைகளின் மூலம் பதிலளித்திருக்கிறார்கள். பார்க்க: Sir philip sidney, Apologie for poetrie (1595); B.P. Shelly / Defence of Poetry, (1821). இரண்டு கவிஞர்களுக்கும் கிரேக்க மொழி தெரியும்.

7. ஸிஸரோ (cicero, கி.மு.106-43) ரோமபுரி அரசின் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர். பேச்சுக்கலையில் (rhetoric) மிகுந்த ஆர்வம் உள்ளவர். ரோமாபுரி அரசியல் களத்தில் 'Senate' செய்த கட்டமைக்கப்பட்ட பேச்சுகள் இன்றும் இலத்தீன் மாணவர்களால் பயிலப்படுகிறது. அவருடைய சொல்வன்மை பல அரசியல் தலைவர்களை துக்குமேடைக்குச் செல்வதைத் தடுத்திருக்கிறது. அவர் குடிமக்கள் நலப் பாதுகாப்பாளர் (consul) என்ற உயர் பதவியை வகித்தவர்.

8. ஹோமரைப் பின்பற்றி இலத்தீன் காப்பியக் கவிஞனான வர்ஜிலும் (Virgil, கி.மு. 70-19) ஆங்கிலக் காப்பியக் கவிஞனான மில்டனும் (Milton, கி.மு. 1608-74) 'Sing, Heavenly muse!' என்ற வழக்கத்தை உண்டுபண்ணினார். இப்பழக்கம் நம் நாட்டிலும் உண்டு, சரசுவதி தேவியைப் போற்றுவதில்.

9. பிளேடோவின் குருகுலம் (Academy) என்பதைப் போல, அவருடைய சீடரும் லிஸேயம் (Lyceum) என்ற குருகுலத்தை ஏதென்ஸ் நகரத்தில் நடத்தி வந்தார். பல துறைகளைப் பற்றி நடந்துகொண்டே சொற்பொழிவுகள் ஆற்றி வந்ததால், அவர் குழுவை Peripatetic school என்று சொல்லுவார்கள். 'கவிதையியல்' அவர் எழுதியதல்ல. பெயர் தெரியாத அவருடைய மாணவர்களின் சிலரின் அரிஸ்டாடிலின் முயற்சியால் சொற்பொழிவுகளின் தொகுப்பு. முற்றுப்பெறாதது.

10. அவருக்கு அடுத்தபடியாக ஜெர்மனியின் பெரும் எழுத்தாளரான கதே (Goethe) என்பவர் அதே பட்டப்பெயரால் அழைக்கப்பட்டார்.

11. அரிஸ்டாடில் காலத்தில் கிரேக்க நாட்டின் தலைநகரமான ஏதென்ஸில் சிறப்புப் பெற்ற நாடகாசிரியர்கள் அரிஸ்டோபேனஸ் (Aristophanes) எஸ்கைலஸ் (Aeschylus), யூரிபிடீஸ் (Euripides) மற்றும் ஸோபோகிளிஸ் (Sophocles) என்றவர்கள் உயர்ந்த இன்பியல், துன்பியல் நாடகங்களைப் புனைந்து அவைகளை மக்கள் நாடக மன்றத்தில் (Public School) நடித்துக் காட்டினார்கள். அரிஸ்டாடில் தன் நேர்முக அநுபவைத்தை வைத்தே 'கவிதையியலில்' நாடகத்தின் கூறுகளை ஆராய்கிறார். நாடகத்தைப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் வேறுபாடு உண்டு. ஒரு நாடகத்திற்கு உயிரூட்ட வேண்டுமென்றால் அதை நடித்தே தீரவேண்டும். இந்தியாவில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைக் கற்பிக்கும் ஆங்கிலப் பேராசிரியர்களுக்கு இது ஒரு முக்கிய தடங்கல்.

பார்க்க : Northrop Frye, Anatomy of Criticism

12. "'Aristotle : "On the Art of Poetry"". Classical Literary Criticism, trans. T.S. Dorsck, London: Penguin Books, 1965, p.p. 38-39.

இது மறுபதிப்பு இப்பொழுது வெளிவந்திருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டிலேயே (1536) இவ்வரிய நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார்கள். இம்மொழியில் சிறந்த மொழிபெயர்ப்பு இதுதான். தரமான மொழிபெயர்ப்பு கிரேக்க மூலமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அநேக அறிவு சார்ந்த குறிப்புகள் அடங்கியது. இது இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன் Photostat முறையில் வெளியாகியது. துரதிர்ஷ்டவசமாக, இப்பொழுது இந்நூல் கிடைப்பதில்லை. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வெளியீடாக Ingram Bywater . இம்மொழிபெயர்ப்பு நம் நாட்டில் சில ஆண்டுகள் கிடைத்தது. ஆனால் அறிஞர்கள் இம்மொழிபெயர்ப்பைக் குறை கூறுகிறார்கள். பின்வரும் செவ்வியல் முன்னோடிகளுக்கும் பதிப்பாசிரியர் T.S. Dorsh உடைய நூலே இவ்வதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

13. தன்னுணர்ச்சிப் பாடல் Lyric என்பதன் மொழிபெயர்ப்பு. சரியானதல்ல. Lyric என்பது lyra என்ற கருவியை இசைத்துக்கொண்டே பாடப்படுகிற பாடல். இவ்ஆங்கிலச் சொல்லிற்கு dithyramb என்ற பெயர் அரிஸ்டாடில், காலத்தில் வழங்கப்பெற்றது. இது ஒரு குழு இசைநயத்தோடு பாடும் பாடல். எனினும், தன்னுணர்ச்சிப் பாடல் உலக வழக்கத்தோடு ஒட்டிவிட்டது.

14. இன்றைய சினிமாக் கதைகளில் கிளைக்கதையே இல்லாத தமிழ் சினிமா இல்லையெனலாம். கிளைக்கதைக் காட்சியைப் பார்க்க வரும் பொது மக்களுக்குக் கிளர்ச்சியூட்டும் விதத்தில் இன்ப இயல் பிரிவைச் சார்ந்து அமையும். கிளைக் கதைக்கும் முக்கியக் கதைக்கும் தொடர்பே இல்லை. அல்லது தொடர்பு ஒரு தளர்ச்சியாகவே உள்ளது. ஷேக்ஸ்பியர் இக்கொள்கையை மீறினாலும் அவருடைய நாடகத்திற்கு ஒரு புது அமைப்பையே கொடுத்தார். சான்றாக, Twelfth Night என்ற நாடகத்தை எடுத்துக்கொள்ளலாம். கிளைக்கதை Malvolio என்ற பாத்திரத்தை முட்டாளாக்குவது. இப்பாத்திரம் தலைமகனின் அரண்மனையில் வேலை செய்யும் தலைமை வேலையாள் (Steward). இக்கிளைக்கதை, காலச்சுற்று மனிதனைப் பழிவாங்கும் என்ற தத்துவத்தை விளக்குகிறது.

15. இந்த கொச்சைப் பொருளைத் தவிர்க்க, அறிஞர்கள் இன்று Imitation & Imitative என்பதற்குப் பதிலாக "Mimasis and Mimetic" என்ற மூலச் சொற்களையே பயன்படுத்துகிறார்கள்.

16. பார்க்க: V.Sachithanandan. ""Aristotle and Tolkappair"" Proceedings of the Eleventh Congress of the International Comparative Literature Association. New York: New Yorkd State University. 1985. 215 -222.

16.எ. விளக்கத்திற்கு பார்க்க: "Catharsis". Alex Premingar & others(ed). ed Poetry and Poetics. Enlarged ed. London: Macmillan. 1975. 106-108.

17. இன்று மேலை இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் இக்கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. இக்கொள்கைதான் அமைப்பு அல்லது Structure என்பதை வலியுறுத்துகின்றது.

18. "Novel" என்பதற்கு 'புதினம்' என்ற மொழிபெயர்ப்பு தவறானது. அச்சொல்லின் மூலம் இத்தாலியச் சொல் novella அல்லது கதை என்பது. ஆகையால் 'நாவல்' என்ற சொல்லை இக்கட்டுரையில் பயன்படுத்துகிறேன்.

19. "Oedipus Rex" என்ற ஈடிபஸ் அரசின் நாடகத்தை எழுதியவர் ஸோபோக்ளிஸ் (Sophocles, 496-406) மேலை இலக்கியத்தில் மிகப் பெரிய நாடகங்களில் ஒன்று. இவருடைய சிறந்த நாடகங்களைச் சிகாகோ பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் சுவைக்கும் அளவிற்கு மொழிபெயர்த்திருக்கின்றனர்.

கோல்ட்ரிஜின் கருத்தை எதிர்த்தவர் தலைசிறந்த ஆங்கிலத் திறனாய்வாளாரான F.R. LEAVIS. இதைப் பின்பற்றி இந்நாவலின் கதையமைப்பு முழு நிறைவு பெற்றதா அல்லது நிறைவு பெறாதா என்ற கேள்விக்கு இடம் கொடுத்திருக்கிறது.

20. பார்வையிழந்து திரிந்த ஈடிபஸ்ஸின் கதை. அதே ஆசிரியரால் துன்பியல் நாடகமாக, Oedpus at Colonus (கி.மு. 401) என்று ஆக்கப்பட்டது.

21. மேலை நாடக வரலாற்றிலேயே ஒரு திருப்பு முனையைப் புகுத்திய "Waiting for Godot (1995) என்ற அபத்த நாடகத்தை (Absurdist drama) எழுதியவர் 1906இல் பிறந்த சாமுவேல் பெக்கட் (Smueal Becket) மூலத்தைப் பிரெஞ்சு மொழியில் எழுதி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். இவர் அயர்லாந்து நாட்டவர்.

22. ஆர்னல்டைப் பற்றி இவ்வதிகாரத்தில் பார்க்கவும், அவர் உயர்ந்த நடை (Grand style) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

23. ஆங்கிலக் கவிஞர்களான ஜான்ட்ரைடன் (John Dryden, 1631 -1700) அவரை அங்கதக்கவிதைகளில் பின்பற்றும் அலெக்ஸாந்தர் போப் (Alexander Pope, 1688 - 1744) என்பவரும் ஹோரஸின் கவிதைகளைப் போல புனைந்தார்கள். போப்பின் Imitation's of Horace என்ற அங்கதக் கவிதைகளின் தொகுப்பு நடையிலும் அமைப்பிலும் சிறந்த கவிதையாகக் கருதப்படுகிறது.

24. Organic Unity என்ற நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக மேலை இலக்கியத்தில் வளர்ந்து வந்திருக்கிறது. இதன் கொள்கை, ஒரு உயிருள்ள பொருளைப் போலவே, ஒரு கவிதையும் உயிருள்ளது. அமெரிக்க இலக்கியத்தில் இந்த ஒப்புமைக்குக் கருத்துத் தெரிவித்தவர் எமர்ஸன் (Emerson) என்ற பேச்சாளரும் கட்டுரையாளரும். அவருக்குப் பிறகு அக்கருத்தை ஆதரித்தவர் பெரும் கவிஞரான வால்ட் விட்மன் கோல்ரிட்ஜீம் இக்கருத்தைத் தெரிவித்திருக்கிறார். பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெர்மானிய இலக்கியத்தில் இக்கொள்கை வேரூன்றியது.

25. ரோமானியர்கள் அவர்களுடைய இலத்தீன் இலக்கியத்தின் சாதனைகளைக் கண்டு உண்மையில் பெருமை கொண்டவர்கள். ஆனால் ஹோரஸ் தங்கள் இலக்கியம் கிரேக்க இலக்கியத்தைப் பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்தியதால் வெகுண்ட சில ரோமானியர்கள் அவரை 'Greek Pig' என்று வசைமாரி பொழிந்தனர். "You must give your days and nights to the study of Greek models" (P.88) போன்ற அறிவுரைகள் கோபத்தைக் கிளப்பின.

26. "Homer nods' எனபதற்கு இந்நூலிலுள்ள மொழிபெயர்ப்பை விட "யானைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழிதான் ஹோரஸின் சொற்றொடரை விளக்குகிறது.

27. In medias ras' என்ற கொள்கை பரவலாகத் திறனாய்வுச் செய்யப்பட்டது. ஒரு காப்பியக் கதையை முதலில் இருந்து ஆரம்பிக்கக் கூடாது. நடுவிலிருந்துதான்

தொடங்க வேண்டும் என்பதை ஜான் மில்டன் தன்னுடைய காப்பியமான ‘சுவர்க்க நீக்கம்’ (Paradise Lost) என்ற நூலில் கையாண்டிருக்கிறார். வ.வே.சு. ஐயர் தன்னுடைய ஒப்பிலக்கிய ஆராய்ச்சி நூலில் (Kamba Ramayana : A study) கம்பனைப் பல மேல்நாட்டுக் காப்பியக் கவிஞர்களுடன் ஒப்பிடுகிறார். அவர் இக் கொள்கையை எதிர்த்துக் கதையைத் தொடக்கத்திலிருந்தே கூறவேண்டும், கம்பனைப் போல என்று கூறுகிறார். இந்நூல் ஆங்கிலேய ஆட்சியில் சிறைத் தண்டனை அனுபவித்த ஐயர் பெல்லாரி மத்திய சிறையில் இருந்த பொழுது (1922) எழுதியது. இந்நூலை அறிஞர்கள் ஒதுக்கிவிட்டது வருந்தத்தக்கதே. இதைப் பாரதிய வித்யா பவன் 1955-ல் வெளியிட்டது.

28. நாடகத்திற்குத் தன்னுடைய கட்டுரைக் கவிதையில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதால், இன்றைய திறனாய்வாளர்கள் கூறுகிறார்கள், Piso எனப்படும் பெயர் ஒருவரைக் குறிக்காது. ஹோரஸின் புரவலரான ஒரு உயர் அதிகாரி (Consul) யின் பிள்ளைகளைக் குறிக்கும். இவருக்கு Lucio Piso என்று பெயர். இவர் கி.மு. 50 அல்லது 49-இல் பிறந்திருக்கலாம். இவருக்கு இரண்டு மைந்தர்கள்; இவர்களில் ஒருவன் நாடகாசிரியராக இருந்திருக்கலாம். ஆகையால் நாடகத்தைப் பற்றி ஹோரஸ் அறிவுரை கூறுகிறார்.

29. அரிஸ்டாடிலின் கூற்றுப்படி, துன்பியல் மாந்தர்கள் சமூகத்தின் மேல் மட்டத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் இன்பியல் மாந்தர்கள் கீழ் மட்டத்தைச் சார்ந்தவர்கள். ஆகையால் நடையிலும் வேறுபாடுண்டு. ஹோரஸின் கொள்கை (decorum) அவருக்குப் பின்வரும் அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டது. ஒரு இலக்கியத்தின் நடை என்பது அதன் பொருளைப் பொருத்ததாகும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இக்கொள்கை ஆங்கில இலக்கியத்தின் பதினெட்டாம் நூற்றாண்டுக் கவிஞர்களால் பரவலாகக் கையாளப்பட்டது. செவ்வியல் கொள்கை

பிரெஞ்சு நாட்டிலிருந்து ஆங்கில நாட்டிற்குப் பரவியது என்பது உண்மை.

30. Originality என்பதைப் பற்றிப் பல உண்மைகள் இருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டு வரை பல நாடுகளின் அறிஞர்கள், பல கலைஞர்களின் கருத்துக்களையெல்லாம் கையாண்டுவிட்டார்கள். ஆகையால் to be original is to be an idiot, என்ற கருத்தும் உண்டு. Originality என்பது இதுவரையிலும் கண்டுபிடிக்காத இலக்கியத் திருட்டு என்பது சீன நாட்டின் பழமொழி !

31. இவ்வதிகாரத்திலுள்ள 28-வது அடிக்குறிப்பைப் பார்க்கவும். பிஸோ என்பது ஹோரஸின் புரவலான உயர் அதிகாரியின் மூத்த மகனைக் குறிக்கும் என்பது ஒரு எண்ணம். சான்றுகள் எல்லாம் கிரேக்க இலக்கியத்திலிருந்து எடுத்திருப்பதால், வாசகர்களின் நோக்கில் அவை விட்டுவிடப்படுகின்றன.

32. அவர் கூற்றின்படி துன்பியலுக்குக் கிரேக்க மூலச்சொல் tragos எனப்படும். இதன் பொருள் ஆண் வெள்ளாடு. விளக்கப்படி, போட்டியில் வென்ற துன்பியல் நாடகாசிரியருக்கு ஒரு வெள்ளாடு பரிசாகக் கொடுக்கப்பட்டது. கிரேக்க நாடகங்களில் பங்கு கொள்ளும் ஆடற்பாடல் குழு வெள்ளாட்டுத் தோலை உடுத்திக்கொண்டு மேடையில் தோன்றுவதால் இப்பெயர் (tragos) அமைந்ததாகக் கருதுவர். இதை இன்றைய திறனாய்வாளர்கள் மறுக்கிறாரிகள் எனினும் துன்பியல் நாடகத்தின் தோற்றம் சர்ச்சைக்குரியது.

33. இவ்வதிகாரத்திலுள்ள 25-வது அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

34. பார்க்க : Rene' welleck & Austen Warren. Theory of Literature, London: Jonathan Cape, 1966, 30.

35. இக்கட்டுரை கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டது. மூலமொழி கிரேக்கம். . கைப்பிரதிகளில் 'டயோனிஸஸ்

லான்ஜைனஸ்', 'டயோனிஸஸ் அல்லது லான் ஜைனஸ்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தவறாக காஷியஸ் லான் ஜைனஸ் என்பவரால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்டது. மரபு வழியாக லான்ஜைனஸ் என்ற பெயர் வழங்கப்பட்டாலும், இவருடைய இயற்பெயர் என்ன என்று தெரியவில்லை. லான் ஜைனஸ் என்ற பெயர் மற்ற மூன்று செவ்வியல் முன்னோடிகளிலிருந்து பிரித்துக்காட்டப்படுவதற்குப் பயன்பட்டது என்று கருதவேண்டும்.

36. இதுவே விவிலிய நூலிலிருந்து செவ்விலக்கியத்தில் எடுத்தாளப்பட்ட முதல் மேற்கோள். கி.மு. ஏழாம் நூற்றாண்டில் பிறந்தவர். ஹோமருக்கு முன்பு இருந்த கவிஞர்களில் பெயர் பெற்றவர்.

37. ஒரு பால் புணர்ச்சி (Leybian) என்ற தலைப்பில் பல கவிதைகளை எழுதியவர் Sappho. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் பிறந்தவர். ஹோமருக்கு முன்பிருந்த கவிஞர்களில் பெயர் பெற்றவர்.

38. இப்பத்தியில் கையாளப்பட்ட இரண்டு ஆங்கில மேற்கோள்களுக்கும் பார்க்க : Classical Literary Criticism, p.109.

39. போலச்செய்தல் கொள்கையை சான்றுகளுடன் லான்ஜைனஸ் பத்தாவது அதிகாரத்தில் விவாதிக்கிறார்.

40. சொல்லாட்சிக் கலை என்பது இன்றைய நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வெகுவாக வளர்ந்த விதம் ரோமாபுரி ஆட்சியை நினைவூட்டுகிறது. இக்கலையை நிறுவியவர் அறிஞர் அண்ணா. அக்கலைக்கு வலுவூட்டியவர் கலைஞர் கருணாநிதி. பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஒரு வார ஏட்டில் 'சொற்பொழிவு' என்ற தலைப்பில் பல சுவையான கருத்துக்களைக் கூறியிருக்கிறார். 'வீரமணியின் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பில் பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஒருவர் ஒரு எம்ஃபில் ஆராய்ச்சிக்

கட்டுரை எழுதியிருக்கிறார்.

திராவிட இயக்கத்தின் அரசியலைப் போல, அதன் சொல்லாட்சிக் கலையும் இன்றைய தமிழ்நாட்டைப் பெரும் தாக்கத்திற் குள்ளாக்கியது. இக்கலையை அறிவு உலகம் வெகுவாக ஒதுக்கியது ஒரு புதிர். இக்கலைக்கு அடிப்படை பெரியார் ஈ.வே.ரா. எழுத்துக்களும் சொற்பொழிவுகளும்.

41. ஸிஸரோ தன் சிந்தனைகளைத் தன் கடிதங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய நெருங்கிய நண்பர் அடிகஸ் (Atticus) என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கடிதங்கள் வெளிவந்தவை. ஸிஸரோ ஜூலியஸ் ஸீஸரைக் கொன்ற புருடஸ் (Brutus) என்பவருடன் கடிதத்தொடர்பு கொண்டவர்.

42. இதுவும் ஒரு கலை இயக்கமே. Raphael என்பவர் இத்தாலிய நாட்டில் மறுமலர்ச்சிக் காலத்தில் உள்ள ஒரு பெரும் கவிஞர். இவர் இயேசுவின் மாதாவைப் பற்றி Madonna என்ற பெயருடைய பல ஓவியங்களைத் தீட்டி உலகப் புகழ்பெற்றவர். இக்குழுவினர் ஈஃபேலுக்குப் பிறகு அவருடைய கலை அழிந்துவிட்டது என்ற நம்பிக்கை கொண்டவர்கள். பேடர் என்பவர் மறுமலர்ச்சியைப் பற்றிப் பல கட்டுரைகள் அழகிய நடையில் எழுதியிருக்கிறார். "Germ" என்ற அவர்களுடைய இதழ் சொற்ப காலத்தில் மறைந்துவிட்டது.

## அதிகாரம் 1

### டி.எஸ். எலியட்

அமெரிக்கக் கவிஞரும், திறனாய்வாளரும், நாடகாசிரியருமான டி.எஸ். எலியட் (T.S. Eliot, 1888-1965) அமெரிக்க, ஆங்கிலக் கவிதையையும், திறனாய்வையும் திசை திருப்பியவர். அவர் அமெரிக்காவில் புதிய இங்கிலாந்து (New England) என்ற பகுதியில் செயின்ட் லூயி (St. Louis) என்ற இடத்தில் பிறந்தவர். அப்பகுதியிலுள்ள அமெரிக்கக் குடும்பத்தினர் ஆங்கிலேயர்களை விட ஆங்கிலக் கலாச்சாரத்தை விரும்பினர். (More English than the English) இத்தகைய பின்புலத்தில் தொடர்பு கொண்டிருந்தாலும், அவருடைய கலாச்சார நோக்கு பரந்த ஐரோப்பிய நோக்கு. அவர் உலகப் புகழ்பெற்ற ஹார்வேடு (Harvard) பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தார். ஒப்பிலக்கியத்தில் கவனம் செலுத்திய அப்பல்கலைக்கழகம் வகுப்பறையில் பரந்துபட்ட இலக்கியத்தை, இந்திய இலக்கியம், ஐரோப்பிய இலக்கியம் போன்றவற்றைப் பாடமாகக் கொண்டு ஒரு புதிய மாணவ சமுதாயத்தையே உருவாக்கியது. அப்பல்கலைக்கழகம் உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து 'ஹார்வேடு செவ்விலக்கியங்கள்' என்ற தொகுதியை வெளியிட்டது.1 இர்விங் பாபிட் (Irving Babbit) என்ற அறிஞர்தான் அவர் ஆசிரியர். 2 இவர் அற்புத நவிற்சி இயக்கத்தை வெறுப்பவர். அத்தகைய கவிஞர்கள் உணர்ச்சிக்கு அடிமையாகிக் கட்டமைப்பின்றி கவிதைகள் எழுதுபவர் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருந்தார். பிரெஞ்சு தத்துவாசிரியரும் எழுத்தாளருமான ரூசோ பற்றி 'ரூசோவும் அற்புத நவிற்சியும்' என்ற நூலை எழுதியவர். இந்நூல் ரூசோவைக் கண்டனம் செய்வது.

எலியட் கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன் மொழிகளைப் பயின்றவர். வடமொழியை ஹார்வேடு, பாரிஸ் பல்கலைக்கழகங்களில் கற்றவர். பரந்துபட்ட அறிவு நோக்கத்தை உடைய எலியட் ஒரு கால கட்டத்தில் புத்தமதத்தைத் தழுவ இருந்ததாகவும், ஆனால் பேராசிரியர் பேபிட் தடுத்துவிட்டதாகவும் ஒரு மரபுக்கதை உண்டு.

எலியட் அமெரிக்க கலாச்சாரத்தில் நம்பிக்கை இழந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய அமெரிக்க இலக்கியம் ஆங்கில இலக்கியத்தை மாதிரிப்படிவமாகக் கொண்டு ஒரு ஆன்மீக உறவை ஏற்படுத்திக் கொண்டது. எப்பொழுதும் சுதந்திரப் போக்கையே விரும்பும் அமெரிக்கர் இந்தத் தொடர்பை வெறுத்தனர். அரசியல் விடுதலைக்கு முன்பே அவர் தம் ஆன்மிக விடுதலைக்கு எமர்சன், விட்மன் போன்ற எழுத்தாளர்கள் வித்திட்டனர். எமர்சன் 'அமெரிக்க அறிஞர்' (The America.. Scholar)3 என்ற கற்பனையும் மெய்ம்மையும் கலந்த கட்டுரையில் ஒரு சுதந்திரமான அமெரிக்கக் கலைஞரை உருவாக்கினார். எதுகை, மோனை என்பன ஏகாதிபத்திய ஆட்சியின் அடையாளங்கள் என்று கூறிய விட்மன் அவைகளை ஒதுக்கிக் கவிதைகளை எழுதினார். அவர் எமர்சனின் அடிச்சுவட்டில் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எமர்சன் 1878 இல் எழுதிய கட்டுரையை அந்நாட்டு அறிஞர்கள் "America's Intellectual Declaration of Independence" அமெரிக்க அறிவுபூர்வமானப் சுதந்திரத்தை பறை சாற்றுதல் என்று பாராட்டினார். இக்கட்டுரையில் எமர்சன் அமெரிக்க அறிஞன் தகுதிகளை விளக்குகிறார். அவன் ஒரு சுதந்திரமான அறிவு நோக்குடையவன். அவனுக்குக் கருத்துக்களோ கொள்கைகளோ அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் மறைமுகமாக இங்கிலாந்து நாட்டிலிருந்து வருவதில்லை ; அவன் இலக்கிய ஓவியம் தீட்டுவதற்கு ஆங்கில மாதிரிப் படிவத்தைக் கொள்வதில்லை; அவன் தன் நாட்டிலுள்ள சுற்றுப்புறச் சூழலைத்தான் ஆக்கப்பூர்வமாக மாற்றுகிறான். பொதுவாக, வால்ட் விட்மன் கவிதைகள் எமர்சனின் கொள்கைகளின் வெளிப்பாடு என்று இலக்கியத் திறனாய்வாளர்கள் நம்புகிறார்கள்.

இத்தகைய பின்புலத்தில் எலியட்டிற்கு நம்பிக்கையில்லை. அவருக்குக் கலாச்சார நோக்கத்திலோ, மரபு நோக்கிலோ தன் நாட்டு நாகரித்திலும் நம்பிக்கையில்லை. ஆங்கில நாட்டோடு ஒப்பு நோக்கும் பொழுது, இனம் கண்டு கொள்ளக்கூடிய மரபுவழியான நிறுவன அமைப்பு (Traditional Institutions) அரசியல், இலக்கியம் சமூகவியல் முதலியனவற்றில்

இல்லை. எலியட் போன்ற மரபு வழிக்கவிஞனுக்கு உணர்ச்சியையோ, சிந்தனையையோ தூண்டக்கூடிய மூத்த எழுத்தாளன் இல்லை. அவர் தன்னை ஒத்த எழுத்தாளரான எஸ்ரா பவுண்ட் என்பவரோடு இலண்டனில் குடியேறினார். அங்கு ஒரு இலக்கியக்குழு உருவாகி எலியட் கொள்கை மரபு வழி ஆங்கில எழுத்தாளர்களை வியப்படையச் செய்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு எலியட் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கத்தோலிக்கராக மதம் மாறினார்.4

கவிதை மரபைத் தேடிச் சென்ற எலியட்ட 1917ல் நுண்பொருள் ஆய்வுக்கோட்பாட்டைச் சேர்ந்த கவிஞர்கள் (metaphysical poets) எழுதிய கவிதைகளைப் பின்பற்றி, உணர்ச்சிகளை அறிவு பூர்வமாக்கி வஞ்சப்புகழ்ச்சி உத்தியைக் கையாண்டு, விஞ்ஞான நோக்கில் உருவகங்களைப் பயன்படுத்தி I prufrock and other observations' (1917) என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். 1922ல் 'பாழ்நிலம்' (The Waste land) என்ற கவிதையில் முதலாவது உலகப்போருக்குப் பிறகு ஐரோப்பிய சமூகம் மதத்திலும், பால் உணர்ச்சி இச்சைக்காகவே, வம்ச விருத்திக்கல்ல என்ற பாலியல் கொள்கை காரணமாகவும் ஐரோப்பிய மக்கள் பாலைவனத்தில் வாழ்கிறார்கள் என்ற கருத்தைப் புராணிக முறையிலும் நினைவோட்ட உத்தியிலும் வெளியிட்டார். இக்கவிதை அமெரிக்க, ஆங்கிலக் கவிதை உலகைப் பெருந் தாக்கத்திற்குள்ளாக்கியது. கவிதையியலுக்குப் பழைய மரபு மீறிய ஓர் இலக்கணத்தை உண்டாக்கியது. 'Ash Wednesday' (1930) கவிதைகளிலும் தனது மரபுமாற்றத்தை மறைமுகமாகக் கையாளுகிறார். இறுதியாக, 'நான்கு பகுதிகள்' Four Quarters என்ற நீண்ட கவிதையைத் தம் முன்னோர்கள் ஆங்கில நாட்டில் வாழ்ந்த இடத்தை கற்பனையும் சோகமும் சேர்ந்த அறிவியல் நோக்கில் விவரித்துத் தத்துவ நோக்கில், அமெரிக்காவில் குடியேறியவரைப்பற்றி எழுதித் தனது புகழை உறுதிப்படுத்திக்கொண்டார். அவர் நாடகங்களில் கிரேக்க நாடகங்களின் தாக்கத்தைக் காணலாம். 'Murdar in the Cathedral' என்ற சமய நாடகத்தையும் எழுதி வெற்றி பெற்றவர் என்றாலும் அவருடைய நாடக்ங்கள் கவிதைகளைப் போல் சிறப்புப் பெற்றவையல்ல.

எலியட்டின் திறனாய்வுக் கட்டுரைகளில் பழமையும் புதுமையும் மாறி மாறி வருகிறது. Tradition and the Individual Talent pp.13-22. என்பது புகழ்பெற்ற கட்டுரை. இதில் எந்தக்கவிஞனும் மரபை மீறி எதிர்நீச்சல் போட முடியாது என்கிறார். இக்கட்டுரை வெளி வந்த 1919ல் இருந்து திறனாய்வாளர்கள் இதில் வரும் கருத்துக்களை முக்கியமாக எடுத்துக்கொண்டு அதிகக் கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் மேலை நாட்டில் எழுத்தாளர்கள் எதிர் நீச்சல் போடுவதால் இக்கட்டுரையின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. இருப்பினும், நம் நாட்டில் மரபில் ஆழ்ந்த நம்பிக்கை இருப்பதால் இக்கட்டுரை முக்கியத்துவம் பெறுகிறது.

மரபு பற்றி எலியட் மிக நுட்பமான புதிய செய்திகளைக் கூறுகிறார். சாதாரணமாக ஒரு எழுத்தாளனுக்கு மரபில் நம்பிக்கை வருவதில்லை. மரபு அவனை ஊடுருவ வேண்டுமானால் அதை முயன்று தான் பெற வேண்டும் என்கிறார். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ் இலக்கிய எழுத்தாளன் ஒருவன் ஒரு வகைமையை உண்டாக்குவதால் மரபுடன் ஒன்றிவிட முடியாது. அதற்குக் கடினமாக உழைக்க வேண்டும். சான்றாக, ஒரு காப்பியத்தை உண்டாக்குவதால் காப்பிய மரபைச் சார்ந்ததாக நம்பிக்கை கொள்ள முடியாது. அவன் அந்த மரபை ஒட்டிய இளங்கோவையோ அல்லது கம்பனையோ, ஒரு பெரிய இலக்கிய ஆசிரியரையோ ஆழ்ந்து படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். இது கடினமான வேலை என்றாலும் ஒரு எழுத்தாளன் மரபில் நம்பிக்கை கொள்வதால் தான் ஒரு முன்னோடியைத் தேரிந்தெடுத்து அவனைப் பின்பற்றுவது அவ்வளவு எளிதல்ல என்று எலியட்ட நம்பிக்கை தெரிவிக்கிறார். இக்கருத்தை யாரும் மறுக்கவில்லை. இது 'மரபு' என்ற சொல்லிற்குத் தெளிவையும் விளக்கத்தையும் அளிக்கிறது.

ஆனால் மரபிற்கும் ஒரு எழுத்தாளனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும்பொழுதுதான் கருத்து மாறுபாடுகள் தோன்றியிருக்கின்றன. எனினும் மரபிற்கும்

எழுத்தாளனுக்கும் உள்ள தொடர்பு புறச்சார்பானது என்ற கொள்கை (impersonality) புதுத்திறனாய்விற்கு வித்திட்டது.

What happens is a continual surrender of himself as he is at the moment to something which is more valuable. The progress of an artist is a continual self-sacrifice, a continual extinction of personality (p.17).

மேலே உள்ள பத்தியில் ஒரு எழுத்தாளன் மரபை இனம் கண்டு ஒன்றியதால் என்ன நடக்க வேண்டும் என்பதை எலியட் விளக்குகிறார். மரபு என்பது எழுத்தாளனைவிட விலை மதிப்புடையதால் தன் ஆளுமையை அல்லது தனித்தன்மையைத் தியாகம் செய்ய வேண்டும் என்கிறார். வேதாந்தத்தத்துவத்தில் கடவுளை அல்லது பிரம்மத்தை அடைய வேண்டுமென்றால் மனிதன் தனித்தன்மையை (self) அவரிடத்தில் முழுச் சரணாகதியாக்க வேண்டும் என்கிறார் ஆதிசங்கரர். அது மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள வேற்றுமையைச் சுட்டெரித்துவிடும். கடவுளும் மனிதனும் ஆன்மீக முறையில் ஒன்றே என்ற உன்னதத் தத்துவத்தை இது விளக்குகிறது. இக்கொள்கைக்குத் திரு. ராமானுஜர் மறுப்புத் தெரிவிக்கிறார். மனித ஆத்மா பரமாத்மாவிடம் முழுச் சரணாகதி அடையமுடியாது. அதன் ஒரு சிறுதுளியாவது பேராத்மாவுடன் ஒன்றாமல் இருக்கும். ஆகையால் தத்துவ ரீதியில் எலியட்டின் தற்சார்பற்ற நம்பிக்கைக்கு இடம் அளிக்கிறது. இக்கொள்கைக்கும் அத்வைதத் தத்துவத்திற்கும் இணைவரை நோக்கில் ஒற்றுமையைக் காணலாம். இதன் விளைவு எழுத்தாளன் தன்னுடைய வெளிப்பாட்டிலேயோ அல்லது மரபைத் தழுவுவதிலேயோ Extinction of Personality ஆளுமையை முழுமையாக அழித்துவிட முடியாது என்பதே. உளவியல் முறையிலும் இவ்வுண்மை உறுதிப்படுகிறது. நினைவு (Consciousness) என்பது அடித்தளமாக் Sub-conciurs என்ற அடித்தளத்திலிருந்த எண்ணங்களே. அது தெரியாமலேயே மேலே வந்து இலக்கியக் கலையாக உருவாகிறது. இவ் எண்ணங்கள் அடி மனத்திலிருந்து மேலே வர, அதை நினைவு

திருத்தி அமைக்கும் என்கிறார் எலியட். இக்கூற்றிலிருந்து ஒரு எழுத்தாளன் இத் தன்மையை முழுமையாக நீக்க முடியாது என்று தெரிகிறது. இதை புறச்சார்பற்ற தன்மை எனலாம். ஆளுமையை அழிப்பதற்கும் புறச்சார்பற்ற தன்மைக்கும் ஒரு வேறுபாடுண்டு. புறச்சார்பற்ற தன்மையென்பது ஒரு எழுத்தாளன் விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கிவைத்துவிட்டு ஆக்கச் செயலில் ஈடுபடுவதே. மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் புறச்சார்பை ஒரு எழுத்தாளனின் 'தொலைநோக்கு' என்று கூறுவர். இருப்பினும் அகநிலைப் பண்பு என்பது தொக்கி நிற்கும். இன்னொரு நோக்கில் எலியட்டின் தொடர்பைப் பிரெஞ்சு அறிஞர் ரெமி (Remy de Gourmont) என்பவருடன் ஆராய்ந்தால், புறச்சார்புடைய திறனாய்வாளர் (கலைஞனல்ல) தனது எண்ணங்களைக் கொள்கைகளாக மாற்றிக்கொள்ளுகிறார்கள். Religion and Literature என்ற கட்டுரையில் லாரன்ஸ் என்ற நாவலாசிரியரை ஒதுக்கிவிட்டதால், அவரை எலியட் விரும்பவில்லை என்று தெரிகிறது.

'மரபு' என்ற கொள்கையை வரலாற்று உணர்வு (Historical sense) என்பதுடன் தொடர்புபடுத்துகிறார் எலியட்:

... the historical sence compels a man to write not merelywith his own generation in his bones, but with a feeling that the whole of literature of his own country has a simultaneous existence and composes a simultaneous order. This historical sense, which is a sense of the timeless as well as of the temporal together, is what makes a writer traditional. And it is at the same time what makes a writer most acutely conscious of his place in time, of his own contemporarneity (p.14)

இம் முக்கிய பத்தி தமிழ் அறிவுலகத்தில் வாழும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அறிவாளிகளுக்கும் மரபு நம்பிக்கையில் ஒரு புரட்சிகரமான விளக்கத்தைக் கொடுக்கிறது. ஆங்கில மொழியில் 'Time is a river' என்ற சொற்றொடர் உள்ளது. இது கிரேக்கத் தத்துவஞானியான ஹெராக்ளிடஸ் (Heracleitus) என்பவரை நினைவுபடுத்துகிறது. ஆற்றில் நின்று கொண்டிருப்பவனுக்கு ஒரே நீர் அவனது கால்களை

தொடுவதில்லை என்கிறார். காலம் என்ற நீரோடை இறந்த காலம், தற்காலம், நிகழ்காலம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரிவுகள் கொள்கையளவில் தான். ஆனால் இறந்த காலத்தைச் செய்கை அளவில் தற்காலத்திலிருந்து பிரிக்க முடியாது. ஒரு விழாவில் கலந்து கொள்வதாக வைத்துக்கொள்வோம். நாட்டுப்பண் பாடிய பிறகு சடங்கு முடிவதாக பழக்க நோக்கில் நினைத்துக் கொள்ளுகிறோம். நாட்டுப்பண் பாடிய நிமிடத்திற்குப் பிறகு மேடையிலிருந்து நாம் இறங்குவதற்கு முன்பே சடங்கு இறந்த காலத்தைச் சேர்ந்தது என்று நம்புவதில்லை. 'நான்' என்ற நினைப்பில் அவ்வாறு கருதுவதில்லை. 'நான்' என்ற நினைப்பு எந்தக்காலம்? என்ற அறிவு, அறிவு சார்ந்த கேள்வியை எழுப்பினால் குழப்பம் விளையும். குழப்பத்தைத் தவிர்ப்பதற்குக் காலம் என்பது ஒரு இடைவிடாத நீரோட்டம் (Perpetual current) ஆகையால் இந்நீரோட்டத்தில் இறந்தகாலம் தற்காலம் என்பதைப் பிரிக்க முடியாது. நிமிடங்கள் வாரியாகக் கலை என்பதோ அல்லது எழுத்து என்பதோ காலத்திற்கு அப்பாற்பட்டது. ஆகையால்தான் தொல்காப்பியம், வள்ளுவம், சிலப்பதிகாரம் என்ற பெரும் நூல்களை இறவா இலக்கியம் என்கிறோம். இக்கொள்கையை இலக்கியத்திற்கும் மரபிற்கும் செலுத்தி எலியட் அவை இரண்டும் இறந்த காலத்தை மட்டுமின்றி நிகழ் காலத்தையும் சேரும் என்கிறார். அவை ஒரு காலத்தைச் சேர்ந்தது மட்டுமல்ல. காலத்திற்கு அப்பாற்பட்டது என நம்புகிறார். மேலும் 'மரபு' 'இலக்கியம்' என்பவை இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் ஒன்றுகூட்டுவது. இக்கருத்தைக் குறிப்பதற்கு 'simultaneous existence'. 'timeless' 'temporal' என்ற சொற்களையும் பயன்படுத்துகிறார். சுருக்கமாக மரபு, இலக்கியம் (எவ்வகைமையானாலும் சரி) இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் ஒன்றுபடுத்துவதுதான் (simultaneous existence) என்றார். ஆகையினால்தான் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாடிலின் 'கவிதையியல்' என்ற நூலையும் S H. Butcher போன்ற தலைசிறந்த அறிஞர்கள் எழுதிய விளக்கவுரையையும்,

'தொல்காப்பியம்' என்ற மூல - இலக்கண நூலுக்கு இளம் பூரணனார் முதல் சோமசுந்தர பாரதியார் வரை எழுதிய உரைகளையும் இன்னும் படித்து இன்புறுகிறார்கள். குறிப்பாக, மரபு என்பது இறந்த காலத்தைச் சேர்ந்தது அல்ல. அது இறவாத அறிவு நம்பிக்கை நீரோட்டம், இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைப்பது என்றார். இந்நாட்டு வாசகர்கள் எலியட் ஏன் மரபுகளைப் பற்றி இவ்வளவு ஆணித்தரமான கருத்துக்களைக் கூற வேண்டும் என்ற கேள்வியை எழுப்பலாம். எலியட் தோன்றிய காலத்தில் அவர் நாடான அமெரிக்காவில் இலக்கிய மரபு ஒன்று உண்டா? என்று ஏளனமாகக் கேட்டார்கள். 6 அவர் இலண்டன் நகரில் ஒரு இலக்கிய மரபைத் தேடிச் சென்றபொழுது, 'மரபு' பற்றித் தெளிவான எண்ணம் இல்லை என்பதைப் பற்றிக் கவலை கொண்டார்?

இக்கட்டுரையின் முதல் பகுதியின் இறுதியில் ஆளுமையின் இலக்கியத் தொடர்பு பற்றி விஞ்ஞான ரீதியாக விளக்கித்தன் கொள்கையை (theory of impersonality) உறுதிப்படுத்துகிறார். இணைவரைச் சான்றை வேதியலின் உதவி கொண்டு விளக்குகிறார். பொதுவாக, இரண்டு உலோகங்களை உருக்கி ஒன்று சேர்ப்பதற்கு ஊக்கியை (catalyst) சோதனைக் கூடத்தில் விஞ்ஞானிகள் பயன்படுத்துவர். ஆனால் இந்த பிளாடினம் ஊக்கி எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. இந்த விஞ்ஞான உத்தியைக் கட்டுரையின் இரண்டாவது பகுதியில் விவரிக்கிறார். இதன் முக்கிய நோக்கம்; எலியட் கூறும் ஆளுமையை (தற்சார்பு) எப்படி கவிதைக் கலையிலிருந்து அகற்றுவது என்ற கொள்கை கலையை ஒரு விஞ்ஞானம் ஆக்கும் என்று நம்புகிறார். இக்கொள்கையே புதுத்திறனாய்வாளர்களைத் தாக்கியது. திறனாய்வு என்பது எண்ணவோட்டம் என்பதல்ல. அது ஒரு விஞ்ஞான நோக்கு. அறிவு சார்ந்த முறையில் தெளிவும், மொழியிலும் கொள்கையிலும், தர்க்கரீதியான விஞ்ஞானத் தெளிவும் அறிவும் பெற்று, கலை-இலக்கியம் விஞ்ஞானக்கூடத்தில் (மனத்திலல்ல) உருப்பெற்றதாயிருக்க வேண்டும். எலியட்டின் விஞ்ஞானச் சான்று பிராணவாயு, sulphur di-oxide என்ற கந்தகத்தை (கருப்பொருள் ஊக்கி)

சோதனைக்கூடத்தில் கந்தக அமிலமாக மாற்றிவிடுகிறது. ஆனால் ஊக்கி எந்த விதத்திலும் சிறிதேனும் பாதிக்கப்படுவதில்லை. ஊக்கிக்கும் அமிலத்திற்கும் உள்ள தொடர்புதான் கவிஞனுக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு என்கிறார் எலியட்.

What happens is a continual surrender of himself as he is at the moment of something which is more valuable. The progress of an artist is a continual self-sacrifice, a contiunal extinction of personality (4.17)

இது, எலியட் கூறியது போல், தற்சார்பற்ற கவிதையல்ல. தற்சார்பற்ற கவிதையும் தமிழ் இலக்கியத்திற்குப் புதிதல்ல. திருப்பிப் பார்த்தோமானால் சங்க காலக் கவிதைகள் எல்லாம் ஆளுமையில்லாதவையே, (தற்சார்பு) சற்று பின்நோக்கிப் பார்த்தால் வள்ளுவமும் இந்த வகையைச் சார்ந்ததே. ஆனால் இச் செவ்வியல் கவிதைகளை ஆக்கியவர்கள் வாழ்க்கையைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. தியாகராச சுவாமிகள் பாடல்களைப் போல கையொப்பம் (Signature) இல்லை. இன்றைய நூற்றாண்டில் தற்சார்பற்ற கவிதையை மேலை நாட்டுக் கவிஞர்களும் திறனாய்வாளர்களும் வரவேற்கின்றனர். ஆனால் எலியட் கூறியது போல தன்னலம் இன்மை "Self-sacrifice" ஆளுமையை நீக்கும் "Extinction of personality", என்பது நடைமுறையில் கடினம். ஆளுமை முழுவதையுதும் ஒதுக்கி வைத்துவிட்டு அதனை மீறியோ அல்லது அழித்தோ கவிதை உண்டாக்குவது எளிதல்ல. சான்றாக, எலியட் இறுதிக் காலத்தில் எழுதிய 'நான்கு கூறுகள்' Fourt Quarters என்ற நீளக்கவிதையை எடுத்துக் கொள்வோம். ஒரு கூறில் அமெரிக்காவில் தான் பிறந்த வட்டத்தை அவரது எண்ணவோட்டத்தில் விவரிக்கிறார். இன்னொரு கூறில் முன்னோர்கள் ஆங்கில நாட்டில் எங்கிருந்து வந்தார்கள் என்று வரலாற்று நோக்கில் கூறுகிறார். இதை ஒரு தனிப்பட்ட கலாச்சார வரலாறு (Cultural History) என்று எடுத்துக்கொண்டாலும் எலியட்டையே சாரும், அமெரிக்காவையோ அல்லது ஆங்கில

நாட்டையோ அல்ல. அவரது 'பாழ்நிலம்' கவிதையில் "By the waters of Leomn I sat down and went" என்ற வரி வருகிறது. இது திறனாய்வாளர்களைத் திசை திருப்பியது. இக்கவிதையை ஸ்விட்சர்லாந்து நாட்டில் எழுதினார் என்பது தெரிந்ததே. Lemon என்பது அந்நாட்டு ஏரி. எனவே, அந்நாட்டு ஏரிக்கரையில் இக்கவிதையை எழுதினார் என்பவர். ஆனால் எலியட் கவிதைப் பழக்கப்படி, அவர் அறிவையும், முக்கியமாக அறிவுகூர்மையையும் மிகவும் பயன்படுத்துவார். இதனால் Lemon என்ற சொல்லிற்கு உட்பொருள் தெரிந்தால்தான் இவ்வரியின் பொருளை உணரலாம் என்று தெளிந்தனர். Lemon என்பது இன்று வழங்கும் சொல்லல்ல. ஷேக்ஸ்பியர் காலத்தில் வழங்கிய சொல். அதன் பொருள் 'காதலி' என்பது. இது Twelfth Night என்ற நாடகத்தில் Feste என்ற கோமாளி பயன்படுத்தும் சொல். இந்நுண்ணிய கண்டுபிடிப்பின் விளைவு : எலியட் கவிதை எழுதும் பொழுது தன் முதல் மனைவியுடன் வாழ்ந்த வாழ்க்கையின் சோகத்தை மறைமுகமாக வெளியிடுகிறார்8 என்பர். ஆகையால் எலியட்டின் ஆளுமைக் கொள்கை நடைமுறையில் இல்லை.

எலியட்டின் திறனாய்வு, கவிதையியலைச் சார்ந்ததாக இருந்தாலும், அவர் 1917-ல் முதன் முதலாக வெளியிட்ட கவிதைத்தொகுதி 'Prufrock and other observaturis என்பது. நுண்பொருள் ஆய்வுக்கோட்பாட்டியலைச் சேர்ந்த பதினேழாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிதை எழுதிய ஜான் டன் (John Donne), கராஷா (Crashaw), ஹெர்பர்ட் (Herbert) வான் (Vaughan) மார்வல் (Marvell) ஆகியவர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. டன் கவிதைகளைத் தொகுத்துப் பேராசிரியர் கிரையர்ஸன் (Grierson) வெளியிட்டார். இந்நூலுக்கு எலியட் எழுதிய ஒரு மதிப்பாய்வுரைக் கட்டுரை இலண்டன் டைம்ஸ் வார இதழில் வெளிவந்து புகழடைந்தது.9

The Metaphysical Poets (1921) என்ற இக்கட்டுரை இன்றைய திறனாய்வு வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. ஏற்கனவே ஜான்ஸன் பதினெட்டாம் நூற்றாண்டில் சாவேஜ் என்ற

கவிஞனைப் பற்றி எழுதிய கட்டுரையில் முதன் முதலாக இக்கவிதையின் மரபு மீறிய கூறுகளை இனம் கண்டுகொண்டார். ஆனால் அக்கவிஞர்களிடம் பரிவு காட்டவில்லை. எலியட்தான் முதன்முதலில் திறனாய்வு நோக்கில் அவர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்கில மரபில் சேர்த்தார்.

எழுத்தாளனுக்கும் அவனுடைய இலக்கியத்திற்கும் உள்ள நெருக்கத்தைத் தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் வெளிப் படுத்துகிறார். ஒரு கவிஞனோ அல்லது எந்தக்கலைஞனோ தன்னந்தனியான நிறைவான கலை விளக்கத்தைக் கொடுக்க முடியாது. சான்றாக, பாரதியின் பாடல்களை மட்டும் படித்து அப்படிப்பு அத்தாட்சியைக்கொண்டு நாம் புரிந்து கொண்டு முழு விளக்கம் கொடுக்க முடியாது. அவன் இலக்கிய நீரோட்டத்தில் கலந்து தனது எளிய நடையினால் ராமலிங்க சுவாமிகளையும் கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தனார் கீர்த்தனைகளையும் நினைவுபடுத்துகிறான். பாரத மாதாவை உருவாக்கம் செய்த பொழுது வங்காள நாவலாசிரியரான பங்கிம் சந்திர சட்டர்ஜியின் 'வந்தேமாதரம்' என்று அவர் முதலில் எழுதிச் சேர்ந்த, 'ஆனந்தமடம்' என்ற நாவலையும், சக்தி என்ற உருவகத்தை நமக்கு அளித்து பழமையான தெய்வ வழிபாட்டையும், 'மங்கிய நிலவினிலே' என்ற பாடலை உருவாக்கிச் சக்தி வழிபாட்டையும் நினைவுபடுத்துகிறான். மேலும், 'யாமறிந்த மொழிகளிலே' என்ற தன்னுணர்ச்சிப் பாடலில் நமது அரிய இலக்கிய மரபையும் நினைவுபடுத்துகிறான்.

இப்பின்புல விளக்கத்தின்படி, எலியட்டின் ஆணித்தரமான கூற்றைக் கவனிக்கவும். ஒரு கவிதையோ அல்லது எந்தக் கலைஞனோ தன்னந்தனியாகக் கவிதையையோ அல்லது கலையையோ பற்றி முழு விளக்கத்தை அளிக்க இயலாது. அவனுடைய தனிச்சிறப்பு, மதிப்பீடு இறந்த காலத்தைச் சேர்ந்த கவிஞர்களையும், கலைஞர்களையும் தொடர்புபடுத்திய மதிப்பீடு. நாம் கலைஞனையோ கவிஞனையோ தனியாக மதிப்பிட முடியாது. அவனை

ஒப்பீட்டுமுறையிலோ வேறுபடுத்தும் முறையிலோ இறந்த காலத்தவரோடு தொடர்புபடுத்தியே ஆக வேண்டும்.

எலியட்டினுடைய 'The metaphysical poets (pp.281-291) என்ற கட்டுரை அவருடைய கவிதைகளிலும் இலக்கியத் திறனாய்விலும் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றது. எலியட் தான் தேடி வந்த இலக்கிய மரபை இக்கவிஞர்களுடைய கவிதைகளில் இனம் கண்டு கொண்டார். இவருடைய கட்டுரை அத்தகைய கவிதைகள் இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பு என்பதை வலியுறுத்தியது. இலக்கியத் திறனாய்வாளர்களையும் கவிஞர்களையும் நுண்புலக்கோட்பாட்டுக் கவிஞர்கள் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் எலியட் காலத்தில் மிக முக்கியமானவர்கள் என்ற உண்மையை விளக்கிற்று. பதினெட்டாம் நூற்றாண்டிலேயே ஜான்ஸன் இனம் கண்டு கொண்டாலும் அவருக்கு முன் வந்த ட்ரைடன் 'இத்தர்க்கவாதக் கவிஞர்கள் காதலியிடம் கூட தர்க்கவாதம் செய்வார்கள் போலிருக்கிறதே' என்று குறை கூறினாலும் எலியட்டின் கட்டுரையினால் ஒரு பெரும் தாக்க விளைவை ஏற்படுத்தியது. அவருடைய முதல் கவிதைத் தொகுதி எலியட்டின் மீது அக்கவிஞர்களின் தாக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

எலியட் நுண்பொருள் கோட்பாட்டியல் கவிதைகளின் கூறுகளை தனக்கே உரிய பாணியில் விளக்குகிறார். மரபு நோக்கில், கவிதை என்பது உணர்ச்சியின் உருவாக்கம். இக்கவிஞர்கள் உணர்ச்சியைச் சிந்தனையாக (thought) மாற்றுகிறார்கள். ஒரு சாதாரணக் கருத்தைத் தர்க்க ரீதியில் விளக்குகிறார்கள். இதன் பின்புலத்தில் ட்ரைடன் இவர்கள் மேல் குறை கூறியதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். பொதுவாக, ஒவ்வொரு கவிஞனும் உருவக அணி (figure of speech) அல்லது படிமம் (image) மூலமாகத் தன்னுடைய கருத்தை வெளியிடுகிறான். ஆனால் இக்கவிஞர்களோ அவ்வுத்தியை மிக நுணுக்கமாக விவரிக்கிறார்கள். உருவக அணியும் படிமமும் எல்லோருக்கும் தெரிந்த வாழ்க்கையிலிருந்து எடுக்கப்படும்.

அனுபவம் மூலமாக நுண்பொருட்கோட்பாட்டியல் கவிஞர்களோ அனுபவத்தின் எல்லைக்கு அப்பால் (fantastic) சென்றுவிடுகிறார்கள். சான்றாக முன் கூறியதுபோல் பிரிந்த காதலர்களை வட்டம் வரைய உதவும் கருவியின் (compases) கால்களுக்கே ஒப்புமை செய்கிறார்கள். இதற்கு conceit அல்லது செய்கை கற்பனை என்று பெயர். விளக்கத்திற்கு மாறாகத் தத்துவம், தர்க்கம் முதலிய உத்திகளைப் பயன்படுத்துவதால் இவர்களுடைய அடிப்படை நோக்கம் விஞ்ஞான நோக்கே. இச்செய்திகளைப் புதிதாகக் கேட்கும் மாணவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். எலியட் கூறும் ஒரு முக்கியக் கருத்து உணர்ச்சியை உணர்ச்சியாகவே இவர்கள் வெளிப்படுத்தவில்லை. சிந்தனையாக மாற்றிவிடுகிறார்கள் என்கிறார். இக்கருத்து நுண்பொருட் கோட்பாட்டியல் கவிதைகளுக்கும் எலியட்டில் கவிதைக்கும் உள்ள அடிப்படைக் கருத்து : கீழ்க்கண்ட சான்றை எடுத்துக் கொள்ளலாம்:

On a round ball

A workman that bath copies by, can lay

An Europe, Afrique, and an Asia,

And quickly make that which was nothing, All

so doth each tears,

which thee doth weare,

A globe, yea world by that impression grow,

Till thy tears mixt with mine doe overflow

This world by waters sent from thee my heaven dissolved so (p.282)

டன் போன்றோர் எழுதிய நுண்பொருட் கோட்பாட்டியல் கவிதைகளில் இது ஒரு சிறந்த கவிதை. காதல் கவிதைகளில் காதலர்கள் பிரியும்பொழுது கண்ணீர் விடுதலைக் குறிக்கின்றது.

ஆனால் காதலன் பிரியாவிடையை ஒரு உருவகத்தில் மூலம் விளக்குகிறான். இக்கவிஞர்களுக்கே உரிய மிகைப்படுத்துதல் என்ற உத்தி இக்கவிதையில் மிளிர்கிறது. உளவியல் தத்துவமாக 'association of ideas' அல்லது தொடர்பற்ற கருத்துக்களை தொடர்புபடுத்துவது என்பது இக்கவிதையின் அடிப்படை. எலியட்டே கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

> ... When a poet's mind is perfectly equipped
> for its work, it is constantly amalgamating
> disparate experience; the ordinary man's
> experience is chaotic, irregular fragmentary.
> The latter falls in love, or reads Spinoza,
> these two experiences have nothing to do with
> each other, or with the noise of the typewriter or
> the small of cooking; in the mind of the poet these
> experiences are always forming new wholes (p.287)

ஒரு கவிஞனுடைய மனம் சீரிய முறையில் தன்னுடைய பணியைச் செய்கிறது. பலவகையான அனுபவங்களை ஒருங்கிணைக்கிறது. சாதாரண மனிதனின் அனுபவம் தாறுமாறானது, ஒழுங்கற்றது, சிதறியது. அவன் ஒரு பெண்ணுடன் காதல் கொள்கிறான். அல்லது தத்துவத்தைப் படிக்கிறான். இந்த இரண்டு அனுபவங்களும் ஒன்றுக்கொன்று சிறிதேனும் தொடர்பில்லை. தட்டெழுத்து இயந்திரத்தின் ஒலி அல்லது சமையலின் நெடி, இரண்டிற்கும் தொடர்பு இல்லாதது போல. கவிஞனின் உள்ளம் இந்த அனுபவங்களிலிருந்து புதிதாக ஒருங்கிணைப்பை உண்டாக்குகிறது. எலியட்டின் இக்கூற்று ஆக்க எழுத்தாளனின் (creative writer) பணி என்ன என்பதை விளக்குகிறது. சில மேல் நாட்டு எழுத்தாளர்கள் வாழ்க்கையே குழப்பம் என்று கருதுகிறார்கள். கலை என்பதின் நோக்கம்

இக்குழப்பத்தைத் தெளிவுபடுத்துவது. இந்தத் தெளிவுதான் குழப்பம் விளைவிக்கும் பலவிதமான அனுபவங்களை ஒருங்கிணைப்பது.

இத்தகைய விளக்கத்தின் துணை கொண்டு மேலே குறிப்பிட்ட கவிதையைப் பார்ப்போம். நுண்பொருள் கோட்பாட்டுக்கவிஞர்கள் நினைவோடை உத்தியைக் கையாளுகிறார்கள். இவ்வுத்தி ஒன்றிற்கொன்று தொடர்பற்ற அனுபவங்களைக் கலை நோக்கில் ஒன்றுபடுத்துவது. பொதுவாக, கவிஞர்கள் 'காதல்' என்ற பொருளை உணர்ச்சிபூர்வமாக விவரிக்கிறார்கள். ஆனால் எலியட் கூறியது போல கவிஞன் உணர்ச்சியைச் சிந்தனையாக மாற்றுகிறான். இக்கவிதையின் அடிப்படைக்கருத்து காதலர்கள் பிரிகிறார்கள். இயற்கையாக கண்ணீர் வடிக்கிறார்கள். இதை மிகைப்படுத்திக் கூறுகிறார் கவிஞர் ஒரு உருவகத்தின் மூலமாக, கலைஞன் உருண்டை வடிவமான உலகம் ஒன்றைச் செய்கிறான். அதன் உருவ அமைப்பிற்கு முன் ஒரு உருண்டை வடிவமே (round ball) இருக்கிறது. அக்கலைஞன் ஆப்ரிக்கா, ஐரோப்பா, ஆசியா என்ற பல நிலப்படங்களை ஒட்டி ஒன்றுமே இல்லாத உருண்டையில் உலகத்தையே உண்டாக்குகிறான். கலைஞனின் உருவகச் செய்முறையைக் காதலர்கள் பிரியாவிடை பெறுவதினுடன் இணைக்கிறான். கவிஞன் காதலனாக, காதலி கண்ணீர்வடிப்பதால் ஒரு நம்பத்தகாத செயல் மாற்றத்தை வர்ணிக்கிறான். விவிலிய நூல்படி பெருவெள்ளம் (deluge) என்பதை உலகத்தை அழிக்க ஆண்டவர் அனுப்பியது போல் இந்த உருண்டை வடிவத்தைக் கலைஞன் ஒரு முழு உலகமாக மாற்றிக் கொண்டிருக்கும் பொழுது காதலி அருகில் நின்று கொண்டு கண்ணீர் வடிக்கிறாள். இந்த சூன்ய வடிவம் உலகமாக மாறும் பொழுது ஒரு அண்ட நிகழ்ச்சியையே காதலி நடத்துகிறாள் என்று கவிஞன் தன் காதலியைப் புகழ்கிறான். எப்படி? கலைஞன் உருண்டையைக் கவிதையில் சொல்வது போல, "which was nothing" உருண்டை உருண்டையாகவே இருக்கிறது. காதலியின் ஒவ்வொரு கண்ணீர் துளி கலைஞனின் ஆக்கத்தைப் பிரதிபலிக்கிறது. சூன்யமாக இருக்கும் உருண்டை

ஒரு உலகமாக ஆகிறது. இதற்குக் காதலி தான் காரணமென்று நம்புகிறான். பிறகு காதலனும் காதலியும் கண்ணீர் வடிக்கையில் அது ஒரு பிரளயமாகவே (விவிலியநூல் கோட்பாடு) ஆகி உலகத்தை மூழ்கடிக்கிறது. புதுத்திறனாய்வாளர்கள் ஒரு கவிதையின் எண்ணவோட்டத்தை உரைநடையில் கொடுப்பது மிகக் கடினம் என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் அவர்களின் கவிதையை இந்நூலின் வாசகர்களின் பொருட்டுக் கொச்சைப்படுத்தியிருக்கிறேன். இதிலுள்ள கூறுகள் கவிதையின் கூறுகள் என்கிறார் எலியட், மரபு நம்பிக்கையால், மிகைப்படுத்துதல், நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை கையாள்வது மிக முக்கியக் கூறுகள் என்பது எளிதில் விளங்கும். எலியட் கூறுவது போல, உணர்ச்சியைச் சிந்தனையாக மாற்றும் வல்லமை படைத்தவர்கள் நுண்பொருட் கோட்பாட்டியல் கவிஞர்கள். இக்கூறுதான் கவிதைக்கு அடிப்படை என்ற கொள்கையை எலியட் வற்புறுத்துவதால் அவருக்கு அற்புத நவிற்சிக் கவிதையில் நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது.

உணர்ச்சியைச் சிந்தனையாக மாற்றும் போக்கு வள்ளுவம், கம்பராமாயணம் போன்ற நம் பழம் கவிதைகளிலேயே இருக்கிறது. இதற்குச் சான்றாக இராமர் குகனோடு தோழமை கொண்டு பதிலிறுத்தலைக் கொள்ளலாம். தோழமை இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு (அயோத்தியா காண்டம்: குகப்படலம், 693 & 694). இங்கு இராமனுடைய சொற்கள் குகனுடைய தோழமை இலட்சியத்திற்கு எதிர் விளைவு என்றாலும் அதில் உணர்ச்சியைவிட இராமனது சிந்தனையே மேலோங்கியிருக்கிறது. மனிதத் தன்மையும் தெய்வத்தன்மையும் இணைந்த ஓர் அற்புதக் கலவை அவருடைய பதில்.

எலியட் உணர்ச்சியை எப்படி சிந்தனையாக்குவது என்ற நுண்பொருள் கோட்பாட்டியல் மரபைத் தனதாக்கிக்கொண்டாலும், அவரது பாழ்நிலம் கவிதையில், பிரெஞ்சுக் கவிஞர் பூதலேரின் பெருங்கவிதையான

'நச்சுப்பூக்களில்' உள்ள படிமக்கூறின் தாக்கத்தைக் காணலாம். பிரெஞ்சுக் கவிதையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர் பூதலேர். அவர் வாழ்க்கையைப் படிமங்களின்காடு என்று விவரிக்கிறார். எலியட் என்ற திறனாய்வாளர் பல கருத்துக்களை பிரெஞ்சுத் திறனாய்வில் இருந்து பொறுக்கி எடுத்து ஆங்கிலத்தில் கொள்கைகளாக மாற்றியிருக்கிறார். கோல்ரிட்ஜ், ஜெர்மானியத் திறனாய்வாளர்கள், தத்துவாசிரியர்களிடமிருந்து கடன் வாங்கியது போல. 'இலக்கியக்கடன்' ஓர் ஈனச் செயல் அல்ல. எலியட்டே, கவிஞன் கருத்துக்களைக் கடன் வாங்குவதைவிட, திருடுவதே அவனுடைய உரிமை என்கிறார். ஒரு எழுத்தாளன், எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் இலக்கிய முன்னோடிகளை நம்பாமல் ஒரு புதிய கருத்தைக் (original idea) கூறமுடியாது. அது ஒரு தீர்க்கதரிசியால் தான் முடியும். இங்கு எலியட்டின் மரபு நம்பிக்கை, முக்கியமானது. அவர் கூறியது போல, எந்த எழுத்தாளனும் மரபை முழுவதுமாக ஒதுக்க முடியாது, வெகுகாலத்திற்கு முன்பு வழங்கி வந்த சீனப்பழமொழியின்படி தனித்தன்மையான படைப்புத்திறன் என்பது இனங்கண்டு கொள்ளமுடியாத இலக்கியத் திருட்டு "originality is often undetcted Magiarism" ஆகும். ஆகையால் இன்றைய கவிதையியலின் படி, ஒரு எழுத்தாளனின் பரிணாமம் என்பது மூன்று நிலைகளை உடையது: கடன் வாங்குதல், போலச் செய்தல், சுதந்திர எழுத்தாளனாக மாறுதல். புதுமைப்பித்தன் புராணிக முறையைக் கிண்டல் செய்வதும், அப்பட்டமான மொபசான் என்ற பிரெஞ்சு எழுத்தாளரிடமிருந்து சொல்லிற்குச் சொல் அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புக் கதையிலிருந்து மனதிடத்துடன் ஒரு கதையை உருவாக்குவதும் எண்ணத்திற்குரிய செயலன்று. அது எழுத்தாளனின் வளர்ச்சியைக் குறிக்கும். பாரதியாரின் வேத சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு அரவிந்தரின் ஆங்கில மொழிபெயர்ப்பின் அப்பட்டமான படிவம். இது பாரதியார் என்ற எழுத்தாளரின் வளர்ச்சியைக் குறிக்கும். எழுத்தாளன் கடன் வாங்குவது பொருளாதாரயியலைக் சார்ந்ததல்ல. கவிதையியலைச் சாரும். இந்த அடிப்படையில்தான் நாம் எந்த எழுத்தாளனையும் மதிப்பிட வேண்டும்.

எலியட்டின் இன்னொரு முக்கிய கட்டுரை இத்தாலிய நாட்டு சிறந்த கவிஞரான தாந்தே (Dante) எழுதிய கவிதை (பக்.237-277) பற்றியது இதுனுள் தாந்தேயின் வாழ்க்கை அனுபவம், தொடர் உருவகமுறையில் அமைந்துள்ளது கவிதையின் பெயர் 'விடாநோவா' (Vita Nuova)

தாந்தேயின் மிகச் சிறந்த கவிதை 'தெய்வீக இன்பியல்' (The Divine Comedy). இது இன்பியல் நாடகம் என்ற பொருள் கொண்டதல்ல. 13 தாந்தே வாழ்ந்தது ஐரோப்பாவின் இடைக்காலம் (The Middle ages) அவர் 1265-ல் பிறந்து 1321 இல் மறைந்தார். வாழ்க்கையின் தொடக்கத்திலேயே பியாட்ரிஸ் (Beatrica) என்ற பெண்ணைக் காதலித்தார். தெரிந்தோ தெரியாமலோ, இதை முதிர்ச்சி அடைந்தவர்கள் அநுபவம் இல்லாததால், பிளேடோனியக் காதல் (Platonic Love) அல்லது இலட்சியக்காதல் என்பர். அறிஞர்கள் தாந்தேயின் வாழ்க்கையைப் பல ஆண்டுகளாக ஆராய்ந்து அவளை பிஸ் பொர்டினாரி (Bice Portinari) என்றனர். இவளுக்குத் திருமணமாகிவிட்டது. தன் காதலியைப் பற்றி உருக்கமான கவிதையை இவ்விரண்டு நூல்களிலும் எழுதியிருக்கிறார். இந்த தெய்வீக இன்பியல் நூல் ஒரு மனிதனின் இறப்பிற்குப் பின் என்ன நடக்கிறது என்பதைப் பழைய இத்தாலிய மொழியில் உயர்ந்த கவிதை நடையில் விவரிக்கிறது. தாந்தே கத்தோலிக்கர். ஆதலால் கத்தோலிக்கப் பிரிவின் நோக்கில் இது எழுதப்பட்டது. கத்தோலிக்கரின் மேல் உலகம் 'இறப்பிற்குப் பின்' Inferno, Purgatario, Paradise என்ற மூன்று பிரிவுகளைக்கொண்டது. இந்த மூன்று நிலையையும் தாண்டித்தான் கடவுளை அடைய முடியும் என்பது கத்தோலிக்கர் நம்பிக்கை.

Inferno என்பது நரகம். Purgatario என்பது நரகத்திற்கும் தெய்வ உலகத்திற்கும் இடைநிலை. இந்நிலைக்கு வந்தபின் தன்குறை- களையெல்லாம் தூய்மைப்படுத்திக் கொண்டு Paradise என்ற மேல் உலகத்திற்குச் செல்லுகிறான். ஒவ்வொரு மனிதனின் இறுதிப் பிரயாணத்தைத் தன்கால ஐரோப்பாவுடனும் முற்காலத்துடனும் தொடர்புபடுத்துகிறார் கவிஞர். எலியட்

கூறியதுபோல, தாந்தே தான் சித்திரிக்கும் நரகத்தில் தனக்குத் தெரிந்த மனிதர்கள், வரலாற்றுத் தலைவர்கள், புராணிகக் கதாபாத்திரங்கள் விவிலிய நூலில் வருகின்ற பாத்திரங்கள், பழைய கதைகளில் வரும் உறுப்பினர்கள் கொண்டு நிரப்பி விடுகிறார். சான்றாக ஸீஸரைக் கொன்ற ரோமானியத்தலைவனும், ஷேக்ஸ்பியர் நாடகத்தில் வருகின்ற உன்னத பாத்திரமுமான ப்ரூடஸை நரகத்தின் அதள பாதாளத்தில் தள்ளுகிறார். காரணம் அவன் செயல் கொடும் பாபம், தன்னுடைய நண்பனையே காட்டிக் கொடுத்தது.

தாந்தே தெய்வீக இன்பியல் கவிதையில் வழங்கும் மொழி இத்தாலிய மொழியாக இருந்தாலும் அது இடைக்கால ஐரோப்பாவில் (Europe of Middle Ages) பரவலாகப்பயின்று வந்த இலத்தீன் மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது. இம்மொழியினாலும் அவருடைய காட்சி (vision) நோக்கினாலும் அது இத்தாலியக் கவிதையல்ல. ஒரு ஐரோப்பியக் கவிதையே என்பர். இது ஒருநாட்டின் அல்லது தனிமனிதனின் வரலாறு அல்ல. மனித வர்க்கத்தின் அல்லது ஐரோப்பியாவின் ஆத்ம வரலாறு என்று எலியட் கூறுகிறார். இக்கவிஞரை மேலை நாட்டின் பெரிய கவிஞர்களின் ஒருவர் என்பதைத் தெளிவாக்குகிறார். குறுகிய நோக்கில், எலியட்டும் தாந்தேயும் கத்தோலிக்கப்பிரிவைச் சார்ந்தவர்கள். அதனால் தான் திறனாய்வாளர் இத்தாலியக் கவிஞரின் கவிதையாற்றலை மிகைப்படுத்துகிறாரோ என்று ஐயம் எழலாம். இதை மறுப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். தன்னை ஒரு குறுகிய இலக்கிய வட்டத்திலிருந்து விடுவித்துக் கொண்டு ஒரு பெரிய இத்தாலியக் கவிஞரின் கவிதையை அவருடைய மொழியிலேயே படித்து இன்புற்று அதன் முருகியல் தரும் மகிழ்ச்சியை, உன்னதக் கவிதை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்ற அறிவியல் விளக்கத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறார். மேலும் தாந்தேயின் கவிதையைப் பகவத்கீதையுடன் ஒப்புமை செய்கிறார். Bhagavad Gita..... is the next greatest philosophical poem to the Divine Comedy with in my experience P. 258) என்கிறார். இதை மறுப்பவர்கள் தாந்தேயின்



MADURAI KAMA...

காட்சி ஒரு குறுகிய வட்டமான கத்தோலிக்க நோக்கின் விளைவு; ஆனால் கிருஷ்ண பரமாத்மாவின் பேருரை ஒவ்வொரு மனிதனுக்கும் அளித்த அறிவுரை என வேறுபடுத்துவர். எனினும் எலியட்டின் பரந்துபட்ட இலக்கியக்கொள்கைப்படி, தாந்தேயின் தெய்வீக இன்பியல் படைப்பு ஐரோப்பாவின் பெரிய காவியங்களில் ஒன்று என்பதே. எலியட்டின் இக்கட்டுரையையும் மற்ற திறனாய்வுக் கட்டுரைகளையும் படித்த வாசகர் தாந்தே ஒரு பெரிய கவிஞர் என்பதை மறுக்க முடியாது. இருப்பினும் ஷேக்ஸ்பியரை விட பெரியவரா என்ற கேள்வி எழுப்பப்படலாம். எலியட் மதப்பற்றுள்ளவர். கிரேக்கத் துன்பியல் நாடகங்களை அம்மொழியிலேயே படித்து இன்புற்றவர். அதனால் ஒரு வேறுபாட்டைக் காண்கிறார். இவ்வேறுபாடு ஆன்மீக ஞானம் தான். கிரேக்கத் துன்பியல் நாடகங்களில் குறிப்பாக ஈடிபஸ் அன்சன்(Oedipus Rex) என்ற உன்னதமான, அச்சுறுத்தும் மனிதனுக்கும் கடவுளுக்கும் நடக்கும் போராட்டத்தைப் போன்று ஷேக்ஸ்பியர் நாடகங்களில்லை. இன்னும் கடவுளே பாத்திரமாக வருகிறார். விதி என்பது கனவு அல்ல; அது வாழ்க்கையின் ஒரு பகுதி என்பதைச் சிலப்பதிகாரத்தைப் போல் படிப்பவர்களை அல்லது பார்ப்பவர்களை அச்சுறுத்துகிறது. மேலும் எஸ்கைலஸ் (Aeschylus) எழுதிய முதல் நாடகமான (Grestiria) என்ற மன்றல் நாடகத் தொகுதியில் கதாநாயகன் சோரம்போன தாயை, தந்தையை அழித்த தாயைக் கொல்லுகிறான். ஆகையால் இப்பயங்கரக் கொலைக்குப் பழி வாங்கும் தேவதைகள் (Furies) துரத்துகிறார்கள். ஒலிம்பஸ் (Olympus) என்னும் கிரேக்க மேல் உலகத்தில் இக்கொலையைப் பற்றி கடவுள்களே ஒரு நீதி மன்ற விசாரணை நடத்துகிறார்கள். மன்றத்தின் தலைவர்கள் சமமாகப் பிரிந்து கொலையை ஆதரிக்கிறார்கள் அல்லது எதிர்க்கிறார்கள். அதீனி (Athene) என்ற போர்த் தெய்வம் கொலையை அநுமதித்து வாக்களிப்பு அளித்து கதாநாயகனைக் காப்பாற்றுகிறாள். இந்நாடகத்தில் கடவுளர்களே கதாபாத்திரங்கள். இது போன்ற ஒப்புநோக்கில் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஒரு ஆத்மீகக் குறையைக் காண்கிறார் எலியட். தாந்தே தன் கவிதையில் அளிக்கும் தெய்வீக இன்பியல் காட்சி எலியட்டிற்கு ஆத்ம

திருப்தி அளிக்கிறது. ஆகையால் தாந்தே தான் எலியட்டிற்கு இலட்சியக் கவிஞர். இன்னொரு நோக்கில் இந்தச் சர்ச்சையை விளக்கினோமானால், இந்தச் சர்ச்சை எலியட்-ஷேக்ஸ்பியர் தொடர்பு உளவியலைச் சேர்ந்தது என்பதை விளங்கிக் கொள்ளலாம். எலியட் ஒரு நாடகாசிரியரும் கூட. அவர் ஷேக்ஸ்பியரைப் போலக் கவிதை உருவில் நாடகங்களை எழுதினால் பரிமளிக்க முடியாது ஆங்கில நாடகாசிரியரின் அச்சுறுத்தும் தாக்குதலினால். இதை the anxiety of influence என்பர். இந்தத் தாக்கக்கவலை ஒரு எழுத்தாளனைப் பின்பற்றும் மற்றொரு எழுத்தாளனைப் பின்னடையச் செய்கிறது என்பது கொள்கை. இக்கொள்கையில் உண்மையிருந்தால், ஒரு பெரிய நாடக ஆசிரியருக்குப் பிறகு அவரைப்போல் பெரிய நாடக ஆசிரியர் தோன்ற வாய்ப்பில்லை என்பது பொருள். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் பலவிதமான நாடகாசிரியர்களும் தோன்றியிருக்கிறார்கள். இத்தாக்கக்கவலை கொள்கை எந்த எழுத்தாளரையும் அச்சுறுத்தவில்லை என்பது உறுதி. 14.

எலியட் ஆங்கிலக் கவிதையுலகில் பெரும் பெயர் பெற்ற ஷேக்ஸ்பியரைப் பற்றி இரண்டுக்குமேல் கட்டுரைகளையும் மில்டனைப் பற்றி இரண்டு கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.15 ஷேக்ஸ்பியர் பற்றிய கட்டுரைகளை விட 'ஹாம்லெட்' கட்டுரை முக்கியமானது (பப.141-146) காரணம் இதில்தான் புகழ்பெற்ற ஒப்புமைத் தொடர்பு (objective Correlative) கொள்கையை விவாதிக்கிறார்.

"The only way of expressing emotion in the form of art is by finding an 'objective correlative', in other words, a set of objects, a situtation, a chain of events which shall be the formula of that particular emotion: such that when the external facts, which terminate in a sensory experience, are given, the emotion is immediately evoked."(4.145)

இக்கட்டுரை வெளியான பொழுது (1919) இக்கொள்கை ஆங்கில அமெரிக்கத் திறனாய்வாளர்களால் பரவலாக விவாதிக்கப்பட்டது. 'ஹாம்லெட்' ஒரு சிறந்த நாடகமாகக்

கருதப்பட்டது. சிக்கலானதும் கூட,16 இதைக் கொள்கையளவில் ஏற்ற எலியட், மேற்கண்ட பத்தியில் இலக்கியக்கலையில் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது உணர்ச்சிக்கு நிகரானபொருளைத் தேர்ந்தெடுப்பது என்றார். ஹாம்லெட் நாடகத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் எல்லாப் பாத்திரங்களும் ஹாம்லெட் என்ற கதாநாயகனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. ஹாம்லெட் இல்லையென்றால் ஹாம்லட் நாடகமில்லை ('There is no Hamlet without the Prince of Denmark' என்ற பழமொழியும் உண்டு) ஆகையால் ஷேக்ஸ்பியருக்கு இந்நாடகத்தில் ஹாம்லெட் என்ற கதாநாகயனுக்கு நிகரான உணர்ச்சி கிடைக்கவில்லை. அதன் காரணமாக இந்நாடகம் ஒரு கலைத் தோல்வி என்று வாதிட்டார். இக்கட்டுரையைத் திறனாய்வாளர்கள் கவனத்துடன் ஆராய்ந்தார்கள். பின்னர் அமெரிக்கத் திறனாய்வாளரான எலிஸியோவைவஸ் (Eliseo Vivas) ஒரு கேள்வியை எழுப்பினார்.15 உளவியல் நோக்கில் ஒரு உணர்ச்சியும் அதை வெளிப்படுத்தும் பொருளும் எப்படித் திறனாய்வு அடிப்படையில் சமமாகும்? ஒன்று கருத்து, இன்னொன்று பரிணாமமுடைய பொருள். எனவே "The Objective Correlation" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை மிக அறிவு சார்ந்த முறையில் வாதிட்டு எலியட்டின் கலைக்கொள்கை அபத்தமானது என்றார். மேலும் எலியட் கூறியது போல, கலைஞன் ஒருவன் உணர்ச்சி அனுபவத்தைப் பிரதிபலிக்கும் புறப்பொருட்களைத் தேர்ந்தெடுத்தபிறகு, குறிப்பிட்ட உணர்ச்சி இயந்திர கதியில்தான் தோன்றும் என்ற வைவஸின் விளக்கத்திற்குப் பிறகு எலியட்டின் உரிமைக்கோரிக்கையில் யாரும் கவனம் செலுத்துவதில்லை.

எலியட், ஆங்கில காப்பியக் கவிஞன் ஜான் மில்டன் (John Milton, 1608 - 74) பற்றி இரண்டு கட்டுரைகளை முறையே 1936, 1947-ல் எழுதினார் 17 . மில்டன் காப்பிய மரபையே ஆங்கில இலக்கியத்திற்குக் கொண்டு வந்து அதைப் பெருமைப்படுத்தினான்; அவன் கிரேக்கம், இலத்தீன், யூதர்களின் பழம் மொழியான உறீப்ரூ (Hebrew) போன்றவற்றில் பேரறிஞன். அவன் *சுவர்க்க நீக்கம் (Paradise Lost)* என்ற காப்பியத்தில்

அவனுடைய மொழி, மேலைச் செவ்வியல் மொழிகளால் தாக்கத்திற்குள்ளாகியது. அவனுடைய காப்பிய நடையைப் பொதுவாக ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் புரிந்து கொள்ள முடியாது. இலத்தீனும் ஆங்கிலமும் சொல்லிலக்கணத் தொடர்புடையதால் ஆங்கில மொழியை மில்டன் இயற்கையாகக் கையாளுவதில்லை. இவ்வடிப்படையில் எலியட் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். அவன் ஆங்கிலக் கவிஞன்தானா? எலியட்டின் இத்திறனாய்வுக் கேள்வியை லீவிஸ் (F.R. Leavis, 1895-1962) பின்பற்றி இருவரும் அறிஞர்ளைத் திகைக்கவைத்தனர். இந்தத் திகைப்பு பொருப்பும் கலந்தது.

எலியட்டின் முதல் கட்டுரையை எடுத்துக்கொள்வோம். இவரின் கருத்துக்களைப் பார்ப்பதற்குமுன் மில்டன் வாழ்ந்த சூழ்நிலையைப் பார்ப்போம். எலிசபெத் ராணியின் தந்தையான எட்டாவது ஹென்றி அனுபொலைன் (Aune Boleyn) என்ற பெண்ணை இரண்டாவது மனைவியாக ஏற்றுக்கொண்டு மதகுருக்கள் ஆதிக்கத்தை அடக்கினான். போப் ஆண்டவரை எதிர்த்த பிராடெஸ்டன்ட் என்ற மதவாதிகள் குருக்களையும் சமயச் சடங்குகளையும் வெறுத்தனர். அவர்கள் கடும் சீர்திருத்தவாதிகள் (Puritans). சடங்குகளை அறவே ஒதுக்கி அரசனையும் எதிர்த்தனர். அப்பொழுதிருந்த அரசர்களின் கேளுக்கையினால் அரச ஆதிக்கத்தையும் வெறுத்துக் குடியாட்சியை நிறுவினர். இதன் தலைவர் ஆலிவர் கிராம்வெல் (Oliver Gromwell). இவர் மக்கள் மேல் மன்றத்தையே கைப்பற்றி மன்னர் ஆட்சியை வீழ்த்தியவர். மில்டன் இப்பிரிவைச் சேர்ந்தவர். மன்னரையும் மதகுருக்களையும் வெறுப்பவர்.18 இவ்விருவரும் சாத்தானின் ஆட்சியாளர்களே என்று நம்பிக்கை கொண்டவர். ஆனால் அவர் காப்பியத்தை எழுதுவதற்கு முன்பே கண்பார்வயை இழந்தவர். பழமைவாதியான எலியட் எப்படி மில்டன் என்ற கவிஞரைத் தன் முதல் கட்டுரையில்20 ஆராய்கிறார் என்பதைப் பார்ப்போம்.

எலியட் மில்டனை 'பெரியகவி' என்று அனுமதிக்கிறார். ஆனால் 'பெரிய' என்ற சொல்லுக்குப் பொதுவாக இலக்கணம்

வரையறுக்கிறார். ஆசிரியரைப் போன்று மாணவனுக்கு மதிப்பெண்கள் குறைவே. ஏனென்றால் மில்டன் என்கிற தனிமனிதன் வெறுக்கத்தக்கவர். மத நோக்கிலும், உளவியல் நோக்கிலும், நெறிமுறை நோக்கிலும் கூட. மனிதன் விரும்பத்தகுந்த தன்மைகளில் மில்டன் மனநிறைவு கொடுப்பவராயில்லை என்று கவிஞனைப் பற்றி எலியட் ஐயங்களை வெளிப்படுத்துகிறார். அவர் வரையில் மில்டன் ஒரு பெரிய கவிஞர் என்பதற்குச் சரியான காரணங்கள் இல்லை. எலியட்டின் நண்பர் எஸ்ரா பவுண்ட் (Ezra Pound) பல தவறுகளை இனம்கண்டு கொண்டவர். அவர் மில்டனுடைய, குறை நிறைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்கிறார். குறிப்பாக அவர் பயன்படுத்திய ஆங்கில மொழியில் உள்ள தளர்வுகள். எலியட் இங்கு மில்டனின் மொழி இலத்தீன் மொழிதாக்கத்தினால் அது மரபுக் கவிதை மொழி அல்ல என்கிறார். ஆகையினால் மில்டனின் தாக்கம் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறார். சான்றாகப் பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த காப்பியத்தில் ஆர்வம் கொண்ட ட்ரைடன், போப் போன்ற கவிஞர்களை குறிக்கிறார். இத்தகைய தாக்கம் ஆங்கிலக் கவிதையின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் என்று நினைக்கிறார்.

பிறகு இக்கட்டுரையில் இன்னொரு தலைப்பை எடுத்துக்கொள்கிறார். அது மில்டனின் பார்வையின்மை. அவர் பார்வையிழப்பை மில்டனின் ஆளுமையுடனும் நடத்தையுடனும் தனிப்பட்ட கல்வி முறையிலும் கவிஞருடைய ஐந்து இந்திரியங்களுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும் என்கிறர். மில்டனின் கண்ணொளி இழப்பை மில்டனின் இசை ஞானத்துடனும் அவருடைய அறிவுடனும் இணைக்கிறார். கண் பார்வையற்றிருப்பது மில்டனின் குறை என்று நம்புகிறார். மேலும் விளக்கம் அளிக்கையில், மில்டனின், கவிதை வாழ்க்கையில் ஒரு பொழுதும் பார்வைக் கற்பனை தெளிவாகவில்லை. இதைச் சற்று விளக்க வேண்டுமானால், கவிஞனின் வெளிக்கண் எந்த உறுப்புடனும் இயற்கை, வாழ்க்கை ஆகியவைகளின் அழகைப் பார்க்கமுடியாததனால் மில்டனுக்கு

'அகக்கண்' இல்லை என்று நினைவூட்டுகிறார். ஆனால் அவருடைய துறக்க நீக்கத்தில் நாலாவது பிரிவில் கடவுள் உண்டாக்கிய முதல் மனிதனும் முதல் பெண்ணுமான ஆதாமும் ஏவாளும் எப்படி தங்கள் குறையற்ற, மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையைப் புனிதமாக நடத்துகிறார்கள் என்ற அற்புதமான காவியக் காட்சியை எப்படி எலியட் ஒதுக்கிவிட்டார் என்பது ஒரு புதிராக இருக்கிறது. எலியட், மில்டனிடம் தன்னோக்கில் கண்ட குறையை மிகைப்படுத்திக் கூறுகிறாரோ என்ற ஐயம் எழுகிறது. மேலும் இன்றைய திறனாய்வாளர்கள், ஆதாமும் ஏவாளும் எத்தகைய உரையாடலைக் கையாளுகிறார்கள் என்று கூர்ந்து பார்க்கும் பொழுது மில்டனை, பெண்ணியத்திற்கு எதிரானவர் (anit-feminist) என்று குறைகூறுகிறார்கள். என்றாலும், மில்டனின் பார்வைக் கற்பனைக் குறைவு காப்பியத்திற்கு ஊறுவிளைவிக்கவில்லை என்றுதான் சொல்லத்தோன்றுகிறது. எலியட்டைப் பின்பற்றிய ஆங்கிலத்திறனாய்வாளர் லீவிஸ் மில்டனை மதிப்பதில்லை. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்ற சில இந்திய அறிஞர்கள் மில்டனை முதுகலைப் பாடத்திட்டத்திலிருந்து ஒதுக்கிவிட்டார்கள். இன்றைய நிலையில் மில்டனின் புகழை (reputation) ஸ்டேன்லி பிஸ் (stanley Fish) போன்ற அமெரிக்கத்திறனாய்வாளர்கள் சரி செய்துவிட்டார்கள். அவர் தம் திறனாய்வு எலியட்டிற்கு பதில் ஆகும்.

பல சர்ச்சைகள் நிறைந்த இந்த கட்டுரை பற்றிய கண்டனத்தை, Milton II என்ற இன்னொரு கட்டுரை எழுதிச் சமாளித்து விட்டார் என்று கூறலாம். இக்கட்டுரை சொற்பொழிவாக பிரிட்டிஷ் அறிவுக்கழகத்தின் முன் (The British Academy)21 மொழிந்தது.

இச்சொற்பொழிவு ஆங்கில இலக்கியத்தில் சிறந்த திறனாய்வாளரான ஜான்ஸன் மேற்கோளுடன் தொடங்குகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் விளையும் புதிய தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும். புதிய தப்பெண்ணங்களை எதிர்க்க வேண்டும். இக்காலத்தவறுகளைச் சுறுசுறுப்பாகப் பணி செய்து

வருபவர்கள் சீர்படுத்தி விட்டார்கள். இம்முன்னுரையுடன் தற்காப்புரையும் தொடர்கிறது. ஒரு தவறைத் திருத்த தவறு செய்தவருக்கு உரிமையுண்டு; (authority) மற்றவர்க்கு இல்லை. எனவே (எலியட்) தம் முன்னோடியான மில்டன் பற்றிய தம் பின்னாளைய கருத்து என்ன என்பதை இங்கு விளக்குகிறார்.

திறனாய்வாளர்களை இலக்கியத்தைப் பயிலும் பயிற்சியாளர் (Practitionar) எழுத்தாளர் என இரண்டாகப் பிரிக்கிறார். பயிற்சியாளர் எழுத்தாளரைவிட அவருடைய எழுத்தில்தான் ஆர்வம் காட்ட வேண்டும். எழுத்தாளர், அவருடைய காலம், காலத்தின் போக்கு அல்லது உணர்வு, காலத்தின் அறிவு வளர்ச்சி, எழுத்தாளர் படித்த நூல்கள், தாக்கங்களின் விளைவு முதலியவற்றை ஆராய வேண்டும். பயிற்சியாளர், எழுத்தாளருடைய கவிதை எவ்விதத்தில் பலன் அளிக்கும்? அக்கவிதை அவர் மொழியின் கவிதைப் பணிக்கு எவ்விதத்தில் உதவி செய்யும் என்பது போன்ற கேள்விகளை எழுப்ப வேண்டும். மேலும் பயிற்சியாளர் நிலையான தன்மை (Permanent)யிலும் எழுத்தாளர் தனக்கு நெருக்கமாக உள்ளவைகளிலும் கவனம் வேண்டும் என்பர்.

மில்டனைத் திறனாய்வு செய்வதில் கடந்த காலத் திறனாய்வாளர் ஒருவரை மனதில் கொள்வதுதான் உசிதம் என்கிறார். இக்காரணத்திற்காகவே, சொற்பொழிவின் தொடக்கத்தில் ஜான்ஸனிலிருந்து ஒரு மேற்கோள் கொடுக்கிறார். ஜான்சனின் இலக்கியத்திறனுக்குப் புகழாரம் சூட்டிவிட்டு பின் சொற்பொழிவின் தலைப்பை எடுத்துக்கொள்ளுகிறார்.22

சமகாலத்திறனாய்வைக் குறிப்பிட்ட எலியட், மில்டனை உள்ளடக்கிய உலகச் செவ்வியல் இலக்கியத் தொகுதியில் (World's classics series, Oxford) மில்டனைப் பற்றி சார்லஸ் வில்லியம்ஸ் (Charles Williams) எழுதிய முன்னுரையைப் புகழ்கிறார். வில்லியம்ஸ், எலியட்டைப்போல அறிஞராயிருந்தாலும், இன்றைய மில்டன் திறனாய்வுகளில் அவரை இனம் கண்டு கொள்வதில்லை. காரணம், காலத்திற்குக் காலம் திறனாய்வுக் கொள்கைகள் மாறுபடுவது எனலாம்.

மன்னர் ஆட்சியில் மில்டன் வெறுப்புக்கொண்டவர் என்பதில் திறனாய்வாளர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தாலும் அக்கொள்கையினால் உருவாகிய ஜான்சன் மில்டனிடம் கொண்டிருந்த வெறுப்பில் எலியட் பங்கு கொள்கிறார். பிறகு காப்பியக்கவிஞன் மில்டனின் தாக்கத்தைப் பற்றிய எலியட் வெளிப்படுத்திய கருத்துக்கள் சர்ச்சைக்குரியன. இத்தாக்கம் வருங்காலக் கவிஞர்கள் மில்டனைப் போல் காப்பியம் எழுத முயன்றால் அவர்களது முருகியல் வளர்ச்சியைக் கெடுக்கும். சான்றாக, மில்டனைப் பின்பற்றி ஜான் கீட்ஸ் (John Keats) ஹைபீரியன் (Hyperion) என்ற கவிதையை எழுதினார். கீட்ஸ் கவிதையில் தனித்துறைப் பயிற்சி பெற்றுள்ள மிடில்டன் மர்ரி (Middleton Murry) என்பவரை மேற்கோள் காண்பிக்கிறார். அவர் கூற்றுப்படி, அவருடைய தாக்கத்திற்குப் பணிந்தால் கடுமையான தண்டனைதான். அவருக்கு வாழ்க்கை என்பது இவருக்கு மரணம். மில்டனின் தாக்கத்திற்கு உட்படும் எழுத்தாளரின் முருகியல் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும். மர்ரி அவர்கள் கூறியது போல, ஷேக்ஸ்பியரின் தாக்கத்திலிருந்து மில்டன், தாக்கம் வேறுபாடுடையது. ஷேக்ஸ்பியரின் தாக்கம் தளைகளிலிருந்து விடுவிக்கிறது. மில்டனின் தாக்கம் வளர்ச்சியை இறுக்கிவிடுகிறது.

இக்கருத்தை எலியட் விவரித்து மில்டனின் தாக்கம், முக்கியமாக மொழிக்கலப்பினால் ஆங்கிலக் கவிதை வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது என்கிறார். ஏற்கனவே ஷேக்ஸ்பியர் தாக்கத்தைப் பற்றி நாடகாசிரியர் என்ற முறையில் கருத்துத் தெரிவித்தார். நாடகக் கவிதை எழுதும் எழுத்தாளர் ஷேக்ஸ்பியர் தாக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாது. குறிப்பாக போலச் செய்தல் என்ற விளைவை ஒதுக்க முடியாது. அதனால் நாடகக் கவிதையின் தரம் குறையும். 23 எலியட்டின் கூற்று அடிப்படையில் யேல் பல்கலைக்கழக அறிஞர் ஒருவர் தாக்கக் கவலை "Anxiety of Influence" என்ற கொள்கையை உருவாக்கியிருக்கிறார். 23. இதன்படி எலியட் நாடகமெழுதும் பொழுது ஷேக்ஸ்பியரின் தாக்கத்தை ஒதுக்க முயற்சி செய்வதால் அக்கவலை அல்லது மனவிசை பாதிக்கிறது என்கிறார். ஆனால்,

எந்த ஒரு எழுத்தாளனும், தனக்கு முன்னோடியைப் பின்பற்றி தழைக்காமல் இல்லை. இக்கொள்கைக்கு ஒப்பிலக்கியத்தில் இடமில்லை. திறனாய்வு உலகில் இது ஒரு சர்ச்சையையும் கிளப்பவில்லை. எலியட்டின் பல கட்டுரைகளும் தொகுதிகளாக வெளிவந்துள்ளன:24.

## எஸ்ரா பவுண்ட்

எஸ்ரா பவுண்ட் (Ezra Pound, 1885-1970) ஒரு அமெரிக்கக் கவிஞரும் திறனாய்வாளரும் ஆவார். எலியட்டும் பவுண்டும் தங்கள் தாய்நாட்டை விட்டு இலண்டன் மாநகரில் குடியேறி பல புதிய முருகியல் கருத்துக்களையும் கவிதையியல் கருத்துக்களயையும் வெளியிட்டு ஆங்கில அறிவுலத்தில் மாற்றங்களை உண்டாக்கினர். பவுண்ட், எலியட்டைப் போலக் கூச்ச சுபாவம் உடையவர் அல்ல. பல எழுத்தாளர்களிடம் தானே பழகி அவர்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் அவருடைய கைப்பிரதிகளைத் திருத்தி ஆலோசனை கூறுவர். எலியட்டின் 'பாழ்நிலம்' என்ற கவிதையின் தட்டெழுத்துப் பிரதியைத் திருத்தி அதன் முதல் பிரிவை நீக்கினார். 25

பவுண்ட் வாழ்ந்த காலத்தில் எழுத்துலகத்தில் அற்புத நவிற்சி இயக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. உணர்ச்சி உந்துதலால் ஒரு உயர்ந்த கவிதை (அமைப்பும் உட்பொருளும் அமைதியுடையவை) எழுத முடியாது. இதன் விளைவு உருவக இயக்கம் (Imagist Movement) இலண்டன் நகரில் பிறந்தது. இதற்குப் பின்புலமாக அமைந்தவர் சார்லஸ் பூதலேர் (Charles Baudelarie) என்ற பிரஞ்சு கவிஞர். குறிப்பாக அவருடைய சிறந்த கவிதை, நச்சுப் பூக்கள் (Flowers of Evil) மேலைநாட்டுக் கவிதையைப் பெரும் தாக்கத்திற்குள்ளாக்கியது.26 ஒப்பிலக்கிய அறிஞரும் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பேராசியருமான அன்னா பாலகியன் (Anna Balakian) தன்னுடைய நூலான பிரெஞ்சு குறியீட்டாளர்கள் (The French Symbolists) என்பதில் குறியீட்டியக்கத்தில் அமெரிக்கக் கவிஞரான எட்கர் ஆலன் போ (Edgar Allan Poe) என்பவரையும் பூதலேரையும் தொடர்புபடுத்துகிறார். இந்த இயக்கம் பிரெஞ்சுக்

கவிஞரால் உண்டாக்கப்பட்டதல்ல. போவினால் தான் என்கிறார். போ கவிதையில் குறியீட்டின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சில கருத்துக்களைக் கூறுகிறார். (i) கவிதைக்காகத் தனித்த பொருள் என்பது கிடையாது; (ii) கவிஞனுடைய கடமை தனக்கே உரிய மொழியைப் பயன்படுத்துவது அல்ல; கலையே (iii) கவிதை என்பது உருவகங்களைப் பயன்படுத்துதல்.27 உருவகங்கள் தான் கவிதையின் உள்ளடக்கம் என்று போ நம்புகிறார். பூதலேருக்கும் ஆங்கிலம் முழுமையாகத் தெரியாது என்பது உண்மையானாலும் பொதுவாக போவின் கவிதைகளைப் புரிந்து கொள்ளத் தெரியும். அவர் ஆங்கிலத்தில் ஒரு சிறிய கட்டுரை போ என்ற கவிஞரைப் பற்றி எழுதியிருக்கிறார். ஆகையால் இன்று அறிஞர்கள், குறியீட்டு இயக்கம் (The Symbolist movement) போவிடம் இருந்துதான் தோன்றியிருக்கவேண்டும் என்று நம்புகின்றனர். இந்த இயக்கத்தின் ஒரு பிரிவுதான் ஆங்கில நாட்டில் தோன்றிய உருவக இயக்கம். இவ்வியக்கம் ஆங்கில அமெரிக்கக் கவிஞர்களை அற்புத நவிற்சி இயக்கத்தின் எதிரோட்டமாகத் தாக்கத்துக்குள்ளாக்கியது.

இதில் முக்கியப் பங்கு கொண்டவர்கள் எஸ்ரா பவுண்டும் டி.இ. ஹியூமும் (T.E. Hulme, 1883-1917). இந்த இயக்கம் 1910 முதல் 1918 வரையில் இயங்கிக்கொண்டிருந்தது. இவ்வியக்கத்தின் முதல் கவிதைத்தொகுதி உருவக இயக்கத்தினர் (Des Imagists) என்ற பிரெஞ்சு மொழித் தலைப்புடன் 1914ஆம் ஆண்டு வெளிவந்தது. பவுண்ட் செவ்வியல் மொழிகளிலும் இன்றைய ஐரோப்பிய மொழிகளிலும் அறிஞர். அவருக்கு எர்னஸ்ட்ஃபெனல்லோசா (Ernest Fienoloosa) என்ற சீன மொழி விற்பன்னரின் கைப்பிரதிகளைச் சோதித்து வெளியிட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது. அவற்றில், மொழி பற்றிய குறிப்புக்களும், மொழிபெயர்ப்புக்களும் இருந்தன. அதன் விளைவாகச் சீனமொழியின் கருத்துக்கும் எழுத்துக்கும் உள்ள தொடர்பு அவரை வெகுவாகக் கவர்ந்தது. அவர் சீன மொழியில் மனிதன் எப்படித் குதிரையைப் பார்க்கிறான்? என்ற கேள்விக்கு விளக்கம் கொடுப்பதைப் பார்ப்போம்.

...... the Chinese method follows natural suggestion first stands the man on his two legs. Seocnd, his eyes move through space: a bold figure represented by running legs under an eye, a modified picture of running legs but unforgettable once you have seen it. Third stands the horse on his four legs.28

பொதுவாக எல்லா மொழிகளிலும் சொற்களே கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. ஆனால் சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் எந்தவிதத் தருக்கத் தொடர்பும் இல்லை. அத்தகைய அசாதாரணமான தொடர்பு சீனமொழிக்கும் கருத்துக்கும் உள்ளது. ஏனென்றால் அம்மொழி ஒரு சித்திரமொழி (ideogram) இவ்விதத் தொடர்பினால் ஒவ்வொரு எழுத்தும் இன்றிமையாதது. இவ்வியல்பு பவுண்டைக் கவர்ந்தது. பல சீனக்கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவருடைய சிறந்த மொழிபெயர்ப்பு, ஒரு ஆற்று வணிகரின் மனைவி' (A River Merchant's Wife). இது பவுண்டின் கவிதைக் கொள்கைகளை உள்வாங்கிய ஒரு அற்புதப் படைப்பு. அப்பொழுது இருந்த சூழ்நிலையில் கணவன் மனைவியைப் பல மாதங்கள் பிரிந்து, உழைத்துப் பொருளீட்டுகிறான். சீனாவில் பெரிய நதிகளே சாலைகளாகின்றன. படகில் பல நூறு மைல்கள் சென்று செல்வம் தேடுகிறான் வியாபாரி. அவனுடைய மனைவி அடக்கமும் அன்பும் உருவானவள். அவள் இயற்கைக் காட்சிகளைத் தன் கணவனாகக் கண்டு ஏங்குகிறாள். அவள் அடக்கம் காரணமாக தன் கணவன் பிரிந்து சென்ற ஏக்கத்தை மறைமுகமாக வெளியிடுகிறாள். இதை பவுண்டின் மொழிபெயர்ப்பு என்று சொல்வதைவிட அவரின் படைப்பாக்க இயலின் வெளிப்பாடு என்றே கூறலாம். சீனமொழியிலிருந்து கவிதை எப்படி எழுதுவது என்பதைப்பற்றிப் பல கொள்கைகளை உருவாக்கினார். கவிதை என்பது உரைநடையைப் போல சிறப்பாக அமைய வேண்டும் என்றார். பொதுவாகக் கவிதை, உரைநடை என்பவை எதிர்மறைகள். கவிதைக்கு அடிப்படை உணர்ச்சி வெளிப்பாடு. உரைநடைக்கு அடிப்படை அறிவு. உரைநடையைப் போலக் கவிதையும் துல்லியமாக இருக்கவேண்டும் என விழைகிறார். இன்னும்

உரைநடையின் நல்லியல்புகளைக் கோடிட்டுக்காண்பிக்கிறார். கவிதையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் அகராதியிலிருந்துக் கடன் வாங்கியதாக இருக்கக்கூடாது. சுற்றிவளைத்துச் சொல்லுதல் என்பது அறவே கூடாது. ஒரு பொருளை விளக்க வேண்டுமானால் நேராக விளக்கவேண்டும், ஒரு ஓவியர் ஒரு பொருளை வரைவது போல, கவிதை மொழியில் காலம் கடந்த சொற்கள், அடிபட்ட சொற்கள் (Cliches), பத்திரிகைச்சொற்கள் (Journalese) இவற்றை ஒதுக்கவேண்டும். பவுண்ட்டைப் பொருத்தவரை, மொழியும் உள்ளடக்கமும் ஒன்றே. இரண்டையும் பிரிக்கமுடியாது என்ற நம்பிக்கை அவரை புதுத்திறனாய்வுக் கொள்கைகளுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்துவிடுகிறது. பவுண்டின் இலட்சியக் கவிதைக்கூறுகள்: வடிவம் என்பது ஒரு கவிதையின் பொருள். ஒரு நல்லகவிதையில் ஒவ்வொரு சொல்லுக்கும் பங்குண்டு. வார்த்தை ஜாலத்திற்கே இடமே கிடையாது. இசைக்கும் சந்தத்துக்கும் பொருளுண்டு என்கிறார். அவர் கவிதையில், சந்தத்தில் மேதை. அவருடைய புதுக்கவிதை (free verse)யிலும் எதுகை, மோனை இல்லாவிட்டாலும் அதனுடைய இசையைத் துல்லியமாக அறியலாம்.28 மொழியின் நுட்பங்களைத் தெரிந்தவர்களுக்குப் பவுண்ட் கவிதையின் சந்தம் ஒரு முக்கியக் கூறு. கவிதையில் எந்தப் பொருளும் தெளிவற்றதாயிருக்கக்கூடாது. அது நுண்ணிய இயல்புகளை (distict particularities) கொண்டவைகளாக இருக்கவேண்டும். ஒரு கவிதை ஒரு ஓவியம், சீன மொழியின் வரி வடிவம் போல.

சீன மொழியிலுள்ள ஆர்வம், காரணமாகப் பவுண்ட் ஜப்பானிய மொழியைக் கற்கத் தொடங்கினர். 29 ஹைகுவும் (haiku) டங்காவும் (tanka) இவரை மிகக் கவர்ந்தன. பொருட்செறிவும் சிக்கனமொழியும் பவுண்டை ஆட்கொண்டன. ஜப்பானியக்கவிதையின் தாக்கம் மேலை நாட்டு ஆங்கில அமெரிக்கக் கவிதைகளில் இருப்பதற்குப் பவுண்ட் தான் காரணம். ஒப்பிலக்கிய மொழியில் சொல்லவேண்டுமானால், அவர் ஒரு இடையீட்டாளர். இவர் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஹைகூவின் ஆங்கில

மாதிரிப்படிவத்தை முதன் முதலில் வடித்தார். இந்த ஹைகு (குறிப்பிட்ட ஆசைகள்) ஆங்கிலக் கவிதைக்குப் பின்னால் ஒரு சுவையான வரலாறு இருக்கிறது. இந்நிகழ்ச்சி பாரிஸ் நகரத்தில் நடந்தது. அங்குள்ள பாதாள ரயிலுக்கு மெட்ரோ (Metro) என்று பெயர். "metropolis" என்பது தலைநகரம் என்ற சொல்லின் சுருக்கம். இந்தப் பாதாள ரயிலை விட்டு வெளிவரும் பொழுது பவுண்ட் ஒரு அழகிய காட்சியைக் கண்டார். ஒரு அழகான பெண், அவளுடைய குழந்தை அவருடைய மனக்கண் முன் தோன்றிக்கொண்டே இருந்தனர். கவிஞன் அந்த ஓவியக் காட்சியை, தாயும், சேயும் தனக்கு எதிரில் பாதாள ரயிலில் உட்கார்ந்து கொண்டிருந்ததை கற்பனைக்கண் கொண்டு மொழியாக்கம் செய்தார். இருளில் ரயில் நகர்ந்த பொழுது பெண்ணும் அவளுடைய குழந்தையும் வெண்பற்களைக்கொண்டு இருட்டுக்குப் பின்புலத்தில் சிரித்தால் எப்படி இருக்கும் என்ற வர்ணனையை ரத்தினச் சுருக்கமாக அல்லது ஹைகு முறையில் இக்கவிதையில் சொல்லியிருக்கிறார்.

இம்மக்கள் திரளில் உள்ள முகங்கள் பொய்த்தோற்றம்;

கரிய ஈரக்கிளையின்மேல் பூ இதழ்கள்.

இந்த ஜப்பானியக் கவிதையின் அமைப்பை ஆராயலாம். இதிலுள்ள சொற்கள் கணக்கில் கண்டிப்பாக அடங்கியவை. முதல் வரியில் ஒரு சாதாரணவிளக்கம். மக்கள் திரள் எந்நகரத்திலுமுள்ள திரளுக்கு வேறுபாடில்லை. இந்த விளக்கம் ஒரு பொதுவான நோக்கம் அல்லது வர்ணனை. இக்குறுகிய கவிதை விளக்கத்திலிருந்து திடீரென்று ஒரு நுண்ணிய நோக்கம் அசாதாரணமாகப் படிவத்தில் முடிகிறது. இதுதான் இத்தகைய கவிதையின் இயல்பு. இந்த உருவகக்கவிதை பவுண்ட் முதன் முதலில் 336 வரிகளில் எழுதினார்; பின்னர் 18 வரிகளில் சுருக்கிப் பின் இரண்டே வரிகளில் ஹைகுவை எழுதிவிட்டார் என்பர். இத்தகைய கவிதை வளர்ச்சியில் பொதுவாகப் பாரதியாரைக் குறிப்பிட்டு அஞ்சலி செலுத்துவர். அவர் எழுதிய 'வசனகவிதை' எப்படி புதுக்கவிதைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது என்பதை, திறனாய்வாளர்கள் விளக்கவில்லை. பாரதியாரே

ஜப்பானியக்கவிதைபற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.31 ஹைகுவைப் பற்றிக் கூறுகிறார். ஒரு குறிப்பிட்ட ஜப்பானியக் கவிதையில் ஒரு சீடன் தன்னுடைய குருவிற்குக் கவிதை மூலம் செய்தி அனுப்புகிறான். முதல்வரியில் தன்னுடைய வீடு எரிவதை மரபு வழியாகச் சுருக்கமாகச் சொல்லுகிறான். இரண்டாவது வரியான இறுதி வரியில் இடம் பெற்றிருப்பது ஒரு உருவகம். ஒரு மரத்திலிருந்து காய்ந்த சருகு ஒன்று மெதுவாக மேலேயிருந்து தரைக்கு வந்து சேருகிறது. இது உருவகம் மட்டுமல்ல. குருவிற்குத் தெரிவிக்க வேண்டிய செய்தி மறைந்து கிடக்கிறது. ஹைகுவின் பொருள் : "என்னுடைய வீடு எரிந்து சாம்பலாகிவிட்டது. ஆனால் நான் மனம் நொந்து போகவில்லை. உலர்ந்த இலைபோல் மன அமைதி கொண்டிருக்கிறேன்." என்பதாகும். பாரதியார் ஹைகு பாணியை அதைப்போல் ஒரு படிவம் எடுத்துக்கொடுக்கவில்லை. அவர் இக்கவிதையை மறந்துவிட்டாரா என்ற கேள்வியைக் கேட்கத் தோன்றுகிறது. பாரதியார் இயந்திர கதியாக ஜப்பானியக் கவிதையைப் பின்பற்றவில்லை என்றாலும் அதனுடைய தாக்கத்தை, பொருட்செறிவு, சொற்களை ரத்தினச் சுருக்கமாகக் கையாள்வது, உருவகத்தின் பொருளை மறைமுக உத்தியில் வெளிப்படுத்துவது போன்ற கூறுகளை அவருடைய முதிர்ச்சியடைந்த பாடல்களில் தத்துவத்தையும் உணர்ச்சியையும் இணைத்தபோக்கில், முக்கியமாகக் 'காக்கைச்சிறகினிலே' என்ற பாடலில் காணலாம்.

ஒப்பிலக்கிய நோக்கில் புதுக்கவிதையுலகம் ஆதியும் அந்தமும் இல்லாதது போலத் தோன்றுகிறது. புதுக்கவிதை என்பது வெளி ஊக்கம் (external Inspiration) இல்லாமல் உருவாக முடியாது. ஆனால் உருவக இயக்கம் என்பதற்கும் புதுக்கவிதைக்கும் உள்ள தொடர்பு என்ன? முதன் முதலில் ஜப்பானியக் கவிதைத்தொகுப்பு, ஐக்கிய நாடுகளின் (UNESCO) கல்வி, சமூகக்குழு ஒன்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டது. திறனாய்வாளர்களின் முயற்சியும் இதில் உண்டு. புதுக் கவிஞர்கள் மொழிபெயர்ப்பைப் படித்தார்களா, மேலை நாட்டில் உருவக இயக்கத்திற்கு முன்னோடியாக இருந்த எலியட்,

பவுண்ட் ஆகியவர்களின் கவிதைகளைப் படித்தார்களா அல்லது அவர்களைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை அறிந்தார்களா என்ற கேள்விக்கு விடை கண்டு பிடிப்பது கடினம். புதுக்கவிதைகளைப் படிக்கிறபோது எலியட், பவுண்ட் போன்ற கவிஞர்களின் படைப்புக்களின் சாயல் இருப்பது போன்ற ஐயம் எழுகிறது. தாக்கம் இருந்தால் அது தாக்கம் தானா அல்லது வரவேற்பா அல்லது படைப்புத் துரோகமா? (Creative treason) என்ற கேள்வியும் எழுகிறது. இருப்பினும் தமிழ் வார இதழ்களை நோக்கினால் புதுக்கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிகிறது. இக்கவிதைகளின் அமைப்பு, மொழியாக்கம், அங்கதம், கூரறிவு, இன்பியல்சுவை முதலிய பகுதிகளைக் கவனித்தால், அடிப்படை விதிகளைப் பின்பற்றவில்லை என்று தெரிகிறது. சொற்பமான விதிவிலக்குகளைத் தவிர, இத்தகைய கவிதைகள் படைப்புத் துரோகத்திற்குத் சான்றுகள் என்று தோன்றுகிறது. அண்மைக்காலக் கருத்தரங்கு ஒன்றில், உருவக இயக்கம், என்ற பெயரில் தொல்காப்பியம் முதல் புதுக்கவிதை வரை ஒரு தொடர்ச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 'தொல்காப்பியம்' வீரயுககாலத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும் செவ்வியல் நடைமுறையில் காப்பிய உருவகம் அமைப்பிலும் தெளிவிலும் கவிஞன் தனக்கே உரியதென வகுத்த எல்லையிலும் மொழி ஆட்சியிலும் மற்ற தன்மைகளிலும் இன்று உருவகம் என்று கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இக்கருத்தை ஆராய்ந்தால், 'உருவகம்' என்ற சொல் பவுண்டைவிட அவர் காலத்தவரான ஹியூம் (T.E. Huling - 1883 -19) நினைவூட்டுகிறது. அவருடைய கட்டுரைத் தொகுதியான Speculations 30,32 என்பது உருவகக் கவிதைத் தோற்றத்தில் முக்கியம் வகிக்கிறது. அவர் எழுதிய கவிதைகள் ஐந்தே ஐந்து தான். 1912இல் இந்த இயக்கத்தை பவுண்ட் தொடங்கினாலும் ஹியூமின் கவிதைகளைத் தான் சான்று காட்டுகிறார். ஹியூமின் கட்டுரைகளில் முக்கியமானது செவ்வியலும் அற்புத நவிற்சியலும் 'Classicism and Romanticism' என்பது இக்கட்டுரை உருவக இயக்கத்தில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டது. இன்றைய நிலையில்

வரலாற்று முக்கியத்துவம் அடைந்துவிட்டது. ஆனால் திறனாய்வாளர்கள் கட்டுரையின் சில பகுதிகளை மேற்கோள்களாகப் பயன்படுத்துகிறார்கள். கொள்கைகளுக்கு அவ்வளவு சிறப்புக் கொடுப்பதில்லை. ஏனென்றால் உருவகம் என்பது இன்றைய கவிதையின் உயிர்.

உருவக இயக்கம் பிரெஞ்சு நாட்டிலுள்ள பூதலேரிடமிருந்துதான் தோன்றியது என்பது பரவலான திறனாய்வுக் கருத்து. அந்நாட்டிலுள்ள படிமக்கவிஞர்களைப் Symbolist poets போல் பழக்கத்தை இழந்த வெறுஞ்சொற்கள், சொல்லணி, பகட்டான சொற்கள், எளியமுறையில் பயன்படுத்தும் சொற்கள் முதலியவைகளை இக்கவிஞர்கள் அறவே வெறுத்தார்கள். மாறாக, துல்லியமான சொற்கள், குழப்பமில்லாத அல்லது தெளிவான கற்பனைத் தோற்றம் (vision) ஒரு முகச்சிந்தனை முதலிய கூறுகளை உருவாக்கி உருவகத்தைத் தோற்றுவித்தனர். இவ்வுருவகம் தான் அவர்கள் கவிதைகளில் ஆட்சி செய்தது. ஹியூமின் கவிதைத் தாக்கத்தைவிட அவருடைய கட்டுரைத் தொகுதியான Speculations என்பதின் தாக்கம்தான் மிகுதி என்று சில முக்கியத் திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.33 அவருடைய கட்டுரை 'செவ்வியலும் அற்புத நவிற்சிஇயலும்' என்பது எந்த அறிவுச் சூழ்நிலையில் இந்த இயக்கம் உருவாகிறது என்பதை விளக்குகிறது. எலியட்டின் ஆசிரியர் இர்வின்பாபிட் போல அற்புத நவிற்சியியல் கொள்கையின் தந்தையான ரூஸோ என்ற பிரெஞ்சுத் தத்துவாசிரியர் ''இயற்கை மனிதனை நல்லவனாகத்தான் படைத்தது. ஆனால் வெறுக்கத்தக்க சட்டங்களும் பழக்க வழக்கங்களும்தான் அவனுடைய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டன'' என்றார். இதிலிருந்து அற்புத நவிற்சிக் கவிஞர்கள், மனிதன் ஒரு வற்றாத ஊற்றின் நல்ல விளைவு என நம்பினர். அவன் இவ்வுலகப்பிறவி அல்ல; மேல் உலகத்தைச் சார்ந்தவன். கடவுளின் வம்சம், என்று மிகைப்படுத்திச் சொன்னார்கள். செவ்வியல் நோக்கில் மனிதன் மனிதனே. அவனுக்கு குற்றம் குறைகளிருக்கும். இவைகள் தான் மனிதனை இனம் கண்டுகொள்ளச் செய்கின்றன. இதன் பின்புலத்தில் ஹியூம்

அற்புத நவிற்சியினை மதத்தோடும், செவ்வியலை ஒழுகலாறுடனும் தொடர்புபடுத்தினார். அற்புத நவிற்சியியல் மனித குணங்களை மிகைப்படுத்துகிறது. செவ்வியலோ அவனுடைய குற்றம் குறைகளை நினைவுபடுத்துகிறது. அக்கொள்கைகளின் உள்நோக்கம் கவிதையை மதநோக்கிலிருந்து பிரித்துவிடுவதுதான். முருகியல் நோக்கில் ஹியூமின் கொள்கைகள் கவிதை கற்பனை விளைவு அல்ல. அது மெய்விளக்கக்கோட்பாடு தற்சார்பற்ற தன்மை என்று நம்பினார். கவிதையின் ஒவ்வொரு பிரிவும் மொழி உட்பட இக்கோட்பாட்டின் விளக்கமே. அவர் இலையுதிர் காலத்தைப்பற்றி எழுதிய கவிதையைப் பார்ப்போம்:

**Autumn**

A touch of cold in the Autumn night -

I walked abroad,

And saw the ruddy moon lean over a hedge

Like a read-faced farmer,

I did not stop to speak, but nodded,

And round about were the wistful stars

With white faces like town children.34

இதில் கவிஞன் இலையுதிர்காலத்தில் சந்திரவெளிச்சத்தில் வெளிஉலகம் எப்படிக் காட்சி அளிக்கிறது என்பதை விளக்குகிறான். இக்கவிதையில் ஒரு சொல்லைக்கூட எடுத்துவிடமுடியாது. இத்தகைய நீக்கம் அதன் அமைப்பைக் கொடுக்கும். அற்புத நவிற்சிக் கவிஞர்களான கீட்ஸ், ஷெல்லியினுடைய கவிதைகளை நினைவில் கொண்டால் நிலவின் உதவியுடன் வாசகர்களை ஒரு மீமானிட உலகிற்கு அழைத்துச்சென்று விடுகிறார்கள். ஹியூம் நிலவு வெளிச்சத்தில் உண்மை உலகத்தை நமது இந்திரியங்களால் அநுபவிக்ககூடிய எல்லைக்குள் எழுத்துச் சிக்கனமுறையில் நிறுத்தி வைக்கிறார்.

நிலவு மேகத்திற்கு மேலே எட்டிப்பார்க்கிறது. அதை நிதானமாக, கற்பனைக் குதிரையைத்தட்டிவிடாமல் மொழியையும் கருத்தையும் அடக்கி மிகத்தெளிவாக மேகத்திற்கு மேல் தோன்றும் சந்திரனை புதர்வேலியிருந்து எட்டிப்பார்க்கும் வெள்ளைநிற உழவனுக்கு ஒப்பிடுகிறார். இது ' a few brush stories' என்ற ஆங்கிலச் சொற்றொடருடன் தொடர்புபடுத்தி ஒரு ஓவியத்தின் கலையம்சத்தை நினைவூட்டுகிறது. இந்த உருவகமும் இதைத் தொடர்ந்த உருவகமும் (விண்மீன்களை நகரத்திலுள்ள குழந்தைகளின் ஒளிநிறைந்த வெள்ளை முகங்களுக்கு ஒப்பிடுகிறார்) உணர்ச்சியின் அடிப்படையில் எழுந்ததல்ல; அறிவின் அடிப்படையில் எழுந்தது. இதில் உள்ள இன்றியமையாத கூறு மொழிச் சிக்கனம், விளக்கச்சிக்கனத்துடன் நெருங்கிய தொடர்புடையது. ஹியூம் தன்னுடைய கவிதை விளக்கத்தில் வரண்ட உறுதி (Dry hardness) என்ற சொற்றொடரைக் கவிதையின் முக்கியக்கூறு என்பதைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தினார். அவருடைய இலையுதிர்காலம் என்பதைப் பற்றிய கவிதை இக்கூற்றிற்குச் சிறந்த சான்று.

இவ்உருவக இயக்கம் அமெரிக்க ஆங்கிலக் கவிஞர்களின் முயற்சியால் இங்கிலாந்தில் தோன்றியது. இவ்வியக்கம் பிரெஞ்சு நாட்டில் தோன்றிய படிம இயக்கத்தின் விளைவு. இவ்வியக்கங்கள் பரவலான ஆழ்ந்த சர்ச்சைகளுக்கிடையே தோன்றின. தமிழ்க் கவிதை உலகில் இம்மாதிரியான இயக்கமில்லை. அற்புத நவிற்சி இயக்கத்திற்கு வேட்ஸ்வொர்த்தின் முன்னுரைபோலவும் உருவக இயக்கத்திற்கு பவுண்டின் முன்னுரைப்போலவும்,35 எந்த இயக்கத்திற்கும் ஒரு குழுவின் அறிக்கை (manifesto) தான் அதனுடைய தோற்றத்திற்கு அறிகுறி. சில திறனாய்வாளர்கள் இத்தகைய இயக்கத்தைத் தொல்காப்பியத்துடன் புதுக்கவிதையுடனும் தொடர்புபடுத்தினாலும் ஒப்பிலக்கிய நோக்கில் எழும் கேள்விகளுக்கு விடை கொடுக்கவில்லை. இத்தொடர்பு இணைவரையா? தாக்கமா? கொள்கையளவில் இணைவரையென்றாலும், ஆங்கிலத்திலும் தமிழிலும் வரக்கூடிய உருவகங்களுக்கு பொதுக்கூறுகள் என்ன? பொதுக்கூறுகள்

இருந்தாலும், மரபு நோக்கில் வேறுபாடுகள் என்ன? பொதுக்கூறுகள், வேறுபாடுகள், எதிர்மறைகளா? அல்லது இணைக்கமுடியுமா? திறனாய்வு உலகில் ஒரு புதிய கருத்து தோன்றினால் அதற்கு தலையசைத்து ஏற்றுக் கொண்டால் திறனாய்வு வளர்ச்சி தடைபடும். சர்ச்சைகள் திறனாய்விற்கு உரம். இத்தகைய அறிவுப் போக்கு (intellectual trend) நமக்கு இன்றியமையாதது.

ஆங்கில இலக்கியத்திலும் அமெரிக்க இலக்கியத்திலும் உள்ள உருவக இயக்கம் ஜப்பானிய சீனமொழிக் கவிதைகளின் தாக்கத்தால் உண்டாகியது என்பது வெளிப்படை. குறிப்பாக ஜப்பானியக்கவிதையைச் சார்ந்த ஹைகு, டங்காவை எடுத்துக் கொண்டால் அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அசைகளைக் (Syllable) கொண்டன. ஆங்கில மொழியை அசைகளாகப் பிரிக்கலாம். ஆனால் தமிழ்மொழியைப் பிரிக்க முடியாது. இக்காரணத்தால்தான் பாரதியாரும் ஹைகுவில் அசை அமைப்பைப் பின்பற்றாமல் அக்கவிதையின் அமைப்பையே இனம் கண்டுகொண்டார். 'புதுக்கவிதை'யை எழுதுகிறவர்கள் ஆங்கிலக்கவிதையின் தாக்கத்தால் எதுகை மோனை போன்றவகைகளை மீறி நீண்டதும் குறுகியதுமான கவிதைகளை எழுதுகிறார்கள். எலியட்டின் ஆசான் எஸ்ரா பவுண்டு இதே தாக்கத்திற்குள்ளானார். எதுகை, மோனையைத் தவிர்த்து சந்தத்தையே துல்லியமான அடிப்படையாகக் கொண்டு உருவகக்கவிதைகளை எழுதினார். அவர் கொள்கைப்படி, சந்தம் ஓசையல்ல. பொருள் கொண்டது. இக்கொள்கையை இன்றைய 'புதுக்கவிதை'கள் பின்பற்றவில்லை. பவுண்டு தன்னுடைய கவிதைகளில் சொல்லமைப்பு, கருத்தமைப்பு என்ற கூறுகளில் கவனம் செலுத்தினார். புதுக்கவிஞர்கள் அமைப்பு நோக்கை ஒதுக்கி கருத்துக்களிலேயே கவனம் செலுத்துகிறார்கள். ஆகையினால் தான் அங்கதம், நகைச்சுவை போன்ற பண்புகள் இடம்பெறுகின்றன: புதுக்கவிதைக்கும் மரபுக்கட்டுப்பாட்டை மீறிய மேலைக் கவிதைக்கும் ('எலியட், பவுண்டு போன்றோர் எழுதியவை') ஒரு வேறுபாடு உண்டு. சந்தம் என்பது நுண்ணிய கட்டுப்பாட்டை மேலைக்கவிதைகளுக்கு அளிக்கிறது.

புதுக்கவிதை அங்கதமாகவும், நகைச்சுவை வெளிப்பாடாகவும் மாறுகிறது. இக்காரணத்தினால், போப், ட்ரைடன் போன்ற ஆங்கில அங்கதக் கவிதைகளுக்கும் 'புது'க்கவிதைக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. ஒப்பிலக்கிய நோக்கில் 'புது'க்கவிதை எலியட், பவுண்டு கவிதைகளைவிட பதினெட்டாம் நூற்றாண்டு ஆங்கிலக்கவிதைகளுடன் நெருங்கிய தொடர்புடையது.

***எஃப்.ஆர்.லீவிஸ்***

லீவிஸ் (1895-1978) என்ற தலைசிறந்த ஆங்கில இலக்கியத்திறனாய்வாளர் எலியட்டின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆங்கில ரீடராக 1939-1962ல் இருந்தார். ஆங்கில நாட்டில் திறனாய்வைப் பெருந்தாக்கத்தற்குள்ளாக்கிய லீவியை அப்பல்கலைக்கழகம் பேராசிரியராக ஆக்கவில்லை. அப்பல்கலைக்கழக்திலுள்ள டௌனிங் (Downing) என்ற கல்லூரி அவருடைய அறிவுத் திறனைக் கண்டு ஃபெலோ (fellow)வாகத் தேர்ந்தெடுத்தது.36 தமது பல்கலைக்-கழகத்திலிருந்து ஓய்வு பெற்றபிறகு யார்க் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது. பல்கலைக்கழகங்களுக்கு 'இலக்கியம்' என்பது நாட்டின் விலைமதிக்கமுடியாத சொத்து என்ற கொள்கைக்காக அரும்பாடுபட்டவர்.37 Scrutiny என்ற தலைசிறந்த திறனாய்விதழின் நிறுவனரும் ஆசிரியரும் ஆவர். இவ்விதழ்தான் திறனாய்வு வளர்ச்சியில் வெளி உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தது. இருபத்திரண்டு ஆண்டுகளே (1932-1953) நிலைபெற்றிருந்தாலும், இவ்விதழ் ஆங்கில இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதில் வெளிவந்த எல்லாக் கட்டுரைகளையும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தினர் 21 தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். அவருடைய முக்கியப் பங்கு அவர் நாட்டிலுள்ள பின்தங்கிய திறனாய்வு உலகத்தைத் திசை திருப்பியதே. எலியட், பௌண்ட், ஹாப்கின்ஸ்38 என்ற கவிஞர்களின் உத்திகளையும் கவிதையியல்

நோக்கையும் பல சோதனைகள் செய்து இக்காலக்கவிதைக்கு ஒரு புதிய இலக்கணம் படைத்தார். இதற்கு முன் எழுந்த கவிதைகள் வாசகரின் உணர்ச்சியை மட்டுமே நிறைவு செய்தன. கவிதை என்பது சிக்கலானது: எளிதில் புரிந்து கொள்ள முடியாதது. வாசகர்கள் தான் அறிவு முயற்சியால் அதைத் தெரிந்து, படித்து இன்புற வேண்டும் என்று புதிய கொள்கை உண்டானதால், வாசகருக்கும் எழுத்தாளர்களுக்குமிடையே உள்ள பரம்பரைத் தொடர்பு அறுந்துவிட்டது என்ற புதிய கொள்கையை உருவாக்கினார். அவர் 1932-இல் ஆங்கிலக் கவிதையில் புதிய விளைவுகள் New Bearings in English poetry என்ற கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டார். இந்நூல் 1972-இல் மறுபதிப்பாக வெளிவந்தபொழுது (Pelican Books, London) Cambridge Review என்ற சிறந்த இலக்கிய இதழை நடத்தி வந்தவர்கள் இக்கட்டுரைத் தொகுப்பிற்கு விமர்சகர் ஒருவரைப் பல்கலைக்கழக வட்டாரத்திலிருந்து அழைக்காமல் வெளியிலிருந்தே கொண்டு வந்தனர் என்று இந்நூலில் அட்டையிலே குறிப்பிடுகின்றனர். ஒப்பு நோக்கில் பார்ப்போமானால், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தனது பயம் தெளிந்த அறிவு நோக்கில் எவ்வளவு இலக்கிய சர்ச்சைகள் கிளம்பப் காரணமாயிருந்தாரோ அவ்வளவு சர்ச்சைகளை கிளப்பிவிட்டார் லீவிஸ். ஆனால் அவர் ஆங்கில நாட்டு இலக்கிய வட்டாரத்தைப் பெரும் தாக்கத்திற்குள்ளாக்கினார் என்பதை மறுக்க முடியாது. கவிதையைப் பற்றித் தம்நாட்டில் இருந்த பழமை நோக்கை நீக்கினார். ஆனால் இவர் புதுமை வாதி என்று முழுமையாகச் சொல்லவும் முடியாது. கொள்கை இல்லாமல் திறனாய்வு செய்ய முடியும் என்று ரெனெவெல்லக்குடன் நடத்திய வாதத்தில் இவர் பழமைவாதி என்பதை உறுதிப்படுத்துகிறார்.

மேலே குறிப்பிட்ட கட்டுரைத்தொகுப்பில், எலியட், பவுண்ட், ஹாப்கின்ஸ் பற்றி லீவிஸ் சில புதிய கருத்துக்களைத் தெரிவித்தாலும், இன்றைய திறனாய்வு வளர்ச்சியில் இக்கட்டுரைகள் காலம் கடந்தவை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இங்கிலாந்து இலக்கிய வட்டாரத்தில் லீவிஸ்

ஒருவரே இப்பெரும் கவிஞர்களை இனம்கண்டு கொண்டார் என்பதை மறுக்க முடியாது. மாறாக, எலியட் 'பாழ்நிலம்' என்ற புகழ் பெற்ற கவிதையை வெளியிட்டபொழுது ஸ்கொயர் (J.C.Squire) என்ற அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்த திறனாய்வாளர் இக்கவிதையை 'உறுமல் என்றே சொல்லாம்' என்று லண்டன் மெர்க்குரி (London Mercury) என்ற இலக்கிய இதழில் விமரிசித்தார். மற்றவர்கள் குழப்பத்தின் (மொழியிலும் கருத்திலும்) விளைவு என்றனர்.

New Bearings in English Poetry 1932 என்ற தொகுப்பின் இரண்டாம் பதிப்பிற்கு ஒரு புதிய முன்னுரை லீவிஸ் எழுதியிருக்கிறார். அதன் தலைப்பு பின்னோக்கு "retrospect, 1972' என்பது. இதில் அவருடைய இலக்கியத்தைப் பற்றிய மாறாத கருத்துக்களை விளக்குகிறார். ஒரு கவிஞனுக்குத் தான் பயன்படுத்தும் சொற்களின் மூலமாகத் தன்னுடைய அனுபவத்தைத் தெரிவித்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளது. அவன் அனுபவத்தில் உள்ள கவனத்தை அவனின் சொற்களிலிருந்து பிரிக்க முடியாது. உளவியல் நோக்கில், ஒரு கலைஞனின் அநுபவம் அவனுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு உட்பட்டிருப்பதால், அதைத் தற்சார்பு அனுபவம் (Subjective experience) என்பர் இன்றைய திறனாய்வாளர். இந்நோக்கில் திறனாய்வாளர்கள் கலைஞனின் அனுபவத்தில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. இன்றைய போக்கு, தற்சார்பற்ற திறனாய்வுத்தன்மையால் கலைஞனைவிட கலையே முக்கியத்துவம் பெறுகிறது.

லீவிஸின் முறை எந்த ஒரு நூலையும் நுணுக்கமாக ஆராய்வதே. இம்முறையை ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் (I.A. Richards) என்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மூதறிஞரின் Principles of Literary criticism என்ற திறனாய்வு நூலிலிருந்து தெரிந்து கொண்டார். இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே Practical ciriticism என்ற வகுப்பை ரிச்சர்ட்ஸ் நடத்திவந்தார். 39 அவர் கூற்றுப்படி மேலே குறிப்பிடப்பட்ட ஆங்கிலக் கலைச்சொல் செய்முறைத் திறனாய்வைக் குறிக்கவில்லை;

நுணுக்கமுறையைத்தான். இம்முறை இலக்கியம் மனித கலாச்சாரத்தை மதிப்பீடு செய்கிறது என்ற லீவிஸின் நம்பிக்கைக்கு வழிவகுத்தது. அவர் இலக்கியம் என்பது மனித குலத்தின் விலை மதிக்கமுடியாத களஞ்சியம் என்றார். இன்றைய நிலையில் மனிதன் மனிதனைக் கொல்லுவதும் ஒழுக்கத்தைத் தூற்றுவதும் வன்முறை வழிகளைக் கையாள்வதும் மனச்சாட்சியை மறந்துவிடுவதும் ஆகிய அச்சுறுத்தும் சூழ்நிலையில், இலக்கியம் எல்லா மனிதர்களுக்கும் களஞ்சியம் என்பது ஒரு இன்றியமையாத கொள்கை. லீவிஸ் தன் இறுதிக்காலத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையே இக்கொள்கைக்காக உழைத்தார்.

எலியட், பவுண்ட், ஹாப்கின்ஸ் போன்ற கவிஞர்கள் பற்றிய லீவிஸின் மதிப்பீடு, திறனாய்வு ஏளனத்தையும் கடந்தது. சான்றாக, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக இலக்கிய ஆராய்ச்சியில் சமகால எழுத்தாளர்களைச் சேர்ப்பதில்லை. காரணம் இவ்வெழுத்தாளர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கும்பொழுது எழுதிக் கொண்டிருப்பார்கள். அதனால் அவர்களுடைய கொள்கைகள் முற்றுப்பெறாது. அறிவு நோக்கில் பார்த்தால் திறனாய்வாளர்கள் அவர்கள் காலத்தைச் சேர்ந்த இலக்கியத்தை ஆராய்ந்து பல சீரிய முடிவுக்கு வந்தால் தான் முன்னோடி இலக்கியத்தைச் சீர்தூக்கிப் பார்க்கமுடியும். குறிப்பாக, எலியட் மரபு என்பதைப் பற்றி முக்கிய விளக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மரபு என்பது மாறாத கொள்கையல்ல. ஒவ்வொரு எழுத்தாளனும் மரபுடன் ஒன்றியோ அல்லது முரண்பட்டோ செயல்படும்பொழுது மரபினுடைய இலக்கணம் மாறும். இத்தகைய அறிவு சார்ந்தபின்புலம் இங்கிலாந்தில் வேறூன்றவில்லை. இப்பொழுது உலகத்தில் சிறந்த திறனாய்வாளரும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஹெலன் கார்ட்னர் (Gardner) அப்பல்கலைக்கழகத்தில் உயர் மாணவராக இருந்தபொழுது அவர் எலியட்டைப் பற்றி ஆராய்ச்சிக்கட்டுரை எழுத விரும்பினார். அவர் அணுகிய பேராசிரியர் துணை செய்ய மறுத்ததுமில்லாமல் அவரைக் கடுமையாக எச்சரித்தார் என்பது

மரபு வழிக்கதை.40 இத்தகைய பழமைவாதப் பின்புலத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆசிரியரான லீவிஸ் பல முன்னோக்கு எழுத்தாளர்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியது அவருடைய நுணுக்க அறிவையும் எதிர்கால நோக்கையும் உறுதிப்படுத்துகிறது.

முன்கூறிய லீவிஸின் பின்னோக்குக் கட்டுரையில் குறிப்பாக இரண்டு செய்திகளைக் கவனிக்க வேண்டும். ஒன்று 1932-இல் தான் எலியட் கவிதையைப் பற்றி எழுதிய கட்டுரையைத் தன்னாட்டு அறிவுலகம் கண்டுகொள்ளவே இல்லை என்கிறார். மேலும் சக ஆசிரியர்கள் அக்கட்டுரையைப் பற்றித் தர்ம சங்கடமான குறிப்புக்களை அவருக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். அமெரிக்காவில் தலைசிறந்த எலியட் திறனாய்வாளரும் ஹார்வேர்டு பல்கலைக்கழகப் பேராசிரியருமான எஃப் ஓ. மதீசன் (F..O. Matthiessen)41 தான் லீவிஸ் எழுதிய எலியட் கட்டுரைக்குக் கடமைப்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார். இன்னொன்று இந்தியாவில் பிறந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்று, பின்னர் மில்டன் திறனாய்வாளராக ஆன டாக்டர் பாலச்சந்திரராஜன் (B. Rajan)42 1924 இல் மில்டன் கருத்தரங்கக் கட்டுரைகளை வெளியிட்டார். அதற்குமுன் எலியட் மில்டன் பற்றிய சில கட்டுரைகளை வெளியிட்டபொழுது இங்கிலாந்தில் உள்ள அறிவுலகம் எலியட்டை நிந்தனை செய்தது. இப்பொழுது எலியட்டின் திறனாய்விற்கு அத்தகைய குற்றச்சாட்டுகள் இல்லை. இம்மாற்றத்திற்கு லீவிஸ் தன் கட்டுரையில் எலியட்டைப்பற்றி எழுதிய விளக்கவுரைதான் காரணம் என்று சுட்டிக்காட்டுகிறார் ராஜன்.

ஆனால் லீவிஸ் பின்னால் 1936இல் வெளியிட்ட திறனாய்வுக் கட்டுரைத் தொகுதியான ஆங்கிலக்கவிதை:பின் மரபும் வளர்ச்சியும் ஒரு மறுபரிசீலனை என்ற Revaluation புத்தகத்திலும் common Pursuit என்ற நூலிலும் மில்டனைப்பற்றி, குறிப்பாக அவருடைய கவிதை நடையைப் பற்றி விவாதிக்கிறார். எலியட் தன்னுடைய இரண்டாவது கட்டுரையில் 'மில்டன் ஒரு

ஆங்கிலக் கவிஞரா?' என்ற கேள்வியை எழுப்புகிறார். மில்டன் கிரேக்க, இலத்தீன் கவிதைக் கலாச்சாரத்தில் ஊறியவர். அம்மொழிகளில் பெரும் புலவர். வடமொழி விற்பன்னர்கள் தமிழ்நாட்டில் ஒரு கலப்பு மொழியைப் பயன்படுத்துவதுபோல அவரது ஆங்கில மொழி செவ்வியல் மொழிகளுடைய தாக்கத்திற்கு உள்ளாகியது. எலியட் இவ்விருமொழிகளையும் நன்கு கற்றவர். லீவிசுக்கு அம்மொழி தெரிந்திருந்தாலும் அவற்றில் புலமையில்லை. இருப்பினும், மில்டனின் மொழித்தாக்கத்தில் எலியட்டின் மறுப்பையும் எச்சரிக்கையையும் ஆதரிக்கிறார். வரலாற்று நோக்கில் பார்ப்போமானால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையில் செவ்வியல் மொழிகளைக் கல்வித் திட்டத்திலிருந்து ஒதுக்கிவிடவில்லை. செவ்வியல் கலாச்சாரம் ஆங்கிலக் கலாச்சாரத்தைவிட உயர்ந்ததாகவே கருதப்பட்டு வந்தது. இதற்கு மாத்யூ ஆர்னல்ட் ஒரு சிறந்த சான்று. மில்டன் சுவர்க்க நீக்கத்தின் தொடக்கத்திலேயே ஆங்கில இலக்கியத்தில் ஹோமர், வர்ஜில் போன்றோர் எழுதிய சிறந்த காப்பியங்களைப் போல ஒன்றும் இல்லை. அந்தக்குறையைப் போக்குவதற்காகப் பல ஆண்டுகள் மில்டன் திட்டமிட்டு ஒரு சிறந்த காப்பியத்தை எழுதியதாகக் குறிப்பிடுவர். திறனாய்வு உலகில் ஆங்கில இலக்கியத்திற்கு இப்பொழுது இது பெருமை தேடிக்கொடுத்திருக்கிறது. பல திறனாய்வு நூல்கள் வெளிவந்திருப்பதால் ஒரு 'மில்டன் அகராதி'யும் வெளி வந்திருக்கிறது. மில்டனைப் பற்றிய சர்ச்சைக்கு அப்பொழுதுள்ள அறிவுச் சூழ்நிலையே காரணம் எனலாம். காப்பிய இலக்கியம் தொன்றுதொட்டு ஒரு முக்கிய வகைமையாக ஏற்கப்பட்டு ஹோமர் (அல்லது வியாசர்) முதலானோர் இயற்றிய காப்பியங்களைப் போற்றுவது வழக்கம். எலியட் கிளப்பிய சர்ச்சையில் மில்டன் ஆங்கிலக் காப்பிய மரபில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறார் என்ற உண்மையை பேராசிரியர் டில்யர்ட் Tillyard E.M.W. உறுதி செய்கிறார். எலியட் பரந்த நோக்கில் மிட்னைப் பார்க்கவில்லை. எனவே, ஒரு பெரும் புலவரைப் பின்பற்றும் எழுத்தாளர் அவரின் தாக்கத்தை மீறி முருகியல் சுதந்திரம் அடைய முடியாது என்ற

கருத்தை முன் வைத்தார் எலியட். ஆகவே நாடக ஆசிரியர்களுக்கு ஷேக்ஸ்பியரும் காப்பிய ஆசிரியருக்கு மில்டனும் ஒரு ஆபத்தான முன் மாதிரிகள் என்றார். இதனால் ஓர் எழுத்தாளன் தன் முன்மாதிரியின் தாக்கத்தைத் தவிர்க்கப் பாடுபடுகிறான். இந்த "Anxiety of Influence' சர்ச்சையில் எலியட்டும், லீவிசும் மில்டனை ஒரு முக்கிய எழுத்தாளராகக் கருதினர். ஆனால் அவர்களுடைய குறுகிய நோக்கின்படி ஒதுக்கி வைக்க முயன்றனர், என்றாலும் மில்டனைப் பற்றிய உண்மையையும் அவர்களால் மறுக்க முடியவில்லை.

லீவிசினுடைய மனைவி திருமதி.லீவிஸ் (L.D.Leavis) நாவல்களையும் வாசகர்களையும் ஆராய்வதில் ஒரு சிறந்த திறனாய்வாளர் என்பது பலருக்குப் புதிய செய்தியாக இருக்கலாம். அவருடைய ஒத்துழைப்பு, முக்கியமாக நாவல் இலக்கியத்திற்குச் சிறப்புச்சேர்க்கிறது.43 இருவரும், இலக்கியம், எந்த வகைமையைச் சேர்ந்ததாயிருந்தாலும், அது முருகியல் வெளிப்பாடல்ல: மனித மதிப்புகளின் (human values) வெளிப்பாடே என்று நம்பினர். ஆகவே இலக்கியம் என்பது மனித ஒழுகலாறு. இந்த நெறிமுறை நம்பிக்கையே அவர்களுடைய திறனாய்விற்கு அடிப்படை.

திருமதி.லீவிஸைவிட அவருடைய கணவரை ஐ.ஏ. ரிச்சர்ட்ஸனின் Prinicples of Literary criticism (1924) நூலில் உள்ள, கவிதை ஆராய்ச்சி கவர்ந்தது. இதே உத்தியை நாவல் ஆராய்ச்சியில் கையாண்டார் லீவிஸ். நாவலும் நாடகமும் பாத்திரங்களினால் ஒன்றிற்கொன்று தொடர்புடையவை. இரண்டும் வாழ்க்கையின் பெரும்பகுதிகளை அலசுகின்றன. இக்கருத்திலிருந்துதான் நாவல் என்பது ஒரு 'வசனகவிதை' prose poem என்ற கருத்து இவர்களுக்குத் தோன்றியது. மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, நாவல் ஒரு முக்கிய வகைமையாக வளர்ச்சியடையக் காரணமாக இருந்தவர் அமெரிக்க நாவலாசிரியரான ஹென்றி ஜேம்ஸ் (Henry James, 1843-1916) அவர் எழுதிய (The Art of Fiction) நாவற்கலை என்ற அரிய கட்டுரைதான் நாவல் இலக்கணங்களை நன்கு

புரிந்துகொண்டு பல நுண்ணிய செய்திகளை ஆராய்ந்தது. ஒழுக்க உணர்வு (moral sense) கலை உணர்வு artistic sense என்ற இரண்டும் ஒன்றிற் கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை என்ற கூற்று லீவிஸ் தம்பதிகளைத் தாக்கத்திற்குள்ளாக்கி அக்கருத்தே அவர்கள் கொள்கையாகிவிட்டது.44 இக்கூற்று லீவிஸ் அவர்களின் சர்ச்சை கிளப்பிய நாவல் மரபைப் பற்றிய நூலான The Great Tradition (1948) என்ற நாவல் திறனாய்வையும் ஊடுருவியது. சார்ல்ஸ் டிக்கன்ஸ் Charles Dickens 1812-70 பற்றி அவர் எழுதிய நூலையும் தாக்கியது. முதலில் குறிப்பிட்ட நூல் 'பெரிய மரபு' என்ற பெயரில் ஜார்ஜ் எலியட் (George Elicot, 1819-80) ஹென்றி ஜேம்ஸ் (Henry James 1843-1916) ஜோசப் கான்ரேட் (Joseph conrad 1857-1924) என்ற மூன்று நாவலாசிரியர்களையும், தன்னுள் அடக்கியது. நாவலை இலக்கியமாக எடுத்துக்கொண்டால், அது மனித அநுபவத்தைத் தான் வெளியிடுகிறது என்று நம்பினார்.45 மேலும் லீவிஸ், இலக்கியம் மனித கலாச்சார வெளிப்பாடு என்பதால் பிற கொள்கைகளை அறவே ஒதுக்கினார்; வெளிப்படையாகவும் எதிர்த்தார். இந்தக்கருத்து வேறுபாடுகள் லீவிசிற்கும் மற்ற திறனாய்வாளர்களுக்கும் ஒரு இடைவெளியை ஏற்படுத்தி மனக்கசப்பையும் உண்டாக்கியது. லீவிஸின் நாவல் இலக்கியத் திறனாய்வு பொறுக்கி எடுக்கப்பட்ட மூன்று நாவலாசிரியர்களையே விமரிசிக்கிறது. இதில் ஜேம்ஸ் என்பவர் அமெரிக்க நாவலாசிரியர். மற்ற இருவரும் ஜார்ஜ் எலியட்டும் ஜோசப் கான்ரேடும்46 இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள். நாவல் இலக்கியம் இங்கிலாந்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் தொடங்கினாலும், ஆங்கில நாவலை நிறுவிய சாமுவேல் ரிச்சர்ட்சன் (Samuel Richardson), ஹென்றி ஃபீல்டிங்), லாரன்ஸ் ஸ்டெர்ன் (Lawrence Sterne) மற்றும் இன்றைய திறனாய்வாளர்களால் மதிக்கப்பெற்ற ஜேன் ஆஸ்டின் (Jane Austen 1775-1817) 47 என்பவர்கள் இந்நூலில் இடம்பெறவில்லை. மற்றும் பெரிய ஆங்கில நாவலாசிரியர்களான சார்லஸ் டிக்கின்ஸ், டி.எச். லாரன்ஸ் (D.H. Lawrence) போன்றோர் இடம்பெறவில்லையானாலும் அவர்களைப்பற்றித் தனித்தனியே

நூல்கள் எழுதினார். அவர் 'பெரு மரபு' என்று நிலைநிறுத்த முயன்றபொழுது நூலில் இடம்பெற்ற நாவலாசிரியர்கள் ஆங்கில மொழியில் விற்பன்னர்களாகவும் சுதந்திர எழுத்தாளர்களாகவும் நிலைத்திருந்து, நாவலை ஒரு முக்கிய வகைமையாக்கி, நாவல் என்பது இன்றியமையாத மனித அனுபவத்தை அறிவிப்பது என்று வரையறுத்தனர். லாரன்ஸ் இன்று ஒரு பெரிய நாவலாசிரியராகக் கருதப்பட்டாலும் அவர் 'திறனாய்வுத் தீண்டாமை'யினால் ஒதுக்கப்பட்டார். ஆங்கில கலாச்சார நோக்கின்படி, பாலுணர்வை அளவு கடந்து கையாண்டதால் திறனாய்வாளர்கள் அவரை இனம் கண்டுகொள்ளவில்லை. நம் நாட்டில் இராவண காவியம் என்ற நூலை இந்துக்கள் மனம் புண்படும் என்ற நோக்கினால் தடைசெய்ததுபோல லாரன்ஸின் நாவலான Lady Chatterly's Lover என்ற நாவலில் 'பூங்கா அரங்கு Garden Scene என்ற பகுதியில் ஆசிரியர் வர்ணிக்கும் காதலுக்காக அந்நூலைத் தடைசெய்து விட்டார்கள்.48 இப்பின்புலத்தில் லாரன்ஸைத் தன்திறனாய்வு மூலம் லீவிஸ் மதிப்பீடு செய்து, அவர் ஒரு பெரிய நாவலாசிரியர் என்பதை எடுத்துரைத்ததார். லாரன்ஸைப் பண்பு இல்லாதவர் என்று குறை கூறியவர்களுக்கு, லாரன்ஸை சீர்தூக்கிப் பார்த்த லீவிஸின் உயர்ந்த பண்பு தெரியவரும்.

இன்றைய தினம் இங்கிலாந்தின் மிகப் பெரிய நாவலாசிரியர்களில் ஒருவர் சார்லஸ் டிக்கன்ஸ். நாடகத்திற்கும் நாவலுக்கும் பொதுக்கூறு பாத்திரங்களே. ஷேக்ஸ்பியரின் நாடகத்தை அநுபவித்த லீவிஸ் ஒரு புதிய கருத்தை வெளியிட்டார். நாவலும் ஒரு நாடகக்கவிதையே dramatic poem என்று மரபு நோக்கில் டிக்கன்ஸ் ஒரு நகைச்சுவையாளராகக் கொள்ளப்பட்டார். அதனால் அவரது பாத்திரங்கள் உயிர்த்துடிப்புள்ளவை அல்ல; கேலிச்சித்திரங்களே என்ற கருத்து பல ஆண்டுகளாக நிலவி வந்தது. லண்டன் நகரில் பிறந்த டிக்கன்ஸ் அந்நகரிலுள்ள அவலங்களையெல்லாம் கேலி செய்தார். முக்கியமாக, ஏழைகளுக்காக அரசாங்கத்தார் கட்டிய நிறுவனங்கள், தமிழ் நாட்டிலுள்ள சத்துணவுக்கூடங்கள் போல, இதில் நடக்கும் பல ஊழல்களை அம்பலப்படுத்தினார்.49 சமூகவியல் நோக்கில் லண்டன் நகர வாழ்க்கையை

மிகைப்படுத்திக் கூறவில்லை. அவர் அநுபவத்திலும் கூரிய நோக்கிலும் தோன்றியது தான் என்று திறனாய்வாளர்கள் புரிந்து கொண்டார்கள். நாவலாசிரியரை கேலிச் சித்திரக்காரர் என்று கொண்டதால் பல ஆண்டுகளுக்கு முன்பு வாசர்கள் டிக்கன்ஸின் நாவலைப் படிக்கும்பொழுது பாத்திரங்களைப் பார்த்து மனம் திறந்து சிரித்தார்கள், அவை கேலிச்சித்திரமல்ல; லண்டன் வாழ்க்கையை அநுபவத்தால் படம் படித்துள்ளார் என்று உணர்ந்த நிலையில் வாசகர்களிடம் சிரிப்பும் சோகமும் கலந்து வருகின்றன.

லீவிஸ் டிக்கன்ஸை பெரிய நாவலாசிரியர்களில் ஒருவர் என்று தன்திறனாய்வு மூலம் நிறுவினார். 50 இந்நிலையில் சாதாரண நாவல் என்று கருதப்பட்டு வந்த Hard Times என்ற நாவலை பொருளாதாரச் சூழ்நிலையில் பின்னப்பட்ட சிறந்த நாவலாகக் கொண்டார். அதற்கு அடிப்படை அறிஞர் பெந்தம் (Jeremy Bentham, 1748-1832) என்பவரின் கொள்கையே., பெரும்பான்மை மக்களின் மகிழ்ச்சியே நன்மையும் தீமையும் என்பதின் அளவுகோல். இந்நோக்கில் கதாநாயகனான தொழிலதிபர் தாமஸ் கிராட் கிரைண்ட் Thomas Gradgrind என்பவனுடைய அரக்கத்தனத்தையும், பண ஆசையால் தன் குடும்பத்தையே சூதாட்டக் காய்களாக வாழ்க்கை என்னும் நிலைக்களத்தில் வைத்து ஆடுகதையும்,. கதை எப்படி நாடகமாக உருவாகிறது என்பதையும் நுணுக்கமாக ஆராய்கிறார். கதாநாயகன் வாழ்க்கையே அருவருக்கத்தக்க சூழ்நிலையாகிறது. திறனாய்வாளர்களால் ஒதுக்கப்பட்ட இந்நாவலை டிக்கன்ஸின் முக்கிய பெரிய நாவல் என்று நிரூபித்தார். இத்திறனாய்வு ஒரு திருப்புமுனை. அவரது காலத்தில் அமெரிக்காவில் புதுத்திறனாய்வு இயக்கத்தின் விளைவால், திறனாய்வு, பல்கலைக்கழக அறிஞர்களின் சொத்தாகிவிட்டது. ஆனால் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆசிரியரான லீவிஸை ஆங்கிலேயர்கள் இனம் கண்டு கொள்ளப்படவில்லை. அதற்குத் திறனாய்வு உலகில் ஆதிக்கம் செலுத்திய பழமைவாதிகள்தான் காரணம் என்று சொல்லவேண்டும். லீவிஸினுடைய மன உறுதியும் கூர்மையான, அறிவும் அவரை அறிஞர்களிடமிருந்து பிரித்துக்

காட்டின. ஆனால் அவர் ஆங்கிலத் திறனாய்வாளர்களில் முக்கியமான ஒருவர் என்பதை மறுப்பது கடினம்.

## ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் (I.A. Richards 1893 - 1984) இன்றைய இலக்கியத்திறனாய்வை நிறுவியவர்களில் ஒருவர். எலியட்டையும் ரிச்சர்ட்ஸையும் புதுத்திறனாய்வு இயக்கத்தின் பெற்றோர்கள் என்று வர்ணிக்கிறார்கள். அவர்களுடைய திறனாய்வுக்கொள்கைகள், தற்சார்பற்ற கொள்கை, நுணுக்க ஆய்வுகளால் புதுத்திறனாய்வு தாக்கப்பட்டிருந்தாலும், தாக்கம், கொள்கை (theory) என்ற நோக்கில் நேரடித்தொடர்பைத் துல்லியமாக வரையறுக்க முடியாது. மேலும் எலியட் புதுத்திறனாய்வாளர்களின் நுணுக்கமான அணுகுமுறையை lemon squeezing school என்று வர்ணித்தார். இத்தொடரில் புதுத்திறனாய்வின் கொள்கைகளுக்கு அவருடைய மறுப்பும் அடங்கியிருக்கிறது. எலுமிச்சம்பழத்தின் சாரைப் பிழிகிற மாதிரி அவர்கள் மூலபாடத்தின் கவிதையாயினும் உரைநடையாயினும் அதில் என்ன இருக்கிறது என்பதை அமைப்பு, உருவகம், மொழி மூலம் சுவைஞனுக்கு அப்பாடல் என்ன தெரிவிக்கிறது என்பதைச் சூழ்நிலையை அகற்றிவிட்டுத் திறனாய்வு செய்தனர். அவர்களது கொள்கைளுக்கு எதிர்ப்பையும் முக்கியமாக வரலாற்று நோக்கில், தளர்வுகளையும் அமெரிப்பல்கலைக்கழக பேராசிரியர்கள் மர்ரே கிரிகர் Murray Krieger ஆர்.எஸ். க்ரேன் R.S. crane 51 எடுத்துக்கூறினர். இருப்பினும் அவ்வியக்கத்தின் முக்கிய கூறுகளை மறந்து விடக்கூடாது. ஆராய்ச்சியில் கட்டுப்பாட்டையும், உறுதியான தற்சார்பற்ற தன்மையையும், கொள்கைகளில் நம்பிக்கையை கற்றுத்தந்தனர். திறனாய்வு என்பது கடினமான கலையாதலால் அறிவு அடிப்படையின்றி ஒரு நூலை எவரும் திறனாய்வு செய்யலாம் என்ற மூடநம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ரிச்சர்ட்ஸ் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்தார். அவர் உளவியலைப் பயின்று பின்னர் இலக்கியத்தில் கவனம் செலுத்தினார். ஆகையினால் அவருக்கு Affective

Criticism அல்லது வாசகர் ஒரு கவிதையைப் படிக்கும் பொழுது எப்படி தூண்டப்படுகிறார் என்பதில் ஆர்வம். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் Practical Criuticism53 என்ற சிறப்புமிக்க பாடத்தை வகுப்பில் நடத்தி வந்தார். மாணவர்களைத்தவிர, ஆசிரியர்களும் திறனாய்வாளர்களும் இவ்வகுப்பில் கலந்து கொண்டனர். இவ்வகுப்பில் ரிச்சர்ட்ஸ் பொறுக்கி எடுத்த கவிதைகளைப் படி எடுத்து மாண வர்களுக்குக் கொடுத்து விடுவார். ஆனால் எந்தக் கவிதையின் ஆசிரியரும் அவர்களுக்குத்தெரியாது. பெயர் தெரியவில்லை என்றால் கவிதையைக் கவிதையாகவே படிக்க வேண்டும். பின்புலம் ஒன்றும் தெரியாது. இதுதான் இவ்வரங்கின் அடிப்படை. மாணவர்கள் திறனாய்வு நோக்கில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தவுடன் அக்கருத்துக்களின் குறைவு நிறைவுகளை ரிச்சர்ட்ஸ் அலசுவார். இந்நுண்ணிய திறனாய்வுப் போக்கு திறனாய்வுலகத்தில் ஒரு பெரும் விளைவையே ஏற்படுத்தியது. பிறகு நூல் வடிவமாக Practical criticism (1928) வெளிவந்தது. இதற்கு முன்பே Principles of Literary ciriticism (1924) என்ற நூலை வெளியிட்டார். தொடக்கத்திலிருந்து உளவியல் நோக்கில் மொழியையும் (திறனாய்வு மொழி போன்றது வாசகர் பயன்படுத்துவது; இலக்கிய மொழி எழுத்தாளர் பயன்படுத்துவது) ஆராய்ந்து பல கருத்துக்களைத் தெரிவித்தார். ஆகையினால் அவருக்குச் சொற்பொருளியல் (Semantics) ஆர்வம் இருந்தது. ஆகவே சி.கே. ஆக்டன் என்ற அறிஞரின் ஒத்துழைப்புடன் (C.K. Ogden) The Meaning of Meaning என்ற நூலை 1923இல் வெளியிட்டார். அவருடைய திறனாய்வுக் கருத்துக்களெல்லாம் முருகியல் நோக்கைச் சார்ந்தவையல்ல. அவருடைய சில கருத்துக்கள் உளவியல் உடற்கூறியல்களின் (Physiology) தாக்கத்திற்குள்ளானதால் திறனாய்வு உலகம் அதற்கு மறுப்புத் தெரிவித்தது. ஆனால் ரிச்சர்ட்ஸின் திறனாய்வு விஞ்ஞான நோக்கை வற்புறுத்தியது. உணர்ச்சியை அறவே ஒதுக்கியது. கவிதையில் உணர்ச்சி உடைய சொற்கள் பொருளுக்கு அப்பாற்பட்டது என்றார்.(Emotion of words in poetry are

independent of the sense.) இதை அவருடைய முக்கிய சீடரான வில்லியம்ஸ் எம்ப்ஸன் என்பவரே ஒத்துக் கொள்வதில்லை. இவர் கவிதையில் பொருள் மயக்கம் ambiquity in poetry என்ற திறனாய்வுப் பிரிவில் விற்பன்னர்; திறனாய்வுலகில் புகழ் பெற்றவர், நுண்ணிய திறனாய்வாளர், பொதுவாக ஒரு கவிதையின் பொருள் என்ன என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. இன்றைய திறனாய்வில், Twinkle Twinkle Little Star! என்ற குழந்தைப்பருவக் கவிதையை எடுத்துக் கொள்வோம்.கல்விக்கூடத்தின் தொடக்க காலத்திலேயே வசதி உள்ள குழந்தைகள் தங்கள் Kinder Garden64 என்ற வகுப்பில் எளிதாகக் கற்றுக் கொள்ளக் கூடிய கவிதை என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைய திறனாய்வில் ஊறிய அறிஞரிடம் அதன் பொருளைக் கேட்டால், பொருள் மயக்கம் உள்ளது என்பார். ஒரு நட்சத்திரத்தைச் சிறியது என்று பெயர் தெரியாத கவிஞன் ஏன் கூறுகிறான். அந்நட்சத்திரம் ஏன் கண் சிமிட்டுகிறது?. அது கண் சிமிட்டாமல் இருக்கக்கூடாதா? அது கண் சிமிட்டுவதின் பொருள் என்ன? அது கண் சிமிட்டாமல் இருந்தால் என்ன பொருள்? சிமிட்டுதல், சிமிட்டாமல் இருத்தல் ஆகியவைகளுக்கு உள்ள இடைவெளி உயிருள்ள பொருளுக்கும் உயிரில்லாத பொருளுக்கும் உள்ள இடைவெளியை நமக்கு உணர்த்துகிறதா? என்ற கேள்வியைக் கேட்பார். மனிதனுடைய செயலெல்லாம் வரம்பிற்கு உட்பட்டது. சட்டதிட்டங்களுக்குக் கட்டப்பட்டது. ஒழுங்குமுறையில் (Discipline) நம்பிக்கையை வற்புறுத்துகிறது. மேலே எடுத்துக்காட்டப்பட்ட கேள்விகள் இந்நூலின் வாசகர்களுக்குச் சிரிப்பையும் ஆத்திரத்தையும் கிளறிவிடும். இந்நம்பத்தகாத கேள்விகள் ஒரு உண்மையை வெளிப்படுத்துகின்றன. திறனாய்வு என்பது மனம்போன போக்கில் செய்வதல்ல. அது 'ஒரு வரம்பிற்கு உட்பட்டது' அளவுக்கு மீறினால் அமிர்தமும் விஷமாகும் என்பது பழமொழி: இச்சான்று, கொள்கைகளை கைவிட்டால் மனதில் பட்ட திறனாய்வு impressionistic criticism தோன்றும்.

ரிச்சர்ட்ஸின் உணர்ச்சி சார்ந்த திறனாய்வு Affective criticism விஞ்ஞானத்தோடு நெருங்கிய உறவுடையது. ஏனென்றால்

அநுபவத்தை விஞ்ஞானத்தின் துணைகொண்டு விளக்கமுடியும். விஞ்ஞானம் என்பது இத்திறனாய்வாளரின் நோக்கில் உளவியலாகும். ப்ராய்டு, யூங் உளவியலை ஒரு அரிய கலையாக ஆக்கினாலும் ரிச்சார்ட் ஒருவரே திறனாய்வில் உளவியலின் பெரும் தாக்கத்திற்குக் காரணமாவர். அவர்தான் கவிதை மொழியை ஆராய்வதில் கூரிய விஞ்ஞான நோக்கத்தைத் திறனாய்வில் புகுத்தியவர். சான்றாகக் கூற்று (statement) என்பதை இரண்டாகப் பிரித்தார். மொழியைக் கையாள்வதின் அடிப்படையில் மொழியைக் கையாள்வது இரண்டு வகைப்படும். ஒன்று, மொழியை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவது. இன்னொன்று, உணர்ச்சி அடிப்படையில் பயன்படுத்துவது. விஞ்ஞான முறையில் பயன்படுத்துவதைக் கூற்று என்றும் கவிதையில் பயன்படுத்துவது போலிக்கூற்று (pseudo-statement) என்றும் விளக்கினார். கூற்று என்பது ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும். போலிக்கூற்று என்பது மொழிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பை அறுத்துவிடும். இதற்குச் சான்று ஜான் கீட்ஸ் என்ற (john Keats) ஆங்கில அற்புத நவிற்சிக்கவியின் புகழ் பெற்ற கவிதையொன்றில் ode on a Grecian win. சிற்பக்கலை அழகில் சிறந்த கிரேக்க கலாசாரத்தைச் சேர்ந்த புதை கலத்தை வர்ணிக்கிறார். அதன் இறுதி வரிகள் பின்வருமாறு:

Beauty is truth, truth beauty என்ற வரி கவிதையின் இறுதியில் வருகிறது. இவ்வரி திறனாய்வாளர்களிடையே பல சர்ச்சைக்குள்ளாகியது. சிலர் இது பேருண்மையை விளக்குகிறது என்கிறார்கள். வேறு சிலர் இதில் பொருளே இல்லை என்று கூறுகிறார்கள். ரிச்சர்ட்ஸ் இது ஒரு போலிக்கூற்று என்கிறார்.55 சில திறனாய்வாளர்கள் இக்கவிதையின் கைப்பிரதியைச் சோதித்து ஒரு முக்கிய கேள்வியை எழுப்பினார். கைப்பிரதியில் இவ்வரி மேற்கோளாக இருக்கிறது. பின்னர் அச்சிட்ட பொழுது மேற்கோள் குறிகளைக் காணோம் என்றனர். அதன் விளைவாக இக்கூற்று கவிஞனுடையதா அல்லது புதை கலத்தினுடையதா என்ற கேள்வியை எழுப்பினர். இப்பொழுது கூற்றும் போலிக்கூற்றும் பற்றிய கருத்துக்கள் திறனாய்வு உலகில் ஒரு முக்கிய இடம் பெறவில்லை.

ரிச்சர்ட்ஸ் மொழியிலும் பொருளிலும் கவனம் செலுத்தியதால் ஒவ்வொரு திறனாய்வாளரும் நுண்ணிய விரிவுரையில் ஆர்வம் கொண்டிருக்கிறான் என்றார். உத்தி முறையில் ஒரு கவிதையோ அல்லது உரைநடையோ உயிருள்ள பொருள். அதற்கு ஒரு மறைமுகமான அமைப்பு இருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் இவ்வுயிர் அமைப்பில் பிரிக்க முடியாத இடம் பெற்றிருக்கிறது. இந்த அமைப்பை இனம் கண்டு கொண்டால்தான் பொருள் புரியும் என்கிறது இன்றைய திறனாய்வு. மேலும், ஒவ்வொரு கவிதையும் விவரிக்க முடியாத அழகைப் பெற்ற ஒரு சிலை. ஆகையால் அது ஒரு மொழிச்சிலை (verbal icon)56 இது இன்றை திறனாய்வில் மிக முக்கியப் பகுதி. இந்நுண்ணிய விரிவுரையை explication de texte என்று பிரெஞ்சு மொழியில் சொல்லுவர். ஏனென்றால் பிரெஞ்சு அறிஞர்கள்தான் இம்முறையைக் கண்டுபிடித்தனர். பின்னர் புதுத்திறனாய்வாளர்கள் என்ற தொகுதியில் (அவர்கள் தொகுத்த இந்நூலில்) ஒரு கவிதையை எப்படித் திறனாய்வு செய்வது என்பதை வர்ணித்தார்கள். இதற்கு ஆசிரியரைப் பற்றியும் சூழ்நிலையைப் பற்றியும் செய்திகள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. கவிதையை ஒரு அழகிய கலைப் பொருளாக அணுகினால் போதுமானது. இம்முறையை இன்றும் அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள் பின்பற்றுகிறார்கள். இதற்கு ஆங்கிலத்தில் explication57 என்று பெயர். இதை அழகிய விரிவுரை எனலாம். ஒப்பு நோக்கில் பார்ப்போமானால், வடமொழி உரையாசிரியர்களும் தொல்காப்பியத்திலிருந்து நம் இலக்கியத்தில் இருந்த உரையாசிரியர்களும் இம்முறையையே பின்பற்றுகின்றனர். வடமொழியில் 'பாஷ்யம்' என்றும் நம்மொழியில் 'உரை' என்றும் இனம் கண்டுகொள்ளுகிறார்கள். ஆனால் சில வேறுபாடுகள் உண்டு. மேற்கிலுள்ள திறனாய்வாளர்கள் தாம் ஆராயும் மூலபாடத்தை ஒரு பொருளாகவோ அல்லது இனம் புரியாத அல்லது துல்லிய உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிற ஒரு அழகிய சிலையாகவோ கருதி, ஒரு உயிர் நூல் நிபுணர் ஒரு சிறிய உயிரைப் பூதக்கண்ணாடியின் வழியே ஆராய்வது போல நுண்ணிய

கருத்துக்களை இலக்கிய வடிவத்தினின்றும் கொள்கைகளில் அடிப்படையில் வெளிப்படுத்துகிறார்கள். பொதுவாக வடமொழிக் கருத்துக்களில் தாக்கத்தினால், இலக்கியமும் மதமும் நெருங்கிய உறவு கொண்டாடின. சில வட்டங்களில் இலக்கியப்பிரிவுகளை இலக்கியமா புராணமா என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. புராணத்தின் ஊடுவருவலால் 'விஞ்ஞானம்' என்ற சொல்லிற்கும் 'திறனாய்வு' என்பதற்கும் இலக்கணம் தெரிவதற்கு முன்பே ஒரு முதுகலைஞர் எழுதிய மூலப்பாடம் திறனாய்வாளரின் அடிமனத்தில் வேதமாகவே பதிந்தது. இப்போக்கு புதியதல்ல. ஷேக்ஸ்பியர் திறனாய்வில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியரான ஏ.சி.பிராட்ஸி (A.C. Bradley 1851-1935) என்பவர் ஷேக்ஸ்பியர் துன்பியல் நாடகங்கள் எனும் தலைப்பைப்பற்றி அரிய சொற்பொழிவுகள் (Lectures on Shakespearean Tragedy) ஆற்றினார். 1950 வரையில் அவர் அப்பெரிய நாடகாசிரியருக்குக் கொடுத்த விளக்கம் ஷேக்ஸ்பியர் பற்றிய திளாய்வு வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகக் கருதி அவரைப் போற்றினார்கள். பின்னர் வந்த திறனாய்வாளர் ஏளனம் செய்து மறுப்புத் தெரிவித்தனர். அவரிடம் டாக்டர் ஜான்சனைப் போல ஷேக்ஸ்பியர் தனக்கு சமமானவர் என்று கருதக்கூடிய உறுதி இல்லை. அவரைக் குருவைப் போல் நினைத்துத் திறனாய்வாளர் பக்தி நிறைந்த மாணவர் நிலையில் *அவரின்* அரிய கருத்துக்களைக் கற்க முயன்றனர். இது வெறுக்கத்தக்க அற்புத நவிற்சி நோக்கு என்று பிராட்லியின் குறைகளைச் சுட்டிக் *காட்டினர் பின் வந்தோர். சான்றாக, ஹாம்லட்* (Hamlet) டில் வரும் தலைமகனை ஷேக்ஸ்பியர் ஜெர்மானிய நாட்டில் உள்ள விட்டன்பர்க் (Wittenberg) பல்கலைக்கழத்தில் படித்த அறிஞர் *என்று மட்டுமே குறிப்பிட்டார்.* இக்குறிப்பை விரிவுரையாக்கி அப்பல்கலைக்கழகத்தின் தலைமகனுடைய வாழ்க்கையை பிராட்ஸி உணர்ச்சி பூர்வமாக விவரித்தார். இதே பாணியில் *பின்னர் எல்.ஸி.நைட்* L.C..Knights என்ற இங்கிலாந்தில் ஒரு புதிய பல்கலைக்கழகத்தின் பேராசியர் How many children had Lady Mycbeth? என்ற கட்டுரையை எழுதி பிராட்ஸியின் அற்புத

நவிற்சிப் போக்கை கிண்டல் செய்தார். இக்கட்டுரை ஷேக்ஸ்பியரின் உலகப்புகழ் பெற்ற மாக்பெத் Mecbeth என்ற நாடகத்தைக் குறிக்கிறது. ஆனால் மாக்பத் தம்பதிகளுக்குக் குழந்தை இல்லை: பிராட்லி ஹாம்லெட்டின் விட்டன்பர்க் வாழ்க்கையைக் குறிக்கும்பொழுது அதே கற்பனை பாணியில் மாக்பத் நாடகத்தைத் துருவிப்பார்த்தால் எல்.ஸி. நைட்ஸின் விஷமமான கேள்விக்கு விடை காணலாம் என்ற அந்த இளைய திறனாய்வாளர் நம்பிக்கை நியாயமானது. ஷேக்ஸ்பியர் திறனாய்வைப் பற்றி இவ்விலக்கிய விளக்கம் (digression) குறிக்கும் செய்திகள், இன்றைய திறனாய்வு உணர்ச்சிக்கு அப்பாற்பட்டது; அறிவு முறையுடன் நெருங்கிய தொடர்புள்ளது என்பதை வற்புறுத்துகிறது. எவ்வளவு பெரிய திறனாய்வாளரும் அறிஞருமாக இருந்தாலும் பிறிதொரு திறனாய்வாளன் மறுப்பு தெரிவிக்கிறபோது அது அவனுடைய முழுச் சுதந்திரத்திற்கு அடையாளமும் பிறப்புரிமையுமாக ஏற்கப்பட்டது.

### அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள்

அமெரிக்கப் புதுத்திறனாய்வு தோன்றிய காலத்தில் ஐரோப்பாவில் புரட்சிகரமான திறனாய்வுக்கருத்துக்களும் முருகியல் கருத்துக்களும் தோன்றின. முக்கியமாக, உருவக முறையில பூதலேர், கவிதைக்குப் புது இலக்கணம் வகுத்தார். ரஷ்யாவில் சில அறிஞர்கள் எழுத்தாளனை ஒதுக்கி ஒரு இலக்கிய நூல் எந்த வகைமையாயிருந்தாலும், அது கையாளும் மொழியில் என்ன என்ன உத்திகளை கையாண்டனர் என்று ஆராய்ந்தனர். இது காறும் எழுத்தாளரிடமே கவனம் செலுத்த வந்த திறனாய்வு மொழிக்கு, திசை திரும்பியது. மாஸ்கோ மொழி வட்டாரத்திலும் செக் நாட்டு மொழியிலும் குழு ஆராய்ச்சியிலும் பொதுவாக மேற்கு ஐரோப்பாவிலும் இத்தகைய போக்கு வேறூன்றினாலும், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இக்கொள்கைப் புரட்சியை இனம் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. ஸ்டாலினின் பயங்கர அடக்குமுறையாலும் ஹிட்லரின் இனவெறியாலும் அரசியலிலும், தேசியம் என்ற பழைய வாதத்திலும் எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டன. அறிவு வளாச்சி ஒடுக்கப்பட்டு மக்களை

ஆட்டு மந்தைகளாகவே ஆட்சியாளர்கள் கருதினார்கள். ஹக்ஸ்லி (Huxley) ஆர்வெல் (Orwell) போன்ற நாவலாசிரியர்கள் கற்பனை உலகை உண்டாக்கி அவ்வுலகம் தான் அறிவாளிகளுக்கு புகலிடம் கொடுக்கும் இடம் என்று வற்புறுத்தினார்கள். கிழக்கு ஐரோப்பாவில் அடக்கு முறை தலைவிரித்தாடியதால், ரெனெவெல்லக், ரோமன் ஜேகப்சன் போன்ற தலைசிறந்த அறிஞர்கள் கிழக்கு ஐரோப்பாவை விட்டு வெளியேறி அமெரிக்காவில் குடிபுகுந்தனர். வெல்லக் அமெரிக்கப் பேராசிரியர் ஆஸ்டிவாரன் என்பவரின் கூட்டு முயற்சியினால் இலக்கியம் என்பது பொதுவாகப் படித்து இன்புறுவதல்ல. கொள்கைகள் மூலம் தான் அதனைப் புரிந்து கொள்ள முடியும் என்பதை Theory of Literature, 1949 என்ற நூலில் விளக்கினார். இந்நூலின் தாக்கத்தினால் அமெரிக்கப் பல்கலைக்கழங்களில் புதிய விளைவுகள் உண்டாயின. இச் சூழ்நிலையில் தான் ஜான்க்ரோ ரான்ஸம் John Crowe Ranson 1888-1974 என்ற மூதறிஞரைச்சுற்றி ஒரு அறிவிக்குழு டென்னிஸி என்ற தெற்கு அமெரிக்காவைச் சேர்ந்த மாநிலத்தில் வாண்டர்க் பில்ட் Vander bilt பல்கலைக்கழகத்தில் தோன்றியது. ரான்ஸம் தலைமையில் இக்குழு பல முறை சந்தித்துத் தங்களது திறனாய்வு நோக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். இதற்கு ஒரு வரலாற்றுப் பின்புலம் இருக்கிறது. அமெரிக்காவின் வடபகுதி தொழில் மயமானது. தென்பகுதி பெரும் விவசாயப் பண்ணைகளைக் கொண்டது. ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருப்பு நிறமக்கள் இப்பண்ணைகளில் வேலை செய்து முடிவில் அடிமைகளாக்கப்பட்டனர். சில அடிமைக் குடும்பங்களில் உள்ள பெற்றோர்களும் பிள்ளைகளும் பிரிக்கப்பட்டு அடிமைச்சந்தையில் தரகர்களின் மூலம் விற்கப்பட்டனர்.58 தென்பகுதியில் கிராமங்களும் பண்ணைகளுக்கும் வாழ்க்கைக்கு அடிப்படை. வடக்குப்பிரிவில் நியூயார்க் சிகாகோ போன்ற பெரிய நகரங்களும் (metofplois) தொழிற்சாலைகளும் இருந்தன. பொருளாதாரமும் அரசியலும் சேர்ந்து ஒரு பிளவையே அந்நாட்டில் ஏற்படுத்திவிட்டன. ஆப்ரகாம்லிங்கன் (Abraham Lincoln) என்பவர் அரசுத்தலைவராக Presideny ஆனபோது

ஒரு உள்நாட்டுப்போரே மூண்டது. இத்தகைய குழப்பத்திலிருந்த அமெரிக்க ஐக்கிய நாட்டை அவர் காப்பாற்றினார். இன்றும் லிங்கனை மக்கள் மகாத்மா காந்தி போல் நாட்டின் ஒற்றுமைக்குத் தந்தை Father of the Union என்று போற்றி மிகப் பெரிய பளிங்குக்கல் சிலையை வாஷிங்டன் என்ற தலைநகரில் முக்கியப் பகுதியில் எழுப்பிப் போற்றி வருகிறார்கள்.59

தெற்கிலிருப்பவர்கள் பொதுவாகப் பழமைவாதிகள். விவசாயக்கலையையும் கிராமச் சூழ்நிலையையும் போற்றுபவர்கள். வடக்கிலிருப்பவர்கள் தொழிற்சாலைகளையும் இயந்திரங்களையும் நம்பி எண் சாண் உடம்பிற்குப் பணமே பிரதானம் என்ற பழமொழியை நம்பி வாழ்ந்தவர்கள். அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள் வாஸ்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் தோன்றியவர்கள். பெரும்பாலும் தெற்கில் பிறந்தவர்கள். திறனாய்வு வரலாற்றில், கொள்கை அடிப்படையில், தெற்குக் கலாச்சாரத்தில் தொடர்பற்றவர்கள் கூட இக்குழுவுடன் இனம் கண்டு கொள்ளுவது பழக்கம். சான்றாக, வட அமெரிக்காவிலுள்ள ஸ்டான்போர்ட் (Stanford) பல்கலைக்ககழக பேராசிரியரான ஐவர் வின்டர்ஸலும் (Yoor winters) ஆங்கிலத்திறனாய்வாளரான லீவிஸும் கூட புதுத்திறனாய்வாளர்கள் என்று அழைக்கப்பட்டனர்.60 இதிலிருந்து 'புது' என்ற அடைமொழிக்கு அகராதி இலக்கணம் தவிர, திறனாய்வு இலக்கணம் இல்லை. மேலும் பிரெஞ்சு நாட்டிலுள்ள ரோலந்த் பார்த் ( Roland Barthes) என்ற தலைமைக் கட்டமைப்பாளரையும் அவரைச் சார்ந்தவர்களையும் 'புதுத்திறனாய்வாளர்கள்' (Noofvelles critiques) என்று பிரெஞ்சுமொழியில் அழைப்பார்கள். இக்குழுக்களை இனம் கண்டுகொள்வது எளிது. காரணம் அவர்தம் இருமொழிப்பெயர்களே. மொழியினுடைய நோக்கில் அப் பிரிவுகளைப் புரிந்து கொள்ளலாம். தமிழில் 'புதுத்திறனாய்வாளர்கள்'என்ற சொற்றொடர் பொதுவாகப் பயன்படுவதால், இக்குழுக்களைப் பிரிப்பதற்கு 'அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள்', 'பிரெஞ்சுப் புதுத்திறனாய்வாளர்கள்' என்ற சொற்றொடர்களே சிறந்தவை.

தெற்குக் கலாச்சாரத்தில் நம்பிக்கை கொண்டு தொழில்துறைக் கலாச்சாரத்தில் அவநம்பிக்கை வைத்த இந்த அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள் Futigive என்ற பத்திரிகையை நடத்தி வந்தனர். இத்திறனாய்வாளர்கள் தம் நாட்டின் தொழிற்துறைக் கலாச்சாரத்தையே விட்டு ஒதுங்கி இருந்தன. அவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள அகதிகள் என்பது பொருள். அவர்கள் இருந்த பகுதி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் கொண்ட பெரும் விவசாயப்பண்ணைகளாக இருந்தன. அதனால் அவர்கள் நில உடமைப் பங்கீட்டுக் கோட்பாட்டில் பொதுவாக நம்பிக்கை தெரிவித்தனர்.

அரசியல் நோக்கிலன்றிக் கொள்கை நோக்கில், தம் கொள்கையை விளக்கி "I will take my stand' என்ற நீண்ட கட்டுரையை வெளியிட்டனர். இதில் Southern Agrarians என்ற முகவுரை 61 உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர், என்ற வள்ளுவரின் கருத்தம்சத்தை விளக்கும். இருப்பினும் அமெரிக்காவில் இன்று தொழிற்கலைக்குள் விவசாயக்கலை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. பொருள் உற்பத்தியில் அளவுக்கு மீறி அமெரிக்காவில் கோதுமை விளைவதால், பல ஏழைநாடுகள் உணவுக்கு ஏங்கிய பொழுது இச்சமகாலத்தில் உபரி கோதுமையைக் கடலில் கொட்டினர் என்பது வரலாறு. அமெரிக்காவில் மேற்குப் பகுதியிலுள்ள ஆப்பிள் தோட்டங்களுக்கு வெளியே பழங்கள் குவியல் குவியலாகக் கொட்டிக்கிடக்கும். ஊர்திகளில் செல்லும் குடி மக்கள் இறங்கி அப்பழங்களை ருசித்துத் தின்பர் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. இவ்வெழுத்தாளர்கள் கழகம், தொழிற்கொள்கையே மனிதத் தன்மைக்கு ஊறு விளைவிக்கும். குறிப்பாக அமெரிக்காவின் தென்பகுதியிலுள்ள விவசாயக் கலாசாரத்தையும் நாட்டுப்புறக்கலாசாரத்தையும் தொழிற்கலை ஒழித்துவிடும் என்று நம்பினர். இத்தகைய நோக்கு கருத்தளவில் நம் நாட்டில் பரவி வருகிறது. மகாத்மா காந்தி கிராமங்கள் தான் இந்தியாவின் உயிர்நாடி என்ற உன்னதக் கொள்கையைப் பரப்பிவந்தார். இது அரசியல் கொள்கையல்ல; நடைமுறையில் நம்பிக்கைக் கொள்கை. ஆங்கிலத்தில் இதை Article of faith

என்று கூறுவர். ஒரு ஆங்கில அறிஞர், இக்கொள்கைப்பிடிப்புள்ள புதுத்திறனாய்வாளர்கள் (ரான்ஸம் கிளாயான்த் புரூக்ஸ், ஆலன் டேட் போன்றவர்கள்) இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர்களாயிருந்தாலும், லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும், கிராமியக் கலாச்சாரத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும், கிராமியக் கலாச்சாரத்தில் உறுதிகொண்டிருந்தனர் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்;62 ஆனால் உண்மை வேறு என்றார். பல்கலைக்கழகத்தில் அடிக்கடி கூடிய இவர்களுடைய குழுவின் முடிவு (அறிவுக்கொள்கையே intellectual ideology) இது பிரிவினை வாதம் அல்ல என்பது.

இப்பொழுது வட அமெரிக்காவிலுள்ள தொழிற்கலையைப் பற்றியும் அவர்களது கலாச்சாரத்தைப் பற்றியும் என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம். இப்பகுதியை 'Southern Agrarians' என்று பெயரிட்டு பதிப்பாளர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். 63 இக்கட்டுரை ஒரு கூட்டு முயற்சி. இக்குழுவில் இனங்கண்டு கொண்ட புதுத்திறனாய்வாளர்கள் எல்லோரும் இல்லை. ஜான்க்ரோ ரான்ஸம், ஆலன்டேட், ராபர்ட் பென்வாரன் (Robert Penn Warren)64 மட்டுமே இருந்தார்கள்.

Agrarians என்ற ஆங்கிலச்சொல்லுக்கு அகராதிப் பொருளைப் பார்ப்பதில் பயனில்லை. தென் அமெரிக்க நாட்டு அறிஞர்கள் அச்சொல்லுக்கு உள்ள பொருளை அறிக்கையின் முடிவில் விளக்குகிறார்கள். அவர்கள் அரசியல் நோக்கில் குடிமக்களிடம் இருக்கும் ஏராளமான உபரிநிலங்களை மற்றவர்களுக்குப் பங்குகள் வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. இது பொதுவுடைமைக் கொள்கை. ஆனால் இவர்கள் பொதுவுடைமைவாதிகள் அல்ல. அறிக்கை முழுவதும் விவசாயக்கலை தொழிற்கலையை விட உயர்ந்தது. இக்கலையைப் பின்பற்றினால் மனிதர்களுக்கு நன்மைகள் விளையும் என்ற நம்பிக்கையில் ஆழ்ந்த பற்று உள்ளவர்கள். முக்கியமாக தொழிலாளர்களுக்குத் தொழிற்கலையைவிட நன்மைகள் விளையும் என்று கூறுகிறார்கள்.

அறிக்கையின் தொடக்கத்தில் தாங்கள் எல்லாம் தெற்குவாசிகள். ஒருவொருக்கொருவரைத் தெரிந்துகொண்டவர்கள். ஓரே உணர்வுகளை அநுபவித்தவர் என்கிறார்கள். இந்த அறிக்கையை வெளியிடும்பொழுதுதான் தாங்கள் ஒரே குழுவைச் சார்ந்தவர்கள் என்பதை அறிந்து கொண்டார்கள். இவ்வறிக்கையிலுள்ள கொள்கைகளும் நம்பிக்கைகளும் கடிதங்கள் மூலம் பரிமாறிக்கொள்ளும் பொழுதும் விவாதங்களைக் கையாளும் பொழுதும், பலர் பொதுவான மெய்ம்மைகளில் பற்றுள்ளவர்கள் என்று தெரிந்து கொண்டார்கள். அதிலொன்று தெற்கே உள்ளவர்களின் வாழ்க்கை வடக்கே உள்ளவர்களின் வாழ்க்கையைவிட வேறுபாடுடையது என்பதுதான்.

தெற்கே உள்ள சமூகத்திற்கு அரசியல் சுதந்திரம் வேண்டுமென்று இக்குழுவில் ஒருவரும் சொல்லவில்லை என்று தெளிவாகக்கூறுகிறார்கள். அவ்வெண்ணம் 1865லேயே இறந்துவிட்டது.65 ஆனால் எவ்வளவு தூரம் தெற்கே உள்ளவர்கள் தங்களுடைய ஒழுக்கமுறை, சமூக அல்லது பொருளாதார தன்னுரிமையைச் சரணடையச்செய்வது என்பது ஒரு கேள்வி, தெற்கிலுள்ளவர்கள் சிறுபான்மைப்பகுதியினர் தங்களுடைய வாழ்க்கைப் போக்கைப் பற்றி பெருமிதம் கொண்டவர்கள். அவர்கள் அவர்களைப் பற்றிய தீர்ப்பைச் சட்டத்தின் வரம்பிற்குள் நிர்ணயித்துக்கொள்வார்கள். இருப்பினும் ஒரு உண்மையைக் கூற வேண்டும். தெற்கே உறுதியின்மையால் அமெரிக்காவின் தொழில் லட்சியத்தில் அவர்கள் முழுதும் ஒத்துழைக்கவில்லை. இச்செய்தியைப்பற்றித்தான் இவ்வறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இளைய சமூகத்தைச் சேர்ந்த தெற்குப் பகுதியைச் சார்ந்தவர்கள், தொழிற்சாலை மதத்திற்கு அடிக்கடி மாற்றப்பட்டு வருபவர்கள். ஆனால் தெற்கின் மரபிற்குத் திரும்பித்தான் வரவேண்டும். அவர்கள் தொழிற்கலையின் தாக்கத்தினால் ஒரு 'புதிய' தெற்கு உருவாவதை உணர வேண்டும். இப்புதிய தெற்கு தொழிற்சாலைமயமான வடக்கின் மறு உருவம் என்று உறுதியாகக் கூறுவோம் என்கிறார்கள்.

பல வகையான சிறுபான்மையினர்கள் இங்கு இருக்கின்றனர். அவர்களெல்லோரும் தொழிற்கலையை எதிர்ப்பவர்கள். சிக்கலில்லாத எளிய பொருளாதாரத்தை வரவேற்பவர்கள். இம்மாதிரிப்பிரிவுகளும் தனி மனிதர்களும் விவசாயக் கலாச்சாரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் இக்கூட்டரசில் இருக்கிறார்கள். ஒழுங்குமுறை வாழ்க்கை என்பது அறிவையும் மனத்திட்பத்தையும் பொறுத்தது; அது சூழ்நிலையைப் பொறுத்ததல்ல., இதன் பின்புலத்தில் இக்கூட்டறிக்கையை உருவாக்கியவர் எல்லோரும் நாட்டளவில் ஒரு தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று இனம் கண்டு கொண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

தொழிற்கொள்கை என்பது அமெரிக்க சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைச் சேர்ந்தது. அவ்வெண்ணம் அப்பொருளாதார வாய்ப்புக்களை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவது எப்படி என்பதைப்பற்றி அமெரிக்க சமுதாயத்தின் தீர்ப்பு என்றே கூறவேண்டும். செயல்முறை விஞ்ஞானம் என்பது ஒரு சர்ச்சைக்குரிய பொருள், விஞ்ஞானம் ஒரு புனிதமான கொள்கை என்று நம் நாட்டினர் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இக்கொள்கையின் தீங்குகளில் ஒன்று மனித ஆற்றலை அடிமைப்படுத்துவது. இவ்வடிமைத்தனமே நம் சமுதாயத்தின் பெரும் சுமையாகிவிட்டது. தொழிற்கலையைப் போற்று- பவர்களிடமிருந்து எந்தவிதத் தற்காப்பு விளக்கமும் வரவில்லை. ஆனால் அவர்கள் விஞ்ஞானத்தில்தான் பக்தியுடன் ஈடுபட்டிருக்கிறோம் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். உண்மையில் அவர்கள் செயல்முறை விஞ்ஞானத்தில் கவனம் செலுத்தி எப்படி உற்பத்தியை அதிகப்படுத்துவது என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். விஞ்ஞான நோக்கை உணர்ச்சி பூர்வமாகப் போற்றாமல் அதன்மீது ஐயுறவு நோக்கு தேவை. இந்நோக்கில் தான் தொழிற்கலையில் குற்றம் குறைகளைக் கண்டுபிடிக்க முடியும். இந்நோக்கு குற்றமற்றது அல்லது தற்சார்பற்றது என்பதுபோலத் தோன்றுகிறது. உண்மையில், இவ்விரண்டும் இல்லை.

விஞ்ஞானத்தின் விளைவால் தொழிலுக்கு ஊக்கம் விளைகிறதென்றும் தொழிலாளர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு உறுதியாகிறது என்ற நம்பிக்கையும் பரவலாக இருக்கிறது. இது உண்மைக்குப் புறம்பானது. இக்காலத்தில் தொழில் வளம் உள்ள நாட்டில் தொழிலாளிக்கு நன்மை கிடைக்கவில்லை. அவனுடைய உழைப்பு கடுமையானது. அவனுடைய உணர்ச்சி வேகம் அச்சுறுத்துவது. ஆனால் அவனுக்குத் தொழில் பாதுகாப்பு இல்லை. தத்துவ அடிப்படையில் ஒரு தொழிலாளியின் உண்மையான உழைப்பு பயனுடையது. அவ்வுழைப்பு இன்பமளிக்கக் கூடியது. மனித சமுதாயத்தில் உழைப்பு என்பது மிகப்பெரிய பிரிவு. ஆகையால் தொழிலாளிக்கு மகிழ்ச்சியூட்டுவது என்பது இன்றியமையாதது.

செயல் முறையில் விஞ்ஞானம் தொழிலை விரையமாக்காமல் இருக்க ஒரு உபாயத்தை கொடுப்பது. இது தொழிலாளிக்கு நன்மை பயக்கும் என்பதுடன் தொழிலைச் சிக்கனமாக ஆக்குவது என்பதையும் பொறுத்திருக்கிறது. செயல்முறை விஞ்ஞானம் தத்துவரீதியில் தொழிலை விரையம் செய்யாமல் இருப்பது; முழுவதும் லாபகரமானது. எவ்வளவுக்கெவ்வளவு தொழிலைச் சிக்கனமாக்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை பயக்கும் என்று இந்த அறிக்கை நம்புகிறது. இந்நோக்கில் தொழில் தீமையானது என்ற கருத்து தொக்கிநிற்கிறது. இருப்பினும் உழைப்பு என்பது மனித சமுதாயத்திற்கு மிக்க மகிழச்சியூட்டும் என்ற செய்தி கைவிடப்பட்டது. தொழில் கலாச்சாரத்தால் என்ன நன்மைகள் விளையும் என்ற நோக்கத்திலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

தொழிற் கலாச்சாரத்தை ஆதரிக்கிறவர்களே சில பொருளாதாரத் தீமைகள் தொழிலை இயந்திரமயமாக்குவதால் விளையும் என்று நம்புகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம், மிதமிஞ்சிய உற்பத்திப் பெருக்கம், செல்வத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதில் சமுதாயத்திலுள்ள குறைகள் இவையே இதற்குக் காரணங்கள் என்கின்றனர். தொழிற்கலாச்சாரத்தை ஆதரிப்பவர்கள் கொடுக்கும் பரிகாரங்கள் மன அமைதி

கொடுப்பதாய் இல்லை. அவர்கள் தொழிலை மேலும் மேலும் இயந்திரமயமாய் ஆக்கிவிட்டால் இத்தீமைகள் விலகும் என்று நம்புகிறார்கள். அவர்களுடைய திருத்தியமைக்கப்பட்ட திட்டம் தொழிற் கலையை ஊக்குவிக்கும் என்றும் நம்புகிறார்கள். சில சமயங்களில் காலப்போக்கினால் இக்குறைகள் மறையும் என்ற எண்ணம் கொண்டிருப்பதால் அவர்களைத் தளரா நம்பிக்கை கொண்டவர்கள் என்றே சொல்ல வேண்டும். சில நேரங்களில் தொழில் அதிபர்களின் தாராள மனப்பான்மை, தொழிலாளிகளின் போர் மனப்பான்மை, தொழில் கலாச்சாரத்தினால் விளையும் நன்மைகள் சமுதாயத்தில் சமபங்கீட்டு முறையை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களெல்லாம் கூட்டுறவுக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்கள் அல்லது சோசலிசத்தைப் பின்பற்றுபவர்கள். சில நேரங்களில் தொழிற்சாலைகளில் தொழிலதிபர்கள் குழுவெல்லாம் பெரும் பொறியியல் வல்லுநர்களால் நிரப்பப்பட்டவை என்ற நினைப்பால் தங்களை மனநிறைவு செய்து கொண்டவர்கள். அக்குழு தொழில் உற்பத்தியையும் பயன்படுத்துவதையும் சமன்படுத்தி விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி வணிகமுறையை ஏற்ற இறக்கம் இல்லாமல் பாதுகாப்பவர்கள். இத்தகையவர்கள் சோவியத் ரஷ்யாவின் தொழிற் கொள்கையைப் பின்பற்றுபவர்கள். இக்கலைச் சொற்கள் ஐரோப்பாவில் பயன்பபடுத்தப்பட்டவை என்பது தெரிந்ததே. இங்கே இருக்கும் தொழிலதிபர்கள் பொதுவுடைமைக்காரர்களே. அவர்கள் அரசு மேலான பொருளாதார அமைப்பை நாட்டின் மீது கொண்டுவரும்; அந்தப் பொருளாதார அமைப்பே காலப்போக்கில் அரசாக மாறிவிடும் என்று நினைப்பவர்கள். ஆகையினால் இவ்வறிக்கையில் கையொப்பமிட்ட குழுவின் உறுப்பினர்கள். இத்தகைய பொதுவுடமை நமக்கு வேண்டுவதில்லை என்று நினைப்பவர்கள். இவ்வாறு அச்சுறுத்தும் பொதுவுடைமைக் கொள்கையை உண்மையாக அச்சுறுத்துவதாக நினைக்கிறோம். ஆனால் அது 'சிகப்பு' நிறம் கொண்டதல்ல. ஏனென்றால் இத்தகைய கலாச்சாரம் அமெரிக்காவில் தொழிலின் மூடநம்பிக்கையின் போக்கு. இது இந்நாட்டில் 1917 இல் ரஷ்யாவில் பலாத்காரத்தில்

கொண்டு வரப்பட்ட பொருளாதார இயக்கத்தைப் போல் இங்கும் விளையும் என்று எதிர்பார்த்தனர்.

தொழில் வளர்ச்சியின் விளைவுகளை எப்படிப் பயன்படுத்துவது என்று நோக்குவோமானால் 'பய்ன்படுத்துதல்' என்பது இற்றைய தொழிற்கொள்கையின் தீமை என்பதே ஒரு மிக முக்கிய முடிவு. நாமெல்லோரும் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று நினைக்கிறோம். நாம் தொழில் உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்குப் போதிய நேரம் இருக்கிறது. உற்பத்திப் பொருள்களும் இருக்கின்றன. மனித இயற்கையின்படி, உழைப்பில் செலவிடும் நேரம் குறைப்பதற்கில்லை. பயன்படுத்தும் நேரத்திற்கும் முடிவேயில்லை. இந்நேரம் மனிதனுக்கு தெவட்டிய நிலையும் குறிக்கோளில்லாத வாழ்க்கையும் கொடுக்கிறது. இது அவனுக்கு வீணாகும் நேரம் அளிக்கும் தண்டனை. சுருக்கமாகக்கூறினோமானால், தற்கால மனிதன் வாழ்க்கையுடன் ஒன்றிய தொழிலின் (Vocation) உணர்வை இழந்துவிட்டான்.

மதம் தொழில்நுட்ப சமுதாயத்தில் வளர்வதில்லை. மதம் என்பது நாம் புரிந்து கொள்ளும் இயற்கையின் பொது நோக்கத்திற்கு உட்பட்டிருந்தால் ஆகும். அதாவது இவ்வட்டத்திற்குள் நம் உணர்வுதான் கடவுளின் சிருஷ்டி என்பதாகும். ஆனால் இயற்கை என்பது தொழிலாக்கம் செய்யப்பட்ட நாட்டிலுள்ள நகரங்களோ, செயற்கையான வசிக்கும் இடங்களோ அல்லது தொழிற்சாலைகள் கொடுக்கும் உற்பத்திகளோ அல்ல; இயற்கையின் எளிமையான அம்சங்களே. இவ்வியற்கை உலகத்தில் இருக்கும் கடவுள், மத அநுபவத்தாலோ மெய்யுணர்வு இயலாலோ எளிதில் புரிந்து கொள்ள முடியாத தவறல்ல. மத அனுபவத்தால் தோன்றியதும் அன்று கொள்கை. அது நம் உணர்வின் விளைவே.

தொழில் உலகில் கலைகளுக்கு வளர்ச்சியில்லை. ஏனென்றால் பொதுவாக உணர்ச்சிவயப்படும் நிலை அங்கில்லை. மதத்தைப்போல, கலையும் அதன் வளர்ச்சிக்குத் தகுந்த உணர்ச்சிநிலையைச் சார்ந்திருக்கிறது. குறிப்பாக, மனிதன்

தற்சார்பற்ற இயற்கையை நோக்குதல். இந்நோக்கு மனிதனின் ஒய்வு நேரத்தில் பிறக்கக்கூடியது. சுருக்கமாகச் சொல்லப்போனால், கலைகளின் வளர்ச்சியோ அல்லது அவைகளை அறிந்துகொள்வதோ தொழில் மயமான நாட்டில் இல்லை. தொழில் வளர்ச்சி இல்லாத பகுதிகளில்தான் அவை வளர்கின்றன. மதமும் கலைகளும் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நியாயமான தொடர்பை நிலைக்களமாகக் கொண்டால் அவை மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள இயற்கையான தொடர்பை உறுதிப்படுத்தும்.

மேலே குறிப்பிட்ட தொடர்பை இனம் புரிந்து கொண்டால் தொழிலியலை (Industrialism) போற்றுபவர்கள் மனிதனுக்கும் மனிதனுக்கும் மற்றும் அவனுக்கும் இயற்கைக்கும் உள்ள நியாயமான தொடர்பைப் புரிந்து கொள்வர். ஆனால் அவர்கள் இவ்வியலில் உள்ள குறைகளைக் கல்வியாலும் கலாச்சார நிறுவனங்களினாலும், அவற்றின் அறக்கொடைகளினாலும் சரிகட்டிவிடலாம் என்று நினைக்கிறார்கள். மேலும் தற்கால அறிவு வறுமையை வெளியிலிருந்து நிபுணர்களைக் கூலிக்கு அமர்த்தி இக்குறையைப் போக்கிவிடலாம் என்று கனவு காண்கின்றனர். பாபவிமோசனம் என்பது மனித நடமாட்டம் மிக்க தெருவில் அடைய முடியாது. அடிப்படை வாழ்க்கையிலுள்ள இன்னல்களைப் பொருளாதார நோக்கில்தான் நீக்க முடியும். ஒரு கட்டிடம் நிறுவுவதைக் கீழே இருந்து தான் தொடங்கவேண்டும்; மேலே அல்ல. சான்றாக, கல்லூரிகளிலுள்ள மாணவர் மாணவிகளை நினைவு கொண்டால் அவர்கள் வாழ்க்கையின் பொய்மை உருவைத்தான் உணர்கிறார்கள். ஆகவே கலைகளையும் உயர் மனிதப் பண்புகளையும் அவர்களுக்குக் கற்பிப்பது விழலுக்கு இரைத்த நீர் போலாகும். இந்நிலையில் அவர்களுக்கு இக்கலைகளையும் பண்புகளையும் கற்பித்தாலும் அவர்கள் மகிழ்ச்சியை இழந்து அவதிப்படுகிறார்கள்.

உயர்மனிதப்பண்புகளில் நம்பிக்கையுடையவர்கள் (humanists) தெளிவான கருத்துக்களை உடையவர்களாயில்லை.

சொல்லப்போனால், இப்பண்பியல், ஒழுங்குமுறையானாலும் கூட அதில் தெளிவில்லை. இவ்வியல் ஒரு கலாச்சாரம் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கையானது மனிதர்கள் முழுமையாக வாழ்வதையும் செயல்படுவதையும் நினைப்பதையும், உணர்வதையும் குறிக்கிறது. இது கற்பனையினால் நிறைவு படுத்தப்பட்ட நம் வாழும் வாழ்வையும் நினைவுபடுத்துகிறது. இது உறுதியான சமுதாய மரபைச் சேர்ந்தது. இக்கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இந்த மரபு நம்பிக்கையால் இதுதான் உண்மையான மனிதப்பண்பு (humanism) இதன் அடிமட்டம் விவசாய கலாச்சாரம். இக்கலாச்சாரம் தெற்கில்மட்டுமல்ல இந்நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருக்கிறது என்று உணர்கிறோம்.

பெரும்பாலான மக்கள், தொழிற்கலையில் ஒருங்கே மயங்கிவிடுவது விநோதமானது. அத்தகைய முறை தனிமனிதர்களின் தேவைகளை அலட்சியப்படுத்துகிறது. இம்மாதிரி எண்ணம் தனிமனிதனுக்குத் தொடர்பில்லாத ஒரு சமூகக் குறிக்கோளை நிறுவுவதில் மகிழ்ச்சியடையும். மனிதர்கள் தனி மதிப்பையும் மகிழ்ச்சியையும் புலனாகாத ஒரு சமூக லட்சியத்திற்குப் பலி கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சமூக லட்சியத்தின் மூலம் ஒரு தனிமனிதனுக்கு இன்னும் பயன் விளையுமா என்று கேட்கத் தெரிவதில்லை. ஆனாலும் இக்கேள்வி ஆபத்தானது. மக்களுக்குத் தங்கள் சொந்த நலத்திலும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நலத்திலும் பொறுப்பு உண்டு; சமூகநலம் என்று கனவு கொண்டிருப்பதில்லை.

தொழில்முறைச் சமூகமும் விவசாயச் சமூகமும் ஒன்றுக்கொன்று எதிர்மறையானவை. அவைகளை வரையறுத்தல் கட்டாயமில்லை. விவசாய சமூகத்தினால் தொழிலாளிகளுக்குப் பயனில்லை. வாழ்க்கைத் தொழில்கள், அறிஞர்கள் கலைஞர்கள், பெரிய நகரங்களிலுள்ள வாழ்க்கை ஆகியவற்றிற்குப் பயன்படுவதாயில்லை. தொழில் நுட்ப நோக்கில், விவசாய சமூகத்தில் விவசாயம் என்பது மனித வாழ்க்கையுடன் ஒன்றிய

உன்னதமான தொழில், அதன் விளைவு. செல்வம், மகிழ்ச்சி, செல்வாக்கு அல்லது எதுவாயிருந்தாலும் அது ஒரு விதமான உழைப்பு. அறிவுடனும் ஓய்வு நேரத்தோடும் பயன்படுத்துவது. இவ்விதமாக பல அணுகுமுறைகளுக்கு அது முன் மாதிரியாக ஆகிறது. ஆனால் விவசாய ஆட்சியைப் பாதுகாப்பது மற்ற தேவையற்ற தொழிற்சாலைகளில் விபத்தினின்று தடுப்பது. விவசாயத்தின்65 அடிப்படைக் கொள்கை நிலத்தின் கலாச்சாரம் சிறந்தது; மனித வாழ்க்கையுடன் ஒன்றிய நுண்ணிய தொழில். ஆகையினால் பொருளாதார நோக்கில் அதை ஒதுக்க முடியாது; தொழிலாளிகளைப் பெரும் அளவில் இவ்விவசாயக் கலாச்சாரத்தில் சேர்க்க வேண்டும். மண்ணில் (நிலம்) தோன்றிய விவசாயக் கலையின் கொள்கை, கலாச்சாரம் உன்னதமான வாழ்க்கைக்கல்வி மட்டுமல்ல; மிகக் கூருணர்வுடைய வாழ்க்கைத் தொழில்; இப்பின்புலத்தில் வாழ்க்கைத் தொழில் சிறந்தது 67 என்பர்.

## ஜான்க்ரோ ரான்சம் (1888 - 1963)

ஜான்க்ரோ ரான்சம் (John crowe Ransom, 1888 -1974) அமெரிக்கப் புதுத்திறனாய்வுக்குழுவின் தலைவர். ஒரு பாதிரியாரின் புதல்வனாக டென்னஸி மாகாணத்திலுள்ள புலஸ்கி என்ற ஊரில் பிறந்து வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் 1909ல் சேர்ந்து அங்கு ஒரு பெரிய திறனாய்வுக்குழுவை உருவாக்கினார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ரோட்ஸ் அறிஞராகத் (Rhodes scholar) தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தார். இங்கிலாந்திலிருந்து திரும்பிய பிறகு ஆங்கிலப் பேராசிரியராகத் தன் பல்கலைக்கழகத்திலேயே பணியாற்றினார். பின்பு கென்யன் கல்லூரியில் (Kenyon college) கவிதைப் பேராசிரியர் (Professor of poetry) பதவியை ஏற்ற Kenyon Review என்ற தலைசிறந்த ஆராய்ச்சி இதழை இருபது ஆண்டுகாலம் வெற்றிகரமாக நடத்தி அமெரிக்க அறிவுலகத்திற்கே வழிகாட்டியுள்ளார். அவருடைய the new Criticism (1941) என்ற கட்டுரை எலியட், ரிச்சர்ட்ஸ் மற்றும் சம காலத்திறனாய்வாளர்களை ஆராய்கிறது. இச்சொற்றொடரை

ரான்சம் முதன்முதலாகப் பயன்படுத்தவில்லை என்றாலும் இத்தகைய திறனாய்வாளர்களை அவர் இனம் கண்டுகொண்டார். இந்நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே இப்பெயரை ரான்சம் என்ற அமெரிக்கப் பேராசிரியர் முதன் முதலாகப் பொதுவாகப் பயன்படுத்தினார் என்பது கவனிக்கத்தக்கது. ரான்சம்மின் முதல் கவிதைத்தொகுதி கடவுளைப் பற்றியது. 1919ல் வெளிவந்தது. அவருடைய Selected Poems என்ற தொகுதி முறையே 1945லும் 1962லும் வெளிவந்தது. அவருடைய கவிதை உயர் தரம் மிக்கது. அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்களுக்கு மனநிறைவு அளிப்பது என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய சீடரும் தலைசிறந்த அமெரிக்கப் புதுத்திறனாய்வாளரும் ஆன ஆலன் டேட் அவரைப் பற்றியும் அவருடைய எழுத்துகளைப்பற்றியும் ஒரு அறிவு சார்ந்த கட்டுரையை sewanee Review XXXV (1927) 68 என்ற ஆராய்ச்சி நுலில் வெளியிட்டிருக்கிறார். இப்பொழுது ரான்சம் திறனாய்வாளராகக் கருதப்படுகிறார்; கவிஞராக அல்ல.

பேராசிரியர் ரான்சம்மின் தலைசிறந்த கட்டுரை Criticism, Inc.69 இது ஏதோ ஒரு கம்பெனியின் பெயர் போலத்தோன்றினாலும், இக்கட்டுரையில் இதன் ஆசிரியர் இலக்கியத்திறனாய்வு என்பதை இலக்கியத்துறையினின்று பிரித்து பல்கலைக்கழகங்களில் தனித்துறையாகவே விளக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார். இக்கட்டுரை எழுதிய சமயத்தில் இலக்கியத்துறையில் திறனாய்வு ஒரு பொழுது போக்கு என்ற எண்ணம் தான் இருந்தது. இலக்கியத்தை மொழியியல் துறையில் சேர்த்துவிட்டதனால் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சொற்களின் மூலாதாரத்தை விளக்கி அடிச்சொல் வரலாற்றிலேயே அறிஞர்கள் கவனம் செலுத்தி வந்தனர். 70

வினையாற்றுபவர்களை மூன்று வகையாக ரான்சம் பிரிக்கிறார். முதலில் கலைஞர். இவர் ஒரு உண்மையான கலையை இனம் கண்டுகொள்ள வேண்டும். ஆனால் அவருக்கும் கலைக்கும் உள்ள தொடர்பு உணர்ச்சிகரமானது; அறிவு பூர்வமானதல்ல. அவருக்குக் கலையைப் பற்றிக்

கொள்கைப் பிடிப்பு இல்லை. ஆனால் இலக்கியக்கலைஞர்கள் தங்கள் மொழியாக்கத்தினால் வெறும் கலைஞர்களை விட திறனாய்வு அறிவு உள்ளவர்கள். இலக்கியக் கலைஞன் தன்னுடைய கலையைப் பற்றி விளக்கம் கொடுத்தால் அது தொழில் நுட்பமுடையதாகவும் நுண்ணியதாகவும் இருக்கவேண்டும் என்று ரான்சம் விருப்பம் தெரிவிக்கிறார்.

இரண்டாவது வகை, தத்துவஞானி (Philosopher). இவருக்கு நுண்கலைகளுடைய வினைமுறையைப்பற்றி நன்கு தெரியும். ஆனால் அவருடைய கொள்கை பொதுவானது. குறிப்பிட்ட கலைப் பொருள்களைப் பற்றிய அவருடைய பரிச்சியமும் பொதுவானது; நெருக்கமானதல்ல, குறிப்பாகத் தத்துவஞானிகள் கலை நுணுக்கங்கள், திறனாய்வுக்கலையில் நெருக்கம் காண்பிப்பதில்லை. பொதுவாக கருத்துகளைத் தெரிவிப்பதில் அவர்களுக்குத் தெளிவு இல்லை. எனவே தத்துவஞானிகள் பொதுவான கருத்துகளைப்பற்றிக் கவனம் செலுத்துகின்றனர்: குறிப்பான கருத்துகளை அல்ல என்று ரான்சம் கருதுகிறார்.

மூன்றாவது வகை, இலக்கிய ஆசிரியர். இவர் பேராசிரியர் என்று அழைக்கப்படுபவர். அவர் திறனாய்வில் ஆர்வம் உள்ளவராகையால் அவரைக் கலைத் தொழிலர் என்றே கூற வேண்டும். அவர் தத்துவ ஞானிக்குக் குறைந்தவரல்ல. கவிஞருக்கும்கூட. ஆனால் நம்பிக்கை நோக்கில் அவர் தத்துவஞானிக்கும் கவிஞருக்கும் கீழே உள்ளவர். இலக்கியப் பேராசியர்கள் அறிஞர்கள்; ஆனால் திறனாய்வாளர்கள் அல்ல. ஆயினும் இப்பேராசிரியர்கள்தான் உயர்ந்த திறனாய்வு மதிப்பளவை நிறுவத் தகுதியானவர்கள். இது அவர்களுடைய கடைமையும் கூட,

திறனாய்வு இப்பொழுது விஞ்ஞானமுறையை நெருங்கிக்கொண்டிருக்கிறது. அது துல்லியமாகவும் ஒழுங்காகவும் மாற்றம் காண்கிறது. ஆகையினால் அதன் முறையான இருப்பிடம் பல்கலைக்கழகங்கள் தான்.

திறனாய்வு விஞ்ஞானமாக மாறுவதால் அதற்கு ஒரு குறையும் இல்லை என்கிறார் ரான்சம். அம்மாற்றத்தினால் விஞ்ஞானம் என்கிற நிறைவு எய்தாது. மனஇயலும் சமுகவியலும் பொருளாதாரமும் விஞ்ஞானமுறைகளைப் பின்பற்றுவதால் விஞ்ஞானமாக மாற முடியாது. இவைகளில் எந்தத்துறையையோ விஞ்ஞானமென்றோ அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட துறை என்றோ கூற முடியாது. இத்துறைகளைப் பல்கலைக்கழகங்கள் எடுத்துக் கொண்டுள்ளதால் அவைகள் செம்மைப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்காரணங்களுக்காகத் திறனாய்வையும் ஒரு துறையாகக் கருதி பல்கலைக்கழகங்கள் தனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ரான்சம் வற்புறுத்துகிறார்.

இத்திறனாய்வைப் பொழுது போக்கிற்காக எடுத்துக் கொள்ளக்கூடாது. கலைத்தொழிலர்கள் (Professionals) இத்துறையை எடுத்துக்கொண்டு அதைச் சீர்படுத்த வேண்டும். தான் அருவருக்கத்தக்க தலைப்பைப் பயன்படுத்தி இருக்கலாம் என்கிறார் ரான்சம். ஆனால் Criticism Inc அல்லது Criticism Ltd. என்ற நிறுவனம் அவசியம் தேவை.71

இந்தப் பரிந்துரையை இப்பொழுது அமெரிக்காவில் இருக்கும் ஆங்கில அமெரிக்க இலக்கியப் பேராசிரியர்கள் எதிர்ப்பர் என்பது ரான்சமிற்குத் தெரியும். ஆனால் அவர்கள் இப்பரிந்துரையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இவர்களில் ஒருவரான ரோனல்டு க்ரேன் (Ronald Crane) சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவர், திறனாய்வின் முக்கியத்துவம் உணர்ந்திருப்பதால் அவருக்குப் புகழாரம் சூட்டுகிறார்.72 தன் ஆங்கிலப்பிரிவில் திறனாய்விற்கு முதன் முதலில் முக்கியத்துவம் கொடுத்தவர் பேராசிரியர் கிரேன். அவருடைய முன்னோக்கில் மகிழ்ச்சியடைந்த ரான்சம் இக்கட்டுரையின் ஒரு பகுதியையே அவருக்காக ஒதுக்கி விட்டார். (ப. 230)

இலக்கியம் பயிற்றுவதில் பழமை நோக்கை ஒதுக்கியவர்கள் மனிதப் பண்பாட்டியல் அறிஞர்கள் (New Humanists) என்ற

அமெரிக்க அறிஞர் குழு. இவ்வறிஞர்களையும் ரான்சம் இனம் கண்டு கொள்ளுகிறார். இக்குழுவிலிருப்பவர்கள் ஒழுக்க முறையில் நம்பிக்கை கொண்டவர்கள்; உண்மையில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு திட்டத்தின் வரலாற்று ஆசிரியர்கள்; வழக்கறிஞர்கள்; திறனாய்வு என்பது இலக்கியத்திலுள்ள முருகியல் அல்லது குறிப்பிட்ட பண்புகளையும் வரையறுத்து இன்புறுதல் என்றனர். இக்குழுவினர், வரலாற்று, அறிஞர்களைப்போல முருகியல் பண்புகளை ஒதுக்கிவிடுகிறார்கள். இக்குழுகளிலிருப்பவர்கள் எப்பொழுதாவது முருகியல் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்- கிறார்களா? எனக்கு ஞாபகமில்லை என்கிறார் ரான்சம். 'கலை' என்ற சொல் 'முருகியல்' என்பதை விட பொருள் மயக்கமுடையது. அச்சொல்லைத்தான் பயன்படுத்தி இருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாக 'கலை' என்ற சொல் தெளிவில்லாத பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆகையால், இச்சொல் விருப்பமுள்ளவர்களுக்கு உயர்நோக்கு என்ற (high seriousness) பொருளைக் கொடுக்கும். உயர் நோக்கு ஒழுக்க உயர் நோக்கு (Moral Seriousness) அல்லது உட்தடை (inner check)75 என்பதை நினைவுறுத்தும். இறுதியாக பிளேடோ அல்லது அரிஸ்டாடிலிடத்தும் கொண்டுவிடும்.

இப்பின்புலத்தில், அதாவது, திறனாய்வு மொழியில் தெளிவின்மை அல்லது பொருள் மயக்கம் என்ற தலைப்பில் பாபிட் என்ற புதிய மனிதப் பண்பாட்டியல் அறிஞரைப் பற்றித் தன் கருத்துக்களைச் சொல்லுகிறார். பாபிட் தவறாமல் 'செவ்வியல்', 'அற்புதநவிற்சியியல்'. என்ற சொற்களையே பயன்படுத்துகிறார். அச்சொற்கள் பல பொருள்கள் கொண்டதால் பாபிட் அற்புத நவிற்சி கொள்கைக்கு எதிராகப் போர் தொடுக்கிறார். ஒழுக்கவியல் காரணங்களுக்காக அவருக்கு ஒழுக்கமுறையியல் தான் ஈடுபாடு. முருகியலில் அல்ல. ஒழுக்கவியல் நம்பிக்கையாளருக்கு அற்புத நவிற்சியியலுக்கு எதிராகக்கணை தொடுப்பதற்கு உரிமை இருக்கிறது. ஒழுக்கமுறை போதிப்பாளருக்கு அற்புற நவிற்சி இலக்கியத்தைத் தாக்குவது முழுவதும் நியாயமானதே, அவருடைய வழக்கை

நிரூபித்தால், சான்றாக, அவ்விலக்கியம் கொள்கைகளுக்குப் பதிலாக உணர்ச்சிகளைக் கையாள்கிறது அல்லது எழுத்தாளர் உரமற்ற தளதளத்த, மட்டுமீறிய தன்மைகளும் விவாதத்திலிருந்து தப்பியோடுதலும், தத்துவ அறிவின்மையும், வெளிப்படையாக வளர்ச்சியின்மையும் வெளிப்படுத்துகிறார் என்றும் அற்புத நவிற்சிக் கொள்கைகளுடன் அறிவு சார்ந்த முறையில் போரிடும் பொழுது எடுத்துக்காட்டலாம். ஒழுக்கமுறையைச் சார்ந்த மறுப்பு பொதுவாக ஒப்புக்கொள்ளக்கூடியது. அற்புத நவிற்சியியல் காலம் அக்காலத்திற்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளும் போக்கில் பரவலாகத் தோல்வியடைந்திருக்கிறது. சமூக, அரசியல் சூழ்நிலைக்கு மாற்றி அமைத்துக் கொள்ளாததால் பரந்த தோல்வி என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. இத்தோல்விக்குச் சமூகமும், அரசாங்கமும் தனிமனிதனின் தேவைகளை உணர முடியாமல்போனதே என்று காரணம் சொல்லலாம். இவ்விளக்கம் டி.எஸ். எலியட்டின் குற்றச்சாட்டிற்கு முரண்பட்டது. அவருடைய கருத்து முருகியலைச் சார்ந்தது. தெளிவாக இல்லை என்றாலும், விளக்கமாகச் சொல்லப்போனால் இலக்கியத் திறனாய்வாளன் இற்புதநவிற்சியியலைப் பற்றி உண்மையைத்தான் சொல்ல வேண்டும். அற்புதநவிற்சி இலக்கியம் தற்சார்பற்ற தன்மையில் குறைபாடுடையது. அந்தக் குறை முருகியல் தூரப்பார்வை aesthetic distance76 இல்லாதது எனலாம். இந்தக் குறைபாட்டிலிருந்ததுதான் அவ்விலக்கியத்தின் குறைபாட்டை, அதாவது கட்டமைப்புக் குறைபாட்டை உணர்கிறோம். அற்புத நவிற்சிக்கவிஞன் முருகியல் மனப்பான்மையை உணர்வதில்லை. அவன் இலட்சியக்கலைஞனல்ல. அல்லது வேறு உண்மை இருக்கலாம். நாம் அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது. ஒரு ஒழுக்கவியல் திறனாய்வாளர் ஒரு இலக்கிய நூலைப்பற்றி மறுப்புத் தெரிவித்தால் ஒரு இலக்கியத் திறனாய்வாளரும் மறுப்பைத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த மனிதப் பண்பாட்டியல் அறிஞர்களைப் போலவே இடதுசாரி அறிஞர்கள் அமெரிக்காவில் இப்பொழுது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த பரபரப்பும் ஒழுக்கவியலைச்

சேர்ந்ததுதான். வர்க்கவிழிப்புநிலையை Class consciousness இலக்கியத்தில் அவர்கள் தேடிப்பிடிப்பதும் சரியே. இதனால் இலக்கியம் அன்பு விளையும் சமுகத்திலுள்ள தோழர்களின் பிணைப்பு என்ற கொள்கையை அறிவுறுத்துகிறது. மனிதப்பண்பாட்டியல் அறிஞர்கள் அற்புத நவிற்சியியலைக் கண்டனம் செய்து இந்தத் தறுவாயைப் பயன்படுத்தி அரிஸ்டாடிலின் ஒழுக்கக் கோட்பாட்டைப் புதுப்பிக்க வேண்டும். மனிதப்பண்பாட்டில் அறிஞர்களுக்கும் இடதுசாரிகளுக்கும் இப்பொருளைப் பற்றி சச்சரவு ஒரு பொழுதும் ஏற்படாது. காரணம், இரு குழுவினர்களும் முருகியல் நோக்கில் ஒன்றானவர்கள். பண்பாட்டு மதிப்புகளில் ஆர்வம் உடையவர்கள். இது பழமைவாதிகளின் இடையே ஆங்கிலத்துறையில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அவ்வாசிரியர்கள் போலிக் கவர்ச்சிகளிலிருந்து விடுபடுவார்கள். முறையான பாடத்திட்டங்களில் கவனம் செலுத்துவார்கள். அவர்கள் முறையாக மாணவர்களுக்கு அளிக்கும் ஆங்கிலப் பாடப் பயிற்சிகளையும் விட்டு ஒதுங்கிவிடுவார்கள். காரணம் இலக்கியத்திலிருந்து தோன்றும் புதிய கவர்ச்சிகள்.

இருப்பினும் பொதுவாக ஒழுக்கமுறை போதிப்பவர்கள், அவர்களை இனம் கண்டுகொண்டாலும், வரலாற்று ஆய்வு அறிஞர்களுடன் முருகியல் காரணங்களுக்காக மனவேறுபாடுகளுடைய அறிஞர்களைப் போன்றவர்கள். இந்த ஒழுக்கவியல் நிபுணர்கள் ஆங்கிலத்துறைகளில் கலைத்தொழிலாளர் போல ஆதிக்கம் செலுத்தவில்லை. ஒருமாதிரி எடுத்துக்காட்டான ஆங்கிலத்துறையை எடுத்துக்கொண்டோமானால் அவர்களுக்குக் கலைத்துறையினர் போன்று முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆங்கிலத்துறையைப் போன்று மற்ற துறைகளிலும் உரிமைகள் அதிகார பூர்வமாக அளிக்கப்படவில்லை. பல புகழ்பெற்ற இத்துறைகளில் இத்தகைய உரிமையாளர்கள் பழைய புகழ் வாய்ந்த துறைகளில், ஒரே *சீரான* நன்மகன்களாக gentlemen வரலாற்றில் மரபு நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய கடினமான உழைப்பின் விளைவுகளாகிய

டாக்டர் பட்ட ஆய்வுரைகளும் அவர்களுடைய வரலாற்று நோக்குடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அவர்களுடைய தனியுரிமைச் சான்றிதழ்கள் அல்லது பட்டயங்கள், இதன் விளைவாக, இயற்கையாகவே என்றென்றும் நிலைத்திருக்கிற ஒழுங்குடைமை system த்திட்டத்தை உண்டாக்குகிறார்கள். அத்திட்டத்தின் ஆற்றலும் புகழும் அவர்களைச் சார்ந்ததே. ஆனால் இந்நாட்டிலுள்ள ஆங்கில இலக்கிய அறிஞர்கள் பேராசிரியர் க்ரேனைவிட மத அறிமுகச்சான்றுக் கடிதங்கள் பெற்றிருக்க முடியாது என்று நம்புகிறேன். குறிப்பாக அச்சாதனை பதினெட்டாம் நூற்றாண்டு இலக்கியத்தைச் சார்ந்தது, அவ்விலக்கியத்தில் பரந்த தொடர்புடையவர். இதில் இலக்கியத்தை ஒதுக்கித்திறனாய்வில் கவனம் செலுத்திய அவருடைய போக்கு மற்ற ஆங்கிலப் பேராசிரியர்களிடமிருந்து அவரைப் பிரித்துக்காட்டுகிறது.

ஒரு துறையின் தன் மதிப்பைத்தரும் தனித்துவத்தைத் துறப்பது கொடுமையான செயல். ஆங்கிலத்துறை இலக்கியத்தைப் புரிந்துகொள்ளுவதும் கற்பிப்பதும் என்ற கடமைகள் இருக்கின்றன. இலக்கியத்தைக் கற்பிப்பது ஒரு கலையென்றாலும் இலக்கியத்தின் நிறுவுதலையும் அமைப்பையும் மறந்துவிட்டார்கள். ஆங்கிலத்துறையில் தன்னாட்சி உரிமையிருந்தாலும் கூட அது வரலாற்றுத்துறையின் பிரிவே என்று நம்புகிறது. அதற்கு ஒழுக்கவியல் துறையின் பிரிவாகச் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்த உரிமையிருக்கிறது. வரலாற்றியலும் ஒழுக்கவியலும் சில புறப்பொருள்களைச் சுற்றிக்கொண்டிருந்தாலும் அப்பொருள்கள் கலைப்பொருள்கள் என்பதும் உண்மை. ஆங்கிலப் பேராசிரியர்கள் இத்தகைய பொருட்களில் கவனம் செலுத்தவேண்டியதில்லை. அண்மையில் ஆங்கிலத்துறையின் தலைவர் ஒருவர் தன்னிடம் வந்த முதுகலை மாணவர்களிடம் "நம் துறை புலமையைத்தான் மதிக்கிறது. திறனாய்வை அல்ல. இத்துறையில் திறனாய்வை அனுமதிப்பதில்லை. திறனாய்வை எவரும் கற்பிக்கலாம்" என்று கூறி அம்மாணவர்களைத் திடுக்கிடச் செய்தார்.

இம்மாதிரிக்கூற்று தேவையற்றது. திறனாய்வு என்பது உழைத்தால் பலன் தரக்கூடியது. திறனாய்வைக் கண்டவர்கள் எல்லாம் பயில முடியாது. சான்றாக, ஆங்கிலப் பேராசிரியர் வரலாற்றியலில் புகழ்பெற்றவராக இருக்கலாம். ஆனால் அவர் தரமான திறனாய்வை உண்டாக்கமுடியாது. அப்பேராசிரியர் ஒரு பழைய இலக்கிய நூலைப்பற்றி முருகியல் தீர்ப்பை அளிக்கமுடியாதவராக இருக்கலாம். ஒரு புதிய நூலை எதிர்கொண்டால் அதைப்பற்றி ஒரு புதிய செய்தியைச் சொல்வார் என்பதை எதிர்பார்க்க முடியாது. சமகாலத்திறனாய்வு என்பது ஒரு மரபு. ஆங்கிலத்துறைக்கு எட்டாதது. சமகால இலக்கியத்தைத் திறனாய்வில் அடக்குவது என்பது ஒரு இலக்கிய ஆசிரியரின் கடமை, ஆனால் இலக்கிய ஆசிரியர்கள் வரலாற்றியலில் நம்பிக்கை வைப்பதால் அண்மைக்கால இலக்கியம் அவர்களுக்கு எட்டாதது. சமகாலத்திறனாய்வு ஆங்கில இலக்கியத்துறையில் இடம் பெறவில்லை. அவ்விலக்கியம் வரலாற்றியலுக்கு அப்பாற்பட்டது. அது சீரிய ஆராய்ச்சிக்கு உகந்ததல்ல என்ற அபிப்ராயம் வருந்தத்தக்கது.

சமகால இலக்கியம் ஆராய்ச்சிக்காகக் காத்திருக்கிறது. ஆனால் இலக்கியப் பேராசிரியர்கள் எங்கே? அவர்கள் தங்கள் தோட்டங்களிலுள்ள செடிகளைப் பராமரிக்கச் சென்றுவிட்டார்கள்; அவர்கள் விரும்பிய காலங்களில் இலக்கிய வரலாற்றுப் பகுதிகளைப் பற்றித்தெளிவுபெறச் சென்றிருக்கிறார்கள்.

பொருளாதாரம், வேதியியல், சமுகவியல், இறைமையியல், கட்டிடக்கலை என்றவற்றில் இலக்கியத்துறையிலுள்ள விரும்பத்தகாத வேறுபாடுகள் இல்லை. இத்துறைகளில் திறனாய்வு என்பது ஒரு இன்றியமையாத பகுதியாக இருக்கிறது. திறனாய்வுப்பயிற்சி என்பது கொள்கைகளிலும் உத்திகளிலும் பயனடைபவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு உரிமை. வரலாற்று முறை பயனுடையது. எவ்வித மனிதச்செயலுக்கும் இவ்வொழுங்கு முறையைப் பயன்படுத்தலாம். சாசர் (chaucer.I c1345-1400)78 ஆதாரம் பூர்வமான பழைய ஆங்கில மொழியைக் கையாண்டாலும் தொண்ணூற்று மூன்று விழுக்காடு

வரலாற்றியலுக்கு மொழியியலுக்கும் ஐந்து விழுக்காடு முருகியலுக்கும் திறனாய்வுக்கும் முக்கியத்துவம் தந்தவர். ஓர் அழகிய பொருள் எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தருவது (A thing of beauty ia a joy for ever)79 இது ஒரு அழகிய கலைப்பொருளைக் குறிக்கிறது. பொருள்களுக்குப்பின்னால் வீரமனிதனின் உழைப்பைக் குறிக்கும் ஒரு வரலாறு பொதிந்து கிடக்கிறது. இம் மேற்கோளை வாத முறைப்படி ஆராயலாம். இது மக்களுடைய முடிவில்லாத விவாதத்திற்குரிய பொருள், ஆனால் அது திறனாய்வு ஆகையால் அதை நிறுத்திவிடலாம்.

ஆங்கில இலக்கியத்துறைகள் நிறுவப்பட்டிருப்பதன் நோக்கம் இலக்கியக் கலையைப் புரிந்து கொள்வது எப்படி என்பதை அறிவிப்பதற்காகத்தான் என்று ஊகிக்கலாம். அக்குறிக்கோள் திறனாய்வையும் மதிப்பீட்டையும் தன்னுள் அடக்கியது. 'மதிப்பீடு' என்பது உணர்வினால் புரிந்து கொள்ளவேண்டியது. இது அறிவுறுத்தலின் பயனுக்கு அப்பாற்பட்டது. ஏனென்றால் இவ்விதம் இலக்கியத்தைத் தெரிந்து கொள்வது எளிமையானது. இது இலக்கிய நூலுடன் பொழுது போக்குவது தான், மனிதன் மனிதனுடன் காலம் கழிப்பது போல.

மதிப்பிடுதலுக்கும் திறனாய்வுக்கும் ஒரு பின்புலம் உண்டு. மதிப்பிடுதல் தனிமனிதனுக்குரியது. திறனாய்வு பொது வாழ்விற்குரியது. கலந்துரையாடலை ஊக்குவிக்கும். இது ஆங்கிலத்துறையின் வளர்ச்சியில் இறுதிக்கட்டத்தைக் குறிக்கிறது. குறிப்பாக வரலாற்றியலுக்கு இன்றிமையாத கருவியாக உதவும் சாதனம் இது. முடிவு இல்லை. இந்நோக்கில் வரலாற்றில் மொழியியலுக்குச் சரி சமமானதாகும், மொழியும் வரலாறும் இலக்கியத்தைப் புரிந்து கொள்ள உதவும்.

இப்பொழுது வரலாற்றியலின் பயனைப் பார்ப்போம். இந்நோக்கில்லாமல் சாசரை 81 எப்படிப் புரிந்துகொள்ளவது? இப்பொழுது எளிதில் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய கடினமான இலக்கிய அறிவின் நிலையைச் சுட்டிக்காண்பிக்கிறேன். இந்நிலை ஆங்கில

முன்னேற்றக்கல்வியின் மையத்தைப் (Centre of advanced studies in english) பொதுவாக குறிக்கிறது. இம்மைய நோக்கில் மாணவனைத் துணிவுடன் வரலாற்று ஒழுங்குமுறைத் திட்டத்தைத் திணிக்க முற்படுகிறது. சாசர் தொடர் உருவகங்களைப் பயன்படுத்துகிறார். இவ்வுருவகங்களை வரலாற்று வல்லுநர்கள்தான் சிக்கவிழ்க்க முடியும். சாசர் நாம் புரிந்து கொள்ள முடியாத நிறுவனங்களையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் குறிப்பிடுகிறார். பல அந்நிய மொழிகளைக் கையாள்கிற எழுத்தாளர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். அவர்களிடமிருந்து கருத்துக்களைத் தன்னுடைய கவிதைகளில் நுழைக்கிறார். இடைக்கால மெய்யுணர்வுக்கொள்கைகளையும் விஞ்ஞானக் கொள்கைகளையும் குறிப்பிடுகிறார். அக்கொள்கைகள் நம் புலனுக்கு எட்டாதவை. வரலாற்றியலைப் புரிந்து கொள்ளக் கடும் முயற்சி மேற்கொண்டால்தான் சாசரைப் புரிந்து கொள்ள முருகியல் நோக்கில் உருவெடுக்கும்.

இது எந்த எழுத்தாளரையும் அவர் பிறந்து, வளர்ந்த சூழ்நிலையையும் குறிக்கும். எந்த உள்ளத்துடன் ஒரு பழைய நூலை உட்புகுந்து அதன் உண்மையான நிலையை உணர்கிறோமோ அந்த உள்ளம் தான் நமது வாழ்க்கையை உருவாக்குகிறது. அவ்வுள்ளமே நம்மைச் சமகால நூலை உணரச்செய்கிறது. நமது சமகாலத்தைச் சேர்ந்த உள்ளம் சமகால நிலைமைகள் பலவற்றை மறுக்கிறது. இறந்த காலத்தைச் சேர்ந்த உள்ளம் அந்நிலைமைகளை அவ்வாறு நோக்குவதில்லை.82. இது ஒரு எதிர்மறை (negative) உத்தி. நடைமுறையில் நம்பிக்கை உள்ளவர்களுக்குக் கடினமாக இருக்கலாம். நேர்காட்சிமுறையில் Positive method உள்ளத்திற்குத்தான் நாம் துல்லிய நம்பிக்கைகளையும் கருத்து நோக்கங்களையும் ஊட்டிவிட வேண்டும்; இவைகளெல்லாம் இறந்தகாலத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தாலும் உள்ளத்திற்கு அளிக்கும் உணர்வு வரலாற்றின் கருத்தியல், வரலாறு நமக்கு கற்பிப்பது. இந்த நடத்தை முழுவதும் வரலாற்றின் தழுவல். இக்கூறுகளைப் பலகலைக்கழகத்தில் கற்பிப்பது கடினமானது எனலாம். ஆனால் ஆங்கிலப்பாடத்திட்டத்திற்கு ஒவ்வாது.

மொத்தமாக, சமகால வரலாற்றுப்புலமையின் சாதனை ஆங்கில இலக்கியத்துறையில் பெருமளவு இருக்கிறது. அச்சாதனை வரலாற்று வல்லுநர்கள் பெருமைப்படக்கூடிய செய்திதான். எந்த அளவு வரலாற்றியல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஆங்கில இலக்கிய மாணவர்கள் உணர, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த பல பிரிவுகள் அடங்கிய 'ஆங்கில இலக்கிய வரலாறு' நூலைப் படித்தால் உணர்ந்து கொள்ளலாம்.83 இது நூல் பட்டியல்களும் அடங்கியது, அல்லது இந்த வரலாற்று நூலைவிடப் பயனுள்ள செயல்திலை அரிய அதற்குப் பிறகு வெளிவந்த நூல்களையும் கையேடுகளையும் படித்தால் சாசர், ஷேக்ஸ்பியர், மில்டன் (எழுத்தாளர்கள் பற்றிய) உட்படப் பலசுவையான செய்திகளை அறிந்து கொள்ளலாம். இவை நீண்ட நூல் பட்டியல்கள் அடங்கியவை. இவைகளில் குறிப்பிட்ட காலங்களைப் பற்றிய நூல்களும் இருக்கின்றன. இவை காலங்களைப் பற்றி விரிவான செய்திகளைத் தருகின்றன.

ஒரு நோக்கில் நமக்கு அளவு கடந்த புலமை வேண்டியதில்லை என்பதை நியாயப்படுத்தலாம். இத்தகைய புலமையைத் திறனாய்வு அறிவு இயங்குவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். அதன் நோக்கையும் தெளிவுபடுத்தலாம். சில கடுமையான முயற்சிகளால் குறிப்பிட்ட செய்திகளைச் சேகரிப்பதில்லாமல் உள்ள திறனாய்வுச் சிக்கல்களே இல்லை எனலாம். ஒவ்வொரு சிக்கலும் தனக்குரிய குறிப்பிட்ட செய்திகளைத் திட்டவட்டமாக அறிகிறது. இத்தகைய செய்திகள் ஏராளமாக இனம் கண்டுகொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் அச்செய்திகள் செயல் நோக்கம் கொண்டதாக இல்லை. அச்செயல்களைச் சேகரித்து ஒரு பெரிய பொருள் காட்சியாக அமைப்பதே செயல் நோக்கம் என்று தெரிகிறது. கல்வியாளர்களுக்குப் போதை மகிழ்ச்சி ஊட்டுபவைகளாக இருக்கின்றன.84

மாணவர்களில் முருகியல் நோக்கை விரும்புகிறவர்களுக்கு வரலாற்றியல் அல்லது அதன் விளைவாகத் தோன்றும் பயன்கள்

மிகச்சொற்பமே. ஆதார பூர்வமான சாசர் பாடத்திட்டம் அநேகமாக 95 விழுக்காடுகளுக்கு மேல் வரலாற்றியலையும் மொழியியலையும் சார்ந்தது. ஐந்து விழுக்காடுகளுக்கு கீழேதான் முருகியல் அல்லது திறனாய்வு நோக்கை ஒரு அழகிய பொருள் கொடுக்கும். மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவன் அதைப் பற்றிப்பேச மறுப்பதால் பயனில்லை; அதன் அழகு மலர்வதில்லை. ஒரு கலையழகு பொருந்திய பொருளுக்குப் பின்னால் ஒரு ஒப்பற்ற மனித உழைப்பு உள்ளது. அதன் அடிப்படையில் தான் பொதுப்படையான வாதத்திற்கு அது அடிவகுக்கிறது. அதன் தருக்கமுறையின் விளைவாக எழுந்த ஆய்வுரைகள் எண்ணற்றவை. அவ்வுண்மையை உணர்ந்த பொழுதே நாம் திறனாய்வு உலகத்திலேயே நுழைகிறோம்.

ரான்சம் இக்கட்டத்தில் திறனாய்வு என்றால் என்ன?, என்ற ஓர் அடிப்படைக் கேள்வியையுக் கிளப்பி அதற்குப் பதில் அளிக்கிறார். இக்கேள்வியை எழுப்புவது எளிது, அதே தறுவாயில் ‘எது திறனாய்வு அல்ல?’ என்ற எதிர்மறைக் கேள்வியையும் எழுப்புகிறார். இப்பொழுது இலக்கியப் பேராசிரியர்கள் வழக்கமாகச் செயல்படுவது, அதன் விளைவாக மாணவர்கள் செயல்புரிவது, என்பவை திறனாய்வுச் செயல் என்று இனம் கண்டுகொள்ள முடியாதது. இச்சோகக்கருத்து கட்டமைப்புப்பற்றிய கட்டுரைகள் உண்மையான தகுதியற்ற எழுத்தாளர்களால் உண்டாக்கப்பட்டு மதிப்பாய்வுகளாக அச்சேற்றப்பட்ட எழுத்துகளுக்குப் பொருந்தும்.85

பேராசிரியர் க்ரேன் வரலாற்றுப்புலமையையும் மனித நலக் கோட்பாட்டையும்86 திறனாய்வு வரம்பிற்குள் கொண்டுவரவில்லை. இதைப்போல திறனாய்விடமிருந்து ஒதுக்கப்பட வேண்டிய பொருள்களை நாம் இங்கு பார்ப்போம்.

**தனிப்பட்ட பதிவுகள்:**

இச்சொற்றொடர் திறனாய்வாளர் வாசகராக இருக்கும் பொழுது ஒரு கலைப்பொருள் எவ்வாறு தன்னைப்பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்கள், திறனாய்வை

வரையறுக்கக்கூடிய முதல் சட்டம் திறனாய்வென்பது தற்சார்பற்றது. அது ஒரு கலைப்பொருளின் இயற்கையை விவரிக்கிறது; திறனாய்வாளனிடம் உண்டாக்குகிற விளைவுகளை அல்ல. ஆதலினால் உண்மையான இலக்கிய நூல் என்பது அதை இருமுறை படிப்பதல்ல; அல்லது அந்நூல் வாசகரிடம் எவ்வித உடற்கூறு மாற்றங்களை Physiological ஏற்படுத்துகிறது என்பதல்ல; இவ்வித மாயத்தோற்றங்களுக்கும் திறனாய்விற்கும் தொடர்பேயில்லை. ஒரு நூல் உலகத்தை மறக்கச் செய்தது அல்லது வாசகர் தன்னை அறியாமல் கண்ணீர் வடித்தார் அல்லது அவருடைய புலன் உணர்ச்சிகள் தூண்டப்பட்டன போன்ற தோற்றங்கள் திறனாய்வல்ல.87

அரிஸ்டாடில் (தன்னுடைய புகழ் பெற்ற கட்டுரையில்) துன்பியல் நாடகத்தை வரையறுக்க முயன்றபொழுது உண்டாக்கிய சொல்லாக்கம் தற்சார்பற்ற தன்மை. ஆனால் அவர் நாடகத்தின் தற்சார்பற்ற பண்புகளை ஆராய முடியவில்லை.85 நியுயார்க் நகரத்திலுள்ள பிராப் வேயின் இன்பியல் நாடக இயக்க நிறுவனர்கள் நம்பத் தகுந்த ஒரு நபரை நாடகக் கொட்டகைக்கு அனுப்பி நாடகம் பார்ப்பவர்கள் எத்தனை முறை நகைக்கிறார்கள் என்று கணக்கெடுப்பதைப் படித்து இருக்கிறேன். அவர்களுடைய சோதனை செய்யும் முறை அரிஸ்டாடிலின் போக்கைக் போல துல்லியமானது என்று சொல்ல முடியாது. ஆனால் நாடக இயக்க நிறுவனர்களும் அரிஸ்டாடிலும் விளைவுகளில் கவனம் செலுத்துகிறார்கள் என்பது தெளிவு. அதனால் அவர்களுடைய செயல் விரும்பத்தகாதது. அவர்கள் இருவருமே செய்வது விரும்பத்தகாத செயல் என்பது வெளிப்படை. காரணம், கலைஞனின் தன்னுரிமையை அவர்கள் மறுக்கிறார்கள். அதேபோல கலையில் தன்னுரிமையை இனம் கண்டு கொள்ளுவதில்லை: கலைக்குத் தன்னுரிமை என்பது அதன் கூடவே பிறந்தது. மேலும் விரிந்த சொல் வளத்தைப் பயன்படுத்துவது திறனாய்வுக்கு ஒவ்வாதது; இச்சொல்வளம் பொதுப்பண்புகளைக் கலைப்பொருள் மேலே சுமத்துகிறது. உணர்ச்சியூட்டுதல், கிளர்ச்சியூட்டுதல், பரபரப்பூட்டுதல், மகிழ்வித்தல், இரக்கத்தின் வெளிப்பாடு, பெரியது, சேர்ந்தது.

இவ்வரையறுத்தலின்படி, கண்டிப்பாக அழகிய என்ற சொல்லைப் பயன்படுத்தக்கூடாது.

### பொருட்சுருக்கமும் பொழிப்புரையும்

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் மாதர் சங்க அங்கத்தினர்க்கு இந்தச் செயற்படுமுறைகள் மகிழ்ச்சியூட்டும். இம்முறைகள் மிக எளிதான திட்டமிட்ட பயிற்சிகள். இம்முறைகள் இலக்கியப் பொருள்களைப் பற்றிய ஆய்வுரைகளுக்குப் பயன்படும்.

### வரலாற்றியல் ஆய்வுகள்:

இவ்வாய்வுகள் விசாலமான பரப்பெல்லை கொண்டவை. இவை பரந்த இலக்கியப் பின்புலத்தையும் உள்ளடக்கியவை: எழுத்தாளரின் வாழ்க்கை, குறிப்பாக அவர் சுயசரிதையின் சான்றுகள் அவருடைய எழுத்துக்களில் கண்டுபிடிக்கப்பட்டவை, அவர் படித்த நூல்களிலுள்ள கோட்பாடுகள், அவைகளுக்கு ஒத்தவை. இச்செய்திகளைப் போலத்திறனாய்வு அறிவைத் தூண்டுபவை வேறொன்றுமில்லை. இப்பகுதி ஒப்பிலக்கியத்தை சாரும்.86 இவ்வாய்வை மேலெழுந்தவாரியாகவும் இயந்திரகதியிலும் தான் செய்ய முடியும். பொதுவாக ஒப்புமை முறைகள் இந்தப்போக்கில் திசை மாறினால், இணைவரை கோட்பாடுகளில்தான் முடியும்.87

### மொழியியல் ஆய்வுகள்:

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் வழக்கிற்கு மாறான சொற்களும் மொழியின் தனி மரபுக்கூறும் சேரும். பிறமொழிச் சொற்களும் வழக்கிழந்த சொற்களும் வரும். மொழியியலுக்கும் திறனாய்விற்கும் உள்ள தொடர்பு முழுப் பயனுள்ளது. திறனாய்வு என்பதில் தருக்கமுறை முக்கிய அடிப்படை. தருக்கம் திறனாய்வின் உள்ளடக்கத்தினைப் புரிந்து கொள்வதற்கு உதவும். உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் இலக்கியங்களிலும் அறிமுகமானாலும் திறனாய்வாளனை உருவாக்க முடியாது. அவ்வறிமுகம் தவறுகளிலிருந்து காப்பாற்றினால் கூட இன்னல் விளைவிக்கும்.

## ஒழுக்கவியல் ஆய்வுகள்:

ஒழுக்கவியல் வரையளவைச் செயல்படுத்துதல், மதிப்பீடு செய்பவருக்குப் பொருந்தும். இவ்வியல் கிருத்துவமத இயக்க ஒழுக்கத்தையோ அல்லது அரிஸ்டாடிலைச் சேர்ந்த தத்துவ ஒழுக்கத்தையோ அல்லது தொழிலாளர் சமுதாயம் நம்பிக்கை வைத்த நற்செய்தியையோ குறிக்கும். ஆனால் ஒழுக்க உள்ளடக்கம் (ஒரு இலக்கிய நூலின்) முழு உள்ளடக்கத்தையும் குறிக்காது. இவ்வுண்மையை ஒதுக்கிவிடவே முடியாது.

மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் அடங்காத இலக்கிய நூலின் சுருக்கமும் உரைநடை உள்ளடக்கமும் ஆம். அநேகமாக எல்லா அறிவுத்துறைகளும் இலக்கியத்திலிருந்து தமக்குகந்த கூறுகளை எடுத்து ஆராயும். இடைக்கால விஞ்ஞானத்தில் சாசரின் அறிவு, ஸ்பென்ஸரின் ஐயர்லாந்து 88 பிரச்சனைகள் பற்றிய நோக்கு. ஷேக்ஸ்பியருக்குச் சட்டத்திலிருந்த அறிவு, மில்டன் கவிதைகளில் புவியியல், ஹார்வியின் நாவல்களில் இடப்பெயர்வுகள்89 என்பன போன்ற ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. திறனாய்வாளர் இவைகளைப் படித்து இலக்கியக்கலைஞரைப் பற்றி அறிந்து கொள்ளலாம். ஆனால் அவருடைய தொண்டு எவ்வளவு தூரம் வெளிச் செய்திகளைக் கலைஞன் தன்னோடு இணைக்கிறான் என்பதே.90

## *அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள்*

பேராசிரியர் ரான்சம் தன்னுடைய உறுதியானதும் தெளிவானதுமான கொள்கைகளில் இலக்கிய உலகில் ஒரு புரட்சியையே உண்டு பண்ணினார். அவருடன் இணைந்த அறிஞர்கள் கிளியான்த்ப்ரூக்ஸ் (Cleanth Brooks 1906) ஆலன் டேட் (Allen Tate 1899 - 1979) ராபர்ட் பென் வாரன் (Pern Warren 1905) என்பவர்கள். இவர்களெல்லாம் தெற்கு அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்கள். ஆகையினால் அவர்கள் விவசாய கலாச்சாரத்தை மதித்து வடக்கேயுள்ள தொழில் கலாச்சாரத்தை ஒதுக்கியவர்கள். இதற்குக் காரணம் தொழிற்கலாச்சாரத்தில் நம்பிக்கையிழந்து அதைவிட்டு வெளியேறியவர்கள். இக்குழு

1930-களில் தோன்றி இரண்டாம் உலகப்போருக்குப் பின் வளர்ச்சியடைந்து மேற்குத்திறனாய்வுலகத்தில், குறிப்பாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள அறிஞர்களைப் பெருந்தாக்கத் திற்குள்ளாக்கியவர்கள். பொதுவாக இவர்கள் டி.எஸ்.எலியட். ஐ.ஏ. ரிச்சாட்ஸ் போன்ற மூத்த திறனாய்வுக்கலைஞர்களால் பாதிக்கப்பட்டவர்கள். 'புதுத்திறனாய்வு' என்ற சொற்றொடர் மேலே குறிப்பிட்ட திறனாய்வாளர்களைக் குறிப்பிடுகிறது. திறனாய்வுக் கொள்கை வளர்ச்சி என்ற நோக்கில் இன்னும் சிலரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆர்.பி. பிளாக்மர் (R.P.Blackmur. 1904) கென்னத்பர்க் (Kennoth Burke - 1897) ஐவர் விண்டர்ஸ் (Yoor winters 1900) முதலிய அமெரிக்கத் திறனாய்வாளர்கள். ரிச்சர்ட்ஸின் சுடரான வில்லியம் எம்ப்ஸன் (William Empson 1906) என்பவர் கூட இத்திறனாய்வுக் குழுவினுடன் இனம் கண்டுகொள்ளப்படுகிறார்.

குழப்பத்திலிருந்து விடுபட அமெரிக்கத்திறனாய்வாளர்களின் கொள்கைகள் என்ன என்று பார்ப்போம். 'புதுத்திறனாய்வு' என்பது முக்கியமாக ஒரு அமெரிக்க நாட்டு இயக்கத்தைக் குறிக்கும். அவர்களுடைய பண்புகள் பின்வருமாறு: (1) புதுத்திறனாய்வாளர்கள் மரபு வழி திறனாய்வை எதிர்க்கிறார்கள் : இலக்கிய வரலாற்றில் இலக்கிய அறிஞர்கள் வைக்கும் நம்பிக்கையைக் கூட எதிர்க்கிறார்கள். பல்கலைக்கழக அறிஞர்கள் காலப்பிரிவின் முக்கியத்துவத்தை ஆராய்வதிலும் அது இலக்கியத்தைப் பாதிப்பதிலும் மிகுதியாக நம்பிக்கை வைத்திருப்தையும் சாடுகிறார்கள். சமூகச் சூழ்நிலையிலும் இத்தகைய நம்பிக்கை வைத்திருப்பதைக் கண்டிக்கிறார்கள். இவ்வகையாக அவர்களுக்கு கிடைக்கும் செய்திளை ரயில்வே தபால் நிலையத்தில் உள்ள ஊழியர்கள் கடிதங்களை இயந்திரகதியாகப் பிரிப்பதைப்போல் பிரிக்கிறார்கள். இம்முறை உயிரியல் சோதனைக் கூடத்தில் உயிரினங்களை வகைப்படுத்தும் விஞ்ஞான முறையை நமக்கு ஞாபகப்படுத்துகிறது என்கிறார்கள். அவர்கள், ஒரு இலக்கிய நூல் ஒரு கலை என்று நம்பினார்கள். ஆகையினால் அது ஒரு

வரலாற்றுப் பகுதியோ அல்லது அதன் சூழ்நிலையோ விளைவித்ததல்ல. அது கலைஞரின் கற்பனையிலிருந்து தோன்றியது என்ற உண்மையை நாம் அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அக்கொள்கையின் காரணமாக ஒரு இலக்கிய நூலைப் புரிந்து கொள்வதற்கு அந்நூலின் சூழ்நிலையோ அதை எழுதிய எழுத்தாளரின் வாழ்க்கையோ உதவாது. நூலை நூலாகவே நோக்கவேண்டும். அதன் கலையம்சத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்ற நம்பிக்கையைத் தெரிவிக்கின்றனர். இது எலியட் அவர்களின் கொள்கையைச் சார்ந்தது.91 இலக்கிய நூலை வரலாற்றுப் பின்புலத்திலிருந்தும் எழுத்தாளர் வாழ்க்கையிலிருந்தும் ஒதுக்கி விட்டதால் இத்திறனாய்வாளர்கள் அந்நூலின் நடை, மொழி, கட்டமைப்பு, உருவகமுறை என்ற பண்புகளிலேயே கவனம் செலுத்தினார்கள். சுருக்கமாகச் சொல்வோமானால் அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள் ஒரு இலக்கிய நூலின் தோற்றத்தை ஒதுக்கிவிட்டு நூலை நூலாகவே கருதினர். புதுத்திறனாய்வின் மாதிரிப் படிவம் ஒரு கவிதையின் கூறுகளை நுண்ணிய நிலையில் ஆராய்கிறது. வரிவரியாக கவிதைமொழியின் பொருளை பல மட்டங்களில் திறனாய்வு செய்தல், யாப்பு வகையிலும் கவனம் செலுத்தல், கவிதை மொழியின் பொருளைத் துருவித் துருவிப் பார்த்தல் ஆகியவற்றில் ரிச்சர்ட்ஸ் அவர்களின் தாக்கத்தைப் பார்க்கலாம்.

### கிளியான்த் ப்ரூக்ஸ் (1906 - )

அமெரிக்காவிலுள்ள சமகாலத்திறனாய்வாளரோடு ஒப்பிடும் பொழுது ப்ரூக்ஸ் எலியட்டின் கொள்கைகளை ஒப்புக் கொள்கிறவர்களில் மிக நெருக்கமானவர். குறிப்பாகச் சமூகச்சூழ்நிலையையும் வரலாற்று ஆதாரங்களையும ஒதுக்கிவிடுகிறார். ஏல் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாகப் பேராசிரியராயிருந்தார். புதுத்திறனாய்வின் கொள்கைகளின் விவாதங்களில் இவருக்கு முக்கிய பங்குண்டு. 92 அவருக்கு ஒரு கவிதையின் மூல பாடமே முக்கியத்துவம் வாய்ந்தது. 93 திறனாய்வாளன் கடமை, ஒரு கவிதையை ஆழ ஆராய்ந்து

அதன் நுண்ணிய பண்புகளான வஞ்சப்புகழ்ச்சி, கூரறிவு, முரண்தொடை, பொருள் மயக்கம், உருவகமோதல் என்ற பண்புகளை இனம் காட்ட வேண்டும். அதே போல கவிஞன் எப்படி கவிதையை துல்லியமாக மாற்றி புதுப்புதுப் பொருள்களை உண்டாக்கி மொழியை முரணுரை ஆக்குகிறான் என்பதையும் விளக்க வேண்டும். கவிதை மொழியென்பது ஒரு முரணுரையே ஆகும் என்ற தன் நம்பிக்கையைக் கொள்கையாக்கினார். இதற்குச்சான்று ஜான் கீட்ஸின் கவிதையான 'கிரேக்க புதைகலத்தின் மீது ஒரு கவிப்பாடல்' என்றதைப்பற்றிய அவருடைய திறனாய்வுக்கட்டுரை. ஆனால் அவருடைய காலத்தில் திறனாய்வாளர்களுக்கு அக்கவிதையின் கைப்பிரதி கிடைக்கவில்லை.94 நெருங்கிய மூல பாடத் திறனாய்வை ஒரு சிக்கலான கவிதையில் ஆராய்வதால், திறனாய்வாளர் அதில் பொருள்களைப் பல மட்டங்களில் கண்டுபிடிக்கலாம் என நம்பிக்கையை உடையவர் ப்ரூக்ஸ். எலியட்டைப்போல, ப்ரூக்ஸ் நுண்பொருள் கோட்பாட்டியல் கவிதைகளை ஆராய்ந்து அக்கவிதைகளில் கண்ட தற்புனைவுகள், வஞ்சப்புகழ்ச்சி உணர்வு, போன்றவை பிற கவிதைகளில் திறமையாகக் கையாளப்படவில்லை என்ற கருத்துடையவர். பேராசிரியர் ப்ரூக்ஸின் தாக்கத்தை அமெரிக்கப்பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இலக்கியம் கற்பிக்கும் முறைகளில் காணலாம். அவருடைய புதுத்திறனாய்வுக் கூட்டாளி, ராபர்ட் பென்வாரனுடன் சேர்ந்து கவிதையை புரிந்துகொள்ளவும்,புனைகதைகளைப் புரிந்து கொள்ளவும் (Understanding Poetry 1938. Understanding Fiction 1943) என்ற நூல்களில் காணலாம். நாடகத்தைப் பற்றி இதே தலைப்புள்ள நூலை மற்றொரு பேராசிரியர் ராபர்ட் ஹைலமன் (Robert Heilman) ஒத்துழைப்புடன் 1947-ல் வெளியிட்டார். இவர் கவிதைகளைப் பற்றி எழுதிய நூல்கள் : Modern Poetry and Tradtition (1939) The well - wrought Gau (1947) .என்பன புகழ் பெற்றவை. அவர் அமெரிக்க நாவலாசிரியர்களான எர்னஸ்ட் ஹெமிங்வே (Ernest Hemingway 1898 - 1961) 95 பற்றி கட்டுரைகளும், வில்லியம் ஃபாக்னர் (William Faulkner 1897 - 1962) என்பவரைப் பற்றி இரண்டு

புகழ்பெற்ற நூல்களும் எழுதியிருக்கிறார். இருவரும் நோபல் பரிசு பெற்றவர்கள். அவர் எலியட்டின் 'பாழ்நிலம்' பற்றி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை இன்னும் விவாதிக்கப்படுகிறது.

## ஆலன் டேட் (1899 - 1979)

டேட், ப்ருக்ஸைப்போல ரான்சம் உருவாக்கிய Fugitive என்ற குழுவைச் சேர்ந்தவர். இவரும் வாண்டர் பில்ட் பல்கலைக்கழகத்தில் படித்தவர். ரான்சம் ஆரம்பித்த இதழில் அவருடன் ஒத்துழைத்தவர். அவர் எழுதிய பல கட்டுரைகளும் இந்த இதழிலும் Southern Review, Sewanee Review என்று தெற்கு அமெரிக்காவிலிருந்து வந்த இதழ்களிலும் வெளிவந்தவை. அவர் பல பல்கலைக்கழங்களில் ஆசிரியராகத் தொண்டு செய்தவர். மின்னசோடா பல்கலைகக்கழகத்தில் 'எழுதுவது எப்படி?' என்று அவர் பல ஆண்டுகளாக நடத்திய கருத்தரங்கு அவருக்குப் புகழைத் தேடித் தந்தது. அக்கழகத்தில் 1951 லிருந்து 66 வரை பணி செய்தார். ரான்சம், ராபர்ட் பென் வாரன் அவர்களுடன் சேர்ந்து தெற்கு அமெரிக்க இலக்கிய மறுமலர்ச்சியைத் தொடங்கி வைத்தார். டேட் 20 நூல்களை வெளியிட்டு அவைகளுக்காக பல பரிசுகளும் பெற்றார். அவர் நாட்டிலுள்ள 'புதிய திறனாய்வு' என்ற குழுவின் பணிகளைத் தொடங்கி வைத்ததுமல்லாமல் அமெரிக்க கவிதையில் வஞ்சப்புகழ்ச்சி நடையைப் புகுத்தினார். அவருடைய புகழ் பெற்ற கவிதை Ode to the confederate என்பது, ஆப்ரகாம் லிங்கன் காலத்தில் நடந்த போரில் தன் நாட்டுப்பகுதியில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறார். இது அமெரிக்க இலக்கியக் கவிதைத் தொகுப்பில் ஒவ்வொன்றிலும் இடம் பெறுகிறது. இது அவரை பிரிவினைவாதி என்பதைவிட பழமைவாதி என்றே இனம் கண்டு கொள்ளுகிறது. தெற்கில் பழைய கலாச்சாரம் என்பது தொழிற் கலாச்சாரத்ததால் மறைந்துவிட்டதே என்ற டேட்டின் ஏக்கம் இக்கவிதையில் தொக்கி நிற்கிறது. மற்ற, திறனாய்வுக் குழுக்களை, முக்கியமாக, மார்க்சியவாதிகளையும் புதுமை மனிதப் பண்பாட்டியலைச்சார்ந்த அறிஞர்களையும் மதிப்பீடு செய்கிறார். அவர்களுடைய போதனை முறைகளைக்

குற்றம் கூறுகிறார். கலைப்பற்றார்வத்தையும் கூட. அவர் மொழிநடையில் விற்பன்னராகப் போற்றப்படுகிறார். எலியட்டிற்கும் டேட்டிற்கும் நெருக்கம் உண்டு: அறிவாற்றலில் எலியட்டின் மறைவிற்குப் பின்னர் ஒரு திறனாய்வுக்கட்டுரைத் தொகுதியை தொகுப்பாசிரியர் பணி செய்து அறிஞர்களிடையே புகழ் பெற்ற Sewaneee Review என்ற இலக்கிய இதழின் ஒரு பகுதியாகவே வெளிக்கொணர்ந்தார். இக்கட்டுரைத் தொகுதி எலியட்திறனாய்வில் ஒரு கட்டம். டேட் இறக்கும்பொழுது ஒரு கத்தோலிக்கராக ஆனார். எலியட் தன்னைப்பற்றி வர்ணிக்கும் பொழுது An Anglo Catholic in religion என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதை நினைவு கொள்ளவேண்டும்.96 அவருடைய கட்டுரைத்தொகுதி Reactionary essays on Poetry and Ideas (1936) ஆசிரியர்களில் ஒரு தலைமுறையையே பாதித்தது.

கிளியான்த்ப்ருக்ஸிற்கு ஒரு கவிதை மொழி நடையில் முரண்தொடை என்பது எப்படி இன்றியமையயாததோ அப்படி ஆலன் டேட்டிற்கு இழுப்புவிசை Tension என்ற கொள்கை கவிதையைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமானது. இதை அவருடைய கட்டுரை Tension in Poetry 97 என்பதில் காணலாம். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு ஆங்கிலக் கவிஞர்களான ஆப்ரகாம் கௌலி (Abraham Goweley 1618 - 67) ஜேம்ஸ் தாம்சன் (James Thomson, 1700 - 48) என்பவர்கள் முறையே எழுதிய வெளிச்சத்திற்கு ஒரு புகழ்ப்பாடல் (hymn to light). திராட்சைக்கொடி (The Vine) என்ற கவிதைகளைத் தன் கொள்கையின் மூலம் விளக்குகிறார். பொதுவாக ஒரு கவிதையில் மொழி கையாளப்படும் பொழுது சொல்லின் நேர்ப்பொருளை அல்லது உருவகத்தை நெருங்கும். முதல் பாணியை denotaton அல்லது புறநிலைப் பொருள் என்றும் Connotation அல்லது ஒரு பொருளின் பண்புக் கூறுகளை குறிப்புணர்த்துதல் என்றும் கூறுகிறார். இவ்விரண்டு எல்லைகளுக்கும் நடுவில் உள்ளதுதான் இழுப்புவிசை. ஒரு கவிதையின் உள்ளடக்கம் என்பது இவ்வெல்லைகளுக்குள் தான் இயங்குகிறது, என்று நம்புகிறார். இதை விளக்க வேண்டுமானால்,

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பெரும் அங்கதக்கவிஞரான ஜான் டிரைடன் என்பவர் தன்னுடைய அரசியல் எதிரியான ஒரு கவிஞரை ஏளனம் செய்கிறார்; ("with him to write Poetry is to transprose") அக்கவிஞர் கவிதை எழுத்தும் உத்தியை அம்பலப்படுத்துகிறார். யாப்பிலக்கண விதிகளைப் பயன்படுத்தி அவர் கவிதை எழுதுவதல்ல. உரைநடையைக் கவிதையாக்குகிறார். கவிதை உரைநடையை நெருங்குவதால் புறப்பொருளை புறப்பொருளாகவே குறிக்கிறது இதை denotation என்கிறார் டேட். கவிதை உருவகத்தை நெருங்குவதால் பொருளின் பண்புகளை மறைமுகமாகக் குறிக்கிறது. இதை connotation எனலாம் என்று டேட் கூறுகிறார். கவிதை மொழி இந்த இரண்டு எல்லைக்குள்தான் செயல்படுகிறது என்கிறார் டேட். இக்கொள்கையை விளக்குவதன் பொருட்டுப் பாரதியாரின் 'தாயின் மணிக்கொடி பாரீர், என்ற கவிதையை எடுத்துக் கொள்ளலாம்.

**பல்லவி**

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் ;

**சரணங்கள்**

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரமென்றே
பாங்கி னெழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பரந்தது பாரீர் (தாயின்)

2. பட்டுத் துகிலென லாமா ? அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டுமிகுந்தடித்தாலும் - அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப்படலம்
(தாயின்)

3. இந்திரன் வச்சிர மோர்பால் - அதில்
எங்கள் துருக்க ரிளம் பிறையோர்பால் (தாய்)
மந்திர நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ?
(தாயின்)

4. கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர் - தங்கள்
நல்லுயிரீந்துங் கொடியினைக் காப்பார் (தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும் - இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும் - விற்ற
பைந்திரு வோங்கும் வடிவ முங்காணீர்: (தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுஞ்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர் (தாயின்)

7. கன்னட தொட்டிய ரோடு - போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்
'பொன்னகர்த் தேவர்க ளொப்ப - நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர் (தாயின்)

8. பூதல முற்றிடும் வரையும் - அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும் - பாரில்
மறைவுரும் கீர்த்திகொள் ரஜபுத்ரவீரர் (தாயின்)

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர் - மன்னைப்

பார்த்தன் முதற்பலர் வாழ்ந்த நன்னாட்டார்

துஞ்சும் பொழுதினுந் தாயின் - பதத்

தொண்டு நினைத்திடும் வங்கத்தினேரும்.

(தாயின்)

10. சேர்ந்ததைக் காப்பது காண்பீர் - அவர்

சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க;

தேர்ந்தவர் போற்றும் பரத - நிலத்

தேவி துவஜம் சிறப்புற வாழ்க: (தாயின்) 99

புதுத்திறனாய்வுக் கொள்கையின்படி பாரதியாரின் இக்கவிதையைக் கவிதையாகவே கொள்ள வேண்டும். சூழ்நிலையையும் வரலாற்றையும் மறந்துவிட வேண்டும். ஒரு கவிதை இத்தகைய பின்புலத்தில் தோன்றவில்லை. கவிஞனின் கற்பனையிலிருந்து மட்டும் தோன்றியது என்ற அடிப்படை உண்மையை மறக்கக்கூடாது. ஒது ஒரு சாதாரணக் கவிதையல்ல. கவிதை பாரதியாரின் கற்பனையில் தோன்றியவுடன் எழுத்துருவம் கொண்டதல்ல. கர்நாடக இசைக்கவிஞருக்குத் தெரிந்ததால் பல்லவி, சரணம் என்றுப் பிரித்து சொற்களையும் அவ்வாறே பிரித்து நான்கடிக்குப்பின் தலைப்பைத் திரும்பத்திரும்ப பாடிவிட வேண்டும். ஆனால் மூல பாடத்திறனாய்வின்படி (பின் பிரிவைப் பார்க்கவும்) இது பாட வேண்டிய பாடலில்லை. ஒரு கவிதை ஆதலால் இதைத்திறனாய்வு செய்யலாம். மனம் போனபோக்கிலல்ல. கொள்கை முறைப்படி முக்கியமாக டேட்டின் கொள்கைப்படி பாரதியார் கவிதையின் பின்புலத்தை மறந்து கவிதையை மெட்டின்படி அற்புதமாகப் பாடலாம்என்ற எண்ணம் எழும். பாடினால் கவிதையைப்பற்றிய இலக்கணத்தை மறந்து விடும் வாய்ப்புண்டு. கவிதையைக் கவிதையாகவே திறனாய்வு நோக்கில் படித்தோமானால் டேட்டின் கொள்கைப்படி பல சொற்கள் denotation என்பதை நெருங்குகிறது. connotaion அல்ல. அதன் விளக்கம் சொற்கள் புறப்பொருளைச் சுட்டுகின்றன. சான்றாக 'மணிக்கொடி',

'புகழ்ந்திட', 'கம்பம்', 'உச்சி', 'இந்திரன்', 'வச்சிரம்', 'துருக்கர்', 'இளம்பிறை', 'மாண்பு', 'வல்லவன்', 'வீரர்', 'கூட்டம்', 'நல்லுயிர்', 'கொடி', முதலியன. இப்படியே சொற்களை இக்கொள்கையின்படி வரிசைப்படுத்தினோமானால், கவிதையின் கடைசி வரி வரும்பொழுது விழித்துக்கொள்ளுகிறோம். 'தேவிதுவஜம்', என்ற சொற்றொடர் கவியின் உள்நோக்கத்தைக் காட்டுகிறது. 'துவஜம்' என்பது வடமொழிச் சொல்லானாலும், அது கவிஞனின் கற்பனையிலிருந்து பிறந்தது. 'துவஜம்' என்பது கோயில்களில் நாம் காணும் கொடிக்கம்பம். அது அசாதாரணமான கொடிக்கம்பம் வாசகருக்காக அச்சொல்லின் பொருள் தெரிந்தவுடன் இக்கொடி சாதாரண கொடி அல்ல. தேவி பாரத மாதாவின் கொடி. 100 அக்கொடி பறந்து கொண்டிருக்கும் பொழுது நாட்டின் பல பாகங்களிலிருந்து வீரர்கள் கொடிக்கம்பத்தின் கீழ் குடியிருக்கிறார்கள். அக்கொடியிடம் உரிமை கொண்டாடுபவர் இந்தியத்தாயல்ல, பராசக்தி. புராண மரபில் சக்தி என்பவள் இந்துக்கடவுளெல்லாருக்கும் ஆதிசக்தி. அவள் இல்லையேல், ஆதிசங்கரர் சொற்படி, மும் மூர்த்திகளும் உயிரற்றவர் போல ஆகிவிடுவார்கள். ஆகையால் நாம் கொடியை 'மணிக்கொடி' என்று அழைப்பதன் உள்நோக்கைப் புரிந்து கொள்கிறோம். இக்கொடி வெளிப்பார்வையில் பட்டால் நெய்யப்பட்டது. ஆனால் விலைமதிக்கமுடியாதது. 'சுதந்திரம்' என்பது மாணிக்கங்களாலும் பொன்னாலும் மதிப்பிடக்கூடியதல்ல. இவ்விளக்கம் 'தேவிதுவஜம்' என்பதின் பின்புலம். இதன் உதவியுடன் கவிதையைப் படித்தால் சாதாரண சொற்கள், எளிதில் புரியும்படியான சொற்கள் இப்பொழுது டேட் பயன்படுத்திய connotation என்ற கலைச் சொல்லை நெருங்குகின்றன. டேட் பயன்படுத்தின இரண்டு சொற்களின் இடையேதான் அவருடைய முக்கிய கலைச்சொல் tension பயன்படுகிறது. ஒரு கவிதையின் பொருள்களையெல்லம் இச்சொல் ஒன்றுபடுத்துகிறது. குறிப்பாகப் பாரதியின் கவிதையில் 'தேவி துவஜம்' என்ற சொற்றொடருடன் கவிதையில் உள்ள முக்கிய சொற்களெல்லாம் புறப்பொருளைச் சுட்டிக்காட்டவில்லை. அகப்பொருளைத்தான் விளக்குகின்றன,

ராஜபுத்திரர்கள், மராட்டியர்கள் என்ற சொற்கள் அவர்கள் இந்தியாவில் வாழும் இடத்திலிருந்து வருபவர்கள் மட்டுமல்ல. அவர்கள் ஒரு வீர வரலாற்றையே படைத்தவர்கள். பாரதியார் சமகாலத்தவரை 'கோழைகள்' என்று ஏளனம் செய்வது தெரிந்ததே., அக்கோழைகள் வீரர்களாக மாறினால் என்ன? என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. பராசக்தி போல் நம்பத்தகாத சக்தி கொண்டு எழுந்து ஆங்கிலேயர்களை, அரக்கர்களை அழித்தது போல் நொடிப்பொழுதில் அழித்துவிடுவாள் என்பது உட்பொருள். ஆனால் ஆங்கில ஆட்சிக்கு முடிவு கட்டியது ஒரு அஹிம்சை வீரர் என்பது ஒரு இந்திய வரலாற்று வஞ்சப்புகழ்ச்சி. அவரையும் இனம் கண்டுகொண்டார் பாண்டிச்சேரியில் நாடு கடத்தப்பட்ட கவிஞர். 'வாழ்க நீ எம்மான்' என்ற அற்புத தூர நோக்குக் கவிதையால். இந்தியா பத்திரிகையில் அவ்வுன்னத மனிதனைப் பற்றியே ஒரு கேலிச்சித்திரம், அது தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியானவர் வெள்ளைக்கொடுங்கோலை எதிர்த்தார் என்ற உண்மை வெளிவந்தது. பாரதியார் எழுதிய காந்தி மகானைப் பற்றிய பாடலும் இப்பாடலிலிருந்தும் மறக்கமுடியாத சுதந்திரக்கனவும் ஒரு உண்மையை விளக்குகின்றன. பாரதி ஒரு தீர்க்கதரிசியே: அவன் கனவு தீர்க்கதரிசனம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இவருடைய கட்டுரைகளையெல்லாம் Reactionary Essays on Poetry and Ideas (1936) என்ற தொகுதியில் பார்க்கலாம்.

**ஐவர் வின்டர்ஸ்**

அமெரிக்க எழுத்தாளரான ஐவர் வின்டர்ஸ் என்பவர் கவிஞராகவும் திறனாய்வாளராகவும் புகழடைந்தவர். சகிப்புத் தன்மை குறைவாகவும் பல திறனாய்வுச் சச்சரவுகளில் ஈடுபட்டவராகவும் இருந்ததால் ஆங்கிலத்திறனாய்வாளரான எஃப்.ஆர் .லீவிஸ் என்பவருக்கு நெருக்கமாக வருபவர். மேற்கு அமெரிக்காவிலுள்ள ஸ்டான்போர்டு Stanford பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாக பேராசிரியாராகத் தொண்டாற்றியவர். பல கவிதைத் தொகுதிகளை முக்கியமாக

1940, 1949-ல்வெளியிட்டார். In Offense of Reason என்ற திறனாய்வுக்கட்டுரைத் தொகுதி 1947-ல் வெளிவந்தது, அமெரிக்க இலக்கியத்திறனாய்வு செய்வதில் பெயர் பெற்றவர். In Defense of Reason (1937). Seven Studies in the History of American Obscurantism (1938). The Anatomy of Non-sense 77(1943). The function of Criticism: Problems and Exercises (1957) என்பன புகழைத் தேடித்தந்தன. ரான்சமின் கொள்கைகளை எதிர்ப்பவராயிருந்தாலும், இவர் அமெரிக்க புதுத்திறனாய்வுக் குழுவுடன் இனம் கண்டுகொள்ளப்படுகிறார். இவர்தம் கவிதை மொழியிலுள்ள பகுத்தறிவுத் தன்மை, கவிதையின் கடமை தத்துவ நெறிமுறைகளை விளக்குவது என்ற நம்பிக்கை இக்குழுவிலிருந்து இவரைப் பிரித்துக்காட்டுகின்றன.

ராபர்ட் பென்வாரன்

ராபர்ட் பென்வாரன் என்பவர் புகழ்பெற்ற நாவலாசிரியரும் திறனாய்வாளரும் ஆவர். இவர் தெற்குக் கலாச்சாரத்தில் நம்பிக்கை கொண்ட Fugitives என்ற குழுவைச் சேர்ந்தவர். ப்ரூக்ஸ், டேட்டைப் போல ராம்சாமிற்கு நெருங்கியவர். வண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். 1925-ல் அப்பல்கலைக்கழகத்தில் இளங்கலை (பி.ஏ) மாணவராக இருந்தபொழுது பேராசிரியர் ரான்சமின் திறனாய்வு கொள்கையின் தாக்கத்திற்குள்ளாக்கியவர். தொடக்ககாலத்தில் வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்தில் ஆர்வம் கொண்டு ரான்சமினால் இலக்கியத்திற்குத் திசை திருப்பப்பட்டார். கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும், ரான்சம், ப்ரூக்ஸ் போன்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ரோட்ஸ் அறிஞராகவும் பணியாற்றியவர். ப்ரூக்ஸுடன் சேர்ந்து Understanding Poetry, Understanding Fiction என்ற தொகுதிக்கட்டுரைகளை எழுதி (அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில்) புதிய திறனாய்வுக் கொள்கையில் ஒரு புரட்சியை உண்டு பண்ணினார். என்றாலும், தன் கட்டுரை மூலம் பிளேடோவின் கவிதை பற்றிய கருத்தைத்தான் உண்மையான கவிதை என்று நம்புகின்ற கொள்கையைத்

திறனாய்வு முறையில் ஒப்பிட்டு புகழடைந்தார். இதற்கு ஷேக்ஸ்பியர் காதல் நாடகமான Romeo and Juliet என்றதில் காதலர்கள் சந்திக்கும் பூங்காவனக் காட்சியை (Garden Scene) சான்றாக எடுத்துக்கொள்ளுகிறார். காதலர்கள் தங்களை மறந்து தங்கள் அன்பை அற்புதமான மொழியில் பரிமாறிக் கொண்டிருக்கும் பொழுது, பூங்காவிற்கு வெளியே விகட நோக்கில் கெட்ட வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருக்கிறான் மெர்குஷியோ (Mercutio). இக்காட்சியைத் திறனாய்வு செய்யும் பொழுது, காதலர்களின் அற்புத நவிற்சி மொழியை உணர்வதற்கு மொகுஷியோவின் கீழ்த்தரமான மொழிதான் அடிப்படை என்று வாதாடுகிறார். இதன் அடிப்படையில் கவிதைமொழியின் முக்கியக்கூறு கற்பனையல்ல. மெய்ம்மையே. மெய்ம்மையை பிளேடோ கவிதையிலிருந்து ஒதுக்கியது சரியல்ல என்று வாதாடுகிறார். இவர் தம் நாட்டில் புகழ் பெற்ற வட்டார நாவலாசிரியர். இவருடைய சிறந்த நாவல் All the King's Men 1946 ஒரு அரசியல்வாதியின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகிறது. Brother of Dragons (1953) என்பது ஒரு நீண்ட கதைக்கவிதை; இதன் பின்னணி பல வட்டார அரசியல்வாதிகளின் வாழ்க்கை வரலாறு. The Cave (1959) என்ற கதை காலின்ஸ் எப்படி ஒரு குகையில் வாழ்ந்து மறைந்தார் என்று விவரிக்கிறது. இவருடைய எழுத்துக்களெல்லாம் நாடக பாணியைப் பின்பற்றுவதால் இவர் வாசகர்களால் மிகவும் விரும்பப்பட்டார். வாரன் அமெரிக்க மக்களவை (Congress) என்ற உலகப் புகழ்பெற்ற நூல் நிலையத்திற்குச் சில ஆண்டுகள் ஆலோசகராக இருந்தார். தற்பொழுது புதுத்திறனாய்வை நிறுவியவர்களைவிடப் புகழடைந்து இருக்கிறார்.

### ஆர்.பி. ப்ளாக்மர்

ரிச்சர்ட் பாமர் ப்ளாக்மர் (Richard Palmer Blackmur) என்ற கவிஞரும் திறனாய்வாளரும் இப்புதுத்திறனாய்வுக்குழுவுடன் இனம் கண்டு கொள்ளப்படுகிறார். காரணம், இலக்கிய மொழியை மொழியியல் பார்வையுடன் திறனாய்வு செய்வதே. அவர் தன்னுடைய திறனாய்வுப் போக்கைத் 'தொழில்

நுட்பமுடையது' (technical) என்று வர்ணித்தார். ஏனென்றால் அவருடைய குறி கலைநுணுக்கத்திறம் (techbnique). அது சொற்களைப் பொருத்தும் மொழியியலைப் பொருத்தும் இயங்கும் என்று விளக்கினார். இக்கலைத்திறம் அறிவியல் நோக்கிலும் உணர்ச்சி நோக்கிலும் இயங்கக்கூடியது. பிளாக்மர் தெற்கு அமெரிக்காவைச் சேர்ந்தவரல்ல. அவர் பிறந்த இடம் ஸ்பிரிங் ஃபீல்டு (Spring field). அவர் குறைந்த காலமே வெளிவந்த இலக்கிய ஏடான Hound and Horn ஆசிரியர் குழுவைச் சார்ந்தவர். 1940 முதல் பல ஆண்டுகள் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த ஆராய்ச்சிக்கழகத்தில் பணியாற்றினார். அமெரிக்க நாட்டில் பெருமைக்குரிய குகன் ஹைம் (Gugenheim) கழகத்தில் ஆராய்ச்சிக்காக இருமுறை பணஉதவி பெற்றார். 101 பல சீரிய திறனாய்வுக்கட்டுரைகளை எஸ்ரா பவுண்டு, டி.எஸ்.எலியட், அமெரிக்க கவிஞரான கம்மிங்க்ஸ் (E.E. Gummings) பெரிய நாவலாசிரியர் என்று கருதப்படும் ஹெர்மன் மெல்வில் (Melville herman)102 என்றவர்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அவருடைய கட்டுரைகளை The Double Agent (1935). The Expense of Greatness 1940. Language as Gesture (1952) என்பவைகளில் காணலாம். மற்றொரு கட்டுரைத்தொகுதி A primer of ignorance 1967 அவர் இறந்தபிறகு வெளிவந்தது. அவரது கவிதைத் தொகுதிகளாவன: From Jordan's Delight (1937); The Second World (1942); The Good European (1947).

**குறிப்புக்கள்:-**

1. இத்தொகுதி உலகப்புகழ்பெற்றது. இந்நூல்களெல்லாம் சைவ சித்தாந்த தமிழ் வெளியீடுகள் போல, ஒரு அலமாரியில் அடுக்கிவிடலாம். இதை அமெரிக்கர்கள் the five foot shelf என்று அழைப்பார்கள்.

2. பார்க்க எலியட்டின் கட்டுரைகளை (i) The Humanism of Irwing Babbit (1928) & (ii) T.S. Eliot: Selected Essays. Onndon: Faber and Faber Limited, Revised and Enlarged 1976.

இந்நூலில் உள்ள கட்டுரைகள் எலியட்டினால் தொகுக்கப்பட்டன. சில கட்டுரைகள் அவரால் மறுபரிசீலனை செய்யப்பட்டன. இவ்வதிகாரத்தில் உள்ள எலியட்டின் கொள்கைகள், மேற்கோள்கள் எல்லாம் இந்நூலிலிருந்து எடுக்கப்பட்டன.

3. 'The American Scholar' Fisher et al. ed. American Literature of the Nineteenth century. New Delhi: Eurabia 1970. 45-60.

4. இப்பல்கலைக்கழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'ஆக்ஸ்போர்டு இயக்கம்'. (Oxford Movement) தோன்றியது. பதினேழாம் நூற்றாண்டிலேயே எட்டாவது ஹென்றி அரசர் தன்னுடைய சுய நலத்திற்காக மதத் தலைவர்களுடன் சேர்ந்து போப்பாண்டவரை எதிர்த்து தன் நாட்டை பிராட்டஸ்டன்ட் மதப்பிரிவை தழுவச் செய்தான். . ஆக்ஸ்போர்டு இயக்கம் இவ்வரலாற்றை எதிர்த்து கத்தோலிக்க மதத்திற்கு நாட்டை திசை திருப்ப முயன்றது. இங்குதான் ஒரு தேவலாயத்தில் மூடிய கதவுகளுக்குப் பின்புறம் எலியட் கத்தோலிக்கர் ஆனார் என்று கூறுவர். 1927-ல் அந்நாட்டின் குடிமகனாக ஆனார். அவர் "a royalist in politics. an Anglo-catholic in religion and a classist in literature

5. தமிழ்ப்புதுக்கவிதைகள் 'பாழ்நிலம்' என்பதை பின்பற்றுவதாக ஒரு திறனாய்வுக்கருத்து நிலவுகிறது. இது ஒரு கடினமான கவிதை என்பதற்குக் காரணங்கள் உண்டு. நினைவோடை உத்தி, எலியட் படித்த நூல்களின் நுண்ணிய எதிரொலிகள், அவர் கையாளும் பிரெஞ்சு ஜெர்மானிய, இத்தாலிய வட மொழி வரிகள், முதலான புதுக்கவிஞர்கள் 'பாழ்நில'க் கவிதையைப் பின்பற்றினாலும் வழுக்கள், படைப்புத்துரோகங்கள் (Creative treason) இருக்கின்றனவா என்று ஆராய்வது இன்றியமையாதது.

6. இந்நூற்றாண்டில் அறுபதில் அமெரிக்க இலக்கியம் ஒரு முதுகலைப்பாடமாக நம் பல்கலைக்கழகங்களில் நுழைந்தபொழுது, பழமைவாதிகளான இந்திய ஆங்கிலப்

பேராசிரியர்கள், "அமெரிக்க இலக்கியமா? அப்படி ஒன்று இருக்கிறதா?" என்று ஏளனம் செய்தார்கள். இன்றும் கூட மறைமுகமான அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

7. ஆங்கில நாட்டில் 19ம் நூற்றாண்டு இறுதிவரை கிரேக்க இலத்தின் இலக்கியங்களே செவ்வியல் இலக்கியங்கள் என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. ஆங்கில இலக்கியத்தை இந்நூற்றாண்டு தொடக்ககாலம் வரை பழம்பெரும் பல்கலைக் கழகங்களான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்றவை ஒரு துறையாகக் கருதவில்லை.

8. எலியட்டின் விருப்பப்படி, அவர் வரலாற்றை எவரும் எழுத முடியவில்லை. அவருடைய குடும்பத்தின் அனுமதி இல்லாமல் அவர் தன் வட்டாரத்திலுள்ள ஒரு பெண்ணுடன் காதல் கொண்டு கடிதத் தொடர்பு கொண்டார். இக்கடிதங்கள் மேல் அவர் விருப்பப்படி அவரது சட்ட ஆலோசகர் அக்கடிதக்கட்டில் முத்திரை குத்திவிட்டார். எலியட்டின் உயிலின்படி கி.பி.2000ற்கு பிறகு தான் இம்முத்திரையை உடைக்க வேண்டும்.

8. A. Andrew Marvell மிகவும் எலியட் விரும்பிய கவிஞர். பார்க்க பப. 292-304

9. இக்கட்டுரையின் தாக்கம் பல ஆண்டுகள் நிலவியது. இக்கவிதையைப் பற்றி நூல்களும் தொகுதிகளும் வெளிவந்தன. இப்பொழுது இக்கவிஞர்கள் எதிர் நீச்சல் போட்டது ஒரு மரபாக ஆகிவிட்டது.

10. இந்நூலின் ப. என்பதைப் பார்க்கவும். எலியட் எவ்வளவு ஆழமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதற்கு அவர் எழுதிய 'The Love Song of Alfred Prufrock' என்பதைப் பார்க்கவும். இக்கவிதை காதல் பாட்டல்ல, மரபு வழியில் வஞ்சப்புகழ்ச்சி. நினைவோடை உத்தியில் கதாநாயகன் மறைமுகமாகக் காதல் வயப்பட்டதும் அது பயங்கொள்ளித்தனம் என்பதையும் அற்புதமாக வர்ணிக்கிறார். இப்பாத்திரம் பல வருடங்களில் அவருடைய கவிதைகளில் வருகிறது. எலியட்டைப் படித்து புரிந்து கொள்ளுவதற்கு அமெரிக்கத் திறனாய்வாளரான Grover

Smith Jr. அமெரிக்கத் திறனாய்வு பற்றி எழுதிய ஆழமான விளக்கவுரையும் சிகாகோ பல்கலைக்கழகத்தின் வெளியீடுமான நூலைப் பார்க்கவும்.

11. பார்க்க. 'படிமம்'. மேலை இலக்கியச் சொல்லகராதி. வை. சச்சிதானந்தன். சென்னை: மாக்மில்லன், 1983 இந்நூலிலுள்ள 'படிம இயக்கம்' என்ற குறிப்பையும் பார்க்கவும்.

12. பொதுவாக இக்கட்டுரை முதுகலை ஆங்கில வகுப்புகளில் ஒதுக்கப்படுகிறது. இது எலியட்டின் சிறந்த கட்டுரை. அவருடைய கவிதைக் கருத்துக்களை அலசுகிறார் எலியட்டிற்கும் இத்தாலியக்கவிஞருக்கும் ஒரு ஒற்றுமை. அவர்கள் கத்தோலிக்கப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

13. அந்நாளில் Comedy என்ற சொல்லிற்கு துன்பத்தில் தொடங்கி இன்பத்தில் முடியும் என்ற பொருளுண்டு. தான்தேயின் நீண்ட கவிதை நரகத்தில் ஆரம்பித்து சுவர்க்கத்தில் முடிகிறது. தான்தேயை இவ்வுலகங்களுக்கு அழைத்துச் செல்பவர் வர்ஜிலின் ஆவி.

14. எலியட்டின் தான்தே பற்றிய கட்டுரையில் ஒரு முக்கிய சேர்க்கை அவருடைய குறிப்புகள், சான்றாக, ' கவிதையும் நம்பிக்கையும் பற்றி ' The theory of poetic belief' அல்லது கவிதை நம்பிக்கைக் கொள்கை என்பதில் ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் ஆரம்பித்துவைத்த சர்ச்சையை விவாதிக்கிறார். இந்த நம்பிக்கையை மறப்பது என்பது இந்து வாசகர்களுக்கு அவ்வளவு கடினமாகத் தோன்றாது. வேதங்கள் கூறுகின்றன: ' கடவுள் என்பவர் ஒன்றேதான். ஆனால் ஆழ்ந்த அறிவாளிகள் பலபெயர்களினால் அவரை அழைக்கிறார்கள். இந்த நம்பிக்கையைத் தான் கீதை பறைசாற்றுகிறது.

15. பார்க்க T.S. Eliot. Selected Prose. Ed. John Harf World London: Penguin Books, 1953. இந்நான்கு கட்டுரைகளையும் தன் கட்டுரைத் தொகுதியிலிருந்து ஒதுக்கிவிட்டார். ' ஹாம்லட்' கட்டுரை இத்தொகுதியில் அடங்கியது.

15 அ. R.W. Stallman ed. Critiques and Essays in Criticism. 1920-1948. New York: The Ronald Pressco. 1948.

16. கதாநாயகனான உறாம்லெட் தன் தந்தையான டென்மார்க் அரசரை இழந்து விடுகிறார். தன் விதவைத் தாய் தன்னுடைய சித்தப்பாவை காலதாமதம் இல்லாமல் மணந்து கொண்டது அவனைத் துயரத்தில் ஆழ்த்தியது. அவனுடைய தந்தை ஆவி அவனுக்குத் தன்னைக் கொன்றவன் சித்தப்பாதான். ஆகையால் உறாம்லெட் பழி வாங்கவேண்டும் என்றது. அவனுடைய மனச்சோர்வுக்கு (meloncholy) உண்மையான காரணம் என்ன? அவன் பழி வாங்குவதை ஏன் தள்ளிப் போடுகிறான்? என்ற திறனாய்வுக் கேள்விகள் பல சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டன. இந்நாடகத்தின் மூலபாடத்திறனாய்வும் ஒரு சர்ச்சையே. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப்பதிப்பும் (New cambridge edition by Dover Wilson) புதிய ஆர்டன் (New Arden) பதிப்பும் இச்சர்ச்சைகளைப் புரிந்து கொள்ளப்பயன்படும். இப்பதிவுகளின் முகவுரைகளைக் காண்க.

17. பார்க்க, Milton' I & II. T.S. Eliot: Selected prose. ed. John Harfword London: Penguin Books, 1953. இக்கட்டுரைகள் மேலே குறிப்பிட்ட எலியட்டின் கட்டுரைத் தொகுதியில் இருந்து ஒதுக்கப்பட்டன. கட்டுரைகள் கிளப்பின சர்ச்சைக்குப்பிறகு எலியட் மில்டனைப் பற்றித் தன்னுடைய கருத்துக்களில் கவனம் செலுத்தவில்லை என்று தெரிகிறது. ஆனால் மில்டனைப் பற்றிய திறனாய்வாளர்களின் சிந்தனையைக் கிளப்பினார் என்பதை மறுக்க முடியாது அறிவுச் சூழ்நிலை வேறுபாடுகள் இருந்தாலும் ஒப்பிலக்கிய நோக்கில், அங்கு மில்டனுக்கு நேர்ந்த கதியே இங்குக் கம்பனுக்கு நேர்ந்தது எனலாம்.

18. க்ராம் வெல்லுக்கு இலத்தீன் செயலராக மில்டன் பணி செய்து வந்தார். இப்பணி இலத்தீனிலுள்ள இரகசிய அரசு ஆவணங்களை மொழிபெயர்ப்பதே, துண்டு வெளியீடுகளில் Pamphlets ஐரோப்பாவில் புகழ் பெற்றவர். அவர் வெளியீடுதான் In Defence of Regicide' (மன்னரை கொலை செய்தல்: ஒரு தற்காப்பு விளக்கம்). மில்டன் கட்டுரைகளைப் படிக்கும் பொழுது எலியட்

தன்னை எவ்வாறு இங்கிலாந்தில் அறிமுகம் செய்து கொண்டார் என்பதை மறக்கக்கூடாது: ' a Royalist in politics an Anglo catholic in religion and a classicism in literature. அரசியல், மதம், இலக்கியம், இம் மூன்றிலுமே பழமைவாதிதான்.

19. பார்வை இழந்த மில்டன் 'சுவர்க்க நீக்கம்' முழுவதும் அவர் சொல்ல அவரது மகள்கள் எழுதிக்கொண்டார்கள். மனநிலை இல்லாத பொழுது மறுத்துவிட்டார்கள். இவ்வாறு காப்பியத்தின் பகுதிகள் பலவற்றைத்தாம் இழந்துவிட்டதாக திறனாய்வாளர்கள் நம்புகிறார்கள். மில்டன் எழுதிய On this Blindness' என்ற பதினான்கடி கவிதையும் 'சுவர்க்க நீக்கத்தில்' மூன்றாவது பிரிவில் 'ஒளி' என்பதைப் பற்றிய பலவரிகளும் வாசகர்களைக் கலங்க வைக்கக்கூடியவை.

20. இக்கட்டுரை இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் இலக்கிய ஆராய்ச்சி இதழான Essays and studies என்பதில் 1936-ல் வெளியிடபட்டது.

21. மார்ச் 26ம்தேதி 1947ல் சொற்பொழிவாற்றியது.

22. எலியட் மனதில் கொண்டிருப்பது Life of Milton என்ற ஜான்ஸனின் கட்டுரை. அரசியல் கொள்கைகளில் வேறுபாடு இருந்தாலும் மில்டனை ஜான்சன் மனம் திறந்து விமர்சனம் செய்கிறார். ஷேக்ஸ்பியருக்கும் ஒரு அருமையான கட்டுரை 'Preface to Shakespeare' எழுதியிருக்கிறார். அவர் காலத்தில் செவ்வியல் இலக்கியத்தில் நம்பிக்கை கொண்டிருந்ததால் நாடகாசிரியருக்கு மதிப்பு குறைந்தது. இருந்தாலும் சூழ்நிலையை மீறி, தன் விருப்புகளை ஒதுக்கி வைத்து, மறக்க முடியாத சில திறனாய்வுக் கருத்துக்களை கூறி நாடகாசிரியருக்கு மதிப்புத் தேடுகிறார். சொந்த வெறுப்புகளைக்கடந்து செல்வதால் எலியட் ஜான்சனை மதிக்கிறார். இக்கட்டுரையில் ஜான்சனின் வெறுப்பு கவிஞர் மில்டனுக்கல்ல. மனிதனுக்கு என்று சுட்டிக்காட்டுகிறார். ஜான்சனின் வெறுப்பு எலியட் திறனாய்வில் தளர்வாகத் தெரிகிறது. எலியட் தன்னை 'a royalish in politics' என்று வர்ணித்தார். ஆனால் மில்டன் Anti royalish மன்னர்

ஆட்சியை வெறுப்பவர். எலியட் இக்கருத்தைவிட்டு ஒதுங்கி நிற்கவில்லை. ஜான்சனுடன் பகிர்ந்து கொள்வதில் வெளிப்படை.

23. எலியட்டின் கூற்றுப்படி இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு அவருடைய நாடகங்களை வசன கவிதை நடையில் அமைத்திருக்கிறார். கதைக்கரு கிரேக்க புராணிகத்திலிருந்து எடுக்கப்பட்டு இன்றைய அறிவுச் சூழ்நிலையில் மாற்றியமைக்கப்பட்டது. எனினும் எலியட் கவிதைகள் நாடகங்களை விட உயர்ந்ததாகக் கருதப்படுகின்றன.

23 அ. இவ்வதிகாரத்தில் பேராசிரியர்ப் ப்ளூம் திறனாய்வைப் பார்க்கவும்.

24. டோனல்ட் காலப் Donald Gallup என்பவர் தொகுத்த எலியட்டின் நூற்பட்டியல் தான் இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. T.S. Eliot: A Bibliography Faber and Faber London வெளியீடு. பல தலைப்புகளில் அவருடைய கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. F.H. Bradley என்ற தத்துவஞானியைப்பற்றி எழுதிய Knowledge & Experience என்பதுதான் அவர் உறார்வேர் பல்கலைக்கழகத்திற்கு முனைவர் பட்டத்திற்கு எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை. பட்டத்திற்காகச் சோதனை செய்ய அழைத்த பொழுது, அவர் இங்கிலாந்திலிருந்து தம் தாய்நாடு திரும்ப மறுத்துவிட்டார்:

25. பவுண்ட் திருத்திய 'பாழ்நிலத்தின்' தட்டச்சுப்பிரதியை புகைப்படம் எடுத்து லண்டனிலுள்ள Faber and Faber என்ற வெளியீட்டாளர் பிரசுரம் செய்திருக்கின்றனர். ஓரங்களில் பல குறிப்புகளைப் பேனாவால் பவுண்ட் எழுதியிருக்கிறார். அதில் ஒன்று முதல் 100 வரிகளை நீக்கும் படிக் கூறியிருக்கிறார். அப்பகுதியை (none of this muck) 'அவ்வசுத்தமான பகுதி' வேண்டியதில்லை என்று ஓரத்தில் எழுதியிருக்கிறார். ஆனால் அவர் சொன்ன எல்லாவற்றையும் எலியட் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படிக்கவிதை எழுதுவதில் தனக்கு வழிகாட்டியாயிருந்த பவுண்டை 'பாழ்நிலக்' கவிதையின் மிகச்சிறிய முன்னுரையில் தன் மதிப்பிற்குரிய இத்தாலியப்

பெருங்கவிஞனான தான்தே மொழியைக் கொண்டு பவுண்ட் 'தன்னைவிடப் பெரிய கைவினைஞர்' என்று அர்ப்பணஞ்செய்கிறார். அதே இத்தாலிய மூல வரியைக் கொண்டு தான் தான்தே தன் ஆசானுக்குப் புகழாரம் சூட்டுகிறார்.

26. 'பாழ்நிலம்' என்ற கவிதைக்கு எலியட் எழுதிய அடிக்குறிப்புகளில் பூதலேரின் 'நச்சுப்பூக்கள்' என்ற கவிதையிலிருந்து எதிர்வரிகளைச் சுட்டிக் காண்பிக்கிறார். ஆனால் பிரெஞ்சு மொழியில் இருந்த கோட்பாடுகளுக்கு மொழி பெயர்ப்பு தரவில்லை. பூதலேர்-பாரிஸ் நகரத்திற்கிருந்த உறவு, வெறுப்பும் விருப்பும் கலந்தவை. நகர வாழ்க்கை. இன்பமும் துன்பமும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன என்கிறார். இவருடைய கவிதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பு பெங்குவின் Penguin வெளியீடாக வந்திருக்கிறது. மொழி பெயர்ப்பு மூலத்தை நழுவ விடாமலிருந்தாலும் சிற்சில அழகிய, நுணுக்கமான கவிஞனின் மொழியை மேலோட்டமாகப் பெயர்த்திருக்கிறார்கள். Translation is treason என்பது பழைய பழமொழி. பேராசிரியர் பாலகியன் கருத்துகளைப் பார்க்க: வை. சச்சிதானந்தன் ஒப்பிலக்கியம்: ஓர் அறிமுகம். இரண்டாவது அத்தியாயம். தாக்க ஆய்வு (1) 46வது பக்கத்தொடர்ச்சி.

27. Literary Criticism: A short History p.663.

பவுண்ட் பற்றி மற்ற செய்திகளுக்கும் இப்பக்கத்தைப் பார்க்க. என்னுடைய விளக்கமும் கலந்திருக்கிறது.

28. தமிழில் உள்ள புதுக்கவிதையில் மொழி உரைநடையை நெருங்குகிறது. சந்தம் இவ்விருகூறுகளுக்கும் வேறுபாட்டை உறுதி செய்கிறது. சந்தமின்மையை அங்கதம், கூரறிவு நிரப்புகின்றன.

29. தமிழில் உள்ள புதுக்கவிதையில் மொழி உரைநடையை நெருங்குகிறது. சந்தம் இவ்விருகூறுகளுக்கும் வேறுபாட்டை உறுதி செய்கிறது. சந்தமின்மையை அங்கதம், கூரறிவு நிரப்புகின்றன.

29. சில ஆண்டுகளுக்கு முன் வரை பவுண்டை சீனமொழி தெரிந்தவராக அறிஞர்கள் கருதவில்லை. அவருடைய சிறந்த கவிதைக் கொள்கைகளைக் கொண்டுதான் கருத்து மாற்றம் விளைந்தது. அவருடைய சொந்தக் காப்பியமான Personal spic cantos என்ற கவிதையில் தாம் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் கசப்பான அநுபவங்களைப் படிமமுறையில் விவரிக்கிறார். இதில் சில சொற்கள் சீன மொழியில் உள்ளன. பவுண்டின் துல்லியமான உத்திகளினாலும் பல மொழிகளின் துண்டுக் கோட்பாடுகளினாலும் அவர் ஆங்கில மொழியைக் கையாளுவதாலும் திறனாய்வு விளக்கவுரை கொண்டுதான் படித்து இன்புறவேண்டும். ஜேம்ஸ் ஜாய்ஸின் நினைவோடை நாவல்களைப் போல.

30. American Poetry and Prose, Vol.III, Boston: Houghton Mifflin company, 1960, 226.

31. பார்க்க: பெரியசாமித்தூரன். தொகுப்பாளர். பாரதித் தமிழ்

சென்னை: அமுத நிலையம், 1953.

32. Herbert ed. Speculations Cambridge, 1924.

33. Literary Criticism: A short History, 659-62.

34. Michael Roberts ed. The Faber Book of Modern verse. Third Edition. London: Faber and Faber, 1973.

35. இட நெருக்கடி காரணமாக உருவக இயக்கவிளக்கத்தில் ஆமிலொவல் (Amy Lowell) என்ற அமெரிக்கப் பெண் கவிஞரை சேர்க்கவில்லை. ஒரு காலகட்டத்தில் உருவக இயக்கத்தைத் தனது குடும்பச் செல்வாக்கு காரணமாகப் பவுண்டினிடமிருந்து இயக்கத் தலைமையைப் பறித்துக்கொண்டார். மனம் நொந்த கவிஞர், 'இந்த இயக்கம் இனிமேல் Imagism என்று அழைக்கப்படும் தகுதியை இழந்துவிட்டது. ஏனென்றால் இப்பொழுது இது Amygism. லொவல் அவர்களுடைய அச்சமிக்க ஆளுமையைத் திறனாய்வாளர்கள் that cigar-smoking woman' என்று அழைத்தனர். பல பெயர் பெற்ற எழுத்தாளர்கள் லொவல் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

36. ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் என்ற கல்வி நிலையங்கள் பதினோராம் அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்கள். ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பல கல்லூரிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் தேர்ந்தெடுத்த அறிவாளிகள் தான் இப்பல்கலைக்கழகங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுடைய பெரும் சொத்து அறிவுச் சுதந்திரம். பழமையில் நம்பிக்கை கொண்டிருக்கும் இந்த அறிவு நிலையங்கள் இன்றும் உலகப்புகழுடன் இருக்கின்றன. புதுமையை விரும்பும் பிற்காலத்தில் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட பல்கலைக்கழங்கள் Redbrick Universities என்று அந்நாட்டில் அழைக்கப்டுகின்றன.

37. இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள் இலக்கியத்தோடும் ஆத்மீகத்தோடும் நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும் 'இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி, என்ற விழாவை அரசிற்கு மனநிறைவு அளிக்கும் பொருட்டுப் பல முறைகள் கொண்டாடிக் கருத்தரங்குகளை நடத்தி மகிழ்ச்சியில் திளைத்தாலும் இலக்கியக்கொள்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இருக்கின்றன.

38. ஜெரார்ட் மான்லி ஹாப்ஸின்ஸ் (Jerald Manley Hapkins, 1844-89) என்பவர் ஐயர்லாந்து நாட்டில் பிறந்தவர். கத்தோலிக்க மதத்தைத் தழுவி மதகுருவும் ஆனவர். அவர் கவிதையியலில் செய்த சோதனைகள் அப்பொழுது இருந்த வாசகர்களுக்கும் திறனாய்வாளர்களுக்கும் புரிவது கடினமாக இருந்தது. அவர் இறந்தபிறகு தான் புகழடைந்தார். அவருடைய முதல் கவிதை 'the Wreck of the Deutschland' என்பது ஆங்கிலக்கவிதை வரலாற்றில் ஒரு முக்கிய கட்டம். பழமையை புதுமையாக ஆக்கியது. இது எப்படி ஐந்து கிறித்துவப்பெண் துறவிகள் கப்பல் பிரயாணத்தில் உயிர் துறந்தார்கள் என்று மேலெழுந்தவாரியாக விவரித்தாலும் கிறித்துவிடமிருந்த ஆழ்ந்த நம்பிக்கையையும் பற்றையும் வெளிப்படுத்துகிறது. இது கவிதையிலும் மொழியிலும் சோதனைகள் செய்து இருபதாம் நூற்றாண்டின் கவிதையையே எதிர்நோக்குகிறது.

39. இவ்வகுப்பு திறனாய்வு வரலாற்றில் ஒரு முக்கிய கட்டம். காரணம், திறனாய்வாளர் உணர்ச்சியை ஒதுக்கி, விஞ்ஞானமுறையில் எவ்வகை இலக்கியப் பகுதியையும் ஆராயலாம் என்று வற்புறுத்தியது. மாணவர்களைத் தவிர பல புகழ்பெற்ற திறனாய்வாளர்களும் இவ்வகுப்பில் ரிச்சர்ட்ஸ் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டார்கள் என்பது மரபு.

40. பேராசிரியர் ஹவன் கார்ட்னர் பிற்காலத்தில் எலியட் கவிதைகளைப் பற்றி எழுதிய நூல் அவரை எலியட்டின் சிறந்த திறனாய்வாளர் என்று அறிவுலகம் இனம் கண்டு கொண்டது. அவர் நுண்பொருள் கோட்பாட்டியல் கவிதைகளைத் தொகுத்துத் பல்கலைக்கழக வெளியீடாகத் திறனாய்வு உலகத்திற்கும் அளித்தார். இத்தொகுதிக்கு இக்கவிஞர்கள் பற்றி அவர் எழுதிய முன்னுரை திறனாய்வு வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டம்.

41. இப்பேராசிரியர் எழுதிய The Achievement of T.S. Eliot 1935 ஒவ்வொரு அறிஞரும் படிக்க வேண்டிய நூல். அமெரிக்கத்திறனாய்வு உலகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பல முக்கிய எழுத்தாளர்களைப் பற்றி இவர் எழுதிய அரிய நூல் The American Renaissance என்பது அக்காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியை நிறுவியது.

42. பேராசிரியர் ராஜன் சில காலம் டாக்டர் ராதா கிருஷ்ணன் இந்திய அரசுத்தலைவராக இருந்தபொழுது டில்லி பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார். அவருடைய ஆராய்ச்சிக்கட்டுரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வெளியீடாக வந்த பொழுது அது அவருக்குப் புகழை ஈட்டித்தந்தது. Milton and the Seventeenth century Reader இந்நூலில் அப்பெருங்கவிஞரின் சமகாலத்தவர்கள் எப்படி 'சுவர்க்க நீக்கம்' போன்ற கவிதைகளைப் படித்தார்கள் என்பதுதான் நம்மைக் காலப்போக்கின் வழுவிலிருந்து நீக்கும் என்பதை வற்புறுத்துகிறார். யேட்ஸ் என்ற பெருங்கவிஞருக்கு ஒரு அரிய முன்னுரை எழுதியிருக்கிறார். பின்னர் மில்டனின் கவிதைகளைப்பற்றிப் பல பெரிய கருத்தரங்குகளை நடத்தி அக்கட்டுரைகளை நூல்களாக வெளியிட்டார். இப்பொழுது

கனடா நாட்டின் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் இந்திய வாழ்க்கையைப் பற்றி அங்கத முறையில் ஒரு நாவலும் எழுதியிருக்கிறார். ஒரு அறிஞருடைய நோக்கில்

43. பார்க்க: P.J.M. Robertson. The Leavises on Fiction : An Historic Partnership. London : Macmillan, 1988. இது 1981ல் வெளிவந்தது. இது லீவிஸ் தம்பதிகளின் கூட்டு முயற்சியை முதன்முதலாக ஆராய்ந்த நூல். எனினும் திறனாய்வு நோக்கும் ஆர்வமும் கலந்தது.

44. The Leavises on Fiction. 1-8

45. ஆங்கில இலக்கிய வரலாற்றை நோக்கினால், செவ்வியல் இலக்கியத் தாக்கத்தினால், காப்பியம் உயர்ந்த இலக்கியவகைமையாகக் கருதப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் நாவல் பலரும் விரும்பிப்படித்ததால், நாவல் காப்பியத்தின் மாற்று வகைமையாக மாறியது. இருப்பினும் செவ்வியல் இலக்கியத்திலிருந்த ஈடுபாடு காரணமாக 'நாவல் அறிவு' என்பதை ஒரு பொழுது போக்காகக் கருதினர். இன்று நாவல் காப்பியத்திற்கு ஈடு கொடுப்பதாகத் திறனாய்வாளர்கள் நம்பினர். இவ்வகைமையை Fiction என்று கூறுவதுடன் காப்பியம் போல நாவலும் செய்யுள் நடையில் எழுதப்படுகிறது. லீவிஸின் கவனம் நாவல் இலக்கியத்திற்குத் திரும்பிய பொழுது அவர் எழுதிய சூழ்நிலையில் அது பொழுது போக்கு வகைமையாகக் கருதப்பட்டது. இதன் காரணமாகவே இங்கிலாந்தில் நாவல் திறனாய்வில் தளர்வுகள் காணப்படுகின்றன. பழைய பல்கலைக்கழகங்களில் திறனாய்வு என்பது கல்வி ஒழுக்கப்பயிற்சியாகவே கருதப்படவில்லை.,

46. 'கான்ரேட்' டின் பெற்றோர் போலந்தின் பிறந்து ரஷ்யாவில் குடியேறினார்கள். அரசியல் காரணமாக அவர்கள் வெளியேறிய பொழுது பல ஐரோப்பிய நாடுகளைச் சுற்றி, இறுதியில் இங்கிலாந்தில் குடியேறினார் கான்ரேட். அவரின் நாவல்கள் உருவக முறையைக் கையாள்வதில் பெயர் பெற்றவை. The

Nigger of the Narcissus (1898), Lord Jim 1900 அவருடைய சிறந்த நாவல்கள், சிறுகதைகள் எழுதுவதிலும் வல்லவர்.

47. நாவல் இலக்கியத் திறனாய்வு லீவிஸ் தம்பதிகளின் கூட்டு முயற்சி L.D.Leavis ஆஸ்டினைப் பற்றி மறுபரிசீலனை செய்துவிட்டதால் இந்நூலில் இடம் பெறவில்லை என்ற கருத்து நிலவுகிறது. பார்க்க: The Leavises on Fiction .pp 27-49.

48. ஷாட்டர்லி சீமாட்டியும் தோட்டக்காரனும் காதல் புரி ் காட்சி இங்கு இடம் பெற்றுள்ளது. இதைத் திறனாய்வாளர்கள் 'அநாகரீகமானது' என்று வர்ணித்தார்கள். லாரன்ஸ், பாலுணர்வு என்பது கடவுளின் ஆக்கச் செயல் என்று நம்பினார். இந்நம்பிக்கையில்லாததால் முதல் உலகப் போருக்குப் பின் தோன்றிய ஐரோப்பிய சமூகத்தைப் 'பாழ்நிலம்' என்று வர்ணித்தார் எலியட். லாரன்ஸ் கடைசி நாட்களில் எழுதிய சிறுகதை ஒன்றில் இயேசு புனிதத் தெய்வமானாலும் அவர் முழு மனிதனாக ஆவது எப்படி? என்ற கேள்விக்கு ஒரு காட்சியை வர்ணிக்கிறார். இதன் உண்மை பாலுணர்வுதான் கடவுளின் மைந்தனை முழு மனிதனாக ஆக்கும் என்கிறார். குண்டலினியோகத்திற்கும் இந்த தத்துவத்திற்கும் இணைவரைக்கூறுகள் இருக்கின்றன என்பதை 'ஜெயகாந்தனும் லாரன்சும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை (PH.D) உறுதிப்படுத்துகிறது. அடிப்படைக்கருத்தான காதல் உடலுறவுடன் நிற்பதில்லை. அந்த அநுபவம் தெய்வீகமானது. இந்த சச்சரவை அமெரிக்கத் திறனாய்வு உலகம் கண்டு கொள்ளவே இல்லை. சில வாசகர்கள் இங்கிலாந்தில் மேலே கூறிய நாவலைப்பற்றி வழக்குத் தொடர்ந்த பொழுது, அமெரிக்காவில் அந்நூலை முழுவதும் அச்சிட்டார்கள். ஒரு இலக்கிய நூலை ஒருவர் முழுவதுமாக உணர்ந்து கொள்ள முடியாது. அது வாசகரின் நோக்கத்தைப் பொறுத்தது. பார்க்கவும்: 'Vulgarity in Literature' இக்கட்டுரையை எழுதியவர் புகழ்பெற்ற நாவலாசிரியர். அல்டுஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley).

49. Oliver Twist என்ற நாவலைப் பார்க்கவும் Oliver என்ற அநாதையின் கதையை நகைச்சுவையும் இறுக்கமும் அங்கதமும்

கலந்து வர்ணிக்கிறார். இதில் வரும் Bumble என்பவர் கூடத்தின் மேலாளர். ஒரு மறக்கமுடியாத' பாத்திரம். டிக்கன்ஸ்ஸூம் வறுமையும் அதைத் தொடர்ந்து வரும் இன்னல்களையும் அநுபவத்தவர்.

50. டிக்கன்ஸ் பல நாவல்களை எழுதியவர். அவற்றில் சிலவற்றையே லீவிஸ் dickens, the Novelist என்பதில் ஆராய்கிறார். அவற்றிற்கு பின்னுரைபோல அவர் மனைவி அரிய குறிப்புக்களைச் சேர்க்கிறார்.

51. பார்க்க : (i) Murray Krieger. The New Apoligists for Poetry, University of Minnesota Press : 1956 (ii) R.S. Crane" The Bankruptcy of Critical Monism' or R.S. Crane Critics and Criticism: Ancient and Modrn Chicago: Chicago Unviersity Press, 1915.கிரீகர் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் க்ரேன் சிகாகோ பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர்களாகப் பணியாற்றினார்கள்.

52. ஏற்கனவே கூறியபடி இக்குற்றத்தை நம் நாட்டில் தினத்தாள்களும் வார ஏடுகளும் உறுதிப்படுத்துகின்றன. இவ்விதழ்களில் திறனாய்வாளர் குறுகிய வட்டதிலிருந்தே வருவதால் 'அரசியல்' என்ற விருப்பு, வெறுப்புக்கு உட்பட்டு குறைகள் திறனாய்வின் தற்சார்பற்ற தன்மையைப் போக்கித் தளர்வடையச் செய்திருக்கின்றன.

53. இச்சொற்றொடரை அமெரிக்கத் திறனாய்வாளர்கள் analytical criticism அல்லது நுண்ணிய திறனாய்வு என்று அழைத்தனர்.

54. இது ஜெர்மனிய மொழிச் சொற்றொடர். 'குழந்தைகளின் பூங்கா' என்று பொருள். Kind கிண்ட் (ஒருமை) என்பதற்கு குழந்தை என்று பொருள். Kinder என்பது பன்மை.

55. இந்நூற்றாண்டில் ஐம்பது அல்லது அறுபதுகளில் நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது ரிச்சர்ட்ஸ் பிரிட்டிஷ் கலைக்குழுவின் (The British Council) விருந்தினராக வந்தார்.

அப்பொழுது சிதம்பரம் சென்று தில்லை நடராசர் கோயிலில் அற்புதச் சிலையைப் பார்த்த பிறகு எங்கள் துறையில் ஒரு சொற்பொழிவாற்றினார். சில கேள்விகளுக்குப் பதிலும் சொன்னார். அப்பொழுது கிட்ஸின் வரியை போலிக்கூற்று என்று வர்ணித்தார். இப்பொழுது இருந்த இத்திறனாய்வுப் பிரச்சினை எழுப்பப்படவில்லை. பார்க்க : மேலை இலக்கியச் சொல்லகராதி, 113-116.

56. பார்க்க W.K. Wimsatt. The Verbal Icon: Studies in the Meaning of Poetry. London: Methuen & Co., இது திறனாய்வுக் கொள்கையைப் பற்றிய ஒரு முக்கிய நூல்.

57. Explication என்ற சொல் ஆங்கிலம், பிரெஞ்சு இரு மொழிகளுக்கும் சொந்தம். ஆனால் உச்சரிப்பில் வேறுபாடு உண்டு.

58. இந்த அவலத்தை உருக்கமாக விவரிக்கும் Harriet Beecher Stowe என்ற வெள்ளைப் பெண்மணி எழுதிய Uncle Tom's Cabin என்ற நாவலைப் பார்க்கவும்.

59. லிங்கனின் அதிகாரபூர்வமான வாழ்க்கையைப் பல தொகுதிகளாக எழுதியவர் புகழ் பெற்ற 'சிகாகோகவிஞர்' என்று அழைக்கப்படும் கார்ல் சான்ட்பர்க் Carl sanburg என்பவர்.

60. பேராசிரியர் வண்டர்ஸுக்கும் லீவிஸுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. முக்கியமாக அவர்களுக்குச் சகிப்புத் தன்மை குறைவு. ஆனால் திறனாய்வு விசித்திரப் பாங்கு Critical Eccentricity விண்டர்ஸுக்கு உண்டு. ஆங்கிலத் திறனாய்வாளருக்கு இல்லை. சான்றாக யேட்ஸ் என்ற ஐயர்லாந்து நாட்டுப் பெருங்கவிஞரை அநுமதித்தார் (எலியட்டே யேட்ஸை தன்னை விட உயர்ந்த கவிஞர் என்பதை அநுமதித்தார்). ஒரு சாதாரணக் கவிஞர் என்றார். ஆனால் In Defence of Reason என்ற கட்டுரைத்தொகுதி அவருடைய நுண்ணிய அறிவிற்கு எடுத்துக்காட்டு. அவர்களிருவரும் ஒரே ஆண்டில் குறுகிய இடைவெளியில் இறந்தனர். அவர்களைப் பற்றிய திறனாய்வு மதிப்புரைகள் அமெரிக்காவில் தலைசிறந்த இலக்கிய இதழான

The Sewanee Review என்பதில் ஒரே பதிப்பில் வெளி வந்தது ஊழ்வினையின் வஞ்சப்புகழ்ச்சி எனலாம். இது புதுத்திறனாய்வாளரான ஆலன் டேட் என்பவரின் மேற்பார்வையில் சில காலம் இருந்தது. அவர் எலியட்டைப்பற்றி ஒரு இதழின் தொகுதியைக் கட்டுரைத் தொகுதியாக வெளிட்டார்.

61. பார்க்க: "Introduction - A statement of Principles". Milton R. Stern and Seymour L. Cross Ed. American Literature Survey: The Twentieth Century, 325-332. சில பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் கொள்கை விளக்கத்தில் குழப்பம் இல்லை. இத்தலைப்பில் இந்த அமெரிக்க இலக்கியக் கண்ணோட்டம் நான்காவது பகுதியாக டெல்லியிலிருந்து 1975 இல் வைகிங் அச்சகத்தாரால் வெளியிடப்பட்டது.

62. Martin Goyle et al., ed. Encyclopaedia of Literature and Criticism, Lyndon: Routledge, 1990 , 721 - 735. இது முதன் முதலில் இங்கிலாந்தில் வெளிவந்த அமெரிக்கப்புதுத்திறனாய்வைப் பற்றிய விரிவான கட்டுரை. பல செய்திகளைப் புதுக்கோணத்தில் ஆராய்ந்தாலும், ஆய்வு தற்சார்பற்றதல்ல, பிரிட்டிஷ் பேரரசு ஆதிக்கத்தில் (British Imperialism) உள்ள ஆழ்ந்த நம்பிக்கையினால் ரான்சம், ஆலன் டேட் என்பவர்கள் உதவிச்சம்பளத்துடன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் உயர்தர ஆராய்ச்சியாளர்களாகச் சில ஆண்டுகள் பணி செய்து வந்தனர். ப்ரூக்ஸ் அமெரிக்க தூதரகத்தில் கல்சுரபிஸைஸச்சு (Culturalpattache) இக்கலாச்சாரத் தொடர்பை, ஒப்பு நோக்கில் எவரும் ஆராயவில்லை. இத்தொடர்பில் நம்பிக்கையளவில் 'தாக்கம்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது, ஒப்பிலக்கிய நோக்கில் அல்ல.

63. மேலே உள்ள 61 என்ற குறிப்பைப் பார்க்கவும். இன்றைய நிலையில் ரான்சம், டேட் போன்றவர்கள் இறந்த பொழுது ப்ரூக்ஸ் யேல் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். பென்வாரன், கவிஞர் நாவலாசிரியர், திறனாய்வாளர். இப்பொழுது இக்குழுவிலுள்ள மற்ற உறுப்பினர்களை விடப் புகழ் பெற்றவர். அமெரிக்காவின் பல இலக்கியப் பரிசுகள் இவருக்குக்

கிடைத்தது. உலகத்திலேயே பெரிய நூலகமான Library of Congress வாஷிங்டன் காங்கிரஸ் அவரை எழுத்தாளராகக் கௌரவித்து ஆலோசகராக நியமித்தது.

65. இது ஆப்ரகாம் லிங்கன் அரசியல் தலைவராக இருந்த பொழுது விளைந்த உள்நாட்டுப் போரைக் குறிக்கிறது. லிங்கன் வெற்றியடைந்த 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்', என்ற கருத்தை உறுதிப்படுத்தினார் என்பது வரலாறு.

66. Agrarianism என்ற சொல்லை இக்கட்டுரையில் 'விவசாயம்' என்று மொழி பெயர்த்திருக்கிறேன். நேரடியாக மொழி பெயர்த்தால் அரசியல் கொள்கைக் குழப்பம் உண்டாகும். இவ்விளக்கத்தில் 'தொழில்', 'விவசாயம்' என்ற சொற்கள் எதிர்மறையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. 'விவசாயம்' என்பது அரசியலைவிட அறிவையே நெருங்கி நிற்கின்றது.

67. இப்பதிப்பிலுள்ள அறிக்கையில் இந்நூலின் வாசகர்களைக் கருத்தில் கொண்டு கடைசி இரண்டு பத்திகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கொள்கை அறிக்கையின் பொருளமைப்பைப் பாதிக்கவில்லை.

68. இது உலகத்தின் தலைசிறந்த இலக்கிய ஆராய்ச்சி இதழ் என்று புகழ் பெற்றது. இப்பெயர் தெற்கு அமெரிக்காவிலுள்ள ஒரு நதியைக் குறிப்பிடுகிறது.

69. பார்க்க: John Crowe Ransom: "Criticism Inc. " 20th century Literary criticism A reader. ed. David Lodge. London. Longman, 1972-228-239.

70. தமிழ் வகுப்புகளிலும் அறிவுலகத்திலும் இப்போக்கு திறனாய்வைக் கொள்கை அளவில் ஒரு துறையாக இனம் கண்டு கொள்ளும் வகையில் இருந்தது எனலாம். அதன் விளைவாக அறிஞர்கள், பொருள் விளக்கத்திலும், அடிச்சொல் வரலாற்றிலும் அக்கறை செலுத்தினர். இப்போக்கு தொல்காப்பியத்தையும் பாதித்தது. தொல்காப்பியர் த்ரண தூமாக்கியானார். சொல்லதிகாரத்திற்குள்ள ஒரு பழைய பதிப்பில்

அவ்வதிகாரத்திலுள்ள பல சொற்களும் வட மொழிலிருந்து வந்தவை என்று பதிப்பாசிரியர் வடமொழிச்சொற்களை எடுத்துக்காட்டுகிறார். ஆனால் அத்தொடர்பை விளக்கவில்ல. எந்த வடமொழி அடிப்படைச்சொற்களிலிருந்து தொல்காப்பியர் புதுச்சொற்களை உண்டாக்கினார் என்பதை வடமொழி தெரியாத தமிழ் வாசகர்களுக்கு விட்டுவிட்டார் போலும்.

71. தன்னுடைய திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்பாகிய நூலில் டேவிட் லாட்ஜ் இங்கிலாந்து அறிவுலகில் அமெரிக்கத்திறனாய்வை 'ஒரு தொழிற்சாலை' என்று நகைச்சுவையுடன் குறிப்பிடுகிறது என்கிறார் (ப.228) இந்தப் போக்கு ஆங்கிலத்திறனாய்வாளர்களுக்குக் கொள்கையில் நம்பிக்கை இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இந்நம்பிக்கைதான் ஆராய்ச்சி இழ்களில் திறனாய்வுச் சச்சரவுகள் அமெரிக்காவில் பெருகி வருவதைக் காண்பிக்கிறது. கொள்கை நம்பிக்கைத் திறனாய்வுக் கட்டமைப்பிற்கும் தெளிவிற்கும் அடிக்கல்.

72. ரான்சம் பேராசிரியர் க்ரேனுக்கு அமெரிக்கப் புதுத் திறனாய்விற்கு அடிப்படைக்கொள்கைகள் வகுத்த இக்கட்டுரை அவரை இக்குழுவை எதிர்க்கவே செய்தது. இவருடைய புகழ் வாய்ந்த கட்டுரை The Bankruptcy of critical monism' என்பதில் அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள் குறுகிய நோக்குடையவர்கள் என்கிறார். புதுத்திறனாய்வு பொருளற்றது என்று வெளிப்படையாகக் கூறுகிறார். மேலேயுள்ள 51 என்ற அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

73. இர்விங் பாபிட் (Irrving Babbit) ப்ரௌனல் (W.C. Brownell), பால் எல்மர்மோர் (Paul Elmer more) என்பவர்கள் டி.எஸ். எலியட்டின் ஆசிரியரான பாபிட்டும் எல்மர்மோரும் புகழ் பெற்றவர்கள். அவர்கள் நாட்டில் பொதுவாக இவர்கள் ஒழுக்கமுறைமையில் நம்பிக்கையுடையவர்கள் monalists அற்புதநவிற்சியை எதிர்ப்பவர்கள்.

74. இச்சொற்றொடர் ஆங்கிலத் திறனாய்வாளர் மாத்யூ அர்னல்டைக் (Mathew Arnold) குறிக்கும். அவர் 'உயர் நோக்கு'

என்பது சிறந்த இலக்கியத்தின் பண்புகளில் ஒன்றாகக் கருதினார். ஆனால் அவர் அச்சொற்றொடரை வரையறுக்கவில்லை. ரான்சம் இச்சொற்றொடரைப் போல 'கலை' என்ற சொல்லும் தெளிவின்மை கொண்டது என்று குறிப்பிடுகிறார். அவர் திறனாய்வாளரின் மொழித் தெளிவு, திட்பம் உடையதாக இருக்க வேண்டும் என்று நம்புகிறார். வாசகர்கள் இந்நூலில் முந்திய பகுதியில் உள்ள ஆர்னல்டு திறனாய்வு விளக்கத்தைப் பார்க்கவும்.

75. இச்சொல் உளவியலைக் குறிக்கும். ஒழுக்க உயர்நோக்கு உடையவன் ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால், ஒழுக்கத்திலுள்ள நம்பிக்கையினால் அச்செயல் நியாயமானதா அல்லது அநியாயமானதா என்று உள்ளுணர்வு அல்லது அடிமனம் அச்சுறுத்தி செயலாக்கத்தில் தடை விதிக்கும்.

76. விளக்கத்திற்கு மேலே இலக்கியச் சொல்லகராதி யைப் பார்க்கவும்.

77. பேராசிரியர் ரான்சம் ஆங்கிலப் பேராசிரியர்களைப் பற்றி இங்கு குற்றம் சாட்டி இருப்பதற்கு விளக்கம் தேவை. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலத்துறை புலமையை மதித்தது. திறனாய்வை ஒதுக்கிவிட்டது. புலமை என்ற பெயரில் நம் நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்பு முதுகலை வகுப்பறையில் இலக்கியத்தை பதவுரை, பொழிப்புரை, மூலம் விளக்கியது போல, ஆங்கிலப் பேராசிரியர்கள் அடிச்சொல் வரலாற்றில் காலத்தைக் கிடத்தினர். 'திறனாய்வு' என்பதை இனம் கண்டு கொள்ளவில்லை. ஒரு துறை என்றும் கருதவில்லை. திறனாய்வு ஒரு அறிவுத்துறை என்ற முக்கிய கருத்தை இங்கு ரான்சம் வலியுறுத்துகிறார்.

78. சாசர் (1345-1400) இலக்கிய வரலாற்று வல்லுநர்களால் முதல் ஆங்கிலக் கவிஞர் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்டார். அவர் பயன்படுத்தும் மொழி இன்றுள்ளவர்களுக்குப் புரியாத மத்திய ஆங்கில மொழி (Middle English) என்றாலும் அவருடைய நாகரீகமான மொழி, எவரையும் புண்படச் செய்யாத மெல்லிய

நகைச்சுவை, அவருடைய பரந்த நோக்கு முதலிய பண்புகளால் அவர் உன்னதக் கவிஞராகப் போற்றப்படுகிறார். அவருடைய புகழ்பெற்ற கவிதை The Canterbury Tale (காண்டர்பரிக்கதை) இலண்டன் நகரிலிருந்தது புனித யாத்திரை செல்லுபவர்களைக்கிண்டல் கலந்த நகைச்சுவையுடன் வர்ணிக்கிறது. ஒவ்வொரு யாத்திரிகரும் சொல்லும் கதை பிரயாணம் அலுப்புத்தட்டாமல் இருக்க புத்தக வடிவில் வந்திருக்கிறது. குறிப்பாக, யாத்திரிகர் சொல்லும் கதைகளெல்லாம் வடிக்கப்படவில்லை. முந்திய சிறப்பு ஆங்கில முதுகலை Honours course வகுப்புப்பாட திட்டம் சாசருடன் தொடங்குகிறது. 1345 என்பதில் C1345 என்பது C என்ற சொல்லின் சுருக்கம். பொருள், 'சுமார்' அல்லது ஆங்கிலத்தில்

79. ஆங்கில அற்புத நவிற்சிக்கவிஞர் ஜான்கிட்ஸின் (John keats) புகழ்பெற்ற மேற்கோள்.

80. ( ) இக் குறிகள் பாட மூலத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதால் இச்சொற்கள் ரான்சம் பயன்படுத்தவில்லை; ஆசிரியரே என்பது பொருள். இவ்விவாதத்தை 'நிறுத்திவிடலாம்' என்பது ரான்சமின் கட்டுரையில் தொக்கி நிற்கிறது. அக்கால இலக்கியப் பேராசிரியர்களுக்குத் திறனாய்வில் உள்ள அவநம்பிக்கையைக் கேலி செய்கிறார். அவ்வறிஞர்கள் வரலாற்றியலைத்தான் கொண்டாடினர்.

81. மேலே உள்ள 78வது அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

82. மில்டன் 'சுவர்க்க நீக்கம்' என்ற காப்பியத்தில் சொன்னது போல: It is the mind that mars a hell of heaven and A heaven of hell (Book II)

இது நரகத்தில் கடவுளால் சுவர்க்கத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட சாத்தானின் கூற்று. இந்நரகத்தையும் தன் மனம் சுவர்க்கமாக மாற்றக் கூடும் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான்.

83. 1950-60 வரை ஆங்கில ஆனர்ஸ் வகுப்புகளில் இவ்விரிவான வரலாற்று நூல் இன்றியமையாத நூலாகப்

பயன்பட்டு வந்தது. ஆக்ஸ்போர்டு, பெலிகன் வெளியீட்டாளர்கள் வரலாற்றியலைப் பயன்படுத்தி நூல்கள் வெளியிட்டபொழுது கேம்பிரிட்ஜ் ஆங்கில இலக்கிய வரலாறு பின் தள்ளப்பட்டுள்ளது. இது அறிவு வளர்ச்சிக்குச் சான்று. இம்முறையில் தமிழ் இலக்கிய வரலாறு பின் தங்கியிருப்பது வருந்தத்தக்கது. கொள்கைளைக் கைவிட்டதால், தமிழ் இலக்கிய வரலாறு வழித்துணைப் பணி செய்து கொண்டிருக்கிறது. முதலில் இவ்வரலாற்றைக் கொள்கைகள் மூலமாகவும் பிறகு வரலாற்றியல் நோக்கிலும் எழுதவேண்டும். குறிப்பாகக் கதை சொல்லுதல் (narrative) என்பதை ஒதுக்கவேண்டும்.

84. குறிப்பாக, தமிழ் இலக்கிய அறிஞர்களுக்கு இக்குறிப்புப் பயன் உள்ளது. சான்றாக, பௌத்த மதமும் சமண மதமும் தாக்க நோக்கில் என்ன விளைவுகள் ஏற்படுத்தின என்று ஆராயலாம். அறிஞர். க. கைலாசபதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி.

85. அரிஸ்டாடிலைப் பற்றிய செய்திகளுக்கு இந்நூலின் முதற்பிரிவைப் பார்க்கவும்.

86. ரான்சமின் கொள்கை, ஒப்பிலக்கியம் ஒரு முறையான கல்வித் துறையாக அவர் நாட்டில் வளர்ச்சியடைவதற்கு முன்பு கூறியது. ஆனால் வரலாற்றையும் இலக்கியத்தையும் தொடர்புபடுத்துவதால் ஒப்பிலக்கியத்தைச் சாரும் என்ற உண்மை மறுப்பதற்கில்லை.

87. இவ்வறிவு சார்ந்த முன்னோக்கிற்கு, பார்க்க, "Comparative Literature" வை. சச்சிதானந்தன். மேலை இலக்கியச் சொல்லகராதி, மாக்மில்லன், 1983.

88. எட்மண்டு ஸ்பென்சர் (Edmund Spenser, 1552 - 1599) ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியரைப் போல மூத்த கவிஞர்களில் ஒருவர். சம காலத்தவரும் கூட. ஐயர்லாந்து தொடர்ந்து ஆங்கில ஆதிக்கத்திலிருந்ததால், அதன் அரசியல் பிரச்சனைகள் ஆங்கில இலக்கியத்தில் எதிரொலித்தன. ஸ்பென்சர் ஆங்கில மொழியில் எழுத்துச்சீர்திருத்தத்தைச் செய்து பல இசை

நுணுக்கமுள்ள கவிதைகளை எழுதினார். அவருடைய காவியங்கள் : நாட்டுப்புற வாழ்க்கையை வர்ணிக்கும் The Shepheards Calender 1579 தொடர் உருவகத்திற்குப் பெயர் போன The Fierie Queene என்ற காப்பியம். பதினான்கு அடி பாக்களையும் எழுதுவதில் புகழ் பெற்றவர். ஆங்கிலக் கவிஞர்களால் 'கவிகளுக்கு கவி' என்று பெயர் வாங்கியவர்.

89. தாமஸ் ஹார்டி (Thomas Hardy 1840-1923) ஆங்கில இலக்கியத்தில் புகழ் பெற்ற நாவலாசிரியர்களில் ஒருவர். கவிதை எழுதுவதில் முன்னோக்குடையவர். அவருடைய நாவல்களில் எல்லாம் வாழ்க்கை என்பது துன்பியல் நாடகம் என்ற நம்பிக்கை உடையவர். அவருடைய பெயர் பெற்ற நாவல்களில் மிகச் சிறந்தவை: The Return of the Native '(1878) The Mayor of Casterbridge (1886) Jude the Obscure (1896) என்ற நாவலின் துன்பியல் அளவுக்கு மீறியிருந்தால், வாசகர்கள் எதிர்ப்பிற்காக நாவல் எழுதுவதைக் கைவிட்டார். அவர் கிராமிய வாழ்க்கையைச் சித்திரிப்பது கி. ராஜநாராயணனை நினைவூட்டும்.

90. பேராசிரியர் ரான்சமின் அறிவுரை முக்கியமானது. அவர் பட்டியலிட்ட தலைப்புகள் போலப் பல ஆய்வுகள் ஒப்பிலக்கிய நோக்கில் நம் நாட்டில் நடமாடுகின்றன. 'இணைப்பு' என்ற முக்கியச் சங்கிலி கலைஞருக்கும் வெளிச்செய்திகளுக்கும் அறுந்துவிட்டது போல் தெரிகிறது. இணைப்பு என்பது ஆய்வாளரின் முக்கிய கடமை, வாசகருடையதன்று. ரான்சமின் கட்டுரையில் கடைசி இரண்டு பக்கங்களை ஒதுக்கிவிட்டேன். இக்கட்டுரையில் அடங்கியுள்ள பெரும்பகுதி இன்றைய திறனாய்வு வளர்ச்சிக்கு ஊன்றுகோல். முக்கியமாக, இக்கட்டுரைதான் திறனாய்வு என்பது இலக்கியத்துறையை விட வேறுபட்டது என்ற கொள்கையை உறுதிப்படுத்தியது.

91. இந்நூலில் 'எலியட்' பகுதியைப் பார்க்கவும்.

92. புதுத்திறனாய்வாளர்கள் வரலாற்று நோக்கைக் கைவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு Sewanee Review

ஆராய்ச்சி இதழில் ஒரு புத்தக மதிப்பீட்டைச் செய்யும் பொழுது பதிலளிக்கிறார். ஆனால் அவருடைய அறிவு சார்ந்த பதில் மனநிறைவு தருவதாயில்லை. அவருடைய திறனாய்வுக் கட்டுரைகளிலும் பதிலுக்கு ஆதாரமில்லை என்பது என் கருத்து.

93. புதுத்திறனாய்வாளர்களுடைய கொள்கைகள் நெடுங்கவிதைகளை ஆராய இடம அளிப்பதில்லை. ஸ்டான்லி பிஷ் Stanley Fish என்ற அமெரிக்க மில்டன் திறனாய்வாளர் 'சுவர்க்க நீக்கம்' என்ற காப்பியத்தின் பகுதிகளைத் திறனாய்வு செய்து புதுத்திறனாய்வுக் கொள்கைகள் எவ்வளவு பயனுள்ளது என்பதை மெய்ப்பிக்கிறார். ஆனால் இந் நோக்கு குறுகியது என்பதை மறுப்பதற்கில்லை.

94. இந்நூலில் பார்க்கவும்.

95. ஹெமிங்வே என்பவர் புகழ் பெற்ற நாவலாசிரியர். அவருடைய கதாநாயகர்களின் வீரம், பயமின்மை, சாகசச்செயல் போன்ற பண்புகள் உடையவர் என்று வாசகர்களால் போற்றப்படுபவர். பல அமெரிக்க எழுத்தாளர்களைப் போல, பாரிஸ் நகரத்தில் குடியேறி எழுத்துத் தொண்டு செய்தவர். ஐரோப்பாவில் பல போர்களில் பங்கு கொண்டவர். அவருடைய புகழ் பெற்ற போர் நாவல் For whom the Bell Tolls. ஸ்பெயின் நாட்டில் நடக்கும் காளைமாடுகள் சண்டையை மிகவும் விரும்பியவர். தெற்கு அமெரிக்காவிலுள்ள கடல்களில் மீன் பிடிப்பது அவர் மிகவும் விரும்பிய செயல். அவருடைய சிறியதும் மிகப்புகழ் பெற்றதுமான The Old man and the Sea அவர் இறந்த பின் வெளிவந்த Death in the Afternoon 1970 என்பவைகளை வாசகர்கள் படிக்கலாம். அவருடைய கதாநாயக வீரர்கள் பேச்சில் நம்பிக்கை இல்லை. அவருடைய நடை நம்பத்தகாத எளிமை உடையது. அந்த எளிமை அவரிடம் மறைந்து கிடக்கும் வீரத்தைக் குறிக்கிறது.

96. எலியட்டிற்கும் டேட்டிற்கும் இன்னொரு ஒற்றுமை இருவரும் தான்தே யின் கவிதையான 'தெய்வீக இன்பியலை 'the Divine Comedy' இலட்சியக்கவிதை என்று போற்றுகிறார்கள்.

97. பார்க்க : "Tension in Poetry" Dr. V.S. Seturaman & S. Ramaswami ed. English Critical Tradition: An Anthology of English Literary Criticism Madras : The Macmillan Company of India & Limited, 1978, 374-385.

98. Tension என்ற சொல் Extension, Intension என்ற சொற்களிலிருந்து வெட்டப்பட்டது என்கிறார். அதை 'விசை' என்று இயந்திரகதியாக மொழி பெயர்க்காமல் 'இழுப்புவிசை' என்று மொழிபெயர்த்திருக்கிறேன்.

99. டி.வி.எஸ். மணி & சீனி - விசுவநாதன். பதிப்பாசிரியர்கள். பாரதியார் கவிதைகள். சென்னை : வானவில் பிரசுரம் . 1980-154-155

100. பாரத மாதாவை பங்கிம் சந்திரசட்டர்ஜியின் நாவல் ஆனந்த மடத்தில் முதன் முதலாக 'வந்தே மாதரம்' என்ற புகழ் பெற்ற பாடலில் அவள் பராசக்தியின் அவதாரம் என்று சூளுரைக்கிறார். அவருக்குப் பிறகு பாரதியார் இவ்வுருவகத்தைப் பயன்படுத்துகிறார். இருவரும் பிராமண குலத்தவர். ஆகையால் பராசக்திக்குப் புகழாரம் சூட்டுகிற ஆயிரம் நாமங்களுடைய பராசக்தி என்ற தெய்வத்திற்குத் தொடர்புடைய லலிதா ஸஹஸ்ரநாமம் என்ற வடமொழிக்கவிதையைப் பூசையில் படித்து இன்புற்றனர். இக்கவிதைதான் வங்க இலக்கியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் உள்ள முக்கிய தொடர்பு. பார்க்க: V.Sachithanandan, Endowment Lectures on Tagore, Part II, Annamalai University, 1991.

101. இன்றும் புகழ் பெற்ற, தரமான அறிஞர்கள் அல்லது பல்கலைக்கழக ஆசிரியர்கள் இக்கழகத்தின் உதவிபெற்று நூல் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய இந்திய ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக மான்யக் குழு முக்கிய நூல்கள் எழுதுவதற்குப் பண உதவிசெய்து குகன் ஹைமின் பணஉதவித் திட்டத்தின் படிவம்.

102. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவின் கீழ்க்கடற்கரையோரத்தில் வாழ்ந்த மெல்வில் என்பவர் பெரிய

நாவலாசிரியர் என்று கருதப்படுகிறார். இவருடைய புகழ் பெற்ற நாவல், மொபி டிக் Moby Dick என்பது. மோபி டிக் என்ற ஒரு பெரிய திமிங்கிலத்தை ஏகப் Ahab என்ற கடல் மாலுமி பசிபிக் சமுத்திரத்தில் வேட்டையாடி கடலுக்குள் உயிர்விடுகிறான். திமிங்கலம், இலக்கியத்திலேயே மில்டனின் சாத்தானைப் போல ஒரு பெரிய குறியீடு Symbol என்று திறனாய்வாளர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த நாவலில் கதையும் விளக்கமும் ஒன்றன்பின் ஒன்றாக அதிகாரங்களாகத் தொடர்கின்றன. விளக்கங்கள் கதையம்சத்தில் குறுக்கிடாமல் கப்பல் கடலில் மிதப்பதற்கு அதற்குள் கனமான பொருள்கள் எப்படி கப்பல் மிதப்பதற்கு உதவுகிறதோ, அப்படித்தான் விளக்க அதிகாரங்கள் நாவலிலுள்ள அமைப்பை நிறைவு செய்கிறது என்று திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள். மொபிடிக் ஏகப் ஓ என்ற தனிமனிதனும் கடல் மாலுமியும் என்ற பாத்திரங்களுக்குப் பலவிதமான முரண்பட்ட விளக்கங்களைத் திறனாய்வாளர்கள் அளிக்கிறார்கள். விஷ்ணு புராணத்திலுள்ள மச்சாவதாரம் என்பது மெல்விலுக்குத் தெரிந்த செய்தி என்று குறிப்பிடத்தக்கது.

3. அற்புத நவிற்சித் திறனாய்வு

அற்புத நவிற்சி இயக்கம் இலக்கியத் திறனாய்வில் ஒரு முக்கிய கட்டம். பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கியத்தில் செவ்வியல் தன்மையால் கவிஞர்கள் சுதந்திரமாக மொழியிலும் சிந்தனையிலும் இருக்க முடியவில்லை. செவ்வியல்முறையின்படி ஒரு கவிஞன் தன்னம்பிக்கை கொண்டவனாக இருந்தாலும் தனக்கு முன்னிருந்த ஒரு சிறந்த கவிஞனை மாதிரியாக எடுத்துப் பின்பற்ற வேண்டும். மேலும் அவனுக்குக் கற்பனைத்திறனில் நம்பிக்கையிருக்க முடியாது. அறிவில்தான் இருக்க வேண்டும். இதன்விளைவாக, கவிதைமொழி செயற்கை மொழியாகியது. செவ்வியல் மரபில் உணர்ச்சிக்கு இடமில்லை. அறிவுக்குத்தான். அதனால் கவிதை தன்னுணர்ச்சியின் விளைவாக இருக்கமுடியாது. யாப்பிலக்கணத்தை ஒட்டித்தான் இருக்க வேண்டும். இவ்விதச் செயற்கைத் தன்மை நிறைந்த போப், ட்ரைடன்

முதலியவர்களுடைய கவிதையை gaudiness and inane phrasesology என்று ஆங்கில அற்புத நவிற்சிக்குழுவின் தலைவரான வில்லியம் வேட்ஸ்வொர்த் (William Wordsworth 1770-1850) என்பவர் சாடினார். அவர் சாமுவேல் டெய்லர் கோல்ரிட்ஜ் (Samuel Taylor Coleridge 1772-1834) என்பவரின் கூட்டு முயற்சியால் ஒரு கவிதைத் தொகுதியை (Lyrical Ballads 1798) வெளியிட்டார். அதற்கு ஒரு முக்கிய முன்னுரை (Preface to the Lyrical Ballads) எழுதப்பட்டு முதன்முறையாக அற்புத நவிற்சிக் கவிதைக்கு இலக்கணம் வகுத்தனர். இதன் தாக்கத்தினால் ஒரு குழுவை உருவாக்கினார்கள். ஷெல்லி, கீட்ஸ், பைரன் ஸதி (Southey) போன்றோர் அற்புத நவிற்சி முருகியலில் (Romantic aesthetics) ஒரே மாதிரியான எண்ணம் கொண்டவர்கள் அல்ல. ஷெல்லியும் கீட்ஸும் வேறுபட்டவர்கள். பைரன் முந்திய செவ்வியல் ஆங்கிலகவிஞர்களான ட்ரைடன், போப் போன்றவர்களுடைய கவிதைகள்போல அங்கதக்கவிதைகள் எழுதினார். ஆனால் அற்புத நவிற்சிக் கவிதைகளையும் ஒதுக்கவில்லை. ஸதியை அக்குழுவினரோடு இனம் கண்டு கொண்டாலும், அவருக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

வரலாற்று நோக்கில் 1798 ஐ அற்புத நவிற்சிக் கவிதைக்கு ஆரம்ப காலகட்டமாக இலக்கிய வரலாற்று வல்லுநர்கள் கொண்டாலும், அற்புத நவிற்சிக்குறிகள் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே அவ்விலக்கியத்தில் தோன்ற ஆரம்பித்தன. குறிப்பாக, நாடோடிப்பாடல்கள் (Ballads) வெகுவாகத் தோன்றின. பல மர்மநாவல்களும் திகில் நாவல்களும் எழுதப்பட்டன. இவைகளில் குறிப்பிடத்தக்கவை. The Mysterics of Udolpho (1974) The Castle of Ctranto (1764) போன்ற நாவல்கள் முறையே திருமதி. ஆன் ராட்கிளிஃப் (Mrs. Ann Radchffc. 1764 - 1823) ஹொரஸ்வால்போல் (Horace Walpole 1717-1797) என்பவர்களால் எழுதப்பட்டவை. வாசகர்களால் மிகவும் விரும்பிப் படிக்கப் பட்ட நூல்கள் . அந்நாவல்களுக்கு முன்பே நாடோடிப்பாடல்கள் தொகுப்புகள் தோன்றின. வார்டன் சகோதரர்கள் (Joseph Warton 1722-1800. Thomas Warton 1728-90) செய்த ஆராய்ச்சிக்கும் இதில் தொடர்புண்டு. வால்டர்

ஸ்காட்டின் (Sir Walter Scot 1771-1832) வரலாற்று அற்புத நவிற்சி நாவல்கள் (historical romances) அற்புத நவிற்சி இயக்கத்தை ஊக்குவித்தனர். நாடோடிப்பாடல்களை அமெரிக்க அறிஞர் பேராசிரியர் சைல்ட் (Child) வெளியிட்டிருக்கிறார்.

Lyrical Ballads என்ற கவிதைத் தொகுதியை இருவரும் சேர்ந்து வெளியிட்டாலும், முன்னவரின் முகவுரை கவிதை என்றால் என்ன என்ற கேள்விக்குப் பதிலுரைக்கும் பொழுது ஒரு அடிப்படைப் பிரச்சினையைக் கிளப்பி கோல்ரிட்ஜை மறுப்புத் தெரிவிக்கும்படி செய்துவிட்டது. இவர்களது வாக்குவாதம்தான் அற்புத நவிற்சிக்கவிதையியலுக்குத் தொடக்கம். Preface to the Lyrical Ballads என்ற தன்னுடைய கட்டுரையில் குறிப்பாக ட்ரைடன், போப் என்பவருடைய செயற்கைக்கவிதையை மனதில் கொண்டு தான் ஏன் ஒரு புதிய தொகுதியை வெளியிட்டார் என்பதற்கு விளக்கமளிக்கிறார். மக்களுக்குத் தெரிந்த உண்மையான மொழியைத் தெரிந்தெடுத்து அம்மொழியில் ஒளிந்து புலனுணர்வையும் மகிழ்ச்சியையும் பகுத்தறிவுபூர்வமாக ஊட்ட முயற்சிக்கிறார்" "..............a selection of the real language of men in a state of vivid sensation, that of pleasure and that quantity of pleasure may be imparted, which a poet may naturally endeavour to imaprt ட்ரைடன், போப் போன்ற மூத்த கவிஞர்களைக்கொண்ட பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த ஆங்கில நாட்டுக் கவிதையில் உணர்ச்சிக்கு இடமில்லை. அறிவுக்குத் தான் இருந்தது. செவ்வியல் நோக்கில், கவிஞன் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை என்பதால் மரபை மீற மனதிடமின்மையின் காரணமாக முன்னோடிகளுடைய மொழியையே கையாள்கின்றான், மேலும் அம்மொழி பாமர மக்களை ஒதுக்கிப் படிப்பாளர்களை மனதில்கொண்டு உருவாக்கப்பட்டது. சான்றாக, சந்திரன் என்பதற்கு "Phoebus' என்றும் அதன் ஒளியை 'golden fire' என்னும் உணர்ச்சிக் கவிதையை 'amorous descant' என்றும் புல்வெளியை 'green attire' என்னும் செயற்கைத் தன்மையும் சுற்றி வளைத்த விளக்கமும் கொண்டு கவிதை மொழி இயற்கையாகப் பரிமளிக்காமல் செயற்கைத்தன்மை நிறைந்ததாக இருந்தது. இம்மொழியை

பண்டிதர்மொழி எனலாம். இத்தகைய மொழியில் இயல்பான உணர்ச்சிக்கு இடமில்லை. பின்னர் வேட்ஸ்வொர்த் கவிதை நடைக்கும் உரைநடைக்கும் வேறுபாடே இல்லை என்று வற்புறுத்தியபோதுதான் பிரச்சினை உருவாகியது "..... ..... .... there neither is.one can be any essential difference between the language of prose and material composition"

இக்கொள்கையை இவரே மீறியதாகத் தெரிகிறது. சில கவிதைகளை எளிய நடையில் எழுதியிருந்தாலும், இவருடைய முதிர்ச்சியடைந்த கவிதைகள் 'Tintern Abbey' Ode on the intimation of immortality போலவும் ஆத்ம சுயசரிதையை விளக்கும் 'The prelude' என்ற நெடுங்கவிதையும் சீரிய உயர்நடையிலிருக்கின்றன. எப்பொழுது ஒரு கவிஞன் தன் கொள்கைகளை மீறியோ அல்லது மறந்தோ கவிதை இயற்றினால் அவன் சிறந்த கவிதைகளை எழுதுவான் என்ற இலக்கியத் திறனாய்வாளர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதற்கு வேட்ஸ்வொர்த் ஒரு குறிப்பிட்ட சான்று:

பின்பு இக்கவிதைத் தொகுதியின் நோக்கத்தை முழுவிவரங்களுடன் விவரிக்கிறார். "The principal object proposed with these poems and was to choose incidents and situations from common life. and to was possible in a selection of language really week by men. and at the same time, to throw over them a certain colour imagination where ordinary things should be presented to the mind in an unusual aspect".

இத்தொகுதியின் முக்கிய குறிக்கோள் நிகழ்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் எல்லோருக்கும் உரித்தாகிற வாழ்க்கையிலிருந்து தெரிந்தெடுத்து அதை மக்களெல்லாம் பயன்படுத்தும் மொழியில் வழங்குதல். அப்படிப்பயன்படுத்தும்பொழுது அதைக் கற்பனைக்குக் கீழ்ப்படுத்துதல், அப்படிச்செய்வதால் சாதாரணபொருட்களும் அசாதாரணமாகத் தெரியும். இவ்விவாதத்தில் தான் எடுத்துக்கொண்ட பொருளையும் மொழியையும் கவிஞர் விவரிக்கின்றார். பொருள் எளிய நாட்டுப்புறவாழ்க்கை; காரணம்

இன்றியமையாத உணர்ச்சிகளுக்கு அதுதான் நிலைக்களம். உணர்ச்சிகளும் அவ்விடத்தில் தான் முதிர்ச்சியடைகின்றன. அச்சூழ்நிலையில் மொழி எளிதாவும் குழப்பமில்லாமலும் உருவாகிறது. முக்கியமாக அவ்வுணர்ச்சிகள் அழகானதும் நிலையானதுமான இயற்கையின் வடிவங்களோடு நெருங்கிய தொடர்பு கொள்கின்றன. ஆகையினால் இந்த எளிய மனிதர்களுடைய மொழியே கவிதையில் கையாளப்பட்டிருக்கிறது. இந்த மனிதர்கள் தான் தளர்வுகளிலிருந்து விடுபட்டு வாழ்க்கையில் சிறந்த அம்சங்களுடன் ஈடுபட்டுக்கொண்டுள்ளார்கள். டம்பமான வாழ்க்கையிலிருந்து வெளிவந்த மனிதர்களின் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஒரு எளிமையான அலங்காரமற்றமொழியில் வெளிப்படுத்துகிறது இக்கவிதை தொகுதி. அம்மொழி அகவுணர்வு நிலையிலிருந்தும் முறையான உணர்வுகளிலிருந்தும் தோன்றியிருப்பதால் ஒரு உயர்ந்த தத்துவ மொழியாகவும் நிலையானதாகவும் இருக்கிறது. இது பரம்பரை கவிதை மொழியைவிட மேலானது.

எளிய வாழ்க்கை, எளியமொழி ஆகியவைகளுடைய முக்கியத்துவத்தை விவரித்தபிறகு வேட்ஸ்வொர்த் அற்புத நவிற்சிக்கவிதையைப் பற்றி இன்றியமையாத கொள்கையை வரையறுக்கிறார். "For all good poetry is the spontaneous overflow of powerful feelings ......" இக்கூற்றுதான் அற்புத நவிற்சிக் கவிதையின் தத்துவத்திற்கு அடிகோலியது. செவ்வியல் கவிதையியலைப் பின்பற்றிய ட்ரைடன், போப் போன்றவர்கள் அறிவைத்தான் போற்றினார்கள். உணர்ச்சியை அல்ல. அகத்தூண்டுதலில் வேட்ஸ்வொர்த் போன்றோருக்கு ஆழ்ந்த நம்பிக்கையிருந்தது. இவ்வகைத்தூண்டுதலில் ஒரு தெய்வீக நம்பிக்கை ஹோமர், வர்ஜில், மில்டன் போன்ற காப்பியக்கவிஞர்களுக்கு இருந்து வந்தது. அக்கவிதை தேவதையின் ஆசீர்வாதத்தை வேண்டி 'Sing Heavenly Muse' என்ற ஒரு சுய நம்பிக்கையை உண்டாக்கிவிட்டது. கவிதை உணர்ச்சி பகுத்தறிவிக்கு அப்பாற்பட்டது என்ற எண்ணம் மேலை இலக்கியத்தில் ஒரு கொள்கையாக உருவெடுத்துவிட்டது.

நம்நாட்டில் ஒரு புராணமாக மாறிவிட்டது. ஆகையினால் காளிதாசன், கம்பன், பாரதி போன்றவர்கள் வரகவிகள் என்று கூறுப்படுகிறார்கள். மாறாக இவ்வகத்தூண்டுதலை உளவியல் நோக்கிலும் ஆராயலாம். வெல்லக் கூறியதுபோல ஒரு கவிஞன் அல்லது இசைஞானி எப்பொழுதும் எழுதுவதோ பாடுவதோ இல்லை. ஷில்லூர் என்ற புகழ் பெற்ற எழுத்தாளர் அழுகிய ஆப்பிள் பக்கத்திலிருந்தால்தான் எழுதுவாராம். புகழ் பெற்ற பிரெஞ்சு நாட்டு நாவல் ஆசிரியர் பல்ஸாக் என்பவர் நாவல் எழுதுவதற்கு முன் ஒரு நீள் அங்கியைத் தரித்துக்கொள்வாராம். இதிலிருந்து எழுத்தாளன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் எழுதமுடியும் என்று தெரிகிறது. அச்சூழ்நிலை ஒரு மனநிலையை ஏற்படுத்துகிறது. அதுதான் எழுத்தின் தோற்றம். வேட்ஸ்வொர்த்தின் சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட மனச்சூழ்நிலை. அதை "emotion recollected in tranqauility" என்று சொல்லுகிறார். இவ்விரண்டு ஆங்கில மேற்கோள்களையும் ஒன்று சேர்த்தால் தான் அவர் கவிதையை எப்படி எழுதுகிறார் என்பது புரியும். ஒரு அமைதியான நிலையில் மனக்கிளர்ச்சியை நினைவுபடுத்தவேண்டும் என்று முன்னே கூறியது அக்கவிஞரின் முதல் நியதி. அப்பொழுது கவிதை உணர்ச்சி பொங்கி கவிதையாக வடிகிறது. மனக்கிளர்ச்சியை நினைவுபடுத்துவது ஒரு ரம்மியமான சூழ்நிலை. சான்றாக, ஒரு நாள் மாலைவேளையில் தான் வாழ்ந்த Grasmere என்ற இடத்திற்கு அருகாமையில் உள்ள ஏரிக்கரைக்கு உல்லாசமாக நடந்து செல்லுகிறார். கரையோரத்தில் Daffodoil என்ற அழகான மலர் மண்டிக்கிடக்கிறது. அக்காட்சியில் மனதைப் பறிகொடுக்கிறார். பிறகு இல்லத்திற்கு திரும்பிப் படுக்கைக்குச் செல்லுகிறார். அப்பொழுது தூங்காமல் தான் ஏரிக்கரையில் கண்ட காட்சியை நினைவுப்படுத்திப்பார்க்கிறார். கீழ்க்கண்ட கவிதை உருவெடுக்கிறது.

For oft. when on a couch I lie

In vacantor in pensive mood.

They flash upon the inward eye

which is the bliss of solitude;

And then my heart with pleasure fills

And dances with the daffodoils

வேட்ஸ்வொர்த், கீட்ஸ் (Keats, 1795-1821) என்ற கவிஞர்கள் இருவருக்கும் கவிதையியலில் நெருங்கிய தொடர்பு உண்டு. கீட்ஸ் மூத்த கவிஞரான வேட்ஸ்வொர்த்தை Egostitical sublime என்று விவரித்தார். கவிஞனிடம் நான் என்ற முனைப்பு வளர்கிறது. அந்த முனைப்பு வேட்ஸ்வொத்திடம் மிகச்சிறப்பு வாய்ந்தது என்கிறார் கீட்ஸ். அற்புத நவிற்சிக் கவிதையியல் வேட்ஸ்வொர்த் ஒரு இலட்சியக்கவிஞர் எனபொருள்படுத்துகிறார். இந்த ego என்ற முனைப்புதான் வேட்ஸ்வொர்த்தினுடைய கவிதை இலக்கணம் இரண்டு பிரிவுகளாக அமைந்தது. (i) Spontaneous overflow of powerful feelings; (ii) emotion recollected intranquillity" இவ்விலக்கணத்திற்குச் சிறந்த சான்று மேலே மேற்கோள் காண்பித்த கவிதை.

வேட்ஸ்வொர்த்துக்கு அடுத்தபடியாக அற்புத நவிற்சிக்குழு கவிஞர் ஷெல்லி (1792-1822) அவரைவிட இளவயதில் இறந்தவர் கீட்ஸ் (1795-1821). முன்னவர் அகாலமாக இறந்தார். பின்னவர் எலும்புருக்கி நோயினால் இறந்தார். இம்மூவருமே அற்புத நவிற்சிக் கவிதையியல் நோக்கில் நெருங்கியவர்கள். இறந்தவர்களும் கூட ஷெல்லியும் வேட்ஸ்வொர்த் போன்று உணர்ச்சியில் நம்பிக்கை கொண்டவர். அவருடைய தன்னுணர்ச்சிப் பாடல்கள் அகத்தூண்டுதலால் இயற்றப்பட்டவை என்று பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை நம்பப்பட்டு வந்தது. சான்றாக அந்நூற்றாண்டில் ஷெல்லியின் சிறந்த திறனாய்வாளர் என்று பெயர்பெற்ற திருமதி.ஆர் (Mrs.Orr) என்ற அறிஞர் ஷெல்லியின் கவிதை அற்புத நவிற்சிக்கவிதைகளின் உருப்படிவம் என்று கருதிய காலத்தில் 'a fine act of a song' என்று விவரித்தார். உணர்ச்சி பீறிக்கொண்டு வந்த கவிதைதான் ஷெல்லியின் கவிதை. இதன் உள்ளார்த்தம் இக்கவிதையில்

கட்டமைப்பு செயற்கையாக இல்லை என்பது பொருள். இன்றைய திறனாய்வாளர்க்ள் இக்கருத்தை மறுக்கிறார்கள். மூலபாடத்திறனாய்வு (Textual Criticism) வளர்ந்த இந்நாட்களில் ஓர் எழுத்தாளனைப்பற்றி ஆராயும் வல்லுநர் முதன்முதலில் அவனுடைய கைப்பிரதிகளைச் சோதித்துப்பார்க்கிறார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலும் (Bodleian Library) அமெரிக்க கலிபோர்னியா (california) வில் உள்ள (Huntington Libray) என்ற நிலையத்திலும் திரட்டி வைக்கப்பட்ட ஷெல்லியின் கைப்பிரதிகளைச் சோதித்தபிறகு பழமையான திறனாய்வு நம்பிக்கை கைவிடப்பட்டது. இவ்வேடுகளில் எழுதப்பட்ட பாடல்களுக்கும் வெளியிடப்பட்ட அதே பாடல்களுக்கும் வேற்றுமை இருக்கிறது. குறிப்பாக 'வரையறுக்கப்பட்ட பாக்கள் இடம் மாறியிருக்கின்றன. அச்சில் வெளியிடுவதற்கு முன்பு பாக்களை ஷெல்லி மாற்றி வைத்துக் கவிதை இயல்பாகவே இயங்கும் நிலை என்ற தோற்றமளித்திருக்கிறார். இது ரெனெவெல்லக் வரையறுக்கும் 'Creative Process' என்ற சொற்றொடரை உறுதிப்படுத்துகிறது. ஒரு எழுத்தாளரின் ஆக்கல் வழிமுறை என்பது அவர் நூல் எழுதத் தொடங்கியதிலிருந்து அச்சடிக்கும்வரை. இம்முறை அவருடைய திருத்தங்களையும் தன்னுள்ளடக்கியது.

ஷெல்லியைவிட கீட்ஸ் இக்காலத்திறனாய்வாளர்களால் மிகவும் மதிக்கப்படுபவர். முன்னவருடைய கவிதையியலை அவர்கட்டுரை 'DEFENCE OF POETRY' என்பதில் பார்க்கலாம். பின்னவருடைய இயலை அவருடைய கடிதங்களில் அற்புதமாக விளக்கி இருப்பதைக் காணலாம். கீட்ஸின் சொல்லாட்சியை அவருடைய கவிதைகளிலும் கடிதங்களிலும் பார்க்கலாம். ஷெல்லியின்பால் மதிப்பு இக்காலத்திலும் குறைந்து விட்டது என்று தன்னிரக்கம் நிறைந்த கவிதைகளை எழுதுவதால் திறனாய்வாளர்கள் மதிப்பதில்லை. கீட்ஸ் கவிதையியலுக்கு கொடுக்கும் சிறந்த விளக்கங்களால் அவருடைய மதிப்பு உயர்ந்திருக்கிறது. மாறாக பிளேடோ, தாந்தே என்ற கவிஞர்களுடைய மொழிபெயர்ப்பாளராக ஷெல்லி இன்று திகழ்கிறார்.

வ.ரா. தன்னுடைய மகாகவி பாரதியார் சரித்திரம் என்ற வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நூலில் அக்கவிஞரின் மனத்திலிருந்து எப்படி தன்னுணர்ச்சிப் பாடல் தோன்றுகிறது என்று இன்றிமையாத விவரங்களை அளிக்கிறார். பாரதிக்குக் கவிதை தோன்றுவதற்கு மனநிலை பக்குவமாயிருந்தால் முதலில் ஒரு கர்நாடக ராகத்தைப் பாடுவார். அப்பொழுது அவருடைய உடம்பு பல கோணங்களில் வளையும். பிறகு தலையை நிமிர்த்தி மார்பை உயர்த்தி ஆலாபனை ஸஸ்ஸ-ஸஸஸ என்று தனது இடது காலில் தாளம் போடுவார். தாளம் தவறிவிட்டால் பொறுமையின்மையால் தனது இடது காலினால் தரையை உதைப்பார். மறுபடியும் இராகத்தை முணுமுணுப்பார். தாயுமானவருடைய கவிதையில் ஒரு அடியை எடுத்துக் கூறுவார். உடனே அவருடைய கவிதை பீறிட்டு எழும்.

இவ்விதம் ஒரு பெண்ணைப் போல கவிஞன் பிரசவவேதனை அடைவதைத் தான் கீட்ஸ் negative capability என்ற உன்னதமான சொற்றொடரை உண்டாக்கினார். கவிதையியற்றல் என்பது ஒரு பெண்தன்மை. ஒரு பெண் எப்படி ஒரு ஆணின் சக்தியை ஈர்த்துக்கொண்டு ஒரு உயிரை உண்டாக்குகிறாளோ அதே மாதிரிதான் கவிஞன் தன்னுடைய கற்பனைச் சக்தியைக் கொண்டு உலகத்தின் அழகுப் பொருள்களை உட்கொண்டு கவிதையாக வெளிப்படுத்துகிறான். கீட்ஸின் கொள்கை "A thing of beauty is a joy forever' என்று ஆரம்பத்தில் அவருடைய நெடுங்கவிதை 'Endymion' என்பதில் குறிப்பிட்ட ஆங்கிலச்சொல் 'Conception' என்பதற்கு இரண்டு பொருள்கள், எண்ணங்கொள்ளுதல், கருத்தரித்தல் ; கவிதையியற்றுதல் என்பது கருத்தரித்தலைப்போல வேதனையும், மகிழ்ச்சியும் இரண்டறக்கலந்தவை. பிள்ளைபெறும் பெண்ணுக்கும் கவிதையியற்றும் கவிஞனுக்கும் உணர்வுகள் ஒன்றே; படைப்பு வழிமுறை அற்புத நவிற்சிக் கவிதையியலால் ஒரு உன்னதநிலையை அடைந்துவிட்டது. ஆனால் 'Romanticism அல்லது 'Romantic' என்ற சொல் மிகச்சிக்கலானது. மேலைநாட்டு அறிஞர்கள் ரிமாக், பேர், ஃபுர்ஸ்ட், பெக்கிகம் முதலியவர்கள் எழுதிய புலமைசார்ந்த கட்டுரைகளைப்

படிக்கும்போது 'அற்புத நவிற்சி' என்ற சொல்லிற்கு தனிச்சிறப்புப் பண்புகள் உண்டு. சான்றாக, பேராசிரியர் ரிமாக் எழுதிய 'Western Romanticism" என்ற கட்டுரையில் அற்புத நவிற்சி இயக்கம் ஐரோப்பிய இலக்கியங்களில் வெகுவாகப் பரவியிருந்தாலும் அதன் குணங்கள் நேர்மாறானவை என்கிறார். ஆகையினால் இன்றைய நாளில் 'Romanticism' மிகச்சிக்கலானது, அதை வரையறுக்க முயன்றால், ஒப்பு நோக்கில் 'Classicism' என்பது அவ்வளவு சிக்கலானதல்ல. இதன் விளைவு 'Romantic' என்ற சொல்லை வரையறுத்த பிறகுதான் திறனாய்வு செய்யவேண்டும் என்பது ஒரு நியதியாகவே ஆகிவிட்டது.

வேட்ஸ்வொர்த்தின் கூட்டாளியான கோல்ரிட்ஜ் இன்று ஆங்கிலத் திறனாய்வாளர்களில் அவர் நாட்டிலேயே தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். ஆயினும் இவருடைய திறனாய்வு ஒப்பிலக்கிய வாதிகளான வெல்லக், ஓர்ஸினி இடையே ஒரு சர்ச்சைக்குரிய பொருளாகிவிட்டார். ப்ராய்டு, யூங் ஆகியவர்களுக்குப் பிறகு இற்றைய நூற்றாண்டில் உளவியல் வெகுவாக வளர்ந்திருக்கிறது. கோல்ரிட்ஜின் முக்கிய கவிதைகளான 'The Ancinet Mariner', 'Christable', 'Kublakhan' என்பவைகளை உளவியல் நோக்கில் கவிதை எப்படி உருவாகிறது என்பதைப்பல சிறந்த திறனாய்வாளர்கள் அலசியிருக்கிறார்கள். 'The Ancient Mariner' என்ற கவிதை இயற்கைக்கு மீறிய நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் அடங்கியது. கவிதையின் பல கூறுகள் கனவுலகத்தைச் சார்ந்தது போல் தோன்றுகிறது. 'Kublankhan' என்ற கவிதை, ஆசிரியரின் கூற்றுப்படி அபினி சில துணுக்குகள் சாப்பிட்ட பிறகு வெளிவந்தது. இந்த மயக்க மருந்தின் காரணமாக ஒரு கனவில் ஒரு கவிதையை எழுதியாதாகவும், கனவுகலைந்தபிறகு முழுக்கவிதை தெளிவாக நினைவிருந்தால் தான் எழுதுகோலை எடுத்து எழுதியதாகவும் துரதிஷ்டவசமாக யாரோ ஒருவர் தன்னை அழைத்ததினால் எழுதியது தவிர மற்ற வரிகளை மறந்து விட்டதாகவும் கூறுகிறார். இவ்விதம் பூர்த்தியடையாத கவிதைதான் 'Kulblakhan' என்ற 'Christable' என்ற கவிதை நிகழ்ச்சி. உண்மை நிகழ்ச்சி என்றாலும் மந்திரவாதம்

அடங்கியது. அதன் முக்கிய நிகழ்ச்சியை 'A sight to dream not to tell' என்று கவிஞர் விவரிக்கிறார். J.L. Lowes என்ற அமெரிக்க அறிஞர் அவர் ஆராய்ச்சி செய்த இலக்கிய உளவியல் (Literary detection) The Road to Xanadu: A study in the ways of the imagination. என்ற நூலில் கோல்ரிட்ஜுக்குக் கவிதை இயற்றும் திறன் மிக அதிகமாக இருக்கும் காலத்தில் (1797 - 1798) ஒரு நாட்குறிப்பில் சேகரித்த தகவல்களும் சொற்றொடர்களும் தான் மேலே குறிப்பிட்ட மூன்று கவிதைகளும் உருவாவதற்குக் காரணம் என்று ஆதாரபூர்வமாகக் கூறுகிறார். அவருடைய நூல் கோல்ரிட்ஜ் திறனாய்விலேயே ஒரு முக்கிய கட்டம். "The Ancinet Mariner', Kubla Khan' என்ற இரு கவிதைகளும் அவருடைய அடிமன ஆக்கச் செயலுக்குச் சிறந்த சான்றுகளாகச் திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள். காரணம், அவர் அபினி தின்னும் பழக்கமுடைய-வராதலால் 'Kubla Khan' அடிமனக் கற்பனைப் படைப்பாற்றலுக்கு ஒரு அரிய சாதனை எனக் கொள்ளலாம்.

இது ஒரு பிரச்சனையைக் கிளப்பிவிட்டது. அபினி பழக்கத்திற்கும் படைப்பாற்றலுக்கும் தொடர்பு உண்டா என்று. இது பற்றித் திறனாய்வாளர்களிடம் ஒருமித்த கருத்தில்லை. லிவிங்ஸ்டன் லோஸ் கலைநோக்கில் 'The Ancient Mariner' 'Kublakhan' லிருந்து பிரிக்கிறார். பிந்திய கவிதை அபினி பழக்கத்தினால் உண்டாகியது என்கிறார். ஆனால் இன்னொரு அமெரிக்கத் திறனாய்வாளர் ஆப்ரம்ஸ் (M.H.Abrams) என்பவர் Milk of Paradise (1934) என்ற நூலில் அபின் பழக்கமுடைய மற்ற கவிஞர்கள் டிகுயின்ஸி (Dequincey) கிராப் (Crabbe) பிரான்ஸிஸ் தாம்சன் (Francies Thompson) கோல்ரிட்ஜ் உடன் ஒப்புமை செய்து முக்கியமாக ஒளி, நிறம், அடக்குமுறை, பேரச்சம் போன்ற உருவகங்கள் அபினி பழக்கத்தினால் தூண்டப்பட்ட கனவுகளால்தான் உண்டாக்கப்பட்டவை என்கிறார். R.C..Bald "Coleridege and The Ancient Mariner" (nineteenth Centrury Studies) 1940) என்ற கட்டுரையில் கோல்ரிட்ஜினுடைய கனவுகள், பகற்கனவுகள், அபின் பழக்கத்தால் தூண்டப்பட்டவை அல்ல என்று கூறுகிறார். இலக்கியத் திறனாய்வாளர்கள் இலக்கிய ஆக்கத்திற்கும் அபின் பழக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி

உறுதியான கருத்தைத் தெரிவிக்கவில்லையென்றாலும் மனஇயலிலும் இலக்கியத்திலும் ஆர்வம் கொண்ட சில அமெரிக்க அறிஞர்கள் இக்களத்தில் புகுந்தனர். எலிசபெத் ஷ்நைடர் (Elizabeth Schneider) என்பவர் மருத்துவத் துறையிலும் ஆர்வம் கொண்டவர். அவர் தன் ஆராய்ச்சிக் கட்டுரையான 'The dream of kubla khan' என்பதை அமெரிக்காவின் தலைசிறந்த இலக்கிய இதழான publication of he Modern Language Association (PMLA) என்பதில் வெளியிட்டார் (1945). அவர் கூற்றுப்படி அபினி பழக்கம் உள்ளவர்கள் கனவுகள் காண்பது இயல்பு. அப்பழக்கம் பகற்கனவுகளைக்கூடத் தூண்டிவிடும். ஆனால் கவிதைகளில் வரும் பலவகைப்பட்ட கனவுகளிலும் அபினின் சாயல் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். மறுபடியும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியவர் அலெதியா ஹைனர் (Alathea Haynor) என்ற அமெரிக்கப் பெண்மணி. அவர் Opium, and the Romantic Imagination ( 1968) என்ற நூலில் அபின் பழக்கமும் கவிதை இயற்றலும் என்ற தலைப்பை அலசி ஆராய்ந்து . ஆப்ரம்ஸ் ஹைனர் வகுத்த எல்லைகளுக்கு இடையே இக்கேள்விக்கு பதில் பொருத்தலாம் என்கிறார். ஆனால் அபினி ஆக்கத்தூண்டுதல் செய்யாது என்று கூறுகிறார். அதன்படி அபினி பழக்கமுடைய கவிஞன் கனவுகள் காண்பான். ஆனால் இப்பழக்கம் கவிதை ஆற்றலைத் தூண்டாது என்பது தான் முடிவு. இவ்வறிவு சார்ந்த விவாதத்தில் பாரதியையும் தொடர்புபடுத்தலாம். அவருடைய அபினி பழக்கத்தால் தான் தன்னையறியாமல் மதம்பிடித்த திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானைக்கு உணவு கொடுத்துத் துன்பியல் மரணமடைந்தார் என்பது தெளிவு, அரவுதியா ஹைனர் அபினிப்பழக்கம் ஆக்கத் தூண்டுதல் செய்யாது என்று உறுதியாகக் கூறினாலும், ஒப்பிலக்கிய நோக்கில் 'The Ancinet Mariner:, Kubla khan', Christable' போன்ற கவிதைகளைப் பாரதியாரின் 'குயில்பாட்டு', 'ஞானரதம்' போன்ற படைப்புக்களுடன் ஆராய்ந்தால் படைப்பு என்பதைப் பற்றிப் பல அரிய செய்திகளைப் தெரிந்து கொள்ளலாம்.

ஆங்கில இலக்கிய உலகில் கோல்ரிட்ஜ் ஒரு சிறந்த இடத்திலிருந்தாலும் அவருடைய திறனாய்வாக எதிர்வாதத்திற்கு உரிய பொருளாகிவிட்டது. அவருடைய நண்பரான வேட்ஸ்வொர்த்துடன் 1798ல் அவர் ஜெர்மனிக்குச் சென்றார். வேட்ஸ்வொர்த் சொற்பகாலம் இருந்துவிட்டு தாய்நாட்டிற்குத் திரும்பிவிட்டாலும், கோல்ரிட்ஜ் பின் தங்கி ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொண்டு அதன் இலக்கியத்தையும் தத்துவத்தையும் படிப்பதில் மகிழ்ந்தார். இக்காலத்தில் தான் அந்நாட்டில் ஒரு அறிவுப்புரட்சியே நடந்தது. கான்ட் போன்ற தத்துவஞானிகளும் கதே போன்ற இலக்கிய மேதைகளும் தோன்றினர். புதிய இலக்கியக் கொள்கைகளும் உண்டாயின். அதனால் பாதிக்கப்ட்ட கோல்ரிட்ஜ் அவருடைய நீண்ட திறனாய்வுக் கட்டுரையான Biographia Literia (1817) என்பதிலும் அவர் ஷேக்ஸ்பியரின் மீது ஆற்றிய சொற்பொழிவுகளிலும் (Lectures on Shakespeare (1818) சில புதிய திறனாய்வுக் கொள்கைகளை வெளிப்படுத்துகிறார். பொதுவாக, திறனாய்வு உலகத்தில் ஜெர்மன் அறிஞர்களான கான்ட், ஸ்க்லேஜெல் உடன்பிறப்புகள் (Schlegels ) ஷில்லர் என்பவர்களின் எண்ணங்களைத்தான் எதிரொலிக்கிறார் என்ற கருத்து பரவலாக இருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆங்கில எழுத்தாளர் டிக்வின்ஸி (De Quency. 1785 - 1859) கோல்ரிட்ஜ் ஜெர்மனியிலிருந்து பல கருத்துக்களை கடன் வாங்கினார் என்றார். இற்றை நூற்றாண்டில் ஒப்பிலக்கிய அறிஞர்களான ஓர்ஸினிவெல்லி போன்றவர்கள் அவர் கருத்துக்களை மட்டுமின்றி சொற்றொடர்களையே கையாண்டார் என்றார்கள். இதற்கு ஆங்கில நாட்டின் பெயர் பெற்ற திறனாய்வாளர் ஹெர்பர்ட் ரீட் (Herbert Read. 1983-1968) பதிலிறுத்தார். ஆனால் அவருக்கு ஓர்ஸினி வெல்லக் போன்று ஜெர்மன் மொழி தெரியாது. பிறகு நார்மன் ஃப்ரூமன் (Norman Fruman) என்ற அமெரிக்கத்திறனாய்வாளர். Coleridge. The Demaged Archangel (1971) என்ற நூலை எழுதிக் கோல்ரிட்ஜ் கடன் வாங்கிய பத்திகளையும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் அடிக்குறிப்புகளில் சேர்த்தார். இந்தச் சர்ச்சை நம் நாட்டிலுள்ள ஒன்று எனலாம். திறனாய்வாளர்கள் ஒரு

பெரிய அறிஞர் ஒருவரைப் பற்றி அவதூறுகளைக் கிளப்பி மகிழும் மஞ்சள் பத்திரிகையாளனுக்குச் சமமானவர்கள் என்று கருதக்கூடாது. இன்றைய மேலைநாட்டுத் திறனாய்வாளர் ஒரு எழுத்தாளனைப் பற்றிக் கசப்பான உண்மைகளையும் அறிய அவனுடைய அறிவினால் தூண்டப்படுகிறார். ஒரு எழுத்தாளனின் தளர்வுகளையும் ஆற்றல்களையும் சீர்தூக்கிப் பார்த்ததல்தான் அவனுடைய முழுமையும் (மனிதனும் எழுத்தாளனும் அவர்களுக்குள்ள தொடர்பு) புரிந்து கொள்ளலாம். மேலே கூறியவற்றிலிருந்து கோல்ரிட்ஜ் 'இலக்கியத்திருடு' என்ற குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். கவிதையியற் கொள்கைப்படி, இது குற்றமல்ல. அது எழுத்தாளனின் பரிமாண வளர்ச்சியின் முதல் கட்டம். செவ்வியல் மரபுப்படி, ஒரு கவிஞன் தன் முன்னோடிகளில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரது கலையைப் பயின்று அவர்போலச் செய்ய ஊக்குவிக்கப்படுகிறான். பொதுவாக, இளம் எழுத்தாளன் முன்னோடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை மாதிரியாகக்கொண்டு தன்னுடைய கலையை வளர்க்கிறான். பின்பு முதிர்ச்சியடைந்த பிறகு அவரை ஒதுக்கிவிட்டுச் சுதந்திரமாக வளர்கிறான். இந்நோக்கில் கோல்ரிட்ஜ் ஒரு முதிர்ந்த திறனாய்வாளர். வரலாற்று பூர்வமாக, அவர் ஐரோப்பிய அற்புத நவிற்சி இயக்கத்திற்கும் தன்னாட்டு இயக்கத்திற்கும் பாலமாக அமைந்தவர். ஒப்பிலக்கிய மொழியில் அவரை இந்த இரண்டு கலாச்சாரங்களுக்கும் இடையீட்டாளராகக் (intermediary) கொள்ளலாம்.

கோல்ரிட்ஜ் தன் நெருங்கி நண்பர் வேட்ஸ்வொர்த்தைப் போல் கவிதைக்கற்பனையில் நம்பிக்கை உள்ளவர். ஆனால் அவர் ஒரு சிறந்த அறிஞர். தத்துவஞானத்தில் திளைத்தவர். வாழ்க்கையில் பல இன்னல்களை அநுபவித்தவர். வறுமையில் வாடியவர். ஏழைச் சிறுவனாக இலண்டனிலுள்ள 'Christ Hospital' பள்ளியில் உதவித் தொகை பெற்றுப் படித்து வந்தார். கட்டுரையாசிரியராக இருந்த சார்ல்ஸ் லாம்ப் (Charles Lamb, 1775-1834) என்பவரும் அப்பள்ளியின் மாணவர். அவர் புகழ் பெற்ற கட்டுரையான Christ Hospital five and Thirty Years Ago என்பதில்

'That inspired charity boy' என்று கோலிரிட்ஜினுடைய அறிவை வர்ணிக்கிறார். தான் காதல் செய்த பெண்ணை இழந்ததால் அவருடைய (கோல்ரிட்ஜ்) மணவாழ்க்கை கசப்பானது. அவருடைய அறிவுத்திறன்தான் அவரைக்காப்பாற்றியது. அவர் நுண்பொருட் கோட்பாட்டிலும் (metaphysics) தத்துவத்திலும் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருந்தார். அவர் அறிவாளியாக இருந்தாலும் இலட்சியக் கோட்பாட்டில் நம்பிக்கை உள்ளவராக இருந்தார். அவர் எல்லோருக்கும் சரிசமமான ஆற்றலும் எல்லோருக்கும் சமமான வலிமைகளும் உள்ள Pantisocracy என்ற கூட்டமைப்பில் நம்பிக்கை கொண்டு, அமெரிக்காவில் உள்ள ஒரு நதிக்கரையில் இந்த இலட்சிய அமைப்பை நிறுவவேண்டும் என்ற கனவு கண்டவர். அவர் நுண்பொருட் கோட்பாட்டியலில் அளவு கடந்த ஆர்வம் கொண்டிருந்தாலும் தத்துவக்கொள்கைகளை ஊன்றிப் படித்தமையினாலும் இன்னல்களை அனுபவித்ததாலும் முன்பு அவருடைய கவிதை ஊற்று வரண்டு விட்டது என்ற ஒரு திறனாய்வு நம்பிக்கை இருந்தது. அவருடைய இறுதிக்கவிதை 'Ode to Dejection' என்பதைச் சான்றாகக் கூறுவர். அதைக் கவிதையாற்றலுக்கே கோல்ரிட்ஜின் பிரியா விடை என்று திறனாய்வாளர்கள் விவரித்தனர். ஆனால் அந்தக் கவிதைச் சான்று ஒன்றையே கொண்டு இன்றைய திறனாய்வாளர்கள் இவ்வுண்மையை மறுக்கின்றனர். ஏனென்றால் அக்கவிதை மொழியாக்கத்திலும் கற்பனையிலும் உணர்ச்சியிலும் ஒரு சிறந்த கவிதை. இவ்வுன்மையை மறுப்பது கடினம். அவருக்கு உடல்நலமின்மையாலும் அபினிப் பழக்கத்தினாலும் தத்துவக் கொள்கைகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் ஆர்வத்தினால் கவிதையிலுள்ள இயற்கையான பிடிப்பு தளர்ந்து விட்டாலும் அவர் சிறந்த கவிதைகளையே எழுதினார். எக்கச்சக்கமாக ஒருவர் படித்தலை 'Cormorant reading' என்று ஆங்கிலத்தில் சொல்லுவர். Cormorant என்ற பறவைக்கு அசுரப்பசி போல் கோல்ரிட்ஜுக்கு அறிவுப்பசி இருந்தது. வேட்ஸ்வொர்த்தைப்போல இயற்கையாக எழும் உணர்ச்சிகளில் நம்பிக்கையிருந்தாலும் ஒருமுகவாழ்வு (Unity of life) என்ற கொள்கையை உடையவர் கோல்ரிட்ஜ்.

1803ல் தாமஸ் வெட்ஜ்வுட் (Thomas Wedgewood) என்ற நண்பருக்கு எழுதிய கடிதத்தில் எப்படி இந்த மனித உலகத்தைவிட்டுப் பிரிந்து ஒரு மலையின் மீது தனியே ஏறிச்செல்லும் பொழுது இந்த பிரபஞ்ச வாழ்க்கையையே அனுபவித்ததாகக் கூறுகிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனி வாழ்க்கை இருக்கிறது. ஆனால் எல்லோருடைய வாழ்க்கையும் ஒன்றே. எல்லா மனிதர்களுக்கும் இந்த அற்புத முழுமை வாழ்வில் பங்குண்டு என்ற கருத்துக்களைத் தெரிவித்தவர், கோல்ரிட்ஜிற்கு இந்தியச்சமயத்திலும் தொடர்பு உண்டு. தெல்வல் (Thalwall) என்ற நண்பருக்கு எழுதிய கடிதத்தில் தூக்கத்திற்கும் இறப்பிற்கும் உள்ள குறுகிய இடைவெளியைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார். "...like the Indian Vishnu to float about along an infinite ocean cradled inthe flower of lotus and wake one in a million years for a few minutes". இதை உளவியல் வல்லுநர்கள் 'death wish' என்பார்கள். கோல்ரிட்ஜ் ஆங்கில நாட்டின் தலைசிறந்த திறனாய்வாளர்; தத்துவஞானியும் கூட. அவருடைய கருத்துக்கோவை பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தத்துவஞானிகளான லாக் (Locke, 1632-1704) ஹியூம் (Hume, 1711-76) போன்றவர்களின் கொள்கையான associationism அல்லது necessitarianism என்றதை எதிர்த்தனர். பொதுவாக, இவர்களுக்கு மனித உலகத்திற்கு அப்பாற்பட்ட மறை உலகத்தில் நம்பிக்கையில்லை. மனிதன் தன்னுடைய புலன்களால் உணர்ந்த உலகமே உண்மை உலகம். எளிதில் உள்ளத்தில் பதிவதுதான் உண்மை என்று நம்பவேண்டும் என்றார்கள். லாக்கினுடைய தத்துவக்கொள்கை விளக்கும் 'Essay concerning Human understanding (1690) ஆங்கில நாட்டின் எழுத்தாளர்களைத் தாக்கத்திற்குள்ளாக்கியது. இக்கட்டுரை மனிதனுடைய அறிவை (knowledge) ஆராய்கிறது. அறிவுத்திறனால் தான் இவ்வுலகத்தைப் புரிந்து கொள்ளமுடியும் என்று லாக் வலியுறுத்தினர். உள்ளார்ந்த எண்ணங்களைத் தள்ளி விட்டுச் செயல்முறையில் நம்பிக்கையுள்ளவர். உலகத்திலுள்ள பொருட்களைப் புரிந்து கொள்ளுவதுதான் எண்ணங்கள் (ideas) என்றார். எண்ணங்களின் தோற்றுவாய்தான் அனுபவம். ஆகையால் அனுபவம் என்பது

நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைக் கூர்மையுடன் நோக்குதல். அறிவு என்பது எண்ணங்களை அனுமதிப்பதோ மறுப்பதோ ஆகும்.

லாக்கின் தத்துவம் கவிதையின் உள்ளத்தூண்டுதலை மறுக்கிறது. இவ்வெளி உலகமே உண்மை. மறைந்துகிடப்பனவெல்லாம் பொய் என்று வலியுறுத்துகிறது. முயற்சி திருவினையாக்கும் என்பது பழமொழி. மனித முயற்சியால் அறிவைப் பூரணமாக அடையமுடியாது. சான்றாகத் தலைசிறந்த விஞ்ஞானியான ஐஸக் நியூட்டனை எடுத்துக் கொள்வோம். அவன் எப்படி இழுப்புச்சக்தியை (gravitational power) கண்டுபிடித்தான் என்பது ஒரு மரபுக்கதை. ஆப்பிள் மரத்தடியில் அமாந்திருந்தபொழுது பழங்கள் மரத்தினின்று தரையை நோக்கி விழுவதைப் பார்த்து இச்சக்தியை உணர்ந்தான். இக்கண்டுபிடிப்பு அவன் அறிவின் விளைவு அல்ல. உள்ளுணர்வேதான். ஆங்கிலத்தில் ஒரு நகைச்சுவை அடங்கிய பழமொழி உண்டு. A genius is ninety nine percent perspiration, one percent inspiration,. perspiration என்பது முயற்சியைத்தான் குறிக்கும். மனித முழுமுயற்சியால் மறைந்து கிடக்கும் உண்மையை, கனிப்பொருளில் தாங்கள் மறைந்து கிடப்பதுபோல், உள்ளுணர்வு (intuition) தான் கண்டுபிடிக்க உதவும். இதற்குத்தான் கருத்துவழிமுறை (thought process) என்று சொல்லுவது. அறிவு மட்டும் இருந்தால் இயற்கையின் முழுஉண்மையைப் புரிந்து கொள்ளமுடியாது. உள்ளுணர்வும் வேண்டும்.

டேவிட் ஹியூம் (1711-76) என்பவர் மனித இயற்கை பற்றியும் ஒழுக்கமுறைமை, அரசியல் ஆகியவைகளைப் பற்றியும் பல கட்டுரைகளை எழுதியவர். அவைகளைப் பிரெஞ்சுமொழியில் பெயர்த்ததால்தான் ஐரோப்பாவிலும் புகழ் அடைந்தார். சமத்துவம் என்பது இயற்கையினால் உண்டானதல்ல என்ற கொள்கையுடையவர். பாரதியும் இதுபோன்ற கொள்கையுடையவர். சான்றாக ஒரு தந்தையின் குழந்தைகளெல்லாம் சமமானநிலையை அடைந்துவிட முடியாது.

இது இயற்கையின் நியதியல்ல ஒரு குழந்தை அறிவாளியாகவும் மற்றொரு குழந்தை மந்தமாகவும் இருக்கலாம் என்கிறார் பாரதி. கோல்ரிட்ஜும் வேட்ஸ்வொர்த்தும் அவர்கள் காலத்தில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியில் நம்பிக்கையுள்ளவர்கள். இப்புரட்சியின் அடிப்படையே liberty, equality and fraternity என்பது. இவ்வரசியல் கொள்கைகளே குடியரசு ஆட்சிக்கு வித்திட்டன. பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தை இக்கவிஞர்களிடம் காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டு ஆங்கிலத் தத்துவஞானிகளை 'associationism' என்ற தத்துவக்கொள்கையுடன் தொடர்புபடுத்தலாம். இக்கொள்கைக்குத் தத்துவத்திலும் உளவியலிலும் பரிணாமவளர்ச்சியிலும் முக்கியத்துவம் உண்டு. இக்கலைச்சொல்லை முதன்முதலில் தன்னுடைய 'Essay on Human Understanding' என்ற கட்டுரையில் ஜான் லாக் (John Locke 1632-1764) என்பவர் கையாண்டிருக்கிறார். இவர் ஆராய்ச்சி மனத்தத்துவத்தின் (Analytical Philosophy of mind) நிறுவனர். மனத்தின் எண்ணவோட்டத்தைப் பற்றிப் பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியவர்கள் கூறியிருக்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில்தான் ஆங்கில நாட்டில் அறிவுலகத்தினால் இனம் கண்டு கொள்ளப்பட்டது. டேவிட் ஹியூம் (A treatise on Human Nature. 1939-40) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையில் ஒரு மென்மையான ஆற்றல் (a gentle force) எண்ணங்களைச் சேர்க்கிறது என்று குறிப்பிட்டார். இந்த முறையினால் தான் எளிய எண்ணங்களும் சிக்கலான எண்ணங்களாக மாறுகின்றன என்றார். அடுத்த ஆங்கிலத் தத்துவஞானி டேவிட் ஹார்ட்லி (David Hartley) தன்னுடைய Observations on Man (1749) என்ற நூலில் ஹியூமின் கொள்கையை விரிவாக்கம் செய்தார். இவருடைய விளக்கம் உளவியலையும் நியூடனின் (Newton) இயற்பியலைச் சார்ந்தது. அவர் மனித மூளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் அதிர்வுகள் (vibrations) உண்டாகின்றன. இவ்வதிர்வுகள் ஒரே சமயத்திலோ அல்லது அலைஅலையாக உண்டாகின்ற உணர்வுகளால் (sensation) தாக்கப்பட்டால் அவ்வதிர்வுகள் ஒன்று சேர்ந்த எண்ணவோட்டங்களாகின்றன

என்றார். இத்தொடர்புகள் இரண்டு வகைப்படும். இவை ஒன்றை ஒன்று ஒட்டிவரும் அல்லது திரும்பத்திரும்ப வரும். இத்தொடர்புகளால் எண்ணங்கள் ஒரு வேலையாகவோ அல்லது ஒன்று கூடியோவிடும். இப்படி எண்ணங்கள் பலவகையாக ஒன்றுசேரும் பொழுது பிரிப்பது கடினம். பதினெட்டாம் நூற்றாண்டின் தத்துவஞானிகளில் ஹார்ட்லி, கோல்ரிட்ஜைக் கவர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலேகண்ட மனித எண்ணத்தின் பல கருத்துக்களையும் ஜேம்ஸ்மில் (James Mill. 1773-1836) என்ற அறிஞர் தன்னுடைய வடிவமைதிக்கொள்கையால் (theory of configuration) தெளிவுபடுத்தினார். இது 1829ல் வெளி வந்தது. மனித எண்ணங்களெல்லாம் தனித்தனி எண்ணங்கள். இவ்வெண்ணெணங்கள் வடிவமைதி மூலம் ஒரே சமயத்திலோ அல்லது ஒன்றன் பின் ஒன்றாகவோ அமைதி காண்கின்றன என்று குறிப்பிட்டார். இப்படிவருவது எல்லா எண்ணங்களையும் சாரும் என்றார். எண்ணங்கள் தனித்தனியாக வருவதில்லை. வடிவமைதியாகவே வருகின்றன என்று திட்டவட்டமாகக் கூறினார். அவர்தான் இக்கலையை விஞ்ஞானத்தோடு சேர்த்தார். இதில் அவருடைய கொள்கையை மறுத்த மகனுக்கும் பங்குண்டு.

வில்லியம் ஜேம்ஸ் (William James. 1842-1910) என்ற தத்துவஞானி இவ்விவாதத்தில் கலந்துகொண்டு நினைவோடை (stream of consciousness) என்ற கலைச்சொல்லை உண்டாக்கியது மல்லாமல் மனித எண்ணத்தைப்பற்றிய அறிவு வளர்ச்சியை விஞ்ஞானத்தின் ஒரு கூறாகச் செயலாக்கம் செய்தார். இவர் ஒப்பற்ற அமெரிக்காவின் நாவலாசிரியரான ஹென்றிஜேம்ஸ் (Henry James. 1843-1916) என்பவரின் உடன்பிறப்பு. முதன் முதலாக எழுதிய Principles of Psychology (1890) என்ற நூலின் ஆசிரியர். இந்நூலில் எண்ணங்களின் சீரான அமைப்பு மூளையினால் முடிவு செய்யப்படுகின்றது என்று கூறினார். மூளையின் தாக்கத்தை "cerebral ideas" என்றார். அவருடைய இன்னொரு முக்கிய நூல் The Varieties of Religious Experience எண்ணவோட்டத்தை 'assoiciation of ideas' என்று பதினெட்டாம்

நூற்றாண்டில் கூறினர். வில்லியம் ஜேம்ஸ் திட்டவட்டமான கருத்துக்களைக்கூறி அவ்வறிஞர்களின் போலி விஞ்ஞானத்தை அஞ்ஞானமாக்கினார். எண்ணங்களின் தொடர்பு ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல மனதின் செயல் என்று கூறினார். அது தன்னியலானது அல்லது தானாகவே உண்டாவது.

வில்லியம் ஜேம்ஸ் எண்ணவோட்டத்தைப் பற்றி விஞ்ஞான பூர்வமாக விளக்கத்தைக் கொடுத்ததுதான் நினைவோடை நாவலுக்கு இலக்கியத்தில் அடிகோலியது. ஆனால் கலைநோக்கில் அறிவுபூர்வமாக ஒரு இலட்சிய நினைவோடை நாவல் இன்னும் தமிழில் வரவில்லை. லா.ச. இராமாமிர்தத்தின் அபிதா என்ற நாவல் நினைவோடை நாவல் என்று இலக்கியத்திறனாய்வாளர்கள் உரிமை கொண்டாடுவர். அபிதா வெளிவருவதற்கு முன்பே தலைசிறந்த நினைவோடை நாவல்கள் அமெரிக்க இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் வெளிவந்திருக்கின்றன. ஜாய்ஸின் (Joyce, 1882-1941) Ulysses, Finnergan's Wake, வர்ஜூனியா உல்ஃபின் (Virginia Woolf, 1882-1941) Mrs. Dalloway, வில்லியம் ஃபாக்னரின் (William Fauckner, 1897-1962) As I say Dying, The sound and the Fury என்ற நாவல்கள் நினைவோடை நாவலின் மாதிரிப் படிவங்கள், இந்நாவல்களில் ஒன்றிலும் கதையோட்டம் இல்லை. இது இந்நாவலின் அமைப்பைக் களைந்துவிடும். அபிதாவில் லா.ச.ரா. நினைவோடை உத்திகளை ஆங்காங்கே கையாண்டிருந்தாலும், வாசகர்களுடைய தாக்கத்தினால் கதையோட்டத்தையும் கையாண்டிருக்கிறார். ஆதலினால் இது நினைவோடை நாவல் அல்ல. தமிழ் நாவல் இலக்கியத்தில் இதை முன்னோடியாக மட்டுமே கொள்ளலாம். மாதிரிப்படிவம் அல்ல. இத்தகைய நாவலையோ அதன் போக்கையோ (கதையோட்டமில்லை, எண்ணவோட்டம்) மேலே கூறிய ஆங்கில அமெரிக்க நாவல்களைத் தெரிந்துகொண்ட சாயலோ தமிழ் நினைவோடை நாவல் திறனாய்வில் இல்லை என்பதை எளிதில் மறுக்கமுடியாது.

கோல்ரிட்ஜின் Biographia Literaria (1817) என்ற இலத்தீன் தலைப்பு ஆங்கிலத்தில் 'Literary autobiography' என்று

பொருள்படும். ஆனால் இதன் அமைப்பு தெளிவானதாக இல்லை. முக்கியமாக, இந்நூலில் தத்துவத்தைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் விவாதிக்கிறார். தத்துவத்தைப் பற்றி ஜெர்மானிய தத்துவாசிரியர்களான ஃபச்டே (Fichte) ஷெல்லிங் (Schelling) கான்ட் (Kant) என்பவர்களைப் பற்றியும் வேட்ஸ்வொர்த்தின் கவிதையைப் பற்றிய திறனாய்வும் மற்றும் தலைப்பிற்குத் தொடர்பற்ற செய்திகளும் அடங்கியிருக்கின்றன. இந்நூல் அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், திறனாய்வாளர்கள் சில அதிகாரங்களில் மட்டுமே கவனம் செலுத்தியிருக்கிறார்கள். முக்கியமாக 14வது அதிகாரம் 'The Lyrical Ballads' என்பதைப் பற்றி கோல்ரிட்ஜ், வேட்ஸ்வொர்த் ஆகியவர்களுடைய கூட்டு முயற்சியை விவரிக்கிறது. இவ்வதிகாரம் புகழ்பெற்ற அமெரிக்க புதுத்திறனாய்வாளர் (New Critic) பேராசிரியர் ஆலன்டேட் (Allan Tate) என்பவரால் "the background of the critcism of poetry formore than a hundred years என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரத்தில் தான் கவிதையைப் பற்றிப் பல புதிய செய்திகளைச் சொல்லியிருக்கிறார். இவை கோல்ரிட்ஜ் ஆங்கிலநாட்டின் தலைசிறந்த திறனாய்வாளர் என்று உறுதிப்படுத்துகிறது.

இவ்வதிகாரத்தின் தொடக்கத்திலேயே வேட்ஸ்வொர்தின் கூட்டுறவு முயற்சியால் எப்படி 'Lyricall Ballads' என்ற கவிதைத் தொகுப்பு உருவாகியது என்று விளக்குகிறார். வேட்ஸ்வொர்த்தும் கோல்ரிட்ஜும் நெருங்கி வாழ்ந்து வந்ததால், அவர்களுடைய உரையாடல் கவிதைகளின் இரண்டு இன்றியமையாத குறிப்புக்களில் கவனம் செலுத்தின. ஒன்று வாசகருடைய ஒத்துணர்வை இயற்கையில் பொதிந்து கிடக்கும் உண்மையை நம்பத்தகுந்த முறையில் படம்பிடித்துக் காட்டித்தூண்டிவிடுவது; இரண்டு கற்பனையின் கூறுகளை மாற்றி அதன் மூலமாக இயற்கையில் ஒரு புதிய ஆர்வத்தை உண்டாக்குதல். திடீரென்று சந்திரவெளிச்சத்திலோ அல்லது சூரியன் மறைவதிலோ நிழலும் வெளிச்சமும் கலந்த தாக்கத்தினால் நமக்குத் தெரிந்த இயற்கையில் ஏற்படும் வியக்கத்தக்க அழகு-இதுதான் இயற்கைக்கவிதை என்று

சொல்லுகிறார் கோல்ரிட்ஜ். கவனத்தைக் கவர்ந்த மேலே குறிப்பிட்ட இரண்டு குறிப்புக்களைக்கொண்டு இரண்டுவகையான கவிதைகள் எழுதலாம். இத்திட்டம் தான் கவிதைகள் எழுதுவதற்கு அடிகோலியது. இரு கவிஞர்களும் ஒப்புக்கொண்டது; கோல்ரிட்ஜின் முயற்சி, கவிதைகளில் இவ்வுலகத்தைச் சார்ந்த பாத்திரங்களை இயற்கைக்கு மீறியதாகவோ அல்லது அற்புதநவிற்சிமாற்றம் செய்வதோ ஆகும். இம்மாற்றம் வாசகர்களைக் கவிதைகளின் பாத்திரங்களிலோ நிகழ்ச்சிகளிலோ நம்பிக்கை இழக்கச்செய்வதல்ல. கோல்ரிட்ஜின் அற்புதமொழியில் கூறவேண்டுமானால் "that willing suspension of disbelief for the moment, which constitues poetic faith" இதை திறனாய்வாளர்கள் உயர்மேற்கோளாகப் பயன்படுத்துகிறார்கள். இது கவிதையும் நம்பிக்கையும் (Poetry and belief) என்ற சிக்கலான தலைப்பைக் குறிக்கிறது. வாசகர்களின் ஆழ்ந்தமத, அரசியல், சொந்த நம்பிக்கைகள் ஒரு கவிதையை அனுபவிப்பதில் குறுக்கே நிற்கின்றன. இப்பிரச்சினைக்கு விடை காண்கிறார் கோல்ரிடஜ். வாசகர்கள் ஒரு கவிதையில் வரும் அவர்கள் விரும்பத்தகாத கொள்கைகளில் வெறுப்பைக் களைய வேண்டும் என்கிறார். கவிதையைக் கவிதையாகவே கொள்ளவேண்டும் என்று மறைமுகமாகக் கூறுகிறார். டி.எஸ்.எலியட் என்ற அமெரிக்கக்கவிஞரும் திறனாய்வாளரும் கவிஞனைக் கவிஞனாகவே பார்க்கவேண்டும்; கவிஞனையும் மனிதனையும் குழப்பிக்கொள்ளக்கூடாது. இருவரும் வெவ்வேறு என்கிறார். சான்றாக, அவருடைய நண்பரான எஸ்ராபௌண்ட் (Ezra Pound, 1885-1972) யூதர்களை வெறுப்பவர். இந்த வெறுப்புக்கு அவருடைய கவிதையில் கூட இடமுண்டு. அவருடைய தலைசிறந்த காப்பியக்கவிதையான The Cantos என்பதில் ஒரு யூதனைக்குறிக்க என்ற சுருக்குக்குறியீட்டைக் கையாளுகிறார். அதற்கு son of a bitch (தகப்பன் தெரியாத பிள்ளை) என்று பொருள். இதற்கு எலியட் அளிக்கும் தற்காப்பு விளக்கம். இது பவுண்ட் என்ற மனிதன் கூறியது அல்ல. கவிஞரே. ஆகையால் கவிஞன் வேறு, மனிதன் வேறு என்று விளக்குகிறார்.

இந்நியதியை பாரதிதாசன் கவிதைகளுக்கும் கையாளலாம். அவர் கவிதைகளில் பிராமண வெறுப்பு உள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அவரைப் பற்றி 'ஆனந்தவிகடன்' வார இதழில் ஒரு குறிப்பு வந்தது. அவர் பம்பாய் நகரத்திற்கு மாதுங்கா பிரிவில் உள்ள தமிழ்ச்சங்க அழைப்பிற்கு இணங்கிச் சென்றிருந்த பொழுது ஒரு பிராமண குடும்பத்தின் விருந்தினராகத் தங்கியிருந்தார். கொள்கைகள் அல்லது கருத்துக்களைப் பொறுத்தவரை, கவிஞனையும் அவனுள் அடங்கியிருக்கும் மனிதனையும் பிரிக்க வேண்டும். பாரதிதாசன் வெறுப்பது, தனிமனிதர்களான பிராமணர்களை அல்ல; பிராமணியத்தை.

கோல்ரிட்சின் குறியீட்டுக்கொள்கை (Symbolism) யைப்பற்றிக் கொடுத்த நுணுக்கமான விளக்கம் இன்னும் பயன்படுகிறது. அடிமட்டத்தில் அல்லது உவமையில் ஆரம்பித்து குறியீட்டில் முடிகிறது. உவமையில் இரண்டு பொருள்களை ஒப்புமைசெய்வதால் தெளிவாகவும் பொருள் மயக்கமின்றியுமிருக்கிறது. ஆனால் metaphors, image, symbol பொருள்மயக்கமுடையது. இது எழுத்தாளனைப் பொறுத்தது. இதில் இறுதியில் வரும் குறியீடு தான் மிகவும் பொருள் மயக்கமானது; சிக்கலானதும் கூட. இதற்கு இரண்டு கூறுகள் உள்ளதாக கோல்ரிட்ஜ் கருதினார். அவர் நாம் மறக்கமுடியாத சொற்களைப் பயன்படுத்தினார். குறியீட்டை esemplastic என்றும் அது எதிர்மறையான பொருள்களைத் தன்னுள் அடக்கியதென்றும் கூறினார். முதலில் கோல்ரிட்ஜ் பயன்படுத்திய சொல் ஆங்கிலச் சொல்லல்ல. இது அவருடைய செவ்வியல்மொழி அறிவினின்றும் உண்டாக்கப்பட்டது. இதற்குத் தன்னுள் படைக்கும் திறன் உள்ளது என்று பொருள். ஒவ்வொரு காலத்தையும் சார்ந்த வாசகர்கள் தங்கள் திறனாலும் நோக்காலும் ஒரு நூலைப் படிக்கும் பொழுது ஒரு புது நூலையே உண்டாக்குகிறார்கள். இது ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் சொன்னதுபோல கீட்ஸ் எழுதிய 'Ode to a Nightingale' என்ற கவிதைக்கு நூறு வாசகர்கள் இருந்தால், குயிலைப் பற்றி கீட்ஸ் எழுதிய கவிதை நூறு கவிதைகள் ஆகும் என்றார். இது ஒரு அடிப்படைக் கொள்கையாகத் திறனாய்வு உலகத்தில்

அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது கோல்ரிட்ஜ் குறியீட்டிற்குச் சொன்ன உண்மைக்குப் பொருந்தும். காலத்தின் அடிப்படையில் எழுந்த ஒவ்வொரு வாசகர் வட்டமும் தாங்கள் அனுபவிக்கும் ஒரு இலக்கிய வகைமைதான் திறனாய்வு நோக்கில் ஒரு புதுநூலை வெளிக்கொணர்கிறது. குறியீடு என்பது ஒரு இலக்கிய நூலின் அடிப்படை. அதைப் பொறுத்துத்தான் அந்நூலின் பொருளடக்கம் மற்ற இன்றியமையாத கூறுகள் அதன் அமைப்பை (structure) பாதுகாக்கின்றன என்பது இன்றைய திறனாய்வுக் கொள்கை. இப்பொழுது குறியீட்டைப் பற்றி கோல்ரிட்ஜ் கூறிய மற்றொரு கருத்தையும் ஆராய்வோம். குறியீடு என்பது எதிர்மறைக் கருத்துக்களைக் கொண்டது. இதற்கு மில்டனின் 'சுவர்க்கநீக்கம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதற்கு திறனாய்வு உலகத்தில் சுவர்க்க நீக்கத்தின் கதாநாயகன் யார்? என்ற அடிப்படைக் கேள்விக்கு விடை காண முயன்றார்கள். இது திறனாய்வாளர்களை ஆழ்ந்த சர்ச்சையில் கொண்டு சென்றது. சாத்தானா? அல்லது முதல் மனிதனான ஆதாமா? சாத்தான் என்று வற்புறுத்திய திறனாய்வாளர்களை 'Satanic school' (சாத்தானின் சீடர்கள்) என்று நகைச்சுவையுடன் ஆதாமின் ஆதரவாளர்கள் கூறுவர். அதற்கு அவனுடைய விஸ்வரூபம், பயமின்மை, உறுதி, தன்தலைமையில் நம்பிக்கை, கடவுளையே எதிர்க்கும் திண்மை முதலிய கூறுகளை எடுத்துக்கூறுவர். சாத்தானின் சீடர்கள் அவர்களுடைய எதிரிகள் ஆதாம் தான் கதாநாயகன் என்று அறை கூவுவர். காரணம், அவன் மனிதகுலத்தின் தந்தை, கெட்ட குணங்களே இல்லாதவன், மனைவி ஏவாளுடன் அமைதியான வாழ்க்கையை நடத்துபவன், கடவுளே உண்டாக்கிய முதல் மனிதன் எல்லாப் பண்புகளின் அங்கம் என்று எடுததுரைத்தார்கள். ஆனால் சாத்தானை ஆதரிப்பவர்கள் இந்தப் பண்புகளெல்லாம் உடைய ஆதாம் ஒரு பெருங்காப்பியத்தின் கதாநாயகனாகக் கொள்ள அருகதையற்றவன். காரணம் : அவன் பண்புகளெல்லாம் 'negative qualities' எதிர்மறைப்பண்புகள் என்று சவால் விடுத்தனர். மில்டனின் காப்பியத்திறனாய்வில் குழப்பம் விளைந்தது. இக்குழப்பம் முதுகலை வகுப்பறையிலும் புகுந்து குழப்பத்தை

விளைவித்து 'who is the hero of Paradise Lost? என்ற கேள்விக்கு விடையளிக்காமலே ஆசிரியர்கள் திறனாய்வு சர்ச்சைகளை அலசித் தங்கள் அறிவுத்திறனை நிலை நிறுத்தினார்கள். பின்பு ஒரு அமெரிக்க அறிஞர் மில்டனின் சாத்தான் ஒரு கதாநாயகனா அல்லது முட்டாளா (Hero or Fool?) என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பினார். இந்தக் கேள்வி மில்டன் திறனாய்வில் (Milton Criticism) எதிரொலித்தது. ஆனால் கோல்ரிட்ஜின் விளக்கமே இக்குழப்பத்திலிருந்து விடுவித்தது. சாத்தான் கதாநாயகனோ அல்லது முட்டாளோ அல்ல. அவை இரண்டையும் தன்னுள் அடக்கியவன். ஏனென்றால் மில்டனின் காப்பியத்தில் சாத்தான் ஒரு தலை சிறந்த குறியீடு. கோல்ட்ரிட்ஜின் திறனாய்வு நோக்கில் இந்தக்குறியீடு எதிர்மறைக் குணங்களைத் தன்னுள் அடக்கியது. உலகத்தின் சக்திக்கு ஆதாரமான கடவுளை எதிர்ப்பவன் ஒரு முட்டாள். ஆகையினால் சாத்தான் என்னும் கதைப்பாத்திரம் ஒரு சிறந்த குறியீடு, கோல்ரிட்ஜின் விளக்கம் காரணமாக, இம்முறையில் கம்பராமாயணத்தில் வரும் இராவணனும் ஒரு குறியீடே. சூர்ப்பநகையின் தலையீட்டால் அக்கிரமத்தை ஆதரித்து, கற்புக்கரசியான சீதையையே கடத்திச் சென்று மூர்க்கத்துடன் கடவுள் அவதாரமான ராமனை எதிர்த்துப் போராடுகிறான். ஆனால் அவன் ஒரு சிறந்த சிவபக்தன். ரிஷிகளும் பொறாமைப்படும்படி, கடுந்தவம் செய்தவன். ஆண்டுதோறும் நடக்கும் கம்பன் கழகக் கூட்டங்களிலும் கருத்தரங்கங்களிலும் கருத்துரைகளிலும் கம்பராமாயணம் மறுபடியும் பிறந்து புதிய கருத்துகளுடன் நம்மை மகிழ்விக்கிறது. இருபதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆசிரியர்கள் ஒப்புநோக்குடன் வ.வே.சு. அய்யர் பாணியிலும் சிதம்பரநாத முதலியார் சுவையுடனும் இவ்வொப்பற்ற தமிழ்க்காப்பியத்தைப் புதுப்பிக்கிறார்கள். இதே பணியைத்தான் கம்பன் கவிஞனாகவும் கலைஞனாகவும் பழம்பெரும் கதையை வால்மீகி, காளிதாசனிடமிருந்து வாங்கி ஒரு தமிழ்க்காப்பியமாகவே உருவாக்குகிறான். ஆகையால்தான் பேராசிரியர் ஆஷர் அவர்களும் முதுபெரும் அறிஞரான தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் கம்பராமாயணம் ஒரு சுதந்திர

காப்பியமே என்ற ஒருமித்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். ராமன் இலட்சியத் தமிழ்த் தலைவனாகவும் சீதை தலைவியாகவும் திகழ்கிறார்கள்.

கோல்ரிட்ஜின் குறியீட்டு வரையறைக்கு மற்றொரு சான்றை அமெரிக்க இலக்கியத்திலிருந்து எடுக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெல்வில் என்பவர் மோபிடிக் என்ற நாவலை எழுதினார் (1851). அப்பொழுது கீழ்கரையோரப்பகுதிகளில் நியூயார்க் நகரத்திற்கு வடக்கே மாலுமிகள் திமிங்கிலங்களை வேட்டையாடி வந்தார்கள். அவைகளின் கொழுப்பைக்கொண்டு மெழுகுவர்த்திகளை உண்டாக்கினார்கள். இந்த ஆபத்தான வேட்டைதான் கதையின் அடிப்படை. எப்படி மோபிடிக் என்கிற ஒரு மிகப்பெரிய திமிங்கிலம் ஏகப் (Ahab) என்கிற மாலுமியைக் காலை இழக்கச் செய்தது. எப்படி அந்த மாலுமி தனக்கு இழைத்த தீங்கிற்காக அத்திமிங்கிலத்தைப் பல கடல்களில் தேடி, பசிபிக்கடலில் கண்டுபிடித்து மூன்று நாட்கள் அதனுடன் போராடி அத்திமிங்கிலத்தினால் கடலில் மூழ்கடிக்கப்படுகிறான் என்பது தான் கதைச்சுருக்கம். அமெரிக்காவில் நியூஃபௌண்லண்ட் (New Foundland) வட்டத்தில் மாலுமிகள் திமிங்கிலத்தை வேட்டையாடுவது தினந்தோறும் நடக்கின்ற நிகழ்ச்சி. அதை நாவலாசிரியர் அற்புத நவிற்சிநோக்கில் ஒரு புராணிகக் கதையாக்கி அக்கதையையே குறியீட்டிற்கு இலக்கணமாக்குகிறார் தன் அற்புதக்கற்பனை மூலம். இந்நாவலின் அமைப்பே வியக்கத்தக்கது. சில கதையும், திமிங்கில வேட்டையாடுவதை விஞ்ஞான முறையில் விளக்குவதும் நாவலின் அதிகாரங்களில் மாறிமாறி வருகின்றன. நாவலின் தொடக்கத்தில் பல அற்புதநவிற்சி மேற்கோள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் சில மேற்கோள்கள் இந்திய வாசகர்களுக்கு மச்ச அவதாரத்தை நினைவூட்டுகின்றன. மெல்விலின் நாவல் வெளியிட்ட சில ஆண்டுகள் திறனாய்வாளர்கள் அதன் திமிங்கல வேட்டையைப் பற்றிய அதிகாரங்களைக் கதையமைப்பின் தளர்வுகள் என்று கருதி ஒதுக்கினார்கள். பின்னர், கூர்ந்து படித்தவுடன் கதையை இந்த அதிகாரங்களை ஒதுக்கிப்படிக்க முடியாது என்று உணர்ந்தனர். சான்றாக, ஏன் மோபிடிக் என்ற

திமிங்கலம் வெள்ளை நிறத்துடன் இருக்கிறது என்பதை விளக்கி "The Whiteness of the Whale" என்ற அதிகாரத்தைப் படித்தவுடன் திமிங்கலம் என்பது அற்புதமான குறியீடு என்று உணர்ந்தனர். வேதியியல் முறைப்படி எல்லாவர்ணங்களும் கலந்ததே வெள்ளை. ஆனால் எல்லா வர்ணங்களையும் ஒதுக்கினாலும் வெள்ளை அல்லது சூனியம் என்பதையும் விளக்குகிறது. நாவலாசிரியரின் விளக்கத்தின் விளைவு திமிங்கிலம் கோல்ரிட்ஜ் குறிப்பிட்ட குறியீடு வெள்ளை என்பது எதிர்மறைப்பண்புகளை உடையது. கதையிலேயே திமிங்கிலம் ஒரு பாத்திரம். ஏகப் என்கிற மாலுமி தன்னால் விவரிக்க முடியாத சக்தியை எதிர்த்துப் போராடுகிறான். திறனாய்வாளர்கள் பலர் பழைய கிரேக்க இலக்கியத்தில் உள்ள துன்பியல் நாடகங்களுடன் இந்நாவலை ஒப்பிடுகிறார்கள். இந்நாவலை one of the greatest novels in the world என்றும் விவரிக்கிறார்கள்.

1. "Preface to the Lyrical Ballads". Enright & Chickeva. English Critical Texts. 162-189.

2. ஸ்காட் ஐரோப்பியாவின் நாவல் இலக்கியத்தில் பெருந் தாக்கத்தை உண்டாக்கினார். Georg Lukacs என்ற ஐரோப்பியத் திறனாய்வாளர் எழுதிய 'The Historical Novel' என்ற அருமையான நூல் வால்டர் ஸ்காட்டிற்கு ஐரோப்பிய வரலாற்று நாவலில் முக்கிய பங்கை வரையறுக்கிறது. மார்க்ஸிய கண்ணோட்டத்தில் 'realism' என்ற இயக்கத்திற்கு வரலாற்று நாவலில் ஸ்காட்டை முன்னோடியாகப் பார்க்கிறார். இந்நூல் இப்பொழுது பெங்க்வின் (Penguin) வெளியீடாகக் கிடைக்கிறது.

3. Francis James Child. English and Scottish Popular Ballads. New York. 1883-98. இது பல தொகுதிகளாக வெளிவந்தது. இந்நூல் நமது மதுரைப் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் கிடைக்கிறது.

4. இவ்வாங்கிலச் சொற்றொடர்கள் வேட்ஸ்வொர்த்தே மேற்கோளாகக் காண்பிக்கும் தாமஸ் கிரே (Thomas Gray,

1716-71) என்பவரின் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டது. அவரது கையறுநிலைப்பாடல் 'An Elegy written in a Churchyard' மிகவும் புகழ்பெற்றது. இன்றைய திறனாய்வாளர்கள் கிரேஸ்ய 'the perfect poet' என்று கூறுகிறார்கள். அவருடைய கவிதை மொழி செயற்கையானாலும் அப்பழுக்கற்றது.

5. கோடிட்டிருப்பதால் இச்சொல்லின் உள்ளர்த்தத்தைத்தான் நாம் கொள்ள வேண்டும். ஆகையால் 'essence' என்பது 'சாரம்' என்று பொருள் படாமல் 'உயிர்' என்று பொருள்படும். ஆகவே 'essential' என்ற சொல்லை 'உயிருக்கு உயிரான' என்று கொள்ளவேண்டும்.

6. Rene' Wellek & Austen Warren. Theory of Literature. Third Revised Edition. London : Jonathan Cape, 1966. 86. 'Creative Process' என்பதை 'Literature and psychology' என்ற அதிகாரத்தில் வெல்லக் விவாதிக்கிறார்.

7. இது முழுக் கவிதையல்ல. இப்பகுதி வேர்ட்ஸ்வொர்த்தின் கவிதையியலை உணர்த்துகிறது. பார்க்க : Wordsworth's Poetical Works. 5 Vols. ed. Ernest de Sekincourt & Helen Darbishire. London & New York : Oxford up, 1940-49. கவிஞருடைய அரிய குறிப்புக்கள் அடங்கியது.

8. 'Creative Process' என்ற கருத்து கவிஞனுக்குக் கவிஞன் மாறுபடும். இச்சுவையான செய்திக்கு பார்க்க : V. Sachithanandan. "Creative Process". Creative Writing. Ed. Dr. N.Radhakrishnan. Gandhigram; Rural Institute. 1987. 14-21. வெல்லக்கின் மேற்கோளும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

9. "A Defence of Poetry". English Critical Texts.225-255.

10. "John Keats, From the Letters". English Critical Texts. 256-259. இதில் சில குறிப்பிட்ட கடிதங்களே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

11. பார்க்க : வை. சச்சிதானந்தன். பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும். சென்னை : எமரால்ட் வெளியீடு, 1985, 46-77. மேற்கோள் : 'Creative Process' என்ற கட்டுரையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலேயுள்ள அடிக்குறிப்பு 8 என்பதைப் பார்க்கவும்.

12. Henry H.H. Remak, "West European Romanticism". Comparative Literature: Method and Perspective. Ed. Newton P.Stall Knecht and Horst Frenz. Carbondale: Southern Illinois University Press, 1971. 265-225.

13. Henry Peyre என்ற அமெரிக்காவைச் சார்ந்த பிரெஞ்சு ஒப்பிலக்கியப் பேராசிரியர். இவர் அற்புத நவிற்சியைப் பற்றி முதன் முதலில் பிரெஞ்சு மொழியில் ஒரு அறிவு சார்ந்த கட்டுரையை எழுதினார். 'What is Romanticism?' இதனுடைய ஆங்கில மொழிபெயர்ப்புக் கிடைக்கிறது.

14. Lilian Furst என்ற ஜெர்மன் ஒப்பிலக்கியப் பேராசிரியை அமெரிக்காவிலுள்ள டெக்ஸஸ் (Texas) பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார். இவருடைய தொகுப்பிற்கு பார்க்க : European Romanticism : Self-Definition. Methuen : London & Newyork, 1980. அற்புத நவிற்சி இயக்கத்தில் தொடர்புடைய ஐரோப்பிய எழுத்தாளர்களுடைய மூல அறிக்கைகள் இந்நூலில் அடங்கியது. பதிப்பாசிரியரே அவைகளை மொழிபெயர்த்திருக்கிறார். ஆங்கில அறிக்கைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

15. Morse Peekham. "Toward a theory of Romanticism". PMLA, 66 (March 1951), 5-23.

16. M.H. Abrams. The Mirror and the Lamt; Romantic theory and Critical Tradition. (1953)

17. அற்புத நவிற்சியின் ஐரோப்பிய சுருக்கக் கண்ணோட்டத்திற்கு பார்க்க: "Romanticism". Princeton

Encyclopedia. Enlarged edition. Alexi Preminger. New York : Macmillan. 1975. 717-722. The Decline and Fall of the Romantic Ideal (1943) என்ற நூலை எழுதிய F.L. Lucas என்பவர் 'Romanticism' என்ற சொல்லுக்கு 11,396 வரையறைகள் இருக்கின்றன என்று கூறுகிறார்.

18. பார்க்க : V. Sachithanandan. ed. The Rime of the Ancient Mariner. Annotated OL Texts New Delhi : Orient Longman Ltd. 1979. இது இந்தியாவில் உள்ள ஆங்கில முதுகலை மாணவர்களுக்காக இந்தச் சிக்கலான கவிதையை எப்படிப் படிப்பது என்பதை விளக்குகிறது. முகவுரையும் நூற்பட்டியலும் பயனுள்ளது.

19. விவரங்களுக்கு என்னுடைய கட்டுரை 'Creative Process' என்பதைப் பார்க்கவும். மேலேயுள்ள அடிக்குறிப்பு 8.

20. இது நீண்ட நாளாக மனதை உறுத்திக்கொண்டிருந்த கருத்து, இதை ஆராய்ந்தால் பாரதியாரின் கவிதையியலைப் பற்றிப் பல புதிய செய்திகள் தெரியலாம். இதுவே அம்மேதையைப் புராணிகத்திலிருந்து காப்பாற்றும் வழி.

21. இம்மானுவல் கான்ட் (Immanuel Kant) என்ற தத்துவஞானி ஐரோப்பிய அறிவு வளர்சியைப் பெரும் தாக்கத்துக்குள்ளாக்கியவர். இந்தியச் சூழ்நிலையில், அவருடைய மொழி சிக்கலானது. ஆகையால் பேரறிஞர் ரெனே வெல்லக் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையான, "Immanuel Kant's Aesthetics & Criticism". Discriminations: Further Concepts of Criticism. Delhi : Vikas Publications. 1970. 127-142. இந்நூலை வாசகர்கள் படிக்கலாம். ஸெக் நாட்டவராயிருந்தாலும், வெல்லக் ஜெர்மானிய இலக்கியத்திலும் மொழியிலும் வல்லுநர். 'Kant in English' (1982) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் ஆசிரியர். இது அவருக்கு டாக்டர் பட்டத்தை அளித்தது.

22. சான்றாக, சில ஆண்டுகளுக்கு முன் 'Times Literary Supplement' (TLS) என்று இலண்டன் நகரிலிருந்து

வெளிவரும் வார இலக்கிய இதழில் 'Passage to India' என்ற நாவலை எழுதி இந்தியாவில் புகழ் பெற்ற ஃபார்ஸ்டர் (E.M. Forster, 1879-1970) என்ற நாவலாசிரியர் தன்னுடைய உயிலில் குறிப்பிட்டிருந்த செய்தி :''அவருக்கும் சமகாலத்தவரான ஒரு கிரேக்க கவிஞருக்கும் இருந்த தன்னொத்த பாலினத் தொடர்பு. அவர் நண்பர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் தன்னுடைய வயதான தாய்க்கு இச்செய்தியைத் தெரிவிக்க வேண்டாம்'' என்று உயிலில் கேட்டுக் கொண்டார். ஆங்கிலத்தில் கூறுவது போல "The rest is silence" என்ற கொள்கையை அந்நாட்டவர்கள் கடைப்பிடித்தார்கள் போலும்.

23. புதுமைப்பித்தனின் 'அந்த முட்டாள் வேணு' என்ற சிறுகதை பிரெஞ்சு ஆசிரியர் மொபஸான் என்பவரின் கதையின் படிவம். அவருக்கு அம்மொழி தெரியாதிருந்தாலும் அக்கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பின்பற்றியிருக்கலாம். இது 'இலக்கியத் திருடு' அல்ல. இப்பொழுதுள்ள கவிதையியலின்படி, இத்திருட்டே புதுமைப்பித்தனின் பரிணாம வளர்ச்சிக்கு முதல் கட்டம் : Plagiarism, Imitation and Independence' என்பதுதான் இன்றைய கவிதையியல் சுட்டிக் காட்டும் ஒரு எழுத்தாளனின் பரிணாம வளர்ச்சி.

24. இடையீட்டாளர் என்ற கருத்திற்கு, பார்க்க : "தாக்கமும் இணைவரையும்" ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம். வை. சச்சிதானந்தன், சென்னை : ஆக்ஸ்போர்டு வெளியீட்டாளர், 1985. கோல்ரிட்ஜைப் பற்றிப் பேராசிரியர் ஓர்ஸினி எழுதிய கட்டுரைக் கருத்துக்கள் மட்டுமே விவாதத்திற்கு கையாளப்பட்டதே ஒழிய, அக்கட்டுரையோ அல்லது மொழிபெயர்ப்போ கிடைக்கவில்லை. வெல்லக்கின் கட்டுரைக்கு பார்க்க : "Coleridge". The English Romantic Poets : A Review of Research. ed. T.M Raysor. New York : Modern Language Association, 1950.

25. இக்கோட்பாடுகள் Boris Ford. ed. The Pelican Guide to English Literature V. Penguin : 1952. 188&191. என்ற நூலிலிருந்து கையாளப்பட்டன.

26. வரலாற்று நோக்கில், ஆங்கில இலக்கியம் பெரும்பாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சூழ்நிலையில் இந்திய வகுப்புக்களில் கற்பித்து வந்ததாலும் மெகாலே போன்ற ஆங்கில வரலாற்று வல்லுநர்கள் இந்திய கலாச்சாரத்தில் காட்டிய அலட்சியப் போக்கினாலும், நாம் இன்னும் ஆங்கில எழுத்தாளர்களை ஆங்கிலக் கண்கண்ணாடி கொண்டே உணர்கிறோம். நாம் சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் ஆனாலும், ஆஙகில இலக்கியத்திற்குப் பாடத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். ஆனால் இப்போக்கை அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞரான பேராசிரியர் வைஸ்டைன் (Weisstein) என்பவர் "Non-colonial' போக்கு என்று வர்ணித்தார். சென்னையிலுள்ள ஆசிய கல்வி நிறுவனத்தின் (Asian Studies) கருத்துக் களஞ்சியமான Encyclopedia of Tamil Literature (1990) முதல் பிரிவு ஏட்டில் பல கட்டுரைகளில் கூறியபடி ஆங்கில இலக்கியத்தின் தாக்கத்தினால் பல வரவேற்கத்தக்க விளைவுகள் நம் இலக்கியத்தில் உண்டாயின. ஆயினும் திறனாய்வில் சுதந்திரப் போக்கு தேவை. முக்கியமாக ஒப்பிலக்கிய நோக்கில் கோட்பாட்டிற்குப் பார்க்க : The Pelican Guide to English Literature V. 193. கோல்ட்ரிட்ஜ் விஷ்ணுவைப் பற்றி 'The Ancient mariner', 'Kubla Khan' என்ற கவிதைகளை இயற்றியபொழுது, உளவியல் நோக்கில் கவிதை இயற்றுதல் அடிமனத்தைச் சார்ந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

27. இந்நாவல் Ulysses (1922) என்ற தலைப்பு ஐரிஷ் நாட்டவரான ஜேம்ஸ் ஜாய்ஸ் (1882-1941) கிரேக்கக் கவிஞர் ஹோமரின் இரண்டாவது காப்பியத்திலிருந்து வேண்டுமென்றே எடுக்கப்பட்டது. Bloom. என்ற கதாநாயகன் ஐயர்லாந்தின் தலைநகரான Dublin இல் காலையில் படுக்கையிலிருந்து இரவு படுக்கைக்குத்

திரும்பிச் செல்லும்வரை ஹோமரின் காப்பியத் தலைவனைப் போல இப்பெண்டாட்டிதாசனின் வீரச் செயல்களை அறிவு சார்ந்த நகைச்சுவையுடன் வர்ணிக்கிறார். இதன் போக்கு நையாண்டிப்போக்கு. வாசகர்கள் நேராக இந்நாவலைப் படிக்க முயன்று தங்களைக் குழப்பிக் கொள்ளவேண்டாம். சில சிறந்த திறனாய்வாளர்கள் எப்படி இந்நாவலைப் படிக்க வேண்டும் என்று தெளிவாக விளக்குகிறார்கள். தன்னம்பிக்கை உள்ள வாசகர்கள் ஜாய்ஸின் கதைக் கொத்து Dubliners (1914)), Portrait of the Artist as a young Man (1916) என்ற சிறுநாவலையும் படித்து விட்டு இந்நாவலை அணுகலாம். Fiunegan's Wake (1939) அவருடைய முதிர்ந்த நாவல். படிப்பது கடினம். இதிலுள்ள முக்கிய பாத்திரங்கள் எல்லாம் தூக்கநிலையிலேயே இருக்கிறார்கள்! ஜாய்ஸின் நாவல் உத்திகளைத் திறனாய்வாளர்கள் 'அணுகுண்டுத் தாக்குதல்' (Like the mushroom cloud of an atomic explosion) என்றார்கள். ஆனால் இவருக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை.

28. Mrs. Dalloway (1925)) : வர்ஜினியா உல்பின் புகழ்பெற்ற நாவல் கட்டமைப்பில் Ulysses நாவலைப் பின்பற்றியது. இது ஒரு பெண்ணின் வாழ்க்கை. நாவலாசிரியருக்கு நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் விட வாழ்க்கையில் ஒரு முக்கிய நேரம் அல்லது கணம்தான் பொருள் உள்ளது. இதை அடிப்படையாக வைத்துக் கதாநாயகியின் எண்ணவோட்டத்தைக் கையாளுகிறார். இந்நாவலில் எது எண்ணவோட்டம், எது நாவலாசிரியரின் கருத்து என்பதை அவர் கையாளும் உத்தியால் நாம் அறியலாம். To the Light House (1924) ஒரே நிகழ்ச்சியை விவரிக்கும் ஒரு அற்புதமான நாவல். உருவகம் இந்நாவலுக்கு மெருகூட்டுகிறது. இதில் சுயசரிதை கற்பனைநயத்துடன் கலந்திருக்கிறது. பார்க்க : To the Light House. ed. v. Sachithanandan. Madras: B.I. Publications. 1982. இதில் முகவுரையும் குறிப்புக்களும் முதுகலை மாணவர்களுக்காக எழுதப்பட்டது.

29. As I Lay Dying : இதன் ஆசிரியர் அமெரிக்காவின் தலைசிறந்த நாவலாசிரியர். இது அவருடைய முதல் நினைவோடை நாவல். எளிதாகப் படிக்கலாம். இது ஒரு குடும்பத்தலைவி இறந்ததை எப்படி சவப்பெட்டி செய்து பல மைல்கள் பிரயாணம் செய்து, அவளை அடக்கம் செய்கிறார்கள் என்பதை விவரிக்கிறது. கணவனும் அவள் பிள்ளைகளும் அவருடைய இளம்பெண்ணும் முழு வளர்ச்சியடையாத மைந்தனும் குறிப்பிடத்தக்க படைப்புகள். வாசகர்களுக்காக நினைவோட்டங்களை ஆசிரியருடைய தலையீட்டிலிருந்து பிரிக்கிறார். நினைவோட்டங்கள் Italics முறையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. நாவலின் தலைப்பு இறந்த பெண்ணைக் குறிக்கிறது.

30. The sound and the Fury (1929) : பாக்னரின் தலைசிறந்த நாவல். தலைப்பு ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகமான மாக்பெத் (Macbeth) தை இன்னல்கள் நெருங்கி வரும்பொழுது புகழ்பெற்ற அவன் தனிமொழியை நினைவூட்டுகிறது. இது Compson என்ற ஒரு குடும்பத்தின் வரலாறு. அதை மைந்தர்களும் கடைசியாக நீக்ரோ சமையற்காரியும் அவர்கள் அவர்களுடைய கோணத்தில் கூறுகிறார்கள். சமையற்காரியின் நினைவோட்டம் குழப்பத்தைத் தவிர்க்கிறது. முதல் பிரிவில் கதையை Benjy Compson என்ற முப்பது வயது இளைஞர் (அவனுடைய மூளை ஒரு மூன்று வயது குழந்தையின் மூளையே) தன்னோக்கத்தில் குடும்பத்தையும் சூழ்நிலையையும் விவரிப்பது ஒரு பெரிய நாவலாசிரியரின் படைப்புதான் இதன் அற்புத எண்ணவோட்டம் என்பதை உறுதிப்படுத்துகிறது. "It is a tale told by an idiot. with much fury and sound" என்பதற்கு இது சான்று. Light in August ஒரு பெண் கர்ப்பமாக்கிய காதலனைத் தேடிச் செல்வது ஃபாக்னர் எழுதிய நினைவோடை நாவல்.

31. பார்க்க : Biographia Literaria. ed. J.Shawcross. Oxford UP 1907 இந்நூலில் கோல்ரிட்ஜின் விவாதத்திற்கு அடிப்படை. 'Biographia Literaria' English Critical Texts 190-244.

32. இலக்கிய உலகில் புரட்சி செய்த அமெரிக்க புதிய திறனாய்வாளர்கள் எல்லோருமே பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். Allen Tate மின்னஸோடா (Minnesota) பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தியவர். இவருடைய கட்டுரைகள் "On the Limitations of Poetry' என்ற அவருடைய முழுத் திறனாய்வுத் தொகுதியில் வெளிவந்தன. புதிய திறனாய்வாளர்களைப் பற்றிய விபரங்களுக்கு, இந்நூலின் இறுதி அதிகாரத்தைப் பார்க்கவும்.

33. பார்க்க : இததலைப்பின் விவாதத்திற்கு. T.S. Eliot. "Dante". Selected Essays. London :: Faber and Faber, 1976. 237-77. இக்கட்டுரை எலியட்டினால் திருத்தியமைக்கப்பட்டு இத்தொகுதியில் வெளியிடப்பட்டது.

34. இக்கடினமான கவிதையை பவுண்டு இரண்டாவது உலகப்போரில் இத்தாலியில் சிறைத் தண்டனை (Prisoner of War) அனுபவித்தபொழுது, அவர் அனுபவங்களை விவரிக்கிறது. திறனாய்வாளர்களின் குறிப்புக்கள் இல்லாமல் இக்கவிதையைப் புரிந்துக்கொள்ள முடியாது.

35. வ.வே.சு. அய்யரின் 'Kamba Ramayana : A Study' என்ற நூல் அய்யர் அவர்கள் பெல்லாரி சிறையில் தண்டனை அனுபவித்த பொழுது 1922-ல் எழுதியது. ஆனால் 1957-ல்தான் வெளிவந்தது. இப்பொழுது பாரதீய வித்யாபவன் வெளியீடாக வருகிறது. இந்நூல் ஒப்பிலக்கியத் துறையில் தமிழ்நாடு கண்ட வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டம். ஐரோப்பிய மொழிகளில் வல்லுனரான அய்யர் கம்பனை மற்ற காப்பியக் கவிஞர்களோடு ஒப்புநோக்குகிறார். இதன் தளர்வு : ஆசிரியரின் கம்பனே மேலானவன் என்ற அளவுகடந்த ஆர்வம். நடுநிலை தவறிவிட்டார் என்ற எண்ணம் வாசகர்களுக்கு வராமல் இல்லை.

# அதிகாரம் - 2

## ஐரோப்பியத் தொடர்புகள்

### 1. உயிருருக்கொள்கை

1914-1918-ல் நடந்த உலகப்போரினால் ஐரோப்பாவின் வாழ்க்கை பொருளாதாரம், மத நம்பிக்கை, சமூகவியல் மட்டங்களில் சீர்குலைந்தது. பொதுவாக இக்குழப்பத்தை ஆத்மீக குழப்பம் எனலாம். இக்குழப்பத்தை டி.எஸ். எலியட் தன்னுடைய 'பாழ்நிலம்' என்ற கவிதையில் அறிவு நோக்கிலும் மரபு நோக்கிலும் கூர்ந்து ஆராய்ந்திருக்கிறார் என்று ஏற்கனவே பார்த்தோம். ஐரோப்பாவில் குடியிருப்பவன் மனிதப் பண்புகளில் நம்பிக்கையிழந்தான். மதத்தில் அவநம்பிக்கை செலுத்தினான். முதல் உலகப்போருக்கு முன்னால், ஐரோப்பிய சமூகம் முதலாளித்துவத்தில் நம்பிக்கை வைத்தது. ஆத்மீகக்குழப்பத்தினால் பல புரட்சிகள் விளைந்து சமூகம் தடம்புரண்டது. 1918-ல் ஸ்பார்டகஸ் (Spartacus) என்ற தீவிரவாதிக் குழுத்தலைவர் பெர்லினில் புரட்சியை உண்டாக்கினான். முதலாளித்துவ சமூகத்தின் கொள்கைகளைத் தொழிலாளர்கள் எதிர்த்தனர். ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இத்தாலிய நாட்டில் தொழிலாளர்கள் அவர்கள் தொழிற்சாலைகளைக் கைப்பற்றினர். பொதுவுடைமைக் கட்சியினர் மூனிச்சிலும் (Munich) புடாபெஸ்டிலும் (Budapest) புரட்சி செய்தனர். பல மரபுகள் உண்டாக்கிய கருத்துக் கொள்கைகள் தூக்கி எறியப்பட்டன. விஞ்ஞானத்தின் விளைவுகளால் செல்வம் கொழித்து விளங்கிய ஐரோப்பாவில் அன்றாட வாழ்க்கை அழிவுப்பாதை நோக்கிச் சென்றது. கடவுளையும் மதத்தையும் இழந்த மக்களுக்கு ஜெர்மானிய நாட்டில் பிறந்த ஹூஸ்ஸர்ல் (Husserl) என்ற தத்துவஞானி மக்களை இந்நரகத்திலிருந்து காப்பாற்றினார். அவருடைய தத்துவக் கொள்கைக்கு Phenomenology என்ற பெயர் உண்டு. வாழ்க்கை ஒரு மாயம் அல்ல; அது நிறைவற்றதும் அல்ல. பொதுவாக, ஐரோப்பாவில் தத்துவ வளர்ச்சியைப் பார்த்தால்

கிரேக்க உலகத்தின் மூத்த தத்துவஞானியான பிளேடோ இந்த உலகம் கண்ணுக்குக் தெரியாத அழகிய மேல் உலகத்தின் படிவம் என்றார். அவருடைய சீடரான அரிஸ்டாடில் இவ்வுலகம் உண்மையான உலகம் என்று ஒரு கவிதையியலாகவே ஆக்கினார். பின்னர் வந்த தத்துவ ஆசிரியர்கள் நாம் காணும் உலகம் உண்மையா அல்லது நமது புலன்களுக்கு அப்பாற்பட்ட மறை உலகம் உண்மையா என்பதை ஆராய்ந்தனர். ஹூஸ்ஸர்ல் தனது தத்துவக்கொள்கையை ஒரு விஞ்ஞானமாக்கினார். புலன்களால் உணரக்கூடிய கூறுகளை உடைய இவ்வுலகமே உண்மை என்று வற்புறுத்தினார். இக்கூறுகள் தான் இவ்வுலகை உண்டாக்கின. ஆகையால் இக்கூறுகள் தான் உலகத்தின் சாரம் என்றார். இக்கொள்கை மாயாவாதத்திற்கு எதிர்மறை. இன்னொரு நோக்கில், நம் அறிவிற்கு அப்பாற்பட்ட பொருள்கள் மாயமல்ல மெய்ம்மையே. நாம் அப்பொருள்களைப் பற்றி அறிந்தவையெல்லாம் உண்மையல்ல. இவ்வாதத்திற்குப்பதில் உணர்வுநிலை (Consciousness) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். உணர்வுநிலை என்பது ஒரு பொருளைப்பற்றியது. அது ஒரு சிந்தனை. வெளியுலகத்தின் பொருளடக்கத்தை உணர்வுநிலைப் பொருளடக்கமாக்கவேண்டும் என்றார். இது ஹூஸ்ஸர்லின் முக்கிய கருத்து. இதை Phenomenological reduction என்பார்கள். அதன்படி எப்பொருளையும் உணர்வுநிலைக்குள் கொண்டு வர முடியவில்லை என்றால் அதை அறவே ஒதுக்கவேண்டும். இது உண்மையிலுள்ள நமது உறுதியை ஐயமற விளக்குகிறது. ஆகையால் மெய்ம்மைகள் (realities) எல்லாம் இயற்காட்சி (Phenomenon) என்றே கொள்ளவேண்டும் என்று ஹூஸ்ஸர்ல் வற்புறுத்தினார். இதை தத்துவக் கொள்கை என்பதை விட விஞ்ஞானமுறை எனலாம். இதன் விளக்கம், இயற்காட்சியை விஞ்ஞான முறையில் ஆராயலாம் என்பது, உலகம் உணர்வுநிலை நோக்கில் மெய்ம்மை உலகத்தைச் சார்ந்தது என்ற கொள்கையால் இந்த ஜெர்மானியத் தத்துவஞானி ஐரோப்பிய சமூகத்தை அழிவுப் பாதையிலிருந்து காப்பாற்றினார்.

இத்தத்துவத்திலிருந்து தோன்றியது தான் Phenomenological criticism அல்லது புலன் உணர்வியல் திறனாய்வு. இவ்வடிப்படையில் ஒரு இலக்கிய நூலின் வரலாற்று சூழ்நிலை, அதை எழுதியவர், அந்நூல் தோன்றியதற்குக் காரணமான நிலை, அது எத்தகைய வாசகர்களுக்காக எழுதப்பட்டது முதலியவைகளை ஒதுக்கிவிட வேண்டும். மேலோட்டமாகப் பார்த்தோமானால், இத்திறனாய்வு தச்சார்பற்ற திறனாய்வு அல்லது புதுத்திறனாய்வு போல் தோன்றுகிறது. ஆனால் இத்திறனாய்வு உள்ளார்ந்த அல்லது இயல்பாயுள்ள, இனம்கண்டுகொண்ட கொள்கைகளை மறந்து நூலைத்திறனாய்வு செய்யவேண்டும் என்பதே.

Phenomenology என்றால் இயற்காட்சியை ஆராய்தல் என்று பொருள்படும். அதை ஆங்கிலத்தில் Study of Phenomena என்று கூறுவர். Phenomenon என்ற சொல் ஒரு கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. அதற்குப்பொருள் உணர்வினால் அறியக்கூடிய தோற்றம். ஹுஸ்ஸர்ல் கூறியது போல, தத்துவ ரீதியாக, அறிவிற்கு அப்பாற்பட்ட உலகத்தில் உள்ள பொருள்கள் மெய்ம்மையா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் நம் உணர்வு என்பது மெய்ம்மைதான் என்று கூறுகிறார். ஆகையால் உணர்வினால் உணரக்கூடிய பொருள்களும் மெய்ம்மையே என்ற தத்துவத்தை உண்டாக்கினார்.

இந்த இயற்காட்சி ஆராய்ச்சி அமெரிக்காவில் உள்ள ஹில்லிஸ்மில்லர் (J. Hillis Miller) என்ற திறனாய்வாளரை அவர் தொடக்க காலத்தில் பாதித்தது. சான்றாக, தாமஸ் ஹார்டி (Thomas Hardy)யின் நாவல்களை ஆராய்ந்து அவைகளின் கட்டமைப்புகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார். இதற்கு அடிப்படை, நாவலாசிரியரின் உணர்வில் கவனம் செலுத்தியதுதான். இவர் முன்னதாக அமைப்பியல் கொள்கையைத் திறனாய்வு செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1960-ல் ஜெனிவாக் குழுத் திறனாய்வு இவரைத் தாக்கத்துக்குள் ஆக்கியது.

ஹுஸ்ஸர்ல் அவர்களுடைய உணர்வுக்கொள்கையையும் அதன்படி உலகத்தின் 'சாரம்' (essence) என்ற விளக்கத்தையும் அடியோடு எதிர்த்தவர் அவருடைய முக்கிய சீடர் மார்டின் ஹைடக்கர் (Martin Heidegger). அவருடைய சிறந்த நூல் Being and Time (1927) என்பது, அதில் ஹைடக்கரின் கொள்கை அடிப்படையான உயிருரு (Being) என்பதை விளக்குகிறார். அவருடைய குரு உணர்வுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்தாரோ அவ்வளவு சிறப்பு உயிருருக்கு அளிக்கிறார். மனித வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கது அதன் பண்பு ஜெர்மனி மொழியில் Dasein (கொடுக்கும் தன்மை) என்பது. ஆனால் மனித உணர்வு உலகில் உள்ள பொருள்களை வெளிப்படுத்துகிறது. அதே போல அப்பொருள்களை மனித வாழ்க்கைக்கு உட்படுத்துகிறது.

உயிருரு (Being) என்பது ஐரோப்பிய தத்துவஞான விளக்கப்படி மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி (ontology) யைச் சேர்ந்தது. இதன் பொருளை விளக்குவதற்கு மேலைத் தத்துவஞான வரலாற்றைப் பார்ப்போம். தத்துவ நோக்கில் இச்சொல் உயிருருவை ஆராய்வது என்று பொருள்படும், பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இச்சொல் தத்துவஞானிகளால் பயன்படுத்தப்பட்டது; ஆனால் 'இயல் கடந்த ஆராய்வு' என்று பொருள்படும். அரிஸ்டாடில் இத்தலைப்பை உடைய ஒரு நூலில் உயிருருவை ஆராயும் நூல் என்று குறிப்பிட்டிருக்கிறார். பிளேடோவும் இச்சொல்லை ஆராய்ந்திருக்கிறார். அவர் கூற்றின்படி உயிருரு என்பது பொருள்களின் இயற்கையைக் கண்டுபிடிக்கப்பயன்படும் என்ற கருத்தை விளக்குகிறார். ஆகையால் இச்சொல்லை ஒழுங்காகப் பயன்படுத்தினால் ஒரு பொருளின் தனித்தன்மையை ஆராய்ந்து அதிலிருந்து மாறான படிவங்களுள்ள நிரந்தரமான உலகத்தை அடையாளம் கண்டுகொள்ள உதவும் என்கிறார்.

Ontology அல்லது மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி என்பது பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே தத்துவஞானத்துறையில் மேற்கு ஐரோப்பாவில் இனம் கண்டு

கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சி இயல் கடந்த ஆய்வு (metaphysics) என்பதோடு சமன்படுத்தப்பட்டது. அரிஸ்டாடில் இயல் கடந்த ஆய்வைப்பற்றி அவர் எழுதிய நூலில் 'உயிருரு' என்பதை இவ்வாராய்ச்சிப் பிரிவை சேர்ந்தது என்கிறார். பிளேடோவும் உயிருருக்கருத்தில் கவனம் செலுத்தினார். அவர் அடிக்கடி சொல்லுவதைப்போல, உயிருரு பல பொருள்களைக்கொண்டது. அவருடைய முக்கிய விளக்கம் அச்சொல் அகப்பொருளைத்தான் குறிக்கும். அவர் காலத்திலிருந்து அகப்பொருள், புறப்பொருள் தொடர்பு (Subject-Object relationship) மேலைத்தத்துவஞானத்தில் ஒரு முக்கியத் துறையாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. அச்சொல் தலைப்பு, பேருரை, செயல் என்று பொருள்பட்டாலும், அது இவ்வுலகத்தின் பொருளாக இருக்க வேண்டுமானல் அளவுக் கூறுகளின் தொகுதியாகத்தான் இருக்க வேண்டும் என்று பிளேடோ வலியுறுத்தினார். அப்படியிருக்கும் பொழுது உருவம், பருபொருள் (matter) என்ற இரண்டு எதிர்மறைப் பண்புகளைத் தன்னுள் அடக்கியிருக்கும். உருவம் என்பது செயல்திறம் உடைய ஒரு பொருளை உருவாக்குகிற பரிணாமக்கொள்கை. பருப்பொருள் என்பது புலன்களால் அறிந்து இனம்கண்டு கொள்ளக்கூடியது. ஆகவே எப்பொருளாயினும் அழியும் தன்மையும் அழியாத்தன்மையும் ஒரு சேரக்கொண்டது. உருவம் அழியாதது; பருப்பொருள் அழிந்துபோகக்கூடியது.

மேலே சொன்ன உயிருருவின் கருத்துக்களைத்தான் கத்தோலிக்க தத்துவஞானியான தாமஸ் ஆக்யுனஸ் (Thomas Aquinas. 1225-1274) தன்னுடைய கொள்கையில் சேர்த்துக்கொண்டார். அவர் அரிஸ்டாடிலின் கருத்தை விரிவு படுத்தினார். அரிஸ்டாடில் ஒரு பொருள் மெய்ம்மை (actuality)யும் உள்ளடங்கிய ஆற்றலையும் (Potentiality) எதிர்மறைப் பண்புகளையும் உடையது என்றார். முந்தியது பொருளின் வளர்ச்சியையும் பரிணாமத்தையும் ஊக்குவிக்கும். பிந்தியது அப்பொருளை இனம் கண்டுகொள்ள உதவும், அதன் மாறுதல்களுக்கும் பொறுப்புடையதாகும். ஆய்யுனஸ் அரிஸ்டாடிலின் எதிர்மறைப் பண்புகளை விரிவுபடுத்தி ஒரு

பொருள் அரிஸ்டாடில் கூறியதுபோல எதிர்மறைப்பண்புகளை உடையதாயிருந்தாலும் அப்பண்புகள் அதன் ஒற்றுமையை உறுதிப்படுத்தாமல் அப்பொருளின் வேற்றுமையைத்தான் சுட்டிக்காண்பிக்கின்றன என்றார். அவர் 'வேற்றுமை' என்பது இனம்புரியாதது எனக்கொள்ளலாம். அரிஸ்டாடிலின் மெய்ம்மையும் உள்ளடங்கிய ஆற்றலும் ஒரு பொருளின் வடிவையும் பருப்பொருளையும் தெளிவுபடுத்த வில்லையானாலும் அப்பொருளின் சாரத்தை தெளிவுபடுத்துகின்றன. ஒருபொருள் ஏன் பொருளாக இருக்கின்றது, அப்பொருளின்ன சாரம் என்றால் என்ன என்ற கேள்விகளுக்கு விடையளிக்கிறது. இவ்விளக்கம் எதிர்மறைப்பண்புகளை இணைப்பதின் விளைவு. சாரம் என்பது அந்த கத்தோலிக்கத் தத்துவஞானிக்கு ஒரு முக்கிய கொள்கை. இது ஒரு பொருள் என்றால் என்ன என்பதைச் சுட்டிக்காட்டினாலும அது அப்பொருளினுடைய உயிராவதல்லாமல் அதனுடைய உள்ளடங்கிய ஆற்றலாகும். ஆகையால் உயிருருவியல் என்பது ஒரு பொருளை எது உண்டாக்குகிறது, அதை இனம் கண்டு கொள்வது எப்படி, அதன் தன்மை என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கும்.

First Pholosophy or Ontology (1729) என்ற ஆய்வுக் கட்டுரையில் அதன் ஆசிரியர் ஜெர்மானியில் பிறந்த கிறிஸ்தியன் உல்ஃப் (Christian Wolff, 1669-1754) என்ற அறிஞர் தான் உயிருரு என்ற சொல்லுக்கு இக்காலத்தில் பயன்படுத்தக்கூடிய கருத்தை உறுதிப்படுத்தினார். மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சியை இயல்கடந்த ஆராய்வின் உட்பிரிவாகக் கருதினார். இயல்கடந்த ஆராய்வு என்பதை சிறப்பு முறை ஆய்விலிருந்து வேறுபடுத்தவேண்டும் என்றார். இந்த சிறப்புமுறை ஆராய்வு என்பது இறையியல், உளவியல், அண்ட முழுமையியல் (Cosmology) என்ற பிரிவுகளைத் தன்னுள் அடக்கும். இது இந்தியத் தத்துவத்தின்படி, உயிருரு இயல்கடந்த ஆய்வு, சமயம் என்பதைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது. வேதாந்தக் கொள்கையின் ஜீவாத்மா, பரமாத்மா என்பவைகளைப் பற்றிய விளக்கம் இன்றியமையாதது. உயிருரு என்பது, உல்ஃபிற்கு

உலகமெல்லாம் அனுமதிக்கக்கூடிய சொல் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்குக்காரணம் அச்சொல் என்ன, எப்படி என்ற அடிப்படைக் கேள்விகளை எழுப்பும். இது உயிருருவின் அடிப்படை வினாக்கள், உயிருரு (Being) என்ற ஆங்கிலச்சொல் பொருள் மயக்கமுடையது அல்ல; அது பொருளையே குறிக்கும் என்றார் வுல்ஃப். இச்சொல் "What is" என்ற கேள்வியையே எழுப்பும். ஆகையால் அதன் அடிப்படைத்தத்துவங்கள் அல்லது சட்டங்கள் எதிர்மறைக்கொள்கையை எதிர்க்கும்; ஆனால் உயிருருவைப்பற்றித் திருப்திகரமான காரணங்களைக் கொடுக்கும். இப்பின்புலத்தில் மெய்ம்மை என்பது புலப்படாத எளிய பொருள்களைக்குறிக்கும். அப்பொருள் ஒவ்வொன்றின் சாரம் ஒரு தெளிவான, குறிப்பிட்ட கருத்தைத் தன்னுள் அடக்கும். இவ்விவாதத்தினால் உயிருரு என்பது கொள்கையளவில் பொருள் மயக்கமுடையதல்ல என்கிறார் வுல்ஃப். உளதாயிருத்தல் (existence) என்பது உயிருரு சம்பந்தப்பட்டவரை போதிய அளவு காரணங்களால் விளக்கப்படும் என்று நம்பிக்கைத் தெரிவிக்கிறார் இந்த ஜெர்மானிய அறிஞர்.

இந்த விஞ்ஞான இனத்திற்குரிய (generic) உயிருரு புலன்களால் இனம் கண்டு கொள்ளப்பட முடியாதது. ஆனால் அது உய்த்துணரப்படுவது. இத்தகைய கொள்கையை உலகப் புகழ்பெற்ற ஜெர்மானிய நாட்டு தத்துவஞானி இம்மானுவல்கான்ட் (Immanuel Kant, 1724-1804) மறுத்துவிட்டார். இவர் மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சி என்ற சொற்றொடரை அடிக்கடி பயன்படுத்தினார். அதற்குரிய பொருள் அறிவெல்லை கடந்த தத்துவஞானக் கோட்பாடு (Transcendental Philosophy) என்று கொண்டார். இத்தத்துவத்திற்கு விரிவான விளக்கம் கொடுத்தார். இது பொருள்களை பொருள்களாகவே விஞ்ஞான முறையில் ஆய்வதல்ல; இம்முயற்சி அகவுணர்வுநிலை சார்பான முன் நிபந்தனைகள் அல்லது புலனுணர்வுகளும் அறிவாற்றலின் வகையினங்களுமாகும். இவைகளெல்லாம் அனுபவத்தால் உணரக்கூடிய பொருள்கள் ஆகும். கான்ட் என்ற தத்துவஞானி உயிருருவின் ஆராய்ச்சி அகப்பொருளைத் தெரிதல் என்ற

கொள்கையைப் புறப்பொருளாக்கும் அநுபவ வழிமுறையைக் கொள்கையாகக் கொண்டார். ஆகவே உயிருருவை ஆராய்தல் என்பது உணர்வால் அறியக்கூடிய உட்பொருளை அநுபவ பூர்வமாக புறப்பொருளாக்குதல் என்பதாகும். இப்புறப்பொருளாக்கும் தன்மையை அநுபவத்தின் உள்ளடக்கம் என்கிறார். இவ்வுள்ளடக்கம் தான் நாம் அநுபவத்தால் அறியக்கூடிய புறப்பொருள்கள் அடங்கிய உலகம் என்று உரிமை கொண்டாடுகிறார் கான்ட். இவரைப்போல இன்னொரு ஜெர்மானிய தத்துவஞானி ஹெகல் (Hegal, 1770-1831) கொள்கைப் பிடிவாதமான வுல்ஃபின் உயிருருத் தத்துவத்தை மறுத்தார். ஹெகல் உயிருரு ஆராய்ச்சி தருக்கமுறையின் அமைப்பாக மாறியது என்ற நம்பிக்கையைக் கொண்டவர். இத்தருக்கம் ஒரு இயக்கமாக உருக்கொண்டது - எளிமையிலிருந்து (Simplicity) உயிரியக்க சிக்கல் நிலை வரையில் (Organic Complexity) அதாவது, உயிருரு முதல் கருத்துப்படிவம் வரை; இக்கருத்தைப் புறப்பொருள் ஆக்கிக்கொண்டதால் மனித உள்ளம் (mind) எப்படி தன்னுடையதாக்கிக்கொண்டது என்பதை விவரிக்கிறார் ஹெகல்.

அண்மைக் காலத்தில் தத்துவஞானம் உயிருருவ ஆராய்ச்சி தத்துவ ஞானிகளால் ஒதுக்கப்பட்டது. ஆனால் மதவியல் ஞானிகள் இதில் கவனம் செலுத்தினார்கள். இதற்குக்காரணம் ஐரோப்பாவில் 12-16-ம் நூற்றாண்டுகளிலிருந்தே வளர்ந்து வந்த பல்கலைக்கழகத் தத்துவஞானம் (Scholotic Philosophy), இஞ்ஞானம் ஹுஸர்லின் கொள்கையில் தலை தூக்கியது. ஹுஸர்ல் மனித அறிவிற்கு ஐயறவற்ற அடிப்படைத்தளம் எது என்ற கேள்விக்கு விடையளிக் முயன்றார். இம்முயற்சி அவரைப் புலனறிவியல் (Phenomenology) கொள்கையை விவரிக்கத்தூண்டியது. இம்முறை அவரை பொருள் என்றால் என்ன, அது எப்படி உண்டாகிறது என்ற கேள்விகளுக்கு விடைகளைத் தேட வைத்தது. பொருள்கள் மனிதத் தன்முனைப்பினால் தோன்றுவதல்ல. அறிவெல்லையைக் கடந்த முனைப்பினால் தான் தோன்றுகின்றன. இந்த தன்முனைப்பைத் ''தூய உணர்வு'' என்றார். இத்தூய உணர்வு உணர்வின் தனித்தன்மை (empirical self) யிலிருந்து வேறுபட்டது. உணர்வின்

தனித்தன்மை பொருள்கள் உலகத்தைச் சார்ந்தது; இவ்வுலகம் விஞ்ஞான ஆய்விற்கு உட்பட்டது என்பதாம். ஹுஸர்லின் மாணவரும் அவரைக் குறை கூறியவருமான மார்டின் ஹைடக்கர் (Martin Heidegger. 1889-1976) அவருடைய நூல் Being and Time என்பதன் மூலம் உயிருருத் தத்துவத்திற்கு உயிரூட்டி அதன் முக்கியத்துவத்தை விளக்கினார். உயிருரு என்பது நாம் சாதாரணமாக நம்பிக்கை வைக்கும் 'வாழ்தல்'(existence) என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. உயிருரு என்றால் என்ன என்ற கேள்விக்குப் பதில் மனிதன் என்ற சிருஷ்டியின் வாழ்க்கை அல்லது அந்த நாலுகால் பிராணியின் வாழ்க்கை. இது புறவாழ்க்கையே ஒழிய அக வாழ்க்கை அல்ல. இக்கொள்கையை ஜெர்மானிய மொழியில் Dasein தாசைன் என்பர். இந்தியத் தத்துவம் பொதுவாக ஆத்ம வாழ்க்கைக்குத் திசை திருப்பிவிட்டது. நாம் உள்வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம். வெளிவாழ்க்கைக்கு அல்ல. ஆத்மா நிரந்தரமானது. ஆனால் உயிர் நிரந்தரமானதல்ல. ஆகையால் உயிருருத் தத்துவத்தைவிட ஆத்மவிசாரமே நம் தத்துவஞானிகளின் கவனத்தை ஈர்க்கிறது. அதற்கு மாறாக மேலை நாட்டுத் தத்துவஞானிகள் மனித வாழ்க்கை (human existence) என்பதிலேயே நாட்டம் கொண்டு இருக்கிறார்கள். மதகுருவும் தத்துவஞானியுமான கார்ட் உயிருரு தத்துவத்தை வாழ்தலியல் (existentialism) என்ற தத்துவமாக மாற்றினார். அவருடைய கொள்கைப்படி, வாழ்தல் என்பது எந்த ஒரு மனிதனோ செயல்படுவதோ அல்லது செயல்படாததோ இல்லை. ஒரு மனிதன் (மதகுரு உட்பட) ஒரே வழியாக வாழக்கூடும். அதை மாற்றமுடியாது. அதைப்போலவே வாழ்வதின் குறிக்கோள் கடவுள்தான். வாழ்தல் (to live) என்பது இருத்தல் (to be) என்பதிலிருந்து வேறுபட்டது. தர்க்க நோக்கில் வாழ்தல் என்பது புலன்களால் அனுபவிப்பது என்று பொருள். ஆனால் இருத்தல் என்பது புலன்களுக்கு அப்பாற்பட்டது. தத்துவஞான நோக்கில் அது வாழ்தல் என்பதற்கு முற்பட்டது. அதை ஆங்கிலத்தில் "human pre condition" என்பர். உயிருரு இயல் கொள்கை விசாரணை ஜெர்மானிய அறிஞர் காண்டின்

தத்துவத்தை நெருங்கி வந்துவிட்டது. உயிருருஇயல் மேலை இலக்கியத்தையும் திறனாய்வையும் பெருந்தாக்கத்துக்குள்ளாக்கியது.

சுருக்கமாகக் கூறுவோமானால், ஹுஸர்ல் அநுபவம் கடந்த அறிவின் மூலதத்துவ ஆராய்ச்சியில் இறங்கினார். ஆனால் அவர் சீடர் ஹைடக்கர் தன்னுடைய குருவின் போக்கை நிராகரித்து வாழ்க்கைத் தத்துவத்தின் சாராம்சத்தை ஆராய்ந்தார். இதை ஜெர்மானிய மொழியின் Dasein என்று கூறுவர். இருப்பினும் மனித வாழ்க்கை காலத்தைச் சார்ந்தது. மொழியும் கூட. இம்மொழியிருப்பதால்தான் நாம் உலகத்தை உருவாக்கி அதை நம்புகிறோம் என்றார் ஹைடக்கர். மொழி என்பது நம் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு மட்டுமல்ல, அது வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதி அல்லது உருவளவை (dimension) மொழியில்லையென்றால் உலகம் இல்லை. மொழி என்பதே ஒரு வாழ்க்கை என்று நம்பினார் ஹைடக்கர். அது மனிதன் பிறப்பதற்கு முன்பே தோன்றியது. மொழிக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு உயிரியலைச் சார்ந்தது. ஹைடக்கரின் மொழித்தத்துவம் இன்று திறனாய்வில் பெரும் புரட்சியை உண்டாக்கும் அமைப்பியலைச் (Structuralism) சார்ந்தது.

ஹைடக்கர் அவருடைய தத்துவ விசாரணையை "Hermenuetic of Being" என்றார். இந்த ஆங்கிலத் தொடரிலுள்ள முதல் சொல்லுக்கு விஞ்ஞான அல்லது கலை விளக்கம் என்று பொருள்படும். ஹைடக்கரின் தத்துவம் "Hermeneutical Phenomenology" என்று கூறுவர். இச்சொற்றொடர் "Transcendental Phenomenelogy" என்ற தொடரிலிருந்து பிரித்துக்காட்டும். ஹுஸ்ர்லினுடைய தத்துவம் புலனுக்கு அப்பாற்பட்ட செய்திகளை ஆராய்கிறது. ஹைடக்கரின் தத்துவம் புலனுக்கு உட்பட்ட செய்திகளை விவரிக்கிறது. அவரது கொள்கைகளை ('Hermeneutic') என்ற பெயரடைச்சொல்லைக் கொண்டு விவரித்தாலும், hermenetics என்ற பெயர்ச்சொல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியத்திறனாய்வின் ஒரு

குறிப்பிட்ட பிரிவைச்சுட்டிக்காண்பிக்கிறது. இது விவிலிய நூலைப்பற்றி மதகுருக்களும் மதத்தைச் சார்ந்த அறிவாளிகளும் அதன் மூல பாடத்தை நுண்மையாக விளக்குவதைத்குறிக்கிறது. பிறகு கால ஓட்டத்தில் இலக்கிய மூல பாடத்திறனாய்வை நுணுக்கமாகவும் விரிவாகவும் விளக்குவதைக் குறிப்பதற்கு இந்தப் பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது திறனாய்வாளர்கள் 'Hermeneutic Circle' என்ற சொற்றொடரை உண்டாக்கியிருக்கிறார்கள். அதன் பொருள் திறனாய்வுக்கு முற்றுப்புள்ளி இல்லை. எந்த ஒரு கொள்கையும் காலாவதியாகிவிட்டது என்ற கூற முடியாது. எவராவது ஒரு திறனாய்வாளர் ஒரு பழைய கருத்தை எடுத்து ஆராய்ந்து புதுப்பிக்கலாம். ஆகையால் இச்சொற்றொடரைத் திறனாய்வு உலகத்தைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்துகிறார்கள். திறனாய்வு வட்டத்தைப் போன்ற ஒரு சுழற்சி. அது எப்பொழுதும் இயங்கும். அதற்கு முடிவு இல்லை. பொதுவாக, அமெரிக்கப்புதுத்திறனாய்வாளர்கள் ஒரு நூலில் கட்டமைப்பையும் உள்ளடக்கத்தையும் மொழி மூலமாகவும எழுத்தாளர் பயன்படுத்தும் குறியீடு முதலிய உத்திகள் மூலமாகவும் ஆழ்ந்த, நுண்ணிய வகையில் திறனாய்வு செய்யும் பொழுது விவிலிய நூலை விளக்கும் வகைக்கு நெருங்குகிறது.

## 2. *அமைப்பியல்* (STRUCTURALISM)

'அமைப்பியல்' என்பது ஐரோப்பாவில் பாரிஸ் நகரத்திலிருந்து மாஸ்கோ வரையில் பல குழுக்கள், திறனாய்வின் பழையமரபை ஒதுக்கி, இலக்கியங்களை இலக்கியங்களாகவே அமைப்பியல் அறிஞர்கள் கருதவில்லை. இவ்விலக்கியங்களை மனித விஞ்ஞானங்கள் (Human Sciences) என்றார்கள். இவ்விலக்கியங்களின் உள்ளடக்கங்களை ஒதுக்கி, அவர்கள் மொழியைக் கையாள்வதிலேயே கவனம் செலுத்தினார்கள். காரணம், மொழி என்பது ஆசிரியருக்கும் வாசகர்களுக்கும் உள்ள தொடர்பை உறுதி செய்கிறது. அக்காரணத்திற்காக மொழி என்பது அறிவிக்கும் இயல்புடையது. இம் மொழி சமூகத்தினிடம் தொடர்புடையதாகையால் இது கலாச்சார இயல் நிகழ்ச்சி

(Cultural Phenomenon): ஆகையால் இலக்கியத்தை ஆராய்வதில் பலகோணங்களில் அது ஆராயும்; கலாச்சாரத்தைப்பற்றி அறிந்துக் கொள்ளலாம். இவ்விதம் அமைப்பியல் இலக்கியத்திறனாய்வை எழுத்தாளனிடமிருந்து அவன் தொடர்பு கொள்ளும் சமூகத்திற்குத் திசை திருப்பியதால் எழுத்தாளனுக்கு மதிப்பு குறைந்துவிட்டது. எழுத்தாளன் கையாளும் எழுத்திற்கு மதிப்பு அதிகரித்தது. இதனால் ஐரோப்பாவின் தலை சிறந்த அமைப்பியலாளரான பிரெஞ்சு அறிஞர் ரோலந்த் பார்த் (Roland Barthe 1915-1980) 'எழுத்தாளன் இறந்து விட்டான்' என்று திடுக்கிடும் அறிவிப்பை தன் அமைப்பியல் திறனாய்வில் செய்தார். இதன் முக்கிய அம்சம் எழுத்தாளரைவிட எழுத்தே கவனத்திற்குரியது என்பதுதான். இம் முறையைத் தொல்காப்பியத்தை ஆராய்வதற்குப் பயன்படுத்தலாம். அவர் வாழ்க்கையைப்பற்றித் தெளிவு இல்லை. வடமொழிக் கலாச்சாரத்திற்கு வந்த புராணிகத்தை ஒதுக்கிவிட்டுத் தொல்காப்பியத்தைத் தொல்காப்பியமாகவே ஆராயலாம். இம்முறை தொல்காப்பியம் என்ற தலை சிறந்த இலக்கணத்தைப் புராணிகம் என்ற ஆபத்திலிருந்து காப்பாற்றி நம் திறனாய்வாளர்கள் தெளிவடையலாம். இதன் விளைவு அமெரிக்க புதுத்திறனாய்வின் செல்வாக்கைக் குறைத்துவிட்டது. பொதுவாக, இத்திறனாய்வாளர்கள் எல்லோரும் பல்கலைக்கழக அறிஞர்கள். கூரிய அறிவு உள்ளவர்களாகவும் வாதக்கலையில் விற்பன்னர்களாகவும் இருந்தனர். இச்சமயத்தில் ஐரோப்பாவில் ஹிட்லர், ஸ்டாலின் ஆகியவர்கள் கொடுங்கோல் ஆட்சியினால் ரெனெவெல்லக், லியோ ஸ்பிட்ஸர் போன்ற பெரும் புலமைபெற்ற அறிஞர்கள் ஐரோப்பாவை விட்டு வெளியேறி அமெரிக்க கப் பல்கலைக்கழகங்களில் தஞ்சம் புகுந்தனர். இதனால் திறனாய்வு என்பது ஒரு கடினப்பயிற்சி. அறிஞர்களால் தான் முடியும் என்ற எண்ணம் ஓங்கி வளர்ந்தது. இப்புராணிகத்தை அமைப்பியல் உடைத்தெறிந்துவிட்டது. அமைப்பியல் உத்திகள் தெரிந்தால் எவரும் இத்திறனாய்வு முறையைக் கையாளலாம் என்பதை உறுதிப்படுத்தியது. இவ்விளக்கத்திலிருந்து அமைப்பியல் எளிதானது.

புதுத்திறனாய்வுப் போக்கு கடினமானது என்ற தப்பெண்ணம் எழலாம். பார்த் எழுதிய அமைப்பியல் திறனாய்வைக் கூர்ந்து நோக்கினோமானால் அவர் இலக்கியத்தை கையாளும் விதம் பல திறனாய்வாளர்களையும் வாசகர்களையும் திடுக்கிடச் செய்யும். கொச்சையாகச் சொல்ல வேண்டுமானல், 'மரபைத் தூக்கி உடைப்பில்போடு' என்ற எண்ணம் தான் பழைய திறனாய்வாளர்களுக்கும் திறனாய்வுக் கலையை கற்றுக்கொள்ள ஆர்வம் உள்ளவர்களுக்கும் தோன்றும். திறனாய்வு முறைகளில் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு பார்த்தின் திறனாய்வுக் கட்டுரைகளைப் படித்தவர்களுக்கு, அவருடைய கூரிய அறிவும் திறனாய்வு நுணுக்கங்களும் நம்மை திடுக்கிடச் செய்யும்; 'One of the subtlest brains' என்ற பரந்த திறனாய்வு எண்ணத்தை மறுக்கமுடியாது.

'அமைப்பியல்' என்பது மொழியியலைச் சேர்ந்தது. ஏனென்றால் மொழி என்பது எழுதுவதும் பேசுவதும் அதன் அறிவிப்புத் தன்மையை எழுத்தாளரிடமிருந்து வாசகருக்கு உள்ள தொடர்பை நிலை நிறுத்துகிறது. இக்கோணத்தில் ஒரு சொல்லிற்கும் அச்சொல் குறிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு சீரானதல்ல; மனப்போக்கானது. இவ்வுண்மையைக்கண்டு பிடித்தவர் ஸ்விச்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவாப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருந்த ஃபெர்டினன்ட் தே சகூர் (Ferdinand de Saussure 1857-1913) என்ற மொழியியல் நிபுணர். அவரை இற்றைய மொழியியலின் தந்தை என்ற கூறுவர். அவருடைய மொழியைப் பற்றிய திறனாய்வு அமைப்பியலுக்கு வித்திட்டது. அவருடைய சொற்பொழிவுகள் The Course in General Linguistics (1915) என்று வெளி வந்தது. அவர் இறந்த பிறகு அவருடைய மாணவர்கள் எடுத்த குறிப்பிலிருந்து இந்நூல் உருவாக்கப்பட்டது. அவர் இரண்டு அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறார்; மொழியியலின் நோக்கம் என்ன? சொற்களுக்கும் அவை குறிப்பிட்ட பொருள்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? அவர் மொழிக்கும் (Langue என்று பிரெஞ்சு மொழியில் கூறுவர்) பேசுதலுக்கும் (Parol என்று அதே மொழியில் கூறுவர்). உள்ள வேறுபாட்டைப் பிரித்துக்காட்டினார். எனினும் Langue என்பது சமூக

அடிப்படையில் எழுந்த மொழி; (Parola) என்பது ஒரு தனி மனிதரின் முயற்சியால் தோன்றிய பேச்சு மொழி என்றார். மொழிகளுக்குள்ள இந்த முக்கிய வேறுபாடு கட்டமைப்பாளர்களால் பின்பற்றப்பட்ட ஒரு கொள்கை. மொழியியலை ஆராய்தலின் அடிப்படைக் கொள்கை ஒரு ஒழுங்குமுறை. இம்முறை ஒவ்வொரு மனிதனின் ஒரு பொருளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மொழியின் பின்புலம். ஆகையினால் மனிதன் பேசும் மொழி ஒழுங்குமுறையற்றதல்ல. அது ஒரு கட்டுப்பாட்டிற்குட்பட்டது.

பேராசிரியர் சசூர் ஒரு சொல்லிற்கும் அது குறிப்பிட்ட பொருளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தார். இந்த ஆராய்ச்சி அமைப்பியலுக்கு (Structuralism) வித்திட்டது. ஒரு சொல்லிற்கும் அது குறிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு தர்க்க விதிகளுக்கும் விஞ்ஞான முறைகளுக்கும் உட்பட்டதல்ல. சான்றாக, போக்குவரத்துத் தொடர்பில் பெரும்பாலான நாடுகளில் பயன்படுத்தும் சுட்டுக்குறிகளை எடுத்துக்கொள்ளலாம். சிகப்பு, பச்சை, அம்பர். சிகப்பு பாதையில் வாகனங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு 'நில்' என்று பொருள்படும். பச்சை என்பது 'போ' என்பதைக் குறிக்கும்; அம்பர் நிற்கும் வாகனங்களுக்கு அவைகள் இடம் பெயர்வதற்கு தயார் செய்யும் நிலை. அவ்வடிப்படையில் சொல் என்பது குறியீடு எனவும் அது சுட்டிக்காட்டுவது பொருள் எனவும் கொள்ள வேண்டும். மொழி என்பதை சசூர் semiotic என்று உணர்ந்தார். அதாவது, மொழி பேசப்படுவதற்கு மட்டுமல்ல அது ஒரு செய்தியை ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனுக்குத் தெரியப்படுத்துவது Language is essentially semiotic என்ற உண்மையை அறிந்தார் சசூர். கீழ்க்கண்ட விளக்கம் சசூரின் உருப்படிவம் என்று கூறுவர்.

Sign (குறி) Signifier (குறிக்காட்டி)

Signified (குறிக்கப்பெற்றது)

சசூர் ஒரு மொழி என்பது பல சொற்களைக் காலம் காலமாகப் பயன்படுத்தி வந்ததல்ல. அது ஒரு ஒழுங்குமுறை. ஆனாலும்

ஒரு சொல்லிற்கும் அது குறிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு ஒரு ஒழுங்கு முறையைச் சார்ந்ததல்ல. சான்றாக 'நாய்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். இச்சொல் தமிழ் என்ற ஒழுங்குமுறையைச் சார்ந்ததால் அது எந்தப்பொருளைக் குறிக்கிறது என்பது தமிழ் தெரிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் ஆங்கிலத்தில் 'dog' என்றும் பிரெஞ்சு மொழியில் 'Chien' என்றும் அம்மொழிகள் ஒழுங்குமுறையைச் சார்ந்ததால் அச்சொற்கள் நாயைக் குறிக்கிறது என்று அறிகிறோம். இதற்குப் பொதுவாக 'sign' என்று ஒவ்வொரு சொல்லையும் சசூர் குறிக்கிறார். இது ஒரு பொருளைக் குறிப்பதால் அதற்கு signifier என்று பெயர். அச்சொல் குறிக்கும் பொருள் signified எனப்படும். இதிலிருந்து எம் மொழியாயிருந்தாலும் அதில் வரும் எச்சொல்லும் sign எனப்படும். அது ஒரு பொருளைக் குறிப்பதால் signifier. signified என்ற வட்டத்திற்குள் மனிதர்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலிருந்தாலும் அவ்வட்டத் திற்குள்ளேயே எம்மொழியையும் பயன்படுத்துகிறார்கள் என்பது சசூரின் மொழிக்கொள்கை என அனுமானிக்கலாம். தத்துவ விசாரணையில் நாட்டம் கொண்ட திறனாய்வாளர்கள் சசூரின் உருப்படிவம் என்பது மொழிபேசும் மனிதர்கள் வாழும் ஒரு சிறைக்கூடம். இவ்விடத்திலிருந்து மனிதன் தப்புவது அவ்வளவு எளிதல்ல என்கிறார்கள். இச்சிக்கலான பிரச்சினை இருந்தாலும் Structuralism அல்லது அமைப்பியல் என்ற திறனாய்வுக்கொள்கை ஐரோப்பா முழுவதும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வெகுவாக வளர்ந்துவிட்டது. இதற்கு அடிப்படை மொழியியல். அமைப்பியல் வளர்ந்து, முக்கியமாக பிரெஞ்சுநாட்டில், அங்கேயே எதிர்ப்புக்குள்ளாக்கி, கொள்கை ரீதியாக பின் அமைப்பியல் (Post-Structuralism) என்று அமைப்பியலின் விளைவை இனம் கண்டுகொண்டார். இவ்விரண்டு முக்கிய கொள்கைகளையும் உண்டாக்கியவர்கள் பாரிஸ் அறிவியல் வட்டத்தைச் சார்ந்த ரோலந்து பார்த் (Roland Barthes) என்பவரும் அவரைப்பின்பற்றியவருமான ஜேக்ஸ் டெரிடா (Jacgues Derrida 1930) என்பவருமாவர். 'அமைப்பியல்' என்பது தொழில்முறையில் நுண்ணிய நோக்கங்கள் கொண்டிந்தாலும்,

இச்சொல் பொதுவாக Philosophy of structure என்று பொருள்படும். ஆகையால் கட்டமைப்பு நோக்கில் செயல்படும் திறனாய்வாளர்களைக்குறிக்கும். சான்றாக, புராணிகம் (myth) என்ற கொள்கையில் நம்பிக்கைகொண்டு இயற்கைப் புராணிகம் (natural myth) எப்படி இலக்கியத்தைப் பாதிக்கிறது என்ற கொள்கையில் ஈடுபாடு கொண்ட இன்றைய தலைசிறந்த திறனாய்வாளராக மதிக்கப்படுகின்ற நாத்ராப் ஃப்ரை (Nothrof Frye 1912) என்பவர் அமைப்பியலில் கொண்டுவரப்படுகிறார்.

### ரோலந்த் பார்த்

அமைப்பியல் என்பது மொழியியலைச் சார்ந்தது. ரோலந்த்பார்த் (Roland Barthes 1915- 80) உயிருடன் இருக்கும் பொழுதே அவரை மேலை நாட்டின் தலைசிறந்த திறனாய்வாளர் என்று கூறுவர். இப்பொழுது அதை எதிர்த்த பின் அமைப்பியல் (Post Structuralism) வெகுவாக வளர்ந்துவிட்டதால் பார்த் புகழ் மங்கியிருப்பதாகவே கொள்ளலாம். ஆனாலும் அமைப்பியல் இலக்கியத்திறனாய்வின் ஒரு முக்கிய பகுதியாகவே ஆகிவிட்டதால் அவரை ஒதுக்கிவிட முடியாது. தான் இருக்கும் பொழுதே தன்புரட்சிகரமான திறனாய்வுக் கருத்துக்களை வெளியிட்டுப் பரம்பரை இலக்கியத்திறனாய்வுக் கொள்கைகளைத் தலை கீழாகமாற்றிய பேராசிரியர் பார்த் பாரிஸ் நகரத்திலுள்ள ப்ரெஞ்சுக் கல்லூரி (College de France) என்ற நிலையத்தில் சேர்ந்தார். இக்கல்லூரி பாரிஸ் பல்கலைக்கழகத்தைவிட உலகப்புகழ்பெற்றது. பதவி ஏற்றவுடன் தன்னைக் (Professor of Literary Semiology) *இலக்கிய குறியியல் பேராசிரியர்* என்று கூறிக்கொண்டார். அவர் பிரெஞ்சு நாட்டிலேயே தலை சிறந்த திறனாய்வாளராயிருந்தாலும் தன்னுடைய திறனாய்வு *மொழிச் செய்தியியலால் கவரப்பட்டது* என்பதை தெரிவித்தார். ஆகையால் அவருடைய 'திறனாய்வு' என்பது குறியியலே. அதாவது, மேலே கூறியபடி சசூரின் கொள்கையை அடிப்படையாகக்கொண்டது; ஒரு சொல் ஒரு பொருளைக் குறிப்பதால் அது குறிப்பான் (signified) ஆகும். ஆகையால் சொல் குறிக்கும் பொருள் குறியீடு (signified) அல்லது எந்தச்

சொல்லும் ஒரு பொருளைக்குறிக்கும் என்பதாகும். ஆகையால் மற்றத் திறனாய்வுகளைப் போல அமைப்பியல் திறனாய்வாளர் தன்னுடைய திறனாய்வு விளக்கத்தின்படி எப்படித் தன்னைக் கவர்ந்த நூலைப் படிக்கும்படி வாசகர்களை எதிர்பார்க்கிறார் என்பதை மறந்துவிடுகிறார். டி.எஸ். எலியட் ஷேக்ஸ்பியரைப்பற்றி ஒரு முக்கிய திறனாய்வுச் செய்தியை விளக்கியிருக்கிறார். ஷேக்ஸ்பியருடைய சலவைக் கணக்கை (Laundry bill) நுண்ணிய அறிவுடன் பார்த்தால் அவர் வாழ்க்கையின் உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம். அச்சலவைக் கணக்கு என்ன என்ன உடைகள் உடுத்தார்? அவைகள் அவர் காலத்திய நாகரீக உடைகளா? பிரபுக்கள் உடுத்துவதா? அல்லது சாமானிய மக்கள் பயன்படுத்துவதா? என்பது போன்ற உண்மைகளைத் தெரிந்துக்கொள்ளலாம். அந்நாடகாசிரியருடைய சலவைக் கணக்கு நமக்கு கிடைக்கவில்லை என்றாலும், இது ஒரு அடிப்படை உண்மையை வெளிப்படுத்துகிறது. திறனாய்வு என்பது அறிவுலகத்தைச் சார்ந்தது அல்ல. திறனாய்வு என்பது பார்த்தின் அமைப்பியல் நோக்கின்படி வாழ்க்கையோடு ஒன்றியது. இதற்கு ஒரு சொல்லைச் சொல்லாகக் கருதாமல் சசூரின் மொழியியல் நோக்கின்படி சொல் ஒரு பொருளைக் குறிக்கிறது அல்லது ஒரு குறிப்பான் இதன் அடிப்படையில் எதையும் திறனாய்வு செய்யலாம் என்று பார்த் நம்பினார். புகைப்படங்களையும் உடைகளையும் உணவை மக்கள் உட்கொள்ளுவதையும் திறனாய்வு செய்யலாம். சான்றாக, குதிரைப் பந்தயத்திற்கு மக்கள் என்ன என்ன வகையில் உடுத்திச் செல்லுகிறார்கள், அவர்களுடைய உடைகள் எதைக்குறிக்கின்றன என்று அற்புதமாகத் திறனாய்வு செய்கிறார். உணவு உட்கொள்ளும் வகையிலிருந்து ஒரு மனிதருடைய எண்ணத்தையோ இயற்கையையோ புரிந்துகொள்ளலாம் என்கிறார். சான்றாக, நம்முடைய உணவு உட்கொள்ளும் முறைப்படி ஒருவர் சாம்பார், ரசம், தயிர், பழங்கள் என்ற முறையைப் பின்பற்றினால் அவர் பழைமை வாதி என்று கொள்ளலாம். ஆனால் அவர் பழங்களில் ஆரம்பித்து சாம்பாரில் முடிந்தால் அவர் பிற்போக்குவாதி அல்ல

என்பதை உணரலாம். பார்த் இந்த உணவு வகைகளை வகைகளாகவே கருதவில்லை. ஒவ்வொரு வகையையும் ஒரு குறிப்பானாகவே கொள்கிறார். ஒரு புகைப்படத்தை எடுத்துக்கொண்டால் அதிலுள்ளவர்கள் எப்படி நிற்கிறார்கள், எந்த உடைகளை எம்மாதிரி அணிகிறார்கள், அவர்கள் சிரித்துக்கொண்டிருக்கிறார்களா அல்லது விளக்கெண்ணை குடித்தவர்கள் மாதிரி இருக்கிறார்களா என்ற கேள்விகளைக் கேட்டு, வகைமைகளாகப் பிரித்து, அவ்வகைமைகள் எதைக் குறிக்கின்றன, கலாச்சாரமா அல்லது கலாச்சாரத்திற்கு மீறியதா என்று கேள்வி மேல் கேள்வியை அடுக்கி நுண்ணிய முறையில் அலசுகிறார். இவ்விதம் பிரெஞ்சு அறிஞர்கள் பழமைவாதிகளாகத் திகழ்ந்த போக்கை கண்டித்துத் திறனாய்வு உலகைத் தலைகீழாக மாற்றி அமைத்த பேராசிரியர் பார்த்தை பல பழமைவாதிகள், திறனாய்வாளர் என்று கூறாமல் அவர் ஒரு வஞ்சகர், போலி என்று சாடினார்கள். இப்பொழுது மேற்குத் திறனாய்வு உலகம் அவரை இனம் கண்டுகொண்டு அவரைப் போற்றுகிறது.

பேராசிரியர் பார்த்தின் அமைப்பியல் மொழிச்செய்தியியலை அல்லது குறியியலைச் சார்ந்தது என்ற அடிப்படை உண்மையை மறக்கலாகாது. டைம்ஸ் இலக்கிய வார ஏட்டில் (Times Literary Supplement) அமைப்பியலை பார்த் 1967-ல் வரையறுத்தார். "Structuralism (is) a way of analysing cultural artefacts that originates in the methods of linguistics" ஆகையால் பார்த்தின் அமைப்பியல் என்பது கலைத்தொழில் பொருட்களை மொழியியல் கொள்கைகளின்படி ஆராய்வது. இக்கொள்கைகளில் பார்த்தின் கவனத்தை ஈர்த்தது சசூரின் 'குறிப்பான்', 'குறியீடு' என்பவைகளுக்கு உள்ள தொடர்பே. பார்த் அமைப்பியல் திறனாய்வில் மொழிச் செய்தியியலைத் தொடர்புபடுத்தியது பரம்பரைத் திறனாய்வுக்கொள்கையில் உள்ள தளர்வுகளை வெளிக்கொணர்வதற்கே என்றார். அதன்படி ஒரு எழுத்தாளனின் கூற்றைத் திறனாய்வு செய்வதென்றால் எழுத்தாளனை முழுவதும் மறந்துவிட்டு, அல்லது பார்த்தின் மொழியில் சொல்வதானால், எழுத்தாளன் இறந்துவிட்டான் என்று

கொண்டு, அவன் மொழியை மொழியியலின் கொள்கைப்படி சசூரைப்போல ஆராய்ந்து, அச்சொற்களைக் குறிப்பானாகக் கொண்டு, அதற்கும் அவை குறிக்கும் பொருள்களுக்கும் உள்ள தொடர்பை விளக்கிக் கலாச்சாரத்தை அவன் எப்படிப் புரிந்துகொள்ளுகிறான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று பார்த் விரும்புகிறார். இதில் கலாச்சார வட்டத்தில் உள்ள எப்பொருளையும் ஆராயலாம்.

பார்த் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு இலக்கியத்தையும் செவ்வியல் இலக்கியங்களையும் (இலத்தீன், கிரேக்கம் சம்பந்தப்பட்டவை) பயின்றார். பிறகு ருமேனியா நாட்டிலும் எகிப்திலும் பிரெஞ்சு மொழியைச் சிறிது காலம் கற்பித்தார். பின்னர் பாரிஸ் நகரத்திற்குத் திரும்பி சமூகவியலையும் மொழியியலையும் கற்றார். 1947-லிருந்து பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு அறிவுலகத்தின் கவனத்தை ஈர்த்தார். அவர் முதன் முதலில் தன் தாய் மொழியில் எழுதிய நூல் Writing Degree Zero (1967) என்பது. அதே ஆண்டில் Elements of Semilogy என்ற நூலை வெளியிட்டார். பல நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்ட பார்த் அப்பொழுது ரெஸீன் (Racine) என்ற பிரெஞ்சு நாடகாசிரியரையும் சமகால பிரெஞ்சு நாவலையும் குறியியல் நோக்கில் அலசினார். பார்த்தின் குறியியல் என்பது, மொழியியல் கொள்கையில் சசூர் ரோமன் ஜேகப்ஸன் (Roman Jakobson, 1896-1982) மொழியியல் கொள்கையை விரிவுபடுத்துவது; சசூர் இவர்தம் மொழியியல் கொள்கை பார்த்தின் திறனாய்வைப் பாதித்தாலும் லெவிஸ்ராஸின் (Levi strauss) அமைப்பியல் கொள்கையே பார்த்தின் திறனாய்விற்கு அடிப்படை என்று இற்றைய திறனாய்வாளர்கள் நம்புகிறார்கள். அமைப்பியல் என்பது மனிதமனத்தின் உலகளாவிய உண்மைகளில் அக்கறை கொண்டது. இக்கொள்கையை உறுதி செய்தவர் லெவிஸ்ட்ராஸ்தென் அமெரிக்காவிலிருந்த சிகப்பு இந்தியர்கள் (Red Indians) அல்லது நாகரிகமற்ற இனக்குழுவின் பழக்க வழக்கங்களையும், குறிப்பாக அக்குழுவின் முறைத காப் புணர்ச்சி பற்றிய புராணிகத்தை ஆராய்ந்தார். இக்குழுவின்

முறைதகாப்புணர்ச்சி, அதன் பொருள் பற்றி ஆராயும்பொழுது அது அவருக்கு உலகப்புகழ்பெற்ற கிரேக்க நாடகமான ஈடிபஸ் (Oedipus) என்பதில் கதாநாயகன் தன் அம்மாவையே மணந்துகொண்டது நினைவுக்குவந்தது. சிகப்பு இந்தியர் பழக்கவழக்கமும் ஈடிபஸின் நெருங்கிய சுற்றத்துடன் தொடர்பு கொண்டதும் (தான் அறியாமலிருந்தாலும் கூட) ஒரே மட்டத்தைச் சார்ந்தவை என்று லெஸ்ட்ராஸ் கருதினார். அந்த இந்தியர்களின் பரம்பரைக்கதை, எப்படி ஒரு உடன்பிறப்பு தன் தங்கையுடன் உறவு கொள்கிறான் என்பதும் அதே உண்மையைத்தான் குறிக்கின்றது என்ற கருத்தைத் தெரிவித்தார். இதைப் பொதுவாக (Sructuralism) அமைப்பியல் என்று திறனாய்வாளர் கூறுவர். மொழியியல் நோக்கில் மொழிகளின் ஒரு வாக்கியம் அதில் அடங்கியுள்ள சொற்களை மேலோட்டமாக அல்லது மொழிவாரியாகப் படிக்கும்பொழுது ஒரு பொருள் கொடுக்கும். மொழியை ஆராய்ந்து நுண்ணிய நோக்கில் பார்த்தால் ஒரு உள்ளார்ந்த பொருள் தெரியும். இதை மொழியியல் வல்லுநர் deep structure என்பர். லெவிஸ்ட்ராஸின் மனிதஇயல் ஆராய்ச்சிப்போக்கு பல நாகரிகங்களில் பழையதும் புதியதும், மறைந்திருக்கும் தொடர்புகளை வெளிப்படுத்தியது. ஆகையால் அவர் அமைப்பியல் முறையை 'உலகளாவிய உண்மைகள்' (Universal Truths) என்று கூறுவர். அடிமட்டத்தில் பல கலாச்சாரங்களும் தொன்மைச் சமூகமும் பல பொது நம்பிக்கைகளைக் கொண்டிருந்தன என்ற கருத்தை லெவிஸ்ட்ராஸ் வலியுறுத்தினார். இந்த முறை இலக்கியத் திறனாய்வு முறையைப் பாதித்தது. பொதுவாகப் புராணிகத்திறனாய்வாளரான பேராசிரியர் நார்த்ராப்ஃப்ரை என்பரையும் பாதித்தது. இயேசுநாதர் இறந்த பொழுது அவர் உடலிலிருந்து சிந்திய இரத்தம் Joseph of Arimathea என்ற வியாபாரியினால் ஒரு வெள்ளிக்கோப்பையில் திரட்டப்பட்டது. இக்கோப்பைதான் இயேசுநாதர் கடைசி விருந்தில் (the Last Supper) பங்குகொள்ளும்பொழுது பயன்படுத்தியது. மத்தியகால ஐரோப்பாவில் இக்கதை (புனிதக்கோப்பை எவரெவர் கையில் அகப்பட்டது) பல உருவங்களில் பல மொழிகளில் எழுதப்பட்டது.

Grail legend (திருக்குருதிக்கலபுராணக்கதை) என்று அழைக்கப்பட்டு மத்திய கால ஐரோப்பாவைச் சார்ந்த பல எழுத்தாளர்களைக் கவர்ந்தது. அக்கால ஆங்கில அரசர் ஆர்தரின் புராணிகக்கதைகளிலும் புனிதக்கோப்பைக் கதை இடம்பெற்றது. ஆர்தர் அரசர் வழக்கமான விருந்தில் தன் வீரர்களுடன் உண்டபொழுது இந்த திருக்குருதிக்கலம் திடீரென்று இவர்களுக்கு மேலே தோன்றி மெதுவாகக் கீழிறங்கி அவர்கள் பொது மேசையில் இறங்கியது, பின்னர் மறைந்துவிட்டது. வீரர்கள் ஒவ்வொருவரும் சூளுரைத்து அக்கோப்பையைக் கைப்பற்ற விரைந்தனர். அவர்களில் மிகவும் புகழ்பெற்ற வீரன் பெடிவியர் (Sir Bedevere). அக்கதையின் மூலம் இப்புனிதக்கலம் அவனுக்கு எட்டாது. ஏனென்றால் மாமாவான ஆர்தரின் மனைவியுடன் கள்ளத்தொடர்பு கொண்டிருந்தான். இது அக்கால முறைப்படி இத்தொடர்பு முறை தகாப்புணர்ச்சி. ஆகவே அவனுக்கு இயேசுநாதரின் கோப்பை கிடைக்காது என்று கதை குறிக்கிறது. இன்னொரு வீரன் Sir Galahad (காலஹாட்), அவன் உள்ளும் புறமும் சுத்தமானவன். அவனுக்குத்தான் கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் கதை வெளிப்படுத்துகிறது. இத்திருக்குருதிக்கலக்கதை டி.எஸ். எலியட்டின் 'பாழ்நிலம்' என்ற கவிதையைக்கூட மறைமுகமாகப் பாதித்துவிட்டது. இப்பொழுது லெவிஸ்ட்ராஸின் கொள்கை அடிப்படையில் பல புராணிகக் கதைகளையும் மற்ற பிரிவுகளையும் ஆராய்ந்து வருகிறார்கள்.

ரோமன் ஜேகப்ஸன் (1896-1982) Linguistics and Poetics' என்ற கட்டுரையில் மொழியில் அறிஞர்கள் மொழியைச் சமகாலத்தது (Synchronic) அல்லது சமகாலத்திற்கு அப்பாற்பட்டது (Diachronic) என்பதை இலக்கியத்திறனாய்வாளர்கள் சிறு எழுத்தாளர்களைச் சமகாலத்தவர் என்று கொள்ளாமலும் பழைய செவ்வியல் எழுத்தாளர்களைச் சமகாலத்தவர் என்று கையாளுவதையும் விமர்சிக்கிறார். அவர் கவிதையியலை மனதில்கொண்டு மொழியை (metaphor) உருவகம் என்றும் (metonymy) ஆகுபெயர் என்றும் பிரித்தார். உருவகமும் ஆகுபெயரும் கவிதை மொழியின் இரு துருவங்கள். மொழி சில சமயம்

உருவகமாகவும் ஆகுபெயராகவும் இருக்கலாம். அவருடைய மொழியியல் திறனாய்வின் இன்னொரு பங்கு ஒரு செய்திமொழியில் எத்தனை கூறுகள் இருக்கின்றன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து மொழியை 'அனுப்புவர்' ஒருவர், அதைப் பெறுபவர் இன்னொருவர் (receiver). அனுப்பப்படுவது ஒரு செய்தி (message). செய்தியில் பயன்படுத்தகிற மொழி செய்தியைப் பொறுத்தது மற்றொன்று அச்செய்தி உருவாவது அதன் சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. அச்செய்தி ஒரு ஒழுக்கமுறை (code)யைச் சேர்ந்தது. சந்தர்ப்பத்தையும் பொறுத்திருக்கிறது. ஜேகப்ஸனின் கூற்றுப்படி, எந்தச் செய்தியாயிருந்தாலும் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அனுப்பப்பட்டால் அது இந்த ஆறு கூறுகளுமுடையது என்று திட்டவட்டமாகக் கூறினார். அமைப்பியல் நோக்கில் இலக்கிய அறிவு என்பது ஒரு விஞ்ஞானம். இந்த நம்பிக்கை பாரிஸிலுள்ள அறிஞர்களிடமிருந்து மாஸ்கோவிலுள்ள நிபுணர்கள்வரை ஒரு பரவலான கொள்கை. இக்கொள்கையை அமைப்பியல் (Structuralism_) என்று கூறினாலும் இக்குழுக்களுக்குள் வேறுபாடுகள் உண்டு.

*புரட்சிக்கவி - ஒரு அமைப்பியல் திறனாய்வு*

பாரதிதாசனின் புரட்சிக்கவி வடமொழியிலுள்ள, பில்கணீயம் என்ற கவிதையின் தழுவல் என்பது தெரிந்ததே. தமிழ்க்கவிஞனின் தமிழ்ப்பற்றும் தமிழ் கலாச்சாரத்திலுள்ள ஆழ்ந்த நம்பிக்கையும் அவருடைய ஆளுமையும் மொழி ஆட்சியும் மற்றுமுள்ள கூறுகளும் அவரை வடமொழிக் கவிதையை மொழி பெயர்க்கவிடாமல் மூலமொழி தெரியாவிட்டாலும் கூட தழுவலாகவே ஏற்கச்சொல்லும். தழுவல் என்பது மூலத்தை மாற்றி அமைப்பதின் மூலம் அவருடைய குறிக்கோளை வாசகர்களுக்கத் தெரியப்படுத்துவதே. புரட்சிக்கவி ஒரு தமிழ்க் கவிதையாக உருமாறி பாரதிதாசன் தமிழ்மொழி மீதும் அக்கலாச்சாரத்தின் மீதும் ஆர்வம் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது. சமுகத்திலும் மற்ற நிலைக்களங்களிலும் மரபை எதிர்த்துப்

புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டு மக்களின் மனங்களை மாற்றிக் கால வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடுதலையும் விரும்புகிறார். 'புரட்சிக்கவிஞர்' என்ற பட்டமே அவருடைய இயற்பெயரை, மக்கள் மறந்து அவருடைய முழுப் பெயராகவே கொண்டனர் என்பது முற்றிலும் உண்மை.

இப்பின்புலத்தில் இக்கவிதையை அமைப்பியல் கொள்கைகளைக் கொண்டு ஆராய்வோம். அமைப்பியல் திறனாய்வு இன்று பேராசிரியர் பார்த் இனம் கண்ட கொள்கைகளைக் கொண்டது. இற்றைய மொழியியலின் அடிப்படைக் கொள்கைகளைக் கையாண்டு எந்த இலக்கியமும் மரபுவழி நோக்கில் சுற்றுப்புறச்சூழ்நிலை, எழுத்தாளனின் சொந்தவாழ்க்கை இவைகளை ஒதுக்கிச் சொற்களையும் உருவகங்களையும் குறிப்பான்களாகக்கொண்டு அக்குறிப்பான்கள் எதைக் குறிக்கின்றது என்பதை ஆராயலாம். மரபுவழித் திறனாய்வுக் கொள்கைகள் காலப்போக்கில் அறிவியல் கொள்கைகளாக மாறிவிட்டன. ஆகையால் மரபுவழித்திறனாய்வுமுறை சற்று கடினமானது என்ற எண்ணம் எழலாம். ஆனால் சசூரின் கொள்கைப்படி ஒரு சொல் குறிப்பானாக ஒரு பொருளை வாசகர்களுக்கு உணர்த்தும் என்பது இத்திறனாய்வின் அடிப்படைக் கொள்கை. இன்னொன்று எந்த மொழியும் பேசப்படுவதால் அது பேசப்படுபவரிடமிருந்து கேட்பவர்க்கோ அல்லது எழுத்தைப் படிப்பவருக்கோ பேராசிரியர் ரோமன் ஜேக்ப்சன் சசூரின் மொழிக்கொள்கையை மேலே கூறியபடி விரிவுபடுத்திச் சட்டதிட்டங்களுக்கு உட்படுத்தினார். மொழியியல் திறனாய்வில் நாம் ஒரு முக்கிய உண்மையை மறக்கக்கூடாது. Language is essentially communication என்பது அடிப்படைத்திட்டம். மொழியைப் பேசுபவன் அல்லது கையாள்பவன் தன்னிச்சையாக அவன் கூற்றை மாற்ற முடியாது. அக்கூற்றை மறுமுனையில் இருக்கிற ஒருவன் புரிந்து கொண்டால்தான் கூற்று பயனுறும் வகையில் அமையும். மொழி என்பது சூனியத்தில் உதிக்காது. அந்தச் சூனியத்திலும் மனிதன் பயன்படுத்தும் மொழியைக் கடவுள் கேட்பார் என்ற நம்பிக்கை நம் நாட்டில் ஒரு மதக்கொள்கையாக

இருந்தாலும்கூட, இதிலிருந்து பிறந்ததுதான் புதிய திறனாய்வான எழுத்தாளர்-வாசகர் வட்டம். காலம், காலமாகத் தோன்றும் வாசகர்கள் தான் ஒரு இலக்கிய வகைமைக்கு உயிரூட்டுகின்றனர். அவர்கள் எழுத்தாளர் அடைந்த முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்டனர். இதை reception (ரிசப்ஷியன்) asthetik என்று இத்திறனாய்வுக் கொள்கை உருவான ஜெர்மானிய நாட்டில் கூறுவர். ஆங்கிலத்தில் aesthetics of reception (முருகியல் ஏற்பு) என்று கூறுவர். அமைப்பியல் திறனாய்விற்கும் இம்முருகியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இப்பொழுது 'புரட்சிக்கவி' யை அமைப்பியல் நோக்கில் திறனாய்வு செய்வது எப்படி என்று பார்ப்போம். தொடக்கத்தில் அரசன் தன் அமைச்சரிடம் தன் மகளைப் பற்றிக் கூறுகிறான். அவளுக்கு 'அமுதவல்லி' என்ற பெயர் தன்னுள் அடங்கியிருக்கும் ஆசையின் மறு பிறப்பு. தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் ஆய்ந்தாள். அயல்மொழியும் பயின்றாள். ஒழுக்கநூல், நீதிநூல் கற்றாள். அனைத்தையும் உணர்ந்தாள். ஆனால் கவிதை புனையக் கற்றுக் கொள்ளவில்லை. கவிதையோ அவளுள் ஊறிவிட்டது. அதற்கு உருவம் தான் கொடுக்க முடியவில்லை. அரசனின் பெண்ணை ஒரு குறிப்பானாகக் கொண்டால் அவள் கவிஞனின் மறுபிறப்பு அல்லது ஒரு இலட்சியக்கவி. தனது எல்லா ஆசைகளின் இருப்பிடமான அமுதவல்லி ஒரு இலட்சியக்கவியாக ஆகவேண்டும் என்கிறான் மன்னன். மரபு வழிச் சமூகத்தை ('சதுர்வர்ணம்') சேர்ந்தவனாதலால் இலக்கணமில்லாமல் கவிதையில்லை; இலக்கணம் உயிர். மொழி அதன் வடிவம். புரட்சிகரமான சமூகமாயிருந்தால் இலக்கணம் வேண்டுவதில்லை. கவிதையியற்றுவதற்குத் திட்டம் வேண்டுவதில்லை. மரபு வழி அரசனைப் போல் தன் மந்திரியின் உதவியை நாடுகிறான். அவள் இலக்கணமின்றிப் புதுக்கவிதை எழுதி வாசகர்களைத் திடுக்கிடும்படி செய்பவள் அல்ல. பரிதி, மலை, கடல், ஆவி, ஓடை, விண், மண் என்ற இயற்கையின் கூறுகள் கவிதையாக, அமுதூற்றாக வரவேண்டும். அமுது என்ற குறிப்பான் பாரதிதாசன் கவிதையில் தமிழைச் சுட்டிக்காண்பிக்கிறது. தமிழ்

என்பது அமுதவல்லி. தமிழ்க்கவிதையை இலக்கண சுத்தமாக எப்படிப் பயிலவேண்டும். உன்னதமான கவிதையை எழுத வேண்டும் என்று அவனுக்கு ஆலோசனை கூறும் மந்திரியைக் கேட்கிறான். ஏற்ற ஓர் ஆசானை அவன் தெரிந்தெடுக்கிறான். தன்னாசையில் இருந்து எழுந்த அமுதவல்லிக்கு ஏற்ற ஆசான் வேண்டும் என்று அரசன் கூறுவதால், 'ஆசான்' என்பவன் ஒரு உன்னதக்கவி ; அச்சொல் அவன் சமூகத்தைச் சார்ந்தவனல்ல என்று குறிக்கிறது. அரசனின் மரபுச் சமூகத்தைச் சாராத ஒரு உன்னதக்கவிஞனை, உபாத்தியாயனை மந்திரி அழைக்கிறான். அந்த அரசன் அதை ஒப்புக்கொள்ளுகிறான்.

குலமகளை அன்னவன்பால் கற்கவிட்டால்

குறைவந்து சேர்ந்தாலும் சேர்தல் கூடும் !

மந்திரி மரபுகளில் நம்பிக்கை கொண்டவன் ; சந்தேகப் பேர்வழி. 'சதுர்வர்ண'ச் சமூகத்திற்கு இணங்காதவர்கள் தனியாகச் சந்திப்பதிலும் மணம் செய்துகொள்வதிலும் நம்பிக்கை இல்லை, 'வர்ணம்' கலந்துவிடுவதால். ஆகையால் ஒரு சூழ்ச்சி செய்கிறான். மன்னன் ஆதரவுப்படி, ஒருவர்க்கொருவர் பார்த்துக் கொள்ளாதபடி செய்கிறான். இருவருக்கும் இடையே திரையிடச் செய்ய வேண்டும் என்கிறான். அரசனுக்குத் தன் மகளை ஒரு இலட்சியக்கவி ஆக்கவேண்டும் என்று அவா இருப்பினும் திரையை அமைச்சர் முன்மொழிய மன்னன் ஒப்புக்கொள்ளுகிறான். இது அவர்கள் சமூக நோக்கில் குறுகிய உள்ளம் படைத்தவர்கள், உண்மையை மறைப்பதற்கும் அஞ்சமாட்டார்கள் என்று தெரிகிறது. மந்திரி உதாரனிடம், அதாவது உயர்கவிஞனிடம், சகலகலா வல்லவனிடம் அவ்வழகியைத் தொழுநோய் கொண்டவள் என்று கூறகிறான். 'தொழுநோய்' ஒரு முக்கிய குறிப்பான் . அது சமூகத்தின் அவல நிலையைக் குறிக்கிறது. சமூகம், பழமை நம்பிக்கைகளில் ஆழ்ந்திருப்பதால் அது ஒரு சாக்கடைத் தொழுநோயில், அழுகிய கொள்கைகளால் பீடிக்கப்பட்டிருக்கிறது. மருண்டவனுக்கு (அரசனுக்கும் மந்திரிக்கும்) இருண்டதெல்லாம் பேய் என்றாகிறது. மேலும் முதல் குடிமகனான கவிஞன் உதாரனைப் பார்வை

இழந்தவன் என்று அரசனைத் தன் மகளிடம் கூறச் சொல்லுகிறான். வெறிகொண்ட பிற்போக்குவாதிகள் முகத்தில் திரையைப் போர்த்துக்கொண்டே சுற்றுப்புறத்தை உணர்கிறார்கள். திரை என்பது காதலர்களுக்குக் குறுக்கீடு என்றாலும் அக்குறுகிய பார்வையில் மிக மேல் மட்டத்திலுள்ள அரசனும் அமைச்சரும் சிறை வைக்கப்படுகிறார்கள். அரசன் எவ்வழி, அவ்வழி மக்கள் என்ற உண்மை வெளிப்படுகிறது. தெய்வத்திற்குச் சமமான அரசன் பார்வையற்றவன். அவர் அரசாளத்தகுதியற்றவன் என்ற உண்மை நாடகத்தின் பிற்பகுதியில் வரும் புரட்சியை எதிர்நோக்குகிறது.

சூதுவாது தெரியாத இளங்காதலர்களுக்கு அரசன் ஆணைப்படி மேடை அமைக்கப்படுகிறது. மேடை என்பது நாடக பாணியிலும் செயற்கை முறையிலும் அமைந்தது. கன்னிமாடத்தை (ஆணுக்கு எட்டாத) ச்சேர்ந்த பூஞ்சோலை : அதன் நடுவில் பொன்மேடை. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி All that glitters is not gold பளபளக்கும் பொருளெல்லாம் பொன்னல்ல. இம்மேடையில் திரை குறுக்கிட காதலர்கள் அமர்கிறார்கள். தொழுநோய் இன்னும் ஒரு பயங்கரமான நோய். அதைக் குணப்படுத்திவிடலாம் என்று மருத்துவ உலகம் உறுதி கூறினாலும்கூட, அரசனையும் அமைச்சனையும் குடிமக்களையும் இந்நோய் தொத்திக்கொண்டிருக்கிறது. மூட நம்பிக்கை, அதனின்று வளரும் சமூக அடக்குமுறை, தங்கு தடையின்றி இளந் தலைமுறையினர் உறவாட நினைக்கும்பொழுது கலைக்கும் கல்விக்கும் காரணமான முதியோர்கள் தங்கள் உணர்ச்சியற்ற கால்களுக்கு அடியில் போட்டு மிதிக்கும்பொழுது, இளவரசியும் உதாரனும் இளம் விதவைகளைவிட மோசமான நிலைமையில் கொண்டு தள்ளப்படுகிறார்கள். மனிதத்தன்மையை உணராத கொடுங்கோலாட்சி ஓங்குகிறது. மக்களும் அச்சமயத்தில் தலையாட்டுகிறார்கள். பொருந்திய தலைவனில்லாததால் இளவரசி பார்வையற்றவனைப் பார்ப்பதற்கு விரும்பவில்லை. அபசகுணமாகியதால், பூனை திடீரென்று பாதையைக் கடந்து குறுக்கே ஓடியதால் அல்லது பல்லி சொல்லும் பலனுக்குப் பயந்து எவ்வளவு திட்டங்கள் இப்பிற்பட்ட சமூகத்தில்

அழிந்திருக்கின்றன என்ற கேள்விக்கு விடை மௌனமும் உளவியலின் பூகம்பம். ஓசையற்றது, ஆனால் சமூகத்தை அழிக்கவல்லது. ஆட்சியாளர்களால் அமைக்கப்பட்ட இந்நாடகம் அவல நாடகம். அது அழிவை நோக்கிப்போகிறது. இவ்வோசைப்படாத நாடகத்தை இருட்டில் நடத்துகிறார்கள். ஆட்சியாளர்கள் இவ்விருட்டு வெளிச்சூழலல்ல, உண்மையில் இவ்விருட்டு மனிதனின் மனதைக் கவ்விக் கொண்டது. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்ற பாரதிதாசனின் அறைகூவலை நினைவூட்டுகிறது. இவ்வவல நிலையில் இருட்காட்டை அழித்தது நிலா பாரதிதாசனின் கவிதையியலின்படி, நிலா வெளிச்சம் கண்ணைக் கூசக்கூடியதல்ல. மனதையும் உடலையும் குளிர்விக்கும். மன அமைதியைக் கொடுக்கும். நிலா 'எங்கெங்கு காணினும் சக்தியடா'! என்று முதல் முதலில் பாடிய கவிஞனை நினைவூட்டுகிறது. அந்நிலாதான் சக்தி. அவள் தான் பெண்! பெண் அமைதிகாப்பவள். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனை அறியாமல் பாலூட்டும் ஒரு உன்னதபிறவி. சமூகத்திற்கு உயிரூட்டுபவள் ! பாரதிதாசன் மிகவும் விரும்பிய அரசியல் நோக்கில் நிலவு என்பது பகுத்தறிவு இருட்டை விலக்கும் குளிர்ந்த ஒளி. உதாரன் ஒரு கவி. நிலாவைப் பார்க்கின்றான். அதன் நிலவு, அமைதியான வெளிச்சம், மன இருட்டையும் விலக்கும். அதனால், தெளிவு ஏற்படும். தெளிவு ஒரு முக்கிய மாற்றத்தைக் கொடுக்கும். ஒரு உன்னதக் கவிஞன் 'புரட்சிக்கவி' ஆகிறான். ஆங்கில அற்புத நவிற்சிக்கவிஞன் ஜான்கீட்ஸ் (John Keats) கவிதையியலைப்பற்றிக் கூறிய அற்புத உண்மை நினைவுக்கு வருகிறது. கவிஞனை ஒரு பந்சோந்திக்கு ஒப்பிடுகிறான். பச்சோந்தி பல வர்ணங்களில் தோன்றும். மாறிமாறி வரும் வர்ணங்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையை ஒத்திருப்பதால் கண் என்னும் புலனால் பச்சோந்தியைக் காண முடியாது. பச்சோந்தியைப்போல கவிஞன் தன் நுண்ணிய உணர்வுகளால் தான் படைக்கும் பாத்திரங்களில் ஒன்றிவிடுகிறான். இது ஒரு இலட்சியக் கவிஞன் என்று பொருள்படும். திறனாய்வாளர்கள் இத்தகைய கலைஞனை (Chameleon-poet)

பச்சோந்திக் கவிஞன் என்று கூறுகிறார்கள். புரட்சிக்கவியைப் படைத்த பாரதிதாசன் படைப்புக்கும் படைப்பவனுக்கும் சிறிய வேறுபாடு கூட இல்லாமல் தன் படைப்புடன் ஒன்றிவிட்டார். வாசகர்களுக்குக் கவிஞனின் இயற்பெயர் மறந்துவிட்டது. காரணப்பெயரே இயற்பெயராக கவிஞனை அடைந்து அடையாளம் கண்டு கொள்ளும் உன்னத நிலையை அடைந்துவிட்டார். உதாரனைப் பற்றி கவிஞன் கூறும் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு இக்கவிதையைப் படித்து இன்புற்றால் உதாரன் இலக்கியப் படைப்பல்ல, கவிஞன் கவிதையியலின் நோக்கில் தன்னையே மாற்றிக்கொண்டான் என்ற உண்மை வெளிப்படும்.

காதல் ஒரு நாடகம். பன்னரும் பூஞ்சோலை அதன் நடுவே ஒரு பொன் மேடை. காதல் நாடகம் நடக்கும் இடம் வாழும் சமூகத்திலிருந்து ஒருவிதத்தில் தொலைவு. அங்கே சமூக அங்கத்தினர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ராணி எலிசபெத் காலத்தில் நாடக மேடையில் சந்திக்கும் துன்பியல் இன்பியல் காதலர்கள் ஷேக்ஸ்பியர் என்னும் நாடகாசிரியர் கற்பனை சக்தியில் உருவாக்கிய ஆணும் பெண்ணும் உலக சுகதுக்கங்களிலிருந்து விலகி, தங்கள் உணர்ச்சிகளைக்கொட்டி, சமூக கட்டறுப்புக்களை மீறி ஒரு புது உலகத்தையே உண்டாக்குகிறார்கள். அக்காதல் உலகம் கவிஞனின் கற்புனையின் விளைவு என்பதால் வாழ்க்கையில் உள்ள மூப்பு, இறப்பு என்பதிலிருந்து விலகியே நிற்கிற அற்புத உலகம். பல அற்புதங்கள் அங்கு நிகழும். பிறகு நாடக முடிவில் காதலர்கள் வாழ்க்கைக்குத் திரும்பிவிடுகிறார்கள். பாரதிதாசனின் நாடகமேடை அப்படிப்பட்ட தனி இடமாக வர்ணிக்கப்படுகிறது. ஆனால் காதலர்கள் சந்திக்கும் பொன்மேடை சமூகத்தின் எதிர்காலத்தையே பாதிக்கும் அல்லது 'மாற்றும் சக்தி உடையது. திரையை அல்லது மூடநம்பிக்கையைக் கிழித்தால், ஷேக்ஸ்பியரின் காதலர்கள் வளம் மிகுந்த கற்பனையுடையவர்கள். ஆனால் உதாரனோ கவிஞன். காதலின் கற்பனையின் உறைவிடம். அவனிடமிருந்த முறையே பீரிடும் கற்பனை வெள்ளம் அதன் விளைவாக உணர்ச்சிவெள்ளம்

சமூகத்தையே மாற்றிவிடும். மரபுவழிச் சமூகத்தைக் குடியரசாக மாற்றும் சக்தி அக்காதலில் மறைந்து கிடக்கிறது. சமகால அனுபவம் என்றால் வரலாற்றுச் சின்னம், அரண்மனை மற்றும் ஒரு மிகப்பெரிய ஆட்சியின் அடையாளங்கள் எல்லாம் நம்மை இறந்த காலத்திற்கு அழைத்துச்சென்று அந்த ஆட்சியின் ஆற்றலை இறந்த கால வரலாறு ஆக மாற்ற வைக்கிறது. அரண்மனையில் உள்ள பூஞ்சோலை சமூகத்தின் எதிர்காலத்திற்கு வித்திட்டிருக்கிறது. அவ்வித்துக்களுக்கு எரு காதலன் - கவிஞன் கற்பனையிலிருந்து உண்டாகிறது. நிலாவின் அற்புத அழகு தூண்டிவிட்ட கற்பனை ஒரு வெடிகுண்டு. பாரதிதாசன் 'புரட்சிக்கவி' மற்ற மரபு நம்பிக்கைகளை மீறிவரும் கவிதைகளைப்போல, உப்பு சப்பில்லாத இறந்த காலத்திற்கு கல்லறை எழுப்பி அதையே எதிர்காலத்தின் நிறுவனமாகக்கொள்வது. மரபு நம்பிக்கைகளை கொண்டு கொடூர ஆட்சியை ஒரு புனிதக் கோட்பாடாகக் கொண்ட இறந்தகாலம். அதன் சமாதியில் எழுந்த கற்பனைக்கூடம் ஒரு குடியரசு, பின்னுக்குத் தள்ளப்பட்ட பொதுவுடைமைக்கோட்பாடு அதன் இலட்சியம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றது திருக்குறள். நெற்றிவேர்வை கடும் உழைப்பின் விளைவாக நிலத்தில் விழ, கிரேக்க புராணிகக் கதைபோல் அக்கதாநாயகன் நிலத்தைத் தொட்டதிலிருந்து பலத்தைப் பெறுகிறான். இப்படிப்பட்ட வீரர்கள் ஆயிரக்கணக்கில் அவனைச் சுற்றிக் கூடுகிறார்கள். வீரம் கைமாறுகிறது.

காதல் நாடகத்தின் இறுதிப்பகுதி அவல நாடகத்தின் இறுதிப் பகுதியைப்போல் வாசகர்களை அச்சுறுத்துகிறது. இதிலிருந்து கவிஞன் வில்லனாக இல்லாமல் கதாநாயகனாக மாறுகிறான். இதற்குக் காரணம் காதலர்களைப் பிரித்த திரை விலகுகிறது, நிலவினால், ஒரு பொருளின் அழகுப் பார்வையைப் பொறுத்தது. உதாரனுக்கு, அற்புத நவிற்சிக் கவிஞனைப் போல் 'A thing of beauty is a joy for ever' இது கவிதையில் வரும் ஒரு வரியல்ல. ஒரு சித்தாந்தம். நிலாவை அதுபோன்ற ஒரு பார்வை பார்க்கிறான். நிலாவும் அமுதவல்லியும் ஒன்று. காதல் பார்வை ஒரு அமுத ஊற்று. சூழ்நிலையினால், முக்கியமாக

பொதுவுடைமை நோக்கினால், அமுது ஒரு எரிமலைப்பிழம்பு ஆகிறது. நிலவு - அமுதவல்லி - புரட்சி என்பவைகள் சமநிலைப்படுத்தப்படுகின்றன. காதல் என்பது பழைய வர்ணச் சமுதாய நோக்கில் கனல் அல்லது தொடப்படாத பொருளாகிறது. அந்தத் தீப்பிழம்பே பழமைச் சமுதாயத்தின் ஆணிவேரை எரிக்கிறது. நாடக இறுதியில் மன்னன், மந்திரி என்ற இரட்டைப் பிறவி வில்லன்களின் சூழ்ச்சி தவிடுபொடியாகிறது. இம்முடிவு ஜனரஞ்சகமான நாடகத்தில் வாசகர்களை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்த சூழ்ச்சி அல்ல. இத்தகைய முடிவை, கதை அமைப்பை, பழைய பாணியில் கதையாகவே ஒரு பாத்திரத்தை நுழைத்துச் சிக்கலை அவிழ்ப்பது என்பதை அரிஸ்டாடிலே தனது கவிதையியலில் கண்டிருக்கிறார். பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' நாடக முடிவு அரிஸ்டாடிலையும் மகிழ்விக்கும். பார்வையற்ற கவிஞன் நிலாவைக்கண்டு ஒரு அமானுஷ்யமான ஒளிபெறுகிறான். கற்பனை ஊற்று வெள்ளப்பெருக்கு எடுக்கிறது. அவ்வெள்ளத்தில் கூடியிருந்தவர்கள் எல்லாம் திகழ்கிறார்கள். அமுதவல்லி - நிலவிலிருந்து அமுதம் ஊறுகிறது. நிலாவொளியைப் பார்த்த அகத்தூண்டுதலினால் பிறக்கும் கவிதை இந்நாடகத்தின் உச்சகட்டம் எனலாம். Thameleon poet என்ற பாரதிதாசன் உதாரனாக மாறுகிறார். கவிஞன் - கதாபாத்திரம் என்று ஒன்றியத்திற்கு அடிப்படை, புரட்சிமனப்பான்மை. அப்புரட்சி கீழ்க்கண்ட வரிகளிலிருந்து சாக்கடைச் சமுதாயத்தை பகுத்தறிவுப் பாசறையாக மாற்றியது :

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து

நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக் !

கோல முழு தும்காட்டி விட்டால் காதற்

கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ ? வானச்

சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்

சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!

காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்

கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!

உனைக்காணும் போதினிலே என்னுளத்தில்

ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு

நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை

நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்

தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்

சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்

கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்

கவிஞ் நிலவே உனைக்காணும் இன்பம் தானோ?

முதல் கவிதை பாடுகிறவன் கவிஞன் என்று உறுதி செய்கின்றது. ஷேக்ஸ்பியர் அவர் முதிர்ச்சியடைவதற்கு முன்பு எழுதிய நாடகமான இளவேனிற்காதல் ( A Midsummer Night's Dream) என்ற நாடகக் கவிதையில் கவிஞனை வர்ணிக்கிறார். கவிஞனின் கற்பனைக்கண் நம் உலகிலிருந்து விண்ணுலகத்திற்குச் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறது. அவனுடைய கற்பனை கடவுளின் ஆக்கத்திறனைப் போன்றது, ஏனென்றால் அவன் சூனியத்திலிருந்து ஒரு பொருளை உண்டாக்குவான். அப்பொருளுக்கு இடத்தையும் தேடி, பெயரும் கொடுப்பான். மேலே கவிதையுருவிலே உள்ள முதல் பத்தி கவிஞனின் கற்பனையின் அற்புத சக்தியை உணர்த்துகிறது. கிரேக்க இலக்கியத்தில் ஓவிட் (Ovid) என்ற கவிஞர் அப்பழைய உலகத்தின் கடவுள்களின் திருவிளையாடல்களைப்பற்றி Metamorphosis என்ற ஆதாரபூர்வமான நூலை ஆக்கி உள்ளார். அதன் தலைப்பிற்குள்ள பொருள் கடவுள்களின் இயற்கை, தன்னை அடையாளம் கண்டு கொள்ளாத உருமாறிக்கொள்வது; இத்தகைய ஆற்றல் கவிஞனுடைய கற்பனைக்கு உண்டு. மேலேயுள்ள முதல் செய்யுள் பத்தி இவ்வுண்மையை உறுதி செய்கிறது. மனிதனுக்கு அப்பாற்பட்ட இயற்கையையே உணவாக அவனுடைய உலகுக்குள் அடக்கிவிடுகிறது. கடவுள்

பல உருவங்களை எடுப்பதுபோல நிலாவைப் பல தோற்றங்களில் காட்சிகளாகப் படைக்கிறான்; மனித உலகத்தில் புலன்களால் அறிந்து கொள்ளும் அழகிய பெண்ணாக நிலாவுக்கு உருக்கொடுக்கிறான். சாதாரண கவிஞனுக்குக்கூடப் பெண் ஒரு கவிதைப்பொருள். நிலாவை எட்டாத தூரத்திலிருந்து இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்து ஒரு அழகிய பெண்ணாக்குகிறான். கவிஞனின் ஆக்கச் செயலைக் கடவுளின் ஆக்கச் செயலுக்குச் சமமாக்குகிறார். அதே பாணியில் ஷேக்ஸ்பியருக்குப் பிரியமான காலைச் செம்பரிதியை ஒரு ஒளிப்பிழம்பாகவே ஆக்குகிறான். இதிலிருந்து கற்பனையைக் கவிஞனால் கூட அடக்கமுடியாது என்று தெரிகிறது.

இரண்டு கவிதைப் பத்திகளுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. முதல் பத்தி கற்பனை நோக்கில் உருவானது. இரண்டாவது பத்தி கற்பனையும் சமூக நோக்கும் கலந்து, இந்த சமூக நோக்கு அரசியலிலும் கலந்து விடுகிறது. புரட்சிக்கும் வித்திடுகிறது. இப்புரட்சி மார்க்சியப்புரட்சி. இக்காலத்தில் விளம்பரத்தை நம்பி நடமாடும் கவிஞர்கள் கொள்கை அல்லது நம்பிக்கை உதட்டளவில் உள்ளது. அவர்கள் கவிதையை விட விளம்பரத்தைத்தான் மதிக்கிறார்கள். தொலைக்காட்சியும் வானொலியும் அவர்களுடைய அரசியல் கருவிகள். ஆனால் உதாரன் உலகம் விஞ்ஞான உலகமன்று, எம்மனிதனும் இத்தகைய உலகத்தில் தன்னுடைய ஆற்றலையோ அல்லது தன்னுள் மறைந்துகிடக்கும் இயற்கை ஆற்றல்களையோ நம்பவேண்டும். இத்தகைய சக்தி உதாரனுக்கு இயற்கை அளித்த ஒரு வரம். இவ்வாற்றல்களில் ஒன்று சமூகத்தில் எந்த மட்டத்திலிருக்கும் மக்களுக்கும் ஒள்ள குறிக்கோளை உணர்வது; அக்குறிக்கோளே நம்பிக்கையாக மாறுவது. முருகியல் கலையில் இம்மாறுதலுக்கு point of view. என்று பெயர். எழுத்தாளர் எந்தப் பாத்திரத்தைக் கலையில் நுழைக்கிறாரோ அந்தப் பாத்திரத்தின் குறிக்கோளுடன் ஒன்றிவிடுவது. இதை இரண்டாவது செய்யுள் பத்தியில் பார்க்கலாம். பாத்திரத்துடன் ஒன்றி விடுவது என்பது உளவியலைச் சார்ந்தது. இந்நோக்கை நாவல் இலக்கியத்தில் நுழைத்தவர் அமெரிக்க நாவலாசிரியர் ஹென்றிஜேம்ஸ் (Henry

James 1843-1916). இவர்தான் உளவியல் நோக்கை நாவல் இலக்கியத்தில் குறிக்கோளாகப்புகுத்தியவர். உதாரன், தொழிலாளர்கள்தான் தங்கள் அயராத உழைப்பினால் சமூகத்தை உருவாக்கியவர்கள். அவர்களைச் சமூகம் இனம் கண்டு கொள்ளவேண்டும். வேலையாட்கள் என்று நினைக்கக்கூடாது என்று விளிக்கிறான். இக்கவிதையில், உதாரன் பற்றிய முருகியல் செய்திகள் மந்திரியின் மூலம் வாசகர்களுக்குத் தெரிகிறது. உதாரன் உன்னத கவிஞனாகச் சித்திரிக்கப்படுகிறான். இந்த இரண்டாவது செய்யுள் பத்தியைப் படித்தால் உதாரன் சமூகத்தின் மேல் மட்டத்திலிருந்து வந்தவனில்லை. பசியின் கொடுமையையறிந்த ஒரு ஏழை என்று தெரிகிறது. வறுமையின் கொடுமையை அறிந்த உதாரன் கற்பனையால் ஒரு ஏழையாகவே மாறிவிடுகிறான். பசி என்றும் துணையாக இருந்த ஏழை மக்களின் நோக்கில் நிலாவிலிருந்து கனத்திருந்த வெண்சோறுகாணும் இன்பத்தைக் கவிஞன் கண்டு களிக்கின்றான். இதை ஆங்கிலத்தில் Pathetic fallacy அல்லது தற்குறிப்பேற்றம் என்று சொல்லலாம். அமைப்பியல் முறையில் இவ்வரிகளை விளக்கும்பொழுது உதாரனின் வாழ்க்கை வறுமைதான் என்று உறுதியாகிறது. இது பாரதிதாசனின் கற்பனையின் உச்சக்கட்டம். இக்கற்பனையின் மூலம் உதாரனுடன் ஒன்றி சமகால மக்களைச் சாடுகின்றார் புரட்சிக் கவிஞர். மார்க்சியம் என்பது கடந்த காலக்கொள்கை; ரஷ்யாவில் நடந்த glad nost என்ற புரட்சி சுட்டிக்காண்பிக்கிறது. ஆனாலும் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எந்தவித்திலும் சமமானவர்களே என்பது உண்மை. தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்றால் அந்தச் சமூகமே செழிக்கும் என்பது உறுதி.

உதாரன் என்னும் சொல் 'உதாரா' என்ற வடமொழிச் சொல்லிருந்து வந்தது. அதற்கு உன்னதமானவன் என்ற பொருளுண்டு. 'உதாரா' என்ற சொல் 'மஹதி' என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. இரண்டாவது சொல்லிற்குப் பெரிய என்ற பொருள். 'உன்னத' 'பெரிய' பெயரடைகளாகவோ அல்லது குறிப்பான்களாகவோ

கொண்டால் அவைகளின் இலக்கணமாக உதாரன் விளங்குகிறான். உதாரன் பாரதிதாசன் கவிதைகளில் ஒரு சிறந்த பாத்திரம்.

## 3/ *பின் அமைப்பியல்* (POST - STRUCTURALISM)

பின் அமைப்பியல் என்ற பெயரிலிருந்தே காலப்போக்கில் பார்த்தோமானால் அவ்வியக்கம் அமைப்பியலுக்கு பின்பு வந்தது என்று தோன்றும். அமைப்பியல் இலக்கியத்திறனாய்வில் ஒரு முக்கியப் பிரிவாக வளர்ந்து திறனாய்வின் மரபு நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்தது. மொழியியலின் போக்குகளைப் பின்பற்றி, ரோலந்த் பார்த் அமைப்பியலை " a way of analysing cultural artefacts that originates in the methods of linguistics" என்று டைம்ஸ் இலக்கிய இதழுக்கு எழுதிய கட்டுரையில் பொருள் வரையறை செய்தார். அமைப்பியல் என்பது மொழியியலின் கோட்பாடுகளைக் கொண்டு குறிப்பான் குறியீடுக்கு உள்ள தொடர்பைப் பேராசிரியர் சசூரின் வரையறைகளைப் பின்பற்றித் திறனாய்வு செய்தது என்பதை நாம் அறிவோம். பார்த்தின், மேலே குறிப்பிட்ட ஆங்கிலக் கோட்பாட்டின்படி கலைப்பொருள்களை மொழியியல் கொள்கைகளைப் பின்பற்றி ஆராய்வது என்பது ஒரு அடிப்படைக் கொள்கை. பார்த் உயிருடன் இருக்கும்பொழுதே அமைப்பியல் திறனாய்வின் முக்கிய கட்டம் என்பது உறுதியாகிவிட்டது. ஆகையால் பார்த்திற்குத் தான் கண்டுபிடித்த திறனாய்வு முறையைத் தன்னாட்டு அறிஞர்களும் அமெரிக்க அறிஞர்களும் வெகுவாகப் பின்பற்றுகிறார்கள் என்று அறிந்து அதைக் கூர்ந்து கவனித்தார். கூடவே, தான் உண்டாக்கிய அமைப்பியல் திறனாய்வை ஆராய்ந்தார். இக்கட்டத்தில் அவரை Post - structuralist அல்லது பின் அமைப்பியல் திறனாய்வாளர் என்று பலநாட்டு அறிஞர்களும் வருணித்தார்கள். இக்கால கட்டத்தில் பின் அமைப்பியலைப் பற்றிச் சற்றுக் குழப்பமே இருந்தது. இக்குழப்பத்தை நீக்கியவர் Jacgues Derrida (ஜேக்ஸ் டெரீடா) என்ற பிரெஞ்சு அறிஞர். 1930-ல் பிறந்த டெரீடா மெய்யுணர்வியல் பயின்று திறனாய்வாளர் ஆனவர். சித்தாந்தத்

துறையைவிட திறனாய்வுத்துறையைப் பெரும் தாக்கத்துக்குள்ளாக்கிவிட்டவர். அவர் தனக்கு வழி காட்டிய பார்த்தின் அமைப்பியல் கொள்கையில் குற்றம் கண்டுபிடித்தார். 'Structuralism has nonsense of structure' என்றார். அமைப்பியலில் அமைப்பியல் கொள்கை இல்லை, அமைப்பியல் மையம் இல்லை என்று குற்றம் சாட்டினார். தனது கருத்துக்கள் கொண்ட கட்டுரையான 'Structure, sign and play in the Human Sciences' என்பதை ஜான்ஹாப்கின்ஸ் (John Hofkinsa) என்ற வாஷிங்டன் தலைநகருக்கு அருகேயுள்ள பல்கலைக்கழகத்தில் 1968-ல் நடந்த உலகக்கருத்தரங்கில் அளித்தார். அச்சமயத்தில் அமைப்பியல், பின் அமைப்பியல் கருத்துக்களைப் பற்றி வதந்திகளே அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் நடமாடிக் கொண்டிருந்தன. இக்கருத்தரங்கிற்கு முன்பே டெரிடாவின் ஆராய்ச்சிக்கட்டுரைகள் அவருடைய நாட்டில் பல ஆராய்ச்சி இதழ்களில் வெளிவந்து கொண்டிருந்தாலும், மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் இக்கருத்தரங்கை மனதில் கொண்டு பின்அமைப்பியல் தொடக்கத்திற்கு 1966-ஐ அதிகாரபூர்வமான தேதியாக எடுத்துக் கொள்ளுகின்றனர்.

### 4. *கட்டவிழ்ப்பியல்*

'பின் அமைப்பியல்' என்ற கலைச்சொற்றொடரைத்தவிர, இன்னொரு கலைச்சொல்லும் இத்திறனாய்வு முறையைக் குறிக்கிறது. அது Deconstruction (கட்டவிழ்த்தல்) முறை என்பது. இதை இரண்டு விதமாகக் பொருள்கொள்ளலாம். ஒன்று ஒரு கலைப்படைப்பிற்கு அமைப்பு இருந்தாலும் ஒரு மையம் இல்லை. முருகியல் பொருளுக்கு அதாவது கற்பனையின் மூலம் விளைந்த பொருளுக்கு அல்லது உயிரிப்பொருளுக்கு மையம் அமைவது கடினம். இதை ஆங்கிலக்கவிஞர் யேட்ஸ் (Yeats 1865-1939) என்பவரின் செடியைப்பற்றிச் சிறந்த காவியத்தைக்கொண்டு விளக்கம் கூறலாம். செடியைப் பார்த்துக் கவிஞர் ஒரு கேள்வி கேட்பது திகைப்பூட்டும். ஓ செடியே! உனக்கு மையம் எங்கிருக்கிறது ? பூ விலா? இலையிலா? அல்லது வேர்களிலா? செடி உயிருள்ள பொருள். மனிதனுடைய உயிர் எவ்வுறுப்பில்

இருக்கிறது என்பது போன்று கடினமான கேள்வி யேட்ஸின் கேள்வி. ஆகையினால் கட்டவிழ்ப்பியல் என்ற கொள்கை பொதுவாக ஒரு கலைப்பொருளுக்கு மையம் இல்லை என்பதைவிட கட்டவிழ்ப்பியல் என்பது: any text inevitably undermines its own claim to have a determinate meaning, and licenses the reader to produce his own meanings.

ஒரு மூல நூல் (எந்த வகைமையாக இருந்தாலும்) அதற்குத் திட்டவட்டமான பொருள் உண்டு என்று உரிமை கொண்டாடுவதை அதுவே தனக்குத் தெரியாமல் கீழறுத்துவிடுகிறது. இந்நோக்கில் பாரதிதாசனின் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதையை கட்டவிழ்ப்பு முறையில் ஆராய்ந்து பார்ப்போம்.

*'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' : கட்டவிழ்ப்பியல் திறனாய்வு*

இக்கவிதையில் அடிக்கருத்தியல் (Theme) இரண்டு உள்ளது. ஒன்று: புராணிகம் (myth) இன்னொன்று, காதல். அடிக்கருத்தியல் இலக்கிய வகைமைக்கு அல்லது ஒரு காவியத்திற்கு இன்றியமையாதது. அதை நீக்கிவிட்டால் அமைப்பில் ஒரு இடைவெளியை உண்டாக்கும்; நிரப்பமுடியாது. இது இரண்டுமே இல்லாவிட்டால் பாரதிதாசனின் காவியத்தை இனம் கண்டுகொள்ள முடியாது. 'மித்' என்ற ஆங்கிலச் சொல் உண்மையான அல்லது கற்பனையான கதை அல்லது உட்கரு என்று பொருள்படும். தற்காலத்தே புராணிகத்துள் அடங்கிய கதை உன்னத நிகழ்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. பொதுவாக இதில் வரும் பாத்திரங்கள் கடவுள்களாகவோ அல்லது தேவர்களாகவோ இருப்பார்கள். இவர்கள் ஒரு உன்னத குணங்களை உடைய மனிதனையோ அல்லது ரிஷிகளையோ அசுரர்களிடமிருந்து காப்பாற்றிடுவார்கள். அப்படிப்பட்ட மனிதனோ அல்லது ரிஷியோ மறுக்க முடியாத பாத்திரங்கள் ஆவார்கள். வாசகர்களின் நோக்கில், இக்கதையமைப்பில் மனதிற்கு அமைதியளிக்கும் பல அற்புதங்களும் நிகழும். ஆனால் அசுரர்கள் திடுக்கிடும் சாகசச் செயல்களைச்

செய்வார்கள். இவ்விதப் புராணிகக் கதைகள் கீதையில் கிருஷ்ண பரமாத்மா சொன்னது போல் : 'குற்றம் செய்யாத, அமைதி விரும்புகிறவர்களைக் காப்பாற்றித் தர்மத்தை நிலை நிறுத்த ஒவ்வொரு யுகத்திலும் இவ்வுலகில் அவதரிக்கிறேன்'. புராணிகக்கதையின் உள்நோக்கு, தர்மம் என்றும் வெல்லும். அதர்மம் அழிவுப்பாதையில் செல்லும். இக்கவிதையில் புராணிகக்கதையைக் காதற்கதையுடன் இணைக்கிறார் பாரதிதாசன். ஆனால் காதற்கதையில் 'காதல்' என்ற கருத்தியலுடன் இணைக்கிறார். தன்னுடைய பகுத்தறிவு நோக்கில், காதற்கதையில் பொதுவாகப் பெண் அல்லது காதலி என்பவள் காதலனுக்குக் கட்டுப்பட்டவள். 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' மரபுவழிக் கட்டுப்பாட்டை வேண்டும் என்றே மீறுகிறது. படிவம் மாறுபட்டுப் பெண்ணை ஆணுக்கு உயர்ந்தவளாகப் படம் பிடிப்பதால், இற்றைய இலக்கியத்தில் வரும் பெண்ணுரிமைக் கோட்பாட்டை நெருங்குகிறது. அற்புத மூலிகைகளைக் கதாபாத்திரங்கள் பயன்படுத்துவதால், அற்புத நிகழ்ச்சிகள் புராணிகக்கதைகளில் வருவதுபோல் உள்ளன. ஆனால் இந்நிகழ்சிகள் வஞ்சப் பழிப்புரைக்குச் சான்று. வஞ்சப்பழிப்புரை சமூக அங்கதமாக (Social Satire) மாறுகிறது. ஆகவே 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' புராணிகம், காதல் என்ற அடிப்படைக் கருத்துகளை கையாண்டாலும்கூட, மரபு வழிகளை வேண்டுமென்றே மீறிச் சமூகத்தின் இன்னல்களைச் சாடுகிறது. கட்டவிழ்த்தல் முறையில் இக்கவிதையைத் திறனாய்வு செய்யலாம். கவிதைக்கலையில் மரபு வழிக்கொள்கைகளை மீறுவதால்.

மேலே குறிப்பிட்ட ஜேக்ஸ்டெரீடா தன் கட்டுரையில் அமைப்பியலில் 'அமைப்பு' இல்லை என்று குற்றம் சாட்டுகிறார். இதன் உட்கருத்து அமைப்பியல் திறனாய்வு நோக்கில் அமைப்பியலை ஒட்டு மொத்தமாகக்கொண்டால் அதற்கு ஒரு மையம் வேண்டும் என்கிறார் டெரீடா. ஆனால் அந்த மையத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்று உணர்கிறார்.

வட்டத்தின் சுற்றளவு எங்குமிருக்கும். ஆனால் மையம் எங்குமிருக்காது என்பதே உண்மை. அதனால்தான், செவ்வியல்

சித்தாந்தத்தின் மூலம் டெரீடா தன்னுடைய தத்துவஞானத்தைப் பயன்படுத்திச் சொல்லுகிறார்.

The center is at the center of the totality, and Yet since the center does not belong to the totality (is not part of the totality), the totality has its center elsewhere ............ (Modern Criticism and Theory, Pg. 109)

மையம் என்பது முழுமையின் மையம். ஆனால் மையம் என்பது முழுமைக்குள் அடங்காததால் இம்முழுமையில் மையத்தைக் காண முடியாது என்கிறார் தத்துவஞானி டெரீடா. இதிலிருந்து உயிருள்ளபொருள் (Organic thing) எதுவாயிருந்தாலும் பிராணி, செடி கவிதையானாலும் மையத்தை நிர்ணயிப்பது கடினம். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதையில் அதன் மையம் பர்வதத்தின் உச்சியா அல்லது சாரலா என்ற கேள்விக்கு விடையளிப்பது கடினம். ஆகவே இக்கவிதை புராணிகம், காதல் என்ற அடிக்கருத்தியல்களைக் கையாண்டாலும் அவைகளில் இனம் கண்டு கொண்டபடிவங்களை மீறுகின்றதா என்ற கட்டவிழ்ப்பியல் கேள்விக்குத் திறனாய்வின் மூலம் விடை காண்போம். இத்திறனாய்வின் முடிவு மேலே கூறிய கருத்தின் விளக்கம்.

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதையின் தொடக்க பத்தி காதல் என்ற கருத்துடன் உறவாடிக் கொண்டிருக்கிறது. இயற்கையின் கூறுகள்: குயில் கூவுதல், மயில் ஆடுதல், காற்றின் மணம், கண்ணாடி போன்ற நீர் ஊற்றுக்கள், கனிமரங்கள், மணங்கமழும் பூக்கள் முதலியன இச்சாரல் காதலின் இருப்பிடம் என்று அறை கூவுகின்றன.

வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு

காட்டு மறவர்களும் காதல் மணம் செய்வதுண்டு

கவிஞர் முதன் முதலாகச் சாரலைக் காதலுடன் தொடர்புபடுத்துகிறார். எப்படிப்பட்ட காதல்? காட்டு மறவர்கள் காதல் செய்யும் இடம்; வேட்டுவப் பெண்களும் விளையாடும்

இடம். மறவர்களும் வேடர்களும் காட்டையே நம்பி வாழ்கிறவர்கள். அவர்களுடைய வாழ்க்கை நாகரிகத்தின் செயற்கைச் செயல்களால் பாதிக்கப்படாததால் அக் காதல் அப்பழுக்கற்றது: புனிதமானது. குப்பன் எனும் வேடக்குமரன் வஞ்சியைக் காதலிக்கிறான். குப்பன் ஆசை அடங்காத வாலிபன். வஞ்சியோ ஒரு அழகி. அவனுடைய உணர்ச்சிகளை மீறும்படி தன் ஆசையைத் தெரிவிக்க முயல்கிறான். வஞ்சி அவனை அடக்குகிறாள். கவிதையின் தொடக்கம் மரபுவழிக் கவிதையின் தொடக்கம் போல் ஒரு மாதிரிப் படிவமாக இருக்கிறது. பாரதிதாசன் தனக்கே உரிய பாணியில் காதலுக்கு மெருகு ஊட்டுகிறார். வர்ணனையில் கவிஞனின் உணர்ச்சி வேகம் மூலம் ஆண் காதலில் பொறுமையின்மை தெரிகிறது. அவர் மொழியில் காதல் கருத்தில் சுவை கூட்டுகிறது. இதை 'சிருங்கார ரசம்' என்று கூறலாம். இச்சுவை குப்பனுக்கே உரியது என்பதைக் கோடிட்டுக் காண்பிக்கிறார். வஞ்சி குப்பனுடைய காதலியாகஇருந்தாலும் நிதானம் தவறாதவள். பொறுமை இழக்காதவள். கதைப்போக்கின்படி இது வரையில் 'காதல்' என்ற கருத்தியல் மரபுவழியைச் சார்ந்தது. இதற்கிடையே வஞ்சி காதலில் திளைத்திருக்கும் குப்பனை நினைவுபடுத்துகிறார். கடமையை உணர்த்துகிறார். காதலிக்கே உரிய பாணியில் தன் காதலன் சொல்லிய மூலிகைகளைச் சஞ்சீவி பர்வதத்திற்கும் கூட்டிப்போய் பறித்துக் கொடுக்கும்படி போர் தொடுக்கிறாள். இல்லையேல் அவள் சடலத்தைத்தான் பார்க்க முடியம் என்று பயமுறுத்துகிறாள். 'மூலிகை' என்ற சொல் காதல் உலகத்திற்கு அந்நியமானது. அது ஏதோ மருந்தைக் குறிக்கிறது என்று வாசகர்கள் உணரலாம். பழக்கப்பட்ட இந்திய வாசகர்களாயிருந்தால் இக்காதல் கதை சுவையாக இருக்கும் போல் இருக்கிறது என்று உணரலாம். ஆனால் இந்த மூலிகை ரகசியத்தைத் தன் காதல் தொடர்பை உறுதிப்படுத்துவதற்காக உடைத்து விடுகிறார் குப்பன். இத்தருணத்தில் இயற்கைக் காதல், கவிதையின் மரபுகளை, குப்பன் ரகசியத்தை உடைத்தெறிந்து விடுவதுபோலக் கவிஞன் உடைத்தெறிந்து விடுகிறார். இற்றைய ஜனரஞ்சகமான கதைகளில் வரும் (Suspense) இடை நிறுத்தம் என்ற

உத்தியைக் கையாண்டு வாசர்களின் ஆர்வத்தை ஊசலாட விடுவதில் கவிஞருக்கு நம்பிக்கையில்லை போலும். இக்காதல் நாடகத்தில் மூலிகையின் அந்தரங்கத்தைக் குப்பன் வஞ்சிக்கு அல்லது வாசகருக்குக் சொல்லி இக்கதை அதிசுவையானது என்று உணர்த்துகிறார். மூலிகை என்பது இயற்கைக் குணங்களை உடையதன்று. அமானுஷ்ய உலகத்தைச் சேர்ந்ததைப்போல ஒன்றைத் தின்றால் இவ்வுலக மக்கள் பேசுவதைக் கேட்கலாம்; இன்னொன்றைத் தின்றால் இம்மண்ணுலகக் காட்சிகளைப் பார்க்கலாம்' என்று கூறுகிறான். அதனால் இது இயற்கைக் காதல் கதை அல்ல மரபுகளை மீறிய கதை என்று உணர்த்துகிறார். பொது வாசகர்கள் பழக்கத்தின் காரணமாக இது ஒரு புராணக் கதைபோல் இருக்கிறது என்று 'பாரதிதாசன் கவிதைகள்' என்று நூலை மூடிவிடலாம். ஆனால் பாரதிதாசன் வாசர்களுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுகிறார். குப்பன் வஞ்சியிடம் காதல் பரிசை வாங்குவதிலேயே குறியாயிருப்பதால் அவளைப் பர்வதத்திற்கு அழைத்துச் செல்ல தயங்குகிறான். அவனைச் சாடுகிறான்:

என்னடி! பெண்ணே நான் எவ்வளவு சொன்னாலும்
சொன்னபடி கேட்காமல் தோஷம் விளைக்கின்றாய்!
பெண்ணுக் கிது தகுமோ? வண்ண மலர்ச் சோலையிலே
எண்ணம் வேறாகி இருக்கிறேன் நான்.

என்று பொறுமை இழக்கின்றான், தன் காதல் தோல்வியைப் பொறுக்க முடியாமல். அப்பொழுது வஞ்சி குமுறுகிறாள். பெண்ணுரிமையைப் பற்றி:

பெண்ணுக்கு பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
..............................................................................

ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு ........................

என்று பொரிகிறாள் வஞ்சி. இக்கட்டத்தில் மரபுப் பெண்ணைவிட அளவுக்கு மீறிக் கோபப்படுகிறாள். பாத்திரத்தின் குரலோடு கவிஞர் குரலும் கலந்திருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது. இக்கவிதை வெளிவந்த காலத்தில் பாரதியைத்தவிர, பெண்ணுரிமைக்கு அதிகமாகவே குரல் கொடுத்தவர் பாரதிதாசனே ஆவர். வாசகர்களுக்கு இக்கவிதை எவ்விதம் வளரும் என்று எதிர்பார்க்கும் உரிமை உண்டு. அதன்படி பெண்ணுரிமை என்பதற்கு கவிஞர் முக்கியத்துவம் கொடுப்பார் என்று ஊகிக்க இடமுண்டு. புராணிகமும் பெண்ணுரிமையும், கவிதையியல் மரபுகளுக்கு மீறியதாயிருந்தாலும், வாசகர்களுக்கு ஆர்வம் என்பதைத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. வஞ்சி கேட்கும் கேள்விகள் ஆங்கிலத்தில் rhetorical questions என்பதாகும். இவை அறிவுத் திறனால் எழுபவை. கேள்விகளுக்கு அக் கேள்விகளே பதிலிருக்கும் தன்மையுடையவை. பேச்சுரிமை என்பது தன் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளியிட எச்சூழ்நிலையிலும் பெண்ணுக்கு உரிமை உண்டு. இந்நிலையில் வஞ்சி குப்பனைவிட உலகம் தெரிந்தவள் என்பதைக் காட்டுகிறது. அவள் பர்வதத்திற்குப் போக வேண்டும் என்ற வற்புறுத்தும் பொழுதும் 'உயிரை மாய்த்துக்கொள்வேன்' என்று அச்சுறுத்தும் போதும் அவள் ஒரு கோழையோ அல்லது அற்புத நவிற்சிப்பாத்திரமோ அல்ல. அவளுடைய கேள்விகள் அவள் குப்பனைவிட அறிவில் சிறந்தவள் என்பதை உறுதியாக்குகிறது. அவள் அறிவு அல்லது பகுத்தறிவு, பர்வதத்தில் குப்பன் கோழையாகும் பொழுதெல்லாம் அவனை ஆண்பிள்ளையாக்குகிறது. குப்பன் பகுத்தறிவை மறந்து நடக்கும் பொழுதெல்லாம் கவிஞரின் நகைச்சுவையின் வெளிப்பாடு என்று கொள்ளக்கூடாது. அவருடைய முதல் பாடல் பெண்சக்தியின் இருப்பிடம், பெண் இல்லையென்றால் இவ்வுலகம் இல்லை என்று உண்மையை உலகுக்கு அறிவிக்கிறது. பாரதியாரைவிடப் பெண்ணுரிமையில் பாரதிதாசனுக்கு வேகம் உண்டு. விதவையையே தன்னுடைய காதல் பாட்டுக்களில் ஒருமுக்கிய பாத்திரமாக ஆக்கியதால். இப்பெண்ணுரிமை நோக்கில் மேலை நாட்டுக் கவிஞர்களுக்கும்

பாரதிதாசனுக்கும் ஒற்றுமை உண்டு. பெண்ணுரிமை, அதன் செய்திகள் உட்பட, மரபுக் கவிதைகளில்வரும் காதல் என்ற கருத்திற்கு எதிர்மறை. பெண் ஒரு விளையாட்டு பொம்மையோ அல்லது காட்சிப்பொருளோ அல்ல. மனிதனைப்போல் அவள் சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவள் என்னும் கவிஞன் குரலைக் கேட்கிறோம்.

மூலிகையில் தணியாத ஆசை கொண்டு குப்பன் உதவியில்லாமல் சஞ்சீவி பர்வதத்திற்கு அவள் ஏற உறுதி கொண்டிருக்கிறாள். ஆகையால் கல்லில் கால் கடுக்க நடந்து, பாதையில் விலங்குகள் நடமாடக் குப்பன் அவளுடன் போகும்படி நேர்ந்தது. இக்கவிதையில் பல வரிகள் குப்பன் மூலிகையை வஞ்சிக்குக் காட்டுவதைவிட அவளுடைய காதலைப் பெறுவதையே குறிக்கோளாக வைத்திருக்கிறான் என்று காட்டுகின்றன. இது மரபு வழியை மீறுவது. ஆண் பெண்ணுடன் எவ்விதத்திலும் சமநிலை இல்லை என்பதைக்காட்டுகிறது. இப்பெண்ணுரிமைக் கோட்பாட்டில் உச்சகட்டம் வஞ்சி குப்பனை மூலிகையின் பாதிப்பில் இருந்து பகுத்தறிவினால் காப்பாற்றுவது. காதலன் மூடநம்பிக்கையைப் பகுத்தறிவு நம்பிக்கையாக மாற்றுகிறாள். அவன் அவளை அழைப்பதைக் குறிப்பானாகக் கொண்டால் வஞ்சியை எப்பொழுதும் காதல் பதுமையாகக் கருதுகிறான், அவளோ பகுத்தறிவுவாதியாகத் திகழ்கிறாள். ஆகவே குப்பன் அற்புத நவிற்சியியலையும் (Romanticism) வஞ்சி எதிர் அற்புத நவிற்சியியலையும் உருவகமாகக் கொண்டிருக்கிறார்கள். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் உயர் பண்பு இவ்விருபோக்குகளுமே. இப்பண்புகள் கவிதைப் பண்புகளல்ல. சமூகவியல் நோக்குகள். இதற்குச் சான்று முத்தங்களைப் பற்றி அவர்கள் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்கள். முத்தம் என்பதைக் குறிப்பானாக எடுத்துக்கொண்டால் மேலைச் சமூகச் சூழ்நிலையில் அது சமூகத் தொடர்புகளுக்கு இன்றியமையாதது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்கள் இடையே வயது வேறுபாடுகள் அதிகமாகஇருந்தால் நட்பைக் குறிக்கும். அதை ஒரு சமூகக் குறியீடாகவும் எடுத்துக் கொள்ளலாம். நம் சமூகச்சூழ்நிலையில் அது காதலை உணர்த்தும். நட்பை அல்ல.

அது தவிர்க்க முடியாத குற்றமாகவே கருதப்படுகிறது. சினிமாக் காட்சிகளில் மறைமுகமாக நுழைத்து பாமர ஜனங்களைத் திசை திருப்புகிறார்கள். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குப்பனைக் கருவியாகக் கொண்டு சமூகத்தை மறைமுகமாகக் கண்டிக்கிறார்.

'என் கிளியே நீ முத்தம் எத்தனை ஈ வாய்? என்றான்.

என்றன் கரத்தால் இறுக உமைத்தழுவி

நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன் என்றாள்.

ஆகையால் ஓர் முத்தம் அச்சாரம் போ' டென்றான்.

பழமை வாதிகள் இதை எதிர்ப்பார்கள். கவிஞனுக்கு அடக்கம் இல்லை என்று குற்றம் சாற்றுவார்கள். சமூகக் கொள்கைகளை நம்பும் போலிகளும் இதை எதிர்த்துப் பாரதிதாசனை வசைபாடி வாசகர்கள் மனநிறைவு அடைவார்கள். ஆனால் இப்பத்தியில், மேலே கூறியபடி, அற்புத நவிற்சி நோக்கும் அதன் எதிர் நோக்கும் எதிர்மறைகளாகின்றன. வஞ்சி, இயற்கையாகவே, குப்பனின் ஆசையைத் துண்டுகிறாள், நூறு முத்தங்கள் கொடுப்பேன் என்று. ஆனால் காதலன் நிதானமாக ஒன்றே ஒன்று அச்சாரமாகக் கேட்கிறான். இப்போக்கை எண்களைக் கவிதையில் பயன்படுத்துவதை, பதினேழாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிதையில் காதலைப் பொருளாகக் கொண்ட Metaphysical Poetry அல்லது நுண்பொருள் ஆய்வுக் கோட்பாட்டியல் கவிதைகளில் காண்கிறோம். இதை amatory arithmetics அல்லது காதல் கணக்கு என்று திறனாய்வாளர்கள் இனம் கண்டு கொள்ளுகிறார்கள். பாரதிதாசன் போக்கு இதில் வேறுபடுகிறது. வஞ்சி நூறு முத்தங்கள் பர்வதத்தில் கொடுக்கிறேன் என்று உறுதியளிக்கிறாள். ஆனால் ஒன்றே ஒன்று அச்சாரமாகப் போதும் என்று பதிலளிக்கிறான். வஞ்சி காதலை எண் மூலம் கொட்டும் பொழுது காதலன் நிதானமாக ஒன்றே போதும் என்று 'வணிக முறையில்' பதிலிறுக்கிறான். இங்கே அற்புத நவிற்சிப் போக்கும் அதன் எதிர்ப்போக்கும் ஒன்றோடொன்று காதல் நோக்கில் இணைவதைப் பார்க்கலாம். இத்தகைய போக்கு ஒரு இழை போல் கவிதையில் ஓடி மரபுவழியைத் தடம்புரள வைக்கிறது.

பச்சிலைக்குப் பர்வதம் செல்வேன் என்று வஞ்சி சூளுரைக்கிறாள். அப்பர்வதத்தில் வஞ்சிக்கும் குப்பனுக்கும் உள்ள காதல் உறவு சாரலில் இருந்ததற்கு மாறாகக் காட்சியளிக்கின்றன மூலிகையின் அற்புத குணங்கள் இருவருக்கும் தெரிந்திருந்தாலும்கூட ஒரு தெளிவான மாற்றம் தெரிகிறது. சாரலிலே காதலர்கள் கொஞ்சி விளையாடுகிறார்கள். மரபுவழிப்படி. சஞ்சீவி பர்வதத்திலே மூலிகையின் அற்புத குணங்கள், அம்மூலிகையை இருவதும் உண்டபொழுதும் வஞ்சி ஒரு பகுத்தறிவுப் பெண்ணாக மாறி, தன் காதலன் கோழையாக மாறினாலும், அவனை அமைதிப் படுத்துகிறாள். இக்கட்டத்தில் செயலில் வீராங்கனையாக இல்லாமல் அறிவியலில் காட்சியளிக்கிறாள். பாரதிதாசன் முதல் பாட்டில் கூறியது போலச் சக்தியாகவே காட்சியளிக்கிறாள். அவர் ஆசானான பாரதியாருக்குச் சக்தி பாராசக்தியாக உருவெடுக்கிறாள் சமய நிலையில்.சமூகநிலையில் அவ்வெண்ணமே பாரதிதாசனுக்கு ஒரு புதுப்பெண்ணாகத் தோன்றுகிறாள். பாரதிதாசன் கவிதைகளிலோ பெண் என்பவள் ஆணைவிட உயர்ந்தவளானாலும் அவள் சமூகத்தின் உயிர். உன்னதமான உலோகாயதப்பொருள். மரபுவழியாக வந்த ஒரு அவநம்பிக்கை. 'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்ற கொள்கைக்கு எதிர்மாறானது. பெண்ணை முழுமையாக நம்பலாம். அவள் ஒரு அறிவு ஜீவி என்கிறார் கவிஞர். இதை உறுதிப்படுத்துவதற்கு மூலிகையை ஒரு கொள்கையாகவே பயன்படுத்துகிறார். மூடநம்பிக்கைகளால் விளைந்த மாயை அல்லது சமூகப் போக்கை மூலிகையை மரபுவழியில் பயன்படுத்திப் பல அற்புத நிகழ்ச்சிகளைக் கதையில் நுழைக்காமல் மன உறுதியுடன் வஞ்சியைக் குப்பனுக்கு வழிகாட்டியாக ஆக்குகிறார். கவிதைக் கொள்கைப்படி சஞ்சீவி பர்வதம் பல அற்புத மூலிகைகளைக் கொண்டிருந்தாலும், மூலிகைகள் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் இராம, இலட்சுமணர் என்கிற காப்பிய வீரர்களை உயிர்ப்பித்தாலும் இக்கதையில் கோழையை வீரனாக ஆக்குகிறது. கதையின்மூலம் மூலிகைகள் பகுத்தறிவுக் கொவ்வாத நிகழ்ச்சிகளை நுழைத்தாலும் ('தூரதிருஷ்டி' என்று வடமொழி இலக்கியத்தில்

சொல்லுவார்கள்) காதலர்கள் நிற்குமிடம் பகுத்தறிவுப் பாசறையாக மாறுகிறது. இவ்விடத்தில் அவருடைய கவிதையில் கசப்புணர்வு தெரியவில்லை. அங்கதமே தெரிகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆங்கில அங்கதக் கவிஞர் ஜான்ட் ரைடன் 'To provoke and not to wound' என்ற கொள்கையைப் பின்பற்றினார். இந்நிலையில் மதவாத, மிதவாத வாசகர்களின் மனநிலையை நிந்தனையின் மூலம் அழிக்காமல், வெறுப்படையச் செய்யாமல், சிந்திக்க வைக்கிறார். பகுத்தறிவிற்கும் மூடநம்பிக்கைக்கும் உள்ள இடைவெளியை வாசகர்கள் உணரும்படி செய்கிறார். மூலிகை மரபுவழிக்கதைகளில் அற்புத நிகழ்ச்சிகளை உண்டாக்கி மனிதர்களை மாமனிதர்களாக ஆக்குகிறது. கவிஞரின் மூலிகை அற்புத நிகழ்ச்சிகளை உண்டாக்கினாலும் பாகவதன் சொன்ன சஞ்சீவி பர்வதத்தின் கதை மூலமாகவும் வஞ்சி விளக்கம் மூலமாகவும் கோழையான குப்பனை பகுத்தறிவாளனாக மாற்றுகிறது. பாகவதன் பாத்திரம் ஆளிவாயனாக இருப்பதால் அசாதரண பாத்திரமாகவும் காசைத்தட்டி அதன் ஓசையில் இன்புறுபவனாகவும் மாற்றப்பட்டு சமூக வளையத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்படுகிறான். இது கவிதையின் மரபு நிபந்தனைகளைக் கவிஞன் மீறுவதற்கு இன்னொரு சான்று. இவ்வாறு மரபுவழிச் சமூக நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் உருமாறி வருவதினால் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதை கட்டவிழ்ப்புத்திறனாய்விற்கு ஏற்புடைத்தாகிறது. புராணிகம், காதல் என்ற கருத்தியல்களைப் பயன்படுத்திக் கவிதைப் போக்கில் பல மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு இலக்கியப் புரட்சியையே உண்டு பண்ணுகிறார் பாரதிதாசன்.

ஜேக்ஸ் டெரீடாவின் கட்டவிழ்ப்பியலைத் தத்துவ நோக்கில் விரிவுபடுத்தினால் பல சுவையான செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். இதில் முக்கியமான செய்தி இம்முறையை அறிவுலகத்தில் எக்கட்டத்திலும் கையாளலாம். குறிப்பாக எதிர்றைகளில். காரணம் டெரிடாவின் திறனாய்வின் அடித்தளம் அவருடைய தத்துவ ஆட்சி. அவர் தத்துவத்திலிருந்து திறனாய்விற்கு வந்தவர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம்

ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் 1966-ல் நடந்த பன்னாட்டுத்திறனாய்வுக் கருத்தரங்கில் டெரீடா ஒரு கட்டுரையை அளித்தார் என்பது வாசகர்களுக்குத் தெரிந்த செய்தியே. இக்கட்டுரையில் பல ஆண்டுகளாக அமைதிகாத்த திறனாய்வுக் கொள்கைகளை அவர் தத்துவ ரீதியில் எதிர்ப்புகளைத் தெரிவித்தார். இக்கட்டுரையை அதன் பின் விளைவுகளை நோக்கினால் ஐயர்லாந்து நாட்டைச்சேர்ந்த ஜேம்ஸ் ஜாய்ஸ் என்ற எழுத்தாளர் 'யூலிஸ்ஸஸ்' என்ற நினைவோடை நாவலை வெளியிட்டு நாவல் உலகத்தில் ஒரு பூகம்பத்தை உண்டாக்கினார் என்று திறனாய்வாளர்கள் கூறுவர். அத்தகைய பூகம்பத்தை தன்னுடைய புகழ்பெற்ற கட்டுரையில் எழுப்பிய அறிவியல் கேள்விகளின் மூலம் மேலை நாட்டுத் திறனாய்வின் அடித்தளத்தையே தகர்த்தெறிந்தார். இதன் விளைவாக அமெரிக்காவின் தலைசிறந்த யேல் (Yale) பல்கலைக்கழகம் கட்டவிழ்த்தலின் முக்கிய களமாக மாறியது. கட்டவிழ்ப்பியலை ஒரு முக்கிய கட்டமாக அமெரிக்கத் திறனாய்வாளர்கள் ஒப்புக்கொண்டாலும், பிளேடோ காலத்திலிருந்து பழக்கத்திலிருந்த திறனாய்வு அடிப்படைக்கொள்கைகளின் தளர்வுகளை அவர் சுட்டிக்காட்டினார். மேலை நாட்டுத் தத்துவ விளக்கத்தின் நுண்பொருட் கோட்பாட்டியலில் சில இடைவெளிகளை அம்பலப்படுத்தினார். ஏற்கனவே உயிருக்கொள்கை (Theory of Being) பதினாலாம் நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டுக்கால இடைவெளியில் எப்படி மாறியது என்பதைப் பார்த்தோம். முழுமைக்கும் மையத்திற்கும் உள்ள தொடர்பு அல்லது அமைப்பிற்கும் மையத்திற்கும் உள்ள தொடர்பு அமைப்பியல் திறனாய்வில் தெளிவாக இல்லை என்று குற்றம் சாட்டினார். அவர் தத்துவ விளக்கத்தின்படி, மையம் என்பது அமைப்பில் உள்ளடங்கினாலும், அது அமைப்பிற்கு வெளியேதான் இருக்கும் என்றார். ஆகையால் இம்மையத்தை அமைப்பியல் திறனாய்வு இனம் கண்டுகொள்ள முடியாது. இதன் பின்புலத்தில்தான், டெரிடா, அமைப்பியலில் மையம் இல்லை என்கிறார். அமைப்பியல் திறனாய்வாளர்கள் திறனாய்வில் எதிர்மறைகளைக் கொண்டு திறனாய்வு செய்தார்கள். அம்முறை

கட்டவிழ்ப்பு முறைக்கு கொண்டு செல்லும். இத்திறனாய்வாளர்கள் மையத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். காரணம், அது அமைப்பிற்குத் தெளிவுகொடுக்கிறது. மேலும் திருமுன் அல்லது தோற்ற அமைதி (presence) மையத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது. இந்த 'நான்' என்ற முனைப்பை ஃப்ராய்டுவின் உளவியல் கொள்கைக்குப்பிறகு எந்தக் கோட்பாட்டைக் கொண்டாவது உறுதி செய்ய முடியாது. ஏனென்றால் மனித முனைப்பை வேரறுத்து உணர்வுநிலை, உணர்வுநிலையற்றது என்று ஃப்ராய்டு பிரித்துவிட்டார். உளவியல் கொள்கைப்படி மனிதகுலத்தை நல்லது (white) கெட்டது (Black) என்று திட்டவட்டமாகப் பிரிக்கமுடியாது. அக்கொள்கைப்படி கறுப்பும் இல்லை, வெள்ளையும் இல்லை. எப்பொருளையும் எவ்வெண்ணத்தையும் உறுதியாக, தெளிவாக கருப்பு, வெள்ளை என்ற முறையில் பிரிக்க முடியாது. உளவியல் நோக்கில் இந்த இரண்டு வர்ணங்களும் இல்லை. இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட, இவ்விரண்டும் கலந்த காவிநிறம் (brown) தான் இருக்கிறது. இதைப் பின்பற்றி மனித வாழ்க்கையில் நன்மை, தீமை என்பவைகளைப் பிரிக்கமுடியாது. இரண்டும் கலந்ததாகவே இருக்கும். கிரேக்க தத்துவஞானி முன் சொல்லிய ஒரு பழங்கதையை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஒரு பாம்பு ஒரு தவளையை விழுங்கிக்கொண்டிருந்ததாம், தவளை பாம்பைப் பார்த்து "என்னை விழுங்குவதால் நீ பாபம் செய்கிறாய்!" என்றதாம். பாம்பின் பதில்: "உன்னை விழுங்குவதற்காகவே கடவுள் உன்னை எனக்கு உணவாகப்படைத்திருக்கிறார்.' என்றது. பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும் (puritans) என்ற கடும் சீர்திருத்தவாதிகள் தோன்றினர். கிறிஸ்துவ மதக் கொள்கையை மக்கள் சற்று மீறினாலும் அவர்களுக்கு அச்சமூகத்தில் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. Puritans என்ற சீர்திருத்த மதக்கொள்கையை கால்வின் (Calvin) என்ற அறிஞரால் புண்ணியம் - பாபம் என்ற கடும் கொள்கையாக மாற்றப்பட்டது. இதற்குத் தத்துவரீதியில் Manichaean heresy என்ற கிறிஸ்துவஞானிகள் அடையாளம்

கண்டுகொண்டனர். இக்கொள்கையின்படி, மனித இருதயத்தைத் தன்னாட்சிக்குட்படுத்த கடவுளும் சாத்தானும் அல்லது கெட்டதும் நல்லதும் எக்காலத்திலும் போட்டியிடுகின்றன. கடைசியில் சாத்தானுக்கே வெற்றி. மனித இருதயத்தில் கெட்டது குடிகொள்ளுகிறது. இது மனித வாழ்க்கையின் அவலநிலையை உறுதிப்படுத்துகிறது. பொதுவாக கிறித்துவ மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் முரண் சமயக்கருத்து (heresy) என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இக்கடும் சீர்திருத்த சமய வாதம் (Puritanism) பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அமெரிக்க, பிரிட்டிஷ் இலக்கியங்களைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. மைல்டன் என்பவர் ஒரு கடும் சீர்திருத்தவாதி, அம்மதப்பிரிவிலுள்ளவர்கள் மத குருக்கள் ஆதிக்கத்தை எதிர்த்தனர். மன்னர் ஆட்சியில் நம்பிக்கை இல்லை. ஆனால் விவிலிய நூலை மிகவும் பின்பற்றினர். அதில் வரும் ஒவ்வொரு சொல்லும் அவர்களுக்கு வேதவாக்கு. ஆனால் அமெரிக்காவில் நதேனியல் ஹாதார்ன் (Nathaiel Hawthorn 1804-64) ஹெர்மன்மெல்வில் (Herman Melvil 1819-91) என்ற நாவலாசிரியர்கள் அவர்களுடைய நூல்களில் உருவகத்தின் மூலமாகவும் மற்ற உத்திகளைக் கொண்டும் சீர்திருத்த சமய வாதத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்தனர். The Scarlet Letter என்பது ஹாதார்னின் புகழ்பெற்ற நாவல். அது கடும் சீர்திருத்தவாதிகள் அமெரிக்க வாழ்க்கையின் தொடக்கத்தில் மக்களைத் தண்டித்து எப்படித் துன்புறுத்தினார்கள் என்பதை வர்ணிக்கிறது. ஹாதார்கள் நாவலின் கதாநாயகி ஒரு கள்ள காதலினால் ஒரு பெண்ணைப் பெற்றாள். பாபத்தில் பிறந்த பெண் அழகும் அறிவும் பெற்றவள். தன் காதலன் யார் என்று கூற மறுத்ததால் தாயாரைத் தண்டித்தார்கள் (அவள் ஒரு மதகுரு) அவளை ஒதுக்கி எப்பொழுதும் அவள் A என்ற எழுத்தை சிவப்பு வர்ணத்தில் தன் உடையில் கழுத்துக்குக் கீழ் அணிய வேண்டும் என்பது மதகுருமார்களின் உத்திரவு. சிறையிலும் அடைத்தார்கள். சிறையிலிருந்து வெளிவந்தபின் இப்பெண்ணை ஒரு மேடையில் ஏற்றி அவமானப்படுத்தினார்கள். A என்பது Adultery (கூடா ஒழுக்கம் அல்லது மணந்த பெண் கணவனைத் தவிர ஒருவனுடன்

உறவு கொள்ளுதல்). இதுதான் அவருடைய நாவலில் முதல் காட்சி. The Scarlet Letter என்பது அவள் அணிந்திருந்த சிவப்புச் சின்னத்தைக் குறிக்கும். பாபம் செய்த பெண்ணோ மிகவும் அழகானவள். மதகுருக்கள் கொடுத்த தண்டனையை ஆட்சேபிக்காமல், கதறாமல், கண்ணீர் வடிக்காமல் அமைதியாக, பணிவாக ஏற்றுக்கொள்ளுகிறாள். எதிர்மறை முறையாக நாவலாசிரியர் தன் கதாநாயகியின் பாபத்தை வர்ணிக்கிறார். முதல் காட்சியில் அவள் அமைதியாகத் தன்னுடைய பாபச்சின்னமான மகளுடன் காட்சியளிக்கும்பொழுது நாவலாசிரியர் அவள் யேசுநாதரின் தாயர் போல் தோன்றுவதாக வர்ணிக்கிறார். இந்த முரண்பாடு நாவலாசிரியரின் சீர்திருத்த சமய வாத எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. மெல்விலின் நாவலான மோபிடிக் (Moby Dick) என்ற நூல் ஒரு பெரிய திமங்கிலத்தை அக்கதையின் கதாநாயகன் வேட்டையாடுவதாகத் தொடர் உருவக முறையில் வர்ணிக்கிறார். திமிங்கிலத்தின் வெள்ளை நிறத்தை ஒரு முரண்பாடு என்கிறார். எல்லா வர்ணங்களையும் ஒன்று சேர்த்தால் வெள்ளை நிறமாகவும் எல்லா நிறங்களையும் ஒதுக்கினால் அதே நிறமாகவும் ஆகும் என்று மெல்வின் வெள்ளை நிறத்தை வர்ணிக்கிறார். இந்த பொருள் மயக்கம் (ambiguity) தான் உயர் மட்டத்திலுள்ள எல்லா நூல்களிலும் வருகிறது. ஆசிரியர் ஒன்று கூற வாசகர் மற்றொன்றைப் பொருள் என்று எடுத்துக்கொள்வது ஒரு சிறந்த போக்கு. இதை ஆராய்ந்தால், மேல் மட்டத்திலுள்ள பொருள்,. மறை முகமாக உள்ள பொருளை எதிர்மறை வரிசையில் கொண்டால், அது நூலின் அமைப்பையும் கொள்கையையும் எப்படிப் பாதிக்கிறது என்று ஆராய்ந்தால், அதுவும் கட்டமைப்பியலைச் சேர்ந்தது என்பது திறனாய்வாளர்கள் நம்பிக்கை.

மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' என்பதைப்பற்றித் திறனாய் வாளர்களிடம் பல கருத்துவேறுபாடுகள் தோன்றியுள்ளன. முக்கியமாக, அக்காப்பியத்தின் கதாநாயகன் யார் என்பதைப்பற்றி, தொடக்ககாலத்தில் முதல் மனிதன் ஆதாம்தான் கதாநாயகன் என்றார்கள். பின்னால் அதை மறுத்து, கதாநாயகனுக்கும் காப்பியக்கதை அநுமதிக்கிற பண்புகள்

இல்லை என்றார்கள். பிறகு அமெரிக்கத் திறனாய்வு உலகில் ஒருவர் ஒரு கட்டுரை சாத்தானைப்பற்றி வெளியிட்டார். அதன் தலைப்பு 'Hero or Fool?' 'கதாநாயகனா? முட்டாளா?' என்பது. இதைப்பல ஆண்டுகள் திறனாய்வு உலகம் கண்டு கொள்ளவில்லை. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பேராசிரியர் வால்டர் ராலே (Walter Raleigh, 1861 - 1922) என்பவர் ஒரு நூலை மில்டனைப்பற்றி எழுதினார். இதில் ஒரு அதிகாரத்திற்கு 'Hero or Fool?' என்ற அமெரிக்கத்திறனாய்வாளரிடமிருந்து கடன்வாங்கித் தலைப்பிட்டார். ராலே அவர்கள் முக்கியத் திறனாய்வாளராகையால் அத்தலைப்பு, திறனாய்வு உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தது. கதாபாத்திரமான சாத்தான் மில்டனின் காப்பியத்தில் பொருள் மயக்கப்பின்னணியில் இருந்தாலும், அவன் தலைவனும் அல்ல முட்டாளும் அல்ல; அவன் இரண்டுமே என்றனர். சாத்தான் உலக சக்திக்கு இருப்பிடமாகிய கடவுளையே எதிர்ப்பதால் அவன் வீரனாக பரிமளிக்கிறான். அதே சமயம் இத்தகைய கடவுளை எதிர்ப்பதால் அவன் சக்தி ஒரு துளியே: அவன் ஒரு முட்டாள். ஆகையால் இத்திறனாய்வு முயற்சியில் இறங்கிய அறிஞர்கள் எவ்விடத்தில் அவன் கதாநாயகனாக இருந்து முட்டாளாக மாறுகிறான் என்று ஆராயத்தொடங்கினர். இவ்வீரனுக்கு எவ்விடத்தில் அழிவு தோன்றியது என்ற கேள்விக்குப் பதில் தேட ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் காப்பியத்தில் நாலாவது பிரிவில், சாத்தான் ஆதாம் ஏவாளின் இருப்பிடத்திற்கு வருகிறான். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கையைக் கழிப்பது பற்றிப் பொறமைப்படுகிறான். அவர்களுக்குக் காவலனாக இருந்த காப்ரியேல் (Gabriel) என்ற பெரிய தேவதூதன் சாத்தானைக் கண்டு அவனை முதல் மனிதர்களின் இருப்பிடத்தை விட்டுத் துரத்துகிறான். இப்பிரிவில்தான் அவனுக்கு அழிவு தொடங்குகிறது. பிறகு கதை அமைப்பு நோக்கில் ஒரு முக்கிய கதாபாத்திரத்துக்கு உரிய பெருமையை கடைசியில், கடவுள் அவனை நரகத்திற்குத் துரத்திய பிறகு இழக்கிறான் என்று இந்நூற்றாண்டின் திறனாய்வு கூறுகிறது. கதாநாயகனாக இருந்து கடவுளையே எதிர்த்து அழிவுப்பாதையை நோக்கிச் செல்வதைக்

காப்பியத்தின் கட்டமைப்பையும் மற்ற சட்டத்திட்டங்களையும் 'சுவர்க்க நீக்கம்' என்று ஆராய்வது கட்டவிழ்ப்பியலைச் சாரும்.

இன்னொன்று: கிறித்து மதக்கொள்கைகள் இரண்டு: Free will, Predestination. இக்கொள்கைகளைப் பரவலாகக் கிறித்துவ மதத்தத்துவத்தில் ஆராய்ந்திருந்தாலும், இக்காலநிலையில் பகுத்தறிவு வாதிகளுக்கும் அறிஞர்களுக்கும் அது அமைதி தருவதில்லை. முதல் கொள்கை கடவுள் மனிதனுக்கு அளித்திருக்கும், அறிவுச்சுதந்திரம் மூலம் கெட்டதையோ, நல்லதையோ எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இரண்டாவது கொள்கை மனிதனின் ஒழுகலாறு ஊழ் அல்லது கடவுளின் முன் திட்டம். கடவுளின் விருப்பம் ஒரு மாறாநியதி. அவரது விருப்பத்திற்கு அப்பால் மனிதனுடைய எந்தச்செயலும் இல்லை. இந்த இரண்டு மதக்கொள்கைகளும் எதிர்மாறாக இருப்பதால் அக்கொள்கைகள் காப்பியத்தின் படிவங்களை எப்படி கீழறுக்கின்றன என்று ஆராய்வதும் கட்டவிழ்ப்பியலே. மில்டன் அறிஞராயிருந்தாலும் ஒரு தீவிர சமயவாதி. மிகையாகவே மதப்பற்றுள்ளவர். ஆகையால் மனிதசுதந்திரத்தைவிட ஊழ்வினையே அவர் விரும்பியது. ஆயினும் அறிவு நோக்கில் எதிர்மறைகளான மனிதசுதந்திரம், ஊழ்வினையைக் காப்பியத்தில் கையாளுவதில் தெளிவில்லை. இத்தெளிவின்மை ' சுவர்க்க நீக்க' த்தின் கட்டமைப்பை பாதிக்கும். இவ்வளவு திறனாய்வுப் பிரச்சினைகளையும் மில்டன் திறனாய்வாளர்கள் கட்டமைப்பியல் தோன்றியதற்கு முன்பே அலசினார்கள்.

பேராசிரியர் ராமன் செல்டன் இன்னொரு கோணத்தில் கட்டவிழ்ப்பியலை ஆராய்கின்றார். கிறித்து மதத்தத்துவத்தின்படி மனிதனின் வீழ்ச்சி (Fall). ஆதாமும் ஏவாளும் கெட்டது எது, நல்லது எது என்று ஒன்றுமே தெரியாமல் கள்ளங்கபடமற்ற குழந்தைகளைப்போல ஈடன் என்ற பூங்காவிலிருந்தபொழுது கடவுளின் கட்டளையை மீறி அப்பூங்காவில் விளைந்த ஆப்பிள் பழத்தைச் சாப்பிட்ட போதுதான் அவர்களுடைய வீழ்ச்சி என்றார். கடவுள் விரட்டிய பிறகு மப்பும் சாவும் நிறைந்த இந்த உலகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். கடவுள்தான்

உயிருருவை உண்டாக்கி மனிதன் என்ற உருவை அளித்தார். கெட்டது என்பது மனிதனுக்கு முன்னால் தோன்றியதா? அதற்கு கடவுள்தான் ஆதாரம். ஆதாமும் ஏவாளும் மிக மகிழ்ச்சியாக இருக்க உண்டாக்கிய பூங்காவில் ஏன் ஆப்பிள் மரத்தை உண்டாக்கினார்? உண்டாக்கியது மல்லாமல் ' இப்பூங்காவில் உள்ள எம்மரத்தின் பழங்களையும் உண்ணலாம். ஆனால் ஆப்பிளை உண்ணக்கூடாது' என்று ஏன் கட்டளையிடுகிறார். அவரது கட்டளையே தீமைக்கு வித்திடுகிறது: இன்னொரு பிரச்சினை, மில்டன், சிறந்த அறிவாளியாகவும் தீவிர சமயவாதியாகவும் இருந்ததால் அவர் பெண்களை வெறுப்பவர் என்ற பெயருண்டு. அவர் மூன்றாவது மனைவியை மணந்தபிறகு 'தேனிலவு' காலத்தில் திருமண முறிவை ஆதரித்து ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார்! இக்காரணங்களுக்காக ஆதாம், ஏவாள் அவர் காப்பியத்தில் கதாபாத்திரமாக வரும் பொழுது மேலெழுந்த வாரியாக வாசகர்கள் அக்காவியத்தைப் படித்து இன்புறும்பொழுது ' சுவர்க்க நீக்க'த் தின் நாலாவது பிரிவில் தங்களுக்கே உரிய பூங்காவில் ஆதாமும் ஏவாளும் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது அவர்கள் பரிமாறிக்கொள்ளும் உரையாடலைக் கூர்ந்து படித்தால் ஏவாள் பெண்ணானதால் ஆதாமுக்கு கீழ்ப்படிந்தவள். கணவனுக்குத் தொண்டு செய்பவள் போல் தெரிகிறது. இதனால் இவ்வுரையாடலின் ஆதாரத்துடன் திறனாய்வாளர்கள் மில்டனை anti - feminist அல்லது பெண்மையியலை எதிர்ப்பவர் என்று சொல்லுகிறார்கள். இவ்வுண்மையை மறுக்கமுடியாது. மில்டன் ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாக பெரிய கவிஞராகவும், மற்றும் அவரைவிட பெரிய அறிவாளியாகவும் கருதப்படுகிறார். இருப்பினும், பெண்மை எதிர்ப்பு என்பதுதான் ஆங்கில இலக்கியத்தில் ஹோமர், வர்ஜில் என்ற செவ்வியல் கவிஞர்களைப் போல ஆங்கிலத்தில் ஒரு பெரிய காவியம் எழுத வேண்டும் என்ற மில்டன் அவாவை உறுதி செய்தாலும், அவருடைய பெண்மை எதிர்ப்பு அடிமனத்திலிருந்து வந்திருக்க வேண்டும். ஏவாள் ஆதாமைப்போல் மில்டன் காப்பியத்தில் ஒரு முக்கிய பாத்திரமாக இருந்ததால் கவிஞரின் பெண்மை எதிர்ப்பு எவ்விதம்

காப்பியத்தின் கட்டமைப்பையும் கொள்கையையும் தளர்வடையச் செய்கின்றது என்ற ஆராய்ச்சியும் கட்டவிழ்ப்பியலைச் சாரும்.

பொதுவாக, கட்டமைப்பியல் இரு எதிர்மறைகளில் (Binary - opposition) திறனாய்வாளர்கள் கவனம் செலுத்துவது உண்டு. சான்று: ஆண்மை-பெண்மை; பலம்-பலமின்மை; துணிவு-துணிவின்மை. இரு எதிர்மறைகள் எப்படி ஒரு இலக்கியப் படைப்பின் கட்டமைப்பியலை பாதிக்கின்றன என்பது அமைப்பியல் திறனாய்வு. அமைப்பியல், பின்னமைப்பியல் என்பவை மேலைத் திறனாய்வு வளர்ச்சியில் முக்கிய கட்டங்களாகவும் திறனாய்வைப் பெரும் அளவில் பாதிப்பதாகவும் உள்ள செய்திகளை மறுக்க முடியாது.

இங்கிலாந்தில் உள்ள திறனாய்வு உலகின் பழைய மனப்பான்மை அடித்தளத்தில் உள்ளதால் கட்டவிழ்ப்பியல், முக்கிய டெரீடா வகுத்த கொள்கைகள் அமெரிக்கத் திறனாய்வாளர்களைப் பெருந்தாக்கத்துக் குள்ளாக்கின. யேல் பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு பேராசிரியர் குழு டெரீடாவைப் பின்பற்றினர். அவர்கள், பால் தெமன் (Paul de Man, 1919-83) ஹாரல்ட்ப்ளூம் (Haold Bloom, 1930) ஜெ. ஹில்லிஸ் மில்லர் (J. Hillis Miller, 1928) ஜெஃப்ரேஉறார்ட்மன் (Geoffrey Hartman 1929-) இப்பேராசிரியர்கள் சிறந்த அறிவைப் படைத்தவர்களாதலால் அமெரிக்க அறிஞர்களாலும் மாணவர்களாலும் மதிக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் திறனாய்வு உலகத்தின் நம்பிக்கைகளை தங்கள் கூரிய அறிவு முதிர்ச்சியினால் தகர்த்தெரிந்தபடியால், அவர்களை வெறுப்பும் மதிப்பும் கலந்த முறையில் intellectual mafia சட்டத்தையும் ஆட்சியையும் எதிர்த்த அறிஞர்குழு, என்று அமெரிக்கத் திறனாய்வு உலகத்தில் பட்டம் சூட்டப்பட்டவர்கள். இப்பட்டம் அமெரிக்க அறிவுலகத்தின் நிறுவனம் எவ்வளவு தூரம் ஆட்டம் கண்டுவிட்டது என்பதற்கு அறிகுறி.

யேல் பல்கலைக்கழக திறனாய்வுக்குழு திறனாய்வில் மட்டும் கவனம் செலுத்த வில்லை. மர்மம் கலந்த விஞ்ஞான நாவல்களையும் இவர்களில் சிலர் (ப்ளூம்) எழுதினர். இந்நூல்கள்

ஆங்கில நாவலாசிரியரான ஹெச்.ஜி. வெல்ஸ் (H.G.Wells. 1866-1946) என்பவரை நினைவூட்டும். அவர்களது விஞ்ஞான அறிவும் அவர்களுடைய அறிவுத்திறனும் வாசகர்களைத் திகைக்க வைக்கும். இவர்களுடைய கவனம் அற்புத நவிற்சிக் கவிதைகளில் திரும்பியது. எந்த அற்புத நவிற்சிக் கவிஞனும் கற்பனையின் ஆக்க சக்தியின் விளைவு. இவ்வுலகத்தில் ஆர்வம் இல்லாதவன். கண்ணுக்குத்தெரிந்த உலகத்தின் பின்னால் ஓர் அற்புத சக்தியோ வடிவோ மறைந்து கிடக்கிறது என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன். உள்ளுணர்வுக்கு அடிமைப்பட்டவன். இம்மனித உலகத்தின் ஒரு தோற்ற அமைதி (presence) மறைந்து கிடக்கிறது என்றான். கீட்ஸ் "A thing of beauty is a joy for ever" என்றான். வேட்ஸ்வொர்த் ஒரு பேரெழில் (glory) இயற்கை உலகத்திலிருந்து மறைந்துவிட்டது என்று புலம்பினான். ஷெல்லி வானம்பாடி கண்ணுக்குத் தெரியாத அளவில் உயரச் சென்று அதுபாடும் பாட்டில் தன் மனதை இழந்தான். இம்மாதிரி கவிதைகளில் தோற்ற அமைதி கண்ணுக்குத் தெரிவதைவிட மறைந்து கிடப்பதே உண்மை' என்று பால்தெமன் கூறுகிறார். மேலும், அற்புத நவிற்சிக் கவிஞர்கள் ஒரு தோற்ற அமைதி இயற்கையில் மறைந்து கிடைப்பதால், Presence என்பதை ABSENCE என்றே அவர்கள் உள்ளூரக் கருதினார்கள். ஆகையால் அவர்கள் கவிதைகள் கட்டவிழ்ப்பியல் திறனாய்வுக்கு உகந்தது என்றார்.

பெல்ஜிய நாட்டில் பிறந்த பால்தெமன் 64 வயதிலேயே இறந்து விட்டார். அவருடைய இறப்பு திறனாய்வு உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று அவருடைய திறனாய்வுக் கொள்கைகளை அறிந்தவர் கூறினர். பல கட்டுரைகளை எழுதினாலும் அவருடைய தொகுப்பு Blindness and Insight: Essays in the Rhetoric of Contemporary Criticism(1971) என்பது அவருக்குப் பிடித்தமான கொள்கையை விளக்குகிறது. அவர் புத்தகத்தின் தலைப்பிலுள்ள 'Blindness' In - sight' என்பவை ஒரு திறனாய்வாளனின் பண்புகள். அவன் மொழியையும் அறிவையும் பயன்படுத்தும்பொழுது ஒரு உண்மைக்கு பதில் அவனை அறியாமல் வேறொரு உண்மையை

வெளிப்படுத்துகிறான். இந்த அறியாமையைத்தான் தனக்கே உரிய பாணியில் திறனாய்வாளன் 'கண்ணிலாதவன்' 'குருடன்' என்றார். ஆனால் இந்த பார்வையிழந்த தன்மைதான் அவனுக்கு 'Insight' அல்லது உள்நோக்கு என்ற பண்பைத் தருகிறது. இத்திறனாய்வு உண்மையை மெய்ப்பிப்பதற்குச் சான்று ஒன்றை எடுத்துத்தருகிறார். அவர் பாணியில் அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்கள் ஒரு கவிதையைப்பற்றிய கோல்ரிட்ஜின் கோட்பாட்டை நம்பினர். அவர் கூற்றுப்படி, ஓர் உயிருள்ள பொருளைப் போல் கவிதை ஓர் அமைப்பை (form) கொண்டது. அவ்வமைப்பைப் பொருளின் உருவத்திலிருந்து வேறுபடுத்த முடியாது. இக்கொள்கையைப்பின்பற்றிய புதுத்திறனாய்வாளர்கள் இத்தகைய உயிருள்ள அமைப்பில் (Organic form) நம்பிக்கை வைக்காமல் கவிதை மொழியின் பொருள் மயக்கத்தை ஒரு கொள்கையாகவே உருவாக்கினர். பால்தெமன் விளக்கத்தின்படி கோல்ரிட்ஜ் கண்டு பிடிப்பின் முக்கியத்துவத்தைத் தெரிந்து அக்கொள்கையைக் கைவிட்டதுமல்லாமல் பொருள் மயக்கம் கவிதை மொழியில் உண்டு என்று மிகைப்படுத்தியது அவர்களுடைய பார்வையின்மையை உறுதிப்படுத்துகிறது. புதுத்திறனாய்வாளர்களின் நுண்ணிய விளக்கம் அவர்களுடைய உள்நோக்கை வெளிப்படுத்துகிறது. இத்தகைய நோக்கு இருப்பதால் தான் பார்வையற்ற தன்மை உள்ள திறனாய்வாளர் உள்நோக்கை அடைகிறார் என்று பால்தெமன் உறுதியாகக் கூறுகிறார்.

மற்ற அமெரிக்கத்திறனாய்வாளர்களைப் போல் அல்லாமல் ஹாரல்ட்ப்ளூம், அமெரிக்க இலக்கியத்தில் மட்டுமின்றி ஆங்கில இலக்கியத்திலும் ஆர்வம் உள்ளவர். The Anxiety of Influence (1973) என்ற அவருடைய நூல் அவருக்குப் புகழ் தேடித்தந்தது. Influence (தாக்கம்) என்ற சொல் ஒப்பிலக்கிய நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்தது. பேராசிரியர் ப்ளூமின் விளக்கம் புதுமையானது. அவ்விளக்கம் அவர் திறனாய்வாளர்களில் தனி மனப்போக்குடையவர் என்பதைக் காட்டுகிறது. பெரிய கவிஞர்கள் தங்களுடைய முன் மாதிரிகளிருந்து விவரித்துக்

காட்டுகிறார்கள். காரணம் அவர்கள் தங்கள் திறனையே நம்பியிருக்கிறார்கள் என்ற கருத்தை உறுதிப்படுத்துவதற்காக. தங்களுடைய முன்னோடிகள் கருத்தையோ, உருவகத்தையோ பின்பற்றுவதில்லை. உளவியல் நிபுணர் ஃபிராய்டின் கொள்கைப்படி Oedipus complex ஈடிபஸின் உள்ளுணர்ச்சி எனலாம். இது டி.எஸ். எலியட்டின் கூற்றை நினைவுபடுத்துகிறது. ஆங்கிலத்தில் ஒரு கவிஞர் காப்பியமோ அல்லது கவிதை நாடகமோ எழுத முடியாது; ஏனென்றால் அவ்வகைமைகளை எழுதுவதற்கு முயற்சி செய்தால், தன் திறனை உறுதிப்படுத்த முடியாது. மில்டனையோ அல்லது ஷேக்ஸ்பியரையோ பின்பற்ற வேண்டியிருக்கும். நம் பேச்சு வழக்கில் சொல்லப்போனால் காவியமோ அல்லது காப்பியமோ ஆங்கிலத்தில் ஒரு எழுத்தாளர் எழுத முயன்றால் இப்பெரும் எழுத்தாளர்கள் நந்திபோல் குறுக்கே நிற்கிறார்கள். தாக்கக்கொள்கையைப் பெரிதாகப்பேணிவரும் ஒப்பிலக்கிய அறிஞர்கள் ப்ளூமின் கொள்கையை இனம்கண்டு கொள்ளவில்லை! இந்தத் தகுதிக்குறைவை நிறைவு படுத்த முயற்சிக்கும்பொழுது பல தவறுகளை எழுத்தாளர்கள் செய்கிறார்கள் என்ற விளக்கத்தை A Map of Misreading (1975) என்ற நூலில் சொல்லுகிறார். இந்த எதிர்மறை விளைவு கட்டவிழ்ப்பியலுக்கு நெருங்கியுள்ளது. உருவகத்தைப் பயன்படுத்துவதால் கவிஞர்கள் தாங்கள் வெளிப்படுத்தும் எண்ணத்திற்கு எதிர்மறையாக விளைவிப்பதைப் போல. இக்கருத்தைக் கூறியவர் பால்தேமன். பேராசிரியர் ப்ளூமின் சிறிது அச்சமூட்டும் வகையில் உருவகக்கொள்கை, ஃப்ராய்டின் உளவியல் கொள்கை, யூதர்களின் மறைபொருள் கோட்பாடு (Cabbalism) ஒன்றிற்கொன்று தொடர்பில்லாத கருத்துக்களை அறிவுபூர்வமாக இணைக்கிறார். Kabbalah and Criticism 1975 என்ற நூலில், இவருடைய கொள்கைகளும் நூல்களும் இவருடைய தனித்த அறிவுத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

யேல் குழுவினரைச்சார்ந்த ஜெப்ரே ஹார்ட்மன் ஃப்ராய்டின் உளவியல் கொள்கையில் ஆர்வம் கொண்டவர். அவர் திறனாய்வு உலகத்தில் நுழைந்தது அமெரிக்கப்

புதுத்திறனாய்விற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கே. அத்திறனாய்வாளர்கள் சூழ்நிலையையும் வரலாற்றையும் ஒதுக்கி மொழியையும் உருவகத்தையும் அமைப்புநோக்கில் ஆராய்ந்தது என்பதை மனதில் கொண்டு Beyond Formalism (1970) என்ற நூலில் அவர்களுடைய குறுகிய கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். மர்ரே கிரீகர் (Murray Krieger) என்ற கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியரும் அமெரிக்கப் புதுத்திறனாய்வின் தளர்வுகளை இனம் கண்டு கொண்டார். இத்திறனாய்வின் முக்கியத்துவம் குறைந்தவுடன் ஐரோப்பாவிலிருந்த திறனாய்வு இயக்கங்கள் அந்நாட்டில் காலூன்றின. ஹார்ட் Saving the Text 1981 என்ற நூலில் டெரீடாவின் திறனாய்வுக் கொள்கைகளை ஆராய்ந்து புகழ் எய்தினார். 1981 -லிருந்து தான் அவர் கட்டவிழ்ப்பியலை ஆய்ந்து அதில் ஆர்வம் கொண்டார். தெமன்னைப்போல திறனாய்வு இலக்கியத்திற்கு உட்பட்டதே தவிர அப்பாற்பட்டதல்ல என்றார்.

ஹில்லிஸ் மில்லர் என்பவர் ஜெனீவா திறனாய்வுக்குழுக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டவர். 1966-ல் Critical Quarterly என்ற ஆராய்ச்சி இதழில் ஒரு கட்டுரை எழுதித் தன்னை அக்குழுவின் கொள்கைகளுக்கு நெருங்கியவர் என்று தெரியப்படுத்திக்கொண்டார். இதன் சாயலை அவருடைய நூல்கள் The Disappearance of God (1965), Thomas Hardy: Distance and Desire (1970) என்பவைகளில் காணலாம். தாமஸ் ஹார்டி (1840-1928)யின் அவல நாவல்களில் கவனம் செலுத்தினார். பிறகு பெரிய ஆங்கில நாவலாசிரியரான சார்லஸ்டிக்கன்ஸ் (Charles Dickens, 1812-70) நகைச்சுவை, நாடகபாணி உள்ள நாவல்களை ரோமன் ஜேகப்ஸனின் கொள்கையைப் பின்பற்றி அமைப்பியல் நோக்கில் ஆராய்ந்தார். அவருடைய குறிப்பிடத்தக்க நூல் Fiction and Repetition . Seven English Novels (1982) என்பது. இந்த நூல் தான் சார்ல்ஸ்டிக்கன்ஸின் திறனாய்வில் திருப்புமுனை. Sketcheský Boy என்ற நாவலைப்பற்றிய அவரது அமைப்பியல் திறனாய்வு குறிப்பிடத்தக்கது. அந்நாவல் டிக்கன்ஸ் திறனாய்வாளர்களால் ஒதுக்கப்பட்டது. ஜேகப்ஸனின் உருவகம் (metaphor) ஆகுபெயர் என்ற இடைவெளிக்குள்ளே

கதாநாயகனின் வாழ்க்கையைப்பற்றிய அறிவு பல தோற்றங்களிலிருந்து வெளிப்படுகிறது. முக்கியமான மனிதர்கள் தரித்துக்கொள்ளும் ஆடைகளிலிருந்து, சில ஆடைகள் தனக்குத் தெரிந்த சில மனிதர்களை நினைவூட்டியது. அப்பொழுது அவன் விசையை (tension) அனுபவித்தான். அவன் வாழ்க்கையின் உருவளவை (dimension)த் தெரிந்துகொண்டான். இந்நூல் வெளி வாழ்க்கையை மேலாக விவரிப்பதல்ல. பாஸின் எண்ணங்களைத் குறியீட்டுக் கொள்கையின் மூலம் விளக்குகிறது என்றார். இது திறனாய்வு மரபை ஹில்லிஸ் மில்லர் மீறி அருமையான விளக்கம் கொடுத்ததற்குச் சான்று.

## *ரஷ்ய உருவவியல் (RUSSIAN FORMALISM)*

மரபு வழியில் நோக்கினோமானால், இலக்கியத்திறனாய்வு ஒரு இலக்கியத்தின் இலக்கியப்பண்புகளையே ஆராய்வதில் கவனம் செலுத்திவந்தது. இது பொதுவாக திறனாய்வு இயக்கம் குடிகொண்டிருந்த அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அதிகமாக வளர்ச்சியுற்றது. ஆனால் ஐரோப்பாவில் பாரிஸ், மாஸ்கோ நகரங்களுக்கு இடையேயுள்ள திறனாய்வு இயக்கங்கள் மாறுபட்டிருக்கின்றன. இலக்கியத்தை ஒரு விஞ்ஞானக் கலையாகக் கருதி மொழியைக் கையாள்வதில் கருத்தைச் செலுத்தி வந்தது. இலக்கியம் என்பது கற்பனையின் விளைவு இல்லை. மொழியை அறிவு பூர்வமாகக் கையாள்வது. ஆகையால் பிரான்ஸிலிருந்து ரஷ்யா வரையில் இருந்த நாடுகளில் இலக்கியத்தை மனித விஞ்ஞானமாகவே (human science) கருதினர். இக்கருத்தோட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்கள் OPOJAZ என்ற ரஷ்ய மொழியை (ஆங்கிலமாக்கிய) ஒரு குழுவினர். இதற்குக் கவிதை மொழியியலை ஆராய்ந்த குழு என்று பெயர். இது 1916-ல் நிறுவப்பட்டது. இதன் பின்விளைவுதான் மாஸ்கோ மொழியியல் குழு (Mascow linguistic circle) என்பது. இக்குழுவில் முக்கிய அங்கம் வகித்தவர் மேற்குலகத் திறனாய்வில் முக்கிய அங்கம் வகித்த ரோமன் ஜேகப்சன் என்பவர். அரசியல் காரணமாக ரஷ்யநாட்டின் தலைநகரைவிட்டு வெளியேறி செக்கோஸ்லாவிய

நாட்டின் தலைநகரமான பிராக்கில் (Prague) 'ப்ராக் மொழியியல் வட்டம்' ஒரு மொழியியல் குழு தோன்றக் காரணமானவர்.

ரஷ்ய உருவவியல் அறிஞர்கள் எழுத்தாளரின் கலை நோக்கத்தையும் தொழில் நோக்கத்தையும் ஆராய்ந்து ஒரு இலக்கியக் கொள்கையை உருவாக்கினர். இவ்வறிஞர்களில் முக்கியமானவர் ஷீக்லோவ்ஸ்கி (Shklovsky) பக்டின் (Bakhtin) என்பவர். ரஷ்ய உருவவியல் நிபுணர்கள் கலை நோக்கில் இலக்கியத்தில் எழுத்தாளர்கள், எப்படி மனிதர்கள் பொதுவாகக் கையாண்ட மொழி இலக்கியத்தில் வேறுபடுகிறது, அவர்கள் எவ்வாறு பல மனிதர்களும் பயன்படுத்திய மொழியை உருவகம் போன்ற பல உத்திகளின் மூலம் உருச்சிதைத்தனர் என்று ஆராய்ந்தனர். இப்படி உருச்சிதைந்த மொழியின் உத்திக்கு, அதாவது, பழக்கப்பட்ட மொழியை அந்நியமாக்கிய மொழிக்கு de familiarization என்று பெயர். இக்கலைச் சொல்லை உண்டாக்கியவர் விக்டர் ஷீக்லோவ்ஸ்கி (1893 - ). இவர் இந்தக்குழுவிற்குத் தலைமை வகிப்பவர். இவர்களைப் போல அறிஞர்கள் வாழ்ந்த காலத்தில் ரஷியப் புரட்சியினால் பொதுவுடைமைக் கொள்கை லெனின் ஏற்படுத்திய மாற்றங்களினால் தலைதூக்கியது. இதை dictatorship of the prolatariat அல்லது ஊழிய வகுப்பினர் சர்வாதிகாரம் என்றனர். அக்கொள்கையின்படி மனித முயற்சியும் கலைகளும் தொழிலாளர் சமூகத்திற்குப் பயன்படவேண்டும் என்று வற்புறுத்தினர். ஜோசப் ஸ்டாலின் அடக்குமுறை ஆட்சியில் அறிவாளிகளும் இக்குறிக்கோளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தியது. ஸ்டாலின் பொதுவுடமை அரசியலைக் கைப்பற்றிய பொழுது எழுத்தாளர்களின் நிலைமை மோசமடைந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் ரஷிய உருவவியல் அறிஞர்கள் புரட்சிகரமான ஆனால் அரசியல் நோக்கத்திற்கு எதிரான கொள்கைகளை உருவாக்கினர்.

OPOJAZ குழுவினர் அப்பொழுது புதிதாகப் பெயரிடப்பட்ட நகரமான லெனின் கிராடு என்ற இடத்தில் பணியாற்றினர். இதனுடைய பழைய பெயர் புனித பீடர்ஸ்பர்க்

(St.Petersburg) எனப்படும். ரஷிய உருவவியல் ரஷிய புரட்சிக்கு முன்பு தோன்றி ஸ்டாலின் ஆண்டகாலத்தில் மறைந்தது. இக்குழுவினர் இலக்கியத் திறனாய்வில் ஆர்வம் காட்டி வந்தனர். இவ்வுருவவியலின் தொடக்க காலத்தில் விக்டர் ஸ்ஷீக்லோவ்ஸ்கி முக்கியமானவர். இவர் மரபுக் கொள்கைகளை எதிர்த்தவர். பொதுவாகக் குறியீட்டுக் கவிஞர்கள் கவிதை என்பது கண்ணுக்குத் தெரியாத மெய்ம்மையை (reality) வெளிப்படுத்துகிறது என்ற கொள்கையைக் கடுமையாக எதிர்த்தவர். வாழ்க்கைக்கு அப்பால் எதுவும் மெய்ம்மை இல்லை என்ற உறுதியான நம்பிக்கைகொண்டவர். இவர் இலக்கியக்கலையைப் பற்றிய கருத்துக்களை ஒரு புகழ்பெற்ற கட்டுரை ஒன்றில் வெளிப்படுத்தியிருக்கிறார். இவர்தான் "defamiliarization' அல்லது அந்நியப்படுத்தல் என்ற முக்கியமான இக்குழுவின் கொள்கையை உருவாக்கியவர். அவருக்கு மிகவும் பிடித்த நாவல், பதினெட்டாம் நூற்றாண்டின் லாரன்ஸ் ஸ்டெர்ன் (Laurence Sterne, 1713-68) எழுதிய ஒரு விசித்திரமான ஆங்கில நாவல். 1759-ல் அவர் எழுதத்தொடங்கிய இந்நாவல் 1760-ல் இரண்டு பாகங்களாக வெளிவந்தது. 1761-ல் மற்றும் இரண்டு பிரிவுகள் வெளிவந்தன. இதனுடைய முழு நீளப்பெயர் The life and opinions of Tristram Shandy 'ட்ரிஸ்டம் ஷாண்டியின் வாழ்க்கையும் கருத்துக்களும்' தலைப்பில் கூறியதற்கு மாறாக அந்நாவலில் கதாநாயகன் வாழ்க்கையைப் பற்றிய செய்திகள் சொற்பமே. கதாநாயகன் நூலின் நாலாவது பிரிவில்தான் பிறக்கிறான். அவன், நாவல் வளர வளர மறைந்து விடுகிறான். அவனுக்குப் பதிலாக அவன் தந்தை, உடன்பிறப்பு, தந்தையின் வேலையாள் இவர்களைப் பற்றிய சுவையான செய்திகள் வருகின்றன. இம் முக்கிய கதாபாத்திரங்களைத் தவிர, வேறு சில பாத்திரங்களும் இந்நாவலில் இடம்பெறுகின்றன. உண்மையைக் கூறுவோமானால், நாவலின் மரபுவழியான வரையறைகள் மீறப்படுகின்றன. நாவலாசிரியர் அடிக்கடி நாவலில் வாசகரை விளிக்கிறார். அவரோடு உரையாடுகிறார். திடீரென்று வாசகரை நோக்கி, ' நீர் இந்த நாவலின் வாசகரல்ல! நான் வேறு ஒருவரை மனத்தில் கொண்டிருக்கிறேன்' என்று

கூறுகிறார். இந்நாவலைப்பற்றி நாவலாசிரியர் சம காலத்தவரான பெரிய எழுத்தாளர்கள் சாமுவெல் ஜான்சன், கோல்டுஸ்மித், ரிச்சர்ட்ஸன், வால் போல் போன்றவர்கள் கண்டனங்களைத் தெரிவித்த பொழுதும், ஷீக்லோவ்ஸ்கி இந்த நாவலை ஒரு இலட்சிய நாவல் என்று கூறுகிறார். ரஷ்ய உருவவியல் அறிஞர்கள் மரபுவழியான திறனாய்வு நோக்கை ஒதுக்கி நாவலின் உத்திகளில் மொழியியல் நோக்கில் கவனம் செலுத்தினார்கள். அவர்களுடைய கருத்துப்படி, மொழியை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று மக்கள் பேசும் மொழி. ஒருவர் மொழியைக் கையாளும் பொழுது சரளமாகப் பேசுகிறார். ஒரு இயந்திரத்திலிருந்து சாக்லெட் வருவது போல சொற்கள் வருகின்றன. இதை இத்திறனாய்வாளர்கள் automatizytion என்றார்கள். அதாவது இயந்திரத்திலேயிருந்து இயற்கையாகத் தித்திப்பு பண்டங்கள் வருவதுபோல மக்கள் தன் முயற்சியே இல்லாமல் பேசுகிறார்கள் அல்லது சொற்களைக் கொட்டுகிறார்ள். ஆனால் எழுத்தாளர் பல உத்திகளை (உருவகம், குறியீடு, உவமை போன்றவைகள்) பயன்படுத்திப் பொதுவாகப் புரிந்துகொள்ளும் முறையை அந்நியமாக்குகிறான். இவ்விரண்டு உத்திகளும் இந்த இயக்கத்திற்கு முக்கிய கொள்கைகள்.

ரஷிய உருவவியல் இயக்கம் ரஷியப் புரட்சிக்கு முன்னும் பின்னும் திகழ்ந்தது. இரண்டு அறிஞர் குழுக்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருந்தன. ஒன்று மாஸ்கோ அறிஞர் குழு (Moscow Linguistic Circle) இக்குழுவில் முக்கிய நிபுணர் ரோமன் ஜேகப்சன். இவர் அரசியல் காரணமாக மாஸ்கோ நகரை விட்டு வெளியேறி செக்கோஸ்லாவியா நாட்டின் தலைநகரமான ப்ராக்கில் இன்னொரு குழுவை நிறுவினார். இதற்கு (Prague Linguistic Circle) அல்லது ப்ராக் மொழியியல் குழு என்று பெயர். இங்கும் அரசியல் கருத்துக்களில் கடும் நம்பிக்கை கொண்ட பொதுவுடைமைத் தத்துவம் பரவியதால், பேராசிரியர் ஜேகப்சன் அந்நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்காவில் குடியேறினார் என்ற செய்தியை நாம் ஏற்கனவே அறிவோம். ரஷிய உருவவியல் அறிஞர்கள் இலக்கியத்தை ஒரு விஞ்ஞானமாகவே கருதியதால் திறனாய்வையும் ஒரு விஞ்ஞானக்

கூறாகக் கருதினர். இந்நோக்கில் மாஸ்கோ குழுவிற்கும் ப்ராக் குழுவிற்கும் கருத்து வேறுபாடு இல்லை. 1916-ல் அரசியல் மாற்றத்தின் விளைவாக, முக்கியமாக நடுத்தர சமூகத்தின் கலாச்சாரம் நலிவடைந்ததென்று பொதுவுடைமைவாதிகள் நம்பிக்கை தெரிவித்த பொழுது கலாச்ச்சாரம் புதிய அரசியலின் வெளிப்பாடே என்ற தத்துவம் வலுவடைந்தது. கலை எத்தகையதானாலும் அது தொழிலாளர் சமூகத்தின் நன்மைக்காகவே பாடுபடவேண்டும் என்று எழுத்தாளர்களும் வற்புறுத்தினர். புலனுணர்வு என்பதுதான் மெய்ம்மை. புலன்களுக்கு அப்பாற்பட்டது ஒரு மாயை. இத்தகைய நம்பிக்கையுடைய அறிவாளிகளுக்கு "Futurists' என்று பெயர். பொதுவுடமை உருவாக்கிய புதிய ரஷியாவில் மாயகோவ்ஸ்கி (Mayakoosky) என்பவரை இத்தகைய எதிர்காலத்திற்குக் கவிஞராக அடையாளம் கண்டு கொண்டனர். இயந்திர உலகத்தில் உருவாகிய லோகாயதத் தத்துவம் தான் கவிதையின் நிலைக்களம் என்பதில் அளவு கடந்த நம்பிக்கையை உடையவர். இப்பின்புலத்தில், முக்கியமாக மெய்ம்மை நம்பிக்கையில் பிரெஞ்சு குறியீட்டுக் கவிதையின் தந்தையான பூதலேர் ரஷிய உருவவியல் இயக்கத்திற்கு இலக்கானார். ஷீக்லோவ்ஸ்கி அவருடைய கட்டுரையில் திறனாய்வு நோக்கு விஞ்ஞான நோக்கே என்று உறுதியாகக் கூறுகிறார். இந்நோக்குதான் அவருக்குப் பூதலேரின் குறியீட்டுக் கவிதை பிடிக்காமல் போனதற்கு காரணம். இத்தகைய எழுத்தாளர்கள் ரஷியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்கு ஒதுங்கியே செயல்பட்டார்கள்.

ஷீக்லோவ்ஸ்கி, ஸ்டெர்ன் என்பவரின முக்கிய நாவலையும் நாடோடிக் கதைகளையும் ஆராய்ந்த பொழுது சில முக்கியத் திறனாய்வுக் கருத்துக்கள் வெளிப்பட்டன. சான்றாக நாடோடிக் கதைகளின் படிவம், பாத்திரங்கள், சம்பவங்கள் மூலமாக ஒரு குறிப்பிட்ட பொதுக் கூறுகளையே கொண்டிருந்ததாக ரஷிய உருவவியல் குழுவினரின் கருத்தைத் தெரிவித்தார். நாவலில் கதையமைப்பைப் (Plot) பற்றி ஒரு புதிய கருத்து அவரிடமிருந்து வெளியானது. கதையமைப்பு இலக்கியத்தைச் சேர்ந்தது; இதை அவர் மொழியில் *Sjuzet* என்றார். கதையமைப்பின் மூலத்தை

fabula என்றார். இதை மூலப்பொருள் என்று கருதினார். இந்த மூலப்பொருளை எங்கிருந்து கடன் வாங்கினாலும் அதை கதையமைப்பாக்குவதை அந்நியமாக்குதல் (defamiliarization) என்றார்.

ஷீக்லோவ்ஸ்கி ரஷிய உருவவியல் இலக்கியத்தில் ஒரு முக்கிய புள்ளி. அவரைவிடப் பெரும்புள்ளி மிகைல் பக்டின் (Mikhail Baktin, 1895-1975) மேற்குத் திறனாய்வு உலகத்தில் வெறும் நாவலாசிரியரான தாஸ்தோவ்ஸ்கியின் நாவல்களை ஆராய்ந்து பல புதிய கருத்துக்களை தெரிவித்து இவர் திறனாய்வாளராக உருவெடுத்தார். ஸ்டாலின் ஆட்சியாகையால், இவரைப் பற்றிய உண்மைகள் புதிராகவே இருக்கின்றன. அவர் பெயரில் வெளியான The Formal Method in Literary Scholarship 1928 (இலக்கிய அறிவின் ஒழுங்குமுறை) என்பதை பக்டின் முழுவதும் எழுதவில்லை என்றும் அவர் கூட்டாளி மெத்வெதவ் (Medvedev) எழுதினார் என்றும் நம்பப்படுகிறது. வலோசினாவ் என்ற அறிஞர் பெயரில் வெளிவந்த Marxism and the Philosophy of Language (1929) என்பது பக்டின் எழுதியது என்று கூறப்படுகிறது. முதல் உலகப்போருக்குப் பிறகு மனித சுதந்திரத்தை மதிக்கும் மேற்கு நாடுகளுக்கும் சர்வாதிகாரத்தை நம்பும் ரஷியாவிற்கும் நேரடித்தொடர்பு இல்லை. ஆனால் மறைமுகமான தொடர்பு இருந்தது. ரஷியாவின் நாவலாசிரியரான அலெக்சாண்டர் ஸோல்ஸனிஷ்டின் எழுதிய நாவல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் புகழ்பெற்றது. அம் மர்ம முறையிலேயே பக்டினுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் நியூயார்க் அறிவு வட்டத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. இந்த முறையில்தான் அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தாஸ்தோவ்ஸ்கியின் நாவல் எழுதும் முறையைப்பற்றி அவர் சொல்லிய பல புதுமையான கருத்துக்கள் மேற்குத் திறனாய்வு உலகத்தைத் திகைப்பில் ஆழ்த்தின. பிறகு பல ஆண்டுகள் பக்டினைப்பற்றி ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. பின்னர் சில கட்டுரைகள் வெளிவந்தன! இந்த இடைவெளிக்கு உண்மையான காரணம் என்ன என்று விளங்கவில்லை.

இருப்பினும் திறனாய்வு உலகில் மிகைல் பக்டின் ஒரு கலங்கரை விளக்கமாகக் கருதப்படுகிறார். டேவிட்லாட்ஜின் இரண்டாவது திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்பான Modern Criticism and Theory என்பதில் ஒரு குறிப்புரை வழங்குகிறார். ஸ்டாலின் ஆட்சியின் பொழுது பக்டின் துன்புறுத்தப்பட்டார் என்றும் அதற்குப் பிறகு அவருடைய எழுத்துக்கள் வெளியிடப்பட்டன என்றும் கூறுகிறார். அவருடைய ஆதாரபூர்வமான மொழிபெயர்ப்பாளர் மைகேல் ஹால்குவிஸ்ட் (Michael Holquist) பக்டினை "One of the leading thinkers of the twentieth Century" இருபதாம் நூற்றாண்டிலுள்ள பெரிய அறிவாளிகளில் ஒருவர் என்று அழைக்கிறார். ஸ்டாலின் ஆட்சிக்குப்பிறகு Problems in Dostoevsky's poetics 1963 என்ற திருத்திய பதிப்பு வெளிவந்தது. பிறகு அச்சில் வெளிவந்து பிரெஞ்சு பழைய நகைச்சுவை எழுத்தாளரான ஏபெலெய் என்பவரைப்பற்றிய Rabelais and His World (1966). இரண்டாவது உலகப்போருக்குப்பிறகு, ரஷியாவில் அமைதி குலைந்தது. பெரிய புரட்சியாளரான ட்ராட்ஸ்கி (Trotsky) யின் நூலான Literature and Revolution 1924 (இலக்கியமும் புரட்சியும்) ஒரு தற்காப்புமுறையில் உருவவியலை விளக்கியது. பின் ஜேகப்சன் டின்யனாவ் கூட்டு முயற்சியினால் வெளிவந்தவையான கருத்துரைகள் (1928), ரஷிய உருவவியல் இயக்கத்தின் தளர்வுகளை வெளிப்படுத்துகின்றன என்ற பொதுவான கருத்து நிலவினாலும், பேராசிரியர் ராமன் செல்டன் பொதுவுடைமைக் கட்சியின் ஆதார பூர்வமான கண்டனத்தினால் இந்த இயக்கம் 1930-ல் மறைந்துவிட்டது என்கிறார்.

பக்டின் புனித பீடர்ஸ்பர்க் நகரத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் செவ்வியல் இலக்கியங்களைக் கற்றார். அவர் ஆசிரியரான பிறகு உருவவியல் இயக்கத்தின் பின்புலத்தில் தனது இலக்கியக் கொள்கைகளையும் மொழியியல் கொள்கைகளையும் விளக்கினார். ஷ்லோவ்ஸ்கிக்கும் பக்டினுக்கும் ஒரு வேறுபாடுண்டு. முன்னவர் உருவவியலை முருகியல் நோக்கிலேயே ஆராய்ந்தவர். பின்னவர் அதை மார்க்சிசத்துடன் தொடர்புபடுத்தினார். உருவவியல் வளர்ச்சிக்குக்

காரணமாயிருந்த ஷ்லோவ்ஸ்கி இலக்கியத்தை அதன் கொள்கைப்படி "Sum total of all stylistic devices employed in it" இலக்கியம் என்பது நடை உத்திகளின் மொத்தக்கூட்டு என்றார்.

பக்டின் ரஷ்ய உருவவியலை மார்க்சிசத்துடன் தொடர்பு படுத்தியது ஒரு முக்கிய கட்டம். அதாவது, உருவவியலை அரசியல் நோக்கத்திலிருந்து பிரிக்க முடியாது என்று நம்பினார். ஷ்லோவ்ஸ்கி ஸ்டெர்னின் நாவலில் கவனம் செலுத்தி அவ்விசித்திரப் பாங்கு உடைய நாவலை இலட்சிய நாவல் என்று கூறினார் என்பதைப் பார்த்தோம். அந்நாவலின் கட்..மைப்பு கதைச் சம்பவங்களை அமைப்பது மட்டுமல்லாமல் கதை சொல்லுவதில் குறுக்கிடுவதும் தாமதப்படுத்துவதும் போன்ற விசித்திரப் பாங்குகளை உத்திகள் என்று அவர் கூறினார். இவ்வுத்திகள் உருவவியலின் பொதுக்கொள்கையான அந்நியமாக்குதலுடன் (defamiliarization) நெருங்கிய தொடர்புடையது. பக்டினின் நாவல் திறனாய்வு அறிவு நுண்மையானது, அவர் தாஸ்தொவ்ஸ்கியின் (Dostovesky) நாவல்களைப் பல ஒலிக்குறி (Polyphonic) என்றார். இது நாவலாசிரியர் உட்பட பல பாத்திரங்களும் பேசுவதைக் குறிக்கும். இன்றைய அமெரிக்கத் திறனாய்வில் நாவலாசிரியரை அவருடைய பாத்திரங்களிலிருந்து பிரித்துக் காண்பிப்பதற்காக அவரை 'implied author' அல்லது மறைமுகமான எழுத்தாளர் என்பர். இற்றைய நாட்களில் நாவல் எழுதப்படும் போக்கில் அவர் வாசகர்களிடம் பதினெட்டாம் நூற்றாண்டின் பாணியின்படி ஆங்கில ஆசிரியர்களைப்போல் நேர்முகமாக வாசகர்களிடம் உரையாடமாட்டார். மறைமுகமாக அவருடைய குரலைத்தான் கேட்க முடியும். அக்குரலில் கதை சொல்லுவதைத்தவிர பாத்திரங்களை விமர்சிக்கவும் கூடும். இவ்வுரையாடல் எந்த நாவலிலும் வரும் (சான்றாக, மு.வ.வின் நாவல்களில்) இவ்வுரையாடல் படிவத்தைத்தான் பக்டின் 'dialogic novel' என்று கூறுகிறார். இப்படிவத்தின் மூலம் நாவலின் வகைமையை இனம் கண்டு கொள்வது அல்லாமல் பல சுவையான உண்மைகளையும் தெரிந்து கொள்ளலாம் என்கிறார் அவருடைய புகழ் பெற்ற கட்டுரையான 'A Prehistory of Novelistic Discourse' (நாவல் உரையாடல் : ஒரு முன் வரலாறு) என்ற கட்டுரையில்.

இந்த முக்கியமான நாவலைப்பற்றிய திறனாய்வு விளக்கத்தில் புஷ்கின் (Pushkin 1799-1837) என்ற ரஷ்ய நாட்டு நாவலாசிரியரின் 'யுஜீனி ஒனஜின்' (Eugeni Onegin) என்ற நூலை அவருக்கே உரிய கொள்கை முறையில் வர்ணிக்கிறார். புஷ்கினின் நாவல் கவிதைமுறையில் எழுதப்பட்டது. இருப்பினும், அது நாவல் என்ற வகைமையைச் சேர்ந்தது என்கிறார். தன்னுடைய கட்டுரையில் நாவல் திறனாய்வு முறையில் எவ்வாறு கருதப்பட்டது என்பதை வரலாற்று நோக்கத்தில் ஆராய்கிறார். செவ்வியலில் நம்பிக்கை கொண்ட பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் நாவலானது ஒரு சுதந்திரமான வகைமையாகக் கருதப்படவில்லை. பிரான்சிலும் ஜெர்மானிய நாட்டிலும் உள்ள கொள்கையாளர்கள் நடையை நாவலின் ஒரு அம்சமாகவே கருதவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாவல் கொள்கைகளில் திறனாய்வாளர்களின் ஆர்வம் அதிகரித்தது. காரணம் ஐரோப்பாவில் நாவலை ஒரு வகைமையாக இனங்கண்டு கொண்டதால். ஆனால் திறனாய்வுப்புலமை அதன் அமைப்பிலும் கருத்தியலிலும் கவனம் செலுத்தியது. நடையியலில் அதற்குரிய கவனம் செலுத்தப்படவில்லை. அத்தகைய ஆராய்ச்சி ஒழுங்குமுறையை மீறியது.

1920-ல் இத்தகைய நிலைமை மாறியது. தனிப்பட்ட நாவல்களிலும் நாவலாசிரியர்களிலும் உள்ள நடையியலை ஆராய்ந்த நூல்கள் பெருகிவிட்டன. நாவல்களைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர். இத்தகைய திறனாய்வுப் படைப்புக்கள் செறிவுள்ள கருத்துக்களை வெளியிட்டனர். ஆனால் அவைகளிலுள்ள குறை நாவல் என்ற வகைமையைத் திட்டவட்டமாக ஆராயவில்லை. குறிப்பாக, நடையியலைப் பற்றிய உண்மையை விட்டுவிட்டார்கள். இது நாவல் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்று பக்டின் வற்புறுத்துகிறார். நடையியல் நோக்கில் நாவல் ஆராய்ச்சிக்கு ஐந்து அணுகுமுறைகள் இருக்கின்றன என்கிறார்.

1) நாவலாசிரியர் நேர்முகமாகப் பயன்படுத்திய மொழியைப் பாத்திரங்கள் பயன்படுத்திய மொழியிலிருந்து பிரித்து

ஆராய்தல். இம்மொழி எவ்விதக் குறுக்கீடுமில்லாமல் நாவலாசிரியர் நாவலாசிரியராகவே பயன்படுத்தியது. இம்மொழியை உத்திகளில்லாமல் நேராகவே ஆராயலாம். அத்தகைய மொழியை கவிதை நோக்கில் ஆராய்ந்து அவருடைய உருவக உத்திகளை வெளிக்கொணரலாம்.

2) நாவலை முழுமையாக எடுத்துக்கொண்டு, நடையியல் நோக்கில் ஆராயாமல் மொழியியல் நோக்கில் ஆராயலாம்.

3) நாவலாசிரியரின் மொழிநடையில் இலக்கியப் போக்கைப் பிரிக்கலாம். சான்றாக அற்புத நவிற்சியியல், இயற்கையியல் (Naturalism) மனப்பதிவுருவாக்கம் (Impressionism) முதலியவை.

4) நாவலின் மொழி அந்தத் தனிப்பட்ட ஆசிரியர் அல்லது நாவல் எழுத்தாளருடைய மொழி என்பதை ஆராய்தல்.

5) நாவலை சொல்லணிக் கலையாக அணுகுவது.

இந்த ஐந்து முறைகளும் நாவலை வகைமையாக இனம் கண்டு கொள்ளுகிற பண்புகளிலிருந்து விலகியிருக்கின்றன. நாவல் என்கின்ற நிலைக்களம் உண்டாகிற காரணங்களிலிருந்து விலகியிருக்கின்றன. இவையெல்லாம், நாவலினுடைய மொழியும் நடையும், நாவலுடையதல்ல; அந்த நாவலை உண்டாக்குகிற தனிமனிதரின் ஆளுமையின் விளைவு அல்லது அந்நாவலாசிரியர் இனம் கண்டு கொண்ட குழுவின் பண்பு. இறுதியாக இந்நடை காரணகாரியத் தொடர்பிற்கு அப்பாற்பட்ட செய்தி, பொதுவாக கவிதை மொழியைச் சார்ந்தது என்பது விளங்கும். நாவலாசிரியருள் மறைந்துகிடக்கும் தனிமனிதர், அவரைச்சார்ந்த இலக்கியவட்டம். ஒரு குறிப்பிட்ட காலப்பிரிவைச் சேர்ந்த இலக்கியமொழி ஆகிய இவை எல்லாம் நாவல் என்ற வகைமையை நம்மிடமிருந்து மறைத்துவிடுகின்றன. அதன் விளைவாக, நாவல் வளர்சியில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி இருப்பினும்கூட, நாவல் சுதந்திரமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இவ்வளர்ச்சியை நடையியல பிரிவுகளின்

மூலம் அறிந்துக்கொள்வது கடினம். (கவிதை வகைமைகள் நோக்கில்) இத்தகைய வகைமைகள் குறுகிய பொருளைக் கொண்டவை.

நாவலுக்கும் (நெருங்கிய பிரிவுகளும், மற்ற வகைமைகளுக்கும் (குறுகி பொருளில் கவிதை வகைமைகளாகக் கொள்ளப்படும்) உள்ள வேறுபாடுகள் அடிப்படையானவை; ஆணித்தரமானவை. ஏனென்றால் கவிதை உருவகவியலில் தொடர்புபடுத்தப்பட்ட கொள்கைகளையும் படிவங்களையும் சுமத்திட முயன்றால் தோல்விதான் ஏற்படும். நாவல் கவிதை உருவவியலை குறுகிய நோக்கில் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தாலும், அக்கொள்கை அவ்வளவு முக்கியமானதல்ல. இதற்கு ஒரு சான்று புஷிகின் கவிதை நாவலில் லென்ஸ்கி என்ற பாத்திரம் காதலைப்பற்றி பாடும் ஒரு கவிதை :

He sang love, he was obedient to love,

And his song was as clear

As the thoughts of a smiple maid

As an infant's dream, as the moon ..

கவிதை படிமங்கள் (குறிப்பாக உருவகங்களை ஒப்புமையாகப் பயன்படுத்துதல்) லென்ஸ்கியின் பாட்டிற்கு உருமாதிரியானாலும் கவிதை நோக்கில் முக்கியத்துவம் கொடுக்க முடியாது. அப்பாட்டை புஷ்கினின் நேர்முகமான படிமமாக எடுத்துக்கொள்ள இயலாது, லென்ஸ்கி என்ற பாத்திரத்தை புஷ்கின் படைத்தாலும்கூட இப்பாட்டு அதன் மொழியிலும் கவிதைப் போக்கிலும் லென்ஸ்கிக்கு சொந்தமானது, பாத்திரப்படைப்பு நாவலாசிரியருக்கு சொந்தமானாலும், இந்த மேற்கோளில் லென்ஸ்கியின் பாட்டு தன்னை இனம் கண்டு கொள்ளுவதைத்தவிர அதன் மொழியும் அதன் போக்கும் அதற்குச் சொந்தமானது. புஷ்கினின் பாட்டுக்குரிய விமர்சனம் குறிப்பிடத்தக்கது. அக்குறிப்பு அப்பாட்டின் போக்கிற்கு வேறுபாடானது:

Thus he wrote gloomily and languidly ... மேலே மேற்கோள் காட்டப்பட்ட நான்கு வரிப்பாட்டு லென்ஸ்கி பாடியது, அவன் குரல், அவன் நடை உட்பட. ஆனால் அடுத்த ஒரு வரி மேற்கோள் லென்ஸ்கியின் பாட்டைப்பற்றி புஷ்கினின் விமர்சனம் மாறுபட்டுள்ளது. நாலு வரிகளிலுள்ள லென்ஸகியின் பாட்டு அவனுடைய குரல், நடை இரண்டையும் இனம் கண்டு கொள்ள முடிகிறது. மேலே உள்ள தனி வரியில், புஷ்கின் லென்ஸ்கி என்ற பாத்திரத்தை மனச் சோர்வுடனும் நலிவுற்ற தன்மையிலும் இருப்பதாக விமர்சிக்கிறார். இங்கு படிமத்தை லென்ஸ்கியின் பாட்டில் காண்கிறோம். குறுகிய நோக்கில் இப்படிமம் நாவல் வகைமையைச் சார்ந்தது. இதன் பொருள் என்னவென்றால் இந்தப் படிமம் மற்றொருவருடைய மொழியைச் சார்ந்தது. தெளிவாகக் கூற வேண்டுமானால் மற்றொருவருடைய கவிதை நடையைச் சேர்ந்தது; குறிப்பாக உணர்ச்சிகளையும் அற்புத நவிற்சி வெளிப்பாட்டையும் உணர்த்துகிறது. லென்ஸ்கியின் பாட்டில் உள்ள கவிதை உருவகங்கள் ('As an infant's dream', 'as the moon' முதலிய சொற்றொடர்கள்) முதல் நிலையான பிரதிநிதித்துவம் லென்ஸ்கியுடைய பாட்டில் வரும் உருவகங்களைப் போல் உள்ளதாய் கூறமுடியாது. இப்பாட்டில் அவை கருத்துச் சார்ந்தவையாகவும் நேர்முகத் தொடர்புடையதாகவும் உள்ளன.

## அதிகாரம் - 2

## குறிப்புகள் - 1

1. இந்நூலின் ப. பார்க்கவும்

2. இங்கிலாந்தில் ஒரு குறுகிய நாடகத்தின் கதையமைப்பு 1) ஆசிரியரின் கற்பனையின்படி, சாத்தான் நரகத்தைவிட்டு இலண்டன் மாநகருக்கு வருகிறான். அங்கு பிரபு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் நண்பனாகிறான். இருவரும் நெருங்கிப்பழகிய பொழுது ஒரு கசப்பான உண்மையை உணருகிறான். அவனுடைய ஆங்கில நண்பன் மனைவியைவிட்டுப் பிரிந்து வாழ்கிறான். அவளுடைய தனி வாழ்க்கையில் பரிவுகொண்டு சாத்தானை அவளுடன் வாழப் பரிந்துரை செய்கிறான். அதிர்ச்சியடைந்த சாத்தான் லண்டனைவிட்டு தன்னிருப்பிடத்திற்கு ஓடிவிடுகிறான். 2) இன்னொரு நாவல் ஜெர்மானிய மொழியில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது ஒரு தாய்மைக்கும் அவளுடைய தனயனுக்கும் இனம்புரியாத பால் தொடர்பை விவரிக்கிறது. 3) உலகப் புகழ்பெற்ற பெர்ட்ரண்டு ரஸ்ஸல் (Bertrand Russell) என்ற தத்துவ அறிஞரின் சுயசரிதையில் முதல்பாகத்தை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறேன். பிரபு குடும்பத்தைச் சேர்ந்த ரஸ்ஸலுக்கு அந்நாட்டிலுள்ள மரபின்படி தனி முறைப்பயிற்சிக்கு ஆசிரியர் நியமிக்கப்படுகிறார். அவர் ரஸ்ஸலுக்கு கல்விப்பயிற்சி அளிக்கும்பொழுது அவர் புற்றுநோயாளி என்ற அவலச்செய்தி உறுதிப்படுத்தப்படுகிறது. ரஸ்ஸல் பெற்றோர்களின் திட்டத்தின்படி, குறுகிய காலத்தில் அவ்வாசிரியர் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டி, ரஸ்ஸலின் அன்னை, அவருடைய தந்தையின் அனுமதியின்படி, ஆசிரியருடன் உடலுறவு கொள்ளுகிறாள். இக்கசப்பான உண்மைகளெல்லாம் எலியட்டின் 'பாழ்நிலம்' என்ற கவிதையில் எதிரொலிக்கின்றன. பண்புகள் மீறப்படுகின்றன. உணர்வுகள் ஒதுக்கப்படுகின்றன, மரபு நோக்கில்.

3. இந்நூலின் முதல் பாகத்தைப் பார்க்கவும்

4. இதை Geneva School of Criticism அல்லது ஜெனிவா திறனாய்வுக் குழு என்றும் கூறுவர்.

5. Phenomena என்பது பன்மை ; Phenomenon என்ற சொல் ஒருமை

6. இதற்கு முன்னதிகாரத்திலுள்ள குறிப்பு 89-ஐப் பார்க்கவும்.

7. Being என்ற ஆங்கிலச் சொல் தமிழில் மொழிபெயர்ப்பது மிகக் கடினம். இதனுடைய விளக்கத்திற்கு கீழேயுள்ள Being என்பது எப்படி முக்கிய தத்துவமாக ஐரோப்பாவில் விளங்கியது என்ற வரலாற்று விளக்கத்தைப் பார்க்கவும்.

8. Ontology என்ற சொல் ரான்சம் மிகவும் விரும்பிய சொல். இதைத் தற்சார்பற்ற என்ற பொருளில் அவர் பயன்படுத்தினார்.

9. பிளேட்டோவின் தத்துவத்தை ஆராயும் பொழுது இத்தற்காலிக உலகம் நிரந்தரமான மேல் உலகத்தின் படிவம். அவ்வடிப்படையில் பொருள் என்பது அழியக்கூடியது; ஆனால் அதன் வடிவம் நிரந்தரமானது என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். இவ்வடிவத்தை ஆங்கிலத்தில் Idea என்று அழைப்பர். Idea என்றும் அழியாதது. Substance அழியக்கூடியது.

10. இக்கொள்கையைத்தான் 'A thing of beauty is a joy for ever' என்றார் கீட்ஸ். அற்புத நவிற்சிக்கவிஞரான கீட்ஸ் எப்பொருளும் அழகுடையது, கடவுளால் படைக்கப்பட்டதால், அவ்வழகைக் கவிஞன் ஒருவனால்தான் புரிந்து கொள்ள முடியும். இக்கொள்கையை ஜான்ஹாப்கின்ஸ் என்ற ஐயர்லாந்து நாட்டுக்கவி தத்துவநோக்கில் ஒரு பொருள் (thing) என்பது உள்ளமைப்பு என்று ஜெர்மன் மொழியில் கூறுவர். கவிஞன் அழகு அல்லது உள்ளமைப்பு என்ற பொருளின் ஆத்மாவை உணரவேண்டும் என்று அக்கவிஞர்கள்

அடிக்கடி சொல்லிவந்தார்கள். பிளேட்டோ கூறும் அமைப்பு (form) அல்லது Idea (இச்சொல் ஆங்கிலச் சொல் ஆனாலும், இதன் மூலம் கிரேக்கத்தில் உள்ளது; நிலையானது என்ற பொருள் கொண்டது) இக்கொள்கைகளைச் சாரும்.

11. இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ஞானியான இவர் மேற்கு ஐரோப்பாவில் தத்துவஞானத்தைத் திசை திருப்பியவர். அவர் ஒழுக்கத் தத்துவயியலையும் அரசியல் விஞ்ஞான இயலையும் இறைமையியலின் திட்டத்திற்குள் கொண்டு வந்தவர். அரிஸ்டாடிலையும் இஞ்ஞானியையும் பலர் ஒப்புநோக்கியுள்ளனர்.

12. இவ்விளக்கம் ஆசிரியருடையது, மேலை நாட்டுத் தத்துவம் விஞ்ஞானத்தை நெருங்குவதால் இங்குக் கூறியுள்ள உயிருருவின் விளக்கம் கவனிக்கத்தக்கது.

13. கான்ட் ஜெர்மானிய நாட்டு தத்துவஞானிகளில் மிகவும் புகழ்பெற்றவர். இவருடைய மெய்யறிவைப்பற்றிய கட்டுரைகள் தத்துவஞானத்தையும் இலக்கியத்தையும் தாக்கத்திற்குள்ளாக்கின. இவரைப்பற்றிய அறிவு சார்ந்த வெல்லக் அவர்களின் கட்டுரையைப் பார்க்கவும்.

14. Discriminations என்ற கட்டுரைத்தொகுப்பில் ஹெகலின் தத்துவக்கொள்கையிலிருந்துதான் கார்ல்மாக்ஸ் பொதுவுடைமைக் கொள்கையை உருவாக்கினார்.

15. Mind அல்லது உள்ளம் என்பதற்கு நேரான ஜெர்மானியச் சொல் 'Geist என்பதை ஹெகல் பயன்படுத்தினார் என்று அறிகிறோம். ஆனால் Geist என்பதற்கு, time, spirit என்ற இரண்டு பொருள்களும் அதற்கு விவாதச் சூழ்நிலையில் என்ற பொருளும் உண்டு. இதற்குக் காலத்திற்குக் காலம் மாறுகின்ற சூழ்நிலை எப்படி இலக்கியத்தையும் மற்ற அறிவு சார்ந்த கலைகளையும் பாதிக்கும் என்ற பொருள் உண்டு.

16. பல்கலைக்கழகத் தத்துவஞானத்தை (Scholasticism) உண்டாக்கியவர்கள் பனிரெண்டாம் நூற்றாண்டிலிருந்தே வாழ்ந்துவந்த அறிஞர்கள். இவர்கள் மதத்திலும் தத்துவத்திலும் ஆர்வம் கொண்டவர்கள். இவர்களது முக்கிய குறிக்கோள் அரிஸ்டாடிலின் தத்துவத்தை கிறிஸ்து மதக்கோட்பாட்டுடன் இணைப்பதே. பகுத்தறிவை மத நம்பிக்கையுடன் தொடர்புபடுத்த விழைந்த இந்த இயக்கம் 15-ம் நூற்றாண்டிலேயே மறையத்தொடங்கிவிட்டது.

17. ஹுஸர்லின் உணர்வுத் தத்துவத்திற்கும் வேதாந்தத்திற்கும் உள்ள வேறுபாடுகள் :- வேதாந்தம் இவ்வுலகம் மாயை என்றது. இம்மயக்கம் மாயை என்ற திரையினால் ஏற்பட்ட தோற்றம். திரை விலகினால் (ஞானத்தின் துணையினால்) எது நிலையானது, எதுநிலையற்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்றான் வேதாந்தி ஹுஸர்ல் உலகப் போருக்குப் பின் குழப்பத்திலிருந்த ஐரோப்பியர்களுக்கு நம் உணர்வுகளால் அறியக்கூடிய உலகம்தான் உண்மையானது, நம்பத் தகுந்தது என்று கூறித் தன் மக்களை ஆத்மக்குழப்பத்திலிருந்து காப்பாற்றினான்.

18. ஹுஸால், ஹைடக்கரின் உயிருருத் தத்துவத்திலிருந்துதான் பிறந்தது Existentialism இதை உண்டாக்கியவர் டேனிஷ் நாட்டில் (Denmark) பிறந்த கியர்க்ககார்ட் (Kierkagaard) அவருடைய கொள்கை, சுதந்திரம் என்பது தன்னிச்சைபோல் நடப்பதல்ல; ஒரு மனிதனுடைய சுதந்திரம் மற்ற மனிதர்களுடைய சுதந்திரத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் அவனுடைய செயல் வரம்பிற்குட்பட்டது. இக்கருத்தை கியர்க்ககார்டின் தத்துவத்திலிருந்து விளக்கியவர் பிரெஞ்சு நாட்டுத் தலைசிறந்த எழுத்தாளரான 1905-ல் பிறந்த சார்த்ரா (Sartra) என்பவர். அவர் தத்துவஞானியாகவும் நாவலாசிரியராகவும் நாடகாசிரியராகவும் ஐரோப்பாவில் புகழ் எய்தியவர். அவர் Marxist existenliatist School என்பதன் தலைவர். அவர் தனக்கு அளித்த நோபல்

பரிசை வாங்க மறுத்தவர். உயிருருத் தத்துவத்தை ஜெர்மானிய அறிஞர்களிடமிருந்து கைப்பற்றி Ontology என்பதை Existentialism என மாற்றியவர்களில் கியர்க்கார்டும் சார்த்தருமாவர். சார்த்தரின் Existentialism and Humanism (1948) என்ற ஆங்கில மொழிபெயர்ப்பைப் பார்க்கவும் அல்லது ஐரிஸ்மர்டாக் (Iris Murdoch) எழுதிய Sartra (1953) என்ற நூலைப்பார்க்கவும். இத்தத்துவ விசாரணையிலிருந்து தோன்றியதுதான் அபத்தநாடகம் (Absurdist drama) இதில் தலைசிறந்தது Waiting for Godot (1952 பிரெஞ்சு மொழியில் ஆசிரியரே எழுதியது) இதில் மூன்று பிரயாணிகள் யாருக்காகவோ காத்திருக்கிறார்கள். யார் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. ஆனாலும் அந்த இனம் தெரியாதவர் என்றாவது ஒருநாள் வருவார் என்ற நம்பிக்கையை விடவில்லை இதைத்தான் 'சூனியத்திலுள்ள ஒரு துளை' என்றார்கள். வாழ்க்கை என்பது ஒரு விகடத்துணுக்கு இதற்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. ஒரு கோணத்தில் அது ஒரு புதிராகவே இருக்கிறது.

19. உயிருருஇயல் இந்நூலில் விளக்கிய செய்திகள் "Ontology" The Encyclopaedia of Religion Vol. II New York: Macmillan Publishing Company 1987 என்பதிலிருந்து எடுக்கப்பட்டவை. என்னுடைய விளக்கங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

20. Dasein என்பதின் விளக்கம் "The inner dynamic of (the human) Constant self transcendence" ஒவ்வொரு மனிதன் உள்ளிருக்கும் தனித்தன்மை முழுவதும் இச்செயற்கை உலகத்தை சார்ந்ததல்ல. இவ்வுடல் அநித்தியமானதாலும் அதன் உள்ளிருக்கும் தனித்தன்மையின் சாரம் அறிவுலகத்திற்கு அப்பாற்பட்ட ஆத்மா. அது கடவுள் தன்மையைச் சார்ந்தது. இக்கொள்கை வேதாந்த தத்துவத்தின் உயிருருக் கொள்கையைச் சார்ந்திருப்பதைக் காணலாம். பார்க்க: Terry Eagleton. Literary Theory : An Introduction. Minnesota : University of Minnesota press 1983

63. இது தற்காலத் திறனாய்விற்கு இன்றியமையாத நூல்.

21. இப்பேராசிரியர் தன் சொற்பொழிவுகளைப் பிரெஞ்சு மொழியிலேயே ஆற்றினார். ஆகையால் அவர் பயன்படுத்திய பிரெஞ்சு சொற்களையே திறனாய்வாளர்கள் மேற்கோள் காண்பிக்கிறார்கள். ஸ்விட்ஸர்லாந்தில் பல ஐரோப்பிய மொழிகள் இன்றும் பேசப்படுகின்றன. முக்கியமாக, பிரெஞ்சும் ஜெர்மானிய மொழியும்.

22. அம்பர் (Amber) என்பது பச்சைக்கும் சிகப்புக்கும் இடைப்பட்ட ஒருவிதமான மஞ்சள் நிறம் அல்லது செம்மஞ்சள்.

23. பார்க்க : Raman Selden. A Reading Guide to Contemporary Literary Theory. Second Edition. London : The Harvester press, 1986, 52-71. இந்நூல் இங்கிலாந்தில் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் படிக்கும் முதுகலை மாணவர்களுக்காக எழுதப்பட்டது. ஆகையால் இந்திய மாணவர்கள் இதைப் பயன்படுத்தலாம். சிக்கலான கருத்துக்களை எளிய முறையில் புரிய வைக்கிறார் ஆசிரியர். இந்நூலிலுள்ள குறை அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர்களை ஒதுக்கியது. பார்க்கவும். Ferdinand de Saussura. "The Nature of the Linguistic Sign". Modern criticism and Theory. 1-14

24. சான்றாக, Terry Ealeton Literary Theory : An introduction. Minnesota: University of Minnesota press, 1983. 'Structuralism and Semiotics' என்ற அதிகாரத்தைப் பார்க்கவும். இதன் ஆசிரியர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர். மார்க்சிய திறனாய்வாளராக மதிப்புப் பெற்றவர். இவருடைய ஆளுமை நிறைந்த ஆங்கிலமொழி அடிக்குறிப்பு-23-ல் குறிப்பிட்ட ராமன்செல்டன் என்பவரின் மொழியைவிட சிக்கலானது. ஆனால் வளர்ச்சியுறும் திறனாய்வாளராக கில்டன் அமெரிக்க நாட்டில் மதிக்கப்படுபவர். .என்ற சொல்லிற்கு, பார்க்க :

வை. சச்சிதானந்தன். மேலை இலக்கியச் சொல்லகராதி. சென்னை : மாக்மில்லன் வெளியீடு, 1983

25. Barthes என்பதை அச்சொல்லிலுள்ள கடைசி எழுத்தை ஒதுக்கிவிட்டு 'பார்த்' என்று உச்சரிக்கவேண்டும். பிரெஞ்சு மொழியில் ஒரு சொல்லின் இறுதி எழுத்து மெய்யெழுத்தொலியாக இருந்தால் அதை உச்சரிக்கக்கூடாது. சில பிரெஞ்சு சொற்களுக்கு விதிவிலக்குண்டு. 'அமைப்பியல்' என்ற கலைச்சொல் மேலே விவரிக்கப்பட்ட கட்டமைப்பியல் என்பதிலிருந்து பிரித்துக்காண்பிப்பதற்காகப் பயன்படுத்திய சொல் என்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

26. இவ்வடிப்படையில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியரும் திறனாய்வாளருமான F.W. Bateson என்பவர் 'Shakespeare's Laundry Bill' என்ற கட்டுரையை வெளியிட்டார். இது நாடகாசிரியரின் வாழ்க்கையிலிருந்து பல சுவையான செய்திகள் அவர் சலவைப் பட்டியலை ஆராய்ந்து எப்படித் தெரிந்து கொள்ளலாம் என்பதை விளக்குகிறது. இக்கட்டுரையை Twentieth Centrury Critical Essays என்ற தொகுதியில் பார்க்கலாம். இது ஹார்வேடு பல்கலைக்கழக வெளியீடு.

27. பார்க்க : Jonathan Culler. Barthes. Foutana Modern Masters. London : William Collins Sons & Co., Ltd., 1983. ஆங்கில மொழியிலும் பிரெஞ்சுமொழியிலும் பார்த்தைப்பற்றிப் பல நூல்கள் வெளிவந்திருந்தாலும், இச்சிறிய நூலே இந்திய மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகும். அமெரிக்காவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லர் அமைப்பியல் திறனாய்வில் அதிகார பூர்வமானவர் என்று போற்றப்படுகிறார். அவருடைய புகழ்பெற்ற நூல், Structuralist Poetics : Structuralism linguistics, and Kegan paul, 1975. இந்நூல் அமைப்பியல் கொள்கைகளைப் பற்றி அதிகாரபூர்வமான நூல் என்று பல ஆண்டுகளாகப் போற்றப்பட்டது. ஆனால்

இப்பொழுது அமைப்பியலை ஒரு வேதமாகக் கருதுகிறது என்ற கருத்து பரவலாக இருக்கிறது.

28. பார்க்க : (i) Roland Barthes. "Criticism as Language". 20th Century Literary Criticism Ed. David Lodge. London : Longman. 1972. 647-651. (ii) Roland Barthes. "The death of the author". Modern Criticism and Theory. Ed. David Lodge. London : Longman. 1988. 167-172. மேலே கண்ட பார்த்தின் இரண்டு கட்டுரைகளையும் புரிந்துகொள்ள இந்நூலின் வாசகர்கள் "Critic". "Semiorist" "Structuralist" என்ற மூன்று அதிகாரங்களையும் பேராசிரியர் ஜோனதன் கல்லர் எழுதிய Barthes என்ற சிறிய நூலில் படிக்கவும்.

29. ரோமன் ஜேகப்ஸனுடைய மொழியியல் கருத்துக்களை விளக்கும் கட்டுரைகளுக்கு, பார்க்க : David Lodge yd. Modern Criticism and Theory (1988) pg. 31-61.

30. Clanda Levi - Strauss "Incest and Myth". 20th Century Literary Criticism. 545-550.

31. The Holy Grail என்ற நூல் (பிரெஞ்சுக்கதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு) பெங்க்வின் (Penguin) வெளியீட்டாரால் அச்சிடப்பட்டது. இன்றும் கிடைக்கிறது. இக்கதையால் கவரப்பட்ட ஒரு இந்திய ஆசிரியர் The Silver Cup என்ற நாவலை பழைய புராணிக முறையை இந்துக்கள் மரபுவழிக்கதைகளில் கலந்து வெளியிட்டார். இந்திய ஆங்கில இலக்கியத்திறனாய்வாளர்கள் இதை இனம் கண்டு கொள்ளவில்லை.

32. இயேசுநாதரின் புராணிகக்கதைகளை ஆராய்ந்த மானுடவியல் நிபுணர் Ms. Janet Spens என்ற அமெரிக்கமாது From Ritual to Romance என்ற சிறிய முக்கியமான நூலை எழுதியுள்ளார். அவர் கருத்துப்படி இப்புராணிகக் கதைகளெல்லாம் அடிப்படையில் மதச்சடங்குகளைக் குறிக்கின்றன என்று கூறுகிறார். ஆகவே மதச்சடங்குகள் தான் காலப்போக்கில்

புராணிகக்கதைகளாகின. பனிரெண்டு தொகுதிகளில் புகழ்பெற்ற புராணிக அறிஞர் Sir James Frazer (1854-1941) என்ற அறிவாளி எழுதிய The Golden Bow என்ற நூல் இன்றைய மேலை இலக்கியத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது. இதன் சுருக்கம் இரண்டு தொகுதிகளில் மாக்மில்லன் வெளியீட்டாளர் பிரிவு. St. Martin's Press வெளியிட்டது. இக்குறிப்பில் சொல்லப்பட்டிருக்கும் நூல்கள் ஒரு நூல்நிலையத்திற்கு இன்றியமையாத பொக்கிஷங்கள், எலியட்டின் 'பாழ்நிலம்' From Ritual to Romance என்ற நூலில் புராணிகக் கருத்திலிருந்து தொடங்குகிறது. எலியட்டின் இன்றைய திறனாய்வாளர்கள் 'பாழ்நில' வாசகர்கள் இந்நூலைப் படிக்க வேண்டாம் என்று அறிவுரை கூறினாலும், இந்நூல் எலியட்டின் ஒப்பற்ற கவிதையைப் புரிந்துகொள்ள உதவும் என்ற நம்பிக்கையைக் கைவிடவேண்டாம்.

33. பார்க்க : "Linguistics and Poetics", Modern Criticism and Theory. Ed David Lodge. London and New York Longman 1990 32-57 இலக்கியத்திறனாய்வாளர்களாலும் மொழியியல் நிபுணர்களாலும் மதிக்கப்படுவர். முதன் முதலில் மாஸ்கோ மொழியியல் குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தார். அரசியல் புரட்சி காரணமாக செக்கோஸ்லாவிய நாட்டுத் தலைநகரமான ப்ராக் (prague) மொழியியல் குழுவை நிறுவினார். அரசியல் மாற்றங்களால் ஐரோப்பாவை விட்டு வெளியேறி அமெரிக்காவின் குடிமகனானார். பேராசிரியர் வெல்லக் போலவே ஜேகப்ஸனும் மேற்கு உலகத்திற்கும் ஐரோப்பாவிற்கும் ஒரு அறிவுப்பாலமாகப் பணிபுரிந்தார் லெவி-ஸ்ட்ரௌஸ் இவருடைய மொழியியல் கொள்கைகள் தனக்குப் பயன்பட்டதாகக் கூறுகிறார். ஜேகப்ஸன் ஷேக்ஸ்பியரின் 14-அடிக்கவிதைகளை அமைப்பியல் ஆய்விற்கு உட்படுத்தினார். இது ஐ.ஏ. ரிச்சர்ட்ஸினால் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டது.

34. இந்த அமைப்பியல் திறனாய்வு எதிர்மறைகளில் கவனம் செலுத்துகிறது. உருவகங்களையும் முக்கிய சொற்களையும் குறியீடுகளாகக் கொள்கிறது. பார்க்க : "Chapter 3 "Structuralism". Ed. Raman Selden. Practising Theory and Reading Literature : An Introduction. London : Harvester Wheatsheaf. 1989. 47-60.

35. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். பாரதிதாசன் கவிதைகள் இராமச்சந்திரபுரம் : செந்தமிழ்நிலையம் 1973. இப்பதிவு பாரதிதாசன் கவிதைகளைப் பயபக்தியுடன் அச்சிட்டாலும், மூல பாடத்திறனாய்வுமூலமும் அச்சுப்பதிவுக்கும் உள்ள தொடர்பு, என்ன என்ன பிழைகள் திருத்தப்பட்டிருக்கின்றன, என்ன என்ன முக்கிய செய்திகள் மர்மமாகவே இருக்கின்றன. இதன் பதிப்பாசிரியர் யார் என்று தெரியவில்லை. பழைய பதிப்பாய் இருந்ததால் இது கவிஞருக்குக் காலத்தால் நெருங்கியிருக்கக்கூடும் என்ற காரணத்தால் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கவிதை 18-35 பக்கங்களில் இந்நூலில் அடங்கியுள்ளது.

36. Dr. C. Kanakasabapati. "Bharatidasan's Revolutionary Poet and Bilhana Legend. Bharatidasan : Critical Perspectives Ed. V. Sachithanandam etal. Madurai : University Department of Tamil Studeis, 1991. 88-97. இது இன்றியமையாத ஆராய்ச்சிக் கட்டுரை. இட நெருக்கடி காரணமாக, பலவரிகள் கவிதையிலிருந்து விடுபட்டிருக்கின்றன.

37. ரோமன் ஜேகப்சனைப் பற்றிய செய்திகளுக்கு மேலே இவ்வதிகாரத்தைப் பார்க்கவும். குறிப்பு 33.

38. வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ள தொடர்பு ஒரு திறனாய்வாக ஜெர்மானிய நாட்டில் முதன்முதலில் பதினெட்டாம் நூற்றாண்டில் வளர்ந்த ஆங்கில நாவலை, முக்கியமாக லாரன்ஸ்ஸ்டெர்ன் D(Laurence Sterne 1713-68) எழுதிய விசித்திரமான நாவல்களை நுண்ணிய முறையில் ஆராய்ந்து aesthatics of reception என்ற திறனாய்வுப்

பிரிவைத் தொடங்கி வைத்தனர். இதன் அடிப்படைக் கொள்கை : *நாவலாசிரியர் எந்த வாசகரை மனதில் கொண்டிருக்கிறார் என்று இனம் கண்டு கொண்டால் அந்த நாவலைப் புரிந்துகொள்ள முடியும்.* இது அமெரிக்காவில் பரவினாலும், அந்நாடு தொலைவில் இருப்பதாலும் மொழிவேற்றுமையினாலும், ஒரு அறிவு இடைவெளி உண்டாகியது. இவ்விடைவெளி குறுகியதற்குக் காரணம் புகழ்பெற்ற ஆராய்ச்சி இதழ் PMLA (Publications of the Modern Language Association of America) இல் சில ஆண்டுகளுக்கு முன் வெளியான ஒரு ஆங்கிலக் கட்டுரைதான். ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ள முக்கிய தொடர்பை இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அறிந்திருந்தார். இப்பிரிவைப்பற்றி முக்கிய செய்திகளை அறிய பார்க்க : Wane C. Booth. "The Scholar in Society". Introduction to Scholarship in Modern Language and Literatures Ed.Joseph Gibaldi. New york : The Modern Language Association of America. 1981. 116-143. பேராசிரியர் வெயின்பூத் நாவல்களுக்கும் வாசகர்களுக்கும் உள்ள தொடர்பை The Rhetoric of Fiction (1961) என்ற நூலை எழுதிப்புகழ் பெற்றவர். இது சிகாகோ பல்கலைக்கழகத்தின் வெளியீடு.

39. Chameoeon என்பதை பச்சோந்தி என்று மொழி பெயர்த்தாலும் இத்தமிழ்ச் சொல்லில், ஆங்கிலச் சொல்லில் இல்லாதது போல, 'இழிவு' என்ற பொருள் தொக்கி நிற்கிறது. 'Chemeleon poet' என்பது அம்மொழியில் ஒரு சிறந்த சொற்றொடர் 'பச்சோந்திக்கவிஞன்' என்பதையும் அப்பொருளிலேயே எடுத்துக்கொள்ளவேண்டும்.

40. டெரீடாவின் கட்டுரைக்குப் பார்க்க : David Lodge. ed.. Modern Criticism and Theory 108-123. இந்தக்கட்டுரையைப் படிக்கும்பொழுது ரோலந்த் பார்த்தும் பலபுகழ்பெற்ற அமெரிக்கத் திறனாய்வாளர்களும் கருத்தரங்குக்கூடத்தில் அமர்ந்திருந்தார்கள் என்று இந்நூலிலுள்ள

குறிப்புக்கூறுகிறது. இந்தக் கட்டுரையின் மூலம்தான் பின் அமைப்பியல் கொள்கை அமெரிக்க அறிவுலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. மனித இலக்கியங்களை விஞ்ஞானமாகக் கருதும் பழக்கம் பரவலாக இருந்தது ஐரோப்பாவில்.

41. Modern Criticism and Theory. Pg. 108.

42. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், செந்தமிழ் நிலையம்; இராமச்சந்திரபுரம் 1973 1-16.

43. பார்க்க : அடிக்கருத்தியல் பற்றிய செய்திகளுக்கு அதே பெயருள்ள அதிகாரம் ( ) வை. சச்சிதானந்தன். ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம் என்ற நூலைப் பார்க்கவும்.

44. பார்க்க : "Myth" வை.சச்சிதானந்தன். மேலை இலக்கியச் சொல்லகராதி.

45. கவிதைகளில் நுண்பொருட் கோட்பாட்டியல் கவிஞர்கள் எண்களைப் பயன்படுத்துவதை 'காதல் விளைவிக்கிற கணக்கு' என்று திறனாய்வாளர்கள் கூறுவார்கள்.

46. ட்ரைடனைப்பற்றிய முழு விபரங்களுக்கு பக்கம் என்பதைப் பார்க்கவும்.

47. மீண்டும் இடநெருக்கடி காரணமாக 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதையில் பலவரிகளை விட்டுவிடும்படியாக நேர்ந்தது. வாசகர்கள் கட்டவிழ்ப்பியலை விரிவாகப் பயன்படுத்தினால் பல சுவையான உண்மைகளை அறியலாம். இது அரசியல் கலவாத திறனாய்விற்கு வழிவகுக்கும்.

48. இன்றும் யேல் தலை சிறந்த பல்கலைக்கழகமாக விளங்க "Yale Studies" என்ற பெயருள்ள ஆராய்ச்சி இதழ் பல பெயர்களில் வெளிவருகிறது. இங்கேதான் ரெனெவெல்லக் ஒப்பிலக்கியப் பேராசிரியராக இன்றும் இருக்கிறார். பலதலைசிறந்த திறனாய்வாளர்கள்

எழுத்தாளர்களும் ஆங்கிலத்துறையில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். யேல் நியூயார்க் பெருநகரத்திற்கு வடக்கே உள்ளது.

49. இந்நூலில் பக்கம் பார்க்கவும்.

50. பார்க்க : Raman Selden. A Reader's Guide to Contemporary Literary Theory 84-105.

51. இந்நூலின் பக்கம் என்பதைப் பார்க்கவும்

52. பொதுவாகக் கிறிஸ்து மதத்தை மதிக்கும் வாசகர்கள் இதை விரும்பமாட்டார்கள் எனலாம். மேலை நாடுகளில் போன நூற்றாண்டிலேயே லோகாயதத்தால் மத நம்பிக்கை தளர்ச்சியடைந்துவிட்டது. இதற்கு இரண்டு சான்றுகள் : புகழ்பெற்ற அமெரிக்கப் புதுத்திறனாய்வாளர் ஆலன்டேட்டின் அச்சிடப்பட்டு வெளியான கடிதங்களில் (இக்கடிதங்கள் நம்நாட்டில் கிடைப்பது அரிது) தான் எழுதிய கடிதத்தில் ஐயுறவு வாதியான திறனாய்வாளரை 'கிறுத்துவர்' என்று அழைக்கிறார். அதற்கு அவர் கடுமையாக ஆட்சேபிக்கிறார். கண்டனமும் தெரிவிக்கிறார். புகழ்பெற்ற தத்துவஞானியான பெர்ட்ரண்டு ரஸ்ஸல் கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவை கடுமையாக விமர்சிக்கிறார். பகுத்தறிவு வாதம் உள்ள தமிழ் நாட்டில் இந்துமதத்தை எதிர்க்கிறார்கள். மத எதிர்ப்பு மறைமுகமாகவும் அதற்கு எதிர்முறையாகவும் பரவலாக ஆங்கில, அமெரிக்க இலக்கியத்தில் காணலாம்.

53. இவ்வதிகாரத்திலுள்ள அடிக்குறிப்பு 50 இதற்குப் பொருந்தும். பேராசிரியர் ராமன் செல்டனைப் பின்பற்றினாலும் அமெரிக்க நாவல்களின் குறிப்புக்கள் என்னுடையது. Puritanism என்பது பழைய அமெரிக்க இலக்கியத்தில் ஒரு முக்கிய பெருந்தாக்கம்; மில்டன் திறனாய்வும் என்னுடையதே.

54. மேலே மில்டனைப் பற்றிக்கூறிய கருத்துக்கள் பல ஆண்டுகள் ஆங்கில முதுகலை வகுப்புக்களுக்கு 'சுவர்க்க நீக்க'த்தைப்பற்றி நான் ஆற்றிய சொற்பொழிவுகளின் விளைவு. கீழே கூறியிருப்பது ராமன் செல்டனின் திறனாய்வு நூலிலிருந்து : A Reader's Guide to Contemporary Literary Theory 87

55. ஒரு பெண்ணையே ஒரு ஆணைவிட முக்கிய கதாபாத்திரமாக ஆக்குவது கவிதையியலின் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. செவ்வியல் இலக்கியத்தில் விற்பன்னரான மில்டனுக்கு கிரேக்க இலக்கியத்தில் சான்றுகள் இருக்கின்றன என்பது தெரியும். அவ்விலக்கியத்தின் நாடகாசிரியரான யூரி பிடிஸ் என்பவர் மரபை எதிர்த்துப் பெண்களை முக்கிய பாத்திரமாக ஆக்கியிருக்கிறார்கள். சான்று 'மீடியா' (Medea) இப்படிப்பல நாடகங்கள் எழுதியிருக்கிறார்.

56. பார்க்க : "Binary Oppositions". Practising Theory and Reading Literature: An Introduction. Raman Seldon. London : Harvester Wheatsheaf. 1989. 55-60 அமெரிக்க நாடகாசிரியர் ஆர்த்தர் மில்லரின் சிறந்த நாடகமான Death of a Salesman இல் ஒரு காட்சியை எடுத்துக்கொண்டு அதை அமைப்பியல் நோக்கில் திறனாய்வு செய்கிறார். அமைப்பியல் கொள்கைக்கு கீழ் பலதரப்பட்ட திறனாய்வுப் போக்குகளைக்கொண்டு வருகிறார்.

57. கட்டவிழ்த்தல் கொள்கையைப்பற்றி விரிவான உரைக்கு பார்க்க : M.H. Abrams. "The Deconstructive Angel". Modern Criticism and Theory 265-276. இக்கொள்கையை தற்காப்பு முறையில் அருமையாக விவரித்தாலும் திறனாய்வு மரபுப்படி எதிர்க்கிறார். அற்புத நவிற்சிக்கவிதையைப்பற்றி The Mirror and the lamp (1953) என்ற நூலை வெளியிட்டு ஏற்கனவே புகழ்பெற்றவர்.

58. Modern Criticism and Theory என்ற திறனாய்வுக் கட்டுரைத்தொகுப்பில் கீழ்க்கண்ட கட்டுரைகளைப் பார்க்கவும் :

(i) Paul de Man. "The Resistance to Theory" 355-371

(ii) Harold Bloom. "Poetic Origins and Final Phases". 241-252

(iii) J. Hillis Miller. "The Critic as Host". 278-285

(iv) Geoffrey Hartman. "The Interpreter's Freud". 412-424

59. இந்நூற்றாண்டில் பல விஞ்ஞான நாவல்களை அறிவுபூர்வமாக எழுதி அத்தகைய நூல்களை ஒருவகைமையாகவே ஆக்கியவர். பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளைத் தீர்க்கதரிசனத்துடன் முன்னறிவித்தவர். Time Machine. The History of Mr. Polly, Kipps போன்ற புகழ் எய்திய நாவல்களை எழுதியவர். பரந்த நோக்கத்துடன் எழுதிய The History of the World என்ற நூலை எழுதியவர்.

60. பார்க்க : A Reader's Guide to Contemporary Literary Theory. 89-90 சான்றுகள் என்னுடையது.

61. அமெரிக்க இலக்கியத்தையும் இங்கிலாந்திலிருந்துவரும் இலக்கியத்தையும் 'ஆங்கில இலக்கியம்' என்று கூறும் பழக்கம் உண்டு. ஆனால் அவ்விரண்டு இலக்கியங்களில் பயன்படுத்தப்படும் மொழிவேறுபாடு உடையது. அமெரிக்கர்கள் பயன்படுத்தும் ஆங்கிலம் பேச்சுமொழிக்கு நெருங்கியது; நாம் ஆங்கிலேயர்கள் மரபுப்படி பயின்றுவருபவர் 'இலக்கணம்' என்பதின் விதிகளை அமெரிக்கர்கள் மீறுகிறார்கள். சான்றாக, Research என்ற சொல் ஆங்கிலேயர்களால் பெயர்ச்சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கர்கள் வினைச்சொல்லாகவும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அமெரிக்கக் கலாச்சாரத்தின் உலகளாவிய ஆதிக்கத்தினால் மொழி

பயன்படுத்தும் முறையில் இடைவெளி குறைகிறது. ஜார்ஜ் பெர்னார்டுஷா 'அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஒரே மொழி பேசப்பட்டாலும் அம்மொழி அந்நாடுகளைப் பிரிக்கிறது' என்று நகைச்சுவையுடன் கூறினார். அமெரிக்கர்கள் இங்கிலாந்தில் உள்ள இலக்கியத்தை 'பிரிட்டிஷ்' இலக்கியம் என்று அழைப்பர். 'ஆங்கில இலக்கியம்' என்ற சொற்றொடர் பொருள் மயக்கம் கொண்டது.

62. ஃப்ராய்டு கொள்கைகளுக்கு என்னுடைய நூல் ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம் என்பதைப் பார்க்கவும். 'உளவியலும் ஒப்பிலக்கியமும்' என்ற தொடர்பு பயனுடையது.

63. இந்நூலில் ஜெனீவா குழுவைப்பற்றிய செய்திகளுக்கு ப. என்பதைப் பார்க்கவும்.

64. சார்ல்ஸ் டிக்கன்ஸ் திறனாய்வு உலகில் ஏற்றத்தாழ்வுகளை எப்படிச் சந்தித்தார் என்பது ஒரு சுவையான செய்தி. தொடக்கத்தில் அவருடைய நகைச்சுவையை மிகைப்படுத்துவதைத் திறனாய்வாளர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் அவருடைய பாத்திரங்கள் கேலிச்சித்திரங்களாக, வாழ்க்கைக்குத் தொடர்பில்லாதவையாகக் கருதப்பட்டன. திறனாய்வுத் திருப்பம், அவருடைய கதாபாத்திரங்கள் வாழ்க்கையிலிருந்து அவர் நோக்கில் தோன்றுபவை என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டபோதுதான். 'The World of Dickens' என்ற நூலிலிருந்து ஒரு பரந்துபட்ட கருத்தும் எப்.ஆர். லீவிஸின் ஆராய்விலிருந்து ஒரு ஆழமான கருத்தும் வெளிப்பட்டபிறகு டிக்கன்ஸ் ஆங்கில நாவலாசிரியர்களிலேயே பெரியவர் என்று திறனாய்வு உலகம் ஒப்புக்கொள்கிறது. மு.வ.வின் நாவல்களில் வரும் பாத்திரங்களை டிக்கன்ஸ் உருவாக்கிய பாத்திரங்களுடன் ஒப்புநோக்கினால் பல உண்மைகள் வெளிப்படும். பார்க்க மு.வ. கருத்தரங்கக் கட்டுரைகள். மதுரை : மதுரை

காமராசர் பல்கலைக்கழகம். 162-170 (1987) தவத்திரு. சேவியர் தனி நாயக அடிகள் Tamil Culture என்ற இதழுக்கு எழுதிய 'The Novalist of the city of Madras' என்ற கட்டுரையையும் பார்க்கவும்.

65. Victor Shklovsky. "Art as Technique". Modern Criticism and Theory. 16-30

66. இந்நாவல்தான் வாசகருக்கும் எழுத்தாளருக்கும் உள்ள தொடர்பை இலக்கியத்திறனாய்வின் ஒரு முக்கிய பிரிவாக இனம்கண்டு கொள்ள வித்திட்டது. ஸ்டெர்னின் நாவலை ஜெர்மானிய நாட்டு அறிஞர்கள் முக்கியமான நாவல் என்று இனம்கண்டு கொண்டனர். பிறகு ரஷிய நாட்டு அறிஞர்கள் திறனாய்வு செய்தனர். இவ்வதிகாரத்தில் மேலேயுள்ள குறிப்பு - 38ஐப் பாாக்கவும்.

67. ரஷிய உருவியல் அறிஞர்களைப்போல, உலகப்புகழ்பெற்ற அமெரிக்க நாட்டு மொழியியல் பேராசிரியர் ஒருவர் மொழிபயன்படுவதற்கு இரண்டு அடிப்படைத் தத்துவங்கள் உள்ளன என்கிறார். Competence. Performance. முதற்கூறியது, ஒரு பேச்சாளருக்கு இயற்கையாகவே உள்ள திறமை. இத்திறமையைக் கொண்டு பல வாக்கியங்களை சரளமாகப் பயன்படுத்துகிறார். அதுதான் செயல்முறை. நோஅம் சோம்ஸ்கி (Noam Chomsky) என்பது அவர் பெயர். அவர் அமெரிக்காவிலுள்ள மாசசுசெட்ஸ் தொழிற்கல்வி நிலையம் (சுருக்கமாக MIT)என்ற உலகப்புகழ்வாய்ந்த கல்லூரியில் மொழியியல் பேராசிரியராகப் பணிபுரிகின்றார்.

68. பாரதி தமிழ்நாட்டில் ஒப்பிலக்கிய நோக்கில் பல நாட்டுக் கவிஞர்களுடன் பலியாக்கப்படுகிறார். இதற்குக்காரணம் இணைவரைத் தத்துவத்தை கையாளுவதால். இணைவரைத் தத்துவம் இரண்டு நேர்கோடுகளை ஆராய்வது : மாயகோஸ்வ்கியுடன் பாரதியை ஆராய்வது (?) என்பது வெல்லக்கின் கோட்பாட்டைக் கையாள்வதால் இத்தகைய ஆபத்திலிருந்து தப்பலாம். இணைவரை

ஆராய்ச்சி முழுமை அடையவேண்டுமானால் ஒப்புமை செய்யும் இரண்டு எழுத்தாளர்களுடைய கலாச்சாரங்களையும் இவ்வட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்கிறார். பாாக்க : "Comparative Literature" வை. சச்சிதானந்தன். மேலை இலக்கியச் சொல்லகராதி.

69. பூதலேர் குறியீட்டுக் கவிதை விளக்கத்திற்கு இப்பிரிவின் முன் அதிகாரத்தைப் பார்க்கவும்.

70. பக்டின் கட்டுரையைப் பார்க்க: "From the prehistory of Novelistic discouse". Modern Criticism and Theory 125-156

71. இங்கிலாந்தில் உள்ள ஒப்பிலக்கியக்கழகம் ஆண்டுதோறும் ஒரு முக்கிய நூலை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது பக்டினின் நீண்ட கட்டுரையைத் தவிர வேறு ஒரு செய்தியும் தெரியவில்லை.

72. பேராசிரியர் டேவிட்லாட்ஜின் குறிப்பிலிருந்து Modern Criticism and Theory 126.

73. Poetics அல்லது கவிதையியல் என்பது அரிஸ்டாடிலைப் போல ஒரு குறுகிய நோக்கு கொண்டதல்ல. அவருடைய கவிதையியல் நாடகங்களுக்கு மட்டும் பொருந்தும். சம்பவங்களை மனதில் கொண்டு கதையமைப்பை மூன்று பிரிவுகளாகச் செய்து அவற்றைத் தர்க்க ரீதியில் அமைக்கவேண்டும் என்றார். இருபதாம் நூற்றாண்டில் அச்சொல் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும், கருத்துக்களையும் உளவியலையும் கொண்டது. இந்த பரந்தநோக்கை நிறுவியவர் அலெக்சாந்தர் பௌம்கார்டன் (Alexander Baumgarten) என்ற ஜெர்மன் அறிஞர்.

74. Raman Selden. A Reader's Guide to Contemporary Literary Theory.8

75. செல்டனின் திறனாய்வு நூல், சமகால இலக்கியக் கொள்கை ப. 8.

76. உலகத்தின் பெரிய நாவலாசிரியராகக் கருதப்படும் தாஸ்தொவ்ஸ்கி (Dostoovsky) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷியாவில் வாழ்ந்தவர். அந்நூற்றாண்டில் வாழ்ந்த ரஷிய எழுத்தாளர்கள் ஐரோப்பிய இலக்கியத்தைப் பெரும் தாக்கத்துக்குள்ளாக்கினர். இந்நாவலாசிரியர் கலையம்சத்தில் உளவியலை நெருங்கியவர் ஃப்ராய்டு உளவியலைத் தான் கண்டுபிடிக்கவில்லை என்றும் தனக்கு முன்னே தோன்றிய பெரும் எழுத்தாளர்கள் காரணகர்த்தாக்கள் என்றும் கூறிய பொழுது உளவியல் அறிஞர்கள் தாஸ்தொவ்ஸ்கியைச் சான்றாகக் காண்பிக்கிறார்கள். இவருடைய சிறந்த நாவல் Crime and Punishment 'குற்றமும் தண்டனையும்'. குறிப்புகள் - கதாநாயகன் ஒரு சாதாரணமான கொலை செய்துவிடுகிறான். அது அவனுடைய மனநிலையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை அற்புதமாக வர்ணிக்கிறார். அவர் எழுதிய நாவல்கள் The Posseses, The Idiot, Brothers Karamagov என்பவை. நாவலில் ஆவல் செலுத்தும் நம் நாட்டு அறிஞர்கள் இந்நாவல்களைப் படிக்காதது ஒரு குறை என்றே சொல்லவேண்டும். இதனுடைய ஆங்கில மொழியாக்கங்கள் எந்தப் பெரிய நூல்நிலையத்திலும் கிடைக்கும்.

77. புஷ்கின் என்பவரை ரஷிய நாட்டுக்கவிஞர் என்று அழைக்கின்றனர். அவர் அற்புத நவிற்சிக்கலைஞர். அவருடைய நூல்களில் ஆங்கிலக்கவிஞர் பரனின் தாக்கம் தெரிகிறது. அவருடைய கவிதைகளெல்லாம் தன்னுணர்ச்சிப் பாடல்கள், நீளமான கதைக்கவிதைகள். அவருடைய நாவல் ஒன்றே ஒன்று, அது கவிதை மொழியில் எழுதப்பட்டது. வாசகர்கள் நோக்கில் பக்டினின் நீண்ட கட்டுரை வெகு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

78. கட்டுரைக்கு இவ்வதிகாரத்திலுள்ள 70-வது குறிப்பைப் பார்க்கவும்: Modern Criticism and Theory. 125-156

79. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வியக்கம் பிரான்சு நாட்டில் எமிலிஸோலா (Emile Zola) என்ற நாவலாசிரியர் மூலம் தோன்றியது. இது வாழ்க்கையின் அவலங்களை அப்பட்டமாகவும் நுணுக்கமாகவும் ஆராய்கிறது. இதற்கு ஆங்கில நாவலில் சான்று 'லிஸ்ஸாவினுடைய லாம்பெத்' (Liza of Lambeth) என்ற சாமர்செட்மாம் (Somerset Maugham) என்பவருடைய முதல் நாவல். மருத்துவராக இலண்டன் பல்கலைக்கழகத்தில் பயின்ற நாவலாசிரியர் பட்டப்படிப்பிற்குப்பிறகு மருத்துவராக ஒரு மருத்துவமனையில் பயிற்சிபெற்று வந்தார். அப்பொழுது ஒரு ஏழைப் பெண்ணின் (Liza) பிரசவத்திற்கு இலண்டன் புறநகரிலுள்ள அவர் வீட்டுக்குச் சென்றார். அந்த அழுக்குத்தெருவை நுண்ணியமாக விவரிக்கிறார். வாசகர்கள் இந்நாவலையும் மற்ற மாம் நாவல்களையும் அவருடைய எளிய ஆங்கிலத்தில் படித்து இன்புறலாம். மு.வ. அவர்களுக்குப் பிடித்த ஆங்கில நாவலாசிரியர்களில் மாம் நெருக்கமானவர். 'மலர்விழி' மாமின் தாக்கத்திற்குள்ளாக்கியது. மாமின் நாவல் நடப்பியலும் கற்பனையும் கலந்தது. பாலிச்சை அவருடைய நாவல்களில் ஒரு கருத்தியலாகவே மாறிவிடுகிறது.

80. மனிப்பதிவுருவாக்கம் என்பது கொள்கை, திண்மைநோக்கு, கலையம்சம் போன்றவைகளை ஒதுக்கிவிடும் இயக்கமாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவெடுத்தது. கலையம்சமும் கட்டமைப்பும் கொள்கைகளாகவே வற்புறுத்தும் இக்காலத்தில் மேற்கு நாடுகளில் இது அநேகமாக மறைந்துவிட்டது எனலாம். தமிழ்நாவல் இலக்கியத்தில் கொள்கை அவநம்பிக்கையாலும் வாசகர்களை மகிழ்ச்சியூட்டுவதாலும் ஜனரஞ்சகமான நாவல்களும் கதைகளும் பிரசுரிக்கப்படும் வார ஏடுகளில் மனப்பதிவைக் காணலாம். இந்நோக்கில்தான் பேராசிரியர் க. கைலாசபதியின் தமிழ்நாவலின் கடுமையான விமர்சனங்கள் தோன்றின எனலாம். அவர் கட்டுப்பாட்டையும் கொள்கைகளையும் விரும்புபவர்.

*******

இதுவரை திறனாய்வுக் கொள்கைகள் எப்படி கிரேக்க செவ்வியல் காலத்தில் பிளேடோ என்ற தத்துவஞானியால் சில அடிப்படைக் கேள்விகளைக் கண்ணுக்குத் தெரிந்த இவ்வுலகத்தையும் கண்ணுக்குத் தெரியாத புலன்களால் உணரப்படாத மேல் உலகத்தையும் தொடர்புபடுத்தி எழுப்பி அக்கேள்விகளுக்குச் சில தத்துவ நோக்கிலும் முருகியல் நோக்கிலும் பதிலிருத்தாலும் கலை என்பது சிக்கலான பொருள் என்பதை உணர்த்தினார். பின்னர் அவர் சீடரான அரிஸ்டாடில் பல பெரிய கிரேக்க நாடகங்களை மேடையேறுவதைக் கண்டு அநுபவித்து அந்நாடகங்களைக் கொண்டே ஒரு கவிதையியலை உண்டாக்கியது-மில்லாமல் குருவைப் போலவே அவரது சீடரும் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பைக் கவிதையியலின் முக்கிய அம்சமாகக் கொண்டார். இந்நோக்குப் பல உருவங்களில் மேலை நாட்டுத் திறனாய்வாளர்களால் ரஷ்ய அறிஞர் பக்டின் வரையில், தாஸ்தொவெஸ்கியின் நாவல்களைக் கவிதையியலின் நோக்கில் ஆராய்ந்தார் என்ற செய்தியையும் இந்நூல் விளக்கியது.

ஒரு நூலின் கட்டமைப்பு அதன் தலைப்புடன் நெருங்கிய தொடர்புடையது. பிளேடோ முதல் பின்னமைப்பியல் வரையில் திறனாய்வு வளர்ச்சியை இந்நூலின் வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இக்கட்டத்தில் ஒரு குறையை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரலாற்று நோக்கில் பல முக்கிய திறனாய்வு இயக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றிருந்தாலும் சில திறனாய்வுக் கொள்கைகள் விடப்பட்டிருக்கின்றன என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறேன். மார்க்சியம், உளவியல், பெண்ணியம், சமூகவியல், வாசகர் - எழுத்தாளர் தொடர்பு, போன்றவை. இவைகளைப் பற்றிய கொள்கைகளை விளக்கவில்லையானால் இந்நூல் திறனாய்வு நோக்கில் நிறைவு பெறாது.

## 1. மார்க்சியம்

இது ஒரு அரசியல் கொள்கையானாலும் இருபதாம் நூற்றாண்டில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள உறவு ஒரு நம்பிக்கை அளவில் சுமுகமாகயிருந்தால்தான் ஒரு நாடு வளமுறும் என்ற பொருளாதாரக் கொள்கையை உறுதிப்படுத்துகிறது. ரஷ்யாவில் 'க்ளாட்நோஸ்ட்', 'பெரஸ்ட்டொரய்கா' என்ற கொள்கைகளைப் புகுத்திய பிறகு, முதலாளித்துவ நாடுகளுக்கும் பொதுவுடைமை நாடுகளுக்கும், முக்கியமாக உலக வல்லரசுகளான ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் உள்ள கருத்து வேற்றுமைகள் குறைந்து உலகப்போர் வருமோ என்ற அச்சம் மறைந்து வருகிறது. கார்ல் மார்க்சின் சித்தாந்தமான முதலாளித்துவத்திற்கும் தொழில் புரட்சிக்கும் உள்ள கருத்து வேறுபாடு முடிவில் தொழிலாளர்களுக்கு வெற்றியளிக்கும் என்ற அரசியல் கொள்கை ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் பெரிய இடைவெளி உண்டாக்கியது, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் ஒரு இரும்புத்திரை ரஷ்யாவை மற்ற நாடுகளிலிருந்து பிரித்து விட்டது என்று ஒரு அரசியல் சொற்பொழிவில் கூறினார். 'Iron curtain' என்ற சொல்லாக்கம் எல்லா ஆங்கில அகராதிகளிலும் இடம் பெற்றுவிட்டது. இந்த இரும்புத்திரை ஒரு பொருளல்ல, ஒரு மனஇயல் கொள்கை. உலக அரங்கில் நடமாடும் அரசியல்வாதிகளின் ஞானத்தை இது மூட நம்பிக்கை ஆக்கிற்று. அதன் விளைவாக ஸ்டாலின் அடக்குமுறையினால் அறிவுச்சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மறைந்து ரஷ்ய மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். தொடர்பு எதுவும் இல்லாமல் ரஷ்ய, அமெரிக்க வல்லரசுகள் துண்டிக்கப்பட்டன. ரஷ்ய மக்கள் கோதுமை பற்றாக்குறையால் வாடும்பொழுது அமெரிக்க அரசு அவர்களுக்காகக் கோதுமையை ஏற்றுமதி செய்தது. இதை அரசியல் நிபுணர்கள் பிரெஞ்சு மொழியில் **Detente** என்றார்கள். இந்த கொள்கையை வல்லரசுகளுக்கிடையே வளர்க்க மேற்கு ஜெர்மானிய குடியரசின் தலைவர் பிராண்ட் அரும்பாடுபட்டார். ரஷ்யாவில் சர்வாதிகாரத்தை அழிப்பதற்குக் காரணமான கொர்பசேவ்

சமீபத்தில் சர்வாதிகாரம் அந்நாட்டில் தலையெடுக்க முயற்சி செய்கிறது என்று மேலை நாடுகளை எச்சரித்தார். இது பல ஆண்டுகள் வல்லரசுகளுக்கு இடையே இருந்த விரோதம் நீங்கி மன அமைதியைக் கொடுத்தது என்று பொருள்படும். இதை அரசியல்வாதிகள் மார்க்சியத்திற்கு ஏற்பட்ட தோல்வி என்று கருதினர். அதன் பிறகு கோர்பசேவ் அரசியல் தலைவராக ஆனபொழுது கடுமையான கட்டுப்பாடுகளை எல்லாம் நீக்கி மக்களுக்கு விடுதலை உணர்வை உண்டாக்கினார். இந்நிலை ஆங்கில எழுத்தாளர் சார்லஸ் லாம்ப் (Charles Lamb 1775-1834) என்ற புகழ் பெற்ற கட்டுரையாளரை நினைவுபடுத்துகிறது. தான் நீண்ட நாள் வேலையிலிருந்து விடுபெற்றது எப்படி என்பதை விவரிக்கிறார். அவர் வேலை செய்த இலண்டனிலுள்ள கிழக்கு இந்திய கம்பெனியில் திடீரென்று ஒரு நாள் காலை அவருக்கு ஓய்வு பெற்றுவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அவருடைய மனநிலையை விவரிக்கிறார் ஒரு கட்டுரையில். The superannuated Man (வேலையிலிருந்து ஓய்வு பெற்ற மனிதன்) என்பதில் பிரெஞ்சு நாட்டில் மிக மோசமான சிறையான Bastille என்ற இடத்திலிருந்து பல ஆண்டுகள் கழித்து திடீரென்று விடுவிக்கப்பட்டு சுதந்திர வாழ்க்கையை அடைந்து அனுபவித்தது போல என்கிறார். அந்நிலையில்தான் ரஷ்ய மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. கட்டுப்பாடுள்ள வாழ்க்கையிலிருந்து கட்டுப்பாடற்ற வாழ்க்கையை அனுபவித்தனர். பிறகு இந்தக் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுபட்ட அரசியல் சுதந்திரம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவிற்று.

மார்க்சியம் என்ற கொள்கை திறனாய்வு உலகில் ஒரு கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழக அறிவாளிகள் பலர் இக்கொள்கையில் நாட்டம் கொண்டனர். அவர்களில் முக்கியமான திறனாய்வாளர் எட்மண்ட் வில்சன் (Edmand Wilson 1895-1975) என்பவர். இவர் ஒரு பெரிய திறனாய்வாளராக அவர் நாட்டில் கருதப்பட்டாலும், பல்கலைக்கழகத்தில் பணியாளராக இல்லை. ஆனால்

பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் அவருடைய நுணுக்கமான சிந்தனையைத் தூண்டுகிற திறனாய்வை மதித்தனர். பொதுவாக அறிவாளிகள் மேற்கு நாடுகளில் மார்க்சியத்தால் கவரப்பட்டாலும், ஸ்டாலினின் கொடுங்கோலாட்சியில் அதன் கொள்கைக்குச் சாய்ந்து கொடுக்காமல் ரஷ்யாவில் இருந்த அறிஞர்கள் சிறைப்படுத்தித் துன்புறுத்தப்பட்டார்கள். இதனால் மார்க்சிசத்தில் நம்பிக்கை இழந்த அறிஞர்களில் ஒருவர் வில்சன். இவருடைய புகழ் பெற்ற நூல் கிழக்கு ஐரோப்பாவில் படிமஇயக்கத்தைப் பற்றி எழுதிய **Axep's Castle (1931)** என்பது. அவருடைய அறிவு அச்சுறுத்துவதாக இருந்தாலும், முதலில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுப் பிறகு புத்தக வடிவமாகக் கொண்டு வரும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். சில கட்டுரைகள் ஆங்கில நாவலாசிரியரான டிக்கன்சைப் பற்றி மார்க்சிச நோக்கில் எழுதியவை. அச்சித்தாந்தத்திற்கு வெளியே, **(The Historiccal Interpratation of Literature)** என்று இலக்கியத்தைப் பற்றி வரலாற்று நோக்கில் எழுதிய கட்டுரையும் வாசகர்கள் படித்து இன்புறலாம். மார்க்சியம் என்ற கொள்கைப் பிடிப்பை அமெரிக்க அறிஞர் வட்டம் வெளியிட்ட **The partisan Review** என்ற மதிப்புமிக்க ஆராய்ச்சி இதழ் மார்க்சியக் கொள்கையை ஆதரிப்பது. ஆனால் முதலாளித்துவக் கொள்கையினால் உலகத்திலேயே செல்வம் கொழித்த நாடாகவும் வல்லரசாகவும் விளங்கிய அமெரிக்காவில் மார்க்சியம் தழைக்கவில்லை. இருந்தாலும் கூட, வெர்னன் லூயி பாரிங்க்டன் **(Vernon Louis Parrington)** என்பவருடைய மூன்று பிரிவுகளுடைய **Main currents in American thought** என்ற மார்க்சிய நோக்கத்தைக் கொண்ட அமெரிக்க இலக்கிய வரலாறு 1927-1930 இடையில் வெளிவந்தது,5 மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடும் அனைத்துலக ஒப்பிலக்கிய மாநாடு சில ஆண்டுகளுக்கு முன்பு போலந்து நாட்டில் கூடியது. அந்நாட்டில் இந்தியானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒப்பிலக்கிய பேராசிரியர் மார்க்சியத்தை ஒரு முக்கியத் திறனாய்வுப் பிரிவாகக் கருத வேண்டும் என்று பரிந்துரை செய்தார். அவர்தான் பேராசிரியர் ஹென்றி ரிமாக் **(Henry Remak)**. அனைத்து

அமெரிக்க ஆசிரியர் கழகத்தின் இலக்கிய ஏடான (College English) என்பதில் இரண்டு அறிஞர்கள் ஷேக்ஸ்பியரின் நாடகமான நாலாம் ஹென்றி முதல் பிரிவை Henry IV part இரு நோக்கங்களில் ஆராய்ந்து கட்டுரைகளை வெளியிட்டனர். ஒன்று அரசியல் நோக்கத்தைத் தவிர்த்தது; இன்னொன்று மார்க்சிய நோக்கு; இரண்டும் இணைவரை நிறைவுகளைக் (complements) கொண்டிருந்தன. வரலாற்று நோக்கில் மார்க்சியம் காலம் கடந்ததாக இருந்தாலும், அது பயனுள்ளது.6 நம் நாட்டைப் பொறுத்தவரை, நாவலாசிரியர் ஜெயகாந்தன் மார்க்சியவாதியாக கருதப்படுகிறார். ஆனால் அவருடைய படிம வளர்ச்சியைப் பார்த்தால் வேதாந்தக் கொள்கைக்கு நெருங்கிவிட்டதாகத் தெரிகிறது. இது முரண்பாடு என்று சொல்ல முடியாதது. காரணம், கொள்கை அளவில் மார்க்சியமும் வேதாந்தமும் நெருக்கமுடையது சமத்துவ நோக்கில் ெ□ல்லியையும் பாரதியையும் ஒப்பு நோக்கில் ஆராய்ந்த என்னுடைய கட்டுரை (Tamil culture) என்ற வெளியீட்டில் வந்தபிறகு இருவரையும் ஆராய்வதற்கு அறிஞர்களுக்கு ஊக்கம் அளித்தது.7 ஆங்கிலக் கவிஞரை மார்க்சிய நோக்கில் ஆராயலாம். ஆனால் அக்கவிஞரை மார்க்சியத்திலிருந்து பிரித்துக்காட்டவேண்டும். காரணம் அவர் சமூகத்தில் உயர் மட்டத்திலிருந்து வந்தாலும் ஏழைகளிடம் மிகுந்த பரிவு காட்டினார்.

மார்க்சியத்திறனாய்வு இருபதாம் நூற்றாண்டில் உள்ளது. திறனாய்வு இயக்கங்களில் ஒன்றாயிருந்தாலும் அதன் கொள்கைகளை விளைவித்த மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.8 அவருடைய இரண்டு முக்கிய அறிக்கைகள் கவனத்துக்குரியது. (1) இதுகாறும் தத்துவ அறிஞர்கள் இவ்வுலகத்தைப் பொருள்படுத்தி இருக்கிறார்கள்; அவ்விளக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும் (2) மனிதர்களின் உணர்வுநிலைதான் அவர்கள் உயிருருவைத் தீர்மானிப்பதாகக் கொள்ளப்பட்டது. ஆனால் அவர்களுடைய சமூக ஈடுபாடுதான் அவர்களுடைய உணர்வுநிலையை உருவாக்குகிறது. இத்தகைய கண்டிப்பான அறிவிப்புகள்

பொதுவாக மக்கள் கொண்டிருந்த நெடுங்கால நம்பிக்கைகளைப் பின்னுக்குத் தள்ளுகின்றன. குறிப்பாக, தத்துவ ஞானம் என்பது பயனில்லாத சிந்தனை என்று மார்க்ஸ் கூறினார். அது உண்மையான உலகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். கார்ல் மார்க்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹெகல் என்ற தத்துவஞானியும் அவரைப் பின்பற்றும் அறிஞர்களும் இவ்வுலகம் சிந்தனைக்குக் கட்டுப்பட்டது. வரலாற்று வழிமுறை என்பது தருக்கமுறையைச் சார்ந்த பகுத்தறிவு விதிகளுக்குட்பட்டது. பருப்பொருள் வாழ்வு என்பது பருப்பொருட் சார்பற்ற ஆன்ம வாழ்வு தான். மக்கள் அவர்களுடைய எண்ணங்கள், கலாச்சார வாழ்க்கை, அவர்களுடைய சட்டதிட்டங்கள், மதங்கள் எல்லாம் மனிதன், கடவுள் என்ற மட்டங்களிலிருந்த அறிவு நிலையால் தான் உண்டாக்கப்பட்டன என்று நம்பினார்கள். அவ்வறிவுநிலைதான் மனித வாழ்வுக்கு வழிகாட்டி. சமூகத்தில் ஆதிக்கமுற்ற ஒரு வகுப்பின் லோகாயத கவனம்தான் தனி மனிதன் வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் பாதிக்கிறது. சான்றாக, சட்ட ஒழுங்குமுறை என்பது மனித பகுத்தறிவின் முழு வெளிப்பாடல்ல; அது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு வகுப்பின் அக்கறைகளை பிரதிபலிக்கிறது என்பவை மார்க்சிய நம்பிக்கைகள்.

மார்க்ஸ், அவருடைய விளக்கத்தில், இக்கருத்திற்கு ஒரு உருவகத்தைப் பயன்படுத்துகிறார். சமூகத்தை ஒரு கட்டமாகவும் இதன் மேல் அமைப்பை ஒரு கோட்பாடாகவும் அல்லது அரசியலாகவும் அதன் அடி அமைப்பை சமூக, பொருளாதாரத் தொடர்புகளாகவும் கருதுகிறார். இவ்வகை உருவகத்தால் கலாச்சாரம் என்பது ஒரு கட்டுப்பாடற்ற உண்மையல்ல. அதை வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து பிரிக்க முடியாது என்கிறார்.9 இச்சூழ்நிலையில் தான் மக்களின் பருப்பொருள் வாழ்க்கை உருவெடுக்கிறது என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார். மார்க்சியத்தின்படி, மேல் அமைப்பு என்பது சமூகத்தில் கீழ் அமைப்பு என்பதுடன் தொடர்பு கொண்டாலும், தருக்கமுறையில் மாற்றங்கள் விளைவதில்லை. இந்தச் சட்டதிட்டத்திற்கு மீறி மாற்றங்கள் ஏற்பட்டால் அல்லது இரண்டு மட்டங்களுக்கும்

இடையே தோன்றும் விளைவுகள் முரண்பாடு கொண்டதாயிருந்தால் அவைகளை விதிவிலக்கு என்று கூறியிருப்பதோடு விளக்கம் கொடுக்கவில்லை என்று ஒப்பிலக்கிய அறிஞர்கள் பொக்கமாகவும் இல்ருட்குபிட்சும் குறை கூறுகிறார்கள். கலாச்சாரம் என்று மக்கள் இனம் கண்டுகொண்டது; ஒரு தற்சார்பற்ற மெய்ம்மை அல்ல என்று மாாக்ஸ் வாதிட்டார். அதை வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து பிரிக்க முடியாது என்று கூறினார். இவ்வரலாற்றுச் சூழ்நிலை மக்கள் தங்கள் பருப்பொருள் சார்ந்த வாழ்க்கையிலிருந்து உண்டாக்குவது என்றார். இச்சூழ்நிலை மக்களில் ஆதிக்கம் செலுத்தும் குழு, சுரண்டுகின்ற குழு, இந்த இரண்டு குழுக்களுக்கும் உள்ள தொடர்புதான் வாழ்க்கையின் சமூக, பொருளாதார மட்டத்தை மனித வரலாற்றின் எந்தக் காலகட்டத்திலும் தீர்மானிக்கிறது என்று வற்புறுத்தினார். இதுதான் கலாச்சார வரலாறு என்றும் நம்பினார்.

இருப்பினும் கார்ல் மார்க்ஸ் சிறப்புமுறையில் இலக்கியத்தின் முக்கியத்துவத்தைத் தன்னுடைய நூலான க்ருண்ட்ரிஸ்ஸே (Grundrisse) என்பதில் அனுமதித்திருக்கிறார், பொருளாதார வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் உள்ள முரண்பாட்டை இந்நூலில் விவாதித்திருக்கிறார். சான்றாக, பழைய கிரேக்கத் துன்பியல் நாடகங்கள் கிரேக்க நாட்டு இலக்கிய வளர்ச்சியின் உச்சகட்டத்தில் தோன்றியன என அறிவு உலகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இருப்பினும், இந்நாடக வளர்ச்சி, கிரேக்க சமூக அமைப்புடன் அதன் கருத்தியலும் கூட தற்செயலான இணைப்பு உறவு கொண்டிருப்பதை அறியலாம். இதற்கு மார்க்சிய சித்தாந்தம் தேவையில்லை. இதில் சிக்கல் என்னவென்றால் மார்க்ஸ் கலையும் இலக்கியமும் தளர்வுகள் உள்ள சமூக அமைப்பில் ஒரு நல்ல கலையும் இலக்கியமும் உண்டாகலாம் என்று உண்மையை உணரவில்லை. சமூகச் சூழ்நிலைதான் இலக்கியம் உருவாக நிலைக்களம் என்று உறுதியாகக் கூற முடியாது. காரணம் எழுத்தாளனின் கற்பனை வளம் எந்தச் சூழ்நிலையையும் மீறும் ஆற்றலுடையது. ஒரே சூழ்நிலை

இரண்டு விதமான இலக்கியங்களையும் விளைவிக்கும். சான்றாக அமெரிக்க இலக்கியம் வளர்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் எட்கர் ஆலன் போ (Edgar Allan Poe) வால்ட் விட்மன் (Walt Whitman) என்பவர்களுடைய கவிதைகள். விட்மன் கவிதைகள் மெய்ம்மை நிறைந்ததால் அவர் வாழ்ந்த அமெரிக்க சமூகத்தைப் படம் பிடித்து காண்பிக்கிறார். ஆனால் போ முருகியல் கொள்கையில் அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்ததால் அவர் கவிதைகளின் மூலம் அவர் வாழ்ந்த தாய்நாட்டைப் பற்றிய செய்திகளை அறிவது கடினம்.10 இம் முறை இலக்கியங்களை மார்க்சுடைய நூலான, க்ருண் ட்ரிஸ்ஸேயில் இனம் கண்டு கொள்ளுவதால்11 அவர் சில இலக்கியங்கள் காலத்தை மீறியதாகவும் இயல்வுலகளாவியதாகவும் இருக்கும் என்ற உண்மையை மார்க்ஸ் அனுமதித்ததாகத் தெரிகிறது. ஆனால் கிரேக்கத் துன்பியல் நாடகங்கள் தலை சிறந்தன என்பதை இந்நூல் தொடக்கத்தில் விளக்குவதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறேன். ஷேக்ஸ்பியருடைய துன்பியல் நாடகங்களை விட சிறந்தவை என்பதற்குக் காரணமும் காட்டியிருக்கிறேன். இக்கிரேக்க நாடகங்கள் சமூக சூழ்நிலையையும் கிரேக்க புராணிகத்தையும் எதிரொலிக்கின்றன என்பது உண்மை. இது மார்க்சிய நம்பிக்கையை உறுதி செய்தாலும் பல உன்னத இலக்கியங்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையை மீறி இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இம்மாதிரித் தோன்றிய இலக்கியச் சான்றுகளுக்குக் காரண காரியத்தொடர்புகளை விளக்காமல் அவை விதிவிலக்குகளே என்று மார்க்சியவாதிகள் மனநிறைவு கொள்கின்றனர். எழுத்தாளனின் கற்பனை ஆற்றல் சட்டதிட்டங்களுக்கோ வரைமுறைகளுக்கோ உட்பட்டதல்ல. அது ஷேக்ஸ்பியரின் 'இளவேனிற் காலக் கனவு' (A midsummer Night's Dream) என்ற நாடகத்தில் நகைச்சுவை கலந்த விளக்கத்தைப் போல ஒரு எழுத்தாளனின் (நாடகாசிரியர் கவிஞன் என்று அவனை விளக்குகிறார்) கற்பனை என்பது உண்மை உலகத்தை மட்டுமின்றி மறைந்துகிடக்கின்ற வெளியுலகத்தையும் ஊடுருவி உண்மையைத் தேடும் அவ்வாற்றலைக் கட்டுப்படுத்த முடியாது என்கிறார்.

இலக்கியத்திற்குச் சிறப்புரிமை நிலை இல்லை என்பதை நாம் மறுத்தாலும் இலக்கியம் எவ்விதத்தில் வரலாற்று வளர்ச்சியின் தாக்கத்தை மீறுகிறது என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை. இக்கேள்வி மார்க்ஸ் என்ற தத்துவ ஞானிக்குப் பின்தோன்றிய ரஷ்ய அரசியல் அறிஞர் டிராட்ஸ்கி (Tretsky) ரஷ்ய அமைப்பியல் நிபுணர்களின் கொள்கைகளைத் தாக்கும்பொழுது தன் நூலான Literature and Revolution 'இலக்கியமும் புரட்சியும்' என்பதில் கலைப்படைப்பு என்பது உண்மையைக் கலையின் வரையறைகளை ஒட்டி மாற்றும் அல்லது இனம் கண்டு கொள்ளாத அளவில் மாற்றும் என்றார். இவ்விளக்கத்திற்குப் பிறகும் கூட, உண்மை என்பது இலக்கியத்திற்கு உள்ள ஒரு இன்றியமையாத கூறு என்பதை வற்புறுத்தினார். அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கையான உண்மைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு மார்க்சியவாதிகளால் தொடர்ந்து விவாதிக்கப்படுகிறது என்று தெரிகிறது.

மார்க்சியத் திறனாய்வு மிகச்சுவையான முறையில் மேலை நாட்டில் விவாதிக்கப்படுகிறது. ரஷ்யாவில் லெனின் தொடங்கி வைத்த புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவத்தை ஒழித்துப் பொதுவுடைமைவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதன் பிறகு மார்க்சியக் கொள்கைகளில் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைத்ததால் ஒரு மத நம்பிக்கையாகவே மாறிவிட்டது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது மார்ச்சியம் என்ற நம்பிக்கையாக வேரூன்றியது. சர்வாதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் வழிவகுத்தது. ஸ்டாலின் ஆட்சியின் போது Soviet Socialist Realism என்ற கொள்கையை உருவாக்கிப் பொதுவுடைமைக் கட்சியின் ஆதாரப்பூர்வமான நம்பிக்கையாக ஆக்கினர். இக்கொள்கையில் ஈடுபடாத மிகைல் பக்டின் போன்ற எழுத்தாளர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். நோபல் பரிசு பெற்ற ரஷ்ய நாட்டு நாவலாசிரியர்கூட அப்பரிசை வாங்க அனுமதிக்கப்படவில்லை.12 இருப்பினும், சோவியத் சோஷலிஸக் கொள்கைப்புரட்சிக்கு முன்பு லெனின் சொன்ன கொள்கைகளை 1920ல் சோவியத் எழுத்தாளர்கள்,

கூட்டமைப்பின் முக்கியக் கேள்விகளான இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சி, சமூகவர்க்கங்களின் தொடர்புகள் பற்றிய சிந்தனைகள், சமூகத்திற்கு இலக்கியத்தின் பணிகள் முதலியவற்றிற்கு விளக்கம் அளித்தார்கள்.

1917-ல் ரஷ்யப்புரட்சி தோன்றியபொழுது அந்நாட்டு அமைப்பியல் திறனாய்வாளர்களை அரசாங்கம் புரட்சிகரமான கொள்கைகளை உருவாக்கும்படி ஊக்கமளித்தார்கள். இக்கொள்கையில் கருத்து வேற்றுமை உண்டாகியதால் மரபு வழுவாத பொதுவுடைமை எழுத்தாளர்கள் தோன்றினர். இவர்கள் தங்கள் நாட்டு அமைப்பியல் கொள்கையை ஆதரிக்கவில்லை. அதை ஒதுக்கிவிட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நாட்டின் மரபான கருத்து மெய்ம்மையியல ரஷ்ய முருகியல் கொள்கைக்கு அடிப்படையாகக் கொண்டனர். இம்மெய்மையியல் பொதுவுடைமைச் சமூகத்தின் வெளிப்பாடு என்று நம்பினர். 1910-க்குப்பின் ஏற்பட்ட கலை, இசை, இலக்கியம் என்பவைகளில் தோன்றிய மாற்றங்களை (சான்றாக, எலியட்டின் பாழ்நிலம், போன்ற கவிதைகள், பிகாஸோவின் இனம் புரியாத சித்திரங்கள் ரஷ்யத் திறனாய்வாளர்கள் பொதுவுடைமைக் கொள்கையில் மதநம்பிக்கை கொண்டதால் ஐரோப்பிய முதலாளித்துவ சமூகத்தின் நலிவுகள் அல்லது சீர்கேடுகள் என்று கண்டனம் செய்தார்கள். மரபு வழி மெய்ம்மையை மறுத்ததால் சோவியத் கலைக் கொள்கை ஆதார பூர்வமான கொள்கையாகிவிட்டது. அக்கொள்கையை மறுப்பவர்கள் எல்லாம் ஸ்டாலின் ஆட்சியில் துன்புறுத்தப்பட்டார்கள்; சோவியத் கொள்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மெம்மையியலும் புரட்சிகரமான அரசியலும் ஒன்றுபட்டு சோவியத் கலைக் கொள்கையின் மையமாகிவிட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் நலன்கள் பொதுவுடைமைக் கட்சியின் பொறுப்பாகிவிட்டது. இக்கொள்கைக்கு ஆதாரம் லெனினுடைய கட்டுரை, கட்சி அமைப்பும் கட்சி இலக்கியமும் **(Party organisation and party literature, 1905)**

இக்கட்டுரையில் எழுத்தாளர் தங்கள் கொள்கைகள் அல்லது நம்பிக்கைகள் என்பவைகளை எழுத்துச் சுதந்திரம் என்ற உரிமை இருந்தாலும் அவைகள் பொதுவுடைமைக்கட்சிக்குச் சொந்தமான இடம் பெறாது என்று கூறினார். இக்கொள்கையை வரலாற்று நோக்கில் கட்சி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தனக்கென்று ஒரு இடத்தை அதன் நாட்டில் பிடித்துக் கொள்ள முயற்சி செய்ததின் பின்புலத்தில் நியாயப்படுத்தலாம் ஆனால் கால வளர்ச்சியில் அக்கட்சி இக்கொள்கையை மரபுக் கோட்பாடாக மாற்றிவிட்டது. அதன் விளைவு கட்சியின் சித்தாந்தத்தில் நம்பிக்கையில்லாத எழுத்தாளர்கள் ஒதுக்கப்பட்டதுமின்றி இன்னல்களுக்கு ஆளானார்கள். பின்னர் பொதுவுடைமைக் கட்சியில் அனுமதியின்றி எந்த வெளியீடும் ரஷ்ய சமூகத்திற்குக் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக, தலைவர் ஸ்டாலின் கையில் கட்சியைவிட அதிகாரங்கள் குவிந்ததால், ஸ்டாலினை அளவுக்கு மீறிப்பெருமைப் படுத்தினர். இதனால் கட்சி நோக்கில் கலைக் களஞ்சியங்கள் திருத்தப்பட்டன.

இதனால் வர்க்க நோக்கில் கலை வளர்ந்தது. எதிர்மாறாக, தொழிலாளர்வர்க்கத்தை ஆதரிக்காத இலக்கியம் ஒதுக்கப்பட்டு அல்லது அதிகாரத்தால் அடக்கப்பட்டது. ரஷ்யாவில் தொழில் வர்க்க நோக்கில் கலை என்பது இரண்டு அம்சங்களை உள்ளடக்கியது, முக்கியமாக முன்னோடிகளான மார்க்ஸ், எங்கல்ஸ் என்ற அறிஞர்களின் எழுத்துகளில் உள்ள மரபில் இந்த இரண்டு கூறுகளைக் காணலாம். ஒன்று எழுத்தாளன் தொழிலாளர் வர்க்கத்துடன் கொண்ட ஈடுபாட்டினால் ஏற்பட்ட பொறுப்பு; மற்றொன்று பொதுவுடைமை ஆட்சியில் எந்த எழுத்தாளருடைய சோஷலிசக் கருத்தும் மெய்ம்மையியலின் பிரதிபலிப்பு. இந்த மெய்மையியல் ஒரு எழுத்தாளனின் இன்றியமையாத அம்சம் என்ற மதநம்பிக்கை வளர்ந்தது. சோஷலிசக் கருத்து மெய்மையியல் மத்திய தரவர்க்க மெய்மையியலின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் கருதப்பட்டது. மத்தியதரவர்க்க எழுத்தாளர்களின் தரத்தை அவர்களுடைய வர்க்க அரசியல் ஈடுபாட்டிலிருந்து மதிப்பிடுவதில்லை. அதற்கு மாறாக அவர்கள்

எழுத்துக்களில் வர்க்கத்தை உணர்ந்து கொள்ளும் நுண்ணறிவுத் திறனால்தான். குறிப்பாக, இவ்வறிவுத்திறன் எவ்வளவு தூரம் சமூக வளர்ச்சிகளை உணரப்பயன்படுகிறது என்ற உண்மை முக்கியமானது. இப்பின்புலத்தில் புரட்சிகரமான புதிய நாவல்களை ரஷ்யாவில் ஏன் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்ற கேள்விக்கு விடை காணலாம். 1934ல் கூடிய ரஷ்ய எழுத்தாளர்கள் சங்கம் 'ஜேம்ஸ் ஜாய்ஸா அல்லது சோஷலிச கருத்து மெய்ம்மையியலா?' என்பது போன்ற பட்டிமன்றத் தலைப்பை ஆராய்ந்தது.13 ஜேம்ஸ் ஜாய்ஸின் நினைவோடை நாவலான Ulysses என்பது ஒரு தனிமனிதரின் அன்றாட வாழ்க்கையை நினைவோடை உத்தியில் படம்பிடித்துக் காண்பிக்கிறது. இந்நாவல் அத்தகைய இலக்கியத்தில் பெரும் புரட்சியை உண்டுபண்ணி அதன் வளர்ச்சியைத் திசை திருப்பியது என்று ஆங்கில ஐரோப்பியத்திறனாய்வாளர்கள் நம்புகிறார்கள். இது மார்க்சிய சித்தாந்தத்திற்கு எதிர்நீச்சல் போடுவதால் இதை எழுத்தாளர்கள் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். இந்நாவலை ஆதரித்தவர் ஒருவரே தான். அவர் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று எழுத்தாளர்கள் கூறாத குறை ஒன்றுதான்: அவர்கள் நோக்கில், இப்புரட்சிகரமான நாவல் சோஷலிச மெய்ம்மையியலுக்கு அப்பால் வெகு தூரம் சென்றுவிட்டது என்று நம்பினார்கள். சோஷலிச மெய்ம்மையியலை ஒதுக்கிவிட்டு ஒரு தனிமனிதன் உள் மனதை நினைவோட்ட உத்தியை பயன்படுத்தி இழிவான செயலைச் செய்த நாவலாசிரியர் என்று தீர்ப்புக் கூறினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் புகழ் எய்திய ரஷ்ய நாவலாசிரியரான டால்ஸ்டாய்14 என்பவரையும் பிரெஞ்சு எழுத்தாளரான பல்ஸாக்15 (Balzac) கையாண்ட மெய்ம்மையியலில் ரஷ்ய சோஷலிச எழுத்தாளர்கள் நம்பிக்கை கொண்டனர்.

தளர்வுகள் இருப்பினும், மார்க்சியத் திறனாய்வு உலகளாவிய அளவில் கோர்பசேவ் செய்த புரட்சிக்கு முன்பு பரவலாயிருந்தது. ஜெர்மானியத் தத்துவஞானியான ஹெகல் என்பவருடைய வரலாற்றுச் சித்தாந்தமாகிய

எதிர்மறைக்கொள்கை மார்க்சில் அடிப்படைக் கொள்கையாக மாறியது. வரலாற்றில் எதிர்மறைக் கொள்கைகள் மோதினாலும் ஒரு கட்டத்தில் அவைகள் ஒன்றோடொன்று இணைக்கின்றன என்ற நம்பிக்கையை ஹெகல் தெரிவித்தார். இதன் அடிப்படையில் மார்க்ஸ் தொழிற் கொள்கையும் முதலாளித்துவம் மோதிக்கொண்டு முடிவில் தொழிலாளர்கள் வெற்றியடைவார்கள் என்ற வன்மையான சித்தாந்தத்தை மார்க்ஸ் வெளிக்கொணர்ந்தார். கோர்பசேவ் தன் நாட்டில் சர்வாதிகாரத்தை எதிர்த்துக் குடியரசுக் கொள்கையைப் புகுத்தினார். யெல்ஸ்டின் தலைமையின் கீழ் ரஷ்ய அரசுக்கும் கொர்பசேவிற்கும் இடையே அவநம்பிக்கை நிலவுகிறது. சான்றாக, குடியரசின் எதிர்காலத்தைப் பாதிக்கும் விசாரணைக்குழுவிற்கு முன் சாட்சி சொல்ல அரசு கொர்பசேவை அழைக்க அவர் மறுத்துவிட்டார். அதன் விளைவாக அவருடைய பயண இசைச்சீட்டைப் பறிமுதல் செய்யப்போவதாக அரசு அவரை பயமுறுத்தியிருக்கிறது. தற்பொழுது அமெரிக்காவில் இருக்கும் கொர்பசேவ் அந்நாட்டை விட்டு வெளியேறப் பயணச்சீட்டு இன்றியமையாதது. இப்பகுதியை எழுதும் பொழுது அமெரிக்க ரஷ்ய நாடுகள் நல்லுறவிற்காகப் பாடுபட்ட மேற்கு ஜெர்மானியக் குடியரசின் தலைவர் பிராண்ட் என்பவர் இறந்து விட்டார். அவருடைய இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள கோர்பசேவ் விருப்பம் தெரிவித்தார். ஆனால் அவர் அரசு அவருக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்த அரசியல் குழப்பநிலையில் மார்க்சியத்தின் திறனாய்வு எதிர்காலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அறிவாளிகள் பலர் மார்க்சியத்தால் முன்பு ஈர்க்கப்பட்டிருந்தாலும், அதன் திறனாய்வு வளர்ச்சி பொருளாதார சிக்கலில் மாட்டிக்கொண்டு தவிக்கும் ரஷ்யாவில் மார்க்சியத்தின் அடித்தளம் நிரந்தரமாக இல்லை. இக்காரணங்களுக்காக இந்தத் திறனாய்வுப் பிரிவு முக்கியத்துவத்தை இழந்துவிட்டது.16

## 2. உளவியல்17

உளவியல் கோட்பாடுகளை ஆஸ்திரியா நாட்டவரும் வியன்னா என்ற அதன் தலைநகரிலும் பணியாற்றிக்கொண்டிருந்த ஃப்ராய்டு (Freud 1856-1939) தான் உளவியல் பகுப்பாய்வைக் (Psycho-Analysis) கண்டுபிடித்தார். ஆயினும் இந்நோக்கில் தான் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. உளவியலை அல்லது மனிதனின் மனத்தை ஆராய்ந்து அதிலுள்ள பேருண்மைகளைத் தான் கண்டுபிடிக்கவில்லை என்றும் தனக்கு முன்னேயே பெரும் எழுத்தாளர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள் என்றும் கூறினார். 'உளவியல் நாவல்கள்' என்ற பாகுபாடு இருந்தாலும் இக்காலத்தில் எந்த நாவலும் மனித உளவியலைப் புகுத்தாமலில்லை. ஃப்ராய்டின் கண்டுபிடிப்பு மனிதனின் எல்லா எண்ணங்களும் அவன் நினைவிலிருந்து வரவில்லை. அவனை அறியாமல் அவன் உள் மனதிலிருந்து வெளிவருகின்றன, கனவுகளிலும் எழுத்துகளிலும் பல உருவங்களிலும் உருவகங்களிலும் வெளிப்படுகின்றன என்றார். ஆனால் இவ்வெளிப்பாட்டிற்குத் தன்னுள் மறைந்து கிடக்கும் மனிதனின் பாலிச்சையே காரணம் என்றார். இப்பொழுது பாலிச்சையை அளவிற்கு மீறி வற்புறுத்துகிறார் என்ற கருத்து நிலவுகிறது. இருப்பினும் மனித நினைவுகளைப் பற்றிய அவருடைய கண்டுபிடிப்புகள் எழுத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தின. கனவுகளை ஆராய்ந்த ஃப்ராய்டு பல முக்கியச் செய்திகளை வெளிப்படுத்தினார். மனிதன் அக வாழ்க்கை இலக்கியத்தின் கருப்பொருளாகும் என்று கூறினார். மனிதன் அடிப்படையில் அற்புத நவிற்சி உணர்ச்சிக்கு இடம் கொடுக்கிறான். ஆகையால் பகற்கனவு காண்கிறான். இக்கனவுகள் அவன் வாழ்க்கையில் எட்ட முடியாத பலவித ஆசைகளைப் பிரதிபலிக்கின்றன. இக்கனவுகள் தன் உள்ளத்திலேயே, அளவுக்கு அதிகமான அவ்வாசைகளை அநுபவிக்கிறான். வெட்கமின்றி ருசிக்கிறான். இப்பகற்கனவுதான் இலக்கியமாக வடிவெடுக்கிறது என்பது உண்மை. எழுத்தாக வடிவெடுக்கும் பொழுது மூன்றாவது மனிதர்களான வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதாலும் எழுத்து அச்சுருவத்தில் வருவதால் பல எதிர்கால வாசகர்கள் சந்ததிகள் அவன்

எழுத்துக்களைப் படிக்க வாய்ப்பிருப்பதாலும் பகற்கற்பனைக்குதிரையை ஓட்டிவிடாமல் கடிவாளத்தைப் பிடித்திழுத்து வாசகர்கள் வெறுப்பில்லாமல் படிக்க உருவம் கொடுக்கிறான். எழுத்துகளில் வரும் பகற்கனவு உளவியலுக்கு முருகியலுக்கும் நெருங்கியது.

'இலக்கிய உளவியல்' என்பதற்கு இரண்டு பொருள்கள் உண்டு.18 ஒன்று எழுத்தாளரை உளவியல் நோக்கில் ஆராய்வது: இன்னொன்று அவருடைய பாத்திரங்களையும் நூலையும் ஆராய்வது. முதலில் கூறியது எழுத்தாளனின் ஆக்கவழிமுறையை ஆராய்வதும் உள்ளடங்கியது. இறுதியாக, வாசகர்களின் மீது இலக்கியத்தின் தாக்கம்.19

இலக்கிய மேதையின் இயல்பு கிரேக்கர்கள் காலத்திலிருந்து பரவலாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. பழைய கிரேக்கர்கள், மேதை என்பவன் பித்துப் பிடித்தவன் என்று நம்பினர். இந்த மூளைக்கோளாறு என்பது நரம்பு கோளாறாகவும் இருக்கலாம் அல்லது பைத்தியமாகவும் இருக்கலாம் அல்லது இந்த இரண்டிற்கும் நடுப்பொருளாகவும் இருக்கலாம். ஒரு கவிஞன் மற்ற மனிதர்களை விட வேறுபட்டவன் என்ற நம்பிக்கை இருந்தது. இதற்குக் காரணம் ஒரு நம்பிக்கை கவிஞன் ஆவியால் ஆட்டிப்படைக்கப்படுகிறான். இவ்விதமான நம்பிக்கைகள் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவில், முக்கியமாக கிரேக்க நாகரிகத்தால் தாக்குண்ட நாடுகளில் இருந்தது. கவிஞன் நனவிலிருந்து பேசுவது ஒரு அமானுஷ்யமான உலகத்திலிருந்து வந்தது என்ற நம்பிக்கையாக மக்கள் கருதினர்.

இம்மாதிரி பழைமையான நம்பிக்கைகள் மக்களிடையே வேறூன்றியிருக்கின்றன. அவைகளில் ஒன்று கவிஞனுக்கு உள்ள 'பரிசு' இது அவனிலுள்ள குறையை ஈடுபடுத்துவது. ஹோமரின் பிற்காலக் காப்பியமாகிய 'ஒடிஸி' (Odyssey) என்பதில் பல விவரங்கள் உள்ளன. கிரேக்க கவிஞர் ஹோமர் பார்வையிழந்தவர் என்ற நம்பிக்கை மக்களுக்கும் வாசகர்களுக்கும் ஒரு கொள்கையாகவே ஆகிவிட்டது.20

ஹோமரின் இரண்டாவது காப்பியத்தில் வரும் டிமொடாகஸ் (Demodocus) என்ற நகைச்சுவையுடன் பொருள் செறிந்த பாடல் பாடுவதில் வல்லவனான நாடோடிப் பாடகன், கடவுளால் குருடாக்கப்பட்டான். ஆனால் அவனுக்கு அற்புதமான பாடல் இயற்றும் ஆற்றலைக் கொடுத்தார் தீர்க்கதரிசி டைர்ஸியஸ் (Tiresias) பார்வையிழந்தவன்.21 இவ்விதக் குறைகளை மேதையுடன் தொடர்புபடுத்த முடியாது, இக்குறைகள் உளவியலையோ அல்லது சமூகவியலையோ சார்ந்தது. ஆங்கில அங்கதக்கவிஞரான போப்பிற்கு கூன் முதுகு. புகழ்வாய்ந்த கவிஞரான பைரன் நொண்டி. பிரபல பிரெஞ்சு நாவலாசிரியரான மார்சல் ப்ருஸ்டு (Marcel Proust) ஆஸ்த்மா நோயாளி; கீட்ஸ் மற்ற கவிஞர்களைவிட குள்ளமானவர், தாமஸ் வுல்ஃப் (Thomas wolfe)23 என்ற அமெரிக்க எழுத்தாளர் மிக உயரமானவர். இம்மாதிரியான செய்திகளிலிருந்து நாம் எழுத்தாளர்களைப் பற்றிய கொள்கைகளை உருவாக்குவது கடினம். ஒரு எழுத்தாளருக்கு உள்ள குறையைக் கொண்டு இழப்பீட்டுக் கொள்கையை உண்டாக்கலாம். ஆனால் அது முருகியல் கொள்கை ஆகாது. ஒரு எழுத்தாளன் தன்னுடைய குறைகளின் மூலம் தன் கலையில் ஊக்குவிக்கப்படலாம். மனநோயும் இழப்பீட்டுக் கொள்கையும் எழுத்தாளர்களை விஞ்ஞானிகளிடமிருந்தும் சிந்தனையாளர்களிடமிருந்தும் பிரித்துக் காண்பிக்கின்றன. ஆனால் எழுத்தாளர்கள் தங்களுடைய குறைகளை நூல்களில் அடிக்கருத்தியலாகப் பயன்படுத்துவார்கள் என்பது வெளிப்படை.

இக்கருத்துகள் சில அடிப்படைக்கேள்விகளை எழுப்புகின்றன. ஒரு எழுத்தாளன் மன நோயாளியாக இருந்தால் அவனுடைய மனநோய் அவனுடைய நூலுக்கு அடிக்கருத்தியலைக் கொடுக்கிறதா24 அல்லது செயல் நோக்கத்தைத் தூண்டிவிடுகிறதா? செயல் நோக்கத்தைத் தூண்டிவிட்டால் எழுத்தாளனைச் சிந்தனை செய்கிறவர்களிடமிருந்து பிரிக்க முடியாது. அடுத்த கேள்வி. எழுத்தாளன் மனநோயாளியாக இருந்தால் அவன் கையாளும் கருத்தியல் கொள்கைகள் எப்படித் தெளிவாக இருக்கும்?

இதற்குச்சான்று, ப்ரான்ஸ் கஃப் கா (Franz Kafka 1883-1924) அவருடைய நாவல்களில், மருத்துவர் நோயாளியைப் பற்றிய வரலாறு (Case history) படைப்பது போல் கதாநாயகன் உணர்ச்சிகளை வர்ணிக்கிறார். டாஸ்டொவெஸ்கி என்ற ரஷ்ய நாவலாசிரியரும் அவருடைய 'க்ரமஸோவ் உடன் பிறப்புகள்' (Brothers Karamazoo) என்ற நாவலில் உடன் பிறப்புகளை மூலப்படிவப் பாத்திரங்களாக அல்லது மன நோயாளியாக வர்ணிக்கிறார். எழுத்தாளரைப்பற்றி ஃப்ராய்டின் கருத்து ஒரே மாதிரியாக இல்லை. ஐரோப்பாவிலுள்ள அவரின் உடன் கூட்டாளிகளைப்போல அவர் உயர்ந்த காலாச்சாரத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். தன்னாட்டு அறிஞர்களைப்போல கிரேக்க, இலத்தீன் செவ்வியல் இலக்கியங்களிலும் ஜெர்மானிய செவ்வியல் நூல்களிலும் மதிப்புக் கொண்டவர். அவருடைய உளவியல் கண்டுபிடிப்புகள் டாஸ்டொவொஸ்கியின் 'கரமஸோவ் உடன்பிறப்புகள்'. 'ஹாம்லெட்' என்ற ஷேக்ஸ்பியரின் நாடகம், பிரெஞ்சு நாவலாசிரியரான திதரோ (Diderot) என்பவரின் ரோமோனின் நெருங்கிய உறவினர் (Nepnew of Romean) போன்ற நூல்களில் ஃப்ராய்டின் உளவியல் கொள்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ப்ராய்டு 'ஆக்க எழுத்தும் பகல்கனவு காணுதலும்' என்ற கட்டுரையில் எழுத்தாளனைக் குறைத்து மதிப்பீடு செய்கிறார். மனத்தை மூன்று வகையாகப் பிரிக்கிறார்: மனம், உள் மனம் (Sub-concious) நனவிலி என்று பிரித்தார். மனம் சுதந்திரமாகச் செயல்படாது. உள்மனத்திலிருந்து மனிதனுக்குத் தெரியாமல் தோன்றும் எண்ணங்கள், அவனுடைய எண்ணங்களைப் பாதிக்கும். சான்றாக, மனிதன் இயற்கையாகப் பேசும் பொழுது பேச்சில் சில தவறுகளைத் தன்னையறியாமலே செய்கிறான். இத்தவறுகளைத் தன்னையறியாமலே செய்கிறான். இத்தவறுகள் ஃப்ராய்டின் கொள்கைப்படி உள்மனத்திலிருந்து வருகின்றன. இதுதான் அவருடைய புகழ்பெற்ற கண்டுபிடிப்பு (Phycho - Analysis) மனப்பகுப்பாய்வு.28 இம்முறையைப் பாரீஸ் நகரத்திலுள்ள பெரிய மருத்துவர் ஒருவருடைய சோதனையிலிருந்து முழு உருவம் கொடுத்தார்.

இம்முறையின்படி, நோயாளியை ஒரு படுக்கையில் கிடத்தி அவருக்குப் பின்னால் உளவியல் பரிசோதகர் அமர்ந்து இருப்பார். நோயாளி தன் மனம் போனபோக்கில் பேசும்படி ஊக்குவிப்பார். இதைக்குறிப்புகள் எடுத்து அவைகளை ஆராய்வார். இதனால் மன நோயாளியினுடைய நோய்க்குறிகள் கண்டுபிடிக்கப்படும். ஃப்ராய்டு தான் பிறந்த இடமான வியன்னா நகரத்தில் நோயாளிகளைச் சோதனை செய்யும்பொழுது சிலர் அவரைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டே தங்கள் குறைகளை மன அழுத்தத்தை மீறி புலம்புவார்கள். இது கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவில் 'பாவ மன்னிப்பு' முறையை நினைவூட்டுகிறது. ஆனால் அங்கு ஒரு திரை குருவையும் மன்னிப்புக் கேட்பவரையும் இனம் தெரியாமல் பிரித்துவிடுகிறது. இந்நிலை மன்னிப்புக்கேட்பவரை மனம் திறந்து பேசவைக்கிறது. ஃப்ராய்டு நோயாளிகளைப் பரிசோதிக்கும் பொழுது ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சியை நினைவூட்டுகிறார். ஒரு பெண் நோயாளியை அவளுக்குள்ள குறை என்ன என்பதை கண்டுபிடிக்க முயற்சி செய்த பொழுது அவருடைய மருத்துவக்கூடத்திலிருக்கும் ஒரு தாதி அப்பெண் ஒரு கைக்குட்டை அல்லது துண்டுத்துணியில் இரத்தத்துளிகளைக் கண்டால் பயந்து விலகுவதுமல்லாமல் சுற்றிச்சுற்றி ஓடி வருகிறாள் என்று கூறினாள். அப்பெண்ணை மனப்பகுப்பாய்வு முறையில் பரிசோதித்த பொழுது ஒரு திடுக்கிடும் உண்மையைக் கண்டுபிடித்தார். அவருடைய முதலிரவின் பொழுது கணவன் ஆண்மையிழந்தவன் என்ற கசப்பான உண்மை தெரியவந்தது. ஃப்ராய்டின் உளவியல் உண்மைகள் இலக்கியத்தைப் பெரும் தாக்கத்திற்குள்ளாக்கிய பொழுது இலக்கியப் பாத்திரங்களை, அவர் முறையில் பகுப்பாய்வு செய்தனர். இதற்கு ஷேக்ஸ்பியரின் கதாநாயகனான ஹாம்லெட் என்ற பாத்திரத்தை ஃப்ராய்டின் முக்கிய சீடரும் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவருமான டாக்டர் எட்மண்டு ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயர் **(Hamlet and the Oedipus Complex)** ஹாம்லெட்டும் ஈடிபஸ் உணர்ச்சியும், என்ற புகழ் பெற்ற நூலை எழுதினார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏ.சி. ப்ராட்லி என்ற புகழ்பெற்ற திறனாய்வாளர்

ஹாம்லெட் தன்னுடைய தந்தையைக் கொன்றவன் தன் தாயை மணந்த சித்தப்பா என்ற உண்மை தெரிந்தும் அவனுடைய கொலைத்திட்டத்திற்கு காரணம் பால் உணர்வில் கதாநாயகனுக்கு இருந்த வெறுப்புதான் என்கிறார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியரும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஆராய்ந்து பதிப்பித்தவருமான டோவர் வில்ஸ்ன் (Dover Willson) என்பவர் எலிஸபத் ராணியின் ஆட்சிக்காலத்தில் நாடகம் பார்ப்பவர்கள் ஹாம்லெட்டின் தாயை வெறுத்தவர்கள் என்றார். அவர்கள் சமூக நியதிகளின்படி ஒரு பெண் தன் இறந்த கணவரின் உடன்பிறப்பை மணம் செய்து கொள்வது தகாத உறவு என்ற நம்பிக்கை கொண்டவர்கள். இப்பொழுது ஹாம்லெட்டின் தாமதத்திற்குக் காரணம் அவன் ஒரு அறிவாளி. ஆகையால் எந்த சூழ்நிலையையும் தன் அறிவின் மூலம் ஆராய்ந்து தன் கொலைத்திட்டத்தை ஒத்திப்போடுகிறான். டாக்டர் ஜோன்ஸ் உளவியல் பகுப்பாய்வு முறையில் கூறிய உண்மை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவன் தான் உணராமலேயே தன் தாயின் மீது அன்பு கொண்டிருக்கிறான். ஆகையால்தான் ஈடிபஸ் உணர்வு அவனை பாதித்தது என்கிறார். இதற்கு டோவர் வில்ஸ்ன் கொடுத்த விளக்கம் எதிர்மறையானது. ஜோன்ஸின் திறனாய்வில் உள்ள குறை: ஹாம்லெட்டை ஒரு நாடகப் பாத்திரமாக ஜோன்ஸ் கருதவில்லை. ஒரு உளவியல் நோயாளியாகவே கருதுகிறார். வாழ்க்கையும் இலக்கியமும் வேறு என்ற உண்மையை மறந்து விட்டார்.

ஃப்ராய்டு 'ஆக்க எழுத்தாளர்களும் பகற்கனவும்' என்ற கட்டுரையில் எழுத்தாளரின் ஆக்கத்திறனை குறை கூறுகிறார். எழுத்தாளன் தன் கற்பனையினால், பகற்கனவின் மூலம், ஒரு உலகத்தை உண்டாக்குகிறான். தன் உண்மை உலகத்தில் அநுபவத்தின் மூலம் காணும் குறைகளைத் தன் கற்பனையின் மூலம் நிறைவு செய்கிறான். இம்முறையை இழப்பீடு செய்தல் என்றார். ஃப்ராய்டு. அவர் மீது ஒரு குற்றச்சாட்டு இருந்தது. எழுத்தாளரைப்பற்றி உயர்ந்த கருத்துக்களை அவர் கொண்டிருந்தார் என்று சொல்லுவதற்கில்லை. ஒரு எழுத்தாளனுடைய நூல் உளவியல்

நோக்கில் பகற்கனவே என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தாலும் அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழக ஆங்கில - ஒப்பிலக்கியத்துறையைச் சார்ந்த பெயர் பெற்ற திறனாய்வாளர் லயொனல் ட்ரில்லிங்29 என்பவரின் 'ஃப்ராய்டும் இலக்கியமும்' என்ற சிறந்த கட்டுரையில் அந்த உளவியல் விற்பன்னரின் எழுத்தாளர் பற்றிய கருத்துக்களுக்குத் தற்காப்பு விளக்கத்தைக் கொடுக்கிறார். இது ஒரு சிறந்த கட்டுரையானாலும், எழுத்தாளன் தன் கலையின் மூலம் தன் வாழ்க்கையில் உள்ள குறைகளை நிறைவுகளாகத் தன் பகற்கனவின் மூலம் மாற்றுகிறான் என்பதுவே, ஃப்ராய்டின் கருத்து, இக்கருத்து களங்கமாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆயினும் ஃப்ராய்டியனிஸம் என்பது இலக்கியத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாதது.

ஃப்ராய்டைத் தவிர, யூங் (Jung) ஆட்லர் (Alder) என்ற திறனாய்வியல் நிபுணர்கள் அவருடன் சேர்த்துக் கூறப்படுகிறார்கள். கார்ல் யூங் (Carl Jung 1875-1961) ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஃப்ராய்டிற்கும் யூங்கிற்கும் தாய்மொழி ஜெர்மானியம், தொடக்கக்காலத்தில் யூங் ஃப்ராய்டைப் பின்பற்றியவரே. பிறகு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் யூங் ஃப்ராய்டின் அடிச்சுவட்டிலிருந்து விலகிவிட்டார். பிற்காலத்தில் தன் உளவியல் கொள்கைகளை விரிவுபடுத்திய பொழுது கூட்டு நனவிலி (collective unconscious) என்ற கொள்கையை உருவாக்கினார். இக்கொள்கை புராணிகக்கதை. நோயாளிகளுடைய கனவுகள், அவர்களுடைய கற்பனை உருவாற்றலிலிருந்து உருவாக்கியது. ஃப்ராய்டும் நனவிலியில் நம்பிக்கை கொண்டவர். நனவிலியை மனிதனின் உளவியலிலிருந்து அப்புறப்படுத்தவில்லை. ஆனால் யூங் ஒரு மனித இனத்தின் தொடக்க காலத்தில் கூட்டு நனவிலி ஒன்று இருந்ததாகக் கூறினார். இந்தக் கூட்டு நனவிலியிலிருந்து தான் புராணிகக் கதைகள்,30 பழமையான நம்பிக்கைகள் தோன்றின என்கிறார். இக்கொள்கையுடன் சேர்ந்த உளவியலில் முக்கியச் சொல்லான (Archetype) மூலப் படிவம் என்பது. சான்றாக ஆங்கில அற்புத நவிற்சிக்கவிஞர் வேட்ஸ் வொர்தின்

கூட்டாளியான கோல்ட்ரிட்ஜ் எழுதிய இலக்கிய நாடோடிப பாடல்31 மிகப்பழமை மாலுமி (The Ancient Mariner) என்ற ஒரு அற்புதக்காவியம்.32 இதன் கதைச்சுருக்கம். இக்கவிதையின் கதாநாயகன் ஒரு வயோதிக மாலுமி. அவன் பல சமயங்களில் தனக்கு எதிரில் வரும் எந்த மனிதனானாலும் அவனிடம் தன்னுடைய நம்பத்தகாத கதையைச் சொல்லவேண்டும். ஒரு முறை கப்பலில் செல்லும் பொழுது இந்த மாலுமி தேவதைகள் காத்துவந்த கடற்பறவை ஒன்றைத் தற்செயலாகக் கொன்றுவிடுகிறான். அதனால் விளைந்த சாபக்கேடு கப்பல் காற்றில்லாமல் நடுக்கடலில் நின்றுவிடுகிறது. தாகத்தினால் மாலுமிகள் யாவரும் இறக்கிறார்கள். ஆவிகள் நடமாடுகின்றன. திடீரென்று ஒரு மழை. மாலுமி பிழைத்தெழுந்து கொள்கிறான். மற்றொரு வியக்கத்தக்க நிகழ்ச்சி என்னவென்றால் அவனுடைய கப்பல் புறப்பட்ட இடத்திற்கே சேர்ந்து விடுகிறது. இவ்வற்புத நவிற்சிக் கவிதையில் மணவிழாவிற்கு போய்க் கொண்டிருந்த விருந்தினர் ஒருவரை பலவந்தமாக நிறுத்தி மாலுமி கதை சொல்கிறான். இக்கவிதை யூங்கின் உளவியலில் நாட்டம் கொண்ட திறனாய்வாளர்கள் இக்கவிதை கவிஞனுள்ளத்தில் இருந்து வந்ததல்ல: கூட்டு நனவிலியிலிருந்து தான் வந்தது என்கிறார்கள்.33

கோல்ட்ரிட்ஜ் அபினி சாப்பிடும் பழக்கமுடையவர். ஒரு முறை தூங்கி விழித்தபொழுது கனவில் எழுதிய காவியம் வரிவரியாக நனவில் தெளிவாகத் தெரிந்தது. உடனே அக்கவிதையை எழுதத்தொடங்கினார். ஆனால் அப்பொழுது அங்கே வந்த நண்பர் ஒருவரால் அவரது நினைவு கலைக்கப்பட்டது. இக்கவிதைதான் Kubla Khan என்பது. கனவில் எழுதிய இந்தக் கவிதை பொதுவாக யூங்கின் உளவியலைச்சாரும். இப்படைப்புச் செயலின் தோற்றுவாய் கவிஞனின் அடிமனத்தில் உள்ளது. அச்சுறுத்தும் வகையில் கவிதையில் வரும் நிகழ்ச்சிகள் கூட்டு நனவிலியில் இருந்து வருவதாகக் கொள்ளப்படுகிறது. திறனாய்வாளர்கள் படைப்புச் செயலுக்கும் அபின் உண்ணுவதற்கும் தொடர்பு உண்டா என்பதை விரிவாக ஆராய்ந்தனர். தொடர்பு இல்லை என்றும்

முடிவு செய்தனர். இந்நூற்றாண்டில் ஆல்டுஸ் ஹாக்ஸ்லி (Aldous Huxley 1894-1963) என்ற புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் மெஸ்கலின் என்ற போதைப் பொருளை உண்டு தன்னையே பரிசோதனைக்குள்ளாக்கினார். இருந்தும் படைப்புச் செயலைப்பற்றிய உண்மைகளை உறுதி செய்ய முடியவில்லை.

கூட்டு நனவிலி ஆங்கிலத்தில் பெரும் கவிஞரான ஐயர்லாந்தைச் சேர்ந்த டபிள்யு.பி.யேட்ஸ் (W.B.Yeats) என்பவரை நினைவூட்டுகிறது. திருமணம் புரிந்து கொண்டு தன் மனைவியுடன் தேன் நிலவைக் கழித்தபொழுது வழக்கம் போல கவிதை எழுதினார். அப்பொழுது அவருடைய நினைவில்லாமல் எழுதுகோல் தானே இயங்கிக் கவிதைகளை எழுதியது. அவர் தனக்கு மேலே உள்ள சக்திகளின் அறிவுரைப்படி தான் எழுதியதாக உரிமை கொண்டாடினார். இதை vision (காட்சி) என்ற நூலில் கூறுகிறார். கவிதையின் ஊற்றைப் பற்றி அவருடைய நம்பிக்கையில் யூங்கின் கொள்கையின் சாயல் இருக்கிறது. கவிஞர்களுக்கு எண்ணங்கள் (the great memory) மனிதகுலத்தின் கூட்டு நினைவிலிருந்து வருகின்றன என்கிறார். இக்கூற்றை விஞ்ஞானமுறையில் ஆராய்வது எளிதல்ல.

கவிஞர் யேட்ஸ்ஸின் உரிமைக் கோரிக்கை, அரவிந்தரின் கோரிக்கை போலவே இருக்கிறது. அவர் தன்னுடைய □சாவித்திரி□ போன்ற உன்னதத் தத்துவங்கள் கலந்த கவிதைகளைத் தான் எழுதவில்லை என்றும் அமானுஷ்யமான உலகத்தில் வாழ்பவர்கள் கட்டளையிட்டதால் தான் எழுதியதாகவும் கூறுகிறார்.34 இதற்கும் யேட்ஸின் கூற்றிற்கும் வேறுபாடு உள்ளது. அவர்கள் அரவிந்தர் எழுதிய கவிதைகளுக்குத் திருத்தங்கள் தந்து உதவின என்று கூறுகிறார். இந்த மர்மமான அம்சத்தை யேட்ஸ் - அரவிந்தர் திறனாய்வாளர்கள் ஒதுக்கி விடுகின்றார்கள்.

### 3. சமூகவியல்35

சமூகவியல் மேலைநாட்டுத் திறனாய்வு உலகில் வளர்ச்சியடைந்தது போலத் தமிழ் நாட்டில் வளர்ச்சியடைவில்லை. இப்பிரிவு க.கைலாசபதி அவர்களை நினைவூட்டுகிறது. அவ்வறிஞர் இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்குச் சமூகவியல் இன்றியமையாதது என்று உணர்ந்தார்.

சமூக விஞ்ஞானத்துறைகள் பலவற்றுள்ளும் இலக்கியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது சமூகவியலாகும். ஏனெனில், சமூகவியல் மனித ஒழுகலாறு சம்பந்தமானது; தனிமனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதையே சமூகவியல் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.36 சமூகவியலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பை மார்க்சிய நோக்கில் ஆராய்கிறார். சமூகவியலுக்குத் தமிழ்த் திறனாய்வு உலகத்தில் முக்கியத்துவம் கொடுத்த கைலாசபதி மார்க் வீபர் (Max weber) ஒகூஸ்த் கோம்தே (Auguste comte) போல அரசியல் நோக்கைக் கலக்காத விஞ்ஞான சமூவியல் விற்பன்னரல்ல. மார்க்சியவாதத்தை சமூகவியலுடன் கலந்த சமூகவியலும் இலக்கியமும் (1979) என்ற நூலையும் அதைச் சார்ந்த பல கட்டுரைகளையும் எழுதியவர்.37 மார்க்சியவாதம் ஒரு குறை என்று சொல்லுவதற்கில்லை. இக்கொள்கையை மற்றச் சமூகவியல் வாதிகளிடமிருந்து பிரித்துக் காட்டுவதற்கே இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.38

சமூகவியல்வாதிகளுக்கும் இலக்கியத்திறனாய்-வாளர்களுக்கும், சமூகவியலுக்கும் இலக்கியத்திற்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி அதிருப்தி இருந்து வந்தது. சமூவியல்வாதிகள் இலக்கியத்தை ஒரு ஆவணமாகவே கருதவில்லை. காரணம் இலக்கியத்தில் விஞ்ஞானப்போக்கு இல்லாததால். இன்னொரு காரணமும் இருப்பதாகச் சொல்லலாம். இலக்கியம் கற்பனை கலந்தது. இலக்கியவாதிகள் சமூகவியலை ஒதுக்கியே வந்தனர். அது விஞ்ஞானக்கொள்கையை ஆதரித்து வந்ததால். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதி 50 ஆண்டுகளில் இலக்கியம் விஞ்ஞானத்தின் தாக்கத்துள்ளாகியது.

முக்கியமாக, டார்வினிசம் என்ற கொள்கையினால் விவிலிய நூலில் நம்பிக்கை உள்ளவர்கள் சார்லஸ் டார்வின் (Charles Darwin 1809 - 82) பரிணாமக் கொள்கை (கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. அவைகள் இயற்கையாகவே வளர்ந்தன) யை எதிர்த்தார்கள். குறிப்பாக, இங்கிலாந்தில் டார்வினின் சீடரான தாமஸ் உறக்ஸிலி (Thomas Huxley 1825-94) ஆற்றிய சொற்பொழிவுகள் மதநம்பிக்கையை எதிர்த்தன; விஞ்ஞான நோக்கை ஆதரித்தன. இதனால் அறிவுலகம் குழப்பத்தை அடைந்தது. சான்றாக, மாத்யூஆர்னால்டு என்ற கட்டுரையாளரும் கவிஞரும் டார்வினிஸத்தால் தாக்குண்டு தான் மதநம்பிக்கையை இழந்ததை உருக்கமாகக் கூறுகிறார். "நான் இரண்டு உலகங்களுக்கு இடையே சிக்கித்தவித்தேன். நம்பிக்கைகளை அடித்தளமாக் கொண்ட உலகம் அழிந்துவிட்டது. எதிர்காலத்தை நோக்கிய உலகம் பிறப்பதற்கு உரிய சக்தி இல்லை; இந்நிலையில் சமூகவியல் பிரான்சு நாட்டிலும் ஜெர்மனியிலும் சில அறிஞர்களால் உருவாக்கப்பட்டு இப்பொழுது மேல் மட்டக் கல்விக் கூடங்களில் பாட நூலாக இருக்கிறது. சமூகவியலும் இலக்கியமும் ஒன்றை ஒன்று நெருங்கியது மல்லாமல் ஒரு புதிய இயலையே உண்டாக்கியிருக்கின்றன. குறிப்பாக அமெரிக்க நாட்டில் இதற்கு இலக்கியச் சமூகவியல் (Literay Sociology) என்று பெயர். இப்புதிய தலைப்பில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஒரு வரவாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்கு ஒன்று நடந்தது. அதில் புகழ் பெற்ற பேராசியர் லியோ லொவந்தால் (LeoLowenthal) என்பவர் பொது மக்கள் பண்பாட்டை சமூவியல் நோக்கில் ஆராய்வதற்கும் அதே நோக்கில் கலையை ஆராய்வதற்கும் தெளிவான வேறுபாடுகள் இருக்க வேண்டும் என்று ஒரு முக்கிய கருத்தை வலியுறுத்தினார். இக்கருத்தரங்கில் பங்கு கொண்ட ரெனெவெல்லக் லொவன்தாலின் கருத்தை மறுத்தார். அவர் கூறியதாவது: பொது மக்கள் கலாச்சாரத்தில் அடங்கியுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு கூற்றுக்கும் மூலாதாரம் மேல் வகுப்பாரின் படைப்புக்களே. அதே போன்று மேல் மக்கள் இலக்கியம் எப்பொழுதும் பாமர இலக்கியத்திலிருந்தும் அதன்

கீழ் மட்ட இலக்கியத்தினின்றும் (Sub-Literature) கடன் வாங்கத்தவறியதில்லை".39 நம் நாட்டில் சமூகவியலும் இலக்கியமும் பல்கலைக்கழகங்களில் தொடர்பில்லாத இருவேறு துறைகளாகக் கருதப்படுகின்றன.40 இந்நிலை இரண்டு துறைகளுக்கும் நல்லதல்ல.

## 4. பெண்ணியம்

பெண்ணியம் (Feminism) என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கு ஐரோப்பாவில், குறிப்பாக பிரான்சு நாட்டில் தோன்றினாலும், இப்பொழுது இலக்கியத்திறனாய்வு உலகில் ஒரு முக்கியமான இயக்கமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெண்ணுரிமையைப்பற்றிப் போர்க்குரல்கள் எழுப்பினாலும் இந்தியச் சமூகம் பழமை நம்பிக்கைகளில் சிக்கித்தவிப்பதால் பெண்ணுரிமை என்பது ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாகவில்லை. இந்தியக் குடிமக்கள் பல மதங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் பெண்கள் மதத்திற்குத்தக்கவாறு அவர்களுடைய உரிமைகளும் மதக்கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் பொதுவான சமுதாயச் சட்டமும் 41நமது அரசியல் அமைப்புச்சட்டமும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. பெண்ணியம் ஒரு சக்திவாய்ந்த இயக்கமாக உருவாகாமல் இருப்பதற்கு இதைக்காரணமாகச் சொல்லலாம்.

ஆங்கில இலக்கியத்தில் முதன் முதலாகப் பெண்ணுரிமைப் பிரச்சினையைக் கிளப்பியவர் வர்ஜுனியா உல்ஃப் என்ற நாவலாசிரியை. இவர் ஒரு அங்கதக்கட்டுரையில் வீட்டில் பெண்ணை ஒரு பெண் தேவதூதராக உயர்த்திப் பெண் இனத்தையே முட்டாள்களாக்குகிறது தன்னுடைய சமூகம் என்று குற்றம் சாட்டினார். இலக்கிய வரலாற்று நோக்கில் பெண்களைப் பலவிதமாக வடித்தாலும் அவர்கள் ஆண்களுக்குக் கீழ்படிந்தவர்களே என்ற எண்ணம் பல நூற்றாண்டுகளாக ஆங்கில இலக்கியத்தில் இருந்து வந்தது. மத்திய காலத்தை (The Middle Age) எடுத்துக்கொண்டால், முதல் ஆங்கிலக்கவிஞரான ஜெஃப்ரேசாசர் (Georffrey Chaucer)

கான்டர்பரிக் கதைகளில் பெண்களை ஒரு நாகரிகமான நகைச்சுவையுடன் புண்படாமல் அங்கத முறையில் எழுதுவதில் விற்பன்னர். அவருடைய பாத் பெண்மணி (the wife of bath)மதப்பற்று அதிகமுடையவள் புண்ணிய ஸ்தலங்களுக்குப் புனிதயாத்திரை போவதில் விருப்பமுள்ளவர். ஆனால் உலக விவகாரங்களில் மேதை. பல தடவை மணம் புரிந்த பாத்42 பெண்மணியை இவ்வாறு விவரிக்கிறார். "மாதா கோவிலில் பல ஆண்களை மணம் புரிந்தவர்; காதலர்களும் உண்டு". இச்செய்தி பெண்ணுரிமையைச் சுட்டிக்காட்டுவதல்ல; பாத் பெண்மணிக்குள்ள மீறிய பாலிச்சை. அவர் காலத்திய மதம் பல தளர்வுகள் உள்ளது. அவைகளைச் சாடினார் இல்லை. அதைக் கேலி செய்கிறார், அவருக்கே உரிய அங்கதமுறையில். ஒரு மாடக்கன்னி ஒருவர் அணியூக்கு அணிந்திருக்கிறார். அந்த ஊக்கில் இலத்தீனில் Amor Vincit Omnia என்ற ஒரு சிறிய வாக்கு பொறித்திருக்கிறது. (அப்பொழுது இலத்தீன் கிருத்துவ சமய மொழி) அதன் பொருள் 'காதல் எல்லாவற்றிலும் வெற்றிபெறும்' என்பது: ஆங்கில நாவல்களிலும் பெண்களை அலட்சியப்படுத்தினர். 'காதல் பொம்மைகளாகவே கருதினார். பதினெட்டாம் நூற்றாண்டில்தான் ஆங்கில நாவல் இலக்கியம் தோன்றியது. டானியல் டிஃபோ (Daniel Defoe 1660-1731) தான் இங்கிலாந்தில் நாவல் தோற்றத்திற்குக் காரணமானவர். ராபின்ஸன் க்ருஸோ (Robinson Crusoe) என்ற கதையை எழுதிப் புகழ்பெற்றவர். இவர் மோல் ஃப்ளாண்டர்ஸ் (Moll Flanders) என்ற நாவலை எழுதினார். கதாநாயகி ஒரு பரத்தை. கதையின் விவரங்கள் வாசகர்களின் பாலுணர்ச்சியைத் தூண்டிவிடுவது மாதிரி இருக்கிறது. இம்மாதிரிப் பெண்களைக் காதல் பொம்மைகளாக விவரிக்கும் பழக்கம் இருந்தது. ஹென்றி ஃபீல்டிங் (Henry Fielding 1707-54) எழுதிய டாம் ஜோன்ஸ் (Tom Jones) என்ற நாவல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அந்நாவல் பெண்களைப் பெருமைப்படுத்துவதாக இல்லை. ஃபீல்டிங்கின் சமகாலத்தவர், சாமுவேல் ரிச்சர்ட்ஸன் (Samuel Richurdson 1869-1752). அவர் கடித முறையில் நாவல்களை எழுதும் பழக்கமுடையவர். அவர் பெண்களுடைய நல்ல

குணங்களைத் தற்காப்பு முறையில் போற்றுபவர். பாமெலா (Pamelo), க்ளாரிஸா ஹார்லோ (Clarissa Harlowe) என்ற நாவல்களை எழுதி ஐரோப்பாவிலும் புகழ் பெற்றவர். இந்நாவல்களின் தாக்கத்தை ஆங்கில நாவல் இலக்கியத்தில் காணலாம். அவருடைய கருத்தியல், ஒரு அபலையான பெண் எப்படி தன்னுடைய ஒழுக்கத்தை நிலைநாட்டுகிறாள் என்பது. ரிச்சர்ட்ஸன் இந்நோக்கைக் கடைப்பிடித்தாலும் இதனுடைய எதிரொலிகள் ஆங்கில நாவல்களில் உண்டு. இத்தகைய நோக்கு பெண்களைப் போற்றுவதாய் இருந்தாலும் இது பெண்கள் முகப்புகழ்ச்சி செய்தலே. பெண்ணியம் வர்ஜினியா வுல்ஃபின் நாவல்களில் தோன்றின என்று ஏற்கனவே பார்த்தோம். இலக்கியத்திறனாய்வாளர்கள் கூற்றுப்படி, பிரெஞ்சு எழுத்தாளர் சிமோன் தே போவுவா (Simone de Beauvoir) தான் தன்னுடைய நூலான The Second Sex C 1949) முதன்முதலாகப்பெண்கள் உரிமைகளைப் பற்றி அடிப்படைக் கேள்விகளை எழுப்பினார்.43 நாம் இருபதாம் நூற்றாண்டில் இருந்தாலும், பெண்ணுரிமை தொடர்பாக இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடைவெளி உண்டு. பெண்ணுரிமையைப் போற்றும் நாடுகளில் அமெரிக்கா முன்னணியில் இருக்கிறது என்று கூறுவர். அந்நாட்டுப் பெண்களுக்கு உள்ள உரிமைகள் வேறு எந்த நாட்டுப் பெண்களுக்கும் இல்லை என்றும் போற்றுவர். ஆனால் இன்னும் ஒரு பெண் அமெரிக்க அரசியல் தலைவராக அமெரிக்கக் குடிமக்கள் அனுமதிக்கவில்லை. நாவல்களில் பெண்கள் பால் சுதந்திரம், மற்ற சுதந்திரங்களையும் அனுபவிப்பதாக காட்சி தந்தாலும், இன்றுள்ள இரவு விடுதிகளில் பெண்கள்தான் தாங்கள் அணியும் உடைகளை படிப்படியாக உரித்து நடனமாடுகிறார்கள். டைசன் என்ற குத்துச் சண்டை வீரர், கருப்புப் பெண்ணைக் கற்பழித்ததாகக் குற்றம் சாற்றப்பட்டுச் சிறைவாசம் அநுபவிக்கிறார். அமெரிக்காவின் உயர்மட்ட நீதிமன்றத்தில் முதன் முதலாக நியமிக்கப்பட்ட கருப்பர் ஒருவர் தன் கீழ் வேலை செய்த ஒரு கருப்புப் பெண்மணியின் பாலிச்சையை மறைமுகமாகத் தூண்டிவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு அமெரிக்க செனட் சபையில்

விசாரணைக்குக் கொண்டு வந்து பல ஓட்டுக்கள் வித்தியாசத்தில் தன் பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். இங்கிலாந்தில் பெண்மை இயக்கம் **Suffragathes** என்ற கடுமையான இயக்கமாக மாறியது. அதன் உறுப்பினர்கள் அவ்வியக்கக் கொள்கையில் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையால் கடவுளை 'அவன்' **(He)** என்று அழைக்காமல் 'அவள்' **(She)** என்று அழைக்கிறார்கள். பிரான்சு நாட்டில் தான் பெண்களுக்கு உன்னதநிலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு பரவலான நம்பிக்கை. சட்டம் கூட அந்நாட்டில் மனைவி நீதிமன்றத்தில் தன் கணவனுக்கு எதிராகச் சாட்சியம் சொல்லுவதை அநுமதிப்பதில்லை. ஆனால், 'கள்ளக்காதல்' என்பது ஒரு சமூக நம்பிக்கையாகவே மாறிவிட்டது. நம்நாட்டில் விதவை உடன்கட்டை ஏறுவது ராஜஸ்தானில் நடந்த சம்பவத்தினால் கருத்து மாறுபாடுகள் தோன்றியபோதிலும் அரசாங்கம் இந்தக் கேவலமான நிகழ்ச்சிக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கத் தவறிவிட்டது. சமூகத்தின் ஒரு மட்டத்தில் பெண்ணைத் தயக்கமின்றிப் போற்றுகிறார்கள். இதற்கு ஆண்கள் ஆதிக்கமும் முதியவர்களின் மதவெறியும் தான் காரணம்.

பழைய இலக்கியங்களைப் பார்க்கப்போனால் பெண்ணினம் உன்னத நிலையில் இருந்ததாகத் தெரியவருகிறது. கண்ணகி சிலப்பதிகாரத்தில் பெண் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். தமிழ் மக்களின் ஆழ்ந்த மனத்தில் ஒரு உயர்தர இடத்தையே நிரந்தமாக பிடித்துவிட்டாள். இதை யூங்கின் உளவியல் படி, **(Archytype)** மூலப்படிவம் எனலாம். உபநிடதத்தில் ஞானியுடன் ஆத்ம விசாரத்தில் காயத்ரி, கார்கி என்ற பெண்கள் பங்கு கொள்ளுகிறார்கள். தமிழ்க் கவிதைகளில் ஒளவையார் பலர் அறிவுரைகளைக் கூறுவதால், அவர் மதிக்கப்படுகிறார். இம்மாதிரிப் பல இலக்கியச் சுட்டுக்கள் அக்காலத்திலும் இப்பழைய மூடநம்பிக்கைகள் நிறைந்த சமுதாயத்தில் பெண்கள் மதிக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. இந்நம்பிக்கைக்கு மிகச் சிறந்த சான்று வடமொழி தோத்திரங்களில் சக்தி வழிபாடு, ஆதிசங்கரர் சக்தி வழிபாட்டைப் போற்றி எழுதிய சவுந்தர்ய லஹரி என்ற நாமாவளி முதல்

சூத்திரத்தில் அவளுடைய கணவனான சிவனுக்கு உள்ள தொடர்பைக் குறிக்கிறார். 'ஸ்பந்திதும் அபி' என்கிறார். சக்தியில்லையெனில் அவர் சிறிது கூட நகரமுடியாது என்பது பொருள்.44 சக்தி தெய்வத்தின் ஆயிரம் நாமங்களைப் புகழுரையாகக் கொண்ட 'லலிதா ஸஹஸ்ரநாமம்' என்ற உன்னத நாமாவளியில் ஒரு குறிப்பு வருகிறது.45 இக்குறிப்பை இலக்கிய நோக்கில் குறியீடு எனலாம். அதன்படி சக்தி தெய்வம் ஒரு கட்டிலில் அமர்ந்திருக்கிறாள். கட்டில் பலகை பிரேதமாக இருக்கும் சதாசிவம். கட்டிலின் நான்கு கால்களும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரா, ஈஸ்வரன் என்ற அவதாரங்கள். இன்னும் ஒரு குறிப்பில் பிரம்மன் என்ற அருவத்தை உலகத்தை முழுவதுமாக சிவன் அழித்த பொழுது மாயையினால் சக்தி இவ்வுலகத்தை அழிக்கத்தூண்டுகிறாள்46 என்பது, அவள் இமையை லேசாக அசைத்தால் பல உலகங்கள் தோன்றுகின்றன. அதேபோல பல உலகங்கள் அழிகின்றன. சக்திதான் இப்பிரபஞ்சத்தின் உயிர். கடவுள்களும் அவளுடைய கடைக்கண் பார்வையால் அல்லது அருளால் இவ்வுலகை உண்டாக்குகிறார்கள் என்பது வடமொழி மிகப்பழைய மத இலக்கியத்தில் உள்ள ஆழ்ந்த நம்பிக்கை. இப்புராணிகக் குறிப்பை சமூகவியல் நோக்கில் ஆராய்ந்தால் பெண் இந்திய சமூகத்தில் ஒரு காலத்தில் உன்னத பதவி வகித்தாள் என்று ஊகிக்கலாம். இக்காலத்தில் நம் சமூகத்தில் பெண்கள் அநுபவிக்கும் இன்னல்களுக்கும் அவலங்களுக்கும் ஆண்களின் ஆதிக்கமும் மூடநம்பிக்கைகளும் தான் காரணம் என்று சொல்லலாம்.

பெண்ணியம் என்பது ஆங்கில, அமெரிக்க நாவல் இலக்கியங்களில் ஒரு இயக்கமாகவே ஆகிவிட்டது. இப்பொழுது பெண் நாவலாசிரியர்கள் தமிழ்நாட்டில் முன்னோடிகளாக இருந்தாலும் பெண்ணிய இயக்கமாகத் தழைக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று வாசகர்களின் ஆதிக்கம், பெண்ணியத்தை மனந்திறந்து ஆதரித்து வாசகர் வட்டத்தை இழந்து விடுவோமோ என்ற அச்சம். இன்னொன்று, பல சமூக முன்னேற்றங்களுடன் இன்னும் வாசகர்கள் பழமைவாதிகளாகவே இருக்கிறார்கள். நாவல் இலக்கியம்

இன்னும் வாசகர்கள் ஆதிக்கத்தில்தான் இருக்கிறது. அனுராதா ரமணன் நாவல்களில் ஆண் - பெண் போராட்டம் தலைதூக்குகிறது. ஆனால் கதை இறுதியில் சமூகவியல் நோக்கில் பெண் பின்னுக்குத் தள்ளப்படுகிறாள். இது தளர்வு என்று திறனாய்வு நோக்கில் சொல்லமுடியாது. சமூகத்தின் பழமைவாதம் தான் காரணம் என்று சொல்லவேண்டும். சிவசங்கரியின் பாலங்கள் என்ற நாவல் பெண்ணிய நோக்கில் முக்கியத்துவம் அடைந்துவிட்டது. இது அமைப்பியல் அடிப்படையில் ஒரு சிறந்த நாவல் எனலாம். பரம்பரை பரம்பரையாக ஒரு பெண்ணின் கடமைக் கூறு எவ்விதமாக மாறுகிறது என்று சுவையாக விவரிக்கிறது. வாசந்தியின் நாவல்களில் அவர் ஆங்கில இலக்கியத்தைப் பயின்றதால் பெண்ணிய வாசனை வீசுகிறது. ஒரே நாவலில் தமிழ் சமூகத்திற்கும் தலைநகருக்கே உரித்தான சமூகத்திற்குமாக மதுரையும் டில்லியும் காட்சிக்களமாக மாறிவிடுகின்றன. பெற்றோரைக் கண்காட்சியில் இழந்த ஒரு சிறு பெண் விலைமாதாக ஆக்கப்படுகிறாள். கதைக்கருவளர்ச்சியில் பெண்ணியம் மறைமுகமாகப் புகுத்தப்படுகிறது. இக்கருத்தியலை ஆங்கில நாவல்களில் பெண்ணியக் கொள்கை கையாளப்படுவதை ஒப்பு நோக்கினால் இது பின் தங்கியது என்று கூற வேண்டும். அண்மைக் காலத்தில் ஒரு தமிழ்வாரப் பத்திரிகையில் வெளிவந்த தொடர்கதை 'கோட்டைப் புரத்து வாசல்'.47 இந்நாவலை இனம் கண்டு கொண்டால் ஆண் ஆதிக்கமும் பெண்ணினத்தின் இழிவுகளும் தலைநகரில் தமிழ் கலாச்சாரத்தின் தலைமையகமான மதுரையில் பின் தங்கியுள்ளன என்று காட்டுகிறது. தலைசிறந்த நாவலாசிரியரான ஜெயகாந்தன் படைப்புக்களில் பெண்ணியம் உண்மையாகவே உருவெடுக்கிறது. அதற்கு அவருடைய சுதந்திரப் பார்வையும் மனத்திட்பமும்தான் காரணம். இவ்வாறு ஆண்கள் இலக்கியத்தில் பெண்களுக்குத் தற்காப்பு அளிப்பதை அமெரிக்கத்திறனாய்வில் Feminism என்று சொல்லாமல் நகைச்சுவையுடன் Feminism 48என்று சொல்லுவார்கள்.

பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் பெண்ணியம் சமூக நோக்கில் சற்றுக் கடுமையாகவே இருக்கிறது. நாவலாசிரியர்களை விடக் கவிஞர்கள் எந்தக் கருத்தையும் மரபு, கட்டுப்பாடு ஆகியவற்றை மீறி வெளிப்படுத்துகிறார்கள். இருவரும் அவர்கள் சூழ்நிலையில் புரட்சிகரமான கருத்துக்களை உடையவர்கள். ஷெல்லி கவிஞனுடைய பங்கை வர்ணித்தது அவர்களுக்குப் பொருந்தும்: **Poets are the unacknowledged legislatore of the world** அல்லது கவிஞர்கள் உலகத்தில் ஒப்புக்கொள்ளப்படாத சட்டமியற்றும் ஆற்றலுடையவர்கள். அவர்கள் சமூகத்தையும் மனிதர்களையும் திசைதிருப்புவர். பெண்ணியம் இருவரையும் நெருங்கி வரும்படி செய்கிறது. அவர்கள் கவிதைகளில் பெண் ஒரு முக்கிய கருத்தியல். பாரதியாரின் கவிதைகளில் பெண் பல அவதாரங்கள் எடுக்கிறாள். இவ்வவதாரங்களெல்லாம் பாரதமாதா, சமூகத்தில் பெண் என்ற உறுப்பினர், பாஞ்சாலி என்ற பாத்திரங்களுக்கு அடிப்படை சக்தி தெய்வம். பெண்களைப் புனிதப் பிறவிகளாகக் கருதுபவர், இதன் பின்புலத்தில் பெண்களின் அவலங்களைப் பார்க்கும்பொழுது, 'மாதர் தம்மை இழிவுபடுத்தும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற சொற்களில் கவிஞனுக்குரிய கனல் தெரிக்கிறது. பெரியாரின் அடிச்சுவட்டில் வந்த பாரதிதாசன் புரட்சிகரமான கருத்துக்களை வாசகர்களின் மனதைச் சுடும்படி மொழியைக் கக்குகிறார். பாரதியாரைவிட ஒருபடி மேலே போய்த் தம் காதல் கவிதைகளில் (மாந்தோப்பில் மணம்) விதவையை மறக்கமுடியாத அல்லது வாசகர்கள் அனுதாபப்படக்கூடிய பாத்திரமாக ஆக்குகிறார். இத்தகைய வேறுபாடு பாரதி கவிதைகளை பாரதிதாசன் கவிதைகளிலிருந்து பிரித்து விடுகிறது. புரட்சி என்ற கொள்கைக்கு இவ்விருவரும் அளிக்கும் இலக்கணம் வேறு. 'கவிதையியல்' என்ற நோக்கத்தில் பாரதியும், பாரதிதாசனும் எவ்விதம் ஒரு புதுஉலகத்தை உண்டாக்குகிறார்கள் என்ற கேள்விக்கு விடை சுவையானதாக இருக்கும். பாரதிதாசனின் முதல் பாட்டு என்று கூறப்படும் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற கவிதை திறனாய்வாளர்களால் ஒதுக்கப்பட்டது. சக்தி என்னும் சொல்லை

ஆன்மஇயல் நோக்கில் பாரதியார் பயன்படுத்துகிறார். ஆனால் அச்சொல்லை லோகாயத நோக்கில் காண்கிறார் பாரதிதாசன். இருப்பினும் இரண்டு நோக்குகளும் பெண் என்பது ஒரு உன்னதப்பிறவி என்று நம்புகின்றன. பெண்கள் இந்தப் பழைய சமுதாயத்திலும் ஒரு ஆக்கசக்தியின் இருப்பிடமாக இருக்கக்கூடியவர்கள். 'சக்தி இல்லையேல் சிவன் இல்லை'என்று ஆதிசங்கரர் கூறியதுபோல, பெண் இல்லையேல் மனித சமுதாயம் இல்லை என்ற உறுதியான நம்பிக்கையை ஆழ்மனதில் கொண்ட கவிஞர்கள் இருவரும். 10-10-92ல் வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற தின இதழில் பெண்ணியம் பற்றி ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி நோக்கில், அது பல குறைகள் உள்ளது. கட்டுரையாசிரியர் இந்தியாவில் பெண்ணியம் என்ற கருத்து மேலைநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்கிறார். இந்தியக்குடியரசின் அரசியல் சட்டமே பல கருத்துக்களை முக்கியமாக, ஆங்கில, அமெரிக்க அரசியல் சட்டங்களிலிருந்து பல அம்சங்களை அரசியல் நிபுணர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள். 'கடன்' என்ற சொல் இச்சூழ்நிலையில் பொருளாதாரத்தைச் சேர்ந்தது அல்ல. ஆண், பெண் உடைகள் மேலைக்கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும், டாக்டர் ராதா கிருஷ்ணன் சொன்னதுபோல் **ideas control the world.** உலகத்தை குறுகிய அரசியல் அல்லது சொந்த நோக்கங்கள் கட்டுப்படுத்துவதில்லை. கருத்துக்கள் காலப்போக்கில் பரவும்; சமூகத்தை மாற்றும்; ஆண் பெண்ணில் சமூகவியல் நோக்கை மாற்றும்; இக்கருத்துக்களைச் சார்ந்தது பெண்ணியம். இந்தியச் சமூகத்தில் பெண்களின் அவலநிலையிலிருந்து காப்பாற்றும், சீர்திருத்தும்.

### 5. எழுத்தாளர் - வாசகர் தொடர்பு

இம்முக்கியக் கருத்து இந்நூற்றாண்டில் வலுவான இயக்கமாக மாறினாலும் இதன் எதிரொலிகள் பழமையானவை. ஏற்கனவே கூறியபடி, தலைசிறந்த ஆங்கிலத்திறனாய்வாளர் ஐ.ஏ. ரிச்சர்ஸ் கூற்று இங்குக் கவனிக்கத்தக்கது. ஜான்கீட்ஸின் **Ode to a Nightingale** என்ற மறக்கமுடியாத அற்புதநவிற்சிக்

கவிதைக்கு நூறு வாசகர்கள் இருந்தால் நூறு கவிதைகள் இருப்பதாகக் கொள்ள வேண்டும் என்றார். இதன் உட்பொருள் எழுத்தாளரைப்போல் வாசகருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வாசகர் தன்னுடைய நோக்கில் ஒரு நூலைப் படித்தால் அவர் ஒரு புது நூலையே உண்டாக்குகிறார். இதன் அடிப்படையில் பேராசிரியர் பாலச்சந்திர ராஜன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்காக மில்டனைப் பற்றி டாக்டர் பட்டத்திற்கு எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரையைப் பார்க்கவேண்டும். அதன் தலைப்பு **Milton and the Seventeenth Century Reader** மில்டனும் பதினேழாம் நூற்றாண்டு வாசகரும் என்பது. காலப் போக்கில் மில்டன் பல அவதாரங்கள் திறனாய்வு உலகில் எடுத்திருக்கிறார். இங்கு வள்ளுவரையும், கம்பனையும் போல புதிதாக நுழையும் வாசகர்களுக்கு பலவிதமான, முரண்பட்ட விளக்கங்கள் அவர்களுக்குக் குழப்பத்தையே விளைவிக்கும்.49 இதன் அடிப்படையில் பேராசிரியர் ராஜன், மில்டனைப் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு மில்டன் திறனாய்வுகளைப் பார்க்காமல் அக்கவிதையைப்பற்றி கவிஞரின் சமகால வாசகர்கள் எவ்வாறு புரிந்து கொண்டார்கள் என்ற நோக்கே சிறந்தது என்று வற்புறுத்துகிறார். இதற்கு எதிர்மறையாக இந்நூற்றாண்டில் தோன்றிய புரட்சிக் கவிஞர்களான எஸ்ராபவுண்டு, டி.எஸ்.எலியட் ஆகியோரின் மரபுகளை மீறிய கவிதைகளைப் பார்க்கலாம். பவுண்டு என்ற கவிஞர் முதல் உலகப் போரில் இத்தாலி நாட்டவர்களால் இராணுவத்தார் கூடாரத்தில் அடைக்கப்பட்டார். பீசா (Pisa) என்ற நகரத்தில் அவர் அச்சமயம் Cantos என்ற நீண்ட கவிதையை எழுதித் தனக்கு நேர்ந்த துன்பமான அனுபவங்களை வர்ணித்தார். எதுகை மோனை இன்றி மிகவும் சிக்கலான முறையில் அமைந்த கவிதை இது. இக்கவிதை வாசகர்களுக்குப் புரியவில்லை என்ற குறை எழுந்தபொழுது, அவர் அக்கவிதையின் வாசகர்களுக்குத் துணையாகப் பல பின் குறிப்புக்களைச் சேர்த்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்ற ஆங்கில நாவலாசிரியர் தன்னுடைய நாவல்களை வார ஏடுகளில் தொகுதிகளாக வெளியிட்டுப் புகழடைந்தார். அமெரிக்காவிற்கு

அவருடைய நூல்கள் கப்பல் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான வாசகர்கள் நியூயார்க் துறைமுகத்தில் மணிக்கணக்காக நாவல்களை வாங்குவதற்காகக் காத்திருப்பார்களாம். குறிப்பாக, ஒரு நாவலில் ஒரு கதாபாத்திரத்தின் துன்பமான வாழ்க்கையை மிக உருக்கமாக தனக்கே உரிய பாணியில் விவரித்திருந்தார். வாசகர்கள் துறைமுகத்தில் கூட அடுத்த கட்டத்தில் அவளுக்கு என்ன நடந்தது என்பதை ஆவலுடன் அறியக் கப்பலை எதிர்பார்த்திருந்தனராம். இதன் பின்புலத்தில் வாசகர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும் தொடர்பு நல்லதா அல்லது கெட்டதா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஒருமுகமான பதிலில்லை. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் எட்வர்டு, ஜார்ஜ் மன்னர்கள் ஆட்சியில் வாசகர்கள் சர்வாதிகாரம் இருந்தது. அக்காரணத்தால் வாசகர்கள் மனநிறைவு அடையும் நோக்கத்துடன் எழுத்தாளர் தங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்ற நம்பிக்கை பரவலாகயிருந்தது. இச்சர்வாதிகாரமே ஆங்கிலக் கவிதைகளின் தளர்வுகளுக்குக் காரணம் என்று திறனாய்வாளர்கள் நம்பினர். இந்நிலையை இக்காலத்தில் வார ஏடுகளில் வரும் தொடர்கதைகளில் காணலாம். தொடர்கதையின் வாரமுடிவு காரண, காரிய முடிவிற்கு அல்லது கதையின் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டது. இம்முடிவு வாசகர்களின் உணர்ச்சிகளையோ அல்லது ஆவலையோ தூண்டுவதாக உள்ளது. ஆனால் அடிப்படை உண்மையை உணர்ந்தோமானால், வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ள தொடர்பை ஒதுக்க முடியாது. அத்தொடர்பு முக்கியம் என்ற உண்மையை நாம் அனுமதிக்க வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தே இங்கிலாந்தில் நாவலாசிரியர்கள் கதையோட்டத்தில் திடீரென்று வாசகர்களை விளிப்பார்கள். இப்பழக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் M. தக்கரே (Thackeray - 1811 -63) என்ற நாவலாசிரியரால் பின்பற்றப்பட்டது. புதுமைப்பித்தனும் கல்கியும் இப்பாணியில் விளிக்கிறார்கள். தாக்கரே விரிவாக வாசகர்களை உரையாடல்

பாணியில் தொடர்பு கொள்ளுகிறார். இத்தொடர்பு விரிவாக இருப்பதும் வாசகர்களிடம் நெருக்கமாக உரையாடுவதும் தான் வேறுபாடுகள்.

வாசகர்-ஆசிரியர் தொடர்புத் திறனாய்வைப் பற்றி அதிகாரபூர்வமான கட்டுரைகள் பல எழுதிய ஐஸர் (Iser) என்ற ஜெர்மானிய அறிஞர் கூறுகிறார். "ஒரு திறனாய்வாளனின் கடமை நூலை விவரிப்பதல்ல. அந்நூல் எவ்விதத்தாக்கத்தை ஒரு வாசகருக்கு ஏற்படுத்தியது என்பதே"50 இதை Reader response என்று சொல்லுவர். ஜெர்மானியத் திறனாய்வாளர்கள், பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில நாவலாசிரியர்கள் தங்களுடைய வாசகர்களை விளித்தபொழுதே, முக்கியமாக ஸ்டெர்ன் தன் வாசகர்களை விசித்திரமான கலந்துரையாடல் மூலம் இனம் கண்டு கொண்ட பொழுதே, வாசகர் ஒரு நூலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதில் பங்கு வகிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர். சான்றாக, லா.ச.ராமாமிர்தம் நாவல்களைப் புரிந்து கொள்வது சாதாரண அல்லது பொதுவாசகனுக்குக் கடினம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதற்குக் காரணம் அவருக்கே உரிய தத்துவ நோக்கு. மத நம்பிக்கை, அவர் கல்வியினால் விளைந்த கருத்துக்கள், பொதுவாக, சமூகவியல் நோக்கில் அவருக்கு அமைந்த பின்புலம் எனலாம். இக்காலத்திறனாய்வுக் கொள்கைப்படி, ஒவ்வொரு நாவலாசிரியரும் மனதிற்குள் ஒரு வகை வாசகரை உருவகப்படுத்திக் கொள்கின்றனர். அவ்வாசகர் யார் என்பதை வெளிப்படையாக உறுதி செய்வதில்லை. வாசகர் - நூலாசிரியர் என்ற திறனாய்வுப் பிரிவில் ஆதிக்கம் செலுத்தும் வுல்ஃப்காங்க் ஐசர் (Wolf Gang Iser) இத்தகைய புலனுக்குப் புரியாத வாசகரை implieed Reader என்று சொல்கிறார்.51 வாசகரை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நாவலாசிரியரே மனதிற்குள் உருவகப்படுத்திக்கொள்ளும் வாசகர். மற்றொருவர் வெளியிலிருந்து வரும் வாசகர். இத்தகைய வாசகர் நூலைப்படித்து இன்புறும் எவருமே இருக்கலாம். ஆனால் நாவலாசிரியர் மனதிற்கொள்ளும் வாசகரை implied Reader அடையாளம் கண்டு கொண்டால் நூலைப் புரிந்து கொள்ளலாம்

என்ற இன்றைய நம்பிக்கை வாசகர் - ஆசிரியர் தொடர்பிற்கு அடிப்படை. அறிவுத் திறன் நிறைந்த அடிப்படைக் கேள்விகளைக் கேட்டுத் தன் வாசகர்களைச் சங்கடங்களில் ஆழ்த்தும் ஜெயகாந்தன் வாசகரைப் பொது அறிவில் நம்பிக்கை உள்ளவராகவும் பகுத்தறிவாளராகவும் பழைமைவாதத்தைப் பின்னுக்குத் தள்ளுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று நம்புகிறார். கல்கியின் வாசகர் வரலாற்றியலில் நம்பிக்கை உள்ளவராகவும், ஏகாதிபத்தியத்தை மறுக்கிறவராகவும், காந்தியத்தையும் நாட்டுப்பற்றையும் பின்பற்றுபவராகவும் ஜெயகாந்தனைப்போல வாசகரை முற்போக்கு வாதத்திலல்லாமல், பழமைவாதத்தில் நம்பிக்கை கொள்பவராகவும் இனம் கண்டு கொள்ளுகிறார். வாசகரைப்பற்றிய இம் முருகியல் உண்மையைத் திறனாய்வாளர் மறுக்கும் உண்மை என்று கொள்ள முடியாது. இவ்வாசகரை இனம் கண்டு கொண்டால் ஒரு நாவலின் பல முருகியல் உண்மைகள் வெளிவரும். பகுத்தறிவுவாதம் முற்றிய இந்நாட்களில் பல பொது வாசகர்கள் லா.ச. ராமாமிர்தத்தின் நாவல்களில் குறைகள் பலவற்றைக் காணலாம். ஆனால் அவர் வாசகர் யார் என்பதை இனம் கண்டு கொண்டால் குறைகளை அவர் நாவல் வளத்தில் இன்றியமையாத பகுதிகளாகவே திறனாய்வாளர் கண்டு கொள்வர்.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்ட பொழுது இலக்கியம் என்பதைப் பற்றிப் பல உண்மைகளை அறிந்து கொண்டோம். பழம் பெரும் பல்கலைக்கழகங்களான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் வகுத்த முதுகலைப் பாடத்திட்டங்களை மாதிரியாகக் கொண்டு நமது பல்கலைக்கழகங்களில் சிறப்பு முதுகலை வகுப்புகளின் (Honours Classes) மூலம் இலக்கியக்கலையை மாணவர்களுக்குப் பாடங்களாகப் புகட்டினோம். இதற்கு ஆங்கில முதுகலை வகுப்பே முன்மாதிரியாகயிருந்தது. இதன் விளைவாகத் திறனாய்வும் வளர்ந்தது. ஆனால் திறனாய்வில் முழுநம்பிக்கை வளரவில்லை. இதனால் இலக்கிய ஆராய்ச்சி வளரவில்லை.52 பின்னர் அமெரிக்கக் கல்வி நிலையத்தின் (U.S.Educational Foundation in India) உதவியுடன் அமெரிக்க இலக்கியம் பாடமாக முதுகலை வகுப்புகளில் புகுத்தப்பட்டது. இதை அடுத்து அமெரிக்க அறிஞர்கள் இந்தியாவில் பல இடங்களில் மிகப் பயனுள்ள இலக்கியக் கருத்தரங்குகளைப் பெரு நகரங்களில் நடத்தினர். பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களை இக்கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்து, திறனாய்வுக் கொள்கைகளைப் பயிற்றுவித்தனர். அமெரிக்க செனட் உறுப்பினர் புல்ப்ரைட் fulbright பெயரில் ஏற்படுத்திய மேற்கல்வி உதவித்திட்டதின் மூலம் பல ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து மேல்படிப்பிற்காக ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு அனுப்பினர்.53 இதன் விளைவாகத் திறனாய்வுக் கொள்கைகளில் நம்பிக்கை வளர்ந்தது. முக்கியமாக, திறனாய்வுக் கொள்கைகளைப் புறக்கணித்தால் இலக்கியத்தின் கட்டமைப்பையும் உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ளமுடியாது என்ற கொள்கை அறிவுலகத்தில் வளர்ந்தது.

இலக்கியக் கொள்கைகளைப் பொறுத்தமட்டில், அமெரிக்க நாடும் கீழை ஐரோப்பிய நாடுகளுக்குப் பின் தங்கியிருந்தது. சர்வாதிகார ஆட்சியின் கொடுங்கோலைத் தாங்க முடியாமல் பல அறிஞர்கள் தங்கள் நாடுகளை விட்டு வெளியேறி

அமெரிக்காவில் குடி புகுந்தனர். அவர்களில் ஒருவர்தான் ரெனெவெல்லக். இவர் தன்னுடன் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த ஆஸ்டின் வாரனுடன் (Austen Warren) சேர்ந்து கூட்டு முயற்சியுடன் 'இலக்கியக் கொள்கை' Theory of Literature என்ற நூலை எழுதித் திறனாய்வு உலகில் ஒரு புரட்சியையே உண்டாக்கினார். இதனால் இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும் கொள்கைகள் இன்றியமையாதது என்ற நம்பிக்கை வேரூன்றியது. இதற்குப்பிறகு இலக்கிய அறிவு (Literary scholarship) என்பதைப்பற்றி அமெரிக்க மொழிக் கழகம் (The Modern Language Association of India) நியூயார்க் நகரத்திலிருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது.54 இத்துண்டுப் பிரசுரத்தில் இலக்கிய அறிவு பல பிரிவுகள் அடங்கியது. இப்பிரிவுகளைக் கீழே பார்ப்போம்.

இலக்கிய அறிவைப் பற்றிய துண்டுப் பிரசுரத்தில் அதன் தொகுப்பாசிரியர்கள் இந்நூல் முதன் முதல் 1952-ல் வெளியிட்ட முன்னுரையில் அதன் முக்கிய நோக்கத்தைக் கைவிடவில்லை. இப்பிரசுரத்தின் நோக்கம் ஒரு அறிவாளியை உருவாக்குவது. அறிவாளி என்றால் இலக்கிய அறிவைப் பற்றிய தொழில்நுட்பச் செய்திகளையும் அச்செய்திகள் அடங்கிய கீழ்க்கண்ட பிரிவுகளையும் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. அறிஞன் என்பவன் கவிஞனைப் போல இயற்கையாகத் தோன்றியவன் அல்ல. அவன் கடுமையான உழைப்பின் விளைவு. 'முயற்சி திருவினையாக்கும்' என்பது பழமொழி.

இறுதியாக, இத்துண்டுப் பிரசுரத்தைப் பற்றி ஒரு முக்கிய செய்தி குறிப்பிட வேண்டும். முதன் முதலில் 1952-ல் ஜேம்ஸ் தோரப் (James Thorpe) என்ற அறிஞரின் மேற்பார்வையில் இது வெளியிடப்பட்டது. 1981-ல் ஜோசப் கிபால்டி (Joseph Gibaldi) என்பவரின் கீழ் திருத்தி வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளை முதன் முதலில் எழுதிய அறிஞர்களுக்குப் பின் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியை

மனதில் கொண்டு வேறு அறிஞர்கள் இக் கட்டுரைகளைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். சான்றாக, நார்த்ராப் ஃப்ரை (Northrop Frye) எழுதிய இலக்கியத்திறனாய்வுக் கட்டுரையை லாரன்ஸ் லிப்கிங் (Laurance Lipking) என்பவர் மறுபரிசீலனை செய்திருக்கிறார். மேலும் கொள்கைகள் இக்காலத்தில் முக்கியத்துவம் அடைந்துவிட்டதால் இலக்கியக் கொள்கை (Literary theory) என்பதும் வாசகர் - ஆசிரியர் என்ற கருத்து, திறனாய்வு உலகில் நுழைந்துவிட்டதால் (The Scholar in society) அறிஞருக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய செய்திகள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## *மொழியியல்* (Linguistics)

பழைய ஆங்கில முதுகலை வகுப்புகளில் மொழியியல் இடம் பெறவில்லை. அதை முதிர்ச்சியடைந்த பாடமாகவும் இனம் கண்டு கொள்ளவில்லை. ஆசிரியர்கள் பழமைவாதிகளாக இருந்ததால் குறிப்பாக இலக்கியத்தில் முழு நம்பிக்கை கொண்டிருந்ததால், மொழியின் விஞ்ஞான அறிவு திறனாய்விற்குப் பயன்படாது என்று நம்பினர். இந்தியாவைப் பொறுத்தவரை, இலக்கியம், மொழியியல் என்ற கல்விப் பாடங்களுக்கு இடையே இடைவெளி இருப்பதாக உள்ள நம்பிக்கை ஆங்கில ஆசிரியர்களை இரண்டு கட்சிகளாகப் பிரித்துவிட்டது. இவ்விடைவெளி ஆங்கில மொழியைக் கற்பிப்பது எப்படி என்ற அறிவுக் கொள்கை பாடத்திட்டத்தில் புகுத்திய பிறகு பல சிக்கல்கள் உண்டாகின. இத்திட்டத்தின் கொள்கைகள் நம் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டபிறகு ஆங்கில முதுகலை வகுப்புகளில் இலக்கியவாதிகளுக்கும் மொழியியல் அறிஞர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன. குறிப்பாக, அமெரிக்க மொழியியல் அறிஞர் ப்ளூம் பீல்ட் (Bloom field) ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கோ அல்லது தெரிந்து கொள்வதற்கோ இலக்கண அறிவு தேவையில்லை ; வாக்கிய அமைப்பு அறிவுதான் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய பொழுது இக்கொள்கை நம் நாட்டில் ஆங்கில மொழியைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும்

அடிப்படைக் கொள்கையாகிவிட்டது. இதற்கு இன்னொரு காரணம், ஆங்கில இலக்கணம் தனது கொள்கைகளைச் செவ்வியல் இலக்கணத்திலிருந்து கடன் வாங்கியது தான். ஆகையினால் வெகு காலமாகப் பயின்று வரும் ஆங்கில இலக்கணம் மொழியைக் கற்றுக்கொள்வதற்கு உதவி செய்யாது என்ற நம்பிக்கைதான். இப்பின்புலத்தில் நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் இலக்கிய நம்பிக்கையை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். வட மொழியில் 'அ'கரத்திலிருந்து க்ஷகரம் வரை பராசக்தியின் அம்சம் அறுபத்து நான்கு கலைகளில் பதினெட்டு மொழிகளையும் பயில்வதும் அடங்கும்.56 வள்ளுவர் 'அகர முதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று வள்ளுவத்தைத் தொடங்குகிறார். பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் நம்பிக்கையை யூங்கின் நனவிலியுடன் தொடர்புபடுத்துவதால் அதை ஒதுக்கிவிடமுடியாது. மக்களுக்கு உணவு கொடுக்கும் வயல்களில் விதைவிதைத்த உடன் நெல்லைப் பெற முடியாது. முளைத்த நாற்றுக்களை வேறு வயல்களில் நட்டு முதிர்ந்தபின் அறுவடை செய்ய வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் (Transplantation) என்று பெயர். பிற இலக்கியங்களிலிருந்து கருத்துக்களை நம் இலக்கியத்திற்கு நேரே இறக்குமதி செய்ய முடியாது. சூழ்நிலைக்கு உகந்தவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். ஆங்கில மொழி பயில்வதற்கு அந்நிய மாணவர்களுக்கு இலக்கணம் வேண்டாம் வாக்கிய அமைப்பு அறிவே போதும் என்ற கொள்கைக்கு மொழியியல் தான் காரணம் என்பது ஆங்கிலத்துறையில் ஒரு சிக்கலை உண்டாக்கிவிட்டது. இச்சிக்கல் தமிழ்த்துறையில் இல்லை. மொழியிய்லை வரவேற்றார்கள். ஆனால் மொழியியலைப் பயில்வதற்கு ஆங்கில மொழி இன்றியமையாதது என்பது உண்மை. தமிழ் மொழியியல் அறிஞர்கள் ஆங்கில மொழியைத் தள்ளிவிட முடியாது.57

மொழியியலுக்கும் இலக்கியத்திற்கும் நடந்த சொற்போரில் மொழியியல் கொள்கைகள் கவிதை விளக்கத்திற்குத் திறனாய்வைவிட எவ்வளவு பயன்படும் என்ற

சிக்கல் முற்றுப் பெறவில்லை. மொழிக்கும் அது சொற்களின் மூலம் சுட்டிக்காட்டும் பொருளுக்கும் உள்ள தொடர்பு என்பதைப் பற்றி சசூரின் மொழிக் கொள்கையிலிருந்து அமெரிக்க எழுத்தாளர் எமர்சன் வரை உள்ள விளக்கங்களை ஏற்கனவே பார்த்தோம். இங்கு ஐ.ஏ. ரிச்சர்ட்ஸுக் கும் ரோமன் ஜேகப்ஸனுக்கும் உண்டான அறிவுப் போரை வாசகர்களுக்கு நினைவுபடுத்துக்கிறேன். ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் உலகத்திற்குப் பல அற்புத நாடகங்களை மேடையேற்றிக் கொடுத்தாலும் அவர் பதினான்கடிப்பாடல்களை எழுதுவதில் விற்பன்னர். அவருடைய நாடகத் தொகுப்பில் எல்லா வெளியீடுகளின் இறுதியில் இச்சுருக்கப் பாடல்கள் இருக்கும். ே□க்ஸ்பியரைப் பற்றி அவரது வாழ்க்கை மூலம் வந்த செய்திகள் எல்லாம் உண்மைகள் அல்ல. கதைகளும் கட்டுரைகளும் உண்டு. இருந்தும் இங்கிலாந்தில் உள்ள திறனாய்வாளர்கள் அவருடைய வாழ்க்கையைப் பற்றிச் சேகரித்துள்ள செய்திகளை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து அவருடைய கல்வியைப் பற்றிப் பல ருசிகரமான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். பால்ட்வின் (Baldwin) ஒரு பெரிய புத்தகமே எழுதிவிட்டார். இது ஆதார பூர்வமான நூல் என்று கருதப்படுகிறது. இந்நூல் வெளிவருவதற்கு முன் ஷேக்ஸ்பியர் பள்ளிக்கூடப் படிப்பை விட்டு மேலே செல்லவில்லை. இப்பின்புலத்தில் எப்படி அவர் உலகத்திலேயே பெரிய நாடகங்களை எழுதியிருக்க முடியும் என்றனர். அமெரிக்காவிலுள்ள பழக்கத்தில் ஒரு பெரிய நடிகரோ அல்லது நடிகையோ தன் வாழ்க்கையைப் பற்றி எழுத ஒரு எழுத்தாளரை அமைத்துக் கொண்டால் அவரை மறைவு எழுத்தாளர் (ghost writer) என்று கூறுவதுண்டு. ஆங்கில நாடகாசிரியரின் கைப்பிரதிகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகையினால் ஷேக்ஸ்பியர் திறனாய்வு உலகில் கற்பனை நுழைந்தது. அதன்படி இப்பெரிய நாடகங்களைப் பள்ளியிலிருந்தே வெளிவராத இவர் எழுதியிருக்க முடியாது. ஒரு எழுத்தாளர் மறைமுகமாக எழுதியிருக்க வேண்டும் என்றனர். இதற்கு நாடகாசிரியருக்குப் போட்டியாளராக வந்தவர்கள் அவருடைய சமகாலத்தவர்களான பேகன் (Bacon) என்ற

கட்டுரையாளர் மார்லோ (Marlowe) என்ற நாடகாசிரியர் பற்றி இதன் அடிப்படையில் பல (நகைச்) சுவையான செய்திகள் வெளிவந்தன. இவ்விவாதத்தில் கலந்து கொண்ட ஒரு அமெரிக்க அறிஞர் மார்லோவின் கல்லறையில்தான் ஷேக்ஸ்பியரின் கைப்பிரதிகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றார். அதைத்தோண்டி எடுப்பதற்கு அவர் அமெரிக்காவிற்கே உரித்தான விளம்பரத்துடன் நியூயார்க்கை விட்டுக் கிளம்பினார். அதற்குப் பிறகு பத்திரிகையாளர்களே அவரைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. பதினான்கு அடிப்பாடல்களில் சில பாத்திரங்கள் வருகின்றன. வழக்கப்படி, கவிஞன் தன் காதலியைத்தான் முக்கியப் பாத்திரமாகக் கருதுவான். அவளுடன் காதல் மொழியில் பேசுவான். ஷேக்ஸ்பியர் காலத்தில் காதல் கடிதங்களுக்குப் பதிலாகப் பதினான்கடிப் பாடல்களைப் பரிமாறிக் கொள்ளுவார்கள். ஷேக்ஸ்பியரின் சிறு கவிதைகளில் வரும் காதலி யார் என்ற கேள்வி எழுந்தது. இதற்கு உறுதியான பதில் கிடைக்காததால் (the dark Lady of the sonnets) பதினான்கடிப் பாடல்களின் மர்மமான பெண் என்று திறனாய்வாளர்கள் கூறுவார்கள்.

ரோமன் ஜேகப்பஸன் மாஸ்கோ மொழியியல் கழகத்தில் உறுப்பினர். ப்ராக் கழகத்தின் நிறுவனர் என்றும் ஏற்கனவே அறிவோம். அவர் கொள்கைப்படி மொழியியலின் பிரிவே இலக்கியம் என்பது. பேராசிரியர் ஜேகப்சன் ே□க்ஸ்பியரின் பொறுக்கி எடுத்த குறுகிய பாடல்களை மொழியியல் நோக்கில் தன் கொள்கைப்படி விளக்கினார். இதன் நோக்கம் மொழியியல் கொள்கைப்படி எப்படித் திறனாய்வு செய்வது என்பதே. இவர் கட்டுரை வெளிவந்தவுடன் திறனாய்வு உலகத்தின் கவனத்தை கவர்ந்தது. ஆனால் ரிச்சர்ட்ஸ் அவருடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கண்டித்தார். அக்காலத்தில் மொழியியல் வளர்ச்சியடைந்து மற்ற களங்களை நெருங்கவில்லை. இப்பொழுது சமூகவியல், உளவியல் போன்ற ஒழுங்குமுறைகளுடன் இணைந்து வருகிறது. திறனாய்வில் உளவியல் வளர்ச்சியடைந்து வருவதால் கவிஞனின் ஆழ்மனதை ஆராய்வது, ஒரு மீனவர் கடலுள் மூழ்கி முத்து எடுப்பது போல.

இதற்கு (depth psychology) ஆழ் உளவியல் என்று பெயர். எழுதுபவனின் மனதை அடைவது மொழியின் மூலமாகவோ அல்லது எண்ணத்தின் மூலமா? மொழி என்பது எண்ணத்தின் எதிரொலி என்றாலும் அம்மொழி எண்ணத்தின் மறு அச்சா? மறு அச்சு என்றால் மூளையின் பங்கு என்ன? ஒரு எழுத்தாளன் கற்பனையைப் பயன்படுத்துவான். சாதாரணமான மொழியைப் பயன்படுத்துபவன் அல்ல. ரஷ்ய அமைப்பியல் திறனாய்வாளர்கள் சொல்லுவது போல, மொழியைச் சிதைத்து அந்நியமாக்குகிறான். இதற்கு கோல்ட்ரிட்ஜின் கூற்றுப்படி, கவிதை கற்பனையின் இரண்டு பிரிவுகள் அல்லது கற்பனைக்குக் கீழான போலிப் புனைவு (Fancy) என்ற அமைப்பில் எதில் அடங்கும்? இக்கேள்விகளுக்கு உறுதியான விடைகள் திறனாய்வாளர்களோ அல்லது மொழியியல் நிபுணர்களோ கொடுக்கவில்லை. ஆனால் இலக்கிய மொழியை மொழியியல் நோக்கில் ஆராய்ந்தால் திறனாய்வுக்குள் அடங்காத பல உண்மைகள் தெரிந்து கொள்ள உதவும். இன்றைய நிலையில் மொழியியலை ஒதுக்கிவிட முடியாது.

### *மூல பாடத்திறனாய்வு*

மூல பாடத்திறனாய்வுக் (Textual Criticism) கொள்கை இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியது. இதற்கு ஆதாரம் ே□க்ஸ்பியரின் நாடகங்களின் முதல் தொகுப்பு. இது 1626 இல் வெளிவந்தது. இதே முறையில் தொடர்ந்து பிற தொகுதிகள் வெளிவந்தன. இந்த வெளியீட்டிற்கு Folio என்று பெயர். இது இத்தொகுதியின் பரப்பைக் குறிக்கிறது. இதற்கு முன்பு Folio வை விட குறைந்த பரப்பில் ஒவ்வொரு நாடகமும் தனித்தனியாக அனுமதியில்லாமல் வெளியிடப்பட்டன. அக்காலத்தில் அச்சிடும் உரிமை பற்றிய சட்டம் இல்லை. அச்சுக்கலை ஷேக்ஸ்பியர் காலத்தில் உயர்ந்ததாக இல்லாததால் பாட பேதங்கள் நிறைய இருந்தன. வில்லியம் ஜாகார்டு (William Jaggard) என்பவரும் அவருடைய மகனும்தான் நாடகங்களின் பிரதிகளை ஷேக்ஸ்பியர் அனுமதியோடு வெளியிட்டனர். அதற்குப்பிறகு வெளிவந்த

பிரதிகள் Quarteos என்று பன்மையில் அழைக்கப்படும். அச்சுக்கலை தெரியாத நாட்களில் ஷேக்ஸ்பியரின் நாடகப் பிரதிகள் அச்சுப்பிழைகள் நிறைந்தனவாயிருந்தன. ஷேக்ஸ்பியர் தன்னுடைய நாடகக் கவிதைகளைச் சீர் இல்லாத நடையில் எழுதினார். அச்சுக்கூடத்தினர் கல்வி அறிவில் குறைந்த சிறுவர்களை அச்சுக்கோர்க்கப் பயன்படுத்தினர். அவர்கள் மூலத்தை உணர்ந்து அச்சுக் கோர்க்காமல் இயந்திரகதியில் அச்சேற்றினர். சில சமயங்களில் கவிதைகள் உரைநடையாகவே மாற்றி அச்சடித்தனர். ஒரு பக்கத்தில் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு விரிந்த வரியை மனம் போன போக்குப்படி உடைத்து அச்சிட்டனர். அச்சுக்கோர்ப்பவருக்குச் கல்வி அறிவு இல்லாததால் அச்சுப்பிழைகள் மலிந்து இருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் நிகோலஸ் ரோ (Nicholas Rowle) என்பவர் தான் திறனாய்வாளர்கள் இனம் கண்டு கொண்ட முதல் பதிப்பாசிரியர். இருபதாம் நூற்றாண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணி செய்த ஆர்தர் குவில்லர்கூச்சும் (arthur Quilarcouch) அவருக்குப் பின் வந்த டோவர் வில்ஸனும்தான் (Doverwilson) இந்த நூற்றாண்டின் புகழ் பெற்ற பதிப்பாசிரியர்கள். அமெரிக்காவைச் சார்ந்த பர்னஸ் (furnus) முதன் முதல் Variorum என்ற முழுநிறை உரைப்பதிப்பைக் கொண்டுவந்தார். ஷேக்ஸ்பியர் காலத்திய பதிப்புகள் அச்சுப்பிழைகள் நிறைந்திருந்தால் பதிப்பாசிரியர்கள் பிழைகளைத் திருத்தி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களைச் சொல்விற்குச் சொல் அச்சுப்பிழை நீக்கி வருகிறார்கள். இந்நூற்றாண்டின் முதற் பகுதியில் ஒரு அமெரிக்க அறிஞர் கணிப்பான் மூலமாக ஷேக்ஸ்பியரின் அச்சிடப்பட்ட பலபதிப்புகளை ஒன்று சேர்த்தார். இதுதான் அண்மைக்காலத்திய ஷேக்ஸ்பியர் நாடகங்களின் தொகுப்பு. அச்சிட்ட ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஆழ்ந்த அறிவுடைய அமெரிக்கப் பதிப்பாசிரியர் ஒவ்வொரு நாடகமும் ஒரு பிழையும் இல்லாமல் அவர் சொற்களை எழுதின மாதிரியே அவைகளை வெளியிட வேண்டும் என்ற விருப்பம் தெரிவித்திருக்கிறார். இதற்கு இருநூறு ஆண்டுகள் ஆகும் என்கிறார்.

இப்பின்புலத்தில் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் தன்னுடைய தள்ளாத வயதிலும் பிரயாண வசதி இல்லாமல் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் சென்று பழைய தமிழ் நூல்களின் ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்துப் பதிப்பித்து வெளியிட்டார். ஐயர் அவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்த சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் தமிழ் இலக்கியத்திற்கு அரிய தொண்டு செய்தவர்கள். தாமோதரம் பிள்ளை அவர்கள் சுவடிகளைச் சோதித்து எழுத்துக்களைப் புரிந்து படித்துப் பலநூல்களை அச்சிட்டார். அச்சுவடிகளின் அவலநிலையை விவரிக்கிறார். கையில் எடுத்தவுடன் ஏடு இரண்டு துண்டாக விழுந்து விடுமாம். சுவடிகள் பல ஆண்டுகள் கவனிக்கப்படாமலிருப்பதால் எழுத்துக்கள் தெளிவாகயில்லை. மங்கியிருக்கின்றன. தாமோதரம் பிள்ளையின் ஒப்பற்ற பதிப்பாசிரியப் பணியைத் தமிழ்நாட்டு அறிஞர்கள் ஒதுக்கிவிட்டார்கள் என்பதை நியாயப்படுத்துகிறது.

உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் மேலை நாட்டில் வளர்ந்த மூலபாடத் திறனாய்வையும் அதனுடைய விதிகளையும் அறிந்திருந்தாரா என்பது கேள்வி. சி.வை. தாமோதரம் பிள்ளை மேலை இலக்கியத்திற் பரிச்சயம் இருந்ததினால் அவருக்குள்ள மூல பாடத்திறனாய்வுத் தொடர்பு ஆராய்ச்சிக்குரியது. ஆயினும் ஆராய்ச்சி மாணவர்கள் ஒரு சங்கடமான கேள்வியை எழுப்பலாம். பல நூற்றாண்டுகளாக ஓலைச் சுவடிகளைப் பலரும் படிவம் எடுத்துச் சந்ததி சந்ததியாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர். இதில் மூலப்படிவம் எது என்று எப்படி நிர்ணயிப்பது? இந்நிலையில் அச்சிட்ட பதிப்புக்களில் இடைச்செருகல்களை எப்படிப் பரிசோதிப்பது. இதற்கு விடையளித்திருக்கிறார், கிரெக் (W.W.Greg). இவர் மேலை நாட்டிலேயே மூல பாடத்திறனாய்வில் மிகப் பெரியவர்.58 சான்றாக, சுந்தரம் பிள்ளையின் 'மனோன்மணியம்' என்ற நாடகத்திற்குப் பல அச்சுப் பதிப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. அவருடைய கைப் பிரதி கிடைத்தால் இப்பொழுது அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய பதிப்பை எப்படி வெளியிடுவது, என்பது ஆய்வுக்குரியது. பல்வேறு அச்சுப்

பிரதிகளைச் சேகரித்தபின் அச்சுப் பிழைகளை கவனமாகப் படித்து நீக்கவேண்டும். இதற்குத் திறனாய்வாளருக்குச் சுந்த□□பிள்ளை மொழி நடையிலும் அவர் பயன்படுத்தும் சொற்களிலும் மிகக் புலமை வேண்டும். இந்நாடகாசிரியருடைய கைப்பிரதிகள் 59 கிடைப்பது அரிது. அதற்கு ஒரு நிபுணர்குழு சேகரித்த அச்சுப் பிரதிகளை எல்லாம் நுணுக்கமாக சோதித்து எந்தப்பிரதி சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய நாடகத்தின் கைப்பிரதிக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதை நிர்ணயிக்க வேண்டும். அப்பிரதியைத் தான் அச்சிட வேண்டும். அப்பிரதிக்கு Copy Text அல்லது மூலப்படிவம் என்று கிரெக் பெயர் சூட்டினார். இப்பொழுது இம்முறை கைப்பிரதியில்லாத ஆசிரியரின் நூல்களுக்குப் பின்பற்றப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லாம் New Cambridge Edition என்று சொல்லப்படுகின்றன பதிப்பில் டோவர் வில்ஸனால் அச்சிடப்பட்டது. ஆங்கில நாடகாசிரியரின் முதல் தொகுப்பிலிருந்தே பதிப்பாசிரியர்கள் அச்சுப் பிழைகளைத் திருத்தி வந்தனர். இவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் திபால்டு Theobald என்ற அறிவுக் கூர்மையும் கற்பனையும் உடையவர். இவர் அலெக்சாந்தர் போப் என்ற அங்கதக் கவிஞரின் கோபத்திற்கு இரையானவர். மூலபாடத்திறனாய்வுக் கொள்கைகளே ஒன்றும் தெரியாமல் ஷே□க்ஸ்பியர் நாடகத் தொகுப்பைத் திருத்தங்களுடன் போப் வெளியிட்டார். அங்கதக்கவிதை எழுதுவதில் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த போப்பின் பதிப்பில் உள்ள பிழைகளை திபால்டு சுட்டிக் காண்பித்தார். அதனால் போப் எழுதிய முட்டாள்கள் காவியம் (The dunciad) என்பதில் முட்டாள்களை உலகத்திற்கு அரசனாகப் பட்டம் சூட்டினார். திபால்டு பல மறக்கமுடியாத திருத்தங்களை ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்குச் செய்தார்.

1920 வரையில் ஷேக்ஸ்பியர் தான் எழுதினாரா என்ற சர்ச்சை இருந்து வந்தது. எலிஸபெத் ராணி காலத்தில் ஷேக்ஸ்பியர் மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு நாடகத்தை எழுதினார். அதன் பெயர் சர்தாமஸ் மூர் (Sir Thomas More)

என்பது. உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் நூல் நிறுவனத்தில் (The British Museum) பணி செய்து கொண்டிருந்த அறிஞர் ஏ.டபிள்யூ.பொல்லார்டு (A.W.Pollard) என்பவர் இந்நாடகத்தின் கைப்பிரதியைக் கண்டுபிடித்தார். இரண்டு பக்கங்கள் அந்நாடகாசிரியரின் கையால் எழுதப்பட்டன. ஷேக்ஸ்பியரின் சட்ட ஆவணங்களில் நாடகாசிரியரின் கையெழுத்தை ஆராய்ந்த நிபுணர்கள் பலர், பொல்லார்டு, டோவர் வில்ஸன் உட்பட, ஷேக்ஸ்பியரின் கையெழுத்தைப் பற்றி ஒரு குறிப்பை வெளியிட்டு அவர் நாடகம் எழுதக்கூடியவர் என்பதை உறுதி செய்தனர். அவர் கையெழுத்து இத்தாலிய எழுத்துக்கள் போல் இருக்கும். அச்சுக் கோர்ப்பவர்கள் ஷேக்ஸ்பியர் நாடகத்தை எப்படி அச்சிட்டார்கள் என்பதை ஏற்கனவே பார்த்தோம். டோவர் வில்ஸன் ஷேக்ஸ்பியர் எழுதிய ஒவ்வொரு எழுத்தையும் கூர்ந்து நோக்கியவர். அவருடைய a,u,o,i என்ற எழுத்துக்கள் ஒரே மாதிரியாக இருக்கும் என்று நாடகாசிரியர் கைப்பிரதி விற்பன்னர்கள் கூறுவர். பேராசிரியர் டோவர் வில்ஸன் நாடக அச்சுப் பிரதியின் ஒருவரியில் பிழையிருந்தால் அவ்வரியை நாடகாசிரியர் எழுதுவது போல எழுதிக் கல்வியறிவில்லாத ஷேக்ஸ்பியர் காலத்து அச்சுக் கோர்ப்பவர்கள் ஒரு பிழையை எப்படி உண்டு பண்ணியிருப்பார்கள் என்பதை ஊகம் மூலம் நிர்ணயித்து இச் சொல்லைத்தான் எழுதியிருப்பார் என்று கூறுவாராம். இம்முறை பிழைகளிலிருந்து பதிப்பாசிரியரைக் காப்பாற்றினாலும் இவருடைய நூதன பிழைத்திருத்தம் சரியா அல்லது பிழையா என்ற கேள்வியையும் எழுப்பியது.

தொல்காப்பியத்திற்கு இவ்விதமான நிலைமை இல்லை. உரையாசிரியர்கள் சொல்லுக்குச் சொல் விளக்கம் கொடுத்து மூல பாடத்தைப் காப்பாற்றினர். நம்பகமான மூல பாடம் தமிழ் இலக்கியத்தின் மிகப் பழமையான நூலுக்கு இருக்கிறது. ஆனால் உரையாசிரியர்கள் தொல்காப்பியம் எத்தனை வரிகளில் ஆசிரியர் எழுதினார் என்பதில் வேறுபட்ட கருத்துடையவர்களாய் இருக்கின்றனர் சில உரையாசிரியர்கள். இரண்டு வரியுள்ள சூத்திரங்களை மூன்று வரிகளாக மாற்றியுள்ளனர். மூல பாடத்திறனாய்வில் இன்றியமையாத விதி

ஒன்று உண்டென்றால் எழுத்தாளரின் கைப்பிரதிக்கும் அச்சிட்ட நூலுக்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்வது. எழுத்துப்பிழை என்பது தமிழில் அச்சிட்ட நூல்கள் பலவற்றிலும் காணப்படுகிறது. எழுத்துப்பிழைகள் எழுத்தாளனின் மூல பாடத்தைப் பிரித்து விடுகிறது. நம்பத் தகுந்த அச்சுப்பிரதி என்றால் கைப் பிரதிக்கு மிக நெருங்கியதாக இருக்க வேண்டும். இதில் பாரதி பதிப்பாசிரியர்கள் ஒரு மன்னிக்க முடியாத பதிப்பு முறையைக் கையாண்டான். பாரதியின் 'தாயின் மணிக்கொடி' என்ற பாட்டிற்கு அதே தலைப்பைக் கொடுத்தார்கள். கவிஞர் கொடுத்த தலைப்பு 'மாதாவின் த்வஜஸ்தம்பம்'. ஒரு கவிஞனுக்கு எம்மொழியையும் கையாளும் உரிமை உண்டு. பாரதி கொடுத்த தலைப்பு நாட்டுக் கொடியை எப்படி மதிக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. தாயின் மணிக்கொடி பாரதமாதாவின் கோயிலில் பறக்கும் கொடியைப் போன்று புனிதமானது. பதிப்பாசிரியர் ஒரு எழுத்தாளரின் கைப்பிரதியை அச்சில் மாற்றுவது மன்னிக்கமுடியாத குற்றம்.

## இலக்கிய வரலாறு

அமெரிக்கக் கழகத்தின் துண்டுப் பிரசுரத்தில் 'இலக்கிய வரலாறு' என்பதை (Historical scholarship) வரலாற்றுப்புலமை என்று கூறுகிறார்கள். இதன் நோக்கம் இலக்கிய வரலாற்றையும் வரலாற்றியலையும் இணைப்பதே. ஒரு நாட்டு வரலாறு அடங்கிய பிரிவுகளைக் காரண காரியத்தொடர்பைக் கொண்டு விளக்க வேண்டும் என்பதே. அதைப் போல இலக்கிய வரலாற்றுக்குள் உள்ள காலங்களை அரசர்கள் அல்லது எழுத்தாளர்கள் மூலமாகப் பாண்டியர் காலம், சோழர் காலம், வள்ளுவர் காலம் என்று அழைத்தாலும் கூட இலக்கிய வரலாறு ஒரு கதையமைப்பு போல் 'முன்னொரு காலத்திலே' என்ற பாணியைப் பின் பற்றுகிறது. பிற்காலம் முற்காலம் என்று ஒன்றுக்கொன்று இணைந்து வரும் பிரிவுகள் இயந்திரகதியாக தோன்றுவதில்லை. காலங்களுக்குப் பிறகு வரும் இலக்கிய அறிஞர்கள் அவைகளை விஞ்ஞான முறையில் பிரித்துத் தர்க்க ரீதிநோக்கில் காலங்களைத் தொடர்புபடுத்துகிறார்கள். சான்றாக,

பாரதி காலம் என்பது கவிதை வாசகர்களுக்குப் புரியாமல் பண்டித நடையில் வழக்கிழந்த சொற்களைப் பயன்படுத்தி வாசகர்களைப் பயமுறுத்துவதில்லை. பொதுமக்களுக்கும் புரியும்படியான மாழியைப் பயன் படுத்தினார். இதில் அவர் முன்னோடி என்று கூறினாலும் அவர் காலத்தில் உண்டான எளிய நடை அல்ல. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே கோபாலகிருஷ்ண பாரதியும் ராமலிங்க சுவாமிகளும் அந்நடையைப் கையாண்டனர். பாரதி ஒரு படி முன்னேறினார். இவர்களுடைய கவிதைகளைப் படித்ததுமின்றி எளிய நடையில் எழுதுவது எப்படி என்று ஆங்கில அற்புத நவிற்சிக் கவிஞர்களான வேட்ஸ் வொர்த், பைரன் போன்ற கவிஞர்களிடமிருந்து எளிய நடை எழுதும் உத்தியைக் கற்றுக்கொண்டார். அதற்கு மாறாக, அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனுடைய எதுகை, மோனை அற்ற கவிதைகளில் மனதைப் பறி கொடுத்ததுமல்லாமல் தாகூரின் மொழி பெயர்ப்பான 'கீதாஞ்சலி' யையும் அறிந்திருந்தார். இதன் விளைவாக அவர் 'வசன கவிதை' முன்னோடி. இது வரையில் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் 'வசன கவிதை'க்கும் 'புதுக்கவிதை'க்கும் உள்ள இணைப்பையோ அல்லது 'புது' என்ற சொல்லின் முருகியல் நோக்கையோ விளக்கவில்லை. 'புதுக்கவிதை' அதன் முன்னோடியான பாரதியிலிருந்து எப்படி வழுவிற்று என்ற கேள்விக்கும் இலக்கிய வரலாற்றில் பதில் இல்லை. புதுக்கவிதை என்பது சொற்கலையிலும் உருவகத்திலும் ஜப்பானியக் கவிதை ஹைகு, டாங்காவை நெருங்குகிறது. ஆனால் அமைப்பில் இல்லை. பாரதி விளக்கும் ஜப்பானிய கவிதையைப் பற்றிய கட்டுரை பெரிய சாமித்தூரன் தொகுத்த பாரதித்தமிழ் (1953) என்ற நூலில் உள்ளது. இக்கட்டுரைக்கும் 'புதுக்கவிதை' க்கும் என்ன தொடர்பு? அல்லது தொடர்பு இல்லையா? இம்மாதிரி எதுகை மோனை அற்ற கவிதைகளைத் தொடங்கியவர்கள் டி.எஸ். எலியட்டும் எஸ்ரா புண்டும் ஆவர். இவர்களுடைய சாயலே புதுக்கவிதையில் இல்லை. புதுக்கவிதைகள் அங்கதக்கவிதைகளை நெருங்குகின்றன. இவ்வங்கதமுறை பதினெட்டாம் நூற்றாண்டில் சமூகத்தையும் தனி மனிதர்களையும்

சாடிய அலெக்சாண்ர் போப், ஜான் ட்ரைடன் ஆக்கங்களை நினைவு படுத்துகின்றன. ஆகையால் 'புது' என்ற சொல் 'கவிதை' என்ற சொல்லுடன் இணைந்து கொண்ட பொழுது, அதற்கு அகராதிப் பொருள் இல்லை. கவிதையில் தமிழ் கவிதை மரபில் எதுகை மோனையை அகற்றியதால் வந்த ஒரு வெளிப்பாடு. இதுவும் கூட எலியட், பவுண்டு ஆகிய இருவரும் உண்டாக்கியதல்ல. இப்பாணி, எதுகை மோனையைவிட்டுக் கவிதை எழுதுவது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே விட்மன் கவிதைகளை நினைவூட்டுகிறது. இதற்குத் தொடக்க காலத்தில் இப்பாணியை பின்பற்றிய மூத்த கலைஞர்கள் ஈடுபாடு, புதிதாக இருந்தாலும், வியக்கத்தக்கது. இது ஒரு புரட்சி மனப்பான்மை. இவ்வியக்கத்தைத் தமிழ் வார இதழ்கள் கொச்சைப்படுத்திவிட்டன. ஆயினும் நம்பத்தகாத வயதுடைய இளம் கவிஞர்களின் பொறுமல் மற்றும் தொடரும் உணர்ச்சிகள் முதலியவைகளை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் ஒதுக்கக்கூடாது.

இளம் வயதிலேயே தாமஸ் சாட்டர்டன் என்ற ஆங்கில நாட்டுக் கவிஞன் கவிதைகள் எழுதத் தொடங்கினான். சாமுவேல் ஜான்ஸனுடைய கண்டனம் இருந்தாலும், ஆங்கில அற்புத நவிற்சிக் கவிஞரான வேட்ஸ்வொர்த் அவனுக்குப் புகழ் அஞ்சலி மறக்கமுடியாத சொற்களில் சாற்றினார். ஆகையால் வார இதழ்களின் பங்கையும் வரலாற்று அறிஞர்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும் இத்தகைய தளர்ச்சிகளின் பங்கு என்ன என்று ஆராய வேண்டும்.

பார்பரா கீஃபர்லெவெஸ்கி (Barbara Kiefer Sewalshi) என்ற பெண்மணி அமெரிக்க மொழிக்கழகத்தின் துண்டுப்பிரசுரத்திற்கு Historical Scholarship என்ற கட்டுரையை வழங்கினார். இதற்கு முன்பே ராபர்ட்ஸ் பில்லர் (Robert Spiller) என்பவர் 'இலக்கிய வரலாறு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை அளித்தார். இதை எழுதுவதற்குமுன் பல அறிஞர்கள் ஒத்துழைப்புடன் ஸ்பில்லர் மேற்பார்வையில் Literary History of the United States (1946) மாக் மில்லன் வெளியீடாக வந்தது.

இதன் பாணியைப் பிறர் பின்பற்றுகிறார்கள். இலக்கிய வரலாறு தனி அறிஞர் ஒருவரால் ஒரு முதிர்ந்த இலக்கியத்திற்கு எழுதமுடியாது. ஒரு குழுவினால் தான் எழுதமுடியும். இதற்கு ஒரு திட்டம் வகுத்துப் பகுதி பகுதியாக அறிஞர்களின் பொறுப்பில் விடவேண்டும். அவர்கள் எழுதுவதைக் குழுவின் மற்ற அறிஞர்களுக்கு முன்பே அனுப்பி அவர்களுக்கு அக்கட்டுரைகளை ஆராய்வதற்குக் கொடுத்தபின்னர் ஆசிரியர் கூட்டத்தில் விமர்சனம் செய்ய வாய்ப்புத் தர வேண்டும். 60 LHUS க்கு முன்பு எழுதிய ஆங்கில இலக்கிய வரலாறு ஒரு தன் அறிஞரின் முயற்சி. இதில் சில மூடநம்பிக்கைகள் கையாளப்பட்டன. அதில் ஒன்று வரலாற்றையும் திறனாய்வையும் பிரிக்க வேண்டும். இம்முறையைத் தான் புகழ்பெற்ற ஆங்கிலப் பேராசிரியர் ஜார்ஜ் செயின்ட் ஸபரி (Geroge Saintsbury) என்பவர் கையாண்டார். History of English Literature. History of Critism என்ற இரண்டு நூல்களை எழுதினார். 61 ஒப்பிலக்கியப் பேராசிரியர் ரெனெவெல்லக் திறனாய்வு வளர்ச்சியையே யல பகுதிகளாக வெளியிட்டார். 62 ஆனால் இலக்கிய வரலாற்றை எழுதும் பொழுது திறனாய்வை ஒதுக்க முடியாது. வரலாறு. திறனாய்வு என்று பிரிப்பது ஒரு விரும்பத்தகாத செயற்கை முயற்சி.

இதைத் தொடர்ந்து 'இலக்கிய வரலாறு' என்ற தலைப்பில் வரலாற்றைப் பிரித்து வைக்கிற வழக்கத்தைக் கண்டிக்கிறார் பார்பரா லெவல்ஸ்கி. இலக்கிய வரலாறு என்பது இலக்கியம், வரலாறு என்ற இரண்டு அறிவுத்துறைகளைச் சார்ந்ததல்ல. இலக்கிய என்பது இலக்கிய வரலாற்று வளர்ச்சி. காலம் காலமாக அது எப்படி வளர்ந்தது என்பதைக் குறிக்கிறது. 1930-ல் இலக்கியத்திறனாய்வு, இலக்கியப் பொருள் விளக்கம் ஆகியவைகளை இலக்கிய வரலாற்றைக் காப்பாற்ற ஒதுக்கியே வைத்திருந்தார்கள். இதை ராபார்ட்ஸ்பில்லர் எதிர்த்து 'இலக்கிய வரலாறு' என்று கட்டுரையில் இலக்கிய வரலாற்று ஆசிரியர் தனிக்கடமை உண்டு என்று உணர வேண்டும். அவர் இலக்கியக் கொள்கையின் பிரச்சினைகள் திறனாய்வு விளக்கத்தின் உத்திகள், மதிப்பு இவைகளெல்லாம் ஒதுக்கிவிட முடியாது என்றார்.

வரலாற்றுப்புலமை, என்ற கட்டுரையில் இலக்கிய வரலாற்று ஆசிரியரின் கடமைகள், அவர் வரலாற்று நோக்கின் பரப்பு என்பவைகளை ஆராயப் போவதாகச் சொல்லுகிறார்.

இவ்வரலாற்றிற்கு ஆதாரங்கள் 6 என்கிறார் லெவல்ஸ்கி. ஒரு எழுத்தாளனின் இலக்கிய வாழ்க்கை; இலக்கியத்தின் தோற்றுவாய்களும் தாக்கங்களும் அதன் சூழ்நிலைகள். இலக்கிய வகைமைகள்; சமூக கலாச்சார கருத்துக்கள்; இலக்கிய வரலாறு தமிழ் வரலாற்று நோக்கில் இந்த ஆறு பகுதிகளும் தவிர கல்வெட்டுச் சாசனங்களும் உண்டு என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். பேராசிரியர் ராசமாணிக்கனார், சதாசிவப் பண்டாரத்தார் ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியினால் கல்வெட்டுக்களின் முக்கியத்துவத்தை மெய்ப்பித்துக் காட்டினர். இதைத்தவிர, இலக்கிய நூல்களை ஆவணங்களோடு சமப்படுத்துவது இலக்கிய வரலாற்றுக் கொள்கைக்கு ஊறு செய்யும் என்பதை நினைவு கொள்ள வேண்டும். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வரலாற்று அறிஞர்கள் இப்பிழையைச் செய்தனர் என்பதை நாம் மறக்க முடியாது. சில வரலாற்று அறிஞர்கள் சங்க இலக்கியத்தைச் சமூக ஆவணங்களாகக் கருதியது ஒரு சான்று.

இலக்கிய வரலாற்றை எழுதுவதற்குப் பயன்படுத்திய ஆதாரங்கள் ஒவ்வொன்றும் அதற்கே உரிய பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்றன. இலக்கிய வரலாறு அமெரிக்காவில் இந்நூற்றாண்டின் முதல் பகுதியில் அமெரிக்கப் புதுத் திறனாய்வினால் பாதிக்கப்பட்டது. புதுத்திறனாய்வாளர்கள் வரலாற்று நோக்கை ஒதுக்கினர். ராபர்ட்ஸ் பில்லர் இலக்கிய வரலாறு என்பது ஒரு கலாச்சார வரலாறு. இவ்வரலாற்று நோக்கை ஒதுக்க முடியாது என்று வாதித்தார். ஆனால் ரெனவெல்லக் எதிர்மறை விளக்கத்தைக் கொடுத்தார். இலக்கிய வரலாறு என்பது நடை வகைமை, கருத்தியல் இலக்கிய காலப்பிரிவு, தாக்கம் மூலம் காலவளர்ச்சியைக் குறிப்பிடுகிறது என்றார். செக் அறிஞர் கமீல் ஸ்வெலபில் ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் வரலாற்றை (1974) இங்குக் குறிப்பிடவேண்டும்.

தமிழ் வரலாற்று ஆசிரியர்களுக்கு எல்லாம் ஒரு கடினமான பிரச்சினை: பழைய இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் காலத்தைத் துல்லியமாக நிர்ணயிக்கமுடியாது. இப்பிரச்சினையைச் சரிக்கட்ட ஸ்வெலபில் அவருடைய நூலில் ஒரு உத்தியைக் கையாள்கிறார். தமிழ் இலக்கியத்தை வகைமைகளாகப் பிரித்து வளர்ச்சியை விளக்குகிறார். இவ்வளர்ச்சி தெளிவாக இல்லாததால் அந்நூலில் கட்டமைப்பை பாதிக்கிறது. இன்னும் சில குறைகள்: தமிழ்க்காப்பியத்தை ஆராயும் பொழுது மேலைக் காப்பியங்களின் கொள்கைகளைக் கையாள்கிறார். அது வாசகர்களுக்கு மனநிறைவைக் கொடுப்பது இல்லை. புதுக்கவிதைகளை ஆராயும் பொழுது பலநம்பத்தகாத வெளி மூலங்களிலிருந்து தோன்றின என்கிறார். ஆயினும் இந்நூல் முதல் முதலாக ஆவணங்களைப் பயன்படுத்துகிறது. இக்கால இலக்கிய வரலாறுகளைப் போல. 64.

இப்பொழுது இலக்கிய வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி இதழ்கள் வெளியிடப்படுகின்றன என்ற செய்தி வரலாற்றின் முக்கியத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. சான்றுகள் : New Literary History and Critical Enquiry) இவ்விதழ்கள் வெளியிடப்பட்டதால் பல கருத்துப் பரிமாற்றங்கள் உண்டாயின. சான்றாக, ஹார்வேர்டு பல்கலைக்கழக பேராசிரியர்களான க்லன் (Gladiko Guillan) தன்னுடைய இலக்கிய வரலாற்று நூலில் இத்தகைய திறனாய்வு (system) ஒழுங்கமைப்பு என்று வற்புறுத்துகிறார். அமைப்பியலில் நம்பிக்கை உள்ள அறிஞர்கள் சமகால இலக்கியத்தில் கவனம் செலுத்துகிறார்களே தவிர இறந்த கால இலக்கியத்தை ஒதுக்கி விடுகிறார்கள். சில திறனாய்வுக்குழுக்கள் இலக்கியத்திற்கு வரலாறு என்பதே கிடையாது என்கிறார்கள். ஏனென்றால் எந்த நூலுக்கும் உறுதியான பொருள் இல்லை. காரணம் காலந்தோறும் வாசகர்கள் புதுப்புது விளக்கங்கள் கொடுக்கிறார்கள். மார்க்சிசத்தில் நம்பிக்கை உள்ளவர் இலக்கிய வரலாற்றைச் சமூகவியல் நோக்குதான் என்கிறார்கள். நடையியல் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள் இலக்கிய வரலாறு என்பது பல சொற்களின் வரலாறு என்று வற்புறுத்துகிறார்கள். ஒரு அறிஞர் சொன்னது போல, புதிதாக

வரும் கொள்கை இலக்கிய வரலாற்றை வாசகர் - எழுத்தாளர் தொடர்பைக் குறிக்கிறது என்றார். இது இலக்கிய சிறப்புக் கூறுகளின் பணிகளில் மாற்றங்கள், மரபுகளில் மாற்றங்கள், பொருள் தொடர்புடையதான மொழிகளின் விதிகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

இலக்கிய வரலாற்று வல்லுநர்கள் கொள்கைகளில் நம்பிக்கையற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். இருந்தாலும்கூட, அவ்வறிஞர்களின் கொள்கை வாதங்களினால் பாதிக்கப்பட்டுக் காலவரிசை வரலாற்றில் ஒரு ஒழுங்கமைப்பை நுழைக்க முயல்கிறார்கள். இதன் விளைவாக இனம், பால் அல்லது குடி வகுப்பின் மீது கலாச்சாரத்தின் தாக்கத்தை அநுமதிக்கிறார்கள். அநேகமாக எல்லோரும் அவர்கள் கையாளும் நூல்களில் பொருள்களை முழுவதுமாகவோ அல்லது அதற்குக் குறைவாகவோ நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை வளர்த்தவர்கள். இந்நோக்கு, பொதுவாக, இலக்கிய நூல்களைப் புரிந்து கொள்ள முடியுமென்றும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதென்றும் நம்பிக்கை அவர்களுள் வளர்கிறது.

லெவல்ஸ்கி இக்கட்டுரையில் குறிப்பாக இலக்கிய வரலாற்று அறிஞர்கள் இப்பொழுது எப்படிப்பணி செய்து கொண்டிருக்கிறார்கள்; ஒரு நூலைப் பொறுத்தவரையில் அவர்களுடைய முறைகள், தெளிவற்ற நம்பிக்கைகள் ஆகியவைகளில் கவனம் செலுத்துகிறார்; இலக்கியவரலாறு, வரலாற்றைப்பற்றிய அவர்களது ஊகங்களல்ல. இம்முடிவு, இலக்கிய அறிவு, வரலாற்று அறிவு என்பது இரண்டு வேறுபட்ட பொருள்கள் என்ற உறுதியான கருத்திலிருந்து வந்த நம்பிக்கை. இவ்விரண்டுக்கும் உள்ள கொள்கைப் பிரச்சினைகள் வெவ்வேறு. இக்களத்தை ஆராய்வது அறிஞர்களுக்கு நன்மை பயக்கும் என்று இக்கட்டுரையின் ஆசிரியர் நம்புகிறார்.

இலக்கிய ஆராய்ச்சியின் பரந்த பிரிவுகள் வரலாற்று அறிஞர்களுக்கே உரியது என்ற நம்பிக்கை பல ஆண்டுகளாக உள்ளது: இலக்கிய ஆசிரியரின் வாழ்க்கை, வரலாறு, மூலம், தாக்கம் பற்றிய ஆய்வு, சூழ்நிலையை ஆராய்தல், இலக்கிய

வகைமைகள் வரலாறு, இலக்கிய நூல்களில் உள்ள கட்டமைப்பு, கருத்தியல் அம்சங்கள். இவற்றைவிட, சில இலக்கிய அறிஞர்கள் வரலாற்று உறுப்புக்களை ஆராய்கிறார்கள்: முக்கிய கருத்துக்களின் வரலாறு, சமூக வரலாறு, கலாச்சார வரலாறு என இவ்வரலாறுகளைப் புரிந்து கொள்வதற்காக இலக்கிய மூலங்களையே கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். மேற்சொன்ன எல்லாவவற்றிலுமே சில சுவையான மாற்றங்கள் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மாற்றம் ஒரு கலப்பு. இது கொள்கை, திறனாய்வு, விளக்கம் எல்லாம் கலந்தது. இக்கலப்பு அறிஞர்கள் கிளப்பும் பிரச்சினைகளைப் பொருத்தது. இன்னொரு மாற்றம் பரந்த காலவரை ஆராய்ச்சியிலிருந்து குறிப்பிட்ட வரலாறு வரை அலசுவது. இவை குறிப்பிட்ட இலக்கிய நூல்களை அல்லது முக்கியத்தலைப்புகளை அலசுகின்றன. இன்னொரு இயக்கம் இலக்கியச் சிந்தனைகளை விட்டு எப்படி ஒரு இலக்கிய நூல் ஒரு கலாச்சாரத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பது. காரணம் ஒரு நூலிலிருந்து தான் ஒரு குறிப்பிட்ட கலாச்சாரம் தோன்றியிருக்கிறது என்ற நம்பிக்கையை வெளியிடுகிறது.

இலக்கிய அறிஞர்களின் இத்தகைய அளவற்ற கற்பனைகள் சில சமயங்களில் தங்கச் சுரங்கத்தைத் தற்செயலாகக் கண்டுபிடிக்க உதவியிருக்கின்றன. இதுவரையிலும், கண்டிராத ஷேக்ஸ்பியரின் கடிதங்கள் 65 ஹாதார்னின் 66 கைப்பிரதி, என்பன. இம்மாதிரி கண்டுபிடிப்புகள் சில வேளைகளில் நேரும். ஆனால் கண்பிடித்த அறிஞருக்கு வளமுள்ள கற்பனையும் அறிவும் இருக்கவேண்டும். இவைதான் அறிஞருக்குத் துணைபுரியும், ஒரு துப்பறியும் நிபுணர் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது போல. சான்றாக, தாமஸ் ட்ரெகெர்ன் (Thomas Traherne) என்ற பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு நுண்பொருட்கலைஞரின் இதுவரை வெளிவராத கையெழுத்துப் படிவங்கள் ஒரு புத்தக வியாபாரியால் லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டன. இது நடந்தது 1895-ல், அவர், வான் இதனை எழுதினார் என்றார். டோபல் (Dobell) என்ற அறிஞர் அப்படிவங்களின் நடையை நுணுக்கமாக

ஆராய்ந்தபொழுது, ட்ரெகெர்ன் என்று ஊகித்தார். இப்பொழுது அவருடைய கவிதைகளெல்லாம் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வெளியிட்டது. அறிவுலகம் அவ்வுண்மையை ஒப்புக்கொண்டது. இதைப்போல, பல சான்றுகளைக் கட்டுரையாசிரியர் எடுத்துரைத்தார். அறிஞருக்கு அறிவு மட்டும் உதவாது; கற்பனையும் வேண்டும் என்று இச்சான்றுகள் உறுதி செய்தன.

**இலக்கிய வாழ்க்கை வரலாறு:**

இலக்கிய வாழ்க்கை வரலாறு இலக்கியப் புலமையின் ஒரு முக்கியப் பிரிவாகக் கருதப்படுகிறது. இதற்கு முன்னோடி சாமுவெல் ஜான்சன் எழுதிய ஆங்கிலக் கவிஞர்களின் வாழ்க்கைகள் (Lives of the English Poets) அவருடைய முறை இப்பொழுதும் அறிஞர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஜான்சன் முதல் பகுதியில் கவிஞருடைய வாழ்க்கையைப் பற்றியும் இரண்டாவது பகுதியில் அவருடைய நூல்களைப் பற்றியும் விவரித்தார். இந்த இரண்டு பகுதிகளும் இரண்டு தலைப்புகளைக் கையாண்டன. வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர் முறையே வரலாற்று ஆசிரியராகவும் திறனாய்வாளராகவும் பணி புரிந்தார். இற்றைய வாழ்க்கை வரலாற்றில் இந்த இரண்டு பணிகளையும் ஒன்று சேர்த்தனர்.

இலக்கிய வரலாற்று ஆசிரியருக்கு ஒரு அடிப்படைக் கேள்வி தெரிந்திருக்கவேண்டும். எந்தவிதமான வரலாறு சிறந்தது? எழுத்தாளாரைப்பற்றி எத்தகைய செய்திகள் தெரிந்திருக்கவேண்டும்? இலக்கிய வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் இந்த பிரச்சினையை வாழ்க்கை நூல் எழுதும் மற்ற ஆசிரியர்கள் போலவே கையாள வேண்டும். ஆராய்ச்சி நோக்கில், எழுத்தாளரைப் பற்றி எல்லாச் செய்திகளையும் சேகரித்தல் இன்றியமையாதது. எழுத்தாளர் வெளியிட்ட நூல்கள், வெளியிடாத நூல்கள் எல்லாம் இச்செய்திகளில் அடங்கும். விளக்கம் அளிக்க வேண்டுமானால் நாட்குறிப்பேடுகள், கடிதங்கள், கைப்பிரதிகள், மற்றுமுள்ள நண்பர்களும் கூட.67 எழுத்தாளரின் வாழ்க்கை பற்றி எழுதின

ஜான்சனைப் போல இலக்கிய வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் எந்த வகையான வாழ்க்கை எழுத வேண்டும் என்று உறுதியான கொள்கை வேண்டும். இம்முறை அவர் எழுதும் வாழ்க்கையை இனம் கண்டுகொண்டதுமல்லாமல் அவர் நோக்கின் கொள்கைகளையும் உறுதி செய்யும். இப்பொழுது நான்குவகையான வாழ்க்கை வரலாறுகள் உள்ளன. (1) தற்சார்பற்ற வரலாறு. இவ்வகை எழுத்தாளர் தொடர்பான ஆவணங்களையெல்லாம் திறமையுடன் பயன்படுத்த வேண்டும். இது ஆசிரியருடைய பங்கைக் குறைத்து வாசகர்களே எழுத்தாளரைப் பற்றி கருத்துரைகளை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். ஆசிரியருடைய பொருள் விளக்கம் குறைவாகவே இருத்தல் சிறந்தது (2) இவ்வரலாறு வரலாற்று நோக்கையும் அறிவியல் நோக்கையும் கலந்ததாக இருக்கலாம். இது உண்மைச் செய்திகளைக் காலவரையிலும் வரலாற்று நோக்கிலும் அமைத்து ஊகத்தைத் தவிர்க்கலாம். புனைவுகளையும் உளவியல் விளக்கத்தையும் ஒதுக்க வேண்டும். (3) கலை அம்சம் பொருந்திய அறிவாளி எழுதிய வரலாறு. இதற்கு அடிப்படை பரந்துபட்ட ஆராய்ச்சி. ஆனால் உண்மை நிகழ்ச்சிகளைப் பொருள் விளக்கம் செய்ய வேண்டும். சுவையாகவும் வாசகரின் கவனத்தை ஈர்க்கும்படியும் அமைய வேண்டும். (4) கதை சொல்வது போன்ற வாழ்க்கை வரலாறு. இதுவும் பரந்த ஆராய்ச்சியின் விளைவாக இருக்க வேண்டும். உண்மை நிகழ்ச்சிகளைக் கதைப் பாணியிலும் நாடகப் பாணியிலும் கலந்து எழுதவேண்டும். உண்மை நிகழ்ச்சிகளைப் கதைப் புாணியிலும் கலந்து எழுத வேண்டும். இவ்வரலாறு நாவல் உத்திகளைப் பயன்படுத்தும் கற்பனையும் உண்டு. இன்னொன்று லெவல்ஸ்கி விட்டுவிட்டது. ஆங்கில இலக்கியவரலாற்றில் லிட்டன் ஙட்ரேசி (Lytton Stracy - 1880 - 1932) எழுதிய வரலாறுகள். இவர் விக்டோரிய ராணி காலத்து வாழ்ந்த எழுத்தாளர்களை தாக்குவது, அவர்களுடைய ரகசியங்களை அம்பலப்படுத்துவது. இப்பாணி, வரலாறு என்ற பணியைத் தாக்கத்துக்குள்ளாக்கியது. வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர் உளவியல் அறிவு உடையவர்களாக இருப்பது

சிறந்தது. இது மனிதனின் நடத்தையை விளக்க உதவும். கையாண்ட நிகழ்ச்சிகளெல்லாம் ஃப்ராய்டின் விளக்கத்தைக் கொடுத்து இலக்கிய வாழ்க்கையை உளவியலின் இன்னொரு பிரிவாக மாற்றக்கூடாது. உளவியலின் புரியாமொழியைக் கையாளக்கூடாது. இதற்குச் சான்று சிறந்த அமெரிக்க நாவலாசிரியரான ஹன்றி ஜேம்சின் வாழ்க்கை வரலாறு (ஐந்து பிரிவுகள், 1953-72) இதை எழுதியவர் லியான் ஈடல். இலக்கிய வாழ்க்கை வரலாற்றை எழுதும் அறிஞர் உளவியல் உண்மைகளை அறிந்து அதைப்பயன்படுத்தி ஒரு எழுத்தாளரின் ஆளுமை. நோக்கங்களை விளக்க வேண்டும். இக்காலத்தில் இலக்கிய வரலாறு என்பதற்கும் உளவியலுக்கும் நெருக்கம் உண்டு. ஆனால் அவ்வறிவியலை அளவுக்கு மீறி பயன்படுத்தக்கூடாது. எழுத்தாளன் உளவியல் மனநோயாளியாக மாற நேரிடும்.

இலக்கிய வாழ்க்கை வரலாறு மற்ற எழுத்தாளர் அல்லாத மனிதர்களுடைய வரலாறுகளைவிட மாறுபட்டது, எழுத்தாளருடைய வரலாறு மற்ற வரலாறுகளைவிட மேலானது. ஏனென்றால் அவருடைய எழுத்துக்கள்தான் முக்கியம். எழுத்துக்கள் தான் அவருக்குப் பெருமையைக் கொடுக்கின்றன. ஆகையால் அவருடைய எழுத்துப் பணியில் வரலாற்று ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். ஒரு எழுத்தாளரின் மனநிலையைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இலக்கிய வாழ்க்கைக்கும் திறனாய்விற்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும் அல்லது நிரப்ப வேண்டும். ஒரு சிறந்த வாழ்க்கை வரலாறு இதைச் செய்ய வேண்டும்.

ஒரு இலக்கிய ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்பிய அறிஞருக்கு இரண்டு சிக்கல்கள் உண்டு. ஒன்று, ே□க்ஸ்பியரின் வாழ்க்கையைப் பற்றி நூல் எழுத முயற்சித்தால் அவரைப் பற்றி நேர்முக ஆவணங்கள், கடிதங்கள், உட்பட மிகக்குறைவே. பெரும் நினைவோடை நாவலாசிரியரான ஜேம்ஸ் ஜாய்ஸின் வாழ்க்கையைப் பற்றி ஒரு நூல் எழுதுவோமானால் அவருடைய ஆவணங்கள் ஏராளமாகக்

கிடைக்கின்றன. இந்த இரண்டு எழுத்தாளர்களும் எதிர்மறைச்சான்றுகள். இவ்விரண்டு எழுத்தாளர்களைப் பற்றியும் சிறந்த வாழ்க்கை வரலாறுகள் வெளி வந்திருக்கின்றன. ே□க்ஸ்பியரைப் பற்றி இரண்டு வாழ்க்கை வரலாறுகள் எழுதியவர் சாமுவெல் ே□ாயன் பௌம்.

இவருடைய முதல் நூல் இலக்கிய வரலாற்று எழுத்தாளர்களில் எவ்வகைக் கோணங்களில் பார்க்கிறார்கள் என்று ஒரு நூலில் ஆராய்கிறார். இன்னொரு நூலில் அந்நாடகாசிரியரின் ஆவணங்கள் உருவ நேர்ப்படிவங்களின் மூலம் அவர் வாழ்க்கையை அலசுகிறார். இப்பொழுது அவர் வாழ்க்கையைப் பற்றி முக்கிய சய்திகள் எல்லாம் அறிவு உலகத்திற்குக் கிடைக்கின்றன. இவ்விரு நூல்களும் இலக்கிய வாழ்க்கை வரலாற்று வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டம்.

அதற்கு எதிர்மறையான வாழ்க்கை நூல் புகழ் பெற்ற நினைவோடை நாவலாசிரியர் ஜேம்ஸ் ஜாய்ஸைப் பற்றி ரிச்சர்டு எல்மன் எழுதிய நூல். இவ்வெழுத்தாளரைப் பற்றி எழுதுவதற்கு ஆவணங்கள் ஏராளம். பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் எழுத்தாளருக்கும் நண்பர்களுக்கும் பரிமாற்றங்கள். இவ்வளவு ஆவணங்களையும் ஒன்றுவிடாமல் பரிசோதித்து ஒரு வியக்கத்தக்க வாழ்க்கை நூலை எழுதினார் எல்டின். அறிஞர்களைக் கவரும் அறிவுசார்ந்த தெளிந்த நடை; இந்நூலில் நாவலாசிரியர் எழுத்துக்களைக் கரைத்துக் குடித்த அறிவும் தன்னம்பிக்கையும் மிளிர்கிறது. ஆவணங்களைச் சேகரித்ததுமல்லாமல் அதிலுள்ள செய்திகளைச் ஜாய்ஸின் நாவல்களுடன் இணைப்பது அவர் ஒரு சிறந்த அறிஞர் என்பதை மெய்ப்பிக்கிறது.

**தோற்றுவாய்களும் தாக்கங்களும்**

வரலாற்று அறிவில் இன்னொரு மரபு தோற்றுவாய்களையும் தாக்கங்களையும் ஆராய்வது 70 அறிஞர்கள் தாக்கத்தோற்றத்தை ஆராய்ந்தது வெறுப்பையே தந்தது. இப்பொழுது இக்கொள்கை ஒரு எழுத்தாளரின் ஆக்க

வேலையோடு தொடர்புபடுத்துகிறது.71 இந்நூற்றாண்டு எழுபது வரையில் பாரதியை ஒரு தமிழ்க் கவிஞராகத் திறனாய்வாளர்கள் கருதினார்கள். இப்பொழுது ஆங்கில அற்புத நவிற்சிக் கவிஞர்களும் வாப்ட் விட்மலும் அவர்களுடைய தாக்கத்தினால் பரந்த நோக்கை உடையவர் பாரதி என்பது தமிழ் அறிஞர்களுக்குத் தெரிந்ததே.71 தாக்கத்துடன் இலக்கிய நூல்களின் தோற்றம், இலக்கியங்களுக்குள் மரபு மாற்றம் போன்றவைகளுடன் இணைக்கப்படுகிறது இன்று. நார்த்ராப் ஃப்ரை இலக்கியத்தைப் பற்றிச் கூறுவதைத் தாக்கம் உறுதிப்படுத்துகிறது. இலக்கியம் ஒரு எழுத்தாளரின் செயலறிவிலிருந்து உருவாகிறது என்பது மட்டுமல்லாமல் அந்த மற்ற இலக்கிய அறிவும் கூட; அவன் படைப்பாற்றலை உருவாக்குகிறது எனலாம்.

தற்கால மாணவருக்குத் தோற்றுவாய் (Source) என்பதைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாக ஒரு இலக்கிய நூலைப் படிக்கும் பொழுது, பொதுவாக, தோற்றுவாய் ஆராய்ச்சி என்பது ஒரு எழுத்தாளர் தன் படிப்பறிவைப் பயின்றோ அல்லது கேட்டோ அதிலிருந்து கட்டமைப்பு, பாத்திரங்கள், கருத்தியல்கள், உருவகமைப்பு அல்லது நடை போன்றவற்றை உருவாக்குகிறார். இதில் அவருடைய வழிகாட்டி அவருடைய நுண்ணறிவுப் பொருத்தத்தைக் கண்டு பிடிக்கும் உணர்வு. எழுத்தாளரின் தாக்கம் என்பது ஆராய்ச்சியாளரின் கற்பனையிலிருந்து வெளிப்படுவதல்ல: அவரது பரந்த அறிவிலிருந்து தான். அவர் இலக்கியத்தில் மட்டும் புலமை உடையவராக இருத்தல் கூடாது. வரலாறு, தத்துவம், விஞ்ஞானம், பொதுக்கலாச்சாரம் போன்றவைகளிலும் அறிவுத் தொடர்பு இருக்க வேண்டும். இன்னும் இலக்கிய அறிவு மரபுகளில் தெளிந்த அறிவு பெற்றிருத்தல் துணை புரியும். எண்ணங்களையும், உருவகங்களையும் இனங்கண்டு கொள்ளுவதற்கு, அவற்றைப் பொதுவுலகத்திலிருந்து அறிவுலகத்திற்குத் தொடர்புபடுத்துவதற்குத் திறனாய்வாளன் மக்கள் எப்படி கல்வி கற்றுக் கொள்ளுகிறார்கள், எதைப்

படிக்கிறார்கள், அவர்கள் கோயில்களிலும் நாடமேடையிலும் காபி நிலையங்களிலும் எவ்வாறு செய்திகளை அறிகிறார்கள் போன்றவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் இலக்கியக் கலாச்சாரமும் பொதுக் கலாச்சாரமும் சமூகவியல், இலக்கியம் போன்று நெருக்கமுடையது என்றும் தெரியலாம். இந்தப் பின்புல அறிவு மூலம் தான் ஒரு அறிஞன் இணைவரைத் தாக்கம் போன்றவைகளில் ஆராய்ச்சி செய்ய இயலும். இச்செய்திகளெல்லாம் எழுத்தாளனுக்கு நெருக்கமுடையன. ஆகையால் இத்தொடர்பைத் தாக்கம் என்று கொள்ளலாமா என்ற கேள்விக்கு விடை கண்டு பிடிக்கவேண்டும். இத்தொடர்புக்குத் தெளிவான அறிகுறிகள் அவருடைய நாட்குறிப்புகள், கடிதங்களில் இருக்கின்றனவா என்பதை ஆராய்தல் இன்றியமையாதது, பிறகு அவ்வறிகுறிகளை அவர் நூல்நிலையங்களில் படித்த புத்தகங்கள், அவருக்கு உரிய புத்தகங்கள் (இவை பொதுவாக அவர் சந்ததிகள் எழுத்தாளர் வீட்டிலோ அல்லது அவர்கள் வீட்டிலோ பாதுகாப்புடன் வைத்திருப்பார்கள்.72 ஆகியவற்றை ஆராய்தல் வேண்டும்.

அமெரிக்க நாட்டில் இந்நூற்றாண்டில் அமெரிக்க மொழிக்கழகம் அரசு நிதியுதவியுடன் பல்கலைக்கழக திறனாய்வு வளர்ச்சியின் துணை கொண்டு அமெரிக்க எழுத்தாளர்களின் முழுப்பதிப்பை (collected edition) வெளியிட்டிருக்கிறது. இன்னும் தனி வெளியீட்டாளர் பல முக்கிய நூல்களை அறிஞர்களைக் கொண்டு பதிப்பித்திருக்கிறார்கள். இத்திட்டங்களில் வால்ட் விட்மன், நதேனியல் ஹாதார்ன் போன்ற பழைய எழுத்தாளர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.73

அறிஞர்களின் சுறுசுறுப்பு வெகுவேகமாகப் பரவத் தொடங்கிய பொழுது, இலக்கிய நூல்களின் முக்கிய ஆதாரங்களை அல்லது தோற்றுவாய்களைத் திரட்டத் தொடங்கினர். இதற்குக் காரணம் இவ்வாதாரங்கள் இல்லாமல் இணைவரை, தாக்கம் போன்ற ஒப்பிலக்கிய ஆராய்ச்சிகளைக் கைவிடவேண்டும். தோற்றுவாய்கள் இன்றிச் செய்தோமானால் திறனாய்வாளர் தன் ஊகங்களை நம்ப வேண்டி வரும். ஊகம்

சில கட்டங்களில் கற்பனையாகவும் மாறலாம். ஆங்கில இலக்கியத்தில் முதல் கவிஞரும் நகைச்சுவையாளருமான சாசர் கான்டர்பரி என்ற புனிததலத்திற்குச் சென்ற சமூகத்தில் பல மட்டங்களிலிருந்து வந்து மக்களைக் கொண்டு பொழுது போக்குக்காக நகைச்சுவையும் அங்கதமும் கலந்த பல கதைகளை எழுதி ஒரு நூலாக, காண்டர்பரிக்கதைகள் என்பதை எழுதினார் என்று ஏற்கனவே அறிவோம். சாசர் பற்றிய அறிஞர்களின் குழு ஒன்று Sources and Analoges to chaucer's Canterbury Tales என்ற நூலை ஆராய்ச்சியை ஊக்குவதற்காக 1941-ல் வெளியிட்டனர். இம்மாதிரி ஷேக்ஸ்பியர் நாடகங்களில் தோற்றுவாய்களை எட்டுப் பிரிவுகளாக Narrative and Dramatic Sources of Shakespeare (1957-75) புல்லோ (Geogfray Bullough) என்ற ஒரே ஒரு அறிஞர் வெளியிட்டார். இந்நூல்கள் ே□க்ஸ்பியர் ஆராய்ச்சியில் ஈடுபட்ட திறனாய்வாளர்களால் உலகெங்கிலும் பயன்படுத்தப்படுகிறது. இந்நூல் நாடகாசிரியருடைய இலக்கியக் கடனின் பணியை நிறுவுகிறது.74 இதைக் கடன் என்று சொல்லாமல் 'கடனியல்' என்று முருகியல் நோக்கில் கூறலாம். இக்கொள்கைக்குச் சிறந்த சான்று ஜான் லிவிங்க்ஸ்டன் லோஸ் (John Livingstone Lowes) என்ற அமெரிக்க அறிஞர் கோல்ட்ரிட்ஜ் எழுதிய குறிப்பேட்டிலிருந்து சில குறிப்பிட்ட பக்கங்களிலுள்ள குறிப்புக்கள் (இவை சில நூல்களிலிருந்து எடுக்கப்பட்டது) எப்படி the Ancient Mariner, Cubler Khan என்ற இரண்டு கவிதைகளை எழுதினார் என்று துப்பறியும் நிபுணர் போல துருவித்துருவி ஆராய்ந்தார். இது முழுவதும் அறிவுசார்ந்த நூல்; The Road to Xanadu என்ற பெயர். மூலங்களைத் துப்பறியும் பாணியில் ஆராய்வதால் கற்பனையைப் பயன்படுத்துவதிலும் அறிவு நோக்கிலும் மிகவும் வெற்றிபெற்ற நூல் என்று இதனை லெவல்ஸ்கி வர்ணிக்கிறார்.

இம்முறையை அல்லாமல் இலக்கிய அறிஞர்கள் அதற்கு எதிர்மறையையும் பயன்படுத்துவது உண்டு. இதற்குத் தாக்க நோக்கம்தான் காரணம். 1917ல் டி.எஸ்.எலியட் எழுதிய Tradition and the Individual Talent என்ற கட்டுரையில் இலக்கியத் தாக்கம் என்பதை இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும்

இணைந்து ஒன்றோடொன்று பாதிப்பது என்றார். தாக்கம் என்பது மரபு என்ற எண்ணம் கொண்டுள்ள எலியட் இறந்த கால எழுத்தாளர்களின் தாக்கத்திற்கு இசைந்து கொடுக்கும் நிகழ்கால எழுத்தாளர் இவ்வாக்கச் செய்கையினால் மரபு என்பது இறவாத கொள்கை. ஆகையினால் இலக்கிய மரபில் இறந்தகாலம் நிகழ்காலம் என்று பிரிப்பது செயற்கையானது; இலக்கிய மரபு இறவாதது. அது பல காலங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஒன்று சேர்ப்பது, காலத்திற்கு அப்பாற்பட்டது என்று வாதாடினார்.76 இவ்விளக்கம் இன்று ஒரு கொள்கையாக மாறிவிட்டது. தமிழ் முதுகலை வகுப்புக்களிலும் கருத்தரங்குகளிலும் கிறித்துவிற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே பிறந்த தொல்காப்பியர் இலக்கியக் கொள்கைகளை இன்றைய திறனாய்வுக் கொள்கைகளுடன் அறிஞர்கள் சமநிலைப்படுத்துவது எலியட்டின் தாக்கக்கொள்கைக்குச் சான்று. தொல்காப்பியம்தான் தமிழ் இலக்கிய மரபு என்பது தமிழறிஞர்களின் அடிமனத்தில் வேரூன்றியது. பிறகு அமெரிக்கத் திறனாய்வாளர் ஹாரல்டு ப்ளூம் என்பவரும் தாக்கக் கொள்கையில் புது விளக்கத்தைக் குறிக்கிறார். தாக்கம் என்பது ஒரு எழுத்தாளர் மற்றொரு எழுத்தாளரிடமிருந்து தெரிந்த இணைந்து கொள்வது அல்ல. அவர் புதிய கொள்கையை உருவாக்கினர். (இதை ஒப்பிலக்கியம் இனம் கண்டுகொள்ளவில்லை) மில்டனின் தாக்கத்திற்கு அவர் ஒரு உளவியல் விளக்கத்தைக் கொடுக்கிறார். கவிஞர்கள் அவர்களுடைய முன்னோடிகளுடன் கொண்ட தொடர்பை ஈடிபஸின் உணர்ச்சி எனலாம். ஃப்ராய்டின் கொள்கைப்படி, மகன் தன் தாயின் மேல் பாசம் வைத்ததால் தந்தையிடம் பொறாமையும் வெறுப்பும் தனக்கு அறியாமலே கொள்கிறான். கவிஞர்கள் தங்களுடைய முன்னோடிகளைப் பெறாமையுடன் பார்க்கிறார்கள். அவர்களின் தாக்கம் தம் கவிதை வளர்ச்சியைத் தடை செய்யுமோ என்று அஞ்சுகிறார்கள். தன்னைத் தாக்கத்திற்குள்ளாக்கிய முன்னோடி சமமானவனாக இருந்தால் அவனை எதிர்த்து ஒதுக்கிவிடுகிறான். அவன் பெரியவனாக இருந்தால் அவன் கவிதைகளுக்குத் தவறாக விளக்கங்கள்

கொடுத்து அதே விளைவை உண்டாக்குகிறான் அல்லது அவனை வசப்படுத்திவிடுகிறான்.

இலக்கிய வரலாற்று அறிஞர்கள் தாக்கக்கொள்கையை அறிவு பூர்வமாகத் தவிர்த்துத் தங்கள் ஆராய்ச்சியில் இலக்கிய உறவில் கவனம் செலுத்துகிறார்கள். தாக்க ஆய்வுகளில் சிறந்தவை தாக்கம் என்ற கொள்கை எப்படி எழுத்தாளர்களுக்குள் பரவுகிறது என்று ஆராய்ச்சி செய்கின்றனர். இதைச் சிறந்த ஆராய்ச்சி எனலாம். 'பரவுதல்' என்ற கருத்தை migration குடிபெயர்தல் என்று ஒப்பு இலக்கிய அறிஞர்கள் கூறுவர். எதுகை மோனை இல்லாத புதுக்கவிதை இவ்வழியிலிருந்துதான் விட்மன் -தாகூர்-பாரதி போக்குவரத்துக் காவல்துறையினரா புதுக்கவிதைக்கு முன்னோடிகளாக இருந்தனர்; புதுக்கவிதையின் பாதையைச் சுட்டிக்காட்டினர்.

இன்னும் சில தாக்க நூல்கள் ஒரு தனிக்கவிஞனின் தாக்கத்தை ஆராய்ந்தன. ஜார்ஜ் போர்டு (Gorge Ford) என்பவரின் விக்டோரியா ராணி காலத்து கவிஞர்கள் ஒரு தனிக்கவிஞர் ஜான் கிட்ஸ் எவ்வாறு தாக்கினார் என்று keats and victorians 1944 என்ற நூலில் ஆராய்கிறார். கைலாசபதியில் இருமகாகவிகள் 77 பாரதியாரையும் தாகூரையும் இணைப்பது பாரதியாரில் தாகூரின் தாக்கத்தை ஆராய்ந்ததால் தமிழ் பேசும் உலகத்தில் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தது. டென்னிசனைப் பற்றியும் இதுபோல் ஆராய்ச்சி நூல் வெளிவந்திருக்கிறது. மில்டனைப் பற்றிய நூல்கள் பல வகையான தாக்கங்களை ஆராய்கின்றன. சான்றாக பாலச்சந்திரராஜன் தொகுத்த கட்டுரைகள் the presence of milton 1978) இது மில்டன் உண்டாக்கிய மரபை எப்படிக் கவிஞர்கள் பின் பற்றினார்கள், எவ்வளவு சிக்கலானது என்பதை விளக்குகிறது.

## சூழ்நிலைகள்

சூழ்நிலை (Context) என்பது இலக்கியத்தோடு மிக நெருங்கியது. இதை ஆராய்ச்சி செய்வது, அதாவது விஞ்ஞானச்

சிந்தனை, அறிவாற்றல் வரலாறு, (intellectual history) இறையியல், சமகால அரசியல், சமூகச் சூழ்நிலை, மற்ற கலைகள், இலக்கிய அறிஞர்களிடையே மிகவும் விரும்பப்பட்டதொன்று. பொதுவாக நூல்கள், தனிக்கட்டுரை நூல்கள் (monographs) ஆராய்ச்சிக்கட்டுரைகள் போன்றவற்றில் வரலாற்று நோக்கில் துருவிப் பார்ப்பது முக்கியமாகப் பொருள் விளக்கத்திலும் திறனாய்விலும்தான். சூழ்நிலையில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி மாணவருக்குச் சில அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவையாவன: எப்படி உண்மையான சூழ்நிலையை இனம் கண்டு கொள்வது, அச்சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்பதாகும். (1) இம்மாதிரி புலமைக்கு மிக கவனமாகப் பயனுள்ள சூழ்நிலையை வரையறுக்க வேண்டும். (2) இவ்வரையறையை எவ்விதமான இலக்கியநூல்களுக்கு இச்சூழ்நிலை பொருந்தும் என்பதில் ஆராய்ச்சியாளருக்குத் தெளிவு பிறக்கும்; இம்மாதிரிகளத்தில் புலமை எய்தலாம்; கொள்கைகளை உருவாக்கலாம்: (3) இதன் விளைவு குழப்பத்தை உண்டாக்காமல் ஒரு உறுதியான பொருத்தத்தில் நம்பிக்கை எழும். அதாவது, சூழ்நிலை எல்லா இலக்கிய நூல்களையும் தன் வரம்பிற்குள் அடக்கி கொள்ளாது; ஆனால் பொருத்தமான நூல்களே அறிவு சார்ந்த சூழ்நிலையை இனம் கண்டு கொள்ள உதவும். இதன்படி சூழ்நிலை என்பது ஒரு எண்ண வோட்டமல்ல; அது ஒரு கொள்கையை உருவாக்குதல். நுண்திறன், நடுநிலையுணர்வு, சமநிலைப்படுத்தும் செயல்திறன் என்ற பண்புகள் ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும். இக்குணங்களே இலக்கியச் சிக்கலையும் செம்மையையும் காப்பாற்றும்.

சமகால அரசியல், தற்கால நிகழ்ச்சிகள், முக்கியமான குறிப்புக்கள் (References) என்பவை சூழ்நிலையில் அடங்கும். இச்சூழ்நிலை அங்கதம், தொடர் உருவகம், சொல்திறன் வாதம் போன்றவைகளுக்கு ஒரு முக்கியத் தொடர்பு உண்டு. இச்சூழ்நிலையும் இலக்கியங்களிலுள்ள மறைக்குறிப்புகள் (allusions) அல்லது கருத்தியல்களை விளக்கப் பயன்படும். இப்போக்கிலும் சில அபாயங்கள் இருக்கின்றன: சாசரின்

காண்டர் பரிக்கதைகளில் உள்ள யாத்திரிகர்களை அக்கவிஞர் காலத்திய மனிதர்களுடன் தொடர்புபடுத்துவது 78 ஸ்பென்ஸரின் வீரர்களும் மேல்மட்ட பெண்மணிகளையும் பாத்திரங்களாகவே கருத வேண்டும். ஒவ்வொரு பாத்திரத்தையும் சங்கேதக் குறியாகக் கொள்ளும் பழக்கம் அபத்தமானது.79 எலிசபெத் ராணி காலத்தில் சில பெரிய நாடகங்களில் அரசியல்வாதிகளைப் பார்ப்பதும் நாடக நிகழ்ச்சிகளை உண்மை நிகழ்ச்சிகளுடன் இணைப்பதும் திறனாய்வுத் தளத்தைத் தகர்ப்பது போல் ஆகும். ஒரு கலைஞன் தன் வாழ்க்கை அநுபவத்திலிருந்து நிகழ்ச்சிகள், மனிதர்களைத் தன் இலக்கிய உலகில் நுழைத்தாலும் அவைகளைக் கற்பனை மூலம் மாற்றிவிடுகிறான். கவிஞனின் கற்பனை (எழுத்தாளரின் கற்பனை கூட) சூனியத்தையே ஒரு உலகமாக மாற்றும் என்கிறார் ஷேக்ஸ்பியர். கற்பனை உலகத்திற்கும் அநுபவிக்கும் வாழ்க்கைக்கும் ஒரு நேரடிப் பாதை கிடையாது.

சமகாலச் சமூகச் சூழ்நிலை என்பதை இத்தலைப்பிற்குக் கீழ் கொண்டு வரலாம். சார்லஸ் டிக்கன்ஸ் என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் நாவலாசிரியர் தான் வாழ்ந்த நாட்டின் சூழ்நிலையை விமர்சிக்கிறார். இதை இலக்கியத் திறனாய்வாளர்கள் விக்டோரியா ராணியின் இங்கிலாந்தை விமர்சிக்கிறது; முக்கியமாக அச்சமயத்திலுள்ள மக்களின் நடத்தையை என்றார்கள். அம்மக்களின் போக்கை, அவர் நகைச்சுவையுடன் கலந்த அங்கதம் மூலம் சீர்திருத்த முயற்சிக்கிறார். குறிப்பாக லண்டன் மாநகரில் ஏழைகளுக்காகவும் அவர்களுடைய குழந்தைகளுக்காகவும் இலவச உணவு விடுதிகள் அரசினால் நிறுவப்பட்டன. இதில் உள்ள ஊழல்களை தனக்கே உரிய பாணியில் ஆலிவர் ட்விஸ்ட் (Oliver Twist) என்ற நாவலில் அம்பலப்படுத்துகிறார். நாவலின் கதாநாயகன் இளவயதில் உணவுவிடுதியில் அநாதையாக இருந்த பொழுது சேர்க்கப்படுகிறான். அவ்விடுதியின் தலைவன் பம்பிள் (Bumble) என்பவன். அவன் பெயர் போல அவனுடைய உடம்பும் குரலும் அங்குள்ள ஏழைகளை அச்சுறுத்தும். திடமான

உணவிற்குப் பதில் தண்ணீரில் கலந்த குழம்புதான் மூன்று வேளையும் கிடைக்கும். இளம் கதாநாயகன் வரிசையில் கலந்த பொழுது கஞ்சியை குடித்தபிறகு பசி தாங்காமல் இன்னும் கொஞ்சம் உணவு கொடுங்கள் என்று கேட்டு விட்டான். Oliver Asks for me (ஆலிவர் இன்னும் அதிகமாக கேட்கிறான்) என்று பம்பிள் இடி முழக்கம் செய்கிறான். இதை விடுதியின் சுவர்களும் ஊழியர்களும் பம்பிள் சொன்னதை கிளிப்பிள்ளை போல திருப்பித்திருப்பிச் சொல்லுகிறார்கள். இது டிக்கன்ஸ் விமர்சனம் செய்த சூழ்நிலைக்கு ஒரு மறக்க முடியாத சான்று. இதை திறனாய்வாளர் ஒரு துப்பறியும் அறிஞரைப்போல அலசக்கூடாது. இந்த விடுதி அந்நகரில் எங்கே இருந்தது? பம்பிள் ஒரு இயற்கை மனிதனா? ஆலிவர் என்பவன் யார்? நகைச்சுவையையும் அங்கதத்தையும் தனக்கே உரிய பாணியில் நாவலாசிரியர் கலந்து மிகைப்படுத்தும் உத்தியைக் கையாண்டு பல தலைமுறைகளாக வரும் தன் வாசகர்களின் நினைவில் இடம் பிடித்துக் கொண்டார். டிக்கன்சினுடைய விமர்சனம் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தது. அதன் விளைவு அவர்கள் உணவு விடுதியில் பல சீர்திருத்தங்கள் செய்தார்கள்.80 அவருடைய நாவல்களை அவர் சமகாலச் சமூகநிலையை எதிரொலிக்கிறது; அவர் நகைச்சுவையுடன் விவரிக்கிற பாணி செயற்கையல்ல என்று திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள். மக்களின் செயல், ஒழுகலாறு, தொடர்புகள், நிறுவன நம்பிக்கைகள், சில சமயங்களில் சமூக சீர்திருத்த நம்பிக்கை என்ற செய்திகளை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் விக்டோரியா காலத்து தொடர்புகள், நிறுவனங்கள் முதலியவற்றை அச்சமூகத்தின் ஒழுகலாறுகள், கட்டுப்பாடுகள் என்று கருதுகின்றனர். ஹம்ப்ரே ஹவுஸ் 81 என்ற அறிஞர் எழுதிய Dickens Wold (1941) என்ற நூல் நாவலாசிரியரின் திறனாய்வில் ஒரு திருப்புமுனை. அவர் தாக்கக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர். அவருடைய திறனாய்வுமுறை, சமூகக்கட்டுப்பாடுகள் நிகழ்ச்சி நடந்த இடங்கள் அவைகளை நாவலாசிரியர் எப்படி கையாள்கிறார் என்ற கேள்விக்கும், இது போன்ற திறனாய்வுக் கொள்கைகளில் உறுதியாகயிருந்தார்.

அவருடைய ஆராய்ச்சி ஒழுங்குமுறை நாவலாசிரியருடைய முருகியல் போக்கிற்கும் அவர் கையாண்ட பத்திரிகை ஆசிரியர் போக்கிற்கும் (டிக்கன்ஸ் எழுத்துலகில் இங்கிலாந்தின் பாராளுமன்றத்திற்கு பத்திரிகை உலகில் முதன் முதலாக செய்தியை வெளியிடுபவர் என்ற பணியில் நுழைந்தார். இந்தப்பாணி அவர் எழுத்தாளராக முதிர்ச்சியடைந்தபொழுதும் அவரைப் பின்பற்றியது ஹவுஸின் பலனுள்ள நூலை டிக்கன்ஸ் திறனாய்வாளர்கள் பின்பற்றினர்). அவருடைய பாணி மற்ற திறனாய்வாளருக்கு நம்பிக்கை அளித்தது. டிக்கன்ஸ் திறனாய்வு வளர்ந்தது.

விஞ்ஞானமும் விஞ்ஞானக் கொள்கைகளும் இன்னொரு விதமான சூழ்நிலையைக் குறிக்கிறது. 1926லேயே சாசரும் இடைக்கால விஞ்ஞானங்களும் (Chaucer and the Medieval Sciences) என்ற நூல் வெளிவந்தது. இதனுடைய திருத்திய பதிப்புகளும் வரவேற்கப்பட்டன. இது இக்கவிஞர் உடல் நூல், மருத்துவ விஞ்ஞானம், சோதிடம், கனவு நம்பிக்கைகள், இரசவாதம் முதலியவைகளை மத்திய காலத்திலிருந்து எப்படிக் கடன் வாங்கி அவைகளைத் தன்னுடைய கவிதைகளில் பயன்படுத்தினார் என்று சுவையாக விளக்குகிறார். The Breaking of the circle: Studies in the effect of the new scinece upon seventeenth century poetry) என்ற நூலில் இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டுக் கவிதைகளை எப்படிப் புது விஞ்ஞானம் தாக்கியது என்ற நோக்கத்தில் ஆராய்ந்து, அந்நம்பிக்கையின் வளர்ச்சியை மிக விவரமாகவும் நுணுக்கமாகவும் செய்திகளைக் கொடுக்கிறார், ஆசிரியர் நிகல்சன் என்பவர். இது 1950ல் வெளிவந்தது. 1960ல் திருத்திய பதிப்பு அச்சிடப்பட்டது. இம்முக்கிய நூல் பதினேழாம் நூற்றாண்டுத் திறனாய்வைத் திசை திருப்பியது. இலக்கிய வளர்ச்சியில் விஞ்ஞானத்தின் பங்கை உறுதி செய்ததால் நிகல்சன் என்பவர் ஒரு பெண்மணி, முக்கியமாக இந்நூல் முன்னோடி விஞ்ஞானிகளான கொபர்னிகஸ், கலிலியோ போன்றவர்கள் எப்படி தங்கள் தாக்கத்தை, அக்காலத்துப்பெரும் கவிஞர்களின் கற்பனையையும் உருவகத்தையும் உருவாக்கினர் என்று

நுணுக்கமாக விளக்குகிறார். மில்டனின் சுவர்க்க நீக்கத்தில் இரண்டாவது பிரிவில் ஒரு புகழ்பெற்ற சான்றுள்ளது. அநுமார் போன்ற பெரும் உருவமுடைய சாத்தான் தன் சக்கரவடிவிலுள்ள கேடயத்தை முதுகில் தாங்கிக் கொண்டு நடக்கிறான். இக்கேடயம் கலிலியோவின் (டஸ்கன் கலைஞர் என்று மில்டன் குறிப்பிடுகிறார். அப்பெயர் விஞ்ஞானியின் பிறப்பிடத்தைக் குறிக்கிறது) தொலைநோக்கியில் சந்திரனைப் பார்ப்பது எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாகச் சாத்தானின் கேடயம் இருக்கிறது என்றார். மில்டன் காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சியால் மனித உலகத்தைச் சூரியனும் மற்ற கோளங்களும் சுற்றுகின்றன என்ற மூடநம்பிக்கையை கொபர்னிகஸ் என்ற டென்மார்க் நாட்டின் அறிஞர் தகர்த்தெறிந்துவிட்டார். மில்டனுக்குப் புதிய விஞ்ஞானக் கொள்கைகளில் பரிச்சியமுண்டு. இருப்பினும் மனிதன் என்ற கருத்தை மையமாகக் கொண்ட தன் காப்பியத்தில் அண்டப்படைப்புக் கோட்பாடு பழையவாதத்தையே பின்பற்றினார். மில்டன் கவிஞனாக ஆவதற்கு முன்பு ஒரு ஆசிரியராகப் பணியாற்றினார் என்பது ஒரு குறிப்பிடத்தக்க செய்தி. 82 இன்னொரு முக்கிய திறனாய்வு நூல் Newton Demands the Music Newton's Opticks and the Eighteenth century poetry) இது பதினெட்டாம் நூற்றாண்டு கவிதைகள் புகழ் பெற்ற ஆங்கில விஞ்ஞானியான நியூடனின் ஒளி நூல் தத்துவம் எப்படி தாக்கத்திற்குள்ளாக்கியது என்பதை நுணுக்கமாக அலசுகிறது. நம் நாட்டில் இலக்கியத்திறனாய்வு ஒரு குறுகிய வட்டத்திலேயே செயல்படுகிறது. மேலே குறிப்பிட்ட செய்திகளை ஒப்புநோக்கிப் பார்த்தால் திறனாய்வு என்பது இலக்கியத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல் தாக்கத்திற்குள்ளாக்கிய மற்றத் துறைகளையும் திறனாய்வாளர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். சான்றாக, இன்றைய கவிதைகளுக்கு முன்னோடியான பாரதியும் பாரதிதாசனும் ஆவார்கள். இருவருமே பிரெஞ்சு புரட்சியினால் பாதிக்கப்பட்டவர்கள். இவ்வியக்கத்தின் கொள்கைகளை பாரதியார் தன்னுடைய கட்டுரைகளில் விமர்ச்சிக்கிறார் அல்லது வேதாந்த அடிப்படையில் விளக்குகிறார் என்பதை ஏற்கனவே

பார்த்தோம். 83 இக்கொள்கைகள் பாரதியிலிருந்து பாரதிதாசனுக்கு வந்திருக்கலாம் என்பது ஒரு திறனாய்வு ஊகம். ஆனால் பாரதிதாசன் பிறந்து, வளர்ந்த இடம் பிரெஞ்சு கலாச்சாரத்தின் இந்தியாவில் இருப்பிடமாகக் கொண்ட பாண்டிச்சேரி. ஆகையால் பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்ட தத்துவ அறிஞர்கள் வால்டேர், ரூசோ என்பவர்களுடைய கொள்கைகள் புரட்சிக்கவிஞரின் எழுத்துக்களின் பாதிப்பு ஏற்படுத்தியது உண்டா? இக்கேள்விக்கு விடை பாரதிதாசனை அறிந்தவர்களோ அல்லது தெரிந்தவர்களோ, அதிர்ஷ்டவசமாக பாண்டிச்சேரியில் இருந்தால் அவர்களைச் சந்திக்கலாம் என்ற எண்ணம் உண்டாகும். இது திறனாய்வு அறிவு நோக்கில் உகந்ததல்ல. இதில் குறிப்பிட்டவர்கள் கவிஞரிடமிருந்து காலத்தாலும் சமூகவியலாலும் பிரிந்து விட்டவர்கள். அவர்களுடைய நினைவு தற்சார்பற்றது என்று சொல்லமுடியாது; இந்நினைவு உணர்ச்சியல்லாமல் கற்பனையும் கலந்திருக்கலாம். இதிலிருந்து திறனாய்வாளர் உண்மையைப் பிரிப்பது எளிதல்ல. ஆகையால் புரட்சிக்கவிஞரின் சமகால இலக்கியத்திலே அடையாளங்களைக் காணலாம். 'திராவிட நாடு' இதழில் பேரறிஞர் அண்ணா 'வால்டேர் வீசிய வெடிகுண்டு' என்ற கட்டுரையை வெளியிட்டார். அண்ணாவின் நோக்கம் தன்மான இயக்கத்தின் தோற்றுவாய் பிரெஞ்சு புரட்சியில் இருக்கிறது என்ற எண்ணம். பாரதிதாசன் புரட்சி நம்பிக்கை உருவெடுத்தது இந்த தன்மான இயக்கமா? பிரெஞ்சு புரட்சியினால் உண்டான கொள்கைகளா? பிரெஞ்சு புரட்சியினை ஒதுக்க முடியாது, பாரதிதாசன் பிரெஞ்சு கலாசார சூழ்நிலையில் பிறந்ததால், இதைத் துப்பறியும் நிபுணருடைய கூர்மையான அறிவு விஞ்ஞான நோக்கு, பொறுமை, பொய்சாட்சியங்களை உடனே ஒதுக்கிவிடும் திறமை, தற்சார்பற்ற தன்மை எல்லாம் திறனாய்வாளருக்கு (இதில் எல்லா வயதும் அடக்கம் உண்டு) இன்றியமையாததும் கூட.84

இன்னும் சில இலக்கிய அறிஞர்கள் தத்துவக்-கொள்கைகள் நூல்கள் ஆகியவைகளின் தாக்கத்திற்கு ஒரு எழுத்தாளரோ அல்லது சில எழுத்தாளர்களோ சாய்ந்து கொடுத்தார்கள் என்பது உண்மை. இவ்வகை ஆராய்ச்சி ஆங்கில

அங்கத முன்னோடியும் பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவருமான ஜான்ட்டிரைடைன் என்பவரின் எழுத்துக்களில் இருந்தது என்பது செய்தி. இந்நூல் Thd intellectual Milieu of John Drydan (1934) என்பது. இது அக்கவிஞர் வாழ்ந்த அறிவுச் சூழ்நிலையை ஆராய்கிறது. தாயுமானவரின் பாடல்களில் உணர்ச்சியை விட அறிவுத்தன்மை ஓங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்கள் அவரது கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர். சிறந்த முன்னுரையுடன் கூட. தமிழ் நாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் உள்ள சூழ்நிலை வேறுபாடுடையது.85 தமிழ் நாட்டைப் போல யாழ்ப்பாணம் பல இயக்கங்களினால் பாதிக்கப்பட்டதல்ல. இக்காரணத்தால் அவ்வறிஞர்களுக்கும் தமிழ் இலக்கியம் போன்ற தாயுமானவர் பாடல்களுக்கும் உள்ள இடைவெளி குறைவுள்ளது என்று தோன்றுகிறது. ஏற்கனவே கலாநிதி கைலாசபதி அவர்கள் யாழ்ப்பாணத் தமிழ்த் திறனாய்வை தமிழ் நாட்டு அறிஞர்கள் ஒதுக்கி வருகிறார்கள் என்று குறைகூறினார். இக்குறையை நீக்குவதற்கு தாயுமானவரை ஒப்புநோக்கில் ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிவரும். மொழியியல் நோக்கில் யாழ்ப்பாண நடையையும் தமிழ் நாட்டு நடையையும் ஒப்புநோக்கலாம். இதற்குப் பல்கலைக்கழகங்கள் ஒரு இணைப்பு இலக்கிய நிறுவனம் அமைப்பது ஒரு கடமை.

மதச் சூழ்நிலைகளையும் ஆராயலாம். குறிப்பாகக் கவிஞர்கள் மதத்தின் தலைப்பை அல்லது உள்ளடக்கத்தை நாடும் பொழுது, இதற்குச் சான்றுகள் ஐரோப்பாவில் பெரிய கவிஞனான தான்தே என்ற இத்தாலியர். இவர் இறைஇன்பியல் Divine Comedy. இது நடைமுறையில் சிக்கலாக இருந்தாலும், இக்கொள்கையில் பயிற்சி வேண்டும். வேதங்கள் சொல்லுகின்றன. கடவுள் என்பது ஒன்றே; ஆனால் பல பெரிய அறிவாளிகள் அவரைப்பல நாமங்களினால் அழைக்கிறார்கள். இந்த மத ஒற்றுமை என்ற பரந்தநோக்கு கீதையினால் பறைசாற்றப்படுகிறது. இப்பிரச்சினையை அறிவு நோக்கத்தில் தான் பார்க்க வேண்டும். உணர்ச்சியை அப்புறப்படுத்தி, எலியட்டின் தான்தே கட்டுரையின் குறிப்புக்களில் ரிச்சர்ட்ஸ்

எழுப்பிய மதமும் நம்பிக்கையும் என்ற பிரச்சினையைச் சுருக்கமாக விவாதிக்கிறார்.

மேலே குறிப்பிட்ட இலக்கிய வரலாற்று ஆய்வுகள் பல எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தொகுப்பாக வெளிவருவதற்குப் பெரும் துணை செய்தன. மூலங்களைக் கவனமாக ஆராய்ந்து அச்சிட்ட இப்பதிப்புக்கள் எழுத்தாளர் வாழ்க்கையிலிருந்து பல அரிய குறிப்புக்களையும் விளக்கங்களையும் கொண்டிருந்தன. இரண்டு தொகுதிகளாக வெளிவந்த The poems of Alexander Pope 1939-69 என்ற பதிப்பு குறிப்பிடத்தக்கது. போப் அங்கதக்கவிஞராகையால் அவரை எதிர்ப்பவர்கள் பெண்ணானாலும் ஆணானாலும், அவர் அங்கதச் சுவையில் ஆழ்ந்துவிடுவர். போப்பிற்கும் அவருடைய குருவான ட்ரைடனுக்கும் ஒரு வேறுபாடு. போப் அவர் எதிரிக்கு வெறுப்பு, கோபம். பொறாமையைத் தயக்கமில்லாமல் வெளிப்படுத்துவார். ட்ரைடன் மிக நாகரிகமாகக் கிண்டல் செய்வார். சான்றாக இலண்டன் நகரில் ஒரு எழுத்தாளர், தாமஸ் ஷாட்வெல் (Thomas shadwell) அரசியல் நோக்கில் ஒரு எதிரி, அவரை மந்தபுத்தி உள்ளவன் என்று நாகரிகமாக வர்ணிக்கிறார். புராணிக உத்தியின் மூலம். அவர் பிறக்கும் பொழுதே அவருடைய மருத்துவச்சி அவரை எப்பொழுதும் முட்டாளாக இருக்கவேண்டும் என்று ஆசீர்வதித்தாளாம். The Midwife Laid her hand on his thick shull, with this blessing - Be thou dull.

அவருடைய கருத்தை விட அக்கருத்தை ஒரு ஆயூதமாகவே கையாண்டது ஒரு வியப்புக்குரிய செய்தி. மேலே உள்ள குறளில் எதுகை, மோனையைப் பயன்படுத்தி குறளை ஒரு சாட்டையாகவே மாற்றிவிட்டார். தன்னுடைய சொல்லாக்கத்தினாலும் கவிதையின் கூரிய அமைப்பினாலும், இக்குறளில் வரும் கடைசி சொல் மோனைக்கு ஒரு சான்று. அடிக்கோடிட்ட இரண்டுசொற்களையும் உச்சரித்தால் கவிதை நயத்திற்கு அப்பாற்பட்ட ஓசை வருகிறது. இதைக் கவிஞரின் புகழ்பெற்ற திறனாய்வாளரான பேராசிரியர் செயின்ட்ஸ்பரி கீழ்க்கண்டவாறு விவரித்தார். அங்கதக்கவிஞர் என்பதை

தன்னுடைய கத்தோலிக்க மத நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இன்னொருவர் மில்டன்.டி.எஸ். எலியட் என்பவர் ஒரு புகழ்வாய்ந்த கட்டுரையை தான்தே பற்றி எழுதினார். ஆனால் அவர் மில்டனை ஒதுக்கினார். எலியட்டின் தான்தே பற்றிய கருத்துரைகள் இன்னும் அறிஞர்களால் படிக்கப்படுகிறது. காரணம் அவருடைய கவிதையை இத்தாலிய மொழியிலேயே படித்து அனுபவித்தவர்.86 இவ்வரிசையில் ஜெரால்டு மான்லிவராப்கின்ஸ் என்ற கவிதையியலில் புரட்சி உண்டாக்கிய கத்தோலிக்க மதகுருமாரைச் சார்ந்தவர். இவர் இளம் வயதிலேயே இறந்தவர். அவருடைய கவிதையின் சிறிய தொகுப்பு அவருடைய மொழி, கருத்துப் புரட்சியினால் இன்று இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தவராகவே கருதப்படுகிறார். பொதுவாக, ஆங்கிலக்கவிதையை தமிழ்க்கவிதையுடன் ஒப்பிட்டால் மதம் என்பதின் பங்கு குறைவானது என்று தோன்றும். ஆனால் மதத்தை கருத்தியலாகக் கொண்ட கவிஞர்கள் ஜான்டன் என்பவரிலிருந்து எலியட் வரை பல முக்கிய எழுத்தாளர்கள் இவ்வகையில் முக்கியப் பங்கை வகிக்கிறார்கள். கிறித்துவ மதத்தில் தியானம் என்பதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. ஆகையினால் மதத்தைக் கருத்தியலாகக் கொண்ட கவிஞர்களைப் பற்றி லூயி மார்ட்ஸ் Louis Martz என்ற திறனாய்வாளர் The Poetry of Meditation (1954) ஒரு முக்கியமான நூலை எழுதியிருக்கிறார். கிறித்துவ மதத்தை அடக்கமாகக் கொண்ட கவிதைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்த நூல் இன்றியமையாதது. பல வகைப்பட்ட தியானங்களுக்கும் லூயி மார்ட்ஸ் விளக்கங்கள் கொடுக்கிறார். மதத்தை உள்ளடக்கமாகக் கொண்ட நம் நாட்டுக்கவிதைகளை ஆராயும்பொழுது மதத்திற்கே திறனாய்வாளர்கள் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இதனால் திறனாய்வு பிரசாரத்தை நெருங்குகிறது. கவிஞனின் மதத்தில் அளவற்ற நம்பிக்கை திறனாய்வாளனுக்கு இருந்தால் இடைவெளி விரிகிறது. புராணிகத்திற்கு இடம் அளிக்கிறது. மத நோக்கில் இங்கு இரண்டு வகையான கவிஞர்கள் காணப்படுகிறார்கள். கவிஞர்களைக் கவிஞர்களாக நோக்க வேண்டும். இறைவனடியைச்

சேர்ந்தவர்களல்ல. இப்பிரிவை இனம் கண்டு கொள்வதற்கு மதத்தைக் கருத்தியலாகக் கொண்ட கவிஞர்களை இலக்கியத்தைச் சார்ந்தவர்களாகக் கருதவேண்டும். மதத்தைக் கருத்தியலாகக் கொண்ட கவிஞர்கள் லோகாயதத்தில் நம்பிக்கை வைத்த கவிஞர்களைவிட உயர்ந்தவர்களாகக் க்ருதக்கூடாது. இது திறனாய்வில் மன்னிக்க முடியாதகுற்றம், மதத்தை இலக்கியத்தின் உள்ளடக்கமாகக் கொண்டு முருகியல் நோக்கில் ஆராய வேண்டும். 87 மத நம்பிக்கையும் இலக்கியத்திறனாய்வு என்பதைப் பற்றி மூதறிஞர் ஐ.எ. ரிச்சர்ட்ஸ் பிரச்சினையைக் கிளப்பினார். கோல்ட்ரிட்ஜ் என்பவர் நமக்கு பிடிக்காத இலக்கியவகையைப் படிக்கும் பொழுது அவநம்பிக்கையை நாமாகவே கைவிட வேண்டும் (Willing suspension of disbelief) என்றார். அம்முறையின் மூலம் தாக்கும் மனிதரின் பின்னால் ஓசைப்படாமல் நெருங்கி கையில் வைத்திருக்கும் தடியை நிதானமாக மேலே கொண்டு போய்த் திடீரென்று அவன் தலையில் "படார், படார்" என்று தாக்குகிறான் என்றார். இந்த விளக்கத்திற்கும் குறளில் இறுதிச் சொற்கள் எழுப்புகின்ற ஓசைக்கும் நெருக்கம் உண்டு. இன்னொரு விளக்கம் இலக்கணத்தைச் சார்ந்தது. Shull என்ற பெயர்ச் சொல்லிற்கு dull என்ற சொல் பெயரடை: இந்த மந்த புத்தியுள்ள எதிரியைப்பற்றி அற்புதமான தனி அங்கதம் எழுதி அவனுக்குச் சாகாவரமே அளித்தார். கரைடனுடைய எதிரியை ஒரு நாளும் அவர் வாசகர்கள் மறக்கமுடியாது. இக்கவிதைக்கு Macflecknow என்று பெயர்.88

ட்ரைடன், போப் எழுதிய அங்கதக்கவிதைகளை அவர்கள் வாழ்ந்த சூழ்நிலையின் இன்றியமையாத செய்திகளை அறிந்தால் ஒழிய வாசகர்கள் கவிதைகளைப் புரிந்துகொள்ள முடியாது. கவிஞனின் வாழ்க்கை, அவன் நண்பர்கள், எதிரிகள் யார், யார், அவனுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு என்ன, கவிஞனுக்கும் அவர்களுக்கும் அரசியலில் பங்கு என்ன, எவ்வகையான அரசியல் என்ற கேள்விகளுக்கு விடைகள் இன்றியமையாதது. ஆகையால் இந்நூற்றாண்டில் ட்விக்கன்காம் (Twickenham) என்ற வெளியீட்டாளர் பல அரிய குறிப்புக்கள்

அடங்கிய முழுத்தொகுதிகளை வெளியிட்டார். ஜான்பட் (John Butt) என்ற அறிஞரைப் பொதுப் பதிப்பாசிரியராகக் கொண்டு பல தொகுதிகளில் போப்பின் கவிதைகளை வெளியிட்டனர். போப்பின் அங்கதத்திற்குப் பலியான எழுத்தாளரும் உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி திரும்பத்திரும்ப கவிதைகளில் வருகிறார். அவள் ஒரு சீமாட்டி. அல்லது மான்டேகுவின் கோமகள் என்று பெயர். அவள் போப் குடும்பத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும் போப்பைக் காதலனாக ஏற்க மறுத்துவிட்டாள். அக்காரணத்தினால் அவளை அங்கதத்தில் சேர்த்துப் பழிவாங்கினார். இவ்விதம் தொடர்புகளுடைய பலருடைய இன்றியமையாத வாழ்க்கைக்குறிப்புகள் ட்விக்கான்காம் பதிப்பிகல் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 88 போப்பின் சிறந்த அங்கதக் கவிதை, முட்டாள்கள் குழு என்ற Dunciad இல் பல சமகால எழுத்தாளர்களைச் சேர்த்தார். இதைப் படித்து அநுபவிப்பதற்கு அவர்களைப் பற்றிய பல செய்திகளும் தெரிந்திருக்கவேண்டும்.

***இலக்கியக் கூறுகள், வகைமைகள் வரலாறு 89***

இலக்கிய ஆராய்ச்சியில் உறுதியாக வரலாற்றியலைப் பயன்படுத்திப் பலகூறுகளையும் வகைமைகளையும் பல நாடுகளில் ஆராய்ந்து வருகின்றனர். வரலாற்று நோக்கில் அக்கூறுகளாவன: ஒரு அமைப்பில் அமைந்த தனிச் சொற்கள் ('புரட்சி', 'விடுதலை', 'அரசியல்', என்ற சொற்கள் எவ்வாறு சமகாலத்தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்று ஆராய்ந்தால் பல சுவையான செய்திகள் வெளிவரும். இவ்வாறு அமெரிக்காவில் நடத்திய ஆராய்ச்சியினால் பலவேறு குழுக்களிலிருந்த கவிஞர்களைச் சில புதிய குழுக்களில் சேர்க்கும்படி நேர்ந்தது. கொள்கைகளை, எழுத்தாளர்கள் சொற்களைக் கையாளும் பொழுது அவைகளில் தாக்கத்திலிருந்து விடுபட்டனர் போலும்). வரலாற்று நோக்கில் இலக்கியக் கூறுகளை ஆராய்ந்தால், அவைகளின் சொற்கள், உருவகங்கள், முக்கிய கருத்துக்கள், கருத்தியல்கள், இலக்கிய மரபுகள் கவிதை வகைமைகள் அடங்கும். இவ்வாராய்ச்சியின் நோக்கம்

இக்கூறுகள் இலக்கியவரலாற்றில் தொடர்கின்றனவா அல்லது மாறுகின்றனவா என்ற கேள்விக்கு விடையைக் கண்டு பிடிக்க முடியும். இலக்கிய மூலங்கள் ஆதாரங்களுடன், இத்தகைய ஆராய்ச்சி இலத்தீன் இலக்கியத்திலிருந்து ஆங்கில இலக்கியம் வரை தொடர்கிறது.

ஒரு குறிப்பிட்ட வகைமையும் வரலாறும் வளர்ச்சியும் என்பது வரலாற்று நோக்கில் நம்பிக்கை கொண்ட அறிஞர்களுக்கு ஒரு அடக்க முடியாத அவா. ஏர்னஸ்ட்.ஏ.பேகர் (Errest A. Baker) என்பவர் ஆங்கில நாவலின் வரலாற்றைப் பதினோரு தொகுதிகளில் 1924 லிருந்து 1967 வரை வெளியிட்டார். இதற்குப்பின் அறிஞர்கள் இவ்வளவு பெரிய தொண்டைப் பின்பற்றாமல் சிறு கூறுகளை ஆராய்ந்தனர். தமிழ் இலக்கியத்தில் நமக்குத் தெரிந்தவரையில் சிட்டியும் அவர் கூட்டாளியும் சிறுகதை, நாவல்களைத் திறனாய்வு செய்து அவற்றின் வளர்ச்சியை மதிப்பீடு செய்தனர். இவ்வாறு தமிழிலுள்ள வகைமைகளின் வரலாறுகளை எல்லாம் அறிஞர்கள் மேற்கொண்டால் இலக்கிய வரலாறு மிகவும் வளர்ச்சி அடையும். இலக்கிய வரலாறு என்ற செய்தியை இன்னும் வரலாற்றுடன் இணைப்பது திறனாய்வு வளர்ச்சிக்கு உகந்ததல்ல. இதற்குக் காரணம் கொள்கைகளை நம்பாமல் நம்பிக்கைகளை வளர்ப்பதே. [illegible]னுக்குப் பிறகு, நாவலின் பரந்த வளர்ச்சிக்குப் பதிலாக டிக்கன்ஸ் அதற்குப் பிறகு கல்வி நாவல் ஆராய்ச்சியை இன்றைய ஆங்கில நாவலாசிரியர் வில்லியம் கோல்டிங்வரை ஆராய்ந்திருக்கின்றனர். மு.வ. அவர்கள் கல்வி நாவல் எழுதுவதை விரும்பினார்கள் போல் தெரிகிறது. திருவேங்கடம் கதை சொல்வது போல் வருகிற அவர் நாவல் ஒன்றில் இறுதியில் வாழ்க்கையின் அநுபவங்களைத் தெரிந்து கொள்ளுகிறான். இது கல்வி நாவலின் சாயலைக் காண்பிக்கிறது. கல்வி நாவல் என்பது ஜெர்மானிய மொழியில் bildungs roman என்று சொல்லுவார்கள். Roman என்பதற்கு நாவல் என்று பொருள்படும். ஆங்கில நாவல் இலக்கியத்தில் இவ்வகைமையின் வளர்ச்சியை ஆராய்வதில் கவனம் செலுத்துகிறார்கள். நாவலாசிரியர் மு.வ. அறிஞரானதாலும் வாழ்க்கைப் பிரச்சினைகளில் கவனம்

செலுத்துவதினாலும் ஒரு கல்வி நாவல் உருவாக்கினார் போலும். இந்நோக்கம் அவருடைய எழுத்துக்களில் பெர்னார்டு ஷாவின் தாக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது. நாவல் என்பது சுருக்க உணர்ச்சிப் பாடலைப் (Lyric) போல் மேலை இலக்கிய உலகிலிருந்து கடல் வாங்கியது. இவைகளை உருவாக்குவதில் பாரதி ஷெல்லியின் தாக்கத்திற்குள்ளானார்.90 ஷெல்லியின் தன்னுணர்ச்சிப் பாடல்களுக்கும் பாரதியின் பாடல்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் திறனாய்வாளர்கள் ஷெல்லியின் உணர்ச்சிப் பாடலில் அமைப்பில்லை; உணர்ச்சி வேகம் தான் இல்லாது என்கிறார்; பாரதி பாடல்களைக் குறிப்பிட்ட ராகங்களில் அமைத்தார். ராகம் அமைப்பைக் கொடுத்தது மல்லாமல் பாடவும் உதவியது. உணர்ச்சி அடிப்படையில் அற்புத நவிற்சிப் பாடலாயிருந்தாலும் அதற்கு ஒரு இலக்கணம் உண்டு. ஷெல்லியினுடைய கைப்பிரதிகளைச் சோதித்த இன்றைய அறிஞர்கள் (அவை அமெரிக்காவில் ஹன்டிங்க்டன் நூல் நிலையத்திலும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலும் இருக்கின்றன ஷெல்லி கைப்பிரதியிலிருந்து பத்திகளை வெளியிடுவதற்கு முன் மாற்றி அமைந்தார் என்றார்கள். நோக்கம், கவிதைகள்ச் சரளமாக எழுதினார் என்ற வாசகர்கள் நம்புகம்படி செய்யவே. இதைக் கண்டு பிடித்தவர் நெவில் கார்டஸ் (Neville Gardus) என்ற அறிஞர். இவ்வேறுபாட்டைத் தன் நூலான Shelley at Work என்பதில் இப்பொழுது திறனாய்வாளர்கள் எழுத்தாளர்களின் அச்சிட்ட நூல்களை மட்டும் படிக்காமல் கைப்பிரதிகளையும் ஆராய்கின்றார்கள். இது இன்றைய இலக்கிய ஆராய்ச்சியின் வளர்ச்சி.

வகைமை வளர்ச்சியில் வெளிவந்த நூல்கள் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் இன்னொரு கட்டம். வகைமை வளர்ச்சி சிக்கலானது அமைப்புக்கூறுகளும் கருத்தியல் கூறுகளும் கலந்திருப்பதால், இதில் சிறந்த நூல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கவிதைப் பேராசிரியராகப் பணியாற்றும் சி.எம். பௌரா (C.M.Bowra) எழுதிய காப்பிய வரலாறு, From Virgil to Milton (1945) காப்பியம் என்பது மேற்கு ஐரோப்பிய

நாடுகளில் செவ்வியல் கவிஞர்களான ஹோமர், வர்ஜில் எழுதியது. பௌரா ஆங்கில அற்புத நவிற்சி இயக்கத்தைப் பற்றியும் ஒரு ஆதார பூர்வமான நூல் எழுதியிருக்கிறார். இப்பேராசிரியர் தம் பல்கைலக்கழகத்தில் மாணவர்களுக்குக் கிரேக்க, இலத்தின் இலக்கியங்களைக் கற்றுத் தந்தவர். அவருடைய நூல் காப்பியத்தின் தோற்றத்தையும் மில்டன்வரை வளர்ச்சியையும் எடுத்துரைக்கிறது. இந்தியாவைப் பொருத்தவரை, காப்பிய வளர்ச்சி மிகச் சிக்கலானது. வடமொழியில் எழுதிய இராமாயணமும், மகாபாரதமும் பல மொழிகளில் ஆதிகாவியங்களிலிருந்து பிரிந்து வந்திருக்கின்றன. கவிஞனின் கற்பனையால், இதற்குச் சிறந்த சான்று கம்பராமாயணம். ராமாயணத்தைத் தமிழ்க் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவே ஆக்கிவிட்டார் இக்கவிஞர். வேறுமொழிகளிலும் வேறுவகைமைகளிலும் (நாவல் உள்பட) இத்தகைய மாற்றங்களைப் புகுத்திய கவிஞர்களின் மாற்றங்களை உணர்ந்தோமானால், அது இந்திய நாட்டு ஒருமைப்பாட்டிற்கு இலக்கணம் வகுக்கும். ஜவஹர்லால் நேரு இந்திய கலாச்சாரத்தை Unity indiverstiy என்று அறிவும் கற்பனையும் கலந்த போக்கில் வர்ணித்தார். இதுதான் நம் ஒருமைப்பாட்டிற்கு அடிப்படை. வடமொழிக் காப்பிய மாற்றங்கள் நேரு அவர்களின் கூற்றிற்கு ஒரு சிறந்த சான்று. கம்பனை எடுத்துக்கொள்ளுவோம். வால்மீகியின் காப்பியத்திற்கு செவிசாய்க்காமல் தமிழ்க்கலாச்சாரத்தையே கருத்தியலாகக் கொண்டு தம் காப்பியத்தை உண்டாக்கினான். தாக்கம் ஒரு எழுத்தாளனிடமிருந்து இன்னொருவனுக்கு பரவுவதால் அமைப்பியல் அமெரிக்கத் திறனாய்வளார் சொன்னது போல இவ்விருவருக்கும் தொடர்பு Anxiety அல்ல, tension (விசை) என்பது. இக்கருத்து ஆலன் டேட்டில் இருந்து வந்ததல்ல. கம்பன் வால்மீகியின் ராமாயணப் படிவத்தை மனதளவில் எதிர்ப்பதால் அவனுக்கு விசை என்பது அதிகமாக இருக்கிறது. இன்னொரு வட்டார மொழியில் எழுத்தாளன் தன் அரசனுக்கே புகழாரம் சூட்டவிரும்பினான். அவரைப் பாண்டவர்களில் ஒருவராக மாற்றிவிட்டான். அவன் அநுபவம் கம்பனை விட

அதிகமே. மற்றொரு காப்பியக்கதையில் ஒற்றுமைக்குப் பெயர்போன பாண்டவர்களில் உடன்பிறப்புகளுக்குள் எழுத்தாளன் மனக்கசப்பு உண்டாக்குகிறான்: ஒரு வகையான விசை. இதிலிருந்து ராமாயணத்தை இந்தியக் கலாச்சாரத்திற்கு நாட்டுப்படிவம் என்று கொண்டால், அப்படிவம் மற்ற வட்டாரங்களிலுள்ள எழுத்தாளர்களைத் தாக்கினால் வேறுபட்ட விசைகளை உண்டாக்குகின்றன என்பது உண்மை. ஆகையால் நாட்டு ஒற்றுமை என்பது, when the national culture comes into contact with regional culture, ingenerates several types of Tensions 91. நாட்டு கலாச்சாரம் (எத்தகைய வளிப்பாட்டைக் கொண்டிருந்தாலும்) வட்டாரக் கலாச்சாரத்தைத் தாக்கினால் எழுத்தாளர்கள் பலவகையான விசைகளை அநுபவிக்கிறார்கள். இங்கு செயலறிவு என்பது கலை அறிவு.

லூகஸ் (Lucacs) என்ற ஐரோப்பிய அறிஞர் வகைமை வரலாற்றை ஒரு புதிய கோணத்தில் எழுதியிருக்கிறார். இது வரலாற்று நாவலைக் கொள்கைப்படியும் மார்க்சிய நோக்கத்திலும் ஆராய்ந்த நூல். இந்நாவல் வகைமையின் வளர்ச்சியைப் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுச் சமூக, பொருளாதாரப் பின்புலத்தில் விவரிக்கிறார். இவ்வகைமை பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உண்மையான சமூகவியல் நாவல்களிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று வாதாடுகிறார். இன்னும் சர்வால்டர் ஸ்காட்டின் சரித்திர நாவல்களும் இவ்வகைமை நாவலுக்குத் துணை புரிந்திருக்கும் என்கிறார். ஸ்காட் பாத்திரங்களின் தனித்தன்மையை முதன் முதலாகக் குறிப்பிட்ட வரலாற்று உண்மையிலிருந்து உருவாக்கினார். இவ்வித வரலாற்றைப் படைத்த இவ்வறிஞர் ஸ்காட்டை தனித்தன்மையான நாவல் வகைமையை உருவாக்கியவர் என்று வருணிக்கிறார். ஒரு விரிவான வரலாற்று நாவலின் வளர்ச்சியை ஒதுக்கி முக்கியமான எழுத்தாளர்களான ஸ்காட், கூபர் (இவர் ; பெனி மோர்கூபர் என்ற அமெரிக்க நாவலாசிரியர் ; சிகப்பு இந்தியர்களைப் பற்றியும் அவர்கள் கலாச்சாரத்தைப் பற்றியும் Natty Bampo என்ற வேட்டையாடும் கதாநாயகனை உருவாக்கி விவரிக்கிறார்). ரஷ்ய

நாவலாசிரியரான புஷ்கின், ஸ்தாந்தல், பல்ஸாக், டால்ஸ்டாய் போன்ற ஐரோப்பிய நாவலாசிரியர்களில் கவனம் செலுத்துகிறார். மற்றும் இணைவரை, சிக்கலான பிரச்சினைகளையும் வரலாற்று நாடகத்தையும் கையாள்கிறார். ஸ்காட் முதல் முதலாகப் பாத்திரங்களின் தனித்தன்மையை உருவாக்கினார். அவ்வாக்கத்திற்கு ஆதாரம் குறிப்பட்ட வரலாற்று மெய்ம்மை என்கிறார். இந்நாவல் வகைமையின் கட்டமைப்பை அவர் விளக்கியபொழுது அது வாசகர்களுக்கு மனநிறைவு அளிக்கிறது. லூகஸ் வரலாற்று நாவலில் மனித வாழ்க்கையின் பங்கு முக்கியத்துவம் பெறவேண்டும் என்கிறார். சுருக்கமாக வரலாற்றுச் சூழ்நிலை மனிதர்களைச் சிந்திக்கவும் உணரவும், செயல்படவும், செய்வதும் போல ஆகும் என்று விவரிக்கிறார். நாம் ஏற்கனவே இந்நூலின் முற்பகுதியில் லூகக்ஸின் முக்கியத்துவத்தை விவரித்திருக்கிறோம். லெவல்ஸ்கி ஆராய்ச்சி நோக்கில் பல புதிய செய்திகளைத் தருகிறார். அவரின் திறனாய்வு நோக்கத்தின்படி, வரலாற்று நாவல் ஒரு முக்கிய வகைமையாகும். அதற்கு உரிய புதிய விதிகளைக் கையாள்கிறது; அவ்வகைமைக்கு வரலாற்று உணர்வு முழுமையாக இருக்கிறது. இவ்வுணர்வு சமகால சமூக நாவலை உண்மையில் வரலாற்று நாவலாக மாற்றும் என்று எதிர்பார்க்கிறார்.

தமிழ் வரலாற்று நாவலை ஸ்காட் நாவல்களின் அடிப்படையில் கல்கி உண்டாக்கினார் என்பது தெரிந்ததே. கல்கியின் நாவல்களை வரலாற்று நாவல்கள் என்று கூற முடியாது. வரலாற்றைப் பின்புலமாக ஆக்கிக் கொண்டு அற்புத நவிற்சி நாவல்களை உண்டாக்கினார். இதற்கு முன்பே தேசிய அரசியல் கலந்த 'தியாக பூமி' 'அலை ஓசை' போன்ற நாவல்களைப் படைத்தார். ஆங்கில அடக்குமுறை இவ்வகை நாவல்களைத் தடை செய்த பொழுது, அரசாங்கத்தைத் திசை திருப்பித் தேசியத்தை, குறிப்பாக இந்தியர்கள் வெளிநாட்டவர் ஆக்கிரமிப்பை எதிர்ப்பது, என்ற கருத்தியலை மறைமுகமாகப் 'பார்த்திபன் கனவு' என்ற வரலாற்று நாவலில் புகுத்தினார். ஆகையால் 'சிவகாமியின் சபதம்' நாவலைவிட இந்நாவல்

அரசியல் நாவலுடன் நெருங்கிய தொடர்புடையது. ஆகவே இவ்விருவகை நாவல்களும் கல்கியின் முழுமையான முருகியல் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன. ஸ்காட் தன் நாடாகிய ஸ்காட்லாந்து வரலாற்றை நாவல்களில் கருத்து மாற்றம் செய்தார். இந்நாவல்களில் ஆங்கில மொழி ஸ்காட்லாந்து நாட்டார் பேசும் ஆங்கில மொழிக்கு நெருக்கமான மொழியைக் கலந்தார். வாசகர்களுக்கு இக்கலப்பு மொழி மனநிறைவு கொடுக்கவில்லை, ஆங்கில மொழியில் புலமை இருந்தாலொழிய ஸ்காட் கையாண்ட மொழியைப் புரிந்து கொள்ள முடியாது. வரலாற்றுப் பின்புலத்தில் ஸ்காட் எழுதிய அற்புத நவிற்சி நாவல்களில் முதல் பிரிவிற்குச் சான்று : Wavorley, the heart of Midlothian: இரண்டாவது பிரிவிற்குச் சான்று : ஸ்காட்டின் புகழ் பெற்ற நாவல்கள். The Bride of Lammermoor. Ivanhoe Kenilworth Quentim Dwavard முதலியன. இப்பிற்பகுதியான அற்புத நவிற்சி நாவலைத்தான் கல்கியும் அவர் சந்ததியான வரலாற்று நாவலாசிரியர்களும் ஸ்காட்டின் பாணியைப் பின்பற்றினர். மு.மேத்தா போன்றவர்கள் எழுதுவது ஒரு பாணி. இது உரைநடைக் கவிதை நடையை ஒத்தது. வால்டர் ஸ்காட், நாவல்களைத் தவிர, அற்புத நவிற்சிப் பாணியில் கவிதைகளும் எழுதினார். தமிழில் வரும் வரலாற்று நாவல்கள் அனைத்தும் வரலாற்றைப் பின்புலமாக்கி அற்புத நவிற்சிப் பாணியைப் பின்பற்றுகின்றன. வாசகர்களுக்கு வரலாற்றைப் பின்பற்றினது நினைவுபடுத்துவதற்காக வரலாற்றுப் பாத்திரங்களும் சில குறிப்புக்களும் கையாளப்படுகின்றன. எந்த ஆசிரியரும் ஸ்காட்டின் வரலாற்றுக் கூறுகளில் உள்ள அறிவுப்புலமையை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், வரலாற்றுப் புலமை அற்புத நவிற்சிப்பாணியை தளர்வடையச் செய்வதால் ஆசிரியருக்கு வாசகர்களுடன் உள்ள தொடர்பு பாதிக்கப்படுமோ என்ற ஐயம் எழுகிறது. இது ஆராய்ச்சிக்குரியது. தமிழ் நாவல் இலக்கியத்தில் வகைமைகளில் அறிவுப் பார்வையைப் பயன்படுத்துவது திறனாய்வாளர்களின் கடமை. இன்னொரு வரவேற்கத்தக்க பாணி அமெரிக்காவிலிருந்து இங்கு பரவியது. இப்பாணியை

உண்டாக்கிய நாவல் The Airport இது விமான நிலையத்தைக் களமாகக் கொண்டு வாசகர்களை ஈர்ப்பது. அமெரிக்காவில் பெரிய விமான நிலையங்கள் எல்லாம் 92 பல நாடுகளிலிருந்து இறங்கும் பிரயாணிகள், பல நிமிடங்களுக்கு ஒரு முறை இறங்கம் அல்லது விமானங்களைப் பிடிக்கும் யாத்திரிகர்கள் உண்டு. 24-மணி நேரமும் சுறுசுறுப்பாயிருக்கும் நிலையங்களின் பல அம்சங்கள் இடைவிடாத தீனியை நாவலாசிரியன் எண்ண வோட்டத்திற்கும் கற்பனைக்கும் அளிக்கின்ற செய்திகள் இல்லாததால் பாலகுமாரன் எழுதி ஆனந்தவிகடனில் தொடர்கதையாக வெளிவந்த நாவல் விமான நிலையத்தின் சுற்றுப்புறத்தைப் பயன்படுத்துகிறது. கட்டமைப்பில் சில தளர்வுகள் இருக்கின்றன. போலச் செய்தல் என்ற இலக்கியக் கொள்கையை இயந்திரகதியில் பின்பற்றுவது அல்ல. அதற்கென்று சில விதிகள் எழுத்தாளரால் இனம் கண்டு கொண்டு பின்பற்றப்பட வேண்டும்.

*இலக்கிய வரலாறு*

'இலக்கிய வரலாறு' என்பதைக் காலவரையறை நோக்கில் ஒரு நாட்டைச் சேர்ந்த அல்ல குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த இலக்கிய ஆக்கத்தை ஆராய்வது என்கிறார் லெவல்ஸ்கி. இதுவும் சில புதிய பாதைகளை நோக்கிச் செல்லுகின்றது என்று சொல்லி மகிழ்ச்சியடைகிறார். இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒரு முக்கிய பிரச்சினை ஒரு பரந்த விளக்கத்தைக் கையாள்வதா அல்லது சில குறிப்பிட்ட முக்கியச் செய்திகளில் கவனம் செலுத்துவதா என்பது. இன்னொரு பிரச்சினை காலப்பகுதியை எவ்வாறு கையாள்வது.93 இப்பிரச்சினை இரண்டு கேள்விகளுக்கு விடைகளைத் தேடுகிறது. காலப்பகுதியை எவ்வாறு இனம் கண்டு கொள்ளுவது? காலப்பகுதிமாற்றத்திற்குக் காரணங்கள் யாவை?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் பல முக்கிய அறிவு நூல்கள் ஒரு தனி அறிஞரின் ஒன்று சேர்க்கும் கற்பனை முயற்சியுடன் வெளிவந்திருக்கின்றன. அவையாவன: இப்போலிதேதெயின்

(Hippolyte Taine) என்பவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய ஆங்கில இலக்கிய வரலாறு (4 பாகங்கள் 1863-64) ப்ரான்ஸெஸ்கோ டெஸான்க்டிஸ் இத்தாலிய மொழியில் எழுதிய இத்தாலிய இலக்கிய வரலாறு (2 பாகங்கள். 1870-71); ஜார்ஜ்ப்ராண்டிஸ் (George Brandis) ஜெர்மானிய மொழியில் எழுதிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மானிய இலக்கிய வளர்ச்சி (6 பாகங்கள் 1872-90); அக்காலத்தில் பெயர் பெற்ற கூர்தோப் W.J.Courthope ஆங்கிலக் கவிதையின் வரலாறு (6 பாகங்கள் 1895-1910). இவையெல்லாம் பலவிதக் கொள்கைகளை எப்படி ஒரு நாட்டுப் பண்புகள், வரலாற்றுக் குணங்கள் ஆகியவற்றை வரையறுக்கின்றன என்பதை ஆராய்கின்றன. இந்நூல்கள், இலக்கியத்தை உருவாக்கும் ஆற்றல் எது என்ற கேள்விக்கும் விடைதருகின்றன. சில ஐரோப்பிய அறிஞர்கள் இவர்களின் பாணியைப் பின்பற்றிப் பெரிய வரலாற்று நூல்களைப் படைத்திருக்கிறார்கள். சான்றாக, அந்த்வான் ஆதம் (Antoine Adam) என்ற பிரெஞ்சு அறிஞர் தன் தாய்மொழியில் பதினேழாம் நூற்றாண்டில் பிரெஞ்சு இலக்கியம் (1948-56) என்ற நூலை வெளியிட்டார். மற்றொரு இத்தாலிய அறிஞர் ஃப்ரான்ஸெஸ்கோ ஃப்லோரா (Franscesco Flora) என்பவர் ஐந்து பிரிவுகளில் கதைப் பாணியில் இத்தாலிய இலக்கியத்தை வர்ணித்தார் (1959). பல பெரும் ஆதாரங்களில் பலவற்றைக் கையாள்வதால், இத்தகைய வரலாறு பல அறிஞர்களின் கூட்டு முயற்சியால் எழுதப்பட்டது. தனிப்பட்ட அறிஞர்கள் இலக்கிய காலங்களையோ பகுதிகளையோ பற்றி நூல்கள் எழுதினர்.

ஒரு கூட்டுக்குழுவின் முயற்சிக்குச் சான்று 'ஆக்ஸ்போர்டு ஆங்கில இலக்கிய வரலாறு' என்ற 12 பகுதிகளாகத் திட்டமிட்ட நூல். இதை வெளியிடுவதற்கு வில்ஸன்(F.P. Wilson) என்பவரும் போமமி டாப்ரே (Bonamy Dobree) என்ற பிரெஞ்சு பெயர் கொண்ட திறனாய்வாளரும் பொறுப்பதிப்பாதிசியர்களாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். ஒவ்வொரு பிரிவும் எழுதுவதற்கு ஒரு தனிப்பட்ட ஆசிரியரிடம் கொடுக்கப்பட்டது. இதன் தடுக்க முடியாதவிளைவு,

தனிப்பிரிவுகள் அறிவைக் கையாண்டதில் சமமானதாக இல்லை. அணுகுமுறைகள் ஆசிரியருக்குள் வேறுபட்டன. சில ஆசிரியர்கள் கலாச்சாரப் பின்புலங்களிலும், முக்கியவகைமைகளிலும், இலக்கிய இயக்கங்களிலும், முக்கிய எழுத்தாளர்களிடமும் கவனம் செலுத்தினர். ஒவ்வொரு பிரிவும் பயனுள்ள நூல்பட்டியல் அடங்கியது. சில குறிப்பிட்ட பிரிவுகள் சிறந்த புலமையை வெளிப்படுத்தின. அமெரிக்கத் திறனாய்வாளர் டக்ள்ஸ் புஷ் (Douglas Bush) எழுதிய பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில இலக்கியம் (English Literature in the Earlier Seventeenth Century 1600-60) என்பது சிறந்த சான்று. பேராசிரியர் புஷ் அவருடைய அறிவுத்திறனாய்விற்கு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பெயர்பெற்றவர். இந்நூல் எழுத்தாளர்களைவிட வகைமைகளிலும் எழுத்து வகைகளிலும் கவனம் செலுத்துகிறது. இந்நூல் பலவகையான எழுத்துப் பாணியும் விரிவான பட்டியலும் அடங்கியது. போனமிடாப்ரேயின் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில இலக்கியம் (English Lieterature in the Early Eighteenth Centrury 1700-40) 1959ல் வெளிவந்தது. இது ஆசிரியர் கூறுவதுபோல, "இக்காலப்பகுதியில் இலக்கியச் செய்வினையைப் பற்றிப் பொதுவான கருத்துப்போக்கை விளக்குகிறது". ஆனால் இந்நூல் முக்கிய எழுத்தாளர்கள் மீது அக்கறை செலுத்துகிறது. கூட்டு முயற்சிக்கு இன்னொரு சான்று அமெரிக்க இலக்கிய வரலாறு (Literary History of the United States 1946) இதை எழுதுவதில் பல ஆசிரியர்கள் பங்கு வகித்தனர். பேராசிரியர் ராபர்ட் ஸ்பில்லர் தலைமையில் இரண்டு பிரிவுகளைக் கொண்ட இந்நூல், விரிவான பட்டியலையும் கொண்டது. இப்பட்டியல் காலத்திற்குக் காலம் திருத்தியமைக்-கப்படுகிறது. பல ஆசிரியர்கள் இந்நூலை எழுதுவதில் பங்கு கொண்டதால் இதன் பதிப்பாசிரியர் ஸ்பில்லாரின் நோக்கமாக "இந்நூல் தனித்தன்மை வாய்ந்த அமெரிக்க இலக்கியத்தின் மரபை வெளிப்படுத்துகிறது" என்ற உறுதியான கொள்கையைத் திட்டமிட்டபடி செயல்படுத்தவில்லை என்றார் லெவல்ஸ்கி. இதற்கு அவர் கூறம் காரணம், பல ஆசிரியர்கள் பங்கு

கொண்டது. 1511 பக்கங்களுடன் பல நூற்றுக்கணக்கான பெரிய சிறிய எழுத்தாளர்களைக் கொண்டதுமான இந்நூல் மேலே கூறியபடி திறனாய்வாளர்கள், ஆசிரியர்கள் குழுக்கூட்டங்களில் திட்டமிட்டபடி தங்கள் எழுத்துக்களில் கருத்துப் பரிமாற்றங்கள் அடிக்கடி செய்துகொண்ட பொழுதிலும் சில தளர்வுகளைத் தவிர்க்க முடியாது. இருப்பினும் இந்நூல் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக ஆகிவிட்டது. கொள்கைகளும் கருத்துக்களும் இணைந்து வருகின்றன. இது இலக்கிய வரலாற்றைக் கூட்டு முயற்சியினால்தான் தரமானதாக எழுத முடியும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது.

அண்மைக் காலத்தில் தனி அறிஞர்களால் எழுதப்பட்ட இலக்கிய வரலாற்றில் வரலாறு, திறனாய்வு வரலாறு, திறனாய்வு நோக்குகளைக் கலந்து விடுகின்றன. இதன் விளைவு முக்கியச் செய்திகள் அறிஞர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இதனால் நேர்முகமாக காலவரையறை பற்றிய சிந்தனையின்றி பல புதிய படிவங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இந்தப் போக்கை காலவரையறையில் கவனம் செலுத்தினாலும், சில முக்கிய இலக்கியப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன. சான்றுகள்: டன்னிலிருந்து கௌலிவரை நுண்பொருள் ஆராய்ச்சிமுறை (The Mataphysical Mode from Donne to Cowley (1969). இன்னொரு நூல் இம்முறையில் இங்கிலாந்தில் மன்னர் ஆட்சி திரும்பிய பொழுது மில்டனிடமிருந்து ட்ரைடன் வரையில் இம்முறையை ஆராய்கிறது. The Restoration Mode from Milton to Dryden 1974 இத்திறனாய்வு முறையை ஒரு இலக்கிய காலக் கோட்பாடாக ஆக்கி, அக்கால எழுத்தாளர்களை ஒன்று சேர்த்தவர் அமெரிக்கப் பேராசிரியரான (ஆங்கிலப் பேராசிரியரான இவ்வறிஞர் இப்பொழுது ஜப்பானியப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்; ஆங்கில இலக்கியத்தில், பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகள் இலக்கிய முறைகள் பற்றி நூல்கள் எழுதி புகழ்பெற்றவர்). ஏர்ல் மைனர் (Earl Miner) என்பவர். இந்நூல்கள் வரலாற்று இயக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் இவை நோக்கு மதிப்பீடு ஆகியவற்றின் சங்கமம்.

இவை இம்முறையை விளக்குகின்றன. இம்முறையில் தமிழ் இலக்கியத்தில் ஒரு இலக்கியப்பகுதியைச் சார்ந்த எழுத்தாளர்களை ஆராயலாம். இம்மாதிரி ஆராய்ச்சியால் எதிர்மறை எழுத்தாளர்களான போப்பும் டிரைடனும் அற்புத நவிற்சிக்கவிஞர்களுக்கு இடையிலான இடைவெளி குறுகியது என்பதை உணரலாம். இம்முறையில்தான் ஆங்கில இலக்கியத்தில் மனித நோக்குகளில் ஒரு முக்கியமாற்றத்தை வெளிக்கொணர்ந்தனர். இலக்கிய காலம் தன் கோட்பாடுகளால் எழுத்தாளர்களைப் பிரித்தாலும், இம்முறை அவர்களை நெருக்கமாக்குகிறது என்பது திறனாய்வுச் செய்தி.

***எண்ணங்களின் வரலாறு : சமூக கலாச்சார வரலாறு:***

இலக்கிய அறிஞர்களுக்கு எண்ணங்களின் வரலாறு (History of ideas) சமூக, கலாச்சார வரலாறு என்பவை இலக்கியத்தைத் தவிரப் பிற களங்களில் செயல்படத் தூண்டுகின்றன. தற்கால அறிஞருக்கு ஒரு இலக்கிய நூலின் தனித்தன்மையை, தொலைக்காட்சியில் பல கொள்கைகளைக் கொண்ட அறிஞர்களின் மூலம் விளக்கம் அளிப்பது போல, கொண்டாட வேண்டும் என்பது அவா. அத்துடனேயே அந்நூலில் எண்ணங்கள் எப்படி சமூகத்திலும் கலாச்சாரத்திலும் இரண்டறக் கலந்துவிட்டன என்பதை இனம் கண்டுகொள்ள ஆசையும் இருக்கிறது. இவ்வாறு கிளர்ச்சியூட்டும் ஆய்வுகளில் ஒரு இலக்கிய நூல் கலாச்சார வரலாற்றை விளக்கும் ஆவணமாகக் கருதப்படவில்லை. மாறாக, இலக்கிய மூலபாடம் தன் உள்ளுக்குள் கலாச்சாரத்தை ஈர்தததுவிடுகிறது என்பதை விளக்குகிறது. இதை உறுதிப்படுத்த நடை, உருவக் கூறுகளைக் கருத்தியலோடு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மேற்கு ஐரோப்பாவின் பழைய இலக்கிய மரபில், எண்ணங்களின் வரலாறு பல ஒழுங்குமுறைகளுக்கு இடம் கொடுத்திருக்கிறது. ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருந்து புகழ் பெற்ற ஆர்தர் லவ்ஜாய் என்பவர் (Arthur Love Joy) (The Great Chain of Beirg 1986) தத்துவக்கொள்கைகள் இலக்கியத்தில் எத்தகைய மாற்றங்கள்

அடைந்தன என்பதை விளக்கினார். இலக்கியப் படிப்பு என்பது உள்ளடக்கத்தைப் பொறுத்தது என்றார். ஆகையினால் இலக்கிய வரலாறு என்பது இயக்கங்களின் எண்ணங்கள் அடங்கிய ஒரு பதிவேடு என்று விளக்கினார். உண்மையாக இலக்கியம் என்றது தத்துவச் சிந்தனைகளின் நீர் கலந்த கலப்பு என்றார். தத்துவச் சிந்தனைகளில் எழுத்தாளர் தன் கற்பனையைக் கலந்து கொடுக்காவிட்டால் தத்துவத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள இடைவெளி குறைந்து மறைந்து குழப்பத்தை ஏற்படுத்தும். அவருடைய தலைசிறந்த நூல் The Great Chain of Being உயிருருவின் முக்கியசங்கிலி என்ற உயர்ந்த நூலை 1936ல் வெளியிட்டார். இதில் மனித சிந்தனையின் தொடக்கம் வளர்ச்சி பற்றிப் பிளடோவிலிருந்து ஜெர்மானிய தத்துவஞானியான ெ□ல்லிங் (Shelilng) வரை ஆராய்கிறார். இதில் தத்துவ முறைமையை அளவைக் கூறு எண்ணங்களாகப் (Unit ideas) பிரிந்து ஆராய்கிறார். இவர் எடுத்துக்கொண்ட எண்ணங்கள் இயற்கை என்ற முருகியல் கொள்கை, இறைமை நம்பிக்கை கொள்கை செவ்வியல் நம்பிக்கை நற்கதிக்குத் தொடக்ககாலத்தைச் சேர்ந்த மக்களும் பழமைக் காலத்துடன் உறவு கொண்ட எண்ணங்களும் ஆகும். பேராசிரியர் லவ்-ஜாயின் நூல் பரந்துபட்ட களத்தை இலக்கிய வளர்ச்சி நோக்கில் ஆராய்ந்தாலும், அவர் பதினெட்டாம் நூற்றாண்டில் இலக்கியத்திலும் சிந்தனையிலும் கவனம் செலுத்துகிறார்.

எண்ணங்களின் வரலாற்றிற்கு இன்னொரு சான்று. அமெரிக்க அறிவுலகைத் தாக்கிய பெர்ரிமில்லரின் The New England Mind: The Seventeenth Century (1939) என்பது. இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள் தங்கள் நாட்டின் அரசு போற்றி வந்த பழைய கத்தோலிக்க மதத்திலிருந்து பிரிந்தவர்கள். இவைகள் puritan என்ற வைதீக கிருத்துவர்கள். விவிலிய வேதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் எல்லாம் கப்பலில் அட்லாண்டிக் கடலைத் தாண்டி அமெரிக்காவில் குடியேறியவர்கள்.94 இவர்களுடைய ஆழ்ந்த தாக்கம் தொடக்க கால இயக்கத்தில் இருந்தது. நதேனியல் ஹாதார்ன் நாவல்களிலும் சிறுகதைகளிலும்

இந்த கிருத்துவ வைதீகத்தின் தாக்கம் இருந்தது என்று ஏற்கனவே சுட்டிக்காண்பித்திருக்கிறேன். இத்தாக்கத்தில் ஆதாரபூர்வ திறனாய்வாளர் பெர்ரிமில்லர் (Perry Miller) the New England Mind: The Seventeenth Centruy (1939) என்ற தன் நூலில், அமெரிக்காவில் கிழக்குக்கரை ஓரமாகக் குடியேறிய பகுதி புதிய இங்கிலாந்து என்று அழைத்தனர். இந்நூல் வைதீக மதத்தினர் மனநிலையை மிக அறிவு பூர்வமாக, நடுநிலையோடு ஆய்கிறது. இந்நூல் ஆங்கில அரசருக்கு அடிமைப்பட்ட புதிய இங்கிலாந்தில் வைதீக கிருத்துவ மதத்தின் வளர்ச்சியை விளக்குகிறது." என்றார். அவர்களுடைய மதமும் அறிவும் அண்டவியல் (Cosmology) மானிடவியல், சமூகவியல் சான்றுடன் விவரிக்கப்படுகிறது. இவ்வளவு செய்திகள் அடங்கியிருந்தும் இந்நூலின் கட்டமைப்பு எல்லாச் செய்திகளையும் ஒன்று சேர்ந்த ஒரு முழு அமைப்பை உருவாக்குகிறது. இதுதான் இந்நூலைத் தன் கட்டுரையில் சேர்த்ததற்குக் காரணம்.

திறனாய்வு வரலாற்றைப் பற்றிய நூல்கள் எல்லாம் வரலாற்று எண்ணங்கள் என்ற பகுதியைச் சேர்ந்தது என்று லெவல்ஸ்கி நம்பிக்கை தெரிவிக்கிறார். காரணம் திறனாய்வு முருகியலையும் கவிதையியலையும் சேர்ந்தது. ரெனெ வெல்லக் எழுதிய வெகு முக்கியமான நூலான நான்கு பகுதிகளைக் கொண்ட History of Modern Criticism ( 1750 லிருந்து 1950 வரை ) நூல் குறிப்பிடத்தக்கது. இது முதன் முதலில் ஐரோப்பியத் திறனாய்வு என்ற பகுதியை உள்ளடக்கியது. வெல்லக்கைக் திறனாய்வாளராகவும் கொள்கையாளராகவும் லெவல்ஸ்கி கருதுகிறார். வெல்லக் 1750-ல் இத்திறனாய்வு வரலாற்றைத் தொடங்கியதற்கு ஆசிரியர் காரணம் கூறுகிறார். அச்சமயத்தில்தான் கொள்கை நம்பிக்கையும் திறனாய்வு நோக்கும், இக்காலத்தில் உள்ளதுபோல் நம்பும்படியாக வெளிப்பட்டது என்கிறார். வெல்லக்கின் திறனாய்வு முருகியல் கொள்கை, இலக்கிய வரலாறு, செய்முறைத்திறனாய்வு எல்லாம் கலந்தது. வெல்லக் முறையை எண்ணங்களின் வரலாற்றில் ஒருவகை என்று இனம் கண்டு கொண்டு, வெல்லக் பொதுவான அறிவியல் சூழ்நிலையும், குறிப்பிட்ட தத்துவ ஒழுங்குமுறைகளின்

தாக்கத்தையும் திறனாய்வுக்கொள்கை மீது நம்பிக்கை கொண்ட நிலையிலும் இந்நூலை எழுதினார். ஆனால் இலக்கியச் செயல்வகையைச் சமாளிக்கமுடியாது என்று ஒதுக்கிவிடுகிறார். சமூக, அரசியல், கலாச்சார காரணகாரியத் தொடர்புகளையும் விலக்கிவிடுகிறார். இலக்கியத்திறனாய்வு வரலாற்றில் முக்கிய புள்ளிகளைத் தனி ஆசிரியர்களாகக் கருதி அவர்களுடைய திறனாய்வு நூல்களைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கொடுக்கிறார். ஒவ்வொரு நூலையும் முழுவதுமாக அவர் விளக்குவது திறனாய்வின் முழுமையும் வகைமையுமாகத் தோன்றுகின்றன.

அண்மைக்காலத்தில் எண்ணங்களைத் தனி அறிஞர்களிடமிருந்தோ அவர்களது நூல்களிலிருந்தோ ஆராய்ச்சி நோக்கில் பிரிக்கும் மரபைக் கண்டிப்பது பெருகி வருகிறது. முக்கியமாக மார்க்சியவாதிகள் இதை எதிர்க்கிறார்கள். அவர்களின் நம்பிக்கை இலக்கியத்தை உறுதியாக ஒரு நிலைக்கள கலாச்சாரத்தில் திணிப்பது என்ற போக்கு இலக்கியத்தைச் சமூகவியலாக மாற்றிவிடுகிறது. ஆனால் இத்தகைய ஆய்வுகள் கிளர்ச்சி ஊட்டுகின்றன அல்லது ஒளிவிளக்கம் செய்கின்றன. ஒரு குறிப்பிடத்தக்க சான்று பெயர் பெற்ற ஆங்கில மார்க்சியவாதியான ரேமண்டு வில்லியம்ஸ் (Raymond Williams) வெளியிட்ட கிராமப்புறமும் நகரும் (The country and the city). 1973ல் அச்சிட்ட நூல். இது பலதரப்பட்ட இலக்கிய நூல்களை வெகுநாகரிகமாக ஆய்வு செய்கிறது. இவ்வாய்வு பதினாறிலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை விவசாயப்பண்ணைகளிலும் கிராமங்களிலும் வாழ்க்கை மெய்ம்மைகள் இலக்கிய நூல்களில் எப்படி எதிரொலிக்கின்றன அல்லது எதிர்க்கின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றன. வில்லியம்ஸின் அடிப்படைக்கொள்கை, முதலாளித்துவ சமூகம், கிராம நகர வாழ்க்கையை எப்படிச் சீர் குலைக்கின்றன என்று நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விளக்குகிறது. இந்த மார்க்சிய நோக்கிலும் வகைமையிலும் செவ்வியல் மரபிலும் மிகக் கவனம் செலுத்துகிறார். இந்நூலின் குறிப்பிட்ட முக்கியத்துவம் இலக்கிய உருவகங்கள், கலாச்சார உண்மைகள்

ஒன்றுக்கொன்றுள்ள தாக்கத்தினால் மனித நினைவிலியை எப்படி உருவாக்குகிறது என்பதை வில்லியம்ஸ் விளக்குகிறார். இதனால் இந்நூல் முக்கியத்துவமடைந்து விட்டது.

இன்னும் சில இலக்கிய அறிஞர்கள் பகுப்பாய்வு முறையில் கலாச்சார விளக்கமுறையின் அடிப்படையை ஆராய்கிறார்கள். இந்நோக்கில் மிக முக்கியமானதும் புகழ்பெற்றதுமான நூல் எரிக் அவர்பாக் (Eric Auerbach) என்ற ஜெர்மானிய பேரறிஞர் எழுதிய மிமஸிஸ் (Mimesis) என்ற நூல். இத்தலைப்பு அரிஸ்டாடிலின் கவிதையை நினைவூட்டும். அவர் தான் நாடகம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. இதற்குக் கிரேக்க மொழியில் மிமஸிஸ் என்று பெயர்.95 தொல்காப்பியர் நிர்ணயித்த அகம், புறம் என்ற பிரிவுகள் அவர் காலத்திய சமூகநிலையை எதிரொலிக்கிறது. சில நியதிகளுடன் அவர்பாக் இன்றைக்கும் அச்சுறுத்துகிற ஜெர்மானிய அறிஞர்களின் பரந்த அறிவைப் பெற்றவர். இந்நூலுக்கு அவர்பாக் கொடுத்த இன்னொரு தலைப்பு The Representation of Reality in Western Literature அல்லது மேலை இலக்கியத்தில் உண்மையியலை விளக்குதல் என்பது. இது அவரது தாய்மொழியான ஜெர்மானிய மொழியில் எழுதப்பட்டு 1946ல் வெளியிடப்பட்டது. அதனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு 1953ல் அச்சிடப்பட்டது. இந்நூல் ஹோமரின் இரண்டாவது காப்பியமாகிய ஒடிஸியிலிருந்து இருபதாம் நூற்றாண்டில் பெயர் பெற்ற ஆங்கில நாவலாசிரியனுடைய நூல் To the Light House.96 வரை நினைவோடை உத்தியில் எப்படிச் சில பாத்திரங்கள் கரையிலிருந்து கலங்கரை விளக்க உல்லாசப்பிரயாணம் செய்கிறார்கள் என்பதை விவரிக்கிறது. பாத்திரங்கள் நாவலாசிரியரின் பெற்றோர்களை நினைவுப்படுத்துகின்றன. திறனாய்வாளர்கள் இந்நூலை இருபதாம் நூற்றாண்டில் எழுதிய சிறந்த நாவல்களில் ஒன்று என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஒப்புமை உத்தியிலும் இணைவரை உத்தியிலும் பல மொழிகளில் எழுதப்பட்ட நூல்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் எப்படி ஒன்றுபடுகின்றன என்று நுணுக்கமாக ஆராய்கிறார். இது இந்நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிய

அறிவுநூல். பல நூலாசிரியர்களின் நடைகளையும் ஆராய்கிறது. அவர்பாக் கையாண்ட பல நூல்களும் உண்மை தத்துவத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை என்ற செய்தி இந்நூலைப் படிப்பவர்க்குத்தான் விளங்கும். ரெனெவெல்லக் ரோமன் ஜேகப்சன் என்ற அறிஞர்களைப் போல அவர்பாக்கும் ஹிட்லரின் அடக்குமுறையால் ஐரோப்பாவிலிருந்து விலகி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தவர்.

கார்னெல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் எம்.எச். ஆப்ரம்ஸ் என்றவர் அற்புத நவிற்சி இயக்கத்தைப்பற்றிப் தன்னுடைய நூலான Natural Supernaturalism: Tradition and Revolution in Romantic Literature (இரண்டாவது பதிப்பு, 1975) என்பதில் ஒரு புதிய விளக்கம் கொடுக்கிறார். இது இற்றைய திறனாய்வு வளர்ச்சியில் ஒரு திருப்பம். இது வேட்ஸ்வொர்த்தின் எதிர்நோக்கில் தொடங்குகிறது. தன்னுடைய கூரிய அறிவைப் பயன்படுத்துவதால், இந்நூல் இந்நூற்றாண்டின் முக்கியத் திறனாய்வு நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவருக்கு அமைப்பியல் திறனாய்வில் பங்குண்டு என்பதை ஏற்கனவே பார்த்தோம். இது வேட்ஸ்வொர்த்தின் அற்புத நவிற்சிக்கவிதைத் திட்டத்தில் தொடங்கி பல இயக்கங்களை ஆராய்ந்து மனங்கவர்கிற இணைவரை உத்தியின் மூலம் அற்புத நவிற்சிக்விஞர்களை இணைந்துப் பல வகைமைகளை எழுதிய நூலாசிரியர்களுடன் தொடர்புபடுத்துகிறது. இம்முறையின் மூலம் அற்புத நவிற்சியின் பொது மதிப்பீடுகள், உருவக அமைப்பு, சிந்தனை நோக்கம், கற்பனை, கட்டமைப்பு முறை முதலிய கருத்துக்களை அலசுகிறார். இந்நூல் இன்னொரு நோக்கில் தாக்க ஆய்வைச் சேர்ந்தது. முக்கியமாக கிறித்துவ சமய எண்ணங்கள் எப்படிப் படிவங்களாக மாறுகின்றன என்பதை விளக்குகிறது. இப்பின்புலத்தில் இக்கருத்தைக் கொண்டு இங்கிலாந்தையும் ஜெர்மானிய நாட்டையும் ஒப்பிடுகிறது. இதன் முடிவு அற்புதநவிற்சி நோக்கமும் இலக்கியமும் மேற்கு ஐரோப்பிய கலாச்சாரத்தில் ஒரு முக்கிய கட்டம் என்பது.

அவர்பாக், ஆப்ரம்ஸ் எழுதிய நூல்கள் பல சிக்கல்களை ஆராய்ந்து எப்படி இலக்கிய மூல பாடங்கள் கலாச்சார மதிப்புக்கலை வெளியிடுகின்றன. தம் செய்திகளை நாட்டுக்கு நாடு அனுப்புகின்றன. என்ன மாற்றங்கள், என்ன என்ன புரட்சிகள், எப்படி மரபுகளை வேரறுக்கின்றன என்ற செய்திகளை ஆராய்கிறது. இந்நூலில் அடங்கியிருக்கும் திறனாய்வாளரின் கடமைகள் இலக்கிய வரலாற்று அறிஞர்களுக்குப் பாடமாக அமையும்.

*சில பொது முறைகள்:*

இலக்கிய வரலாற்று அறிஞர்களின் கவனம் பல களங்களில் சென்றாலும் பல நோக்குகள், முறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்தினாலும் அவர்கள் சில நடைமுறைகளைக் கையாள்கிறார்கள். இது அவர்களைச் சில குறிப்பிட்ட பண்புகளைப் பின்பற்றச் செய்யும். அத்தகைய அறிஞருக்கு அடிப்படைப் பண்பு ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவும் அகன்ற கற்பனையும் என்ற கருத்து வாசகர்களுக்கு வியப்பூட்டும். எனினும், அறிஞர்களின் பணிக்குகந்தது ஒரு முக்கிய சிக்கலைத் தேர்ந்தெடுப்பது. இதுதான் அப்பணிக்கு ஆதாரமும் தொடக்கமும். இத்தகைய சிக்கலை அவிழ்க்க முடியும் என்ற நம்பிக்கைக்கு தோற்றுவாய் அச்சிக்கலே. அச்சிக்கலை அவிழ்க்க அவ்வறிஞரின் அறிவார்வமும் அறிவார்ந்த ஐயமும் துணைபுரியும். இவ்வையம் தனக்கு முன் வந்த திறனாய்வாளர்களின் விளக்கங்களைத் தற்சார்பற்ற முறையில் அலசுவதற்கு உதவும். ஐயம்தான் அறிஞருக்கு, எப்படிப் புதிய ஆராய்ச்சியை கையாள்வது, எப்படி பழைய பிரச்சினைகளை அணுகுமுறை உத்தி மூலம் களைவது என்பதை உணர்த்தும், இதற்குச் சான்றாக, கிறிஸ்டஃபர் ஹில் என்பவர் எழுதிய மில்டனும் ஆங்கிலப் புரட்சியும் (1977) Milton and the English Revolution என்ற நூலை எடுத்துக் கொள்கிறார். மில்டன் ே□க்ஸ்பியருக்கு அடுத்தபடியாகப் பெரிய கவி என்று ஆங்கில இலக்கியத்தில் போற்றப்பட்டாலும், அவன் வைதீக கிருத்துவ மதத்தை (Puritanian) போற்றினான். அரசாட்சியையும்

மதகுருக்களின் ஆதிக்கத்தையும் வெறுத்தான். சுவர்க்க நீக்கத்தில் அரண்மையைச் சாத்தானின் இருப்பிடம் என்று வுர்ணித்தான். அவன் காலத்தில் அவன் நாட்டில் மட்டும் அரசனை விலக்கி மக்களாட்சியை வைதீக கிருத்துவர் கூட்டம் நிறுவியது. ஐரோப்பாவில் உள்ள மன்னர் ஆட்சியை மதித்த பல நாடுகள் மன்னரைக் கொன்ற மக்கள் ஆட்சியை பகிரங்கமாக எதிர்த்தனர். மில்டன் 'மன்னர் கொலை'. ஒரு தற்காப்பு விளக்கம் என்ற துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டார். அவனுடைய பெண்கள் வெறுப்பு அவன் காப்பியத்தில் மறைமுகமாக வெளிப்படுகிறது அவன் மூன்றாவது மனைவியை மணந்து தேன் நிலவு காலத்தில் 'விவாகரத்து' என்பதை ஆதரித்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எழுதுவதில் காலம் கழித்தான். இப்பின்புலத்தில்தான் லெவல்ஸ்கி ஹில் எழுதிய மில்டனைப் பற்றிய நூலை ஏன் பரிந்துரை செய்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் ஒரு தலை சிறந்த வரலாற்று அறிஞர். மில்டனைப்பற்றிய நூலை ஏன் பரிந்துரை செய்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் ஒரு தலைசிறந்த வரலாற்று அறிஞர். மில்டனைப் பற்றிய நூலை எழுதுவதற்கு முன் மில்டன் திறனாய்வாளர்கள் கேட்காத கேள்விகளுக்கு விடைகளைத் தேடினார். அக்கேள்விகளாவன : (1) கவிஞனுடைய அடிப்படை எண்ணங்கள், அவனுடைய உரைநடை நூல்களிலும் கவிதைகளிலும் வெளிப்படுத்தியவை, அவனுடைய காலத்தில் வைதீக வட்டத்தைச் சார்ந்தனவா? (கேட்கப்படாத கேள்வி: அவன் சொந்தக் கருத்துக்களா? (2) இந்த இனம் கண்டு கொள்ளக்கூடிய முறையை பயன்படுத்தினால் நாம் இது காறும் கொண்டிருந்த திறனாய்வுக் கருத்தை (கவிஞனுக்கும் கவிஞனுடைய நூல்களுக்கும்) எப்படி மாற்றலாம்? இக்கேள்விகளுக்கு விடைகளைக் கண்டுபிடித்தால், இக்கேள்விகளிலிருந்து விளைந்த அறிஞருக்கே உரிய தற்காலிக ஊகத்தை உறுதிப்படுத்த முடியும். இவ்ஊகம் அவருடைய அறிவுக்கற்பனையிலிருந்தோ அல்லது மில்டன் திறனாய்வு அறிவிலிருந்தோ வெளிக்கொணர்ந்தது. இவ்வூகம் அவரை மில்டன் திறனாய்வுப் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கும்.

தமிழ்நாட்டில் இந்நூற்றாண்டில் கவிதைத்திறனாய்வில் பாரதிதாசனும் மில்டன் நிலையிலேயே இருக்கிறார். வ.ரா. அவர்களின் பாரதியாரின் முதல் வாழ்க்கை வரலாற்றில் அக்கவி பாரதியாருக்கு நெருங்கிய நண்பர் என்பதை பல சான்றுகளுடன் விளக்குகிறார்.97 டி.எஸ்.எலியட் தன் குருவான எஸ்ராபவுண்டு யூதர்களை வெறுத்து அவ்வெறுப்பைத் தன்னுடைய கவிதைகளில் அச்சமின்றி வெளிப்படுத்தியபோது ஒரு தற்காப்புமுறை விளக்கத்தைக் கொடுத்தார். வெறுப்பு என்பது தனி மனிதனைச் சார்ந்தது அல்ல. கவிஞரைச் சாரும். 98 தற்சார்பு என்ற நோக்கு பாரதி, பாரதிதாசன் கவிஞர்கள் திறனாய்வாளர்களைச் சாரும். இவ்விலக்கிய ஆபத்திலிருந்து அவ்வெழுத்தாளர்களைக் காப்பாற்றுவது இற்றைய திறனாய்வின் கடமை.

இதற்கு அடுத்த படிகள் பொறுமை, கவனம், அறிஞருக்கே உரிய ஒழுங்குமுறை. எழுத்தாளரைப்பற்றிய திறனாய்வுக்குத் தொடக்கம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வெளியிட்ட சிறந்த ஆங்கில இலக்கியப் பட்டியல் Cambridge Bibliography of English Literature) ஸ்பில்லர் தொகுத்த Literary History of the United States, மற்றும் ஆண்டு தோறும் வெளிவரும் அமெரிக்க மொழிக்கழகத்தின் MLA International Bibliography அமைப்பிலும் இலக்கியச் செய்திகளைத் தொகுத்துக் கொடுப்பதிலும் அமெரிக்க இலக்கியப் பட்டியல் ஆங்கில் இலக்கியப் பட்டியலைவிடச் சிறந்தது, பயனுள்ளது. திரும்பக் கூற வேண்டுமானால் தமிழ் இலக்கியப் பட்டியல் இன்று இல்லாதது தமிழ் அறிவுலகம் செய்த மிகப் பெரிய தவறு. இப்பட்டியல் இல்லாதது தமிழ் ஆராய்ச்சியின் அடித்தளத்தைத் தகர்ப்பது போலாகும். இதன் துணையில்லாது ஆராய்ச்சி செய்வது பாலைவனத்தில் கானல் நீரைத் தேடிச் செல்வதாகும். இதற்கு முதற்படி எழுத்தாளர்கள் பட்டியல்கள். இப்பட்டியல்களை டாக்டர் பட்டத்திற்காக மேலனுப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தனி எழுத்தாளர்களைப் பற்றி வெளியிட்ட நூல்களும் இம்முறையே குறிப்புக்களெல்லாம் குற்றமற்றவைதானா? என்று பரிசோதித்தபிறகு அவைகளை எழுத்தாளர்கள் பெயர்களின் மூலம் வெளியிடலாம்.

பல்கலைக்கழங்களின் சார்பாக இதன் அடிப்படையில், தமிழ் இலக்கிய பட்டியல் தயாரிப்பது எளிது. இதற்கு MLA யின் பாணியைப் பின்பற்றலாம். ஆண்டுக்கு ஒரு முறை இலக்கியப்பட்டியலை வெளியிடலாம்.

மேலே கண்ட தலைப்புக்கு அடுத்தபடியான கட்டங்களில், இலக்கிய அறிஞர்களின் பண்புகளை மேலும் எடுத்துக்கூறுகிறார் லெவல்ஸ்சி: தான் சேகரித்த செய்திகளை ஆராய்வது, இன்றியமையாதென்றால், தன் ஊகத்தையும் தனது திட்டத்தையும் திருத்தியமைப்பது, வாதத்தைத் திட்டமிடுவது, திரட்டிய செய்திகளைப்பொறுத்து அதைச் சரிப்படுத்துவது. இதற்கு இலக்கிய அறிஞருக்கு பரந்த அறிவு, குற்றமற்ற அல்லது வழுவாத தீர்ப்பு என்ற பண்புகள் புதிய செய்திகளைச் சேகரிப்பது, அவைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது, இப்பண்புகளை எல்லாம் தான் எழுதிய நூலின் ஒருமைப்பாடு கொள்கையை உறுதி செய்யும் கட்டுப்பாடு என்பது ஒரு நூலின் அடித்தளம் கிறிஸ்டஃபர் ஹில்லின்மில்டனைப் பற்றிய ஆராய்ச்சியில் சில தளர்வுகள் உள்ளன. திறனாய்வு நோக்கில், முடிவுகள் கூறும்பொழுது, தீர்ப்புக் கூறுவதில் தான் வகுத்த எல்லைக்குள் தன் திறனாய்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் மிகவும் புத்தி கூர்மையுடன் மில்டனை ஒரு அரசியல் கவிஞர் என்ற நோக்குடன் மில்டனின் புதிய பாரிமாணங்களை வெளிக்கொணர்கிறார். ஆனால் இலக்கிய நோக்கு அரசியல் நோக்கைவிட குறைவாகயிருக்கிறது. இதே குறையை எப்படி மில்டனின் ஆற்றல் மிக்க கற்பனை எப்படி தன் அரசியல் அநுபவத்தை பெரும் மாற்றங்களுக்கு உள்ளாக்குகிறது என்ற விளக்கத்திலும் காணலாம். ஆனாலும் அவருடைய நூல் திறனாய்வாளரின் அறிவுத் திறனுக்குச் சவால்விடுகிறது. இது தெளிவாகவும், உறுதியாகவும், அறிஞரின் நகைச்சுவையைக் கொண்டதாகவும், தெரிகிறது. அவருடைய வாதத்தில் செய்திகளைச் சேகரித்தல் அவருடைய திறனுக்குச் சான்று. அவருடைய எழுத்துக்கலை கவர்ச்சியுடையது.

வரலாற்று அறிஞர்கள் அநேகமாக எல்லோரும் பல வகைப்பட்ட திறமைகள் உடையவர்களாக இருக்கவேண்டும் குறிப்பாக, அவர்களுக்கு இரு அன்னிய மொழிகளாவது தெரிந்திருக்கவேண்டும். ஃப்ரெஞ்சு மொழியும், ஜெர்மானியமும், இன்று வெளிவரும் திறனாய்வுக்கட்டுரைகளை எழுதுபவர்கள் இம்மொழிகளின் சொற்களையோ சொற்றொடர்களையோ சர்வசாதாரணமாகப் பயன்படுத்துகிறார்கள். நம்நாட்டில் இருக்கும் அறிஞர்களுக்கு மலையாளம் அல்லது கன்னட மொழி தெரிந்திருக்கவேண்டும் என்ற நம்பிக்கை, கொள்கையாக மாறக் காலம் காத்திருக்கிறது. ஆங்கிலம் இன்றியமையாதது என்றாலும் அதைப் பயில தன்னம்பிக்கை வேண்டும். 'ஆங்கில மொழி அறிவு இவ்வுலகத்தின் சாளரம்' என்று பேரரறிஞர் ராதாகிருட்டினன் சொன்னார். ஆங்கிலம் தெரிந்தால் டாக்டர் பட்டத்து ஆராய்ச்சி மாணவர்கள் நூல்நிலையத்தில் கூச்சமின்றி நுழைந்து பல நூல்களைப் பயன்படுத்தலாம். ஏட்டுச் சுவடிகளைப் படிக்க தனித்தன்மை வாய்ந்த அறிவு வேண்டும். Paleography என்ற கலையைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கிறார்கள் என்று கேள்வி. இலக்கிய அறிஞனுக்கு மொழியிலே நல்ல அறிவும் இருக்க வேண்டும். பல கலைகளில் பரிச்சியம் இருப்பது நல்லது. இலக்கிய அறிஞர்களில் சிலரே பரந்த அறிவை உடையவர்களாக இருக்கிறார்கள். டாக்டர் பட்டத்து மாணவர்கள் தான் இத்தகைய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*பின்னிணைப்பு - 1 & 2*

1. இதன் சமீபகால விளைவு ரஷ்யாவில் அமெரிக்க கலாச்சாரத்தின் அளவு கடந்த பாதிப்பால் இரவு கேளிக்கைகள், பால்சுதந்திரம் போன்றவற்றை மக்கள் மதிக்கிறார்கள் என்றும் கணவன் - மனைவிக்குள் இருந்த மரபு நம்பிக்கை உடைந்துவிட்டது என்றும் சமூகவியல் விற்பன்னர்கள் கூறுகிறார்கள். கொர்பசேவ் இப்பொழுது அமெரிக்காவில் குடிபுகுந்து ஒரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். உடைந்த குடியரசை ஒன்று சேர்க்க முயல்கிறார்கள் இன்றுள்ள ரஷ்ய அரசியல்வாதிகள் யெல்ஸ்டின் உட்பட.

2. பார்க்க : வில்சன் புகழ்பெற்ற கட்டுரையான ''Marxism and Literature'', 20th Century Leterary Criticism, 241-252.

3. நொபெல் பரிசுபெற்ற அமெரிக்க யூத எழுத்தாளரும் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவருமான சால்பெல்லோ எழுதிய நாவல், The Dean's December என்பதில் உள்ள கதாநாயகன் வில்சனின் சாயல் உள்ளது என்று நம்பப்படுகிறது.

4. இக்கட்டுரையை Mitton R. Stern & Seymour L. Gross Ed. The Twentieth Century, New Delhi: Light & Life Publishers 1975 என்ற தொகுப்பில் காணலாம். இது The Viking Press என்ற வெளியீட்டாரால் அச்சிடப்பட்டது.

5. இதற்குப்பிறகு ராபர்ட் ஸ்பில்லர் (Robert Spiller) என்ற பேராசிரியரின் கூட்டுமுயற்சியால் பல அறிஞர்கள் எழுதிய Literary History of the United States (1947) என்ற இந்நூல் ஒரு அறிவுக் காட்சிப்பொருளாக ஆகிவிட்டது. இதைத் தமிழ் இலக்கிய வரலாறுக்கு மாதிரிப் படிவமாகக் கொள்ளலாம். எப்படி இலக்கிய வரலாற்று பிரச்சினைகளையும் சிக்கல்களையும்

தீர்த்து அறிவுபூர்வமான வரலாற்றை எழுதலாம் என்பதை அறியலாம். எந்த தமிழ் இலக்கிய வரலாறும் திறனாய்வு வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது. கதைப்போக்கைப் பின்பற்றுவதால் வரலாறு ஒரு வழிகாட்டியாக மாறிவிட்டது. வரலாறு (history) என்பது இலக்கிய வரலாற்றியலைப் (Literary historio - graphy) பின்பற்றவேண்டும்.

6. பேராசிரியர் ராமன் செல்டன் தன்னுடைய திறனாய்வு அறிமுக நூலான A Reader's Guide to Contemporary Literary Theory என்பதில் மார்க்சியம் என்பதைப்பற்றி ஒரு பயனுள்ள விரிவுரை அளித்திருக்கிறார். ஆனால் அவரை மார்க்சியவாதி என்று கூறமுடியாது. டெர்ரி ஈகில்டன் என்ற பெயர்பெற்ற மார்ச்சியவாதி Literary Theory : An Introduction என்ற நூலில் மார்க்சியத்தை ஒதுக்கியது ஒரு புதிர்; இருந்தாலும்கூட மார்க்சியம் என்பதைப்பற்றி ஒரு பட்டியல் இணைத்திருக்கிறார். (பக் 230-231) புதிய அமெரிக்கத்திறனாய்வு நோக்கில் முதல்முதல் எழுதப்பட்ட, வில்லியம் விம்சாட் கெனியரும் கிளியான்த்ப்ரூக்சும் சேர்ந்து எழுதிய Literary Criticism : A short history, New Delhi : Oxford IBH Publishing Co. 1947.

7. சி. ரகுநாதன். பாரதியும் ஷெல்லியும். மதுரை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். மூன்றாம் பதிப்பு. 1989. பிரெஞ்சு புரட்சியின் கொள்கைகளை பாரதியார் தன் கட்டுரைகளில் வேதாந்த நோக்கில் விவரமாக விவரித்திருக்கிறார். அவைகளில் அவர் ஈடுபாடும் உத்வேகமும்தான் ெ□ல்லியின் தாக்கத்தை அடையாளம் கண்டுகொள்ளலாம். பார்க்க : Sachithanandan. The Impact of Western Thought on Bharati, Annamalai Nagar : Annamalai University, revised reprint, 1992 . 55. 'பாரதியும் ஷெல்லியும்' என்ற முழு அதிகாரத்தையும் பார்க்கவும். ஷெல்லியின் தாக்கத்தினால்தான் பிரெஞ்சு புரட்சிக் கொள்கைகள் அவருக்கு அறிமுகமானது என்ற திறனாய்வுக்கூற்று தமிழ் இலக்கியத்திறனாய்வு உலகத்தில் ஒரு புராணிக நம்பிக்கை ஆகிவிட்டது என்பதற்கு பார்க்கவும் : "Western Influence on

Tamil Poetry". Encyclopaedia of Tamil Literature, Vol. I Chennai : Institute of Asian Studies 1990, 73 - 103. பிரெஞ்சு தேசீய கீதத்தின் முதல் பாதியை இரண்டுவிதமாகப் பாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார். புரட்சிக் கொள்கைகளைக் கட்டுரையில் விளக்கியிருக்கிறார்.

8. A Reader's Guide to Contemporary LIterary Theory 23 - 51. அறிவு நோக்கத்தில், மார்க்சியத்தில் நம்பிக்கையில்லா திறனாய்விற்கு, பார்க்க William Winsatt Jr. and Cleanth Brooks, Literary Criticism. A short history . 468 - 73 : 648 - 50 : 729 -32. இம்மாதிரி தளர்வுகளைச் சுட்டிக்காட்டும் D.W. Fokkima and Elrnd Ibsch. Theories of Literature in the Twentieth Centrury. London : C. Hurst and Comapny, 1977. என்பதில் பார்க்கலாம்.

9. இக்கொள்கையை மறுத்து மார்க்சியத்தில் உள்ள முரண்பாடுகளையும் தளர்வுகளையும் பொக்கமாவும் இப்சும் 8-வது அடிக்குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்ட நூலில் விளக்குகிறார்கள்.

10. விட்மன், போ சான்றுகள் என்னுடையது.

11. மார்க்சினுடைய தாய்மொழி ஜெர்மானியம் ஆகியதால் அம்மொழியிலேயே அவர் தன்னுடைய கட்டுரைகளை எழுதினார்.

12. போரிஸ் பாஸ்டர்நக் (Boris Pasternak) என்பவர் எழுதிய டாக்டர்ஸிவாகோ (Dr. Zivago) என்ற நாவலுக்கு நோபல்பரிசு வழங்கப்பட்டது. அவருக்குப் பரிசு வாங்க அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை. அலெக்சாண்டர் சோல்சனஸ்டின் என்பவரும் பல இன்னல்களை அநுபவித்தார். அவர் ஒரு நாவலாசிரியர், யூதரும்வட.

13. முன் அதிகாரத்திலுள்ள குறிப்பைப் பார்க்கவும்.

14. லியோ டால்ஸ்டாய் (Leo Tolystoy) உலகத்தின் பெரிய நாவலாசிரியர்களில் ஒருவர் என்று கருதப்படுகிறார்

அவர் கருத்துக்கள் மகாத்மா காந்தியை தாக்கத்திற்குள்ளாக்கியது. 'போரும் சமாதானமும்' (War and Peace) என்ற பெரிய நாவல் பலபகுதிகளில் வெளிவந்தது. சிறுகதைகள் எழுதுவதிலும் வல்லவர்.

15. பால்ஸாக் என்பவர் பெரும் பிரெஞ்சு நாவலாசிரியர்களில் ஒருவர். அவருடைய நாவல்கள் எல்லாம் மனித இன்பியல் (human comedy) என்ற தொகுப்பைச் சார்ந்தவை.

16. இப்பொழுது சீனாதான் மார்க்சிய பழமைவாதத்தில் பிடிவாத நம்பிக்கை கொண்டிருக்கிறது. அங்கு நடந்த மாணவர் கிளர்ச்சியினால் அதன் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. இருப்பினும் அந்நாட்டில் பொதுவுடமை ஆட்சியாளர்கள் கைப்பிடியை விட்டு இன்னும் ஆட்சி விலகவில்லை.

17. உளவியலைப்பற்றி இங்கு கொடுத்திருக்கும் விளக்கம் என்னுடைய நூலான ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம் என்பதிலிருந்து எடுக்கப்பட்டது (பக் 198 - 242), சில மாற்றங்களுடன், கீழேயுள்ள குறிப்பு 18-ஐப் பார்க்கவும்.

18. பார்க்க : Wellek and Warnen. Theory of Literature New York : Harvest Books (paper back). 1950 இந்நூலில் வெல்லக் உளவியலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பைத் தனது பரந்துபட்ட ஒப்பியல் விளக்கத்தைக் கொடுக்கிறார். 69 - 81 பக்கங்களில்.

19. இப்பகுதியின் விளக்கத்தை இந்நூலில் பார்க்கவும்.

20. இன்று மேற்கு ஐரோப்பாவில் திறனாய்வு வளர்ச்சியில் இத்தகைய கருத்துக்கள் மூட நம்பிக்கைகளாகவே கருதப்படுகின்றன. இங்கிலாந்தில் பல்கலைக்கழகங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேக்கம், இலத்தீன் ஆகிய செவ்வியல் இலக்கியங்களை உண்மையான இலக்கியங்களாகக்

கருதி ஆங்கில இலக்கியத்தை ஒதுக்கிவிட்டனர். ஹோமரை அவரது மொழியில் படிப்பதே உன்னதக் கல்வியாக அறிஞர்கள் கருதினார். இதற்கு கைலாசபதியின் Tamil Heroic Poetry. Oxford University Press, 1967 என்ற நூலைப் படிக்கவும் அல்லது இந்நூலை ஆதாரமாகக் கொண்ட வீரயுகத்தைப்பற்றிய அவருடைய கட்டுரைகளை ஒப்பியல் இலக்கியம் என்ற நூலையும் பார்க்கலாம்.

21. டி.எஸ். எலியட்டின் கவிதையான 'பாழ்நிலம்'என்பதில் இந்த தீர்க்கதரிசி ஒரு குறிப்பிட்ட பாத்திரமாக வருகிறார். கிரேக்க நாடகமான 'ஈடிபஸ்' என்பதில் ஒரு முக்கிய பாத்திரமாக வருகிறார். ஈடிபஸ் அரசன் அவன் தாயையே மணந்து விவரிக்கமுடியாத துன்பங்களை அநுபவிப்பான் என்பதை ஏற்கனவே அறிந்தவர். கிரேக்க இலக்கியத்தை விளக்கும் தொடக்க அதிகாரத்தைப் பார்க்கவும்.

22. அவருடைய நாவல் 'இறந்தகாலத்திற்கு நினைவு திரும்புதல்' (Remembrance of Things Past) என்ற நாவல் வயோதிகனான கதாநாயகன் நினைவோடை உத்தியின் மூலம் தன் நினைவைக்கொண்டு இழந்த காலத்தைப் திரும்பப் பெறுகிறான். இந்நாவல் இவருக்கு மேலை இலக்கியத்தில் புகழை ஈட்டித்தந்தது. நாவல் தலைப்பின் தமிழாக்கம் பிரெஞ்சு தலைப்பின் மொழி பெயர்ப்பு. ஆங்கிலத் தலைப்பு பரவலாகப்பயன்பட்ட போதிலும் ஒப்பிலக்கிய அறிஞர்கள் அது தவறானது என்கிறார்கள். காரணம் தலைப்பு ஷேக்ஸ்பியரின் பெயர் பெற்ற பதினாலடிக்கவிதை-யொன்றிலிருந்து கடன் வாங்கியது.

23. Of Time and the River, You can't go Home Again என்ற நீண்ட கதைகளை எழுதிப் பெயர் பெற்றவர். இந்நூற்றாண்டின் முதல் பகுதியைச் சார்ந்தவர்.

24. அடிக்கருத்தியலைப்பற்றிய தொழில் நுட்பச் செய்திகளுக்கு, பார்க்கவும் : ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம். 139 - 165.

25. செக்கோஸ்லாவாகியவில் பிறந்த கஃப்கா என்ற நாவலாசிரியர் இன்றும் ஒரு புதிர். அவருடைய நாவல்கள் The Castle, The Trial என்பன. இரண்டாவது நாவலில் கதாநாயகன் செய்த குற்றத்திற்காக நீதிபதி அவனுக்கு அழைப்பாணை விடுகிறார். அவனுக்கே அவன் செய்த குற்றம் தெரியவில்லை. நீதிமன்றத்திற்கு சென்றபோது அது மன்றமாகக் காட்சியளிக்கவில்லை. நீதிபதி நீதிபதியாகத் தோன்றவில்லை. திறனாய்வாளர்கள் அலசலில் இந்நாவல் மனிதனின் குற்ற உணர்வை தொடர் உருவகமாக வர்ணிக்கிறது என்கிறார்கள். நாவலாசிரியரின் அடிமனத்திலிருந்து வந்த தந்தையிடம் ஒரு இனம்புரியாத பயம் என்றும் கூறுவர். கஃப்கா ஜெர்மானிய மொழியைக் கையாண்டார்.

26. எழுத்தாளரைப்பற்றி ஃப்ராய்டின் கட்டுரைக்கு பார்க்கவும்: Creative Writers and Day Dreaming 20th Century literary Criticism 36 - 43. கொள்கைகளுக்கு தற்காப்பு விளக்கம் பார்க்கவும் :- ஃராய்டின் உளவியல் Lionel / Trilling. ''Freud and Literature''. 20th Century Criticism 276 - 291.

27. இந்த பிரெஞ்சு நாவல் ஃப்ராய்டின் கொள்கைகளுக்கு மிகநெருங்கியது. விளக்கத்திற்கு, மேலே 26 அடிக்குறிப்பில் சுட்டிக்காண்பிக்கும் பேராசிரியர் ட்ரில்லிங் இந்நாவலை அவர் கட்டுரையில் விவரிக்கிறார்.

28. இதற்கு Freudian Slip அல்லது ப்ராய்டினுடைய வழுக்கள் என்று பெயர்.

29. லயொனல் டிரில்லிங் (Lionel Trilling, 1905) நியூயார்க்கைச் சேர்ந்தவர்.. யூதர், மாத்யூ அர்னல்டு கட்டுரைகளிலும் ப்ராய்டு உளவியலிலும் அதிகாரபூர்வமான திறனாய்வாளர் என்று பெயர்பெற்றவர். கல்விநோக்கில் தாராள மனப்பான்மையுடையவர். சென்ற இரண்டு நூற்றாண்டுகளிலும் கலாச்சாரம் முழுமையடைந்து-விட்டது என்ற நம்பிக்கையுள்ளவர். நியூயார்க் நகரத்திலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்தவர். The Liberal

Imagination (1956) என்பது அவருடைய புகழ்பெற்ற கட்டுரைத்தொகுதி.

30. விளக்கத்திற்கு பார்க்க ''Myth'' மேலை இலக்கியச் சொல்லகராதி (1983)

31. ஆங்கில இலக்கியத்தில் நாடோடிப் பாடல்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கிறார்கள். எழுதியவர் யார் என்று தெரியாமல் வழிவழியாக வந்த நாடோடிப்பாடல்கள்; மற்றொன்று அவைகளைப் பின்பற்றிக் கவிஞர் ஒருவர் எழுதிய அத்தகைய பாடல்கள். பின்வகைக்குப் புகழ்பெற்ற சான்று La Belle Dame Sans Merci என்ற கவிதை. இக்கவிதையின் பிரெஞ்சு மொழித் தலைப்பு. 'கருணையற்ற ஒரு அழகிய பெண்' இது நனவும் கனவும் கலந்த ஒரு சிறந்த கவிதை. இத்தகைய கவிதைகளை இலக்கிய நாடோடிப்பாடல்கள் என்பர்.

32. ஆங்கில முதுகலை மாணவர்களுக்காக எழுதப்பட்ட விரிவாக்கம் The Ancient Mariner என்ற என்னுடைய நூலைப் பார்க்கவும். இது சென்னையிலுள்ள ஓரியன்ட் லாங்மன்ஸ் வெளியீடு. இது பல திறனாய்வுப் பிரச்சினைகளை ஆராய்கிறது.

33. பார்க்க . Mand Bodkin: Archetypal Patterns in Poetry (1934) இந்த ஆங்கிலப் பெண்மணிதான் முதல் முதலில் யூங்கின் உளவியலை ஆங்கிலத் திறனாய்வில் நுழைத்தார்.

34. அரவிந்தரின் திறனாய்வில் ஒரு குறை சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. திறனாய்வாளர்கள் அவருடைய சீடர்களாக மாறிவிடுகிறார்கள். அதன் விளைவாக, அவருடைய கூற்றுகளைத் திறனாய்வாளர்கள் மதநம்பிக்கைகளாக மாற்றிவிடுகின்றனர். இன்னும் ஒரு குறை அரவிந்தர் ஒரு பெரிய கவிஞர் (எசகியல் போன்ற ஆங்கில இந்தியக் குழு அவர் கவிஞர் என்பதை மறுத்தாலும்கூட) அறிஞரும்கூட. அவர் கிரேக்கம், இலத்தீன், தான்தேயின் செவியல் இத்தாலிய மொழி முதலியவைகளைப் பயின்றவர். இவற்றின் தாக்கம் அவர் கவிதைகளில் தென்படுகின்றது. அவரைப் போல விற்பன்னரை,

ஒரு இலட்சிய திறனாய்வாளரை நம் நாடு என்றும் உருவாக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

35. பார்க்கவும் இலக்கியமும் சமூகவியலும் ஒப்பிலக்கியம்: ஓர் அறிமுகம் . 243 - 291.

36. க. கைலாசபதி. சமூகவியலும் இலக்கியமும். சென்னை: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1979.5.

37. இக்கட்டுரைகளை அவருடைய ஒப்பியல் இலக்கியம் என்ற நூலில் பார்க்கலாம்.

38. ஜெயகாந்தனின் பரிணாம வளர்ச்சியில் இறுதிக்கட்டத்தில் வேதாந்த நம்பிக்கையை நெருங்கியதில் கைலாசபதி கண்டித்ததும் க.நா. சுப்பிரமணியத்தின் மார்க்சியத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்ததற்கும் அவரைக் கண்டனம் செய்ததும் அவருக்கு அக்கொள்கையின் ஆர்வம் உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது.

39. பார்க்க ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம். 384. இது இந்நூலின் அடிக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

40. சமூகவியல்துறை, 'சமூகவியல்' என்ற ஒரு புதுப்பெயர் விஞ்ஞானத்திற்கு நெருங்கிவிட்டது. பழைய முறையில் இலக்கியத்துடன் உறவாடிக்கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லப்போனால் அல்லது அடையாளச் சிக்கலினால் அத்துறை வாடுகிறது. இலக்கியத்தை ஒதுக்கினால் அதன் அடையாளத்திற்கு ஆபத்து என்பதைக் காட்டுகிறது.

41. இதற்கு உயர்மட்ட மன்றத்தில் வந்த ஷாபானு வழக்கைச் சான்றாகக் கொள்ளலாம்.

42. பாத் என்பது இங்கிலாந்தில் கடலோரத்தில் உள்ள நகரம். பல ஆங்கில நாவல்களில் இடம் பெற்றது.

43. A Reader's Guide to contemporary Literary Theory. 129. பார்க்க 128 - 148.

44. ஸௌந்தர்ய லஹரி - பாஷ்யம். சென்னை : ராமகிருஷ்ண மடம், 1979 - 1.

45. 'லலிதா ஸகஸ்ரநாமம்' தமிழ் மொழிபெயர்ப்பிற்கு பார்க்க: ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் (தமிழ் விரிவுரையுடன்). இரண்டாம் பதிப்பு : திருச்சிராப்பள்ளி : பத்மபூஷணம் என்.ராமஸ்வாமி அய்யர் சாரிடீஸ், ஸொஸைடி 1987. தமிழ் வாசகர்களுக்கு மனநிறைவு கொடுப்பது இந்த மொழியாக்கம். புகழ்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு : Lalita Sahasranamam with Bhaskarayas Commentary. Translated into English Ed. R. Ananthakrishna Sastry. Chennai : The Theosophical Publishing House, 1976. இது பன்னாட்டு வெளியீடாகவும் வந்துள்ளது.

46. 'லலிதா ஸஹஸ்ர நாமம்' இரண்டாவது பாகம். 249. பாரதியின் பாரத மாதா பாடல்களிலும் இந்த ஸ்தோத்திரத்தின் தாக்கமும் வங்காள நாவலான ஆனந்த மடம் என்னும் நூலில் வரும் 'வந்தே மாதரம்' என்ற பாடலின் தாக்கமும் உள்ளன. த.நா.குமாரசாமியின் வங்காள நாவல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு-களைவிட பாரதியின் கற்பனையில் தோன்றிய பாரத மாதாவின் கருத்தியியல் தான் தமிழ் இலக்கியத்தையும் வங்காள இலக்கியத்தையும் பிணைத்தது. பார்க்க . Dr. V. Sachithanandam. Tagore and Bharati (Tagore Endowment Lectures). Annamalainagar: Annamalai University, 1991.

47. இந்நாவலுக்கு ஆவணங்கள் துணைசெய்ய-வில்லை. ஆசிரியரின் நினைவுதான்.

48. Femenism என்ற ஆங்கிலச்சொல்லில் 'men' என்ற சொல் அடங்கியிருப்பதைப் பார்க்கவும். மனிதர்கள் பெண்ணுரிமையில் குறுக்கிடுவதை பெண்கள் அமெரிக்க சமூகத்தில் விரும்பவில்லை. இச்சொல்லை உண்டாக்கியவர் ஒரு ஆங்கிலப் பேராசிரியையும் திறனாய்வாளரும் ஆவர்.

49. அமெரிக்கத் திறனாய்வு மரபுப்படி, ஒவ்வொரு எழுத்தாளரைப் பற்றி அறிஞர்கள் திறனாய்வுத்தொகுப்பை அலசி திறனாய்வுக்கு ஒரு வழிகாட்டியாக ஆக்கலாம். இவ்வழிகாட்டி மறுபரிசிலனையாகவும் இருக்கலாம். ஆங்கில எழுத்தாளர்களைப்பற்றி மாக்மில்லன் கம்பெனியாரின் வெளியீடுகளைப் பார்க்கலாம். அல்லது லாங்கமன் வெளியீட்டாளரின் தொகுதிகளைப் பார்க்கலாம். இத்திறனாய்வுத் தொகுப்புகளும் பட்டியல்களும் இல்லாதது தமிழ் ஆராய்ச்சி மாணவர்கள் திசைக்கருவி இல்லாமல் மாலுமி கப்பலை ஓட்டுவதுபோல் ஆகும். பாரதி அடிச்சுவட்டில், பழம்பெருமை பேசுவதை மறக்கவேண்டும்.

50. Raman Selden, A Reader's Guide to Contemporary Literary Theory. ப. 112.

51. A Reader's Guide to Contemporary. Literary Theory. ப.112.

52. முன்பு சிறப்பு முதுகலை ஆங்கில வகுப்புகளில் ஆசிரியர்கள் திறமைசாலிகளாகவும் அறிஞர்களாகவும் இருந்தபோதிலும் ஆங்கில நாட்டின் மரபுகளைப் பின்பற்றியதால் ஆராய்ச்சியில் நம்பிக்கை இல்லை, நினைவாற்றலே இலக்கிய அறிவோடு இணைக்கப்பட்டது. சான்றாக, ஷேக்ஸ்பியர் நாடகங்களில் உரையாடல்களில் பத்தி பத்தியாக நினைவிலிருந்து கேட்பவர்கள் வியக்கும்படி சொல்லுபவர்கள்தான் அறிஞர்கள் என்று கூறப்பட்டது. இதை memorial Scholarship என்று ஆங்கிலத்தில் கூறப்படும். இத்தகைய தொத்து வியாதி அறிவு உலகத்தின் அடித்தளத்தையே பிளந்தது.

53. 1960-ல் உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோடை இளைப்பாறும் இடம் மஸ்ஸூரியில் இந்தியாவிலேயே முதன்முதலில் அமெரிக்க இலக்கியத்தின் மீது நடந்த கருத்தரங்கு இலக்கியத்திறனாய்வில் ஒரு முக்கிய திருப்புமுனை. அமெரிக்க இலக்கிய வரலாற்று விற்பன்னரும் பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியருமான ராபாட்ஸ்பில்லர் (Robert Spiller) என்பவர் தலைமை தாங்கினார்.

54. பார்க்க. Joseph Gibaldi Ed. Introduction to Scholarship in Modern Languages and Literatures. New York: 1981 இதற்குப்பிறகு வெளிவந்தது. MLR Hand Book for writers of Research Papers Third Edition. New Delhi: Wiley Eastern Limited 1989. இதன் பட்டியல் தயாரிப்பு ஆராய்ச்சி மாணவர்களுக்கு இன்றியமையாதது. நமது நாட்டில் எளிதாகக் கிடைக்கிறது. இது Joseph Gilbaldi, Walters Achtert என்பவர்களால் தயாரிக்கப்பட்டது. தமிழ் ஆராய்ச்சி மாணவர்கள் பட்டியல் ஒழுங்குமுறையற்றது. அதைச் சீர்திருத்த இந்நூலைப் பயன்படுத்தலாம். இது இந்தியா முழுவதும் ஆங்கில ஆராய்ச்சி மாணவர்களால் பின்பற்றப்படுகிறது.

55. இக்கட்டுரை இப்பகுதியில் விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வாசகர் நூலாசிரியர் தொடர்பு பற்றி முதல் இணைப்பில் விவரித்திருப்பதால்.

56. 236 The Lalita Sahasranama. Ed. S.V. Krishnaswamy. Chennai : Sankara Educational Trust 1971. பார்க்கவும் : □அண்ணா□ வின் ஸௌந்தர்யலஹரி - பாஷ்யம். சென்னை : ராமகிருஷ்ணமடம். 1979. சுலோகம். 31.

57. தமிழ் முதுகலை மாணவர்களுக்கு மொழியியல் பற்றிய அடிப்படைக்கொள்கைகள் தெரிந்திருக்க வேண்டும் என்பதால் இத்துண்டுப்பிரசுரத்தில் உள்ள கட்டுரையை ஒதுக்கிவிட்டு நம்நாட்டில் உள்ள பிரச்சினைகளை மட்டும் வாசகர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

58. இவருடைய சீடர்தான் தற்பொழுது புகழ்பெற்ற ஃப்ரெட்சன் பௌவர்ஸ். இவர் பல ஆங்கில நாடகாசிரியர்களின் தொகுப்புக்களை மூலபாடத்திறனாய்வுக் கொள்கைகளால் பதிப்பு செய்திருக்கிறார். சான்றாக ஷேக்ஸ்பியரின் சமகாலத்தவரான எட்வர்ட் மார்லோ (Edward Marlowe)

59. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதனுடைய அறிஞர்கள் ஆராய்ச்சி செய்துவரும் எழுத்தாளரின் அச்சுப்பதிப்புக்களை நூல் நிலையத்தில் திரட்டுதல் வேண்டும்.

இப்பொழுது நம்மிடையே இருக்கும் எழுத்தாளர்களின் கைப்பிரதிகளைச் சேகரித்து கைப்பிரதிகள் நூல் நிலையம் அமைக்கவேண்டும். பாரதியின் கைப்பிரதிகள் இன்னும் தனிநபர்கள் வசம் இருக்கின்றன. பாரதிதாசன் நெருங்கிய உறவினர்கள் இன்னும் இருப்பதால் அவர்கள் உதவி கொண்டு கைப்பிரதிகள் கொண்ட நூல் நிலையம் அமைப்பது இன்றியமையாதது. எவ்வுதவிக்கும் அரசாங்கத்தை நம்பியிருக்கும் நிறுவனங்கள் செல்வம் கொழிக்கும் தனிநபர்களின் உதவியை நாடலாம்.

60. செய்திகள் ஸ்பில்லர் அவர்களின் எப்படி நூல் உருவாக்கப்படவேண்டும் என்ற கட்டுரை (1963) அடங்கிய ஆராய்ச்சி இதழ் Publications of the Modern Language Association (PMLA) என்பதிலிருந்து எடுக்கப்பட்டது.

61. ரெனெவெல்லக் எழுதி வெளியிட்ட யேல் பல்கலைக்கழக வெளியீடு பல இலக்கியங்களைத் தொடர்புபடுத்தி எழுதிய History of Criticism அதன் முன்னுரையில் செயின்ட் ஸ்பரியின் குறைகளைச் சுட்டிக்காண்பிக்கிறார். செயின்ட் ஸ்பரி அவர் காலத்தில் ஒரு தலைசிறந்த அறிஞராகக் கருதப்பட்டார். இது மேலை நாட்டு அறிவு வளர்ச்சிக்கு ஒரு சான்று ; கொள்கைப்-பிடிப்பைச் சுட்டிக் காட்டுகிறது.

62. அண்மைக் காலத்தில் திறனாய்வு வரலாற்றால் ஈர்க்கப்பட்டுச் சில தமிழறிஞர்கள் நூலாகவும் கட்டுரைத் தொகுப்பாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். இதில் தற்சார்பற்ற தன்மை இல்லை. இவை தனி மனிதர்களின் வெளிப்பாடா அல்லது ஒரு குழுவின் வெளிப்பாடா என்ற ஐயம் எழுகிறது. இதன் குறிப்பிட்ட தவறு, ஆவணங்களை சேகரித்தல் இன்னும் இதைத் தளர்வு என்றும் சொல்லலாம்.

63. தமிழ் இலக்கிய வர்லாறுகள் கதை சொல்லும் பாணியில் யாத்திரிகர்களைத் தலங்களுக்கு அழைத்துச் செல்லுவது போலவே இருக்கின்றன. இதற்குக் கொள்கைப்பிடிப்பு இல்லாததுதான் காரணம் என்று

கூறவேண்டும். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதிய சுருக்கம்: A Bird's Eyeview of Tamil Literature என்பதை மாதிரிப்படிவமாகக் கொள்ளலாம். சுருக்கமாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருப்பதால் வாசகர்களை அறிஞர்களாகவும் வெளிநாட்டிலிருந்து வருபவர்களாகவும் கொள்கிறார். இதைத்தமிழ் அறிஞர்கள் விரிவாக்கம் செய்து புதிய கருத்துக்களையும் சேர்த்தால் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பேருதவி செய்யும். இவ்வரலாற்றை மொழியியல் நோக்கில் பின்னர் எழுதியிருப்பது தெ.பொ.மீ. யின் இனம் கண்டுகொள்ளப்படாத சாதனைகளில் ஒன்று. தனி அறிஞரால் எழுதப்படக்கூடிய தமிழ் இலக்கிய வரலாறு காலங்கடந்த கருத்து. கூட்டு முயற்சியே பலன் தரும். பார்க்க : Tamil : A Bird's Eyeview Madurai : Makkal Nalvaalvu manram. 1976. மேலே ஆங்கிலத்தில் கொடுத்திருக்கும் தலைப்பு விளக்க நோக்கில் கொடுத்தது. மாறுபட்ட தலைப்பல்ல.

64. ஷேக்ஸ்பியர் என்ற தனி மனிதனின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது நாடகாசிரியர் வாழ்க்கையைப்பற்றியோ இந்நூற்றாண்டின் இருபது வரையில் ஆவணங்கள் கிடைக்காததால் அவருடைய வாழ்க்கைச் செய்திகள் ஊகங்களாகவோ அல்லது கற்பனையின் புனைவுகளாகவோ இருந்தன. அதனால் ஆசிரியர் நாடகாசிரியரின் கடிதங்களைக் குறிப்பிடுகிறார்.

65. பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் நதேனியல் ஹாதார்ன் (Nathaniel Hawthorne, 1804 - 64) உருவகத்தை மறைமுகமாக கையாள்வதில் புகழ்பெற்றவர். இவருடைய The Scarlet Letter என்ற நாவல் சிறந்தது. இவர் கடுமையான ஆசாரமுள்ள கிருத்துவர். இவர் நாவல்களிலும் சிறுகதைகளிலும் இம்மதம் இடைவிடாது பல உருவங்களில் எதிரொலிக்கிறது.

66. மேலை நாடுகளில் இப்பொழுதுள்ள பாணி ஒரு எழுத்தாளரின் கடிதங்களை வெளியிடுவது. நான் 'விட்மனும் பாரதியும்' என்ற டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி

கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, அவருடைய கடிதங்கள் வெளிவந்தன. அதற்கு முன்பு இந்திய காப்பியங்களைப்பற்றி அவருக்குத் தெரிந்த செய்திகள் அவருடைய திறனாய்வாளர்களால் அலட்சியம் செய்யப்பட்டன. கடிதங்களை எல்லாம் பலநாட்கள் படித்தபொழுது மகாபாரதத்தைப் படித்துத் தெரிந்து வைத்திருந்தார் என்பதை நிர்ணயம் செய்தேன். சத்தியவான், சாவித்திரி கதையால் கவரப்பட்டு அதை கடிதத்தில் வடித்தார்; ரா.அ. பத்மநாபன் பாரதியாரின் கடிதங்களை வெளியிட்டாலும், இன்னும் பல கடிதங்கள் வெளிவராமல் இருக்கின்றன. கடிதங்கள் எழுத்தாளரின் சொத்து என்று கருதாமல் அவற்றை ஆவணங்களாகவே கையாள வேண்டும்.

67. அவரை ஜேம்சின் சிறந்த திறனாய்வாளராக மதித்து நியூயார்க் பல்கலைக்கழகம் ஹென்றி ஜேம்ஸ் பேராசிரியர் பதவியை அவருக்கு வழங்கியது. இவர் வாழ்க்கை வரலாற்றை உளவியலுடன் தொடர்புபடுத்தினார்.

68. இவர் ஒரு அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். அவர் தென்னிந்தியாவில் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பங்குகொள்ளும் பேறுபெற்றேன். அவர் முன்னிலையில் பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் மொழியாக்கமாகிய 'வாணி-புரவணிகள்' (The Merchant of Venice) என்ற ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகத்தைப்பற்றிக் கட்டுரை வழங்கினேன். அக்கட்டுரையை ரசித்து வெளியிடவேண்டும் என்று அறிவுரை கூறினார். ஆங்கில நாடகாசிரியரின் கதாநாயகன் ஒரு யூதர். அவனை குஜராத்திலிருந்த இங்கு குடிவந்திருக்கும் பணவணிகனாக மாற்றிவிட்டார்: பார்க்க : Shakespeare in Tamil Translation. Madurai : 1972.

69. தாக்கம் என்ற கருத்தை லெவல்ஸ்கி இலக்கிய நோக்கில் இங்கு ஆராய்கிறார். தாக்கம் என்பது ஒப்பிலக்கிய அறிவில் வெகு முக்கியமான கட்டம். பிரெஞ்சு ஒப்பிலக்கிய அறிஞர்கள் தாக்கம்தான் ஒப்பிலக்கியத்தை இனம் கண்டு

கொள்ளப் பயன்படுகிறது என்கிறார்கள். பார்க்க என்னுடைய நூல் ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம் பக். 39 - 83.

70. இக்கருத்திற்கு என்னுடைய The Impact of Western Thought on Bharati (1970) என்பதைப் பார்க்கவும்.

71. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நூல்நிலையம் அல்லது அவர் பயன்படுத்திய ஆங்கில நூல்களும் தமிழ் நூல்களும் அவருடைய பிறந்தகத்தில் இன்னும் இருக்கின்றன. பாரதிதாசன் நூல்களும் கைப்பிரதிகளும் பாண்டிச்சேரியில் அரும் பொருட்காட்சி சாலையில் இருக்கின்றன. அச்சாலை அறிஞர்களுக்கு மனநிறைவு கொடுப்பதாயில்லை. எட்டையபுரத்தில் பாரதி பிறந்த வீட்டில் ஒரு பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இது பாரதியை மதிப்பவர்களுக்கு ஏமாற்றம் தருகிறது. இத்தூய பணியைப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளவேண்டும். இப்பணிதான் கவிஞர்களைப்பற்றிய அறிவு சார்ந்த ஆராய்ச்சிக்கு அடிகோலும்.

72. இத்திட்டத்தின் கீழ்தான் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயனுள்ள விட்மன் கடிதங்கள் வெளியிடப்பட்டன. இவை பென்சில்வேனியா பல்கலைக்கழகம் வெளியிட்டது. இவ்வதிகாரத்திலுள்ள அடிக்குறிப்பு 67-ஐப் பார்க்கவும்.

73. பல்கலை நகரில் நடந்த அனைத்துலக தமிழ் கருத்தரங்கில் 'தாக்கம்' என்பதைப்பற்றி ஒரு அறிஞர் கட்டுரையளித்தபொழுது, ஒரு தமிழ் திறனாய்வாளர் கட்டுரையில் வந்த 'கடன்' என்ற சொல்லிற்கு வருத்தம் தெரிவித்தார். 'கடன்' என்ற கருத்து பொருளாதாரத்தைச் சேர்ந்ததல்ல. ஷெல்லி ஒரு எழுத்தாளனுக்குக் கடன் வாங்குவது உரிமை என்றார். டி.எஸ். எலியட் எழுத்தாளனுக்கு மற்ற எழுத்தாளரிடமிருந்து திருடுவது பிறப்புரிமை என்று வாதிட்டார். The Impact of Western Thought on Bharati என்ற நூல் விவாதத்திற்கு முன்னுரையைப் பார்க்கவும். ஒரு பெரிய எழுத்தாளன் கடன் வாங்குவது வெள்ளிக்காசாக இருக்கலாம். அவனுடைய கற்பனை அதைப் பொன்னாக மாற்றும்.

74. இக்கவிதை மங்கோலியப் பேரரசன் செங்கிஸ்கான் என்பவரின் அரண்மனையைப்பற்றிக் கற்பனையைப் பயன்படுத்தி எழுதிய கவிதை. இக்கவிதை கனவில் எழுதியதாக கவிஞர் உரிமை கொண்டாடுகிறார். இந்நூலில் பார்க்கவும். சான்டூ என்பது அரசரின் தலைநகர். இது அபின் சாப்பிட்டபிறகு கவிஞர் எழுதினார் என்பது திறனாய்வு நம்பிக்கை. அபினுக்கும் கவிதை எழுதுவதற்கும் தொடர்பு உண்டா என்பதற்கு பார்க்க: வை. சச்சிதானந்தன். பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும் சென்னை : எமரால்ட் வெளியீடு 1985. 74 - 75.

75. இந்நூலில் எலியட்டின் கொள்கையை விளக்கும் முன் அதிகாரத்தைப் பார்க்கவும்.

76. க. கைலாசபதி இருமகாகவிகள் ஆறாம் அச்சு. சென்னை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 1987. பார்க்க : V. Sachithanandam Ed. '' Introducing Kailasapathy'' K. Kailasapathy. The Relation of Tamil and Western Literatures. Madurai: Madurai Kamaraj University.

77. இக்கவிதையில் புகழ்பெற்ற சாசரின் பாத்திரம் ஒரு கிருத்துவ கன்னித்துறவி. இவள் லோகாயத நோக்கில் அளவற்ற நம்பிக்கை உள்ளவள். இவள் உண்மையில் யார் என்ற கேள்விக்குத் திறனாய்வாளர் விடை காண்பது ஆபத்து. அப்பாத்திரம் கவிஞனின் கற்பனையின் விளைவு என்பதே மனநிறைவைக் கொடுக்கும்.

78. சான்றிற்குப் பாரதியாரின் கண்ணம்மா பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுவோம். சில திறனாய்வாளர்கள் தங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டு அப்பாத்திரத்தை இனம் புரியாத கவிஞரின் காதலி என்கிறார்கள். இது தெய்வீகமறைக்கவிதை (Mystical Poetry) யைச் சார்ந்தது. பராசக்தியின் மறு உருவம் அல்லது கவிஞரின் யோக ஞானத்திலிருந்து வந்தது என்ற விளக்கத்தை முன்பே பார்த்தோம்.

79. நாவலாசிரியரின் திறனாய்வு இரண்டு வகைப்படும். முதல் கட்டத்தில் அவருடைய நகைச்சுவையையே அநுபவித்தனர். அவருடைய புனைவு கதைகளில் உண்மையியலை (realism) பார்க்கத் தவறிவிட்டனர். இப்பொழுது திறனாய்வாளர்கள் சமூகவியல் நோக்கில் நாவல்களைப் படிக்கின்றனர். லீவிஸைப் போல, அவர் நாடகப்பாணியையும் இனம் கண்டு கொள்ளுகின்றனர். விக்டோரியா ராணியின் சமூகத்தில் பழமைவாதம் ஓங்கியிருந்ததால் மக்கள் பாவிச்சையை வளரவிடவில்லை. நாவலாசிரியரின் வாழ்க்கையில் சில பகுதிகளைச் சமூக நம்பிக்கையால் இருட்டடிப்பு செய்தனர். இப்பொழுது ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்ததாக உண்மை வெளிப்படுத்தப்பட்டது. இந்த வாதத்தை பெர்னார்டுஷா தம் நாடகங்களில் அங்கத முறையில் எதிர்க்கிறார்.

80. அரிஸ்டாடிலுக்கும் தொல்காப்பியத்திற்கும் கவிதையியல் நோக்கில் நெருக்கம் இருக்கிறது. (Humphrey House) ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக கிரேக்க மாணவர்களுக்காக Aristotle's Poetics (1976) என்ற சிறிய அருமையான நூலை எழுதினர். மேலை ஒப்பிலக்கிய அறிஞர்கள் இக்கவிதையியல் முன்னோடிகளின் நெருக்கத்தை உணர்ந்திருக்கிறார்கள். தமிழ் அறிஞர்களும் உணரவேண்டும். பார்க்க என்னுடைய கட்டுரையை. "Aristotle and Tolkappiar". New York : International Comparative Literature Association 1982. 215 - 222. இது இக்கழகத்தின் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

81. ஜான்சன் மில்டன் வாழ்க்கையை வருணிக்கும் பொழுது மில்டன் குடியரசு நம்பிக்கை வகுப்பறையில் கறைந்து போயிற்று என்று நகைச்சுவையுடன் குறிப்பிடுகிறார். ஜான்சன் மன்னர் ஆதிக்கத்தில் நம்பிக்கையுடைய பழமைவாதியாகையால் மில்டன் புரட்சி அரசியல் நோக்கத்தை மறைமுகமாகக் கண்டிக்கிறார். இவருடைய எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாறுகளிலெல்லாம் அவருக்கே உரித்தான சொந்த

வெறுப்புக்கள் அவருடைய கட்டுரைகளுக்குச் சுவையூட்டுகின்றன.

82. பார்க்க : Whitman and Bharati: A comperative Study 1 - 25.

83. இக்கருத்தை பாண்டிச்சேரியில் 1991-ல் கூடிய ஞாலத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் கருத்தரங்கில் தலைமையுரையில் (அச்சிட்டது) என் கடைசி ஆசையாக விவரித்தேன். இங்குள்ள திறனாய்வின் எதிர்கால வளர்ச்சியில் எனக்கு நம்பிக்கை உண்டு.

84. பார்க்க ; கலாநிதி. சி. மௌனகுரு. "சடங்குகளிலிருந்து நாடகம் வரை". கைலாசபதி நினைவேடு. யாழ்ப்பாணம், 1988. 171 - 190. இந்நூலின் தலைப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் பயன்படுத்தப்படுகிறது. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் "தமிழில் நிறப்பெயர்கள்" என்ற கட்டுரையையும் பார்க்கவும். 55 - 61.

85. இந்நூலிலுள்ள எலியட் பகுதியைப் பார்க்கவும்.

86. ராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுள் நம்பிக்கையற்றவன் கடவுள் நம்பிக்கையுடையவனைவிட மேலானவன். ஏனென்றால் முன்னவன் கடவுளை வெறுப்பதால், என்றும் நினைவு கொண்டுள்ளவன். பின்னவன் மறக்கக் கூடியவன் என்றார். பார்க்க :The Gospel of Ramakrishna by "M".

87. இக்கவிதையின் தலைப்பிற்குப் பொருள், ஃப்ளக்னோவின் தவப்புதல்வன். தந்தை ஆங்கிலக்கவிதை வரலாற்றில் பெரியமுட்டாள் என்று திறனாய்வாளர்களிடம் பெயர் வாங்கியவன். பதினெட்டாம் நூற்றாண்டில் எழுத்துச் சுதந்திரம் இன்று நம்பத்தகாத அளவில் இருந்தது. அங்கதக் கவிஞன் தான் தாக்குகிற எழுத்தாளரின் பெயரை முழுவதுமாக பயன்படுத்தக்கூடாது என்று அரசச் சட்டம் கூறியது. ஆனால் பெயரில்முதல் எழுத்தைப்பயன்படுத்தி கோடுகிழிக்கலாம்.

சான்று S________ அங்கதக்கவிதைகள் அச்சிட்டு வெளியானவுடனே வாசகர்கள் வாங்கிக் கவிதைகளில் தாக்குண்டவர்கள் யார் என்று ஊகிப்பார்கள். இவ்வங்கதக் கவிதை வெளியாகியவுடன் பலிகடாவான ஷாட்வெல் அதைப் படித்தபொழுது மனம்விட்டு அழுதான் என்பது மரபுச்செய்தி, திறனாய்வாளர்கள் இக்கவிதையின் வாசகர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். ஷாட்வெல் ஒரு முட்டாளல்ல. ட்ரைடனைவிட நல்ல நாடகங்கள் எழுதியவன்.

88. நான் பல ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் போப்பின் அங்கதக் கவிதைகளை ஆங்கில முதுகலை மாணவர்களுக்குக் கற்பித்தபொழுது பேராசிரியர் ஜான் பட்டின் பதிப்பு மிகவும் பயனுள்ளது என்று உணர்ந்தேன்.

89. இத்தலைப்பில் ஆசிரியர் பயன்படுத்திய Forms என்ற சொல்லை ஒதுக்கிவிட்டேன். Forms, Genres என்பதற்கு வேறுபாடு இல்லை. இரண்டு சொற்களும் ஆசிரியரால் பயன்படுத்தப்படுகின்றன.

90. பார்க்க V. Sachithananadan, ''Bharati and Shelley'' Tamil Culture x No.1 1963, 24 - 47.

இக்கட்டுரை இக்குறிப்பை கொண்டதல்ல.

91. இது காந்திகிராமப் பல்கலைக்கழகத்தில் 'இந்திய இலக்கியத்தின் பரிணாமங்கள்' என்ற கருத்தரங்கில் நான் ஆற்றிய தலைமையுரையின் ஒரு பகுதி. நாட்டு ஒருமைப்பாட்டைப் பற்றிய இவ்விலக்கணம் இனம் கண்டு கொள்ளப்படவில்லை. ஆகையால் இச்செய்தியை நூலில் புகுத்தினேன்.

92. சான்றாக, நியூயார்க், சிகாகோ போன்ற விமான நிலையங்களில் இரண்டு மூன்று மணித்துளிகளுக்கு ஒருதரம் விமானங்கள் இறங்குகின்றன அல்லது தளத்தைவிட்டு நீங்குகின்றன.

93. காலப்பகுதி, மற்ற கூறுகளுக்கு ஒப்பிலக்கிய நோக்கியல் பார்க்க: ஒப்பிலக்கியம் : ஓர் அறிமுகம் என்ற என்னுடைய நூலை பக். 84 - 138.

94. இன்றும்கூட நவம்பர் மாத இறுதியில் Thanks giving Day என்ற விடுமுறை நாளை மிக உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள். இது வைதீக கிருத்துவர்கள் அமெரிக்காவில் காலடி எடுத்துவைத்துத் தங்கள் நன்றியைக் கடவுளுக்குத் தெரிவித்த நாளைக் குறிக்கிறது. அமெரிக்காவை அவர்கள் கடவுள் கொடுத்த நாடு என்று நம்புவதை அமெரிக்க இலக்கியம் எதிரொலிக்கிறது.

95. விவரங்களுக்கு இந்நூலின் தொடக்கத்திலுள்ள அரிஸ்டாடிலைப் பற்றிய பகுதியைப் பார்க்கவும்.

96. விவரங்களுக்கு இந்நூலின் முற்பகுதியைப் பார்க்கவும்.

97. பார்க்க : வை. சச்சிதானந்தன். பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும். முதல் பதிப்பு. சென்னை: எமரால்ட் வெளியீடு, 1985. 46 - 78.

98. இதைத்தழுவிப் பாரதிதாசன் சார்பில் டில்லியிலிருந்து வெளிவரும் Indian Literature என்ற இதழில் எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த் என்ற நாவலாசிரியர் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி 'Bharatidasan ; Poet as Rebel' என்ற கட்டுரையை வெளியிட்டேன். இக்கட்டுரையைத் தமிழ்நாட்டில் உள்ள திறனாய்வாளர்கள் இனம் கண்டுகொள்ளவில்லை. பாரதிதாசனைப்பற்றிய குறிப்பு என் நினைவிலிருந்து வந்தது.

*******

MADURAI KAMARAJ UNIVERSITY ★ DR. T.P.M. LIBRARY ★